ஸ்ரீமத்

பகவத் கீதை

ஸ்ரீ சங்கராசார்ய பாஷ்யத்தோடு

த. சுந்தரராஜ சர்மா

பரிசோதித்து மொழிபெயர்த்தது.

சென்னை

வேதாந்தபோதினி ஆபீஸ்

1907

முகவுரை.

"ஓம் நமோ பகவதே வாஸுதேவாய." ஸ்ரீமத் பகவத்கீதா சாஸ்திரமானது **ஸகலவேதார்த்தஸார** மென்றும், **பொருளுணர்தற்குஅரிய** தென்றும், **வேதரஹஸ்ய** மென்றும் ஆன்றோ ரனைவராலும் ஏத்திப் போற்றப்படுகின்ற தென்பது உலகெலாம் அறிந்த உண்மை. ஆகவே, ருக்வேதம் ஸாமவேதம் என்றாற் போல கீதாவேத மெனக் கூறலாகும். அப்படியே, ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் "பீஷ்மபர்வத்திலே, ஸ்ரீமத் பகவத்கீதைகளாக,[1] **உபநிஷத்துக்க** ளாக,[1] ப்ரஹ்மவித்யையாக, யோகசாஸ்திரமாக விருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணார்ஜுந ஸம்வாதத்திலே" என இந்நூலினுட் கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும், இதற்கு இயைய, இந்நூல் தனக்குள் அமையப்பெற்ற மஹாபாரதத்தை ஐந்தாம்வேத மென் றலும், "ஸகலவேதார்த்தமும் பாரதத்தி லிருக்கின்றது ; பாரதார்த்தமுழுவதும் கீதையிலிருக்கின்றது ; ஆதலின், இது ஸகல சாஸ்திரமும் நிறைந்ததாக உயர்த்தி மதிக்கப்படுகின்றது"[2] என்று மஹாபாரதஉரையாசிரியர் நீலகண்டர் பகவத்கீதை உரையின் தொடக்கத்தில் கூறியிருத்தலும், கீதாபாராயண ஆரம்பத்தில் "எல்லா உபநிஷத்துக்களும் பசுக்களாக, கோபாலனென்னும் குழந்தை பால் கறப்பவனாக, அர்ஜுனன் பானூட்டும் கன்றாக, நல்லறிவுடையோர் பால் குடிப்பவராக, கீதை—(சாகாமையைத் தருகின்ற) சிறந்த அமிருதமான பாலாகின்றது"[3] எனத் தியானித்தலும் காண்க.

மேலும், கீதாசாஸ்திரமானது வ்யாஸமகர்ஷிகளால் செய்யப்பட்டது எனக் கூறாது, "மகாபாரதத்தில் வெளியிடப்பட்டது"[4] என்று கூடார்த்ததீபிகையின் இறுதியிலும், "புருஷோத்தமனுடைய திருவாக்காய், கீதை என்னும் பெயருடைத் தாய், வேதவாக்கியங்களின் ரஹஸ்யமாய் எது உள்ளதோ ......"[5] என்று கஅ - ஆம் அத்தியாயத்து சுசு - ஆம் சுலோகத்தின் உரையிலும் **மதுஸூதந ஸரஸ்வதியாரும்**, "கிருஷ்ணத்வைபாயநர், பகவான்உபதேசித்த அதே பொருளை எழுநூறு சுலோகங் களால் சேர்த்தமைத்தனர். அவற்றுள், பெரும்பான்மையாக ஸ்ரீகிருஷ்ண(பகவான்) முகத்தினின்று வெளிவந்த சுலோகங்களையே எழுதலாயினர். அவற்றின் (முன் பின் உள்ள கதாஸந்தர்ப்பத்)தொடர்ச்சிக்காக, தாம் சில சுலோகங்களைச் செய்து

---

1 இந்நூல் யாவரும் மேலாகக்கொண்டு பூஜிக்கத்தக்க மேம்பாட்டை யுடையதாயிருத்தல் பற்றி, இவ்வுயர்வுப்பன்மை இரண்டும் இங்கு வழங்கலாயின.

2 "ஹாரதே ஸவவெடாயூ: ஹாரதா யூஶு க்ருஷஶ: । மீதாயாஉஷி தெநெயழ ஸவரஶாஷ்உயீ உதா ॥"

3 "ஸவொவநிஷெடா ஊவ: தொஹா ஜொவாலநநநந: । வாயொ வத்ஸ: ஸுயீஹொக்தா ஜுஷம் மீதாம்ரூத உஹத் ॥"

4 "...உஹாஹாரதெ...விந்யாவி..."

5 "யொ யத்மீதாவ்யம் வாஉவெ- ஷவ்யாஸஊஉஜிராம் ரஹஸ்யு......"

சேர்த்தனர். (இதனை,) 'பத்பநாபனுடைய முகாரவிந்தத்தினின்றும் ஸ்வயமாகவே வெளிவந்த கீதைகளையே நன்றாகப் படிக்கவேண்டும். மற்றைய சாஸ்திரவிஸ்தாரங்களால் என்ன?' எனக் கீதாமாஹாத்மியத்தில் கூறப்பட்டிருக்குமாறு (காண்க)"[1] என்று கீதையின் உரைப்பாயிரத்தில் **ஸ்ரீதரஸ்வாமி**களும், "என்னுடைய உயர்ந்த வித்யையானது ப்ரஹ்மஸ்வரூபமாகிய கீதைதான்; ஸம்சயமில்லை..... (அது,) அறிவும் ஆநந்தமுமான கிருஷ்ணன் அர்ஜுனனுக்குத் தன் வாயினால் அருளிச்செய்தது: (ருக், யஜுஸ், ஸாமமென்னும்) மூன்றுவேதமாய்ப் பரமாநந்தமாகி நிற்பது......"[2] என்று **வராஹபுராண**மும் கூறுகிறபடி, பரம்பொருளின் உண்மையை உணர்த்தும் பகவானுடைய திருவாக்குக்குக் **கீதை** என்று பெயர்.

இது, "முற்றுமுணர்ந்தவரான வேதவ்யாஸபகவான் கீதை என்னும் பெயருடைய எழுநூறு சுலோகங்களால் அந்த தருமத்தை பகவான் உபதேசித்தவண்ணம் திரட்டி அமைத்தார்"[3] என்று பாஷ்யகாரர் அருளிச்செய்த திருவாக்கினுடைய ஒவ்வொரு பதத்தின் நோக்கத்தையும் சேர்த்துப்பார்த்து ஊகித்தறிவார்க்கு இனிது புலப்படும். ஆகவே, ப்ரஹ்மாவினிடமிருந்து வெளிப்பட்ட ருக் யஜுஸ் ஸாமாதிவேதங்களைப் பாதராயணபகவான் [வ்யாஸர்] ஒழுங்காகத் திரட்டி அமைத்ததுபோல, பகவானிடமிருந்து வெளிப்பட்ட கீதாவேதத்தையும் அப்படியே அமைத்தாரென்க.

ஆகவே, இப்படிப்பட்ட இவ்வேதத்தின் மெய்ப்பொருளைக் கண்டு, உணர்ந்து, உலகத்திற்கு உரைக்கத்தக்க உரிமையுடையார் பகவதவதாரமான மகான்களேயாவர். அத்தகையார் அருளிச்செய்த உரையானது, இந்நூற்பொருளை ஸம்சயவிபரீதமறஉணர்தற்கு எவ்வாற்றானும் இன்றியமையாதது. ஏனெனில், அவ்வாறான உரையின்றிப் படித்தால், பொருளை அறியவே முடியாது. ஒருகால் முடியுமாயினும், அது புருஷார்த்தம் கைகூடாவண்ணம் கெடுத்து அநர்த்தமும் விளைவிக்கும். எங்ஙனமெனில், "கடலின் ஜலத்தைத் தனது உள்ளங்கையால் விலக்கி, அதனுள் புதைந்து கிடக்கும் ரத்நங்களை ஒரு நல்ல தெப்பத்தின் உதவியின்றி எடுக்க முயல்பவன், சுழல்களில் அகப்பட்டு மூழ்கிவிடுவானன்றோ."

இது இங்ஙனம் நிற்க. பிறநாடுகளிற்போல நம் தமிழ்நாட்டிலும் **பகவத் கீதா சாஸ்திர**மானது ஸர்வஜனஸாதாரணமாய்ப் பெரிதும் வழங்குகின்றது. இவ்வாறு வழங்குகின்ற அரிதுணர்பொருளதான இவ்வேதஸாரத்திற்குக் கீழ்க்கூறியவாறு உரிய ஆசார்யர் எவராயினுமாகுக; அவர் அருளிச்செய்த உரையின் ஒரு

---

[1] " [illegible] [illegible] [illegible] [illegible] 𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑌯𑍋𑌕𑍍𑌤𑌂 𑌗𑍀𑌤𑌾𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑍇—'𑌗𑍀𑌤𑌾 𑌸𑍁𑌗𑍀𑌤𑌾 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾 𑌕𑌿𑌮𑌨𑍍𑌯𑍈𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍈𑌃 । 𑌯𑌾 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌪𑌦𑍍𑌮𑌨𑌾𑌭𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑌪𑌦𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌨𑌿𑌃𑌸𑍃𑌤𑌾 ॥' 𑌇𑌤𑌿"

[2] "𑌗𑍀𑌤𑌾 𑌮𑍇 𑌪𑌰𑌮𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍂𑌪𑌾 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃॥........𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑍇𑌨 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇𑌨 𑌸𑍍𑌵𑌮𑍁𑌖𑍇𑌨𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌾𑌯 𑌚। 𑌵𑍇𑌦𑌤𑍍𑌰𑌯𑍀 𑌪𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌾........॥"

[3] 6-ஆம் பக்கத்தில் 22, 23-ஆம் வரிகளைப் பார்க்க.

முகவுரை.

மொழிபெயர்ப்பாயினும் நம் தமிழ்ப்பாஷையில் கறந்தபால் கறந்தவண்ணம் அவர் சொன்னவாறே அமைந்து வெளிவந்ததாகத் தெரியவில்லை.

ஆதலால், இச்சாஸ்திரத்திற்கு பகவத்பாதர் அருளிச்செய்த பாஷ்யத்தையும் கீதாமூலத்தையும், கூட்டாமலும் குறைக்காமலும் உள்ளது உள்ளபடி என் சிற்றறிவிற்கு எட்டியஅளவு மொழிபெயர்த்திருக்கின்றேன். இந்நூற்பொருளின் ஸ்வபாவரீதியானது எவ்வளவு இடங்கொடுத்ததோ, அவ்வளவு தெளிவான எளிய தமிழ்நடையில் இம்மொழிபெயர்ப்பை எழுதியிருக்கின்றேன். மற்றும், முதனூலிற் கூறும் விஷயங்களுக்குத் தலைக்குறிப்புக்களும், எளிதில் பொருள் விளங்காத இடங்களில் குறிப்புக்களும் தந்திருக்கின்றேன். [முதனூல் - கீதையும், பாஷ்யமும்.]

"ஒருபாஷையினின்று மற்றொருபாஷைக்கு ஒன்றை மொழிபெயர்த்துக் கொண்டுபோகும்போது, முதனூலிலுள்ள செறிவும் பொலிவும் அழகும் நயமும் மொழிபெயர்ப்பாகிய வழிநூலிற் குறைவுபடுதல், உலகத்திற் பெரும்பான்மை." மேலும், ஸ்ரீமத்பகவத்கீதையை அர்த்தஞானமின்றிப் பாடமாத்திரமாகப் பாராயணஞ் செய்தலும் புண்ணியமாகும்;(கஅ - எ0). அவ்வாறே, புண்ணியமாகும் பாஷ்ய பாராயணமும். ஆகவே, முதனூலையே நேரே படித்துணர்தலும் அர்த்தஞானத்தோடு பாராயணஞ்செய்தலும் மிகவிசேஷமாதலால், கீதையும் பாஷ்யமும் இம்மொழிபெயர்ப்போடு ஒருங்கே பதிப்பிக்கலாயின.

ப்ரஹ்மஸ்ரீ ஏ. மகாதேவசாஸ்திரியார், பி. ஏ., அவர்கள் ஆங்கிலபாஷையில் மொழிபெயர்த்துள்ள கீதையை உபயோகித்தற்கு அன்புடன் அநுமதித்த பெருந்தகைமைக்கு மனமுவந்து வந்தனஞ் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இனி, என்போன்றவர் செய்யும் இத்தகைய மொழிபெயர்ப்பிலும் முதனூற் பதிப்பிலும் குற்றங்குறைகள் வந்திருத்தல் கூடும். ஆதலின்,எவராயினும் அவற்றை எடுத்து எனக்குத் தெரிவிப்பராயின், அப்பேருதவி செய்த அவரிடம் மகிழ்வொடு நன்றிபாராட்டச் சித்தனாயிருக்கின்றேன்.

"ஸ்ரீ கிருஷ்ணார்ப்பண மஸ்து." "ஓம் தத் ஸத்."

சென்னை:
டிசம்பர்மீ, 1905.

த. சுந்தரராஜசர்மா.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾

𑌶𑍍𑌰𑍀𑌶𑌙𑍍𑌕𑌰𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇𑌨 𑌭𑌾𑌷𑍍𑌯𑍇𑌣 𑌸𑌹𑌿𑌤𑌾 ॥

𑍐 "𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 𑌪𑌰𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍 𑌅𑌣𑍍𑌡𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌂𑌭𑌵𑌮𑍍 ।
𑌅𑌣𑍍𑌡𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌮𑍇 𑌲𑍋𑌕𑌾𑌃 𑌸𑌪𑍍𑌤𑌦𑍍𑌵𑍀𑌪𑌾 𑌚 𑌮𑍇𑌦𑌿𑌨𑍀 ॥"

𑌸 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑍇𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌂 𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑍁𑌃 𑌮𑌰𑍀𑌚𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑍍 𑌅𑌗𑍍𑌰𑍇 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑍀𑌨𑍍 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌗𑍍𑌰𑌾𑌹𑌯𑌾𑌮𑌾𑌸 𑌵𑍇𑌦𑍋𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌤𑌤𑌃 𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌨𑌕𑌸𑌨𑌨𑍍𑌦𑌨𑌾𑌦𑍀𑌨𑍍 𑌉𑌤𑍍𑌪𑌾𑌦𑍍𑌯 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌗𑍍𑌰𑌾𑌹𑌯𑌾𑌮𑌾𑌸 । 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍋 𑌹𑌿 𑌵𑍇𑌦𑍋𑌕𑍍𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑍋 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌶𑍍𑌚 𑌜𑌗𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌅𑌭𑍍𑌯𑍁𑌦𑌯𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌹𑍇𑌤𑍁𑌃 𑌯𑌃 𑌸 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌵𑌰𑍍𑌣𑌿𑌭𑌿𑌃 𑌆𑌶𑍍𑌰𑌮𑌿𑌭𑌿𑌶𑍍𑌚 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌰𑍍𑌥𑌿𑌭𑌿𑌃 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍀𑌯𑌮𑌾𑌨𑍋 𑌦𑍀𑌰𑍍𑌘𑍇𑌣 𑌕𑌾𑌲𑍇𑌨 ॥

ஸ்ரீமத் பகவத் கீதையும்,

ஸ்ரீசங்கர பகவத்பாத ஆசார்யர் அருளிச்செய்த பாஷ்யமும்.

உரைப்பாயிரம்.

கடவுள் வாழ்த்து.

ஓம் "நாராயணன் (என்னும் பரம்பொருளானது) அவ்யக்தத்திற்கு அப்பால் உள்ளது: அண்டம் அவ்யக்தத்தினின்று உண்டாவது: அண்டத்துளன்றோ இந்த உலகங்களும் ஏழு தீவுள்ள பூமியும் உள்ளன." [1] [அவ்யக்தம் - மாயை.]

வேதத்திற் கூறிய இருவகைத்தான தருமம்.

அந்த பகவான் இந்த உலகத்தைப் படைத்து, அதனை நிலைபெறச் செய்ய விரும்பியவராய், முதலில் மரீசி முதலிய பிரஜாபதிகளைச் சிருஷ்டித்து, வேதத்திற் கூறிய பிரவிருத்தி என்னும் தருமத்தைக் கைக்கொள்ளச் செய்தனர்; பின்பு ஸநகர் ஸநந்தநர் [2] முதலிய மற்றையோரையும் படைத்து, ஞான வைராக்கியங்களைக் குறிப்பாகப் பெற்ற நிவிருத்தி என்னும் தருமத்தைக் கைக்கொள்ளப்பண்ணினார். வேதத்திற் கூறிய பிரவிருத்தி நிவிருத்தி என்னும் இருவகைத்தான தருமமே உலகத்[illegible]ங்குபட)நிலைபெறச்செய்வது; பிராணிகளுக்குச் செல்வத்தையும் உறுதியான

[1] [illegible] ப்ரஹ்மாண்ட புராணத்திலி[illegible] நுஸ்மிருதியின் க-ஆம் [illegible] சுலோகத்தினுரையிற் கூறியுள்ளார். இன்னும் இது, மநுஸ்மிருதியின் சில பிரதிகளில், க-ஆம் அத்தியாயத்து, கக-ஆம் சுலோகமாகவும் காணப்படுகின்றது.

[2] "அவர்கள் வைராக்யத்தை அடைந்து மோக்ஷமார்க்க நிரதர்களாய் ப்ரஜாசிருஷ்டியில் பிரவிருத்தியாமல் ஸர்வ ஸங்க பரித்யாகிகளாய் யோகநிஷ்டை பெற்று, காமக் குரோத மத மாச்சரியங்க ளில்லாதவர்களாய், கிருதார்த்தராயிருந்தார்கள்" (வி-க-எ). இதற்கு இணங்க 'ஸநத்குமாரர் [எப்பொழுதுஞ் சிறுவர்]' என்ற பெயரினையுங் காண்க.

உ ரை ப் பா யி ர ம்.

𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌤𑍄𑌣𑌾𑌂 𑌕𑌾𑌮𑍋𑌦𑍍𑌭𑌵𑌾𑌤𑍍 𑌹𑍀𑌯𑌮𑌾𑌨𑌵𑌿𑌵𑍇𑌕𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌹𑍇𑌤𑍁𑌕𑍇𑌨 𑌅𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌅𑌭𑌿𑌭𑍂𑌯𑌮𑌾𑌨𑍇 𑌧𑌰𑍍𑌮𑍇, 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑍇 𑌚 𑌅𑌧𑌰𑍍𑌮𑍇, 𑌜𑌗𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌂 𑌪𑌰𑌿𑌪𑌿𑌪𑌾𑌲𑌯𑌿𑌷𑍁𑌃 𑌸𑌃 𑌆𑌦𑌿𑌕𑌰𑍍𑌤𑌾 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌖𑍍𑌯𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌭𑍌𑌮𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌥𑌂 𑌦𑍇𑌵𑌕𑍍𑌯𑌾𑌂 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌤𑍍 𑌅𑌂𑌶𑍇𑌨 𑌕𑍃𑌷𑍍𑌣𑌃 𑌕𑌿𑌲 𑌸𑌂𑌬𑌭𑍂𑌵 । 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌰𑌕𑍍𑌷𑌣𑍇𑌨 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑍈𑌦𑌿𑌕𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃, 𑌤𑌦𑌧𑍀𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌭𑍇𑌦𑌾𑌨𑌾𑌮𑍍 ॥

𑌸 𑌚 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑌿𑌬𑌲𑌵𑍀𑌰𑍍𑌯𑌤𑍇𑌜𑍋𑌭𑌿𑌃 𑌸𑌦𑌾 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃

நன்மையையும் நேரே தருவதான அத்தருமமே (தம்தமக்கு) நன்மையைத் தேடிக் கொள்ளும் பிராமணர் முதலிய வர்ணத்தாராலும் ஆச்ரமத்தாராலும் நெடுங்காலமாக [1] அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. [உறுதியான நன்மை - முக்தி.]

பகவதவதாரத்தின் பிரயோஜனம்.

(அங்ஙனம்) அநுஷ்டிப்பவருடைய காமக்கிளர்ச்சியால் (நிலையின்றி) விவேகபுத்தி தேய, அதனால் அதர்மம் விளைய, அவ்வதர்மத்தால் தருமம் கீழே யமர்த்தப்பட்டும், அதர்மம் மேலிட்டும் வருமளவில், (வரைமுறையில்லாமல் வரம்பழிந்து போகாவண்ணம்) ஜகத்தின் நிலையைப் பாதுகாக்கக் கருதிய அவ்வாதிகர்த்தாவான நாராயணனென்னும் திருநாமமுடைய விஷ்ணுவானவர், "பூலோகத்திற்குரிய ப்ரஹ்ம"[2] மாகிய பிராமண்யத்தைக் காத்தற்பொருட்டு வஸுதேவருக்குத் தேவகியாரிடத்து (ஸ்ரீமத்)கிருஷ்ண (பகவா)னாக அம்சத்தால்[3] அவதரித்தனரென்ப. ஏனெனில், பிராமண்யம் பாதுகாக்கப்படுமாயின், வைதிகதருமமானது பாதுகாக்கப்பட்டதாகும்; வர்ணாச்ரமபேதங்கள் அதனைச் சார்ந்துநிற்றலின்.[4] [வைதிகம் - வேதத்தில் விதித்தது.]

ஞானம், ஐச்வர்யம், சக்தி, பலம், வீர்யம், தேஜஸ் என்பவற்றை எப்பொழுதுமுடைய அந்த பகவானனவர், முக்குண வடிவமும் விஷ்ணுவிற்கு உரியதுமான

---

1 "𑌦𑍀𑌰𑍍𑌘𑍇𑌣 𑌕𑌾𑌲𑍇𑌨" என்பதை "𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌤𑍄𑌣𑌾𑌮𑍍" என்பதோடுங்கூட்டி, அவற்றுள் முந்தினதற்கு "வெகுகாலமானபின், அதாவது - கிருதயுகமும் திரேதாயுகமும் முடிந்து, துவாபரயுகமும் முடிவுபெறுமளவிலே" என உரைப்பர் (ஆ).

2 "𑌯𑌦𑍍𑌵𑍈 𑌦𑍇𑌵𑌕𑍀 𑌦𑍇𑌵𑍀 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌦𑍁𑌜𑍀𑌜𑌨𑌤𑍍 । 𑌭𑍌𑌮𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌗𑍁𑌪𑍍𑌤𑍍𑌯𑍈............॥"

"தேவகிப்பிராட்டியாரானவர் பூலோகத்திற்குரிய ப்ரஹ்மத்தைக் காத்தற்காக வஸுதேவர்க்கு எந்தக் கடவுளைப் பெற்றாரோ.........." (ம - சா - சஎ). "பூலோகத்திற்குரிய ப்ரஹ்மமாவது - வேதங்களும், பிராமணர்களும், யாகங்களுமாம்" என உரையாசிரியர் நீலகண்டர் இச்சுலோகத்தினுரையிற் கூறியிருத்தலை இங்கு அறிக.

3 "அம்சத்தால்" என்பதற்கு "𑌸𑍍𑌵𑍇𑌚𑍍𑌛𑌾𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑍇𑌨 𑌮𑌾𑌯𑌾𑌮𑌯𑍇𑌨 𑌦𑌿𑌵𑍍𑌯𑌰𑍂𑌪𑍇𑌣" "தமதிச்சைப்படி எடுக்கப்பட்ட மாயாமயத் திருமேனியால்" என உரைப்பர் (ஆ). பகவானுடைய திருமேனி மாயையினாலாகியதாம். அது மனிதர்சரீரம்போலப் பஞ்சபூதங்களாலாகியதுமன்று; உண்மையுமன்று; அதாவது - அங்கேதான் உள்ளது இங்கேதான் உள்ளது என வரையறுக்கப்படாது எங்கும் பரிபூரணமாகி நிற்கும் பரமானந்தப் பரம்பொருளே லோகாநுக்கிரகஞ் செய்தற்பொருட்டுப் பிறப்பதுபோலவும், உடம்பொடுநிற்பதுபோலவும் காணப்படுகின்றதென உணர்க. கீதையின் (ச - சு)ஐப் பார்க்க.

4 க்ஷத்திரியர் முதலாயினோர் யாகஞ்செய்தலிலும், வேதமோதுதலிலும் பிராமணர்களுடைய உதவியை வேண்டிநிற்கிறார்கள்.—(ஆ.)

त्रिगुणात्मिकां वैष्णवीं स्वां मायां मूलप्रकृतिं वशीकृत्य - अजोऽव्ययो
भूतानामीश्वरो नित्यशुद्धबुद्धमुक्तस्वभावोऽपि सन् - स्वमायया देह-
वानिव जात इव च लोकानुग्रहं कुर्वन् लक्ष्यते ॥

स्वप्रयोजनाभावेऽपि भूतानुजिघृक्षया वैदिकं धर्मद्वयम्
अर्जुनाय शोकमोहमहोदधौ निमग्नाय उपदिदेश, गुणाधिकैर्हि
गृहीतः अनुष्ठीयमानश्च धर्मः प्रचयं गमिष्यतीति ॥

तं धर्मं भगवता यथोपदिष्टं वेदव्यासः सर्वज्ञो भगवान्
गीताख्यैः सप्तभिः श्लोकशतैः उपनिबबन्ध ॥

तदिदं गीताशास्त्रं समस्तवेदार्थसारसंग्रहभूतं दुर्विज्ञेयार्थं
तदर्थाविष्करणाय अनेकैः विवृतपदपदार्थवाक्यार्थन्यायमपि

---

[1] தம் மாயையாகிய மூலப்பிரகிருதியை வசப்படுத்திக்கொண்டு[1]— (உண்மையில்) பிறவாதவராய், அழிவற்றவராய், பிராணிகளுக்கு ஈச்வரராய், இயல்பாகவே நித்யராய் சுத்தராய் புத்தராய் முக்தராயிருப்பினும்—தம் மாயையினாலே உடம்பொடு நிற்பவர்போலவும் பிறந்தவர்போலவும், லோகாநுக்கிரகஞ்செய்பவராய் (உலகத்தில்) காணப்படுகிறார். [புத்தர் - ஜடத்தன்மையற்றவர், ஞானவடிவானவர்.]

தமக்கு ஒருபயனும் இல்லையாயினும், பிராணிகளை ஈடேற்றவேண்டுமென்னும் எண்ணத்தால் வேதத்தில் விதித்துள்ள தருமமிரண்டையும் சோகமோகப் பெருங்கடலில் மூழ்கிக்கிடக்கின்ற அர்ஜுனனுக்கு—நற்குணம் மிகுந்தவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டும், அநுஷ்டிக்கப்பட்டும் வருவதான தருமம் பரவுதலை யடையுமென்று (கருதி) உபதேசித்தருளினர்.

கீதையும், பாஷ்யமும்.

முற்றுமுணர்ந்தவரான வேதவ்யாஸபகவான், கீதை என்னும் பெயருடைய எழுநூறுசுலோகங்களால் அந்தத் தருமத்தைப் பகவான் உபதேசித்தவண்ணம் திரட்டி அமைத்தருளினர். [வேத வ்யாஸர் - வேதங்களை வகுத்து ஒழுங்குபடுத்தியவர்.]

பிரசித்தமான இந்த கீதாசாஸ்திரமானது ஸகல வேதார்த்தஸாரத் திரட்டு; பொருளுணர்தற்கு அரியது. அதன் பொருளை வெளியிடுதற்காக (முன் உரை யெழுதினோர்) அநேகரால் பதம், பதப்பொருள், வாக்கியப்பொருள், நியாயமென்பன விவரிக்கப்பெற்றிருந்தும், (அது, முன்பின்)முற்றும் மாறுபட்ட பலபல பொருளுள்ளதாக ஸாமாந்ய ஜனங்களால் கிரகிக்கப்பட்டுவரக்கண்டு, அதன்

ரண்டனுள் முந்
...து' என்
தோற்ற
என்றும்,
(ஜீவன்
ான் அத
ிக்குமாறு

காண்க.—(ஆ.)"பகவானை அடைக்கலமாகப் புகுந்தவர் மாயையைக்கடந்து நிற்பர்"(எ-கச)என்ற இதனையும் இங்கு நோக்கிக்கொள்க. [மாயை—மாயா; வடசொல். மா-இல்லை, யா-எது. மாயை-எது இல்லையோ அது: அதாவது போலியான தோற்றம், பொய்ம்மை.]

உரைப்பாயிரம்.

𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌨𑍇𑌕𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑍇𑌨 𑌲𑍌𑌕𑌿𑌕𑍈𑌃 𑌗𑍃𑌹𑍍𑌯𑌮𑌾𑌣𑌮𑍍 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯 𑌅𑌹𑌂 𑌵𑌿𑌵𑍇𑌕-
𑌤𑌃 𑌅𑌰𑍍𑌥𑌨𑌿𑌰𑍍𑌧𑌾𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌤𑍋 𑌵𑌿𑌵𑌰𑌣𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 ॥

𑌤𑌸𑍍𑌯 𑌅𑌸𑍍𑌯 𑌗𑍀𑌤𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌤𑌃 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 𑌪𑌰𑌂 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌂 𑌸𑌹𑍇-
𑌤𑍁𑌕𑌸𑍍𑌯 𑌸𑌂𑌸𑌾𑌰𑌸𑍍𑌯 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍋𑌪𑌰𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 । 𑌤𑌚𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌪𑍂-
𑌰𑍍𑌵𑌕𑌾𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌰𑍂𑌪𑌾𑌤𑍍 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌇𑌮𑌮𑍇𑌵 𑌗𑍀𑌤𑌾𑌰𑍍𑌥𑌂
𑌧𑌰𑍍𑌮𑌂 𑌉𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌭𑌗𑌵𑌤𑍈𑌵 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍—"𑌸 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌸𑍁𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑌦-
𑌵𑍇𑌦𑌨𑍇" 𑌇𑌤𑌿 𑌅𑌨𑍁𑌗𑍀𑌤𑌾𑌸𑍁 । 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌚 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍—

"𑌨𑍈𑌵 𑌧𑌰𑍍𑌮𑍀 𑌨 𑌚𑌾𑌧𑌰𑍍𑌮𑍀 𑌨𑍈𑌵 𑌹𑌿 𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑍀 ।
𑌯𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍇𑌕𑌾𑌸𑌨𑍇 𑌲𑍀𑌨𑌃 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍 ॥"

"𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌚 । 𑌇𑌹𑌾𑌪𑌿 𑌚 𑌅𑌨𑍍𑌤𑍇 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌾𑌯—
"𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌮𑌾𑌮𑍇𑌕𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌵𑍍𑌰𑌜" 𑌇𑌤𑌿 ॥

𑌅𑌭𑍍𑌯𑍁𑌦𑌯𑌾𑌰𑍍𑌥𑍋𑌽𑌪𑌿 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍍 𑌆𑌶𑍍𑌰𑌮𑌾𑌂𑌶𑍍𑌚 𑌉𑌦𑍍𑌦𑌿-
𑌶𑍍𑌯 𑌵𑌿𑌹𑌿𑌤𑌃 । 𑌸 𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌸𑍍𑌥𑌾𑌨𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌰𑌪𑌿 𑌸𑌨𑍍, 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌰𑍍𑌪𑌣𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾

பொருளைத் தெளிவாய் நிர்ணயித்தற்பொருட்டு யான் சுருக்கமாய் உரைசெய்கிறேன். [நியாயம் - ஆக்ஷேப ஸமாதாநம்.]

ஞானயோகமே முக்திக்கு நேரான ஸாதநம்.

பிரசித்தமான இந்த கீதாசாஸ்திரத்தின் பயனாவது - சுருக்கமாக(ச் சொல்லில்), ஸம்ஸாரமானது (தனது) காரண(மாகிய மூல அஜ்ஞாந)த்தோடு முற்றும் ஒழிந்திடுதலாகிய (யாவற்றினும்)மேம்பட்ட உறுதியானநன்மையேயாம். அது, ஸகலகர்மங்களையும் துறத்தலை முன்னிட்டதான ஆத்மஞான நிஷ்டை என்னும் தருமத்தினின்று உண்டாகின்றது. அவ்வண்ணமே, கீதையின் பொருளான இதே தருமத்தைக் குறிப்பிட்டு "ப்ரஹ்மத்தின் நிலையைப் பெறுதற்கு அந்தத் தருமமே நன்றாகப் போதும்"(ம-அச்வ-௧௬-௧௨) என அநுகீதைகளில் பகவானே கூறினர். இன்னும், அங்கு"எவன் ஒன்றில் நிற்றலிலே ஊன்றி அமர்ந்தவனாய், ஒன்றும் நினையாதவனாய்ச் சும்மாவிருக்கின்றானோ அவனுக்குப் புண்ணியமுமில்லை, பாபமுமில்லை : வாழ்வுமில்லை, தாழ்வு மில்லை," "ஞானத்திற்குத் துறவே அடையாளம்" (ம-அச்வ-௪௩-௨௬) என்றும் கூறியுள்ளார். இங்கேயும் இறுதியில் "ஸகல தரும (அதரும)ங்களையும் விட்டொழிந்து என்னையே தஞ்சமாகக்கொள்" (௧௮-௬௬) என்று அர்ஜுனனுக்கு அருளிச் செய்தனர். [ஒன்றில் நிற்றலிலே ஊன்றி அமர்ந்தவன்—ப்ரஹ்மத்திலே லயித்தவன்.]

கர்மயோகமானது முக்திக்கு ஸாதநமாயிருக்கும் விதம்.

பிரவிருத்தி என்னும் தருமமானது, செல்வத்திற்குப் பயன்படுவதாயினும், வர்ணங்களையும் ஆச்ரமங்களையும் உத்தேசித்து விதிக்கப்பட்டதாம். அது, (பயனை எதிர்நோக்கிச் செய்யப்பட்டபொழுது) தேவர் முதலாயினோர்களின் நிலையைப் பெறுதற்கு ஏதுவாயிருப்பினும், பயனை எதிர்நோக்காது ஈச்வரார்ப்பணபுத்தியோடு

𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍀𑌯𑌮𑌾𑌨𑌃 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇 𑌭𑌵𑌤𑌿 𑌫𑌲𑌾𑌭𑌿𑌸𑌨𑍍𑌧𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃। 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯
𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑍇𑌨 𑌚 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯
𑌤𑍁𑌤𑍍𑌵𑌮𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇। 𑌤𑌥𑌾 𑌚 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿—"𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌧𑌾𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿,"
𑌨𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌽𑌽𑌤𑍍𑌮𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇" 𑌇𑌤𑌿॥

𑌇𑌮𑌂 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌚
𑌦𑍇𑌵𑌾𑌖𑍍𑌯𑌂 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌭𑌿𑌧𑍇𑌯𑌭𑍂𑌤𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 𑌅𑌭𑌿𑌵𑍍𑌯𑌞𑍍𑌜𑌯𑌦𑍍 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟
𑌨𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌾𑌭𑌿𑌧𑍇𑌯𑌵𑌦𑍍 𑌗𑍀𑌤𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍍। 𑌯𑌤𑌃 𑌤𑌦𑌰𑍍𑌥𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌸𑌮𑌸𑍍𑌤𑌪𑍁𑌰𑍁
𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃, 𑌅𑌤𑌃 𑌤𑌦𑍍𑌵𑌿𑌵𑌰𑌣𑍇 𑌯𑌤𑍍𑌨𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌮𑌯𑌾॥

செய்யப்பட, சித்தசுத்தி வரப்பண்ணுவதாம். இனிப் பரிசுத்தமான மன
நிஷ்டைக்கு ஏற்ற தகுதிபெற, அவ்வழியாக(ப் பிரவிருத்தி தருமமானது
முண்டாகச் செய்தலால், (இவ்வாறு)முக்திக்கு(ப் பரம்பரையான) காரணம
பெறுகின்றது. அவ்வண்ணமே (இதே கருத்தை உட்கொண்டு) "ப்ர
னிடத்துக் கர்மங்களை அர்ப்பித்து" "........யோகிகள் பற்றைவிட்டுக் கர்
செய்கிறார்கள், சித்தசுத்திக்காக" (ரு - ௧௦, ௧௧) என (ஸ்ரீ பகவான்) கூறுவ

கீதாசாஸ்திரத்தின் சிறப்புப்பொருளும், சிறப்புப்பயனும்.

கீதாசாஸ்திரமானது, முக்திக்குப் பயன்படுவதான இவ்விருவகை
தையும் (பொதுவாய்) வெளிப்படுத்தி, (தான்) சொல்ல எடுத்துக்கொண்ட
மான) ப்ரஹ்மமாகிய வாஸுதேவனென்ற பரமார்த்த தத்துவத்தைச் சி
வெளிப்படுத்துகின்றது; (எனவே,) சிறப்புப்பயனும், சிறப்புச்சம்பந்தமும்,
பொருளும்[1] உடையது (என்பதாயிற்று). அதன்பொருளைக் கண்டு தேறிய
ஸகலபுருஷார்த்தங்களும் கைகூடுமாதலால், யான் அதற்கு உரை யெழுத
செய்கின்றேன்.

---

[1] ஒருநூல் கேட்கப்புகுந்தவர்க்கு அந்நூலாற் கூறப்படும்பொருளும், நூல்கேட்டலாற் பெறப்படும் பயனும், கேட்டற்கு உரிய அதிகாரிகளாவார் இவரென்பதும், நூற்கும் நூல்கூறியபொருளுக்குமேயன்றி நூல்கூறியபொருளுக்கும் பயனுக்கும் ஸம்பந்தமும் உணர்ந்தாலன்றி நூல் கேட்பதில் மனஆக்கம் செல்லாமையின், இந்நான்கையும் முதலில் உணர்த்தவேண்டும்; ஆகவே, அவை இங்கு வருமாறு:—நூலாற் கூறப்படும் பொருள்-பரப்ரஹ்மம் : நூல்கேட்டலாற் பெறப்படும் பயன்-முக்தி : கேட்டற்கு உரிய அதிகாரிகளாவா
னன் போன்றவர் : நூற்கும் நூல்கூறி
ளுக்கும், உணர்த்துவதும் உணர்த்தப்ப
கிய ஸம்பந்தம் : நூல்கூறிய பொருளு
னுக்கும், ஸாதநமும் ஸாத்தியமுமாகிய
தம். இவற்றை முறையே விஷயம்,பிரே
அதிகாரி, ஸம்பந்தம் என்னும் அநுப
டயம் என்பர் வடநூலார். [ஸாதநம்
ஸாத்தியம் - கருவியால் ஸாதிக்கப்படுவ

𑌅𑌥

𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌵𑌿𑌷𑌾𑌦𑌯𑍋𑌗𑌃 ॥

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰 𑌉𑌵𑌾𑌚 ॥

௧. 𑌧𑌰𑍍𑌮𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌕𑍁𑌰𑍁𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌸𑌮𑌵𑍇𑌤𑌾 𑌯𑍁𑌯𑍁𑌤𑍍𑌸𑌵𑌃 ।
𑌮𑌾𑌮𑌕𑌾𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌕𑌿𑌮𑌕𑍁𑌰𑍍𑌵𑌤 𑌸𑌂𑌜𑌯 ॥

𑌸𑌂𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚 ॥

௨. 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑍀𑌕𑌂 𑌵𑍍𑌯𑍂𑌢𑌂 𑌦𑍁𑌰𑍍𑌯𑍋𑌧𑌨𑌸𑍍𑌤𑌦𑌾 ।
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑍁𑌪𑌸𑌂𑌗𑌮𑍍𑌯 𑌰𑌾𑌜𑌾 𑌵𑌚𑌨𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥

௩. 𑌪𑌶𑍍𑌯𑍈𑌤𑌾𑌂 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌮𑌹𑌤𑍀𑌂 𑌚𑌮𑍂𑌮𑍍 ।
𑌵𑍍𑌯𑍂𑌢𑌾𑌂 𑌦𑍍𑌰𑍁𑌪𑌦𑌪𑍁𑌤𑍍𑌰𑍇𑌣 𑌤𑌵 𑌶𑌿𑌷𑍍𑌯𑍇𑌣 𑌧𑍀𑌮𑌤𑌾 ॥

௪. 𑌅𑌤𑍍𑌰 𑌶𑍂𑌰𑌾 𑌮𑌹𑍇𑌷𑍍𑌵𑌾𑌸𑌾 𑌭𑍀𑌮𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌮𑌾 𑌯𑍁𑌧𑌿 ।
𑌯𑍁𑌯𑍁𑌧𑌾𑌨𑍋 𑌵𑌿𑌰𑌾𑌟𑌶𑍍𑌚 𑌦𑍍𑌰𑍁𑌪𑌦𑌶𑍍𑌚 𑌮𑌹𑌾𑌰𑌥𑌃 ॥

௫. 𑌧𑍃𑌷𑍍𑌟𑌕𑍇𑌤𑍁𑌶𑍍𑌚𑍇𑌕𑌿𑌤𑌾𑌨𑌃 𑌕𑌾𑌶𑌿𑌰𑌾𑌜𑌶𑍍𑌚 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 ।
𑌪𑍁𑌰𑍁𑌜𑌿𑌤𑍍𑌕𑍁𑌂𑌤𑌿𑌭𑍋𑌜𑌶𑍍𑌚 𑌶𑍈𑌬𑍍𑌯𑌶𑍍𑌚 𑌨𑌰𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑌃 ॥

௬. 𑌯𑍁𑌧𑌾𑌮𑌨𑍍𑌯𑍁𑌶𑍍𑌚 𑌵𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤 𑌉𑌤𑍍𑌤𑌮𑍌𑌜𑌾𑌶𑍍𑌚 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 ।
𑌸𑍌𑌭𑌦𑍍𑌰𑍋 𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍇𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌮𑌹𑌾𑌰𑌥𑌾𑌃 ॥

முதல் அத்தியாயம் : அர்ஜுனவிஷாதயோகம்.

போரின் ரீதியை ஸஞ்ஜயன் விவரமாய்ச் சொல்லுதல்.

திருதராஷ்டிரன் சொல்லலுற்றான் :

௧. ஸஞ்ஜய ! போர்செய்ய ஸன்னத்தராய் குருக்ஷேத்திரமென்னும் தருமபூமியிலே ஒருங்குகூடிய நம்மவரும் பாண்டவரும் என் செய்தார்கள்?

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான் :

௨. துர்யோதனராஜன், பாண்டவர்களின்படை அணிவகுக்கப்பட்டிருப்பதைக் கண்டு, அப்பொழுது ஆசார்யரருகிற்சென்று (இவ்) வார்த்தையைப் பேசலாயினன் :

துர்யோதனன் துரோணரோடு பேசுதல்.

௩. ஆசார்யரே ! பாண்டவருடைய இப்பெரியசேனையானது தங்களுடைய சிஷ்யனை புத்திசாலியாயுள்ள துருபதபுத்திரனால் அணிவகுக்கப்பட்டிருப்பதைப் பார்ப்பீர்களாக.

௪. இங்கே மகாவில்லாளரான சூரரும், போரில் வீமனுக்கும் அர்ஜுனனுக்கும் ஸமானருமான யுயுதானன், விராடன், மகாரதனை துருபதன்,

௫. த்ருஷ்டகேது, சேகிதானன், வீர்யசாலியான காசிராஜன், புருஜித், குந்திபோஜன், மனிதரிற் சிறந்தவனை சைப்யன்,

௬. பராக்கிரமசாலியான யுதாமந்யு, வீர்யசாலியான உத்தமௌஜஸ்; ஸுபத்ரா குமாரன், திரௌபதி குமாரர் (ஆகிய இவர்கள்) எல்லோருமே மகாரதர்கள்.

௭. அஸ்மாகம் து விஶிஷ்டா யே தாந்நிபோத த்விஜோத்தம |
நாயகா மம ஸைந்யஸ்ய ஸம்ஜ்ஞார்தம் தாந்ப்ரவீமி தே ||

௮. பவாந்பீஷ்மஶ்ச கர்ணஶ்ச க்ருபஶ்ச ஸமிதிஞ்ஜய꞉ |
அஶ்வத்தாமா விகர்ணஶ்ச ஸௌமதத்திர்ஜயத்ரத꞉ ||

௯. அந்யே ச பஹவ꞉ ஶூரா மதர்தே த்யக்தஜீவிதா꞉ |
நாநாஶஸ்த்ரப்ரஹரணா꞉ ஸர்வே யுத்தவிஶாரதா꞉ ||

௧௦. அபர்யாப்தம் ததஸ்மாகம் பலம் பீஷ்மாபிரக்ஷிதம் |
பர்யாப்தம் த்விதமேதேஷாம் பலம் பீமாபிரக்ஷிதம் ||

௧௧. அயநேஷு ச ஸர்வேஷு யதாபாகமவஸ்திதா꞉ |
பீஷ்மமேவாபிரக்ஷந்து பவந்த꞉ ஸர்வ ஏவ ஹி ||

௧௨. தஸ்ய ஸஞ்ஜநயந்ஹர்ஷம் குருவ்ருத்த꞉ பிதாமஹ꞉ |
ஸிம்ஹநாதம் விநத்யோச்சை꞉ ஶங்கம் தத்மௌ ப்ரதாபவாந் ||

௧௩. தத꞉ ஶங்காஶ்ச பேர்யஶ்ச பணவாநககோமுகா꞉ |
ஸஹஸைவாப்யஹந்யந்த ஸ ஶப்தஸ்துமுலோऽபவத் ||

௧௪. தத꞉ ஶ்வேதைர்ஹயைர்யுக்தே மஹதி ஸ்யந்தநே ஸ்திதௌ |
மாதவ꞉ பாண்டவஶ்சைவ திவ்யௌ ஶங்கௌ ப்ரதத்மது꞉ ||

---

௭. ஆனல், பிராமணேத்தமரே! நம்மில் சிறந்தவரான என்சேனைத்தலைவர்கள் எவரோ, அவர்களைத் தெரிந்துகொள்க. (தாங்களே தெரிந்துகொள்ளக்கூடுமென்ருலும், இந்த யுத்தக்குழப்பத்தில்) தங்களுக்கு ஒருகுறிப்புக்காக அவர்களைக் கூறுகின்றேன் :

௮. தாங்களும், பீஷ்மரும், கர்ணனும், போரில் வெற்றிபெறும் கிருபரும், அச்வத்தாமனும், விகர்ணனும், ஸோமதத்தன் குமாரனும், ஜயத்ரதனும்,

௯. மற்றும் அனேகசூரரும் எனக்காக உயிரைவிடத் துணிந்தவர் : போர்செய்யக் கருவியான பல பல ஆயுதங்களுடையவர் : போர்புரிதலில் ஸகலரும் தேர்ந்தவர்.

௧௦. பீஷ்மரால் பாதுகாக்கப்பட்டதான நம்முடைய இச்சேனை அபரிமிதமாயிருக்கின்றது. வீமனுற் காக்கப்பட்டதான இவர்களுடைய இச்சேனையோ மிதமாயிருக்கின்றது.

௧௧. ஆகவே, நீங்களெல்லாருமே எல்லாப்படைவகுப்புக்களிலும் தம்தம் நிலைகளினின்று பீஷ்மரையே எல்லாப்புறங்களிலும் காத்தல்வேண்டும்.

இருதிறத்துச்சேனைகளும் போருக்குச் சன்னத்தமாயிருத்தல்.

௧௨. கௌரவர்களில் பெரியவரும் பிரதாபசாலியுமான பாட்டனர் [பீஷ்மர்], அவனுக்கு [துர்யோதனனுக்கு] உத்ஸாஹ முண்டாக்குபவராய், உரக்க ஸிம்ஹநாதஞ்செய்து சங்கையூதினர்.

௧௩. பின்பு உடனே சங்குகளும், பேரிகளும், தம்பட்டங்களும், பறைகளும், ஊதுகொம்புகளும் முழக்கப்பட்டன; அவ்வொலி நிரம்பிநின்றது.

௧௪. அப்பால், மாதவனும் பாண்டவனும் வெண்குதிரைகள் பூட்டியதோர் பெரிய தேரினுள் இருந்தே (தம்முடைய) திவ்வியமான சங்குகளை ஊதினர்கள்.

௧௫. பாஞ்சஜந்யம் ஹ்ருஷீகேஶோ தேவதத்தம் தநஞ்ஜய: |
பௌண்ட்ரம் தத்மௌ மஹாஶங்கம் பீமகர்மா வ்ருகோதர: ||

௧௬. அநந்தவிஜயம் ராஜா குந்தீபுத்ரோ யுதிஷ்டிர: |
நகுல: ஸஹதேவஶ்ச ஸுகோஷமணிபுஷ்பகௌ ||

௧௭. காஶ்யஶ்ச பரமேஷ்வாஸ: ஶிகண்டீ ச மஹாரத: |
த்ருஷ்டத்யும்நோ விராடஶ்ச ஸாத்யகிஶ்சாபராஜித: ||

௧௮. த்ருபதோ த்ரௌபதேயாஶ்ச ஸர்வஶ: ப்ருதிவீபதே |
ஸௌபத்ரஶ்ச மஹாபாஹு: ஶங்காந் தத்மு: ப்ருதக் ப்ருதக் ||

௧௯. ஸ கோஷோ தார்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத் |
நபஶ்ச ப்ருதிவீம் சைவ துமுலோ வ்யநுநாதயந் ||

௨௦. அத வ்யவஸ்திதாந் த்ருஷ்ட்வா தார்தராஷ்ட்ராந் கபித்வஜ: |
ப்ரவ்ருத்தே ஶஸ்த்ரஸம்பாதே தநுருத்யம்ய பாண்டவ: ||

௨௧. ஹ்ருஷீகேஶம் ததா வாக்யமிதமாஹ மஹீபதே |

அர்ஜுந உவாச ||

ஸேநயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய மேऽச்யுத ||

௨௨. யாவதேதாந்நிரீக்ஷேऽஹம் யோத்துகாமாநவஸ்திதாந் |
கைர்மயா ஸஹ யோத்தவ்யமஸ்மிந் ரணஸமுத்யமே ||

---

௧௫. ஹ்ருஷீகேசன் பாஞ்சஜந்யத்தையும், அர்ஜுனன் தேவதத்தத்தையும், பயங்கரத்தொழிலனை வீமன் பௌண்ட்ரமென்னும் பெரியசங்கையும் முழக்கினர்கள்.

௧௬. குந்திகுமாரனை யுதிஷ்டிரராஜன் அநந்தவிஜயத்தையும், நகுலன் ஸுகோஷத்தையும், ஸஹதேவன் மணிபுஷ்பகத்தையும் (ஊதினர்கள்.)

௧௭. சிறந்தவில்லாளனை காசிராஜனும், மகாரதனை சிகண்டியும், த்ருஷ்டத்யும்நனும், விராடனும், (பகைவரால்)ஜயிக்கப்படாத ஸாத்யகியும்,

௧௮. துருபதனும், திரௌபதிகுமாரர்களும், உயர்தோளனை ஸுபத்ராகுமாரனும் ஆகிய ஸகலரும், பூபதியே! தனித்தனியாய்(தம்தம்)சங்குகளை முழக்கினர்கள்.

௧௯. ஆரவாரித்த அவ்வொலியானது, பூமியையும் ஆகாசத்தையும் எதிரொலிக்கும்படிசெய்வதாய்த் திருதராஷ்டிரனைச் சேர்ந்தவர்களின் நெஞ்சுகளைப் பிளந்தது.

அர்ஜுநன் தனது எதிரிகளை நோக்குதல்.

௨௦, ௨௧, ௨௨. வேந்தே! பின்பு (போர்வீரர்) ஆயுதங்களை வழங்-பட்டவுடன், குரங்குக் கொடியையுடைய பாண்டவன், ஒழுங்காக அணி-நிற்கும் திருதராஷ்டிரஜனத்தாரைப் பார்த்து, (கையில்) வில் ஏந்தி, ஹ்ருஷீகேசனிடத்து இவ்வார்த்தையைக் கூறினன் :

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

"போர்செய்யக் கருதி (இங்கு)நிற்கின்ற இவர்களை யான் ட இடத்திலே, இருசேனைக்கும் நடுவிலே, அச்யுத! எனது தேரை நி. போர்க்குழப்பத்திலே யான் எவருடன் போர்செய்ய வேண்டுமோ, (அவ வைத்துக்கொள்கிறேன், ஏனெனில்,)

உங. யொத்ஸ்யமாநாநவெக்ஷெஹம் ய ஏதெऽத்ர ஸமாகதா: ।
யாத்ர்ராஷ்ட்ரஸ்ய துர்புத்தெர் யுத்தெ ப்ரியசிகீர்ஷவ: ॥

ஸஞ்ஜய உவாச ॥

உச. ஏவமுக்தோ ஹ்ருஷீகேஶோ குடாகேஶேந பாரத ।
ஸேநயோருபயோர்மத்யே ஸ்தாபயித்வா ரதோத்தமம் ॥

உரு. பீஷ்மத்ரோணப்ரமுகத: ஸர்வேஷாம் ச மஹீக்ஷிதாம் ।
உவாச பார்த பஶ்யைதாந் ஸமவேதாந் குரூநிதி ॥

உசு. தத்ராபஶ்யத் ஸ்திதாந் பார்த: பித்ரூநத பிதாமஹாந் ।
ஆசார்யாந் மாதுலாந் ப்ராத்ரூந் புத்ராந் பௌத்ராந் ஸகீ◌

உஎ. ஶ்வஶுராந் ஸுஹ்ருதஶ்சைவ ஸேநயோருபயோரபி ।
தாந் ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேய: ஸர்வாந் பந்தூநவஸ்திதாந்

உஅ. க்ருபயா பரயாऽऽவிஷ்டோ விஷீதந்நிதமப்ரவீத் ।

அர்ஜுந உவாச ॥

த்ருஷ்ட்வேமாந் ஸ்வஜநாந் க்ருஷ்ண யுயுத்ஸூந் ஸமுபஸ்திதாந் ॥

உகூ. ஸீதந்தி மம காத்ராணி முகம் ச பரிஶுஷ்யதி ।
வெபதுஶ்ச ஶரீரே மே ரோமஹர்ஷஶ்ச ஜாயதே ॥

உங. திருதராஷ்டிரபுத்திரனை கெடுபுத்தியானுக்கு [துர்யோதன
போரிலே உதவிபுரியக்கருதி(ப்பற்பலதேசங்களிலிருந்து) இங்கு வந்துள்ள இ
போர்செய்ய வந்தவராகக் காண்கின்றேன்.''

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான் :

உச, உரு. பாரத! இவ்வாறு குடாகேசனாற்கூறப்பெற்ற ஹ்ருஷீகேச
சேனைக்கும் நடுவிலே, பீஷ்மருக்கும் துரோணருக்கும் (மற்றுமுள்ள) சகல
கும் எதிரிலே சிறந்த தேரை நிறுத்தி, ''பார்த்த! (இங்குக்) கூடிய இக்
களைப் பார்'' என மொழிந்தனர்.

உசு, உஎ. பார்த்தன்,—தந்தையரும், பாட்டனரும், ஆசார்யரும்,
களும், பிராதாக்களும், புத்திரரும், பேரன்மார்களும், தோழர்களும், மா
மித்திரரும் அங்கு இருசேனையிலும் நிற்கக் கண்டான்.

உஅ. அவ்வுறவினரனைவரும் (அங்கு)நிற்கக் கண்டு, மிக்
'று, மனத்திடனழிந்து கலங்கி அக்குந்தியின்குமாரன்

னங்கலங்கிக்கூறும் சோகவார்த்தைகள்.

னன் சொல்லலுற்றான் :

ரணங்கொண்டு (போர்க்களத்திற்)போ
கிருஷ்ண! என் அவயவங்கள் சோர்
நடுக்கமும் மயிர்க்கூச்சும் உண்டாகின்ற

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

௩௮. 𑌯𑌦𑍍𑌯𑌪𑍍𑌯𑍇𑌤𑍇 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌲𑍋𑌭𑍋𑌪𑌹𑌤𑌚𑍇𑌤𑌸𑌃 ।
𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑌕𑍃𑌤𑌂 𑌦𑍋𑌷𑌂 𑌮𑌿𑌤𑍍𑌰𑌦𑍍𑌰𑍋𑌹𑍇 𑌚 𑌪𑌾𑌤𑌕𑌮𑍍 ॥

௩௯. 𑌕𑌥𑌂 𑌨 𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑌸𑍍𑌮𑌾𑌭𑌿𑌃 𑌪𑌾𑌪𑌾𑌦𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑍁𑌮𑍍 ।
𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑌕𑍃𑌤𑌂 𑌦𑍋𑌷𑌂 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ॥

௪௦. 𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑍇 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 𑌸𑌨𑌾𑌤𑌨𑌾𑌃 ।
𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨𑌷𑍍𑌟𑍇 𑌕𑍁𑌲𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑍋𑌭𑌿𑌭𑌵𑌤𑍍𑌯𑍁𑌤 ॥

௪௧. 𑌅𑌧𑌰𑍍𑌮𑌾𑌭𑌿𑌭𑌵𑌾𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌣 𑌪𑍍𑌰𑌦𑍁𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑍁𑌲𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁 𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌸𑍁 𑌵𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍇𑌯 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌃 ॥

௪௨. 𑌸𑌂𑌕𑌰𑍋 𑌨𑌰𑌕𑌾𑌯𑍈𑌵 𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌕𑍁𑌲𑌸𑍍𑌯 𑌚 ।
𑌪𑌤𑌨𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑌰𑍋 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌲𑍁𑌪𑍍𑌤𑌪𑌿𑌣𑍍𑌡𑍋𑌦𑌕𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ॥

௪௩. 𑌦𑍋𑌷𑍈𑌰𑍇𑌤𑍈𑌃 𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌕𑌾𑌰𑌕𑍈𑌃 ।
𑌉𑌤𑍍𑌸𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌜𑌾𑌤𑌿𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌶𑍍𑌚 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌾𑌃 ॥

௪௪. 𑌉𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌾𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ।
𑌨𑌰𑌕𑍇 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌵𑌾𑌸𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌨𑍁𑌶𑍁𑌶𑍍𑌰𑍁𑌮 ॥

௪௫. 𑌅𑌹𑍋 𑌬𑌤 𑌮𑌹𑌤𑍍𑌪𑌾𑌪𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑌿𑌤𑌾 𑌵𑌯𑌮𑍍 ।
𑌯𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑍁𑌖𑌲𑍋𑌭𑍇𑌨 𑌹𑌨𑍍𑌤𑍁𑌂 𑌸𑍍𑌵𑌜𑌨𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑌾𑌃 ॥

போரின் தீங்குகளைப்பற்றி அர்ஜுனன் வருந்துதல்.

௩௮, ௩௯. லோபத்தால் கெட்ட மனத்தினரான இவர்கள், குலநாசத்தாலான தீங்கையும் மித்திரத்துரோகத்தில் (விளையும்) பாதகத்தையும் அறியாவிட்டாலும், குலநாசத்தாலான தீங்கை (நாம்) நன்றாய்ப் பார்க்கும்பொழுது, நமக்கு இப்பாபத்தைத் தவிர்க்க எப்படித் தெரியாமற் போகும் ?

௪௦. குலம் கெட்டுப்போகும்பொழுது ஸநாதநமான குலதருமங்கள் (அநுஷ்டானத்தில்) இல்லாமற்போகின்றன. தருமங்கள் இல்லாமற்போக, குலம் முழுவதையும் அதர்மம் வியாபிக்கின்றது.

௪௧. அதர்மம் வியாபித்தலால், கிருஷ்ணா! குலஸ்திரீகள் கற்பழிந்துவிடுகிறார்கள். ஸ்திரீகள் கற்பழிய, வார்ஷ்ணேய! ஜாதிக்கலப்பு உண்டாகின்றது.

௪௨. ஜாதிக்கலப்பானது குலத்தைக் கெடுத்தவரது குலத்திற்கும் நரகத்திற்கு ஏதுவாகின்றது ; ஏனெனில், இவர்களுடைய பிதிருக்கள் பிண்டக்கிரியையும் உதகக்கிரியையும் இழந்திட்டவராய் (நரகத்தில்) வீழ்கிறார்கள்.

௪௩. ஜாதிக்கலப்பை விளைவிப்பனவாகிய குடிகேடர்களுடைய இத்தீத்தொழில்களால், சாச்வதமான ஜாதிதருமங்களும் குலதருமங்களும் கெட்டழிந்துபோம்படி செய்யப்படுகின்றன.

௪௪. ஜநார்த்தந! குலதருமங்கெட்ட மனிதர்களுக்கு நரகத்திலே வாஸம் அவச்யம் உண்டெனக் கேட்டுள்ளோம்.

௪௫. ஆ! என்னே! மஹத்தான பாபஞ்செய்ய (அஞ்சாது) துணிந்திட்டோமே! ராஜ்யஸுகவிஷயமான கடும்பற்றினாலே ஸ்வஜனத்தைக் கொல்ல(வும்) முயன்றுளோமாதலின்.

௪௬. யதி மாமப்ரதீகாரமஶஸ்த்ரம் ஶஸ்த்ரபாணய: ।
தார்தராஷ்ட்ரா ரணே ஹந்யுஸ்தந்மே க்ஷேமதரம் பவேத் ॥

ஸஞ்ஜய உவாச ॥

௪௭. ஏவமுக்த்வார்ஜுந: ஸங்க்யே ரதோபஸ்த உபாவிஶத் ।
விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம் ஶோகஸம்விக்நமாநஸ: ॥

இதி ஶ்ரீமஹாபாரதே ஶதஸாஹஸ்ர்யாம் ஸம்ஹிதாயாம் வையாஸிக்யாம் பீஷ்மபர்வணி ஶ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகஶாஸ்த்ரே ஶ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே அர்ஜுநவிஷாதயோகோ நாம ப்ரதமோऽத்யாய: ॥

---

௪௬. கையில் ஆயுதத்தையுடைய திருதராஷ்டிர புத்திரர், போரில் (அவர்களை) எதிர்க்காமலும் (கையில்) ஆயுதமில்லாமலும் இருக்கின்ற என்னைக் கொல்வார்களானால், அது எனக்கு அதிக நன்மை யாகும்.

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான் :

௪௭. அர்ஜுனன், இவ்வாறு சொல்லி, அம்போடு வில்லையும் போர்க்களத்தில் (கீழே) எறிந்து, சோகத்தாற் பதைத்த மனத்தினனாய்த் தேர்த்தட்டில் உட்கார்ந்துவிட்டான்.

நூறாயிரக்கிரந்தஸம்ஹிதையாய் வியாஸர் அருளிச்செய்த ஸ்ரீ மஹாபாரதத்திலே பீஷ்மபர்வத்திலே ஸ்ரீமத்பகவத்கீதைகளாக, உபநிஷத்துக்களாக, ப்ரஹ்மவித்யையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனஸம்வாதத்திலே அர்ஜுனவிஷாதயோகமென்னும் முதல் அத்தியாயம் முற்றும்.

த்விதீயோ(அ)த்யாய: ஸாங்க்யயோக: ||

ஸஞ்ஜய உவாச ||

௧. தம் ததா க்ருபயா(ஆ)விஷ்டமஶ்ருபூர்ணாகுலேக்ஷணம் |
விஷீதந்தமிதம் வாக்யமுவாச மதுஸூதந: ||

ஶ்ரீபகவாநுவாச ||

௨. குதஸ்த்வா கஶ்மலமிதம் விஷமே ஸமுபஸ்திதம் |
அநார்யஜுஷ்டமஸ்வர்க்யமகீர்திகரமர்ஜுந ||

௩. க்லைப்யம் மா ஸ்ம கம: பார்த நைதத்த்வய்யுபபத்யதே |
க்ஷுத்ரம் ஹ்ருதயதௌர்பல்யம் த்யக்த்வோத்திஷ்ட பரந்தப ||

அர்ஜுந உவாச ||

௪. கதம் பீஷ்மமஹம் ஸங்க்யே த்ரோணம் ச மதுஸூதந |
இஷுபி: ப்ரதியோத்ஸ்யாமி பூஜார்ஹாவரிஸூதந ||

௫. குரூநஹத்வா ஹி மஹாநுபாவாந்
ஶ்ரேயோ போக்தும் பைக்ஷ்யமபீஹ லோகே |
ஹத்வார்தகாமாம்ஸ்து குரூநிஹைவ

இரண்டாம் அத்தியாயம் : ஸாங்க்யயோகம்.

பகவான், அர்ஜுநன் மனநோய்ம்மையைக் கண்டித்தல்.

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான் :

௧. அவ்வாறு இரக்கம் மேலிட்டு, கண்களில் நீர் நிரம்பித் ததும்பப்பெற்று மனமேங்கிநிற்கின்ற அவனுக்கு மதுஸூதநன் இவ்வார்த்தையைக் கூறலானார் :

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

௨. அஸத்துக்கள் கைக்கொண்டதும், ஸ்வர்க்கத்தை அடையவொட்டாமல் தடுப்பதும், பழியைமிகுவிப்பதுமான இம்மனநொய்ம்மையானது, (இந்த யுத்த) ஸங்கடத்திலே உனக்கு எங்கிருந்து வந்ததோ ? அர்ஜுன !

௩. பார்த்த! ஆண்மையற்றதன்மைக்கு உட்படாதே; இது உனக்குத் தகாது. பரந்தப ! இந்த இழிவான மனநொய்ம்மையைத் தூரத்தள்ளிவிட்டு எழுந்திரு.

அர்ஜுநன், பகவான் உபதேசத்தை நாடுதல்.

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

மதுஸூதந ! (புஷ்பாதிகளால்) பூஜிக்கத்தக்கவர்களான பீஷ்மரையும் யான் எப்படிப் போரில் அம்புகளால் எதிர்த்துச் சண்டைசெய்வேன்?

-களைக் கொல்லாமல் இவ்வுலகிலே பிச்சை -ாவது, மகான்களைக் கொன்று அரசாள்வதை -ள்ள பிச்சையெடுத்துப்பிழைத்தலே மேலான -ன்றுவிட்டாலோ, இரத்தந்தோயப் பெற்றவை

ஹுஂஜீய ஹொமாநு ரஂயிரவூஜிஹாநு ॥

சு. ந வெதத்ஷிஜூ: கதுரநொ மரீய:
யஉா ஜயெஜ யஜி வா நொ ஜயெயு: ।
யாநெவ ஹகவா ந ஜிஜீவிஷாஜ:
தெஉவஷ்ஹிதா: வூஜவெ யாதுராஷ்ட்ரா: ॥

எ. காவஞ்ணொஷொவஹதஷஹாவ:
வுஜூாஜி கூாஂ யஜஂஹஂஜஙஜவெதா: ।
யஜ்ஜ்ய: ஹ்யாநிஸ்சிதஂ வூஹி தநெ
ஸிஷ்யஸ்தெஹஂ ஸாயி ஜாஂ கூாஂ வூவநூ ॥

அ. ந ஹி வூவஸ்யாஜி ஜாவநஉாஜ யஜ்ஜாகஜஜொஷணஜிஂஜியாணாஂ।
அவாவ்யஹஜாவவவநூஜஂ ராஜ்யஂ ஹுராணாஜவி வாயிவத்யஂ ॥

ஹஂஜய உவாச ॥

கூ. ஹவஜூக்ஷா ஹ்ரஷீகெஸஂ மஹாகெஸ: வாஜவ: ।
ந யொத்ஸ்ய இதி மொவிநஂ உக்ஷா தூஷ்ணீஂ வஹூவ ஹ ॥

யான [i] ஸம்பத்து காமம் போகம் இவைகளை இவ்வுலகிலேயே அனுபவிக்கவேண்டும்.

சு. மேலும், (பிச்சையெடுத்துப்பிழைத்தல் ஸ்வஜாதிதருமமென்று போர் புரிதல் என்ற இவ்விரண்டனுள்) எது நமக்கு மேலானதோ? (நாமே அவர்களை) வெல்வோமோ?—அல்லது (அவர்களே) நம்மை வெல்வாரோ? (என்ற) இதுவும் நமக்குத் தெரியாது. (நாம்)எவர்களைக் கொன்றபின்னர் உயிர்வாழவிரும்பமாட்டோமோ, அந்தத் திருதராஷ்டிர புத்திரர்களே (இப்போர்க்களத்தில் நமக்கு) எதிரே வந்து நிற்கிறார்கள்.

எ. லோபம் என்ற குற்றத்தினால் கெட்டழிந்த மனத்தினனாய், தருமவிஷயத்திலே மனம்திகைத்த அடியேன் (யாது நன்மை? எனத்) தங்களை வினவுகின்றேன்; எது உறுதியான நன்மையோ, அதனை எனக்கு உரைப்பீர்களாக; (ஏனெனின்,) நான் தங்களுடைய சிஷ்யனாகின்றேன்: தங்களை வந்தடைந்த எனக்கு, (நல்வழிப்படுமாறு) அறிவுறுத்தியருளுக. [லோபம்-இங்கு, ராஜ்யத்தைப் பெறவேணுமென்ற ஆசை.]

அ. உலகிலே பகைவரற்றதாய்ச் செழித்திருக்கும் ராஜ்யமும், தேவர்கட்குத் தலைவனாயிருத்தலும் கிடைக்கப்பெற்றாலும், புலன்களை(த் தீப்போல) அழற்றுகின்ற தான என்துயரத்தைப் போக்குவது இன்னதென்று எனக்குத் தெரியவே இல்லை [இந்திரபதவியைப் பெற்றாலும், என் துயரம் தீருமாறு இல்லை].

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான்:

கூ. பகைவரை எரிக்கும் குடாகேசன், இவ்வாறு ஹ்ருஷீகே பின்பு, "போர் புரியமாட்டேன்" என்று(ம்) கோவிந்தனிடஞ் செ ன்றும்) பேசாமலே இருந்திட்டான்.

"தான் ராஜபோகம் அநுபவித்தற்காக அர்ஜுநன் மகான்களைக் கொன்றுவிட்டான்" என்னும் அபகீர்த்தி வியாபிக்குமாதலின், ஸம்பத்தின் அநுபவமும், காமநுகர்ச்சியும் இரத்தந் தோய்ந்தவை போல மிக்க அருவருப்பானவை.

௧௦. तमुवाच हृषीकेशः प्रहसन्निव भारत ।
सेनयोरुभयोर्मध्ये विषीदन्तमिदं वचः ॥

अत्र च 'दृष्ट्वा तु पाण्डवानीकम्' इत्यारभ्य यावत् 'न योत्स्य इति गोविन्दमुक्त्वा तूष्णीं बभूव ह' इत्येतदन्तः प्राणिनां शोकमोहादिसंसारबीजभूतदोषोद्भवकारणप्रदर्शनार्थत्वेन व्याख्येयो ग्रन्थः । तथा हि — अर्जुनेन राज्यगुरुपुत्रमित्रसुहृत्स्वजनसम्बन्धिबान्धवेषु 'अहमेतेषाम्', 'ममैते' इत्येवंप्रत्ययनिमित्तस्नेहविच्छेदादिनिमित्तौ आत्मनः शोकमोहौ प्रदर्शितौ 'कथं भीष्ममहं संख्ये' इत्यादिना । शोकमोहाभ्यां ह्यभिभूतविवेकविज्ञानः स्वत एव क्षत्रधर्मे युद्धे प्रवृत्तोऽपि तस्माद्युद्धादुपरराम; परधर्मं च भिक्षाजीवनादि कर्तुं प्रववृते । तथा च सर्वप्राणिनां शोकमोहादिदोषाविष्टचेतसां स्वभावत एव स्वधर्मपरित्यागः प्रतिषिद्धसेवा च स्यात् । स्वधर्मे प्रवृत्तानामपि तेषां वाङ्मनःकायादीनां प्रवृत्तिः फलाभिसन्धिपूर्विकैव साह-

---

௧௦. பாரத! இருசேனைக்கும் இடையே (இவ்வாறு)மனங்கலங்கிநிற்கும்அவனுக்கு, ஹ்ருஷீகேசன், புன்னகைசெய்கிறவர்போன்று இவ்வார்த்தையைக் கூறலாயினர்: [புன்னகை செய்கிறவர் போன்று=(தேறுதல் சொல்லுதற்காகப்) பிரஸன்னமுகராகி.]

ஆத்மஞானமே துன்பத்தை அறத் துடைக்கும்.

இங்கு "துர்யோதனராஜன்" (௧-௨) என்பது முதல் "போர்புரியமாட்டேனென்று(ம்) கோவிந்தனிடஞ்சொல்லிவிட்டு (மேலொன்றும்) பேசாமலே இருந்திட்டான்" (௨-௯) என்பது ஈறுகவுள்ள நூல், ஸம்ஸாரத்திற்கு வித்துக்களான சோக மோகாதித்தீங்குகள்(எல்லாம்)பிராணிகளுக்குஉண்டாவதன்காரணத்தை நன்குவிளக்குவதாக உரைக்கவேண்டும். எங்ஙனமெனில்—ராஜ்யமும், பெரியோரும், புத்திரரும், மித்திரரும், ஸுஹ்ருத்துக்களும், தன்ஜனங்களும், ஸம்பந்திகளும், பந்துக்களுமாகிய இவர்களின்மீது "நான் இவர்களைச் சேர்ந்தவன், இவர்கள் என்னைச் சேர்ந்தவர்" என்ற இத்தகைய எண்ணத்தால் உண்டாகும் பற்றினாலும், (அப்படித், தான் பற்று வைத்த அவர்களை) இழந்துவிடுதலாலும், இன்னும் (இவைபோன்ற)பிறவற்றாலும் விளைவனவாகிய தனது சோகமோகங்கள், "மதுஸூதந! (புஷ்பாதிகளால்) பூஜிக்கத்தக்கவர்களான" (௨-௪) என்பது முதலாக (ஐந்து சுலோகங்களால்) அர்ஜுனனால் நன்கு காட்டப்பட்டன. க்ஷத்திரியதருமமாகிய யுத்தத்தைத் தானேமேற்கொண்டு (போர்க்களத்திற்கு வந்து) இருந்தும், (தன்)விவேகபுத்தி (நிலைகுலைந்து கலங்கும்படி) சோக மோகங்களாலே தாக்கப்பட்டவனாய் அந்தயுத்தத்தைத் தவிர்ந்தான். பிற[ஸந்யாஸி] ...டுத்துஜீவித்தல் முதலியனவும் செய்யத்தலைப்பட்டான். அவ்வி... ...ான தீங்குகள்நிறைந்துகிடக்கும் மனத்தினையுடைய ஸகல ...ருமத்தைக் கைவிடலும், விலக்கியதைக் கைக்...த மேற்கொண்டு ஒழுகுபவராயினும், அவர்களு...வைகளின் போக்கு, பயனை எதிர்பார்த்தலை முன்...காரத்தோடு அமைந்துள்ளது. அவர்கள் இப்படி

[illegible]

யிருத்தலால், தருமஅதருமங்களின்பெருக்கத்தால் நல்லனதீயனவான பிறவிகளையும் இன்பதுன்பங்களையும்அடைதலாகிய ஸம்ஸாரமானது ஒழிவின்றிநிற்கின்றது. ஆகவே, சோகமோகங்கள் ஸம்ஸாரத்திற்கு வித்துக்களாம். அவைகளோ, ஸகலகர்மங்களை யும்துறத்தலை முன்னிட்டதான ஆத்மஞானத்தினு லன்றி நீங்கா என்று அதனை [ஆத்மஞானத்தை] ஸகலலோகாநுக்கிரகத்தின்பொருட்டு உபதேசிக்க விரும்பியவராய், அர்ஜுனனைக் காரண [வியாஜ] மாகக்கொண்டு பகவான் வாஸுதேவன் "நீ (யாவராலும்) துக்கிக்கவேண்டாதவரைக் குறித்து" (உ-கக) என்பதாதியாக அருளிச்செய்ய லானார் :

ஞானம் கர்மம் இரண்டுங்கூடியே முக்திக்கு ஸாதநமாம் என்னும் கோள்கை.

இவ்விஷயத்திலே, "ஸகலகர்மங்களையும் துறத்தலை முன்னிட்டதான ஆத்ம ஞானநிஷ்டையாலேமாத்திரம் முக்தி கிடைக்கவேகிடைக்காது. மற்று என்னையோவெனின், அக்நிஹோத்ராதி ச்ரௌதகர்மங்களையும், (ஔபாஸநாதி)ஸ்மார்த்தகர்மங்களையும்|துணையாகப்பெற்ற ஞானத்தினுல்(தான்)முக்தி கிடைக்குமென்பது, கீதைமுழுவதிலும் நிர்ணயிக்கப்பட்ட பொருள்" என்று சிலர் கூறுகிறார். இதுதான் கீதையின் பொருள் என்பதற்கு அறிகுறியாகவும், " இனி நீ இந்த நியாயமான யுத்தத்தைச் செய்யாவிடில்"(உ-௩௩),"கர்மத்திலேதான் உனக்கு அதிகாரம்" (உ-௪௭),"ஆதலால், நீ கர்மத்தையே செய்யக்கடவாய்" (௩-க௫)என்பன முதலியவற்றை(மேற்கோளாக எடுத்துக்) கூறுகின்றனர். 'வேதத்தில் விதித்த கர்மமானது, ஹிம்ஸை [கொலை] முதலியன கூடியுள்ளமையால் அதருமத்தின்பொருட்டாகின்றது' என்ற இச்சங்கையும் படவேண்டாம். எப்படியெனில்—க்ஷத்திரியனுக்குஉரிய யுத்தமென்னும்கர்மமானது, மூத்தோர் ஸஹோதரர் புத்திரர் முதலாயினேரை ஹிம்ஸிப்பதாய்(இருத்தலால்) மிகக்கொடியதாயினும், தனது[க்ஷத்திரியனது] தொழில் என்ற காரணத்தால் அதருமமாகாது. அதனைச் செய்யாவிடிலோ "நீ ஸ்வ [உன்]தருமத்தையும்விட்டு, புகழையும் இழந்து,

𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑌾𑌪𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿। ’ 𑌇𑌤𑌿 𑌬𑍍𑌰𑍁𑌵𑌤𑌾 𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿-
𑌚𑍋𑌦𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑌶𑍍𑌵𑌾𑌦𑌿𑌹𑌿𑌂𑌸𑌾𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌗𑍇𑌵 𑌨 𑌅𑌧𑌰𑍍𑌮-
𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 ॥

𑌤𑌦𑌸𑌤𑍍 ; 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌯𑍋𑌃 𑌵𑌿𑌭𑌾𑌗𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌦𑍍𑌵𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌯𑍋𑌃।
‘𑌅𑌶𑍋𑌚𑍍𑌯𑌾𑌨𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌯𑌾𑌵𑌤𑍍 ‘𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌮𑌪𑌿 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯’ 𑌇𑌤𑍍𑌯𑍇-
𑌤𑌦𑌨𑍍𑌤𑍇𑌨 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍇𑌨 𑌯𑌤𑍍 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌂 𑌕𑍃𑌤𑌂 𑌤𑌤𑍍 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌮𑍍।
𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃, 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌽𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌅𑌕𑌰𑍍𑌤𑌾 𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑌿
𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌾𑌤𑍍 𑌯𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇, 𑌸𑌾 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃। 𑌸𑌾 𑌯𑍇𑌷𑌾𑌂
𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌾𑌮𑍁𑌚𑌿𑌤𑌾 𑌭𑌵𑌤𑌿, 𑌤𑍇 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌾𑌃। 𑌏𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌜𑌨𑍍𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍
𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌤𑍍𑌵𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑍋 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮-
𑌵𑌿𑌵𑍇𑌕𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌨𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑍋 𑌯𑍋𑌗𑌃। 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌾
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌯𑍋𑌗𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃। 𑌸𑌾 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌿𑌣𑌾𑌮𑍁𑌚𑌿𑌤𑌾 𑌭𑌵𑌤𑌿, 𑌤𑍇 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃।

பாபத்தை அடைவாய்" (உ-௩௩) என (ஸ்ரீ பகவான்) அருளிச்செய்கிறார்; செய்யவே,
"உயிர்வாழ்க்கைமுழுதும்"[1] என்றுதொடங்கும் சுருதியினாலும், மற்றும்இதுபோன்ற
சுருதிகளாலும் விதிக்கப்பட்டவையாய்ப் பசுமுதலானவற்றை ஹிம்ஸித்தலாகிய கர்ம
ங்கள் ஏற்கெனவே[2] அதருமமாகா எனத் தீர்ந்த முடிவாகக் கூறப்பட்டதாகின்றது.

ஸாங்க்யத்தையும், யோகத்தையும் பகுத்தல்.

அது சரியன்று; இருவகைத்தான புத்தியை (முறையே) சார்ந்துநிற்கும் ஞான
கர்மநிஷ்டைகளை (ஸ்ரீ பகவான்) வேறாகப் பிரித்துரைக்கின்ற திருவாக்கினாலென்க.
"நீ (யாவராலும்) துக்கிக்கவேண்டாதவரை" (உ-௧௧) என்பது முதல் "ஸ்வதரு
மத்தை நோக்கும்பொழுதும்" (உ-௩௧) என்பதுவரையிலுமுள்ள நூலினால், பரம
பொருளான எந்த ஆத்மதத்துவமானது, பகவானால் உணர்த்தப்பட்டதோ, அது
ஸாங்க்யமாம். ஆத்மாவுக்குப் பிறப்புமுதலியவிகாரங்கள் இல்லாமையினால் 'ஆத்மா
அகர்த்தா' (உ-௧௯, ௨0) என்னும் ப்ரகரணத்தின்பொருளை உய்த்துணர்தலால் அ
வ்[ஆத்மதத்துவ]விஷயமாக யாதொரு (நிச்சய)புத்தி பிறக்கின்றதோ, அது ஸாங்க்ய
புத்தியாம். அது எந்த ஞானிகளுக்கு உரித்தாயுள்ளதோ, அவர் ஸாங்க்யர்களாவர்.
இந்த(ஸாங்க்ய)புத்தி உண்டாவதற்குமுன்னர், ஆத்மாவை,உடம்புமுதலியவற்றினின்
றும் வேறாகவும் கர்த்தாவாகவும் போக்தாவாகவும் மற்றும்இத்தன்மையதாகவும்
பாவித்துக்கொண்டு (அதற்குஏற்பத்)தருமஅதருமங்களின் பகுத்தறிவுகூடி,[3] முக்திக்
கு ஸாதந(மான கர்ம)த்தை அநுஷ்டித்தல் யோகமாம். அது விஷயமான (நிச்சய)
புத்தி யோகபுத்தியாம். அது (ஸ்வ)கர்மத்தைச்செய்யும் எவர்க்கு உரித்தாயுளதோ,

---

[1] "𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌮𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌂 𑌜𑍁𑌹𑍋𑌤𑌿 [உயிர்வாழ்க்கைமுழுதும் அக்நிஹோத்ரஞ்செய்ய வேண்டும்]" என்பது 𑌬𑌹𑍍𑌵𑍃𑌚𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌮𑍍.

[2] ஆசார்யர்முதலானோரை ஹிம்ஸித்தலாகிய யுத்தம்முதலியனவான ஸ்மார்த்தகர்மங்களே அதர்மமாகா என்றால்,ஸ்மிருதியினும்மேலான சுருதியில் விதித்த பசுஹிம்ஸாதி கர்மங்கள் அதர்மகா என்பது, தானே அமையுமென்றவாறு.

[3] அஜ்ஞானியின் கருத்துக்கு, ஆத்மா உடல் முதலியவற்றிற்கு வேறாகவும், கர்த்தாவாகவும், போக்தாவாகவும் காணப்படுகின்றதாதலின், அவன் இது தருமம், இது அதர்மம் எனக் கல்வி கேள்விகளால் பகுத்தறிந்து, அதருமத்தை விலக்கி, தருமத்தைக் கைக்கொண்டு, அதனை ஈச்வரார்ப்பணமாக அநுஷ்டிக்கவேண்டும் என்பது, கர்மயோகத்தின் லக்ஷணத்தால் அமையுமாறு கண்டுகொள்க.

ததா ச பகவதா விபக்தே த்வே புத்தீ நிர்திஷ்டே ‘ஏஷா தே(அ)பிஹிதா ஸாங்க்யே புத்திர்யோகே த்விமாம் ஶ்ருணு |’ இதி | தயோஶ்ச ஸாங்க்யபுத்த்யாஶ்ரயாம் ஜ்ஞானயோகேன நிஷ்டாம் ஸாங்க்யானாம் விபக்தாம் வக்ஷ்யதி — ‘புரா வேதாத்மனா மயா ப்ரோக்தா’ இதி | ததா ச யோகபுத்த்யாஶ்ரயாம் கர்மயோகேன நிஷ்டாம் விபக்தாம் வக்ஷ்யதி — ‘கர்மயோகேன யோகினாம்’ இதி | ஏவம் ஸாங்க்யபுத்திம் யோகபுத்திம் ச ஆஶ்ரித்ய த்வே நிஷ்டே விபக்தே பகவதைவ உக்தே, ஜ்ஞானகர்மணோ: கர்த்ருத்வாகர்த்ருத்வைகத்வானேகத்வபுத்த்யாஶ்ரயயோ: யுகபதேகபுருஷாஶ்ரயத்வாஸம்பவம் பஶ்யதா | யதா ஏதத் விபாகவசனம் ததைவ தர்ஶிதம் ஶாதபதீயே ப்ராஹ்மணே — ‘ஏதமேவ ப்ரவ்ராஜினோ லோகமிச்சந்த: ப்ராஹ்மணா: ப்ரவ்ரஜந்தி |’ இதி ஸர்வகர்மஸம்ந்யாஸம் விதாய தச்சேஷேண ‘கிம் ப்ரஜயா கரிஷ்யாமோ யேஷாம் நோ(அ)யமாத்மா(அ)யம் லோக:’ இதி | தத்ர ச ப்ராக் தாரபரிக்ரஹாத் ‘புருஷ:’ ‘ஆத்மா’ ப்ராக்ருதோ

அவர் யோகியர். அப்படியே, தனித்தனியான இரண்டுபுத்திகள் “ஸாங்க்யவிஷயத்திலே உனக்கு இந்தப் புத்தியானது சொல்லப்பட்டது; இனி நீ யோகவிஷயத்திலே இந்தப்புத்தியைக் கேள்” (உ-௩௯) எனப் பகவானாலே குறிப்பிட்டுக்காட்டி உணர்த்தப் பட்டிருக்கின்றன. அவற்றுள், ஸாங்க்யபுத்தியைச் சார்ந்து நிற்கும் ஞானயோகநிஷ்டையை “வேதமாகிய என்னால் முன் கூறப்பட்டது” (௩-௩) என ஸாங்க்யர்களுக்குத் தனியாய்க் கூறுவர். அவ்வாறே, யோகபுத்தியைச் சார்ந்து நிற்கும் கர்மயோகநிஷ்டையை “கர்மயோகத்தால் யோகிகளுக்கு” (௩-௩) என (யோகிகளுக்குத்) தனியாய்க் கூறுவர். கர்த்தாவென்னும் உணர்வையும் அனேகமென்னும்உணர்வையும் சார்ந்து நிற்பதான கர்மமும், அகர்த்தாவென்னும் உணர்வையும் ஏகமென்னும் உணர்வையும் சார்ந்து நிற்பதான ஞானமும் ஒருத்தனையே ஒருங்கு சார்ந்துநிற்கக்கூடாமையைக் கண்டு, பகவானே இவ்வாறு ஸாங்க்யபுத்தியையும்யோகபுத்தியையும்குறித்து இரண்டு நிஷ்டைகளைத் தனித்தனியாக (ப் பிரித்து)க்கூறலானார். (ஸ்ரீபகவான்) பிரித்துரைக்கின்ற இத்திருவாக்கு எப்படியோ, அப்படியே சதபதப்பிராமணத்திலும் “பற்றற்றவராய் இதேலோகத்தை [அதாவது-ஆத்மாவை](ப் பெற) விரும்பும் பிராமணர்கள் உலகவியாபாரங்களை ஒழித்திடவேண்டும்” என்று ஸகலகர்மத்தினது துறவு விதித்து, “இந்த ஆத்மாவாகிய இவ்வுலகினுள்ள எங்களுக்கு மக்களா லாவதென்ன ?” (பி-௪-௪-௨௨) என்ற அதன் [1]சேஷத்தினால்,(ஞானமானது,கர்மத்தினின்றும் வேறாகக்) காட்டப்பட்டுள்ளது. பின்னும் அதனுள், சுருதிமுதலியவற்றில் விதித்த ஸகலகர்மங்களும், “அஜ்ஞானியானஒருவன் (தான்) மணஞ்செய்துகொள்வதற்குமுன் (வேதத்திற்

---

1 “எது மற்றொன்றிற்குப் பயன்படுகின்றதோ [அதாவது-எது வேறொன்றை வற்புறுத்துகின்றதோ]அது அதன் சேஷமாம்” (ஜைமினிஸூத்ரம் ௩-௧-௨ : சபரபாஷ்யம்). “அஜ்ஞானியாவான் இவ்வுலகத்திலே இம்மைப்பயனையும், பிதிருலோகத்திலே மறுமைப்பயனையும் நன்மக்களைப் பெறுதலால் ஸாதித்துக்கொள்கிறான். ஞானியோ, எங்கும் ப்ரஹ்மமாகவே இருக்கிறான். அந்த ப்ரஹ்மமோ நன்மக்கள் முதலிய எவற்றாலும் ஸாத்யமன்று. ஆகவே, அந்த ப்ரஹ்மத்தை அடையவிரும்புபவர்கள் உலகவியாபாரங்களை ஒழித்திடவேண்டும்” என “பற்றற்றவராய்” என்னும் முந்தின வாக்கியத்தை “இந்த ஆத்மாவாகிய” என்னும் பிந்தின வாக்கியம் வற்புறுத்துமாறு கண்டுகொள்க.

𑌧𑌰𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍋𑌤𑍍𑌤𑌰𑌕𑌾𑌲𑌂 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌸𑌾𑌧𑌨𑌂— '𑌪𑍁𑌤𑍍𑌰𑌂' 𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌂 𑌚 '𑌵𑌿𑌤𑍍𑌤𑌂'
'𑌮𑌾𑌨𑍁𑌷𑌂' '𑌦𑍈𑌵𑌂' 𑌚 ; 𑌤𑌤𑍍𑌰 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌕𑌰𑍍𑌮𑌰𑍂𑌪𑌂 𑌪𑌿𑌤𑍃𑌲𑍋𑌕𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿-
𑌸𑌾𑌧𑌨𑌂, 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌦𑍈𑌵𑌂 𑌵𑌿𑌤𑍍𑌤𑌂 𑌦𑍇𑌵𑌲𑍋𑌕𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌸𑌾𑌧𑌨𑌂 — '𑌸𑍋𑌽𑌕𑌾-
𑌮𑌯𑌤' 𑌇𑌤𑌿 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌾𑌮𑌵𑌤 𑌏𑌵 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌶𑍍𑌰𑍌𑌤𑌾𑌦𑍀𑌨𑌿 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌾𑌨𑌿।
𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍇𑌵 𑌲𑍋𑌕𑌮𑍍 𑌇𑌚𑍍𑌛𑌤𑌃 𑌅𑌕𑌾𑌮𑌸𑍍𑌯 𑌵𑌿𑌹𑌿𑌤𑌮𑍍 । 𑌤𑌦𑍇𑌤𑌦𑍍
𑌵𑌿𑌭𑌾𑌗𑌵𑌚𑌨𑌮𑍍 𑌅𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌯𑌦𑌿 𑌶𑍍𑌰𑍌𑌤𑌕𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌃 𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑌯𑌃
𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍 𑌭𑌗𑌵𑌤𑌃 ॥

𑌨 𑌚 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃 𑌉𑌪𑌪𑌨𑍍𑌨𑍋 𑌭𑌵𑌤𑌿 '𑌜𑍍𑌯𑌾𑌯𑌸𑍀 𑌚𑍇𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑍇'
𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌃 । 𑌏𑌕𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌤𑍍𑌵𑌾𑌸𑌂𑌭𑌵𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌃 𑌭𑌗𑌵𑌤𑌾
𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌨𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑌥𑌂 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌃 𑌅𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌶𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋 𑌜𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌂
𑌭𑌗𑌵𑌤𑌿 𑌅𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌯𑍇𑌤𑍍 𑌮𑍃𑌷𑍈𑌵 '𑌜𑍍𑌯𑌾𑌯𑌸𑍀 𑌚𑍇𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑍇 𑌮𑌤𑌾
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌕𑌿𑌞𑍍𑌚 — 𑌯𑌦𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑌯𑌃 𑌉𑌕𑍍𑌤𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌅-
𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸 𑌉𑌕𑍍𑌤 𑌏𑌵𑍇𑌤𑌿 '𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯 𑌏𑌤𑌯𑍋𑌰𑍇𑌕𑌂 𑌤𑌨𑍍𑌮𑍇 𑌬𑍍𑌰𑍂-
𑌹𑌿 𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌕𑌥𑌂 𑌅𑌨𑍍𑌯𑌤𑌰𑌵𑌿𑌷𑌯 𑌏𑌵 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ? 𑌨 𑌹𑌿 𑌪𑌿𑌤𑍍𑌤-

---

கூறிய)தருமங்களை ஆராய்ந்தபின்பு, (மானுஷலோகம், பிதிருலோகம், தேவலோகமெ
ன்ற) மூவுலகங்களையும் அடைதற்கு ஸாதனமான புத்திரனையும், மானுஷம் தெய்வமெ
ன்றஇருவகைச்செல்வத்தினையும்—அவற்றுள் மானுஷச்செல்வமென்பது பித்ருலோக
மடைதற்கு ஸாதநமாய்க் கர்மஸ்வரூப(மு)மா யிருப்பது; தெய்வச்செல்வமென்பது
தேவலோகமடைதற்கு ஸாதநமான வித்யை[அதாவது, உபாஸனை]—அவன் விரும்பி
னான்" (பி - க - ச - கஎ) என, அஜ்ஞானமும் காமமும் உடையவனுக்கே எடுத்துக்
காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றை முற்றத்துறத்தல், ஆத்மாவாகிய லோகத்தையே
நாடுபவனாய்க் காமமற்றிருப்பவனுக்கு விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, சுருதியில் விதி
த்த கர்மமும், ஞானமுமாகிய இரண்டுங் கூடுதலே பகவான் கருத்தெனில், அப்பொ
ழுது (அ௯) பிரித்துரைக்கின்ற இத்திருவாக்கானது பொருத்தமில்லாததாகும்.

ஞானம் கர்மம் என்ற இரண்டுங்கூடுதலென்பது பகவான் மேலேசொல்வதோடு இயையாமை.

மேலும், "ஞானமானது" (ந - க) என்பது முதலாகவுள்ள அர்ஜுனன்
வினா ஏற்காது. ஒருவனே ஞானகர்மங்களை (ஒருங்கே) அநுஷ்டிக்கமுடியாதென்
பதும், ஞானமானது கர்மத்திலும் மேலானதென்பதுமாகிய இவை—பகவான் முன்
சொல்லாதனவும், (தனது செவிகளால்) கேளாதனவுமாக இருக்க, அவற்றை, "ஞான
மானது கர்மத்தினும் மேலானதென்பது தங்களுடைய கருத்தானால்" (ந-க) எனப்
பகவானிடத்து அர்ஜுனன் பொய்யாக எப்படி ஏற்றக்கூடும்?

அன்றியும், ஞானம் கர்மமென்ற இரண்டுங்கூடுதல் யாவர்க்குமே உரைக்கப்
பட்டதென்றால், அது அர்ஜுனனுக்கும் உரைக்கப்பட்டதுதான்; எனவே, "(கர்மஞ்
செய்தலும் தவிர்தலுமாகிய) இவ்விரண்டனுள் மிக்க நலமுள்ளஒன்றை எனக்குத்
தேர்ந்தமுடிவாக உரைத்தருளுவீராக" (ரு - க) என இரண்டில் ஏதாவதொன்றைப்
பற்றியதாகவே எப்படி (அவன்) வினவலாகும்? (உதாரணமாக,) தனது பித்தந்

𑌪𑍍𑌰𑌶𑌮𑌨𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑍋 𑌵𑍈𑌦𑍍𑌯𑍇𑌨 𑌮𑌧𑍁𑌰𑌂 𑌶𑍀𑌤𑌲𑌂 𑌚 𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌉𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑍇 '𑌤𑌯𑍋𑌃 𑌅𑌨𑍍𑌯𑌤𑌰𑌤𑍍 𑌪𑌿𑌤𑍍𑌤𑌪𑍍𑌰𑌶𑌮𑌨𑌕𑌾𑌰𑌣𑌂 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿' 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿 ॥

𑌅𑌥 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯 𑌭𑌗𑌵𑌦𑍁𑌕𑍍𑌤𑌵𑌚𑌨𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌵𑍇𑌕𑌾𑌨𑌵𑌧𑌾𑌰𑌣𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑍇𑌤; 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌚𑌨𑌂 𑌦𑍇𑌯𑌂 '𑌮𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌃 𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑌯𑌃 𑌉𑌕𑍍𑌤𑌃, 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌇𑌤𑍍𑌥𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍋𑌽𑌸𑌿?' 𑌇𑌤𑌿। 𑌨 𑌤𑍁 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌚𑌨𑍇 𑌅𑌨𑌨𑍁𑌰𑍂𑌪𑌂 𑌪𑍃𑌷𑍍𑌟𑌾𑌤𑍍 𑌅𑌨𑍍𑌯𑌦𑍇𑌵 '𑌦𑍍𑌵𑍇 𑌨𑌿𑌷𑍍𑌠𑍇 𑌮𑌯𑌾 𑌪𑍁𑌰𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍇' 𑌇𑌤𑌿 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 ॥

𑌨𑌾𑌪𑌿 𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌤𑍇𑌨𑍈𑌵 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑌯𑍇 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑍇 𑌵𑌿𑌭𑌾𑌗𑌵𑌚𑌨𑌾𑌦𑌿 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 𑌉𑌪𑌪𑌨𑍍𑌨𑌮𑍍। 𑌕𑌿𑌞𑍍𑌚—𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌯𑍁𑌦𑍍𑌧𑌂 𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮 𑌇𑌤𑌿 𑌜𑌾𑌨𑌤𑌃 '𑌤𑌤𑍍 𑌕𑌿𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌘𑍋𑌰𑍇 𑌮𑌾𑌂 𑌨𑌿𑌯𑍋𑌜𑌯𑌸𑌿' 𑌇𑌤𑌿 𑌉𑌪𑌾𑌲𑌮𑍍𑌭𑌃 𑌅𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌃 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌗𑍀𑌤𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌈𑌷𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣𑌾𑌪𑌿 𑌶𑍍𑌰𑍌𑌤𑍇𑌨 𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌤𑍇𑌨 𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑌯𑍋 𑌨 𑌕𑍇𑌨𑌚𑌿𑌦𑍍 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌃 ॥

𑌯𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌰𑌾𑌗𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌤𑍋 𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌤𑌪𑌸𑌾 𑌵𑌾 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌂 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 '𑌏𑌕-

---

தணித்துக்கொள்ளவேண்டிய (ஒரு)வனுக்கு 'இனிமையும், குளிர்ச்சியுமான பதார்த்தங்களைப் புஜிக்கவேண்டும்' என்று வைத்தியன் உரைத்தால் "அவ்விரண்டனுள், பித்தந் தணிதற்குக் காரணமான ஏதாவதொன்றைச் சொல்" என வினவுதல் நிகழாதன்றோ !

இனி, அர்ஜுனனுடைய வினுவானது, பகவான் அருளிச்செய்த திருவாக்கின் பொருளை(த் தன்) விவேகத்தினுல் சரியாகத்தெரிந்துகொள்ளாமையினுல் வந்ததாகக் கொள்ளலாமென்றுல், அப்பொழுது, பகவான் "யான் ஞானம் கர்மம்இரண்டுங்கூடுதலைக் கூறினேன் ; நீ ஏன் இவ்வாறு மயங்குகின்ருய் ? " என வினுவுக்கு ஏற்றதாக மறுமொழி கொடுக்கவேண்டுமேயன்றி, "யான் இரண்டு நிஷ்டைகளைக்கூறினேன் " (௩-௩) என (வினுவுக்கு) ஏற்றதல்லாததாய்க் கேட்டதற்குமாருகவே மறுமொழி கூறப்படாது.

மற்றும், ஸ்மார்த்தகர்மத்தோடுமாத்திரமே ஞானமும் கூடுதலென்பது (பகவான்) கருத்தெனில், (அப்பொழுதும் ஞானகர்மமிரண்டையும்) பிரித்துரைத்தல் முதலிய ஸகலமும் பொருத்தமுருதனவாம். அன்றியும், யுத்தமாகிய ஸ்மார்த்தகருமமானது க்ஷத்திரியனுக்கு ஸ்வதருமமெனத் தெரிந்துகொண்டிருக்கும்அர்ஜுனன், "அப்பொழுது கர்மத்தில் என்னை ஏன் ஏவுகிறீர் ? (௩-க) எனப் (பகவானைப்பற்றிப்) பழித்தல் அடாது.

ஆதலின், கீதாசாஸ்திரத்தில் ச்ரௌதகர்மத்தோடாயினும் ஸ்மார்த்தகர்மத்தோடாயினும் ஆத்மஞானங்கூடுதலென்பதைச் சிறிதும் எடுத்துக்காட்ட ஒருவராலும் இயலாதென்க.

சிலஇடங்களிலே போலியாகக் கூடிக்காணப்படும் ஞானகர்மங்களின் விவரம்.

(இனி, அஜ்ஞானத்தாலும் ஆசைமுதலியகுற்றங்களாலும் கர்மத்தை மேற்கொண்டு(அநுஷ்டித்து)வருபவனுய், யாகத்தாலும் தானத்தாலும் தவத்தாலும் மனம்

கர்மைவ இதம் ஸர்வம் ப்ரஹ்ம அகர்த்ரு ச' இதி, தஸ்ய கர்மணி கர்மப்ரயோஜநே ச நிவ்ருத்தேऽபி லோகஸங்க்ரஹார்த்தம் யத்நபூர்வம் யதா ப்ரவ்ருத்த: ததைவ ப்ரவ்ருத்தஸ்ய யத் ப்ரவ்ருத்திரூபம் த்ருஶ்யதே ந தத் கர்ம யேந புத்தே: ஸமுச்சய: ஸ்யாத்; யதா பகவதோ வாஸுதேவஸ்ய க்ஷத்ரதர்மசேஷ்டிதம் ந ஜ்ஞாநேந ஸமுச்சீயதே புருஷார்த்தஸித்தயே; தத்வத் பலாபிஸந்த்யஹங்காராபாவஸ்ய துல்யத்வாத் விதுஷ:। தத்த்வவித: ந 'அஹம் கரோமி' இதி மதி:, ந ச தத்பலாபிஸந்தி: ॥

யதா ச ஸ்வர்காதிகாமார்த்திந: அக்நிஹோத்ராதிகர்மலக்ஷணதர்மாநுஷ்டாநாய ஆஹிதாக்நே: காம்ய ஏவ அக்நிஹோத்ராதௌ ப்ரவ்ருத்தஸ்ய ஸாமி க்ருதே விநஷ்டேऽபி காமே, ததேவ அக்நிஹோத்ராதி அநுதிஷ்டதோऽபி ந தத் காம்யம் அக்நிஹோத்ரம் பவதி। ததா ச தர்ஶயதி பகவாந்—'குர்வந்நபி ந லிப்யதே', 'ந கரோதி ந லிப்யதே' இதி தத்ர தத்ர ॥

பரிசுத்தமாகப் பெற்ற எவனுக்கு, பரம்பொருளுண்மையைப் பற்றி “இதெல்லாம் ஒன்றுதான், ப்ரஹ்மம் அகர்த்தாவே” என்னும் ஞானம் உண்டாகுமோ, அவனுக்குக் கர்மமும் கர்மத்தின்பயனும் ஒழிந்திட்டதாயினும், (அவன் முன்)எப்படி ஊக்கத்தோடு கர்மத்தை மேற்கொண்டிருந்தானோ அப்படியே (ஞானோதயமான பின்பும்)உலகத்தைநல்வழிநடக்கச்செய்தற்பொருட்டுக்கர்மத்தை(மேற்கொள்ளக்கூடும்; அப்படி) மேற்கொண்டு ஒழுகுபவனுடைய ப்ரவ்ருத்திரூபமாய் [கர்மப்போலியாய்] எது காணப்படுகின்றதோ, அது (மோக்ஷமடைதற்கு ஸாதநமாய்) ஞானத்தோடு ஒருங்குசேர்க்கவேண்டிய கருமமன்று. உதாரணமாக, பகவான் வாஸுதேவன் க்ஷத்திரியதருமத்தை அநுஷ்டித்தல் (அவர்க்குப்) புருஷார்த்தம்கைகூடுதற்காக ஞானத்தோடு ஒருங்கு சேர்க்கப்படுகிறதில்லை; அதுபோல, பயனை எதிர்நோக்காமையும், அகங்காரமின்மையும் ஞானிக்கும் ஸமமாயிருத்தலின் என்க[1]. மெய்யுணர்ந்தவன்'யான் செய்கிறேன்' என மனத்திற் கொள்வதுமில்லை, அதன்பயனை எதிர்நோக்குவதுமில்லை.

பின்னும் உதாரணமாக, ஸ்வர்க்கம்முதலிய காமங்களை நாடுபவன், அக்நிஹோத்ரம்முதலிய காமஸாதனங்களைச் செய்யும்பொருட்டு, அக்நியை (முன்னே)வைத்துக்கொண்டு காம்யமேயான அக்நிஹோத்ராதியைச் செய்யத் தலைப்பட, பாதி செய்தவுடன் (தான் முன் மனத்திற்கொண்டு அக்நிஹோத்ராதியைத் தொடங்கின) ஆசையானது நீங்கிவிடினும்,(விட்டிடாது)அதே அக்நிஹோத்ராதியைச் செய்துமுடிக்கி(றான்; அப்படிச் செய்துமுடிக்கி)கின்ற (அ)வனுக்கும் அது, காம்யஅக்நிஹோத்ராதியாக ஆகிறதில்லை. அவ்வாறே பகவான் “(கர்மங்களைச்)செய்கிறவனாயினும்(அவற்றால்) பற்றப்படுகிறானில்லை” (௫ - ௭), “(கர்மங்களைச்) செய்கிறானில்லை, (அவற்றால்) பற்றப்படுகிறானில்லை” (௧௩ - ௩௧) என ஆங்காங்கு எடுத்துக்காட்டுகிறார்.

---

[1] பகவான் மேற்கொண்டுள்ள க்ஷத்திரிய தருமம் புருஷார்த்தத்துக்காகக் காரணமாகாமல் உலகத்தை நல்வழிப்படுத்தக்காரணமாவதுபோல, ஞானியின் கருமமும் பயனை யெதிர்நோக்காமல் அகங்காரமின்றிச் செய்யப்பட்டு உலகத்தை நல்வழிப்படுத்தவே காரணமாகின்றது என்றபடி.

𑌯𑌤𑍍𑌤𑍁—'𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌤𑌰𑌂 𑌕𑍃𑌤𑌮𑍍,' '𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵 𑌹𑌿 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃' 𑌇𑌤𑌿, 𑌤𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌜𑍍𑌯 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍। 𑌤𑌤𑍍 𑌕𑌥𑌮𑍍? —

𑌯𑌦𑌿 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌦𑍋𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌃 𑌸𑍍𑌯𑍁𑌃, 𑌤𑍇 𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑍍𑌥𑌂 '𑌗𑍁𑌣𑌾 𑌗𑍁𑌣𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇' 𑌇𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑍈𑌵 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃, 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌽𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌸𑌹𑍈𑌵 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃, 𑌨 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌕𑍃𑌤𑌵𑌨𑍍𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌅𑌥 𑌨 𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌦𑌃, 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌸𑌾𑌧𑌨𑌭𑍂𑌤𑍇𑌨 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂, 𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌂 𑌵𑌾 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂, 𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯 𑌇𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑍇𑌯𑌮𑍍। 𑌏𑌤𑌮𑍇𑌵𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 '𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿' 𑌇𑌤𑌿। '𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌤𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃' 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑍁𑌨𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿—'𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌯𑌥𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 ॥

மற்றும், "(கர்மமானது) முன்னோர்களாலே முந்தினபண்டைக்காலத்திலே செய்யப்பட்டது" (ச - கரு), "கர்மத்தினுலேயே ஜனகர்முதலானோர்கள் ஸித்தி பெற்றார்கள்" (ஈ - உ0) என வருவனவற்றை (இருவகையாக)ப் பகுத்துணர்க. அஃது எப்படியெனில்,—

(முதல்வகை):— முன்னோர்களான ஜநகாதியர் மெய்யுணர்ந்தவராயினும், கர்மத்தை மேற்கொண்டாராயின்—அவர்கள் ஜனங்களை நல்வழியில் நடக்கச் செய்தற்பொருட்டு "இந்திரியங்கள் விஷயங்களிற் செல்லுகின்றன(வே யன்றி ஆத்மா செல்வதில்லை)" (ஈ - உஅ) என்னும் ஞானத்தினுலேயே ஸித்தியை [மோக்ஷத்தை] அடைந்தார்கள். கர்மத்தைத் துறத்தற்குஉரிய நிலை(மை யானது அவர்கட்கு) வந்திருந்தும் கர்மத்தை (விடாது) உடன்கொண்டே ஸித்திபெற்றார்கள்; கர்மத்தைத் துறக்கவில்லை யென்றபடி.

(இரண்டாம் வகை):— அல்லது, அவர்கள் மெய்யுணர்ந்தவர(ல்லரேல்) ஈச்வரனுக்கு அர்ப்பிக்கப்பட்ட கர்மமாகிய (ஞான)ஸாதனத்தால் (அதாவது-) சித்தசுத்தியை அல்லது ஞானோதயமாகிய ஸித்தியைப் ஜநகாதியர் என உரைக்க. இதேவிஷயத்தை "(யோகிகள்) சித்தசுத்திக்காகக் கர்மத்தைச் செய்கிறார்கள்" (ரு - கக) எனப் பகவான் கூறுவர். "மனிதன் தன்கர்மத்தினுல் அவனை[ஈச்வரனை]ப்பூஜித்து ஸித்திபெறுகிறான்" (கஅ - சகூ) எனக் கூறிப் பின்பு, ஸித்திபெற்ற(அ)வனுக்கு "ஸித்திபெற்றவன் எப்படி ப்ரஹ்மத்தை (அடைகிறான் என்பதை என்னிடமிருந்து தெரிந்துகொள்)" (கஅ - ரு0) என்பது முதலாக மீண்டும் ஞானநிஷ்டையைக் கூறுவர்.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌕𑍇𑌵𑌲𑌾𑌦𑍍 𑌏𑌵 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍 𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃, 𑌨 𑌕𑌰𑍍𑌮𑌸𑌹𑌿𑌤𑌾𑌤𑍍 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍋𑌽𑌰𑍍𑌥𑌃 । 𑌯𑌥𑌾 𑌚𑌾𑌯𑌮𑍍 𑌅𑌰𑍍𑌥𑌃 𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌶𑍋 𑌵𑌿𑌭𑌜𑍍𑌯 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌃 ॥

𑌤𑌤𑍍𑌰 𑌏𑌵𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌮𑍂𑌢𑌚𑍇𑌤𑌸𑍋 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑍋 𑌮𑌹𑌤𑌿 𑌶𑍋𑌕𑌸𑌾𑌗𑌰𑍇 𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑌸𑍍𑌯 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍍 𑌉𑌦𑍍𑌧𑌰𑌣𑌮𑍍 𑌅𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌤𑌤𑌃 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌮𑍍 𑌉𑌦𑍍𑌦𑌿𑌧𑌾𑌰𑌯𑌿𑌷𑍁𑌃 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌅𑌵𑌤𑌾𑌰𑌯𑌨𑍍 𑌆𑌹 '𑌅𑌶𑍋𑌚𑍍𑌯𑌾𑌨𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥

௧௧. 𑌅𑌶𑍋𑌚𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌵𑌶𑍋𑌚𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌵𑌾𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌭𑌾𑌷𑌸𑍇 ।
𑌗𑌤𑌾𑌸𑍂𑌨𑌗𑌤𑌾𑌸𑍂𑌂𑌶𑍍𑌚 𑌨𑌾𑌨𑍁𑌶𑍋𑌚𑌨𑍍𑌤𑌿 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 ॥

𑌨 𑌶𑍋𑌚𑍍𑌯𑌾 𑌅𑌶𑍋𑌚𑍍𑌯𑌾 𑌭𑍀𑌷𑍍𑌮𑌦𑍍𑌰𑍋𑌣𑌾𑌦𑌯𑌃; 𑌸𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣 𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌤𑌾𑌨𑍍 𑌅𑌶𑍋𑌚𑍍𑌯𑌾𑌨𑍍 𑌅𑌨𑍍𑌵𑌶𑍋𑌚𑌃 𑌅𑌨𑍁𑌶𑍋𑌚𑌿𑌤𑌵𑌾𑌨𑍍 𑌅𑌸𑌿 '𑌤𑍇 𑌮𑍍𑌰𑌿𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌨𑍍𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌮𑍍, 𑌅𑌹𑌂 𑌤𑍈𑌃 𑌵𑌿𑌨𑌾𑌭𑍂𑌤𑌃 𑌕𑌿𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌰𑌾𑌜𑍍𑌯-

---

ஆகவே, முக்திகைகூடுதலானது மெய்ஞ்ஞானமொன்றினால்மாத்திரமேயன்றி, கர்மத்தோடு ஒருங்கு கூடிய ஞானத்தினால் அன்று என்பது கீதாசாஸ்திரத்திலே நிர்ணயிக்கப்பட்ட பொருளாம். இதுவே (கீதையின்) பொருளாய்க்கிடக்கும் விதத்தை (அந்தந்தப்)பிரகரணத்திற்குஏற்ப ஆங்காங்குஎடுத்துக்காட்டுவோம்.

ஆத்மா இறவாதது.

இனி, இவ்வாறு (தான் செய்யவேண்டிய)தருமத்திலே மயங்கிய மனத்தினாய், சோகப்பெருங்கடலில் மூழ்கிக்கிடக்கின்ற அர்ஜுனனை ஆத்மஞானத்தாலன்றி (வேறுவகையால்) கரையேற்றுதலைக் காணாத பகவான் வாஸுதேவன், அதனினின்றும் அர்ஜுனனைக் கரையேற்ற விரும்பி, அவனுக்கு ஆத்மஞானத்தைப் புகட்டுபவராய் "நீ (யாவராலும்) துக்கிக்கவேண்டாதவரை" (௨ - ௧௧) என்பதாதியாக அருளிச்செய்கின்றார் :

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

௧௧. நீ (யாவராலும்)துக்கிக்கவேண்டாதவரைப்பற்றித் துக்கப்படுகிறாய் ; ஞானவார்த்தைகளையும் பேசுகிறாய். உயிர்போனவரையும், உயிர்வாழ்பவரையும் பற்றி ஞானிகள் துக்கியார்.

பீஷ்மத்ரோணாதியர் (யாவராலும்) துக்கப்படத்தகாதவர் ; ஏனெனில், (வ்யாவஹாரிகமாக) நல்லொழுக்கமுடையவர், பாரமார்த்திகமாகவும் நித்யரானவர். (நீ) துக்கிக்கத்தகாதஅவர்களைக் குறித்து "அவர்கள் சாகப்போகிறார்களே, (அதற்கு)நானன்றோ காரணம். நான், அவர்களில்லாமல் ராஜ்யஸுகம் முதலானவற்றால் என்ன செய்யப்போகிறேன்? [அதனால் எனக்கு ஒருப்ரயோஜனமும் இல்லையே!]" என ஏங்கி

[illegible]

[illegible] இல்லாதிருந்ததில்லை.

[illegible]

[illegible] இருக்கவே இருந்தேன்:

[illegible] இருக்கவே இருந்தேன் என்று [illegible]

[illegible] இருக்கவே இருந்தாய். அவ்வண் [illegible]

[illegible] இருக்கவே இருந்தார்கள். [illegible]

[illegible] நாமெல்லோரும் இவ்வுடல் [illegible]

[illegible] (இறப்பு பிறப்பு என்னும்) மூ [illegible]

[illegible]

[illegible] பேறதல்.

[illegible]

𑌮𑌾𑌃, 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑌯𑌮𑍍 𑌅𑌤𑌃 𑌅𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌦𑍇𑌹𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌤𑍍 𑌪𑌰𑌮𑍍 𑌉𑌤𑍍𑌤𑌰𑌕𑌾𑌲𑍇𑌽𑌪𑌿 ।
𑌤𑍍𑌰𑌿𑌷𑍍𑌵𑌪𑌿 𑌕𑌾𑌲𑍇𑌷𑍁 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾 𑌆𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌦𑍇𑌹𑌭𑍇𑌦𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌬𑌹𑍁𑌵𑌚𑌨𑌂, 𑌨 𑌆𑌤𑍍𑌮𑌭𑍇𑌦𑌾𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 ॥ ௧௨ ॥

𑌤𑌤𑍍𑌰 𑌕𑌥𑌮𑌿𑌵 𑌨𑌿𑌤𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌇𑌤𑌿? 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑌮𑌾𑌹—

௧௩. 𑌦𑍇𑌹𑌿𑌨𑍋𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌯𑌥𑌾 𑌦𑍇𑌹𑍇 𑌕𑍌𑌮𑌾𑌰𑌂 𑌯𑍌𑌵𑌨𑌂 𑌜𑌰𑌾 ।
𑌤𑌥𑌾 𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌤𑌰𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑍍𑌧𑍀𑌰𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌨 𑌮𑍁𑌹𑍍𑌯𑌤𑌿 ॥

௪௧. குருநந்தந ! இங்கு நிச்சயத்தன்மையையுடைய புத்தி ஒன்றுதான். உறுதியற்றவர்களுக்கு, புத்திகளோ அளவில்லாதனவாய்ப் பல கிளைகளை உடையன.

ஏ ! குருநந்தந ! இந்த நல்வழியிலே உறுதித்தன்மையையுடைய புத்தி ஒன்றுதான். (அது) சரியான ப்ரமாணத்தினின்றும் உண்டானமையால், பல கிளைகளையுடைய மற்றைய விபரீதபுத்திகளை வரவொட்டாமல் தடுப்பது. ஆனால், எவைகள் பலகிளைகளாகப் பிரிந்து செல்வதனால் ஸம்ஸாரம் முடிவில்லாமல் இடைவிடாது எப்பொழுதும் பரவி நிலைபெறுகின்றதோ; (சரியான) ப்ரமாணத்தால் உண்டாகும் விவேகபுத்தியினால் (எந்த) அளவிறந்த பேதபுத்திகள் ஒழிந்திட, ஸம்ஸாரமும் ஒழிந்திடுகின்றதோ; அந்த வேறான விபரீதபுத்திகள் பலகிளைகளை உடையன: அதாவது - பலபேதங்களையுடையன. பலபிரிவுகளையுடைமையால், புத்திகளும் அளவிறந்தனவே.—எவர்கட்கு (இவை உள்ளன? எனில்)—உறுதியற்றவர்களுக்கு: (சரியான)ப்ரமாணத்தால் உண்டான விவேகஞானம் இல்லாதவர்களுக்கு என்றபடி. (௪௧)

உலகவாழ்க்கையில் அழுந்தியவர்க்கு நிச்சயபுத்தி வராது.

எவர்கட்கு நிச்சயத்தன்மையுடைய புத்தி இல்லையோ, அந்த

௪௨, ௪௩, ௪௪. அறிவீனர்கள், பார்த்த! வேதவார்த்தைகளில் பிரியமுடையவராய் வேறு(ஒன்றும்)இல்லைஎன்று கூறுபவராய், காமத்தன்மையராய், ஸ்வர்க்கத்தையே மேலாகக் கொண்டு, ஜன்மத்தையே கர்மத்தின்பயனாகக் கொடுப்பதும், போகத்தையும்செல்வத்தையும்அடையும்விஷயத்தில் சிறப்புக்கர்மங்கள்மிகுந்துள்ளதுமான யாதொரு இந்தப் புஷ்பித்த வார்த்தையைக் கூறுகிறார்களோ; அ(ந்)த(வார்த்தையி)னால் கவரப்பட்ட மனத்தினராய்ப் போகத்திலும் செல்வத்திலும் அழுந்தினவர்களுடைய மனத்தில் நிச்சயத்தன்மையதான புத்தி உண்டாவதில்லை.

யாமிமாம் வக்ஷ்யமாணாம் புஷ்பிதாம் புஷ்பித இவ வ்ருக்ஷ: ஶோபமானாம் ஶ்ரூயமாணரமணீயாம் வாசம் வாக்யலக்ஷணாம் ப்ரவதந்தி। கே? அவிபஶ்சித: அல்பமேதஸ:, அவிவேகின இத்யர்த:। வேதவாதரதா: பஹ்வர்தவாதபலஸாதனப்ரகாஶகேஷு வேதவாக்யேஷு ரதா: ஹே பார்த ந அன்யத் ஸ்வர்கபஶ்வாதிபலஸாதனேப்ய: கர்மப்ய: அஸ்தி இதி ஏவம் வாதின: வதனஶீலா: ॥ ௪௨ ॥

தே ச—காமாத்மான: காமஸ்வபாவா:, காமபரா இத்யர்த:। ஸ்வர்கபரா:, ஸ்வர்க: பர: புருஷார்தோ யேஷாம் தே ஸ்வர்கபரா: ஸ்வர்கப்ரதானா:। ஜன்மகர்மபலப்ரதாம், கர்மண: பலம் கர்மபலம், ஜன்மைவ கர்மண: பலம் ஜன்மகர்மபலம், தத்ப்ரததாதீதி ஜன்மகர்மபலப்ரதா, தாம் வாசம்। ப்ரவதந்தி இதி அனுஷஜ்யதே। க்ரியாவிஶேஷபஹுலாம், க்ரியாணாம் விஶேஷா: க்ரியாவிஶேஷா: தே பஹுலா யஸ்யாம் வாசி தாம், ஸ்வர்கபஶுபுத்ராத்யர்தா: யயா வாசா பாஹுல்யேன ப்ரகாஶ்யந்தே। போகைஶ்வர்யகதிம் ப்ரதி, போகஶ்ச ஐஶ்வர்யம் ச போகைஶ்வர்யே, தயோ: கதி: ப்ராப்தி: போகைஶ்வர்யகதி:, தாம் ப்ரதி ஸாதனபூதா: யே க்ரியாவிஶேஷா:, தத்பஹுலாம் தாம் வாசம் ப்ரவதந்த: மூடா: ஸம்ஸாரே பரிவர்தந்தே இத்யபிப்ராய: ॥ ௪௩ ॥

தேஷாம் ச—போகைஶ்வர்யப்ரஸக்தானாம், போக: கர்தவ்ய: ஐஶ்வர்யம் ச இதி போகைஶ்வர்யயோரேவ ப்ரணயவதாம் ததாத்மபூதானாம்। தயா க்ரியா-

---

பூத்துள்ள மரம்போல நேர்த்தியானதாய்க் கேட்கும்பொழுது ரம்மியமானதாய் வாக்கியம்போல்தோற்றுவதான[1] வார்த்தையை[கர்மகாண்டவேதத்தை]ச் சொல்லுகிறார்கள்.—எவர்கள்?—புத்தியில்லாதவர்கள், அவிவேகிகள் என்றபடி. (அவர்கள்) அநேக அர்த்தவாதங்களையும்[இதனை விரும்பியவன் இதனைச் செய்யவேண்டும் என்பதுபோன்ற விதிகளின்புகழ்ச்சியையும்], பயன்களையும்,(அவற்றைப் பெறும்)ஸாதனங்களையும் எடுத்துக்காட்டுகின்ற வேதவாக்கியங்களில் பற்றுடையவர்: ஏ பார்த்த! ஸ்வர்க்கம் பசு முதலியபயன்களைப் பெறுதற்கு ஸாதநமான கர்மங்களைக்காட்டிலும் வேறு இல்லையென்று இவ்வாறு சொல்லும் இயல்பினர். (௪௨)

அவர்கள் பின்னும் காமஸ்வபாவர்கள்=காமத்தையே (யாவற்றினும்)மேலாகக் கொண்டவர்கள் என்றபடி; (அவர்கள்) ஸ்வர்க்கத்தையே மேலான புருஷார்த்தமாகப் பிரதானமாகக்கொண்டு, கர்மவிசேஷங்கள் மிகுந்ததும், ஸ்வர்க்கம் பசு மக்கள் முதலிய பயன்களை மிகுதியாக எடுத்துக்காட்டுவதும்,போகத்தையும் செல்வத்தையும் பெறும்விஷயத்தில் ஸாதனமுமான கர்மவிசேஷங்கள் நிரம்பியதாய், பிறப்பையே கர்மத்தின் பயனாகக் கொடுக்கின்ற அந்தவார்த்தையைக்"கூறுகிறார்கள்" எனக் கூட்டுக. அவ்வார்த்தையைச் சொல்லும் மூடர்கள் ஸம்ஸாரத்தில் சுழலுகிறார்கள் என்பது கருத்து. (௪௩)

போகமும் ஸம்பத்தும் அவச்யமெனை அவற்றின்மேலேயே பிரியங்கொண்டு தந்மயமாய், கர்மவிசேஷங்கள் நிறைந்த அவ்வார்த்தையினால் மூடுண்டவிவேகபுத்தியை

---

[1] அழியாப் பயனை உணர்த்தும்வார்த்தையே வாக்கியப்போலியாம் என்பது, இங்கே சொல்லுவான் குறிப்பு.—(ஆ.) வாக்கியமாவது; அழியும் பயனை உணர்த்துவது

विशेषबहुलया वाचा अपहृतचेतसाम् अपहृतविवेकप्रज्ञानां व्यवसायात्मिका सांख्ये योगे वा बुद्धिः समाधौ, समाधीयते अस्मिन् पुरुषोपभोगाय सर्वम् इति समाधिः अन्तःकरणं बुद्धिः तस्मिन् समाधौ, न विधीयते न भवति इत्यर्थः ॥ ௪௪ ॥

ये एवं विवेकबुद्धिरहिताः तेषां कामात्मनां यत् फलं तत् आह—

௪௫. त्रैगुण्यविषया वेदा निस्त्रैगुण्यो भवार्जुन ।
निर्द्वन्द्वो नित्यसत्त्वस्थो निर्योगक्षेम आत्मवान् ॥

त्रैगुण्यविषयाः, त्रैगुण्यं संसारः विषयः प्रकाशयितव्यः येषां ते वेदाः त्रैगुण्यविषयाः । त्वं तु निस्त्रैगुण्यो भव अर्जुन, निष्कामो भव इत्यर्थः । निर्द्वन्द्वः, सुखदुःखहेतू सप्रतिपक्षौ पदार्थौ द्वन्द्वशब्दवाच्यौ, ततः निर्गतः निर्द्वन्द्वो भव । नित्यसत्त्वस्थः सदा सत्त्वगुणाश्रितो भव । तथा निर्योगक्षेमः, अनुपात्तस्य उपादानं योगः, उपात्तस्य रक्षणं क्षेमः । योगक्षेमप्रधानस्य श्रेयसि प्रवृत्तिः दुष्करा इति अतः निर्योगक्षेमो भव । आत्मवान् अप्रमत्तश्च भव । एष तव उपदेशः स्वधर्मम् अनुतिष्ठतः ॥௪௫॥

யுடைய அவர்களுடைய அந்தக்கரணத்திலே,(அதாவது -) ஜீவனுடைய போகத்தின் பொருட்டு ஸகல (போகவிஷய)மும் செறிந்துகிடக்கின்ற மனத்திலே, ஸாங்க்யத்திலாயினும் யோகத்திலாயினும் நிச்சயத்தன்மையுள்ள புத்தி, உண்டாகமாட்டாது. (௪௪)

யோகிக்குஉரிய உபதேசம்.

எவர்கள் இவ்வாறு விவேகபுத்தியில்லாதவரோ, அந்தக் காமஸ்வபாவமுடையவர்க்கு (வரும்) பயன் இன்னதென்று கூறுகிறார்:

௪௫. வேதங்கள் முக்குணங்களையும் (தாம் கூறும்) விஷயங்களாக உடையன. அர்ஜுந! நீ முக்குணங்களற்றவனாகவும், த்வந்தங்களற்றவனாகவும், எப்பொழுதும் ஸத்துவத்திலேயே நிற்பவனாகவும், யோகக்ஷேமமில்லாதவனாகவும், ஜாக்கிரதையுடையவனாகவும் இருக்கவேண்டும்.

வேதங்களால் உணர்த்தப்படும் விஷயம் முக்குணங்களாலாகிய ஸம்ஸாரமாம். ஆனால் அர்ஜுந! நீ முக்குணங்களும் அற்றவனாய் இரு: ஆசைநீங்கியவனாய் இரு என்பது பொருள். இன்பதுன்பங்களுக்குக் காரணமும் ஒன்றற்கொன்று எதிரியுமான இரண்டுபொருள்கள் த்வந்தமென்னுஞ் சொல்லால் கூறப்படுவன; (நீ) அவற்றினின்றும் நீங்கியவனாய் இரு. எப்பொழுதும் ஸத்துவகுணத்தைச் சார்ந்தவனாய் இரு. யோகம் - ஸம்பாதியாததை ஸம்பாதித்தல்; க்ஷேமம் - தேடினதைக் காப்பாற்றுதல்; யோகக்ஷேமங்களை முக்கியமாகக்கொண்டவன் நன்மையை[முக்தியை]நாடுதல் அருமையாதலின், அவ்வண்ணமே, யோகக்ஷேமத்தை(நாடுதல்) இல்லாதவனாய் இரு. ஜாக்கிரதையுடைவனாக இரு. (நீ)ஸ்வதர்மத்தை அநுஷ்டிக்கும்பொழுது(கைக்கொள்ளவேண்டிய) உபதேசம் இது வாகும். (௪௫)

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌵𑍇𑌦𑍋𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌯𑌾𑌨𑌿 𑌉𑌕𑍍𑌤𑌾𑌨𑌿 𑌅𑌨𑌨𑍍𑌤𑌾𑌨𑌿 𑌫𑌲𑌾𑌨𑌿 𑌤𑌾𑌨𑌿 𑌨 𑌅𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌚𑍇𑌤𑍍, 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌤𑌾𑌨𑌿 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 𑌇𑌤𑌿 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇; 𑌶𑍃𑌣𑍁—

௪௬. 𑌯𑌾𑌵𑌾𑌨𑌰𑍍𑌥 𑌉𑌦𑌪𑌾𑌨𑍇 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌸𑌂𑌪𑍍𑌲𑍁𑌤𑍋𑌦𑌕𑍇 ।
𑌤𑌾𑌵𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌃 ॥

𑌯𑌥𑌾 𑌲𑍋𑌕𑍇 𑌕𑍂𑌪𑌤𑌡𑌾𑌗𑌾𑌦𑍍𑌯𑌨𑍇𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌉𑌦𑌪𑌾𑌨𑍇 𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑍋𑌦𑌕𑍇 **𑌯𑌾𑌵𑌾𑌨𑍍** 𑌯𑌾𑌵𑌤𑍍𑌪𑌰𑌿𑌮𑌾𑌣𑌃 𑌸𑍍𑌨𑌾𑌨𑌪𑌾𑌨𑌾𑌦𑌿𑌃 𑌅𑌰𑍍𑌥𑌃 𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 𑌸 𑌸𑌰𑍍𑌵𑌃 𑌅𑌰𑍍𑌥𑌃 **𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌸𑌂𑌪𑍍𑌲𑍁𑌤𑍋𑌦𑌕𑍇** 𑌯𑌃 𑌅𑌰𑍍𑌥𑌃 𑌤𑌾𑌵𑌾𑌨𑍍 𑌏𑌵 𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌤𑍍𑌰 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌏𑌵𑌂 **𑌤𑌾𑌵𑌾𑌨𑍍** 𑌤𑌾𑌵𑌤𑍍𑌪𑌰𑌿𑌮𑌾𑌣 𑌏𑌵 𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 **𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌵𑍇𑌦𑍇𑌷𑍁** 𑌵𑍇𑌦𑍋𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌯𑌃 𑌅𑌰𑍍𑌥𑌃 𑌯𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌂 𑌸𑌃 𑌅𑌰𑍍𑌥𑌃 **𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯** 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 **𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌃** 𑌯𑌃 𑌅𑌰𑍍𑌥𑌃 𑌯𑌤𑍍 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌫𑌲𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌸𑌂𑌪𑍍𑌲𑍁𑌤𑍋𑌦𑌕𑌸𑍍𑌥𑌾𑌨𑍀𑌯𑌂 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌤𑌾𑌵𑌾𑌨𑍍 𑌏𑌵 𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । '𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍 𑌅𑌭𑌿𑌸𑌮𑍇𑌤𑌿 𑌯𑌤𑍍 𑌕𑌿𑌂𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑌾𑌧𑍁 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌯𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍇𑌦 𑌯𑌤𑍍𑌸 𑌵𑍇𑌦' 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 । '𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌖𑌿𑌲𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌚 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌅𑌧𑌿𑌕𑍃𑌤𑍇𑌨 𑌕𑍂𑌪𑌤𑌡𑌾𑌗𑌾𑌦𑍍𑌯𑌰𑍍𑌥𑌸𑍍𑌥𑌾𑌨𑍀𑌯𑌮𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 ॥ ௪௬ ॥

கர்மயோகம்.

வேதங்களிற் கூறிய ஸகலகர்மங்களினுடைய அளவற்றபயன்கள்எல்லாம் விரும்பப்படாதனவானால், அவை[அந்தக் கர்மங்கள்] எதற்காக ஈச்வரனுக்கென்று [நிஷ்காமமாக] அநுஷ்டிக்கப்படுகின்றன என்பது?—(விடை) கூறுவோம், கேள்:

௪௬. (கிணறு முதலிய)நீர்நிலையில் எவ்வளவு உபயோகம் உள்ளதோ, அவ்வளவு (உபயோகமும்) எங்கும்பெருகிய நீர்ப்பெருக்கில் உள்ளது. (அதுபோல,)ஸகலவேதங்களிலும் (எவ்வளவு ப்ரயோஜனம் உள்ளதோ, அவ்வளவு ப்ரயோஜனமும்) ஞானியான ப்ராஹ்மணனுக்கு (ப்ரஹ்மாநந்தத்தில் உள்ளது.)

உலகத்திலே கிணறு குளம் முதலாகப் பலவாயுள்ள சொற்பஜலமுடைய நீர்நிலைகளில் ஸ்நாநபாநம்முதலிய எவ்வளவு ப்ரயோஜனங்கள் உள்ளனவோ, அவ்வெல்லாப்ரயோஜனங்களும் எங்கும்பெருகிய (பெரிய) நீர்ப்பெருக்கிலும் உண்டாகின்றன: அங்கு(ப்ரயோஜனங்கள்) உள்ளடங்கிநிற்கின்றன என்பதுபொருள். இவ்வாறே, வேதங்கள்முழுவதிலும் கூறப்பட்ட கர்மங்களில் யாதொரு ப்ரயோஜநம் (அதாவது -) கர்மத்தின்பயன் உள்ளதோ, அந்த ப்ரயோஜநம்முழுவதும் பரம்பொருளின் உண்மையைக் கண்டறிந்த துறவியான ப்ராஹ்மணனுக்கு உண்டாவதாய் எங்கும் பெருகிய (பெரிய) நீர்ப்பெருக்கை ஒத்ததான ஞானப்பயனிலே [ப்ரஹ்மாநந்தத்திலே] ஆகின்றது [அந்த ஆநந்தத்தினுள் அடங்குகின்றது]. (இதனை,) ''ஜனங்கள் செய்யும் ஒவ்வொருநன்மையும் அவன் [ரைக்வன்] அறிந்ததை அறிபவனுக்குப் போய்ச்சேரும்'' (சா - ௪ - க - ௪)என்னும் சுருதியினால் (அறிக). ''பார்த்த! ஸகலகர்மங்களும்'' (௪ - ௩௩) என (இதேவிஷயத்தைப்பற்றிப் பகவான்) கூறுவர். (ப்ரஹ்மாநந்தத்தை அடைதற்கு நிஷ்காமகர்மம் பரம்பரையான காரணம்;)ஆதலால்,(கர்மமானது)கிணறு குளம் முதலியவற்றை நிகர்த்ததா யிருந்தாலும், ஞானநிஷ்டைக்குத்தக்க உரிமையைப் பெறுதற்குமுன்,கர்மத்திலே அதிகாரம்பெற்றுள்ளவன் கர்மத்தைச் செய்யவேண்டும்.(௪௬)

तव च—

௪௭. कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।
मा कर्मफलहेतुर्भूर्मा ते सङ्गोऽस्त्वकर्मणि ॥

कर्मण्येव अधिकारः न ज्ञाननिष्ठायां ते तव । तत्र च कर्म कुर्वतः मा फलेषु अधिकारः अस्तु, कर्मफलतृष्णा मा भूत् कदाचन कस्यांचिदवस्थायामित्यर्थः । यदा कर्मफले तृष्णा ते स्यात् तदा कर्मफलप्राप्तेः हेतुः स्याः, एवं मा कर्मफलहेतुः भूः । यदा हि कर्मफलतृष्णाप्रयुक्तः कर्मणि प्रवर्तते तदा कर्मफलस्यैव जन्मनः हेतुः भवेत् । यदि कर्मफलं न इष्यते, किं कर्मणा दुःखरूपेण इति मा ते तव सङ्गः अस्तु अकर्मणि अकरणे प्रीतिः मा भूत् ॥ ௪௭ ॥

यदि कर्मफलप्रयुक्तेन न कर्तव्यं कर्म, कथं तर्हि कर्तव्यमिति ? उच्यते—

௪௮. योगस्थः कुरु कर्माणि सङ्गं त्यक्त्वा धनञ्जय ।
सिद्ध्यसिद्ध्योः समो भूत्वा समत्वं योग उच्यते ॥

योगस्थः सन् कुरु कर्माणि केवलमीश्वरार्थं, तत्रापि

இனி உனக்கு (அதிகாரம் எதிலே என்றால்),

௪௭. கர்மத்திலேதான் உனக்கு அதிகாரம். ஒருகாலும் பயன்களிலே அதிகாரம் வேண்டாம். (நீ) கர்மத்தின் பயனை வருவித்துக்கொள்பவனாக ஆகாதே. கர்மத்தைச் செய்யாமையிலே உனக்குப் பிரியம் இல்லாதிருக்கட்டும்.

கர்மத்திலேயே உனக்கு அதிகாரம்; ஞானநிஷ்டையில் அன்று. அங்ஙனம் கர்மஞ் செய்கின்ற உனக்குப் பயன்களில் அதிகாரம், அதாவது – கர்மத்தின் பயன்களிலே ஆசையானது எந்தநிலையிலும் வேண்டாம். உனக்குக் கர்மத்தின்பயனிலே எப்பொழுது ஆசை உண்டாகுமோ, அப்பொழுது நீ கர்மத்தின் பயனைப் பெறுதற்குக் காரணமாவாய். நீ இவ்வாறு கர்மத்தின்பயனை வருவித்துக்கொள்பவனாக ஆகாதே. கர்மத்தின்பயனிலேயுள்ள ஆசையினால் தூண்டப்பட்டவனாய்(எவன்)எப்பொழுது கர்மத்தைச் செய்யச் செல்லுகின்றானோ, அப்பொழுது (அவன்) கர்மத்தின்பயனேயாகிய பிறப்புக்குக் காரணமாவன்: "கர்மத்தின்பயனை விரும்பாவிடில், துன்பவடிவமாகிய கர்மத்தால் என்ன? " என்று (நினைத்துக்) கர்மத்தைச் செய்யாமையிலே நீ விருப்பங் கொள்ளக்கூடாது. (௪௭)

கர்மத்தின்பய(னிலேயுள்ள ஆசையி)னால் ஏவப்பட்டுக் கர்மத்தைச் செய்யவேண்டாமென்றால், அப்பொழுது எப்படி[எதை உத்தேசித்து]க் கர்மம் செய்யவேண்டும் என்பது ?—(அதற்கு விடை) கூறப்படுகின்றது :

௪௮. தனஞ்ஜய ! யோகத்திலேநிலைத்துப் பற்றைவிட்டுப் (பயன்)கைகூடினும் கைகூடாவிடினும் ஸமமாகஇருந்து கர்மங்களைச் செய்; ஸமமாயிருத்தலே யோகம் எனப்படுகின்றது.

நீ யோகத்திலே நிலைத்துநின்று கேவலம் ஈச்வரன்பொருட்டே கர்மங்களைச் செய்யவேண்டும்; அதிலுங்கூட "ஈச்வரன் எனக்கு ப்ரஸன்னராகவேணும்" என்ற

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஜ்ஞ: ; 'யோ வா ஏதத³க்ஷரம் கா³ர்க்³யவிதி³த்வாऽஸ்மால்லோகாத்ப்ரைதி ஸ க்ருபண:' இதி ஶ்ருதே: ॥ ௪௯ ॥

ஸமத்வபு³த்³தி⁴யுக்த: ஸந் ஸ்வத⁴ர்மமநுதிஷ்ட²ந் யத்ப²லம் ப்ராப்நோதி தச்ச்²ருணு —

௫௦. பு³த்³தி⁴யுக்தோ ஜஹாதீஹ உபே⁴ ஸுக்ருதது³ஷ்க்ருதே ।
தஸ்மாத்³யோகா³ய யுஜ்யஸ்வ யோக³: கர்மஸு கௌஶலம் ॥

பு³த்³தி⁴யுக்த: கர்மஸமத்வவிஷயயா பு³த்³த்⁴யா யுக்த: பு³த்³தி⁴யுக்த: ஸ ஜஹாதி பரித்யஜதி இஹ அஸ்மிந்லோகே உபே⁴ ஸுக்ருதது³ஷ்க்ருதே புண்யபாபே ஸத்த்வஶுத்³தி⁴ஜ்ஞாநப்ராப்தித்³வாரேண யத: தஸ்மாத் ஸமத்வபு³த்³தி⁴யோகா³ய யுஜ்யஸ்வ க⁴டஸ்வ । யோகோ³ ஹி கர்மஸு கௌஶலம் ஸ்வத⁴ர்மாக்²யேஷு கர்மஸு வர்தமாநஸ்ய யா ஸித்³த்⁴யஸித்³த்⁴யோ: ஸமத்வபு³த்³தி⁴: ஈஶ்வரார்பிதசேதஸ்தயா தத் கௌஶலம் குஶலபா⁴வ:। தத்³தி⁴ கௌஶலம் யத் ப³ந்த⁴ஸ்வபா⁴வாந்யபி கர்மாணி ஸமத்வபு³த்³த்⁴யா ஸ்வபா⁴வாந்நிவர்தந்தே । தஸ்மாத் ஸமத்வபு³த்³தி⁴யுக்தோ ப⁴வ த்வம் ॥ ௫௦ ॥

யஸ்மாத் —

௫௧. கர்மஜம் பு³த்³தி⁴யுக்தா ஹி ப²லம் த்யக்த்வா மநீஷிண: ।
ஜந்மப³ந்த⁴விநிர்முக்தா: பத³ம் க³ச்ச²ந்த்யநாமயம் ॥

பவர்கள் கீழ்மக்களாவர்.(இதனை,) "கார்க்கி! எவன் இந்த அழிவில்லாப்பொருளை அறியாமலே இவ்வுலகத்தினின்று செல்லுகிறானோ, அவன் கீழோனவன்" (பி-ரு-அ-(ச-கஙு) என்னுஞ் சுருதியினால் (அறிக).

ஸமத்துவபுத்தியின் சிறப்பு.

ஸமத்துவபுத்தியோடு கூடியவனாய் ஸ்வதருமத்தை அநுஷ்டிப்பவன் எந்த பயனை அடைகிறானோ, அதைக் கேள் :

௫௦. (ஸமத்துவ)புத்தியைக் கூடினவன் இங்கே நல்வினை தீவினைகளை நீக்கிக் கொள்கிறான்; ஆதலால் (நீ) யோகத்தைக் கூடுவாயாக ; யோகமானது கர்மங்களில் ஸாமர்த்திய மாம்.

இவ்வுலகத்திலே கர்மங்களில் ஸமத்துவவிஷயமான புத்தியோடுகூடிய அவன் சித்தசுத்தியையும் ஞானத்தையும் பெற்று, அதன்மூலமாகப் புண்யபாபங்கள் இரண்டையும் (தன்னைச் சாராதபடி) நீக்கிக்கொள்கிறான்; ஆகவே, நீ ஸமத்துவபுத்தி யோகத்தைக் கூடுவாயாக. யோகம் கர்மங்களில்ஸாமர்த்தியமன்றோ. அந்தஸாமர்த்தியமாவது - ஈச்வரனிடத்து மனதை அர்ப்பித்திருப்பதால்ஸ்வதருமமெனப்படுகின்ற கர்மங்களில் இருப்பவனுக்கு(ப் பயன்) கைகூடுவதிலும் கைகூடாமையிலும் உள்ள ஸமத்துவபுத்தியாம். "கர்மங்கள் (பிராணிகளை ஸம்ஸாரத்தில்) கட்டுப்படுத்துகின்ற ஸ்வபாவமுடையனவாயினும், ஸமத்துவபுத்தியோடு (செய்யப்படும்பொழுது) அப்படிக் கட்டுப்படுத்துகின்ற (தம்)ஸ்வபாவத்தினின்றும் நீங்கிவிடுகின்றன" என்ற அதுவன்றோ ஸாமர்த்தியம். ஆகவே, நீ ஸமத்துவபுத்தியை யுடையவனாக இரு. (௫௦)

ஏனெனில்,

௫௧. (ஸமத்துவ)புத்தியுடையவர்கள், கர்மத்தினா லுண்டாகும் பயனை விட்டு, ஞானிகளாய்ப் பிறப்பென்னும் கட்டினின்று முற்றும்விடுபட்டுத் தொந்தரவு அற்ற இடத்திற்குச் செல்லுகிறார்கள்.

‘கர்மஜம் ஃபலம் த்யக்த்வா’ இதி வ்யவஹிதேந ஸம்பந்த: | இஷ்டாநிஷ்டதேஹப்ராப்தி: கர்மஜம் ஃபலம் கர்மப்யோ ஜாதம் புத்தியுக்தா: ஸமத்வபுத்தியுக்தா: ஸந்த: ஹி யஸ்மாத் ஃபலம் த்யக்த்வா பரித்யஜ்ய மநீஷிண: ஜ்ஞாநிந: பூத்வா ஜந்மபந்தவிநிர்முக்தா:, ஜந்ம ஏவ பந்த: ஜந்மபந்த:, தேந விநிர்முக்தா: ஜீவந ஏவ ஜந்மபந்தாத் விநிர்முக்தா: ஸந்த: பதம் பரம் விஷ்ணோ: மோக்ஷாக்யம் கச்சந்தி அநாமயம், ஸர்வோபத்ரவரஹிதம் இத்யர்த்த: ॥

அதவா—‘புத்தியோகாத்தநஞ்ஜய’ இத்யாரப்ய பர்யந்தலக்ஷணேநைவ ஸர்வத: ஸம்ப்லுதோதககல்பயா கர்மயோகஜஸத்த்வஶுத்திஜநிதா புத்தி: ப்ரதிபாதிதா, ஸாக்ஷாத் ஸுக்ருததுஷ்க்ருதப்ரஹாணாதிஹேதுத்வஶ்ரவணாத் ॥ ருக ॥

யோகாநுஷ்டாநஜநிதஸத்த்வஶுத்திஜா புத்தி: கதா ப்ராப்யதே இதி? உச்யதே—

ருஉ. யதா தே மோஹகலிலம் புத்திர்வ்யதிதரிஷ்யதி |
ததா கந்தாஸி நிர்வேதம் ஶ்ரோதவ்யஸ்ய ஶ்ருதஸ்ய ச ||

யதா யஸ்மிந் காலே தே தவ மோஹகலிலம் மோஹாத்மகம் கலிலம் அவிவேககாலுஷ்யம், யேந ஜ்ஞாநாத்மவிவேகபோதம் கர்வீக்ருத்ய விஷயம் ப்ரதி அந்த:கரணம் ப்ரவர்த்ததே, தத் தவ புத்தி: வ்யதிதரிஷ்யதி வ்யதிக்ரமிஷ்யதி, ஶுத்தாவஸ் ஶுஷ்யதே இத்யர்த்த: | ததா தஸ்மிந் காலே கந்தாஸி ப்ராப்ஸ்ய-

---

கர்மத்தினுண்டாகும் பயன் - கர்மத்தினின்று வரும் நல்லன தீயனவான சரீரங்களை எடுத்தல். ஸமத்துவபுத்தியுள்ள (ஸாதுக்கள் அப்பயனைவிரும்பாது) விட்டிட்டு, ஞானிகளாய்ப் பிறப்பாகிய கட்டினின்றும் உயிரோடிருக்கும்பொழுதே முற்றும் விடுபட்டவராய் ஸகலஸங்கடமும் அற்றதான மோக்ஷ மெனப்படுகின்ற விஷ்ணுவின் பரமபதத்தைச் சேர்கிறார்கள். ஆதலால் (நீ ஸமத்துவபுத்தியைக் கூடுவாயாக).

அல்லது, எங்கும் பெருகிய (பெரிய) நீர்ப்பெருக்கை ஒத்ததாய்க் கர்மயோகத்தால்வரும் சித்தசுத்தியினால் உண்டாவதாய்ப் பரம்பொருளைக் கண்டுணர்தலேயான புத்தியானது, “புத்தியோகத்தைக்காட்டிலும்” (உ - சக)என்பதுமுதல் இதுவரையிலும் எடுத்துக்காட்டப்பட்டது ; (அது) புண்யபாபங்களை நீக்கிக்கொள்ளுதல் முதலியவற்றிற்கு நேரேகாரணமானதென்று சுருதி கூறுதலால் (என்றும் உரைக்கலாம்).()

கர்மயோகத்தை அநுஷ்டிப்பதனாலே உண்டாவதான சித்தசுத்தியால் வ புத்தியை [ஞானத்தை]ப் பெறுவது எப்பொழுது என்பது ?—(விடை)கூறுவோ

ருஉ. எப்பொழுது உன் மனமானது மோஹ ஸ்வரூபமான கலக்க கடந்திடுமோ, அப்பொழுது (நீ) கேட்கவேண்டியதிலும் கேட்டதிலும் வெ அடைவாய்.

ஆத்மாஅநாத்மாக்களைப் பகுத்தறியும் அறிவைக்கலக்கி ளிற்செலுத்துகின்ற மோஹஸ்வரூபமாகிய அவிவேகமென்னும் ழுது உன் புத்தியானது கடந்துவிடுமோ, அதாவது - பரி அடையுமோ; அப்பொழுது நீகேட்கவேண்டியதிலும் கேட்

सि निर्वेदं वैराग्यं श्रोतव्यस्य श्रुतस्य च, तदा श्रोतव्यं श्रुतं च ते निष्फलं प्रतिभाति इत्यभिप्रायः ॥ ५२ ॥

मोहकलुषात्ययद्वारेण लब्धात्मविवेकजप्रज्ञः कदा कर्मयोगजं फलं परमार्थयोगमवाप्स्यसि इति चेत्, शृणु—

५३. श्रुतिविप्रतिपन्ना ते यदा स्थास्यति निश्चला ।
समाधावचला बुद्धिस्तदा योगमवाप्स्यसि ॥

श्रुतिविप्रतिपन्ना अनेकसाध्यसाधनसम्बन्धप्रकाशनश्रुतिभिः श्रवणैः प्रवृत्तिनिवृत्तिलक्षणैः विप्रतिपन्ना नानाप्रतिपन्ना विक्षिप्ता सती ते तव बुद्धिः यदा यस्मिन् काले स्थास्यति स्थिरीभूता भविष्यति निश्चला विक्षेपचलनवर्जिता सती समाधौ, समाधीयते चित्तमस्मिन्निति समाधिः आत्मा, तस्मिन्नात्मनीत्येतत् । अचला तत्रापि विकल्पवर्जिता इत्येतत् । बुद्धिः अन्तःकरणम् । तदा तस्मिन् काले योगमवाप्स्यसि विवेकप्रज्ञां समाधिं प्राप्स्यसि ॥ ५३ ॥

प्रश्नबीजं प्रतिलभ्य अर्जुन उवाच लब्धसमाधिप्रज्ञस्य लक्षण-बुभुत्सया—

अर्जुन उवाच ॥

५४. स्थितप्रज्ञस्य का भाषा समाधिस्थस्य केशव ।
स्थितधीः किं प्रभाषेत किमासीत व्रजेत किम् ॥

அடைவாய்: அப்பொழுது உனக்கு (வேதாந்தநூலைத்தவிர மற்றையநூலை)க்கேட்க வேண்டியதும் கேட்டதும் நிஷ்ப்ரயோஜனமெனத்தோன்றும் என்பது கருத்து.(௫௨)

மோஹஸ்வரூபமாகிய கலக்கம் நீங்குவதனால் ஆத்மவிவேகபுத்தியைப்பெற்ற வனுக்கு கர்மயோகத்தின் பயனாக உண்டாகும் பரமார்த்தயோகத்தை [ஞானயோகத்தை] நீ எப்பொழுது பெறுவாய் என்றால், அதனைக் கேள் :

௫௩. (பல) கேள்விகளால் பலவாறாய்க் கலங்கியுள்ள உன் மனமானது எப்பொழுது ஆத்மாவிடத்து நிச்சலமாய் அசைவற்றதாய் நிற்குமோ, அப்பொழுது (நீ)யோகத்தைப் பெறுவாய்.

பல பயன்களையும், (அவற்றைப்பெறுதற்கான பல)கருவிகளையும், (அப்பயன்கட்கும் கருவிகட்கும் உள்ள)ஸம்பந்தங்களையும் விளக்கி,ப்ரவிருத்தி நிவிருத்திகளை உணர்த்தும்(நூல்களின்) கேள்விகளால் பலவிதமாய் மயங்கிக்கலங்கிய உன்மனமானது, சித்தத்தைத் தன்னிடத்தில் வைக்கப்பெறுவதாகிய ஆத்மாவினிடத்து ஸம்சய விபரீதமற்றதாய் எப்பொழுது ஸ்திரமாய் நிற்குமோ, அப்பொழுது நீ யோகத்தை=விவேகபுத்தியாகிய ஸமாதியைப் பெறுவாய். (௫௩)

ஜீவன்முக்தனுடைய லக்ஷணம்.

வினாவுக்கு ஸமயம் வாய்த்தது கண்டு, ஆத்மஞானத்தை அடைந்தவனுடைய லக்ஷணத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற விருப்பத்தால் அர்ஜுனன் சொல்லலுற்றான் :

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

௫௪. கேசவ! ஞானம்நிலைத்து ஸமாதியில் நிற்பவனை எவ்வாறு சொல்வது? ஞானம் நிலைத்தவன் எவ்வாறு பேசுவான்? எவ்வாறு இருப்பான்? எவ்வாறு நடப்பான்?

ஸ்தி²தா ப்ரதிஷ்டி²தா "அஹமஸ்மி பரம் ப்³ரஹ்ம" இதி ப்ரஜ்ஞா யஸ்ய ஸ: ஸ்தி²தப்ரஜ்ஞ:, தஸ்ய கா பா⁴ஷா பா⁴ஷணம் வசநம், கத²மஸௌ பரை: பா⁴ஷ்ய-தே ஸமாதி⁴ஸ்த²ஸ்ய ஸமாதி⁴ஸ்த²ஸ்ய ஸ்தி²தஸ்ய ஹே கேஶவ । ஸ்தி²தத⁴ீ: ஸ்தி²தப்ரஜ்ஞ: ஸ்வ-யம் வா கிம் ப்ரபா⁴ஷேத கிமாஸீத வ்ரஜேத கிம் ஆஸநம் வ்ரஜநம் வா தஸ்ய கத²ம் இத்யர்த²: । ஸ்தி²தப்ரஜ்ஞஸ்ய லக்ஷணமநேந ஶ்லோகேந ப்ருச்ச்²யதே ॥ ருச ॥

யோ ஹி ஆதி³த: ஏவ ஸம்ந்யஸ்ய கர்மாணி ஜ்ஞாநயோகநிஷ்டா²யாம் ப்ரவ்ரு-த்த:, யஶ்ச கர்மயோகேந, தயோ: 'ப்ரஜஹாதி' இதி ஆரப்⁴ய ஆ அத்⁴யாயபரிஸமா-ப்தே: ஸ்தி²தப்ரஜ்ஞலக்ஷணம் ஸாத⁴நம் ச உபதி³ஶ்யதே । ஸர்வத்ரைவ ஹி அத்⁴யாத்ம-ஶாஸ்த்ரே க்ருதார்த²லக்ஷணாநி யாநி தாந்யேவ ஸாத⁴நாநி உபதி³ஶ்யந்தே, யத்நஸா-த்⁴யத்வாத் । யாநி யத்நஸாத்⁴யாநி ஸாத⁴நாநி லக்ஷணாநி ச ப⁴வந்தி தாநி ஶ்ரீப⁴க³வாந் உவாச—

ஶ்ரீப⁴க³வாநுவாச ॥

ருரு. ப்ரஜஹாதி யதா³ காமாந் ஸர்வாந் பார்த² மநோக³தாந் ।
ஆத்மந்யேவாத்மநா துஷ்ட: ஸ்தி²தப்ரஜ்ஞஸ்ததோ³ச்யதே ॥

ப்ரஜஹாதி ப்ரகர்ஷேண ஜஹாதி பரித்யஜதி யதா³ யஸ்மிந் காலே கா-

"நான் பரப்ரஹ்மமாய் இருக்கிறேன்" என்னும் ஞானம் நிலைத்து ஸமாதியில் நிற்பவனைச்சொல்லுதல் எவ்வாறு? கேசவ! பிறரால் எவ்வாறு இவன் பேசப்படுகிறான்? [இவனுடைய லக்ஷணம் என்ன?] நிலைத்த ஞானமுள்ளவன், தான் எப்படிப் பேசுவான்? எவ்வாறு இருப்பான்? எவ்வாறு நடப்பான்? அவனுக்கு இருத்தலாவது, நடத்தலாவது எப்படி? என்பது பொருள். இந்த சுலோகத்தால் ஞானம்நிலைத்தவனுடைய லக்ஷணம் கேட்கப்படுகின்றது. (ருச)

எவன் முதலிலிருந்தே [ப்ரஹ்மசர்யநிலையிலிருந்தே] கர்மங்களைத் துறந்து ஞானயோகநிஷ்டையில் சென்றிருக்கின்றானோ, (வேறு) எவன் (துறவாது) கர்மயோகத்தால் செல்லுகின்றானோ [கர்மயோகநிஷ்டையிலேயே சென்றிடுகின்றானோ], அந்த இருவர்க்கும் "பார்த்த!" (உ - ருரு) என்பதுமுதல் அத்தியாயம் முற்றும்வரையிலும் ஞானம் நிலைத்தவனுடைய லக்ஷணமும், (அவனுடைய நிலையைப்பெறுதற்கான) ஸாதநமும் உபதேசிக்கப்படுகின்றன. ஏனெனில், முக்தி கைகூடப்பெற்றவனுடைய லக்ஷணங்கள் எவைகளோ, அவைகளே வேதாந்தநூல்களில் எங்கும்ஸாதனங்களாக உபதேசிக்கப்படுகின்றன; முயற்சியினால் ஸாதிக்கக்கூடியவையாதலின். முயற்சியால் ஸாதிக்கக்கூடிய ஸாதநங்களும், (ஞானத்தின் வல்லமையினால் வரக்கூடிய) லக்ஷணங்களும் எவைகளோ, அவற்றை ஸ்ரீபகவான் கூறலானார்:

(க) தன்னிடத்தே தனக்கு ஸந்தோஷம்.

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார்:

ருரு. பார்த்த! தானாக ஆத்மாவினிடத்தே ஸந்தோஷித்திருப்பதி னுள்ள ஸகல ஆசைகளையும் எவன் எப்பொழுது தள்ளிவிடுகின்றானோ (அவன்) ஞானம்நிலைத்தவன் எனப்படுகிறான்.

எப்பொழுது (ஒருவன் தன்) நெஞ்சினுள் புகு

𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌇𑌚𑍍𑌛𑌾𑌭𑍇𑌦𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌸𑌮𑌸𑍍𑌤𑌾𑌨𑍍 𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌮𑌨𑍋𑌗𑌤𑌾𑌨𑍍 𑌮𑌨𑌸𑌿 𑌪𑍍𑌰-
𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑍍 𑌹𑍃𑌦𑌿 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑍍 । 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍇 𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌕𑌾𑌰𑌣𑌾𑌭𑌾𑌵𑌾𑌚𑍍 𑌛-
𑌰𑍀𑌰𑌧𑌾𑌰𑌣𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌶𑍇𑌷𑍇 𑌚 𑌸𑌤𑌿 𑌉𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑍇𑌵 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾, 𑌇𑌤𑍍𑌯-
𑌤𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌏𑌵 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇 𑌏𑌵 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 𑌸𑍍𑌵𑍇𑌨𑍈𑌵
𑌬𑌾𑌹𑍍𑌯𑌲𑌾𑌭𑌨𑌿𑌰𑌪𑍇𑌕𑍍𑌷𑌃 𑌤𑍁𑌷𑍍𑌟𑌃 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌮𑍃𑌤𑌰𑌸𑌲𑌾𑌭𑍇𑌨 𑌅𑌨𑍍𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍍
𑌅𑌲𑌂𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌵𑌾𑌨𑍍 𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌵𑍇𑌕𑌜𑌾 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾
𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌤𑌦𑌾 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌪𑍁𑌤𑍍𑌰𑌵𑌿𑌤𑍍𑌤𑌲𑍋𑌕𑍈𑌷𑌣𑌃
𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍀 𑌆𑌤𑍍𑌮𑌾𑌰𑌾𑌮𑌃 𑌆𑌤𑍍𑌮𑌕𑍍𑌰𑍀𑌡𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௫௫ ॥

𑌕𑌿𑌂 𑌚—

௫௬. 𑌦𑍁𑌃𑌖𑍇𑌷𑍍𑌵𑌨𑍁𑌦𑍍𑌵𑌿𑌗𑍍𑌨𑌮𑌨𑌾𑌃 𑌸𑍁𑌖𑍇𑌷𑍁 𑌵𑌿𑌗𑌤𑌸𑍍𑌪𑍃𑌹𑌃 ।
𑌵𑍀𑌤𑌰𑌾𑌗𑌭𑌯𑌕𑍍𑌰𑍋𑌧𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌧𑍀𑌰𑍍𑌮𑍁𑌨𑌿𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌦𑍁𑌃𑌖𑍇𑌷𑍁 𑌆𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾𑌦𑌿𑌷𑍁 𑌅𑌨𑍁𑌦𑍍𑌵𑌿𑌗𑍍𑌨𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌤𑌂 𑌦𑍁𑌃𑌖𑌪𑍍𑌰𑌾-
𑌪𑍍𑌤𑍌 𑌮𑌨𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌸𑍋𑌽𑌯𑌮𑌨𑍁𑌦𑍍𑌵𑌿𑌗𑍍𑌨𑌮𑌨𑌾𑌃 । 𑌤𑌥𑌾 𑌸𑍁𑌖𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌷𑍁

ஆசைகளை முற்றிலும் விட்டொழிக்கின்றானோ, உள்ளேயுள்ள ஆத்மஸ்வரூபத்திலேயே தானாகவே திருப்தனாய், வெளிலாபங்களை வேண்டாதவனாய், பரம்பொருளைக் கண்டுணர்தலாகிய அமிருதரஸம் கிடைக்கப்பெற்றமையால் ‘மற்றைய பொருள்கள் வேண்டாம்’ என்ற எண்ணம்வந்தவனாய் இருக்கின்றானோ, அப்பொழுது (அவன்) ஆத்மாஅநாத்மாக்களின் ஆராய்ச்சியாலான ஞானம் நிலைத்திருக்கப்பெற்றவன் வித்வான்[ஞானி] எனப்படுகிறான். ஸகலஆசைகளையும் ஒழித்திட்டவளவிலே, ஸந்தோஷத்தை உண்டாக்க ஒன்றும் இல்லாமையாலும், உடம்பொடுநிற்றற்குக் காரணமான (கர்மத்தின்) மிச்சம் பின்னும் இருப்பதனாலும் (ஞானம்நிலைத்தவனுடைய) நடக்கையானது பித்தன் வெறியன் இவர்களுடைய(நடக்கை)போல ஆகும்என்றதனால் (தான்) “**தானாக ஆத்மாவினிடத்தே ஸந்தோஷித்திருப்பவனாய்**” என அருளிச்செய்கிறார். மக்கள், பொருள், உலகம் என்றவற்றினிடத்துப் பற்றைவிட்டு முற்றத்துறந்தவனாய், ஆத்மாவினிடத்தே மகிழ்பவனாய், ஆத்மாவோடு விளையாடுபவன், ஞானம் நிலைத்தவன் என்பது (தேர்ந்த)பொருள். (௫௫)

(௨) இன்ப துன்பங்களில் ஒப்பநிற்றல்.

மேலும்,

௫௬. **துக்கங்களில் நொந்திடாத மனத்தினனாய், ஸுகங்களில் ஆசையற்றவனாய், (பொருள்களின்மேல்) பற்றும் பயமும் கோபமும் நீங்கப்பெற்றவனாய் இருப்பவன், நிலைத்தஞானமுடையவன் முனிவன் எனப்படுகிறான்.**

ஆத்யாத்மிகம்முதலிய[1] துன்பங்கள் வந்தபொழுது மனமானது நிலைகுலைந்து நோவப்பெறாமலும், அப்படியே, விறகுமுதலியவற்றை இடும்பொழுது தீயானது

---

[1] முதலிய என்றதனால், ஆதிபௌதிகமும் ஆதிதைவிகமும் கொள்க. தலைவலி, ஜ்வரம் முதலியவற்றால்வருவது ஆத்யாத்மிகம். தேள், பாம்பு முதலியவற்றால் வருவது ஆதிபௌதிகம். இடி, மழையின்மை முதலியவற்றால் வருவது ஆதிதைவிகம். ஆத்யாத்மிகம் - தன்னைப்பற்றி வருவது. ஆதிபௌதிகம் - பிற உயிர்களைப்பற்றி வருவது. ஆதிதைவிகம் - தெய்வத்தைப்பற்றி வருவது. துன்பங்கள் இவ்வாறாக மூன்றுவகை.

𑌵𑌿𑌗𑌤𑌾 𑌸𑍍𑌪𑍃𑌹𑌾 𑌤𑍃𑌷𑍍𑌣𑌾 𑌯𑌸𑍍𑌯, 𑌨 𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑌿𑌵 𑌇𑌨𑍍𑌧𑌨𑌾𑌦𑍍𑌯𑌾𑌧𑌾𑌨𑍇 𑌸𑍁𑌖𑌾𑌨𑍍𑌯𑌨𑍁𑌵𑌰𑍍𑌧𑌤𑍇 𑌸 𑌵𑌿𑌗𑌤𑌸𑍍𑌪𑍃𑌹𑌃 | 𑌵𑍀𑌤𑌰𑌾𑌗𑌭𑌯𑌕𑍍𑌰𑍋𑌧𑌃 𑌰𑌾𑌗𑌶𑍍𑌚 𑌭𑌯𑌂 𑌚 𑌕𑍍𑌰𑍋𑌧𑌶𑍍𑌚 𑌵𑍀𑌤𑌾𑌃 𑌵𑌿𑌗𑌤𑌾𑌃 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌃 𑌵𑍀𑌤𑌰𑌾𑌗𑌭𑌯𑌕𑍍𑌰𑍋𑌧𑌃 | 𑌸𑍍𑌥𑌿𑌤𑌧𑍀𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 𑌮𑍁𑌨𑌿𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍀 𑌤𑌦𑌾 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 || ௫௬ ||

𑌕𑌿𑌂 𑌚—

௫௭. 𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌾𑌨𑌭𑌿𑌸𑍍𑌨𑍇𑌹𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌮𑍍 |
𑌨𑌾𑌭𑌿𑌨𑌨𑍍𑌦𑌤𑌿 𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 ||

𑌯𑌃 𑌮𑍁𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌦𑍇𑌹𑌜𑍀𑌵𑌿𑌤𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌪𑌿 𑌅𑌨𑌭𑌿𑌸𑍍𑌨𑍇𑌹𑌃 𑌅𑌭𑌿𑌸𑍍𑌨𑍇𑌹𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌂 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍 𑌶𑍁𑌭𑌂 𑌅𑌶𑍁𑌭𑌂 𑌵𑌾 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌨 𑌅𑌭𑌿𑌨𑌨𑍍𑌦𑌤𑌿 𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌶𑍁𑌭𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌨 𑌤𑍁𑌷𑍍𑌯𑌤𑌿 𑌨 𑌹𑍃𑌷𑍍𑌯𑌤𑌿, 𑌅𑌶𑍁𑌭𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 | 𑌤𑌸𑍍𑌯 𑌏𑌵𑌂 𑌹𑌰𑍍𑌷𑌵𑌿𑌷𑌾𑌦𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌵𑍇𑌕𑌜𑌾 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 || ௫௭ ||

𑌕𑌿𑌂 𑌚—

௫௮. 𑌯𑌦𑌾 𑌸𑌂𑌹𑌰𑌤𑍇 𑌚𑌾𑌯𑌂 𑌕𑍂𑌰𑍍𑌮𑍋𑌽𑌙𑍍𑌗𑌾𑌨𑍀𑌵 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 |
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 ||

𑌯𑌦𑌾 𑌸𑌂𑌹𑌰𑌤𑍇 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌉𑌪𑌸𑌂𑌹𑌰𑌤𑍇 𑌚 𑌅𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍋 𑌯𑌤𑌿𑌃 𑌕𑍂𑌰𑍍𑌮𑌃 𑌅𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌇𑌵 𑌯𑌥𑌾 𑌕𑍂𑌰𑍍𑌮𑍋 𑌭𑌯𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌾𑌨𑌿 𑌅𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌉𑌪-

---

(மேன்மேலும் வளர்வது)போல, ஸுகங்கள் வந்தபொழுது ஆசையானது ஸுகங்களைஒட்டி மேன்மேலும் மிகப்பெருமலும், பயகோபங்கள் நீங்கவும் பெற்றவன் எவனோ, அவன் அப்பொழுது ஸ்திதப்ரஜ்ஞன், முநி, ஸந்யாஸி எனப்படுகிறான்.(௫௬)

(௩) வெறுப்பும், களிப்பும், பற்றும் இல்லாமை.

அன்றியும்,

௫௭. எவன் எங்கும் பற்றில்லாதவனாய், நல்லதும் தீயதுமான அததைப் பெற்று ஸந்தோஷமும் வெறுப்பும் கொள்வதில்லையோ, அவனுடைய ஞானம் நிலை பெற்றது.

முனியென்பவன் சரீரஜீவநம் முதலியவற்றிலுங்கூடப் பற்றில்லாதவனாய், நல்லதையும் தீயதையும் பெற்று ஸந்தோஷிப்பதில்லை, வெறுப்புறுவது(ம்)இல்லை : நல்லவற்றை அடைந்து மகிழ்வது(ம்) இல்லை, தீயவற்றைப் பெற்றுப் பகைப்பதும் இல்லை என்பது பொருள். இவ்வாறு ஸந்தோஷமும் வ்யஸநமும் இல்லாதவனுக்கு விவேகத்தாற் பிறந்த ஞானமானது நிலைபெற்று நிற்கின்றது. (௫௭)

(௪) **இந்திரியங்கள் தம்தம் விஷயங்களினின்றும் முற்றிலும் அடங்கி உள்நோக்கிச் செல்லுதல்.**

மற்றும்,

௫௮. ஆமை (தன்) அவயவங்களை எல்லாப்பக்கங்களினின்றும் (உள்ளே) அடக்குமாறுபோல, இவன் எப்பொழுது விஷயங்களினின்றும் இந்திரியங்களை அடக்குகிறானோ, (அப்பொழுது) அவனுடைய ஞானம் நிலைத்தது.

எப்படி ஆமையானது அச்சத்தினால் தன் அங்கங்களை எல்லாப்புறங்களினின்றும் முற்றிலும் ஒடுக்கிவைத்துக்கொள்கின்றதோ அப்படி, ஞானநிஷ்டையை மேற்

𑌸𑌂𑌹𑌰𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃, 𑌏𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌃 𑌇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑍇-
𑌭𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌉𑌪𑌸𑌂𑌹𑌰𑌤𑍇 । 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 𑌇𑌤𑌿 𑌉𑌕𑍍𑌤𑌾-
𑌰𑍍𑌥𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑍍 ॥ ௫௮ ॥

𑌤𑌤𑍍𑌰 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍 𑌅𑌨𑌾𑌹𑌰𑌤𑌃 𑌆𑌤𑍁𑌰𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌸𑌂𑌹𑍍𑌰𑌿𑌯𑌨𑍍𑌤𑍇, 𑌨 𑌤𑍁 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑍋 𑌰𑌾𑌗𑌃 । 𑌸 𑌕𑌥𑌂 𑌸𑌂𑌹𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 ? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௫௯. 𑌵𑌿𑌷𑌯𑌾 𑌵𑌿𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌨𑌿𑌰𑌾𑌹𑌾𑌰𑌸𑍍𑌯 𑌦𑍇𑌹𑌿𑌨𑌃 ।
𑌰𑌸𑌵𑌰𑍍𑌜𑌂 𑌰𑌸𑍋𑌽𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥

𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌵𑌿𑌷𑌯𑌾𑌃 𑌵𑌿𑌷𑌯𑍋𑌪𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌨𑌿 𑌵𑌿𑌷𑌯𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌾𑌨𑌿 𑌇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌨𑌿𑌰𑌾𑌹𑌾𑌰𑌸𑍍𑌯 𑌅𑌨𑌾𑌹𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌵𑌿𑌷𑌯𑌸𑍍𑌯 𑌕𑌷𑍍𑌟𑍇 𑌤𑌪𑌸𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯 𑌮𑍂𑌰𑍍𑌖𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌵𑌿𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌂𑌤𑍇 𑌦𑍇𑌹𑌿𑌨𑌃 𑌦𑍇𑌹𑌵𑌤𑌃 𑌰𑌸𑌵𑌰𑍍𑌜𑌂 𑌰𑌸𑍋 𑌰𑌾𑌗𑌃 𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍁 𑌯𑌃 𑌤𑌂 𑌵𑌰𑍍𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 । 𑌰𑌸𑌶𑌬𑍍𑌦𑍋 𑌰𑌾𑌗𑍇 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 “𑌸𑍍𑌵𑌰𑌸𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃, 𑌰𑌸𑌿𑌕𑌃, 𑌰𑌸𑌜𑍍𑌞𑌃” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 । 𑌸𑌃 𑌅𑌪𑌿 𑌰𑌸𑌃 𑌰𑌂𑌜𑌨𑌾𑌰𑍂𑌪𑌃 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌃 𑌅𑌸𑍍𑌯 𑌯𑌤𑍇𑌃 𑌪𑌰𑌂 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯 ‘𑌅𑌹𑌮𑍇𑌵 𑌤𑌤𑍍’ 𑌇𑌤𑌿 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌨𑌿𑌰𑍍𑌬𑍀𑌜𑌂 𑌵𑌿𑌷𑌯𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌨 𑌅𑌸𑌤𑌿 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑍇 𑌰𑌸𑌸𑍍𑌯 𑌉𑌚𑍍𑌛𑍇𑌦𑌃 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌯𑌾𑌃 𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 ॥ ௫௯ ॥

கொண்ட இந்த யதியானவன் ஸகலவிஷயங்களினின்றும் இந்திரியங்களை எப்பொழுதுஒடுக்கிக்கொள்கின்றானோ,(அப்பொழுது)"அவனுடைஞானம் நிலைத்தது" என்னும் வாக்கியத்திற்குப் பொருள்(௫௫ - ஆம் சுலோகத்தின் உரையில்) கூறப்பட்டது.(௫௮)

இனி, விஷயங்களைக் கவராத[அவற்றை நுகர்தற்கு மனம்நோங்காத] நோயாளிக்கும் இந்திரியங்கள் ஒடுங்குகின்றன; அவற்றின்மீதுள்ள ஆசையோ ஒடுங்குவதில்லை. அஃது ஒடுங்கும்வகை எப்படி என்பது?—(விடை) கூறுவோம்:

௫௯. **உணவில்லாத மனிதனுக்கு ரஸத்தைத் தவிர விஷயங்கள் ஒழிகின்றன. பரம்பொருளைக் கண்டபின்பு, இவனுடைய ஆசையும் [ரஸமும்] ஒழிகின்றது.**

(இங்கே) "விஷயங்கள்" என்னும்சொல்லால் கூறற்குஉரியன - (அந்த)விஷயங்களால் உணர்த்தப்பட்ட இந்திரியங்கள். விஷயங்களை ஒழித்துக் கடுந்தவம்புரிகின்ற மூடமனிதனுக்கும் இந்திரியங்கள் (தம்தம் விஷயங்களினின்றும்) ஒழிகின்றன. என்றாலும், விஷயங்களிலுள்ள ரஸத்தைத்தவிர (மற்றது ஒழிகின்றது). [அதாவது - ஆசைமாத்திரம் நீங்குவதில்லை]. ரஸம் என்ற சொல்லானது 'ஆசை' என்னும் பொருளில் பயின்றுவழங்குவது. 'ஸ்வரஸமாகப் புகுந்தவன்,' 'ரஸிகன்,' 'ரஸஜ்ஞன்' என்பன முதலியவாகக் காண்கிறபடியால். பரமார்த்தஉண்மையாகிய ப்ரஹ்மத்தைக் கண்டுணர்ந்து "நானே அது" என்றிருக்கின்ற இந்தயதிக்கு இன்பத்திலே ருசியாகிய நுண்மையான அந்த ஆசையும் நீங்குகின்றது: விஷயங்களின்உணர்வு வேரொடு அற்றுப்போகின்றது என்பது பொருள். நல்லறிவு இல்லாவிடத்து ஆசை அறுவதில்லை. ஆகவே, நல்லறிவு என்னும் ஞானத்தை நிலைத்திருக்கச் செய்துகொள்ள வேண்டும் என்பது கருத்து. (௫௯)

सम्यग्दर्शनलक्षणप्रज्ञास्थैर्यं चिकीर्षुणा आदौ इन्द्रियाणि स्ववशे स्थापयितव्यानि । यस्मात् तदनवस्थापने दोषमाह—

௬௰. यततो ह्यपि कौन्तेय पुरुषस्य विपश्चितः ।
इन्द्रियाणि प्रमाथीनि हरन्ति प्रसभं मनः ॥

यततः प्रयत्नं कुर्वतः हि यस्मात् कौन्तेय पुरुषस्य विपश्चितः मेधाविनः 'अपि' इति व्यवहितेन सम्बन्धः । इन्द्रियाणि प्रमाथीनि प्रमथनशीलानि विषयाभिमुखं हि पुरुषं विक्षोभयन्ति आकुलीकुर्वन्ति, आकुलीकृत्य च हरन्ति प्रसभं प्रसह्य प्रकाशमेव पश्यतो विवेकविज्ञानयुक्तं मनः ॥ ௬௰ ॥

यतः तस्मात्—

௬௧. तानि सर्वाणि संयम्य युक्त आसीत मत्परः ।
वशे हि यस्येन्द्रियाणि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥

तानि सर्वाणि संयम्य संयमनं वशीकरणं कृत्वा युक्तः समाहितः सन् आसीत मत्परः अहं वासुदेवः सर्वप्रत्यगात्मा परो यस्य स मत्परः, 'न अन्योऽहं तस्मात्' इति आसीत इत्यर्थः । एवमासीनस्य यतेः वशे हि यस्य इन्द्रियाणि वर्तन्ते अभ्यासबलात् तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ௬௧ ॥

இந்திரியங்களை அடக்காவிடின் அவை தீங்கு செய்யும்.

நல்லறிவு என்னும் புத்தியை நிலைப்படுத்தக் கருதியவன் முதலில் இந்திரியங்களைத் தன்வசத்தில் நிற்கும்படி செய்யவேண்டும். ஏனெனில், அவற்றை அடக்காத வழி (வரும்) தீங்கைக் கூறுகிறார்:

௬௰. **ஏனெனில், புத்திசாலியான புருஷன் (தன் இந்திரியங்களை அடக்க) முயல்கின்றனனாயினும், கௌந்தேய! கொந்தளிக்கும் இயல்பையுடைய இந்திரியங்கள் மனத்தை வலியக்கவர்ந்துகொண்டு போகின்றன.**

(எதையும்) கலங்கச்செய்யும் தன்மையையுடைய இந்திரியங்கள், விஷயங்களிலே நோக்கமுள்ள புருஷனைக்கலக்கிக் குழம்பச்செய்கின்றன; அவை அப்படிக்கலக்கிய பின்னும், (விஷயங்களின் கெடுதிகளை அவன்) பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே விவேகபுத்தியுள்ளதாய்த் தெளிந்தே நிற்பதான (அந்த புத்திசாலியினுடைய) மனத்தை வலியக் கவர்ந்திடுகின்றன. (௬௰)

(ரு) பகவானை இடைவிடாது தியானித்தல்.

எதனால் (இவ்வாறு), அதனால்

௬௧. **(அவன்) அவற்றையெல்லாம் அடக்கி, என்னிடத்தே ஈடுபட்டவனாய் அமைந்து இருக்கவேண்டும். இந்திரியங்கள் எவனுக்கு (த் தன்)வசத்தில் இருக்கின்றனவோ, அவனுக்கு ஞானம் நிலைத்தது.**

அந்த (இந்திரியங்கள்)எல்லாவற்றையும் வசப்படுத்திக்கொண்டு, அடக்கமுடையவனாய், ஸகலத்திற்கும் உள்ளேயுள்ள ஆத்மாவாகிய வாஸுதேவனான என்னிடத்து ஈடுபட்டு (நிற்கவேண்டும்): "நான் அவனினும் வேறு அல்லேன்" எனக்கொண்டு இருக்கவேண்டும் என்பது பொருள். இவ்வாறு இருக்கின்ற எந்த யதிக்கு(த் தன்) இந்திரியங்கள் பயிற்சியினால் (தன்)வசத்தில் இருக்கின்றனவோ, அவனுடைய ஞானம் நிலைத்தது. (௬௧)

அத² இதா³நீம் பராப⁴விஷ்யத: ஸர்வாநர்த²மூலம் இத³ம் உச்யதே —

௬௨. த்⁴யாயதோ விஷயாந்பும்ஸ: ஸங்க³ஸ்தேஷூபஜாயதே ।
ஸங்கா³த்ஸஞ்ஜாயதே காம: காமாத்க்ரோதோ⁴(அ)பி⁴ஜாயதே ॥

த்⁴யாயத: சிந்தயத: விஷயாந் ஶப்³தா³தீ³ந் விஷயவிஶேஷாந் ஆலோசய... பும்ஸ: புருஷஸ்ய ஸங்க³: ஆஸக்தி: ப்ரீதி: தேஷு விஷயேஷு உபஜா... யதே உத்பத்³யதே । ஸங்கா³த் ப்ரீதே: ஸஞ்ஜாயதே ஸமுத்பத்³யதே காம: த்ரு... ஷ்ணா । தஸ்மாச்ச காமாத் குதஶ்சித் ப்ரதிஹதாத் க்ரோத⁴: அபி⁴ஜாயதே ॥ ௬௨ ॥

௬௩. க்ரோதா⁴த்³ப⁴வதி ஸம்மோஹ: ஸம்மோஹாத்ஸ்ம்ருதிவிப்⁴ரம: ।
ஸ்ம்ருதிப்⁴ரம்ஶாத்³பு³த்³தி⁴நாஶோ பு³த்³தி⁴நாஶாத்ப்ரணஶ்யதி ॥

க்ரோதா⁴ச்ச ப⁴வதி ஸம்மோஹ: அவிவேக: கார்யாகார்யவிஷய: । க்ருத்³... தோ⁴ ஹி ஸம்மூட⁴: ஸந் கு³ருமபி ஆக்ரோஶதி । ஸம்மோஹாச்ச ஸ்ம்ருதிவிப்⁴ர... ஶாஸ்த்ராசார்யோபதே³ஶாஹிதஸம்ஸ்காரஜநிதாயா: ஸ்ம்ருதே: ஸ்யாச்ச விப்⁴ரம்... ப்⁴ரம்ஶ: ஸ்ம்ருத்யுத்பத்திநிமித்தப்ராப்தௌ அநுத்பத்தி: । தத: ஸ்ம்ருதிப்⁴ரம்ஶாச்ச பு³த்³தி⁴... நாஶ: பு³த்³தே⁴ர்நாஶ: । கார்யாகார்யவிஷயவிவேகாயோக்³யதா அந்த: கரண...

விஷயங்களின் நினைப்பே கேடுதிக்கு மூலம்.

இனி, இப்பொழுது கெட்டழிந்துபோகின்றவனுடைய அனர்த்தத்திற்கெல்... லாம் காரணமானதைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார் :

௬௨. ***விஷயங்களை நினைக்கும் புருஷனுக்கு அவற்றின்மேல் பற்று உண்டா... கிறது : பற்றினின்றும் ஆசை உண்டாகிறது : ஆசையினின்றும் கோபம் உண்டா... கின்றது.***

ஓசைமுதலிய விஷயவிசேஷங்களில் [அவ்விஷயங்களின்மேல் தானாக ஏற்... வைத்துக்கொண்ட அழகுமுதலியவற்றிலே] கருத்தைச்செலுத்தும் புருஷனுக்கு அ... விஷயங்களின்மேல் பிரியம் உண்டாகின்றது. ஏதாவதொருகாரணத்தால் ஆ... தடைப்பட, அதனின்றும் கோபம் உண்டாகின்றது. (...

௬௩. ***கோபத்தினின்று மயக்கமும், மயக்கத்தினின்று நினைவுத்தவறும், நினை... வுத்தவறினின்று அறிவுகேடும் உண்டாகின்றது. அறிவுகெடுதலால் (ஒருவன்) முற்... கெட்டுப்போகிறான்.***

கோபத்தினின்று மயக்கம் உண்டாகின்றது. (மயக்கம் -)செய்யத்தக்கன... றையும் செய்யத்தகாதனவற்றையும்பற்றிய ஆராய்ச்சியில்லாமை. கோபங்கொண்ட... வன் (ஒன்றுந்தெரியாது) மயங்கிவிட்டவனாய்க் குருவையும் பழித்திடுகிறானன்றோ. ம... க்கத்தினின்றும் நினைவுத்தவறு (உண்டாகின்றது): சாஸ்திரம் ஆசாரியன் இவர்களி... உபதேசத்தால் (புத்தியுள்) நாட்டப்பட்ட பயிற்சியாலாகும் (தருமநியாயங்களி... நினைவு, தவறிப்போகின்றது. (அந்த)நினைவு உண்டாவதற்குக்காரணம் அமைந்திரு... [தான் கேட்டுள்ள நல்லஉபதேசம் ஒருவனுடைய நினைவுக்கு வரக்கூடியதாயிருந்... (கோபம் வந்தபோது அவன் மயக்கத்தால் மூடப்படுகின்றமையால் அவனுக்கு அ... நினைவு) உண்டாவதில்லை. அந்த நினைவுத்தவறினின்றும் அறிவுகேடு வருகின்றது : அ... தக்கரணத்திற்கு கார்யஅகார்யங்களைப் பகுத்தறியமுடியாமை, அறிவுகேடு எனப்ப...

बुद्धेः नाश उच्यते। बुद्धिनाशात् प्रणश्यति। तावदेव हि पुरुषः यावदन्तःकरणं तदीयं कार्याकार्यविवेकयोग्यम्। तदयोग्यत्वे नष्ट एव पुरुषो भवति। अतः तस्य अन्तःकरणस्य बुद्धेः नाशात् प्रणश्यति पुरुषार्थायोग्यो भवति इत्यर्थः॥ ௬௩॥

सर्वानर्थस्य मूलमुक्तं विषयाभिध्यानम्। अथ इदानीं मोक्षकारणम् इदम् उच्यते—

௬௪. रागद्वेषवियुक्तैस्तु विषयानिन्द्रियैश्चरन्।
आत्मवश्यैर्विधेयात्मा प्रसादमधिगच्छति॥

रागद्वेषवियुक्तैः रागश्च द्वेषश्च रागद्वेषौ, तत्पुरःसरा हि इन्द्रियाणां प्रवृत्तिः स्वाभाविकी, तत्र यो मुमुक्षुः भवति सः ताभ्यां वियुक्तैः श्रोत्रादिभिः इन्द्रियैः विषयान् अवर्जनीयान् चरन् उपलभमानः आत्मवश्यैः आत्मनः वश्यानि वशीभूतानि इन्द्रियाणि तैः आत्मवश्यैः विधेयात्मा इच्छातः विधेयः आत्मा अन्तःकरणं यस्य सः अयं प्रसादम् अधिगच्छति। प्रसादः प्रसन्नता स्वास्थ्यम्॥ ௬௪॥

प्रसादे सति किं स्यात् इति? उच्यते—

கின்றது. அறிவுகேட்டினால் முற்றும் அழிந்துவிடுகிறான் : எவ்வளவுகாலம் அவனுடைய அந்தக்கரணம் கார்யாகார்யங்களைப் பகுத்தறிய வல்லமைபெற்றுள்ளதோ அவ்வளவுகாலமேயன்றோ புருஷன். அதற்கு [அவற்றைப் பகுத்தறிதற்கு]த் தகுதியற்றால், புருஷன் அழிந்தவனாகவே ஆகிறான். ஆகவே அவனுடைய அந்தக்கரணத்தின் அறிவுகேட்டினால் அழிந்துவிடுகிறான் : புருஷார்த்தத்திற்குத் தகாதவன் ஆகிறான் என்பது பொருள். (௬௩)

இந்திரியங்களின் அடக்கம் மனத்தெளிவையும், ஸுகத்தையும் கொடுக்கும்.

விஷயங்களைக் கருதுதலானது அநர்த்தங்கட்கெல்லாம் காரணம் என்று கூறப்பட்டது. இனி இப்பொழுது மோக்ஷத்திற்கு வழி, இது எனப்படுகின்றது :

௬௪. அந்தக்கரணம் அடங்கியவனோ, விருப்பவெறுப்புக்கள் நீங்கப்பெற்றுத் தனக்குஅடங்கிநிற்கும் இந்திரியங்களால் விஷயங்களிற்சென்று (மனத்)தெளிவைப் பெறுகிறான்.

இந்திரியங்களுடைய இயற்கையானபோக்கானது விருப்பவெறுப்பு
னிட்டன்றோ இருப்பது. இனி, (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபடவிரும்புகிற
அவன் அவற்றினின்றும் நீங்கியவனாய்த் தன்வசப்பட்ட செவிமுதலி
ளால், (உணவுமுதலிய) தவிர்க்கத்தகாதவிஷயங்களை நாடிக்கொண்
இஷ்டப்படி நடக்கக்கூடிய அந்தக்கரணத்தைப் பெற்றுத் தெளிவை
தெளிவு - கலங்காமை, நிலைபெற்ற தன்மை, அமைதியுடைமை. (௬௪)

தெளிவு உண்டானால், என்ன உண்டாகும் என்பது?—(விடை) கூறப்படுகின்றது :

௬௫. ப்ரஸாதே ஸர்வது:கானாம் ஹானிரஸ்யோபஜாயதே ।
ப்ரஸன்னசேதஸோ ஹ்யாஶு புத்தி: பர்யவதிஷ்டதே ॥

ப்ரஸாதே ஸர்வது:கானாம் ஆத்யாத்மிகாதீனாம் ஹானி: வினாஶ: அஸ்ய யதே: உபஜாயதே । கிம் ச—ப்ரஸன்னசேதஸ: ஸ்வஸ்தாந்த:கரணஸ்ய ஹி யஸ்மாத் ஆஶு ஶீக்ரம் புத்தி: பர்யவதிஷ்டதே ஆகாஶமிவ பரி ஸமந்தாத் அவதிஷ்டதே, ஆத்மஸ்வரூபேணைவ நிஶ்சலீபவதி இத்யர்த: ॥

ஏவம் ப்ரஸன்னசேதஸ: அவஸ்திதபுத்தே: க்ருதக்ருத்யதா யத:, தஸ்மாத் ராகத்வேஷவியுக்தை: இந்த்ரியை: ஶாஸ்த்ராவிருத்தேஷு அவர்ஜனீயேஷு யுக்த: ஸமாசரேத் இதி வாக்யார்த: ॥ ௬௫ ॥

ஸேயம் ப்ரஸன்னதா ஸ்தூயதே—

௬௬. நாஸ்தி புத்திரயுக்தஸ்ய ந சாயுக்தஸ்ய பாவனா ।
ந சாபாவயத: ஶாந்திரஶாந்தஸ்ய குத: ஸுகம் ॥

நாஸ்தி ந வித்யதே ந பவதி இத்யர்த:, புத்தி: ஆத்மஸ்வரூபவிஷயா அயுக்தஸ்ய அஸமாஹிதாந்த:கரணஸ்ய । ந ச அயுக்தஸ்ய பாவனா ஆத்மஜ்ஞானாபினிவேஶ: । ததா—ந ச அபாவயத: ஆத்மஜ்ஞானாபினிவேஶம் அகுர்வத: ஶாந்தி: உபஶம: । அஶாந்தஸ்ய குத: ஸுகம்? இந்த்ரியாணாம் ஹி விஷயஸேவாத்ருஷ்ணாத: நிவ்ருத்தி:

---

௬௫. தெளிவுள்ளவழி, இவனுடைய துன்பங்கட்கெல்லாம் கழிவு பிறக்கின்றது ; ஏனெனில், மனந்தெளிந்தவனுக்குப் புத்தி விரைவாக நிலைத்துநிற்கின்றது.

தெளிவுண்டானவழி, இந்த யதிக்குத் தன்னைப்பற்றிவருவன முதலிய துன்பங்களெல்லாவற்றிற்கும் கழிவு உண்டாகின்றது. அன்றியும், சுத்தமான அந்தக்கரணமுள்ளவனுக்கு எதனால் புத்தியானது விரைவாக நிலைத்துநிற்கின்றதோ, அதாவது—ஆகாசம்போல எங்கும் நிலைபெறுகின்றதோ, ஆத்மாவின் ஸ்வரூபமாகவே அலையாது அமைந்துநிற்கின்றதோ, (அதனால், புத்தித்தெளிவுக்காக முயற்சிசெய்யவேண்டும்).

இவ்வாறு மனம்தெளிந்து புத்திநிலைத்தவனுக்குப் புருஷார்த்தம் கைகூடுகின்றமையால், (ஸம்ஸாரத்தினின்றும் விடுபடவிரும்புகிறவன்) விருப்பவெறுப்புக்கள் நீங்கிய இந்திரியங்களால் சாஸ்திரத்தோடுமாறுபடாத (உணவுமுதலிய) தவிர்க்கமுடியாதவிஷயங்களை அமைதியொடு நாடவேண்டும் என்பது, (இந்த) ஸந்தர்ப்பத்திற் கூறப்பட்ட பொருளாம். (௬௫)

ஆதலால், இந்த (மனத்)தெளிவைப் புகழ்ந்து சொல்லுகிறார் :

௬௬. ஒருநிலையில்லாதவனுக்கு ஞானம் உண்டாவதில்லை : ஒருநிலையில்லாதவனுக்கு (ஆத்ம)த்யானமும் உண்டாவதில்லை : (ஆத்ம)த்யானமில்லாதவனுக்கு ஒழிவும் உண்டாவதில்லை : ஒழிபற்றவனுக்கு ஸுகம் ஏது ?

மனம்ஒருநிலைப்படாதவனுக்கு ஆத்மஸ்வரூபத்தைப்பற்றிய அறிவு உண்டாகாது. ஒருநிலைப்படாதவனுக்கு ஆத்மாவை அறிதலிலே மிக்கஊக்கமும் உண்டாகாது. அவ்வாறே, ஆத்மாவை அறிதலிலே மிக்கஊக்கங்கொள்ளாதவனுக்கு ஒழிவு உண்டாவதில்லை. ஒழிபற்றவனுக்கு ஸுகம் ஏது ? இந்திரியங்கள் விஷயநுகர்ச்சியிலுள்ள

ஸுகம், ந விஷயவிஷயா த்ருஷ்ணா । து:க²மேவ ஹி ஸா । ந த்ருஷ்ணாயாம் ஸத்யாம் ஸுக²ஸ்ய க³ந்தோ⁴(அ)ப்யுபபத்³யத இத்யபி⁴ப்ராய: ॥ ௬௬ ॥

அயுக்தஸ்ய கஸ்மாத் ப்ரஜ்ஞா நாஸ்தீ த்யுச்யதே—

௬௭. இந்த்³ரியாணாம் ஹி சரதாம் யந்மநோ(அ)நுவிதீ⁴யதே ।

தத³ஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்நாவமிவாம்ப⁴ஸி ॥

இந்த்³ரியாணாம் ஹி யஸ்மாத் சரதாம் ஸ்வஸ்வவிஷயேஷு ப்ரவர்தமாநாநாம் யந்மந: அநுவிதீ⁴யதே அநுப்ரவர்ததே தத் இந்த்³ரியவிஷயவிகல்பநேந ப்ரவ்ருத்தம் மந: அஸ்ய யதே: ஹரதி ப்ரஜ்ஞாம் ஆத்மாநாத்மவிவேகஜாம் நாஶயதி । கத²ம்? வாயு: நாவமிவ அம்ப⁴ஸி உத³கே ஜிக³மிஷிதாம் மார்கா³து³த்³த்⁴ருத்ய உந்மார்கே³ யதா² வாயு: நாவம் ப்ரவர்தயதி ஏவமாத்மவிஷயாம் ப்ரஜ்ஞாம் ஹ்ருத்வா மந: விஷயவிஷயாம் கரோதி ॥ ௬௭ ॥

'யததோ ஹி' இத்யுபந்யஸ்தஸ்யார்த²ஸ்ய அநேகதா⁴ உபபத்திமுக்த்வா தம் சார்த²முபஸம்ஹரதி—

௬௮. தஸ்மாத்³யஸ்ய மஹாபா³ஹோ நிக்³ருஹீதாநி ஸர்வஶ: ।

இந்த்³ரியாணீந்த்³ரியார்தே²ப்⁴யஸ்தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டி²தா ॥

ஆசையினின்றும் நீங்குதலன்றோ ஸுகமாவது : விஷயங்களைப்பற்றிய ஆசை(ஸுகம்) அன்று ; அது துன்பமேயன்றோ. ஆசையுள்ளவிடத்து ஸுகத்தின் நாற்றமாத்திரமும் உண்டாகாது என்பது பொருள். (௬௬)

உறுதியான ஞானத்தைத் தருவது, இந்திரியஅடக்கம்.

ஒருநிலைப்படாதவனுக்கு ஏன் ஞானம் உண்டாவதில்லை என்பது ?— (அதற்கு விடை) கூறப்படுகின்றது :

௬௭. ஏனெனில், எந்த மனமானது (விஷயங்களில்) திரிகின்ற இந்திரியங்களைப் பின்தொடர்கின்றதோ, அது, ஜலத்திலே கப்பலைக் காற்று (அடித்துக்கொண்டுபோவது)போல, இவனுடைய அறிவைக் கவர்ந்துகொண்டுபோகின்றது.

ஏனெனில், தம்தம் விஷயங்களிற்செல்லுகின்ற இந்திரியங்களை எந்த மனம் பின்பற்றுகின்றதோ அது, (அதாவது -) இந்திரியவிஷயங்களை ஆராய்ந்துகொண்டுசென்ற மனமானது ஆத்மாஅநாத்மாக்களின் ஆராய்ச்சியால் வருவதான இந்த யதியின் அறிவை அழிக்கின்றது.—எப்படி ?—காற்றானது ஜலத்திலே செல்லப்புகுந்த கப்பற்காரர்களுடைய வழியினின்றும் கப்பலை விலக்கி, தப்புவழியிலே செலுத்துகின்றது ; அதுபோல, மனமானது, ஆத்மாவைப்பற்றிய அறிவைக் கவர்ந்து, விஷயங்களை நோக்கும்படி செய்கின்றது. (௬௭)

"புத்திசாலியான" (உ - ௬௦) என்றுகூறிய விஷயத்திற்குப் பலவாறாகப் பொருத்தத்தைக் கூறிப் பின்பு அதேவிஷயத்தை நிரூபித்து முடிக்கிறார் :

௬௮. ஆதலால், உயர்தோளா ! எவனுடைய இந்திரியங்கள் இந்திரியவிஷயங்களினின்று முழுதும் அடக்கப்பட்டனவோ, அவனுடைய ஞானம் நிலைத்தது.

इन्द्रियाणां प्रवृत्तौ दोषः उपपादितः यस्मात् तस्मात् यस्य हे महाबाहो निगृहीतानि सर्वशः सर्वप्रकारैः मानसादिभेदैः इन्द्रियाणि इन्द्रियार्थेभ्यः शब्दादिभ्यः तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ६८ ॥

योऽयं लौकिको वैदिकश्च व्यवहारः स उत्पन्नविवेकज्ञानस्य स्थितप्रज्ञस्य अविद्याकार्यत्वात् अविद्यानिवृत्तौ निवर्तते, अविद्यायाश्च विद्याविरोधात् निवृत्तिः, इत्येतमर्थं स्फुटीकुर्वन्नाह—

६९. या निशा सर्वभूतानां तस्यां जागर्ति संयमी ।
यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः ॥

या निशा रात्रिः सर्वपदार्थानाम् अविवेककरी तमःस्वभावत्वात् सर्वभूतानां सर्वेषां भूतानाम्। किं तत्? परमार्थतत्त्वं स्थितप्रज्ञस्य विषयः। यथा नक्तंचराणाम् अहरेव सत् अन्येषां निशा भवति, तद्वत् नक्तंचरस्थानीयानाम् अज्ञानिनां सर्वभूतानां निशा इव निशा परमार्थतत्त्वम्, अगोचरत्वात् अतद्बुद्धीनाम्। तस्यां परमार्थतत्त्वलक्षणायाम् अज्ञाननिद्रायाः प्रबुद्धो जागर्ति संयमी संयमवान्, जितेन्द्रि-

---

ஏதனால், இந்திரியங்கள் (விஷயங்களிற்)செல்வதனால் (வரும்) தீங்கு உணர்த்தப்பட்டதோ, அதனால், மாநஸம் முதலிய பலவகையாலும் [மனமொழிமெய்களால்] எந்த யதியினுடைய இந்திரியங்கள் ஓசைமுதலிய விஷயங்களினின்றும் அடக்கப்பட்டனவோ, அவனுடைய ஞானம் நிலைத்தது. (௬௮)

(ஸூ) ஜீவன்முக்தனுக்கு உலகம் கனவுதான்.

"லௌகிகமாகவும் வைதிகமாகவுமுள்ள இந்த வ்யவஹாரம் ஏதுவோ, அது, அஞ்ஞானத்தின் கார்யமாதலால், விவேகபுத்தி பிறந்து ஞானம் நிலைத்தவனுக்கு அஞ்ஞானம் நீங்கியஉடனே நீங்கிவிடுகின்றது. அஞ்ஞானம் ஞானத்தின் விரோதத்தாலும் [அதன்முன் நிற்காததலாலும்] நீங்குகின்றது" என்ற இவ்விஷயத்தைத் தெளியச்செய்பவராய்(ப் பகவான்) அருளிச்செய்கிறார் :

௬௯. எது பிராணிகட்கெல்லாம் இரவோ, அதில், அடக்கமுள்ளவன் விழித்திருக்கிறான். எதில் பிராணிகள் விழித்திருக்கின்றனவோ, அது, (உண்மையைக்) காணும் முனிவனுக்கு இரவு.

எது தாமஸத்தன்மையையுடைமையால் ஸகலபிராணிகட்கும் ஒவ்வொரு பொருளைப்பற்றியும் வெவ்வேறாகப் பகுத்தறியமுடியாமையைச் செய்வதான இரவோ, அது யாது?—ஞானம்நிலைத்தவனுக்கு எட்டுவதான பரமார்த்தஉண்மை. இரவில் திரிவன(வாகிய கோட்டான்முதலிய)வற்றிற்குப் பகலாகவேஇருப்பது, (காக்கை முதலிய)மற்றையவற்றிற்கு இரவாகவே எப்படி ஆகின்றதோ, அப்படியே பரம்பொருளின் உண்மையானது இரவில் திரிவனவற்றை ஒத்த அஞ்ஞானிகளான ஸகல பிராணிகட்கும் இரவுபோன்றுள்ளமையால் இரவாகவே இருக்கின்றது; அதில் அறிவில்லாதவர்க்கு (அது) எட்டாததலின். அடக்கமுடையவனாய் இந்திரியங்களைஜயித்த

யோகீ து ப்ரபுத்த:। யஸ்யாம் க்ராஹ்யக்ராஹகபேதலக்ஷணாயாம் அவித்யாநிசாயாம் ப்ரஸுப்தாநி ஏவ பூதாநி ஜாக்ரதி இதி உச்யந்தே, யஸ்யாம் நிசாயாம் ப்ரஸுப்தா இவ ஸ்வப்நத்ருச: ஸா நிசா அவித்யாரூபத்வாத் பரமார்த்ததத்த்வம் பச்யத: முநே: இதி ॥

அத: கர்மாணி அவித்யாவஸ்தாயாமேவ சோத்யந்தே, ந வித்யாவஸ்தாயாம். வித்யாயாம் ஹி ஸத்யாம் உதிதே ஸவிதரி சார்வரமிவ தம: ப்ரணாசம் உபகச்சதி அவித்யா। ப்ராக் வித்யோத்பத்தே: அவித்யா ப்ரமாணபுத்த்யா க்ருஹ்யமாணா க்ரியாகாரகபலபேதரூபா ஸதீ ஸர்வகர்மஹேதுத்வம் ப்ரதிபத்யதே। ந அப்ரமாணபுத்த்யா க்ருஹ்யமாணாயா: கர்மஹேதுத்வோபபத்தி:, "ப்ரமாணபூதேந வேதேந மம சோதிதம் கர்தவ்யம் கர்ம" இதி ஹி கர்மணி கர்தா ப்ரவர்ததே "ந அவித்யாமாத்ரம் இதம் ஸர்வம் நிசா இவ" இதி। யஸ்ய புந: "நிசா இவ அவித்யாமாத்ரம் இதம் ஸர்வம் பேதஜாதம்" இதி ஜ்ஞாநம், தஸ்ய ஆத்மஜ்ஞஸ்ய ஸர்வகர்மஸம்ந்யாஸ ஏவ அதிகாரோ ந ப்ரவ்ருத்தௌ। ததா ச தர்சயிஷ்யதி— 'தத்புத்தயஸ்ததாத்மாந:' இத்யாதிநா ஜ்ஞாநநிஷ்டாயாமேவ தஸ்ய அதிகாரம் ॥

(ஞான)யோகியானவன், அஜ்ஞானஉறக்கம் தெளிந்து அந்தப் பரமார்த்தஉண்மையிலே விழித்துக்கொண்டிருக்கிறான். உணரப்படுவதும் உணர்வதுமான பேதமாகிய எந்த அஜ்ஞானஇரவிலே உறங்கிக்கொண்டேயிருக்கும் பிராணிகள் விழித்திருக்கின்றன என்று கூறப்படுகின்றனவோ, எந்த இரவிலே (அவை) உறங்கினவை போலக் கனவுகாண்கின்றனவோ, அது அஜ்ஞானவடிவ மாதலால், பரமார்த்தஉண்மையைக் காணும் முனிவனுக்கு இரவென்பதாம்.

கர்மம் ஞானிக்கு அன்று.

ஆகவே, அஜ்ஞானநிலையில்தான் கர்மங்கள் விதிக்கப்படுகின்றன; ஞானநிலையில் அல்ல. சூரியன் உதிக்க இரவின் இருள் (கெடுமாறு)போல, ஞானமுண்டாக அஜ்ஞானம் முழுவதும் நாசமடைகின்றதன்றோ. ஞானம் உண்டாவதற்குமுன் அஜ்ஞானமானது, செய்கையும் செய்பவனும் பயனுமாகிய பேதவடிவமாய்நின்று, ப்ரமாணபுத்தியால் கிரகிக்கப்பட்டு [அந்தப் பேதபுத்தி அஜ்ஞானநிலைமையிலே வாஸ்தவமாய்த் தோற்றுதலால்] ஸகலகர்மத்திற்கும் காரணமாதலைப் பெறுகி "(இந்தப் பேதபுத்தி) ப்ரமாண மன்று" எனக் கொள்ளப்படும் (அந்த அஜ்ஞானமானது) கர்மத்திற்குக் காரணமாதல் பொருந்தாது. "ப்ர[illegible] மாயுள்ள வேதத்தினால் எனக்கு விதிக்கப்பட்ட கர்மத்தைச் செய்யவேண்டும்" [illegible] நினைத்தன்றோ செய்பவன் செய்கையில் தலைப்படுகிறான். "இதெல்லாம் இரவுபோல அஜ்ஞானமேதான்" என்று(நினைத்து) அன்று(செய்பவன் செய்கையில் தலைப்படுவது). "இந்தப் பேதக்கூட்ட(மாகிய உலகத்தோற்ற)மெல்லாம் இரவுபோல அஜ்ஞானமே தான்" என்னும் ஞானம் எவனுக்கோ, அந்த ஆத்மஞானிக்கு ஸகலகர்மங்களையும் துறத்தலிலேதான் அதிகாரம்; கர்மத்தைச் செய்வதில் அன்று. அவ்வண்ணமே (பகவான்)"அதிலே புத்தியையுடையவராய்" (ரு - கள) என்பதுமுதலாக ஞானநிஷ்டையிலேயே அவனுக்கு அதிகாரத்தைக் காட்டுவர்.

𑌤𑌥𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌕𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌭𑌾𑌵𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨, 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 । 𑌨 𑌹𑌿 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌕𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑌾, 𑌆𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌵 । 𑌤𑌦𑌨𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 । 𑌨 𑌹𑌿 𑌆𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌧𑌿𑌗𑌮𑍇 𑌸𑌤𑌿 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌃 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿 । 𑌪𑍍𑌰𑌮𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑌿 𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂; 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌯𑌦𑍇𑌵 𑌚 𑌅𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍀𑌭𑌵𑌤𑌿, 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑌿𑌵 𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑍇 । 𑌲𑍋𑌕𑍇 𑌚 𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌧𑌿𑌗𑌮𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌾𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌸𑍍𑌯 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌨 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌅𑌧𑌿𑌕𑌾𑌰 𑌇𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 ॥ ௬௯ ॥

𑌵𑌿𑌦𑍁𑌷𑌃 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍈𑌷𑌣𑌸𑍍𑌯 𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌯𑌤𑍇𑌃 𑌏𑌵 𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌨 𑌤𑍁 𑌅𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃 𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑌿𑌨𑌃 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌮𑌰𑍍𑌥𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍 𑌆𑌹 —

௭௦. 𑌆𑌪𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌮𑌚𑌲𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌮𑌾𑌪𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌯𑌦𑍍𑌵𑌤𑍍 ।
𑌤𑌦𑍍𑌵𑌤𑍍𑌕𑌾𑌮𑌾 𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨 𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑍀 ॥

(ஆக்ஷேபம்) :—(ஞானநிஷ்டையை) மேற்கொள்ளும்படி செய்கிற விதி இல்லாதிருந்தால், அதையும் மேற்கொள்ளுதல் கூடாதெனின்,—

(ஸமாதானம்) :—அப்படியன்று ; ஆத்மஞானமென்பது தன் ஆத்மாவைப் பற்றிய தாதலின். தன்னைத் தன் ஆத்மாவினிடத்துச் செல்லும்படி செய்கிற விதி வேண்டுவதில்லையன்றோ ; (தான்) ஆத்மாவேயாதலாலும், ப்ரமாணங்களெல்லாம் ப்ரமாணமாயிருத்தலென்பது அதுவரையிலு மாதலாலுமென்க [ப்ரமாணங்களெல்லாம் உண்மையாயிருத்தலானது, ஆத்மஞானம் உண்டாகிறவரையிலும்தான் ; பின்பு அவை, உண்மையாயிருக்கமாட்டா]. ஆத்மா இன்னதென்று கண்டறிந்தவிடத்துப் பின்பு (இது)ப்ரமாணம் [அறிதற்கான கருவி],(இது) ப்ரமேயம் [அறியப்படும் பொருள்] என,(பேதபுத்தியினுல் வரக்கூடிய) வழக்கு நிகழாதன்றே. ஏனெனில், முடிவான ப்ரமாணமா(கிய வேதமா)னது ப்ரமாதாவாயிருத்தலை [ஒருபொருளை அறிதற்குக் கர்த்தாவாகின்றதென்பதை]ஆத்மாவுக்கு நீக்குகின்றது. (அப்படி) மறுக்குமளவிலேயே, கனுக்காலத்து அறிவு விழிப்புநிலையிலே (ப்ரமாணமாகாதவாறு)போல (அந்த வேதமும்) ப்ரமாணமாவதில்லை. லோகத்திலேயும் ஒரு பொருளை (ஒருவன் இன்னதென்று சரியாய்) அறிந்தவிடத்து,ப்ரமாணமானது (மறுபடியும் அவனை, அதை அறியப்) புகும்படி செய்வதைக் காணுமையின். ஆகவே, 'ஆத்மாவை அறிபவனுக்குக் கர்மத்தில் அதிகாரமில்லை' என்பது பெறப்பட்டது. (௬௯)

(எ) தனது அடக்கமும், ஆசையை அறுத்தலும்.

சயை ஒழித்தவனுய் ஞானம் நிலைபெற்ற ஞானியான யதிக்குத்தான் முக்
த்தைத்) துறக்காமலும், கர்மத்தை விரும்பியுமுள்ளவனுக்கு
விஷயத்தைத் திருஷ்டாந்தத்தால் உணர்த்த (மீண்டும்) அருளிச்

**எப்புறமும் நிரம்பியதாய்(த் தன்) நிலைமாருதுநிற்கும் ஸமுத்
ங்கள் எவ்வாறு புகுகின்றனவோ, அவ்வாறே ஆசைகளெல்
னவோ, அவன் சாந்தியை அடைகிறுன்; காமத்தை விரும்புகிற
ு)இல்லை.**

ஆபூர்யமாணம் அத்பி: அசலப்ரதிஷ்டம் அசலதயா ப்ரதிஷ்டா அவஸ்திதி: யஸ்ய தம் அசலப்ரதிஷ்டம் ஸமுத்ரம் ஆப: ஸர்வதோ கதா: ப்ரவிஶந்தி ஸ்வாத்மஸ்தம் அவிக்ரியமேவ ஸந்தம் யத்வத் தத்வத் காமா: விஷயஸந்நிதாவபி ஸர்வத இச்சாவிஶேஷா: யம் புருஷம், ஸமுத்ரமிவ ஆப:, அவிகுர்வந்த: ப்ரவிஶந்தி ஸர்வே ஆத்மந்யேவ ப்ரலீயந்தே ந ஸ்வாத்மவஶம் குர்வந்தி ஸ: ஶாந்திம் மோக்ஷமாப்நோதி । ந இதர: காமகாமீ காம்யந்த இதி காமா: விஷயா: தாந் காமயிதும் ஶீலம் யஸ்ய ஸ: காமகாமீ । ஸ ந ப்ராப்நோதி இத்யர்த: ॥ ௭௦ ॥

யஸ்மாத் ஏவம் தஸ்மாத்—

௭௧. விஹாய காமாந் ய: ஸர்வாந் புமாம்ஶ்சரதி நி:ஸ்ப்ருஹ: ।
நிர்மமோ நிரஹங்கார: ஸ ஶாந்திமதிகச்சதி ॥

விஹாய பரித்யஜ்ய காமாந் ய: ஸம்ந்யாஸீ புமாந் ஸர்வாந் அஶேஷத: சரதி ஜீவநமாத்ரசேஷ்டாஶேஷ: பர்யடதி இத்யர்த: । நி:ஸ்ப்ருஹ: ஶரீரஜீவநமாத்ரேऽபி நிர்கதா ஸ்ப்ருஹா யஸ்ய ஸ: நி:ஸ்ப்ருஹ: ஸந் நிர்மம: ஶரீரஜீவநமாத்ராக்ஷிப்தபரிக்ரஹேऽபி ‘மம இதம்’ இதி அபிநிவேஶவர்ஜித: நிரஹங்கார: வித்யாவத்த்வாதிநிமித்தாத்மஸம்பாவநாரஹித: இத்யேதத் । ஸ ஏவம்பூத: ஸ்திதப்ரஜ்ஞ: ப்ரஹ்மவித் ஶாந்திம் ஸர்வஸம்ஸாரது:கோபரமலக்ஷணாம் நிர்வாணாக்யாம் அதிகச்சதி ப்ராப்நோதி ப்ரஹ்மபூத: பவதி இத்யர்த: ॥ ௭௧ ॥

ஜலங்களால் எப்புறமும் நிரம்பியதாய், மாறுத நிலையுள்ளதாய், வேறுபாடில்லாமலே (ஒரேதன்மையாகத்) தன் நிலையிலே நிற்பதான ஸமுத்திரத்தை எங்குமுள்ள ஜலங்கள் எவ்வாறு புகுகின்றனவோ, அவ்வாறே—(அந்த) ஜலங்கள் ஸமுத்திரத்தைப் புகுமாறுபோல—பலவகைப்பட்ட ஆசைகளெல்லாம் எந்த முனிவனை விஷயங்களின் முன்னிலையிலும் விகாரப்படுத்தாமல் புகுகின்றனவோ (அதாவது -) எந்த முனியைத் தம் வசமாகச் செய்யமுடியாது, ஆத்மாவினிடத்தேயே ஒடுங்குகின்றனவோ, அவன் சாந்தியை = முக்தியைப் பெறுகிறுன். விஷயங்களை விரும்பும் தன்மையனை மற்றையவன் அன்று ; அவன் (மோக்ஷத்தைப்) பெறுவதில்லை என்று பொருள். (௭௦)

இப்படியிருத்தலின்,

௭௧. எந்தப் புருஷன் ஸகலகர்மங்களையும் விட்டு, பற்றற்றவனாய், அஹங்கார மமகாரங்கள் இல்லாதவனாய்த் திரிகின்றுனே, அவன் சாந்தியைப் பெறுகிறுன்.

எந்தத் துறவியான புருஷன் கர்மங்களை(ச் சிறிதும்) மிச்சமில்லாது முழுதும் ஒழித்துத் திரிகின்றுனே அதாவது - ஜீவித்திருப்பதற்குமாத்திரம்(வேண்டிய) செய்கையை மிச்சம் வைத்துக்கொண்டவனாகத் திரிகின்றுனே, பற்றற்றவனாய் = கேவலம் சரீரம்ஜீவித்திருப்பதிலுங்கூடப் பற்று நீங்கியவனாய், மமகாரம் இல்லாதவனாய் = சரீரம் ஜீவித்திருப்பதற்குமாத்திரம் வேண்டிய உடைமையிலும் “ இது எனது ” என்னும் பிடிப்பில்லாதவனாய், அஹங்காரம் இல்லாதவனாய் = கல்வியுடைமை முதலியவற்றுல் உண்டாகும் (“நான்” எனத்) தன்னையே (தான்) மதித்தல் இல்லாதவனாய் இருக்கின்றுனே, அவன் இவ்வாறிருப்பவனாய், ஞானம் நிலைத்தவனாய், ப்ரஹ்மத்தை அறிந்தவனாய், ஸம்ஸாரத்துன்பமெல்லாம் ஒழிந்திடுதலாகிய நிர்வாணமென்னும் பெயருடைய சாந்தியை [மோக்ஷத்தை]ப் பெறுகிறுன் : ப்ரஹ்மமாகவே ஆகிறுன் என்பது பொருள். [நிர்வாணம் - பேரின்பம்.]
(௭௧)

𑌸𑌾 𑌏𑌷𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌸𑍍𑌤𑍂𑌯𑌤𑍇—

௭௨. 𑌏𑌷𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑍈𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌵𑌿𑌮𑍁𑌹𑍍𑌯𑌤𑌿 ।
𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾𑌽𑌸𑍍𑌯𑌾𑌮𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇𑌽𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑍇 𑌶𑌤𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌵𑍈𑌯𑌾𑌸𑌿𑌕𑍍𑌯𑌾𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌪𑌰𑍍𑌵𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍁 𑌉𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌸𑍈𑌷𑌾 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌭𑌵𑌾 𑌇𑌯𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍂𑌪𑍇𑌣𑍈𑌵 𑌅𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 । 𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨 𑌏𑌨𑌾𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌵𑌿𑌮𑍁𑌹𑍍𑌯𑌤𑌿 𑌨 𑌮𑍋𑌹𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 । 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾 𑌅𑌸𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍍𑌯𑌾𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌾𑌯𑌾𑌮𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇𑌽𑌪𑌿 𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑍇 𑌵𑌯𑌸𑍍𑌯𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌿𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 । 𑌕𑌿𑌮𑍁 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌾𑌦𑍇𑌵 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌂 𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵 𑌅𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑍀𑌤𑌿 ॥ ௭௨ ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

ஞானமே ப்ரஹ்மாநந்தத்தைத் தருவது.

ஆதலால், இந்த நிஷ்டையானது பாராட்டப்படுகின்றது :

௭௨. *பார்த்த! இது ப்ரஹ்மத்தைப்பற்றிய நிலை. இதனை அடைந்து (ஒருவனும்) மயங்கமாட்டான். (ஒருவன்) கடைசிக்காலத்திலும் [முதுமைப்பருவத்திலும்] இதிலே நின்று ப்ரஹ்மாநந்தத்தை அடைகிறான்.*

ஸ்ரீ மகாபாரதத்திலே நூறாயிரக்கிரந்த ஸம்ஹிதையாய், வ்யாஸர் அருளிச் செய்ததாய், பீஷ்மபர்வத்திலே ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துகளாக, ப்ரஹ்ம வித்யையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனஸம்வாதத்திலே ஸாங்க்யயோகம் என்னும் இரண்டாம் அத்தியாயம் முற்றும்.

கீழ்க்கூறிய இது, ப்ரஹ்மத்தைப்பற்றிய நிலை : எல்லாவற்றையும் துறந்து ப்ரஹ்மஸ்வரூபமாகவே நிற்றலென்பது. ஏ ! பார்த்த ! இந்த நிலையைப்பெற்று (ஒருவனும்) மயக்கத்தை அடையமாட்டான். (ஒருவன்) ப்ரஹ்மத்தைப்பற்றிய கீழ்க்கூறிய இந்தநிலையில் கடைசிவயசில் இருந்தாலும், ப்ரஹ்மாநந்தமாகிய மோக்ஷத்தை அடைகிறான் ; (எனவே,) எவன் ப்ரஹ்மசர்யத்திலிருந்தே துறந்து, உயிர்வாழ்க்கை முழுவதும் ப்ரஹ்மத்திலேயே நிற்கின்றானோ, அவன் ப்ரஹ்மாநந்தத்தைப்பெறுகிறான் என்ற (விஷயத்தில்) என்ன சொல்லவேண்டுவது ? (௭௨)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் இரண்டாவது அத்தியாயம் முற்றும்.

𑌅𑌥

𑌤𑍃𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌃 ॥

𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌿𑌷𑌯𑌭𑍂𑌤𑍇 𑌦𑍍𑌵𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑍀 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑍇, 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌯𑍋𑌗𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌇𑌤𑌿 𑌚 । 𑌤𑌤𑍍𑌰 "𑌪𑍍𑌰𑌜𑌹𑌾𑌤𑌿 𑌯𑌦𑌾 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍" 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌲𑍋𑌕𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑍇𑌃 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌉𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌠𑌤𑌯𑍈𑌵 𑌚 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌤𑌾 𑌉𑌕𑍍𑌤𑌾 '𑌏𑌷𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃' 𑌇𑌤𑌿 । 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌾𑌯 𑌚 '𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍇...... 𑌮𑌾 𑌤𑍇 𑌸𑌙𑍍𑌗𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌿' 𑌇𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑍈𑌵 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌉𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 𑌯𑍋𑌗𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯, 𑌨 𑌤𑌤 𑌏𑌵 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌂 𑌉𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 । 𑌤𑌦𑍇𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌵𑍍𑌯𑌾𑌕𑍁𑌲𑍀𑌕𑍃𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌃 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌕𑌥𑌂 𑌹𑍍𑌯𑌤𑍍𑌰 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌰𑍍𑌥𑌿𑌨𑍇 𑌯𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌸𑌾𑌧𑌨𑌂 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌮𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍇𑌕𑌾𑌨𑌰𑍍𑌥𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌪𑌾𑌰𑌂𑌪𑌰𑍍𑌯𑍇𑌣𑌾𑌪𑌿 𑌅𑌨𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌶𑍍𑌰𑍇𑌯𑌃𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌕𑍇 𑌨𑌿𑌯𑍁𑌙𑍍𑌕𑍍𑌷𑍇 𑌇𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌪𑌰𑍍𑌯𑌨𑍁𑌯𑍋𑌗𑌃 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯, 𑌤𑌦𑌨𑍁𑌰𑍂𑌪𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃 '𑌜𑍍𑌯𑌾𑌯𑌸𑍀 𑌚𑍇𑌤𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌃, 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌾𑌪𑌾𑌕𑌰𑌣𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌚 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌯𑍋𑌗𑌵𑌿𑌭𑌾𑌗𑌵𑌿𑌷𑌯𑍇 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 ॥

மூன்றும் அத்தியாயம் : கர்மயோகம்.

அர்ஜுனனுடைய மனமலைப்பு.

ப்ரவிருத்தி நிவிருத்திகளைப்பற்றியவையான (கீதா)சாஸ்திரத்தின் இரண்டு கொள்கைகள் பகவானால் (இரண்டாம் அத்தியாயத்தில்) ஸாங்க்யவிஷயத்திலே புத்தி எனவும், யோகவிஷயத்திலே புத்தி எனவும் உபதேசிக்கப்பட்டன. அவற்றுள் "எப்பொழுது" (௨ - ௫௫) என்பதுமுதல் அத்தியாயம் முடிகிறவரையிலும், ஸாங்க்யபுத்தியைச் சார்ந்தவர்க்குத் துறவு அவச்யம் வேண்டுமெனக் கூறி, அந்த நிஷ்டையை யுடைமையினாலேயே புருஷார்த்தங் கைகூடுதலும் "இது, ப்ரஹ்மத்தைப்பற்றிய நிலை" (௨ - ௭௨) எனக் கூறப்பட்டது. அர்ஜுனனுக்கும் (பகவான்) "கர்மத்திலே தான் உனக்கு அதிகாரம்......கர்மத்தைச் செய்யாமையிலே உனக்குப் பிரியம் இருக்கக் கூடாது" (௨-௪௭)என யோகபுத்தியைப்பற்றிக் கர்மத்தையே செய்யவேண்டுமெனக் கூறினர்; (ஆனால்,) அதிலிருந்தே நன்மை[முக்தி] பெறுதலைக் கூறவில்லை. அதையும் [முக்திக்கு நேரே ஸாதநமான ஞானத்தைப் பிறர்க்கு எடுத்துக்காட்டியதையும்], இதையும்[அதற்குவிரோதமான கர்மத்தை அநுஷ்டிக்கும்படி தனக்குச்சொன்னதையும்] பார்த்து அறிவுதிகைத்த அர்ஜுனன் (௩ - ௧,௨ - ஆம் சுலோகங்களைக்) கூறலா

'எது நன்மை[முக்தி]யைப் பெறுதற்கு நேரான ஸாதநமோ,(அந்த) ஸா புத்திநிஷ்டையை, நன்மையைநாடும் பக்த(னான வேறொருவ)னுக்கு உப (நன்கு)தெரிகின்ற பலதீங்குகளோடுகூடியதும், பரம்பரையாகவாயினும் கைகூடுதலென்னும்பயன்(இதே ஜந்மத்தில் என்பது)நிச்சயமில்லாததுமான (பகவான்) எப்படி என்னை ஏவக்கூடும்?' என்று அர்ஜுனன் மனத் கொண்டது ஏற்கும். "கர்மயோகமானது" (௩ - ௧) என்பதுமுதலான வி ற்குஏற்ப உள்ளது. பின்னும், சாஸ்திரமானது கீழ்க்கூறிய (ஞானம் கர் இப்)பிரிவை(த் தான் கூறும்) விஷயமாகக்கொண்டிருந்தால்(தான், அர்ஜுன வினாவை (ஏற்றுக்கொள்ளாது)தள்ளிவிடுகின்ற பகவானுடைய திருவாக்கும் பொருத்தமாகும்.

𑌕𑍇𑌚𑌿𑌤𑍍𑌤𑍁—𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌾𑌰𑍍𑌥𑌮𑌨𑍍𑌯𑌥𑌾 𑌕𑌲𑍍𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍂𑌲𑌂 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌚𑌨𑌂 𑌵𑌰𑍍𑌣𑌯𑌨𑍍𑌤𑌿, 𑌯𑌥𑌾 𑌚 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍇 𑌗𑍀𑌤𑌾𑌰𑍍𑌥𑌃 𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑌃 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍂𑌲𑌂 𑌚 𑌇𑌹 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌚𑌨𑌯𑍋𑌃 𑌅𑌰𑍍𑌥𑌂 𑌨𑌿𑌰𑍂𑌪𑌯𑌨𑍍𑌤𑌿। 𑌕𑌥𑌮𑍍? 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍇 𑌤𑌾𑌵𑌤𑍍—𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌾𑌶𑍍𑌰𑌮𑌿𑌣𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌃 𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑌯𑌃 𑌗𑍀𑌤𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 𑌅𑌰𑍍𑌥 𑌇𑌤𑌿 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌵𑌿𑌶𑍇𑌷𑌿𑌤𑌂 𑌚 𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌚𑍋𑌦𑌿𑌤𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌕𑍇𑌵𑌲𑌾𑌦𑍇𑌵 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑍇𑌕𑌾𑌨𑍍𑌤𑍇𑌨𑍈𑌵 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌮𑌿𑌤𑌿। 𑌇𑌹 𑌤𑍁 𑌆𑌶𑍍𑌰𑌮𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌾 𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌚𑍋𑌦𑌿𑌤𑌾𑌨𑌾𑌮𑍇𑌵 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗 𑌉𑌕𑍍𑌤𑌃। 𑌤𑌤𑍍𑌕𑌥𑌮𑍀𑌦𑍃𑌶𑌂 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑌰𑍍𑌥𑌮𑌰𑍍𑌜𑍁𑌨𑌾𑌯 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌦𑍍𑌭𑌗𑌵𑌾𑌨𑍍, 𑌶𑍍𑌰𑍋𑌤𑌾 𑌵𑌾 𑌕𑌥𑌂 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑌰𑍍𑌥𑌮𑌵𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍? ॥

𑌤𑌤𑍍𑌰 𑌏𑌤𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍—𑌗𑍃𑌹𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌮𑍇𑌵 𑌶𑍍𑌰𑍌𑌤𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌨 𑌕𑍇𑌵𑌲𑌾𑌦𑍇𑌵 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤𑍇, 𑌨 𑌤𑍁 𑌆𑌶𑍍𑌰𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌣𑌾𑌮𑌿𑌤𑌿। 𑌏𑌤𑌦𑌪𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑍇𑌵। 𑌕𑌥𑌮𑍍? 𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌮𑌿𑌣𑌾𑌂

ஞானமும் கர்மமும் ஒருங்கு சேரப்பெறுமை.

தே । ஶாஸ்த்ரார்தே ப்ரவ்ருத்த: பூர்வமேவ ராகத்வேஷயோ: வஶம் நாகச்சேத் । யா ஹி புருஷஸ்ய ப்ரக்ருதி: ஸா ராகத்வேஷபுர:ஸரைவ ஸ்வகார்யே புருஷம் ப்ரவர்தயதி ; ததா ஸ்வதர்மபரித்யாக: பரதர்மாநுஷ்டாநம் ச பவதி । யதா புந: ராகத்வேஷௌ தத்ப்ரதிபக்ஷேண நியமயதி ததா ஶாஸ்த்ரத்ருஷ்டிரேவ புருஷோ பவதி, ந ப்ரக்ருதிவஶ: । தஸ்மாத் தயோ: ராகத்வேஷயோ: வஶம் ந ஆகச்சேத், யத: தௌ ஹி அஸ்ய புருஷஸ்ய பரிபந்திநௌ ஶ்ரேயோமார்கஸ்ய விக்நகர்தாரௌ தஸ்கரௌ இவ பதி ॥ ௩௪ ॥

தத்ர ராகத்வேஷப்ரயுக்த: மந்யதே ஶாஸ்த்ரார்தமப்யந்யதா "பரதர்மோऽபி தர்மத்வாத் அநுஷ்டேய ஏவ" இதி ; ததஸத் —

௩௫. ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் ।
ஸ்வதர்மே நிதநம் ஶ்ரேய: பரதர்மோ பயாவஹ: ॥

ஶ்ரேயாந் ப்ரஶஸ்யதர: ஸ்வோ தர்ம: ஸ்வதர்ம: விகுணோऽபி விகதகுணோऽபி அநுஷ்டீயமாந: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் ஸாத்குண்யேந ஸம்பாதிதாதபி । ஸ்வதர்மே ஸ்திதஸ்ய நிதநம் மரணமபி ஶ்ரேய: பரதர்மே ஸ்திதஸ்ய ஜீவிதாத் । கஸ்மாத் ? பரதர்ம: பயாவஹ: நரகாதிலக்ஷணம் பயமாவஹதி இதி ॥ ௩௫ ॥

திரவிஷயத்தை மேற்கொண்டவன் முதலிலிருந்தே விருப்புவெறுப்புக்களுக்கு உட்படக்கூடாது. ஏனெனில், எது புருஷனுடைய ப்ரகிருதியோ, அது விருப்புவெறுப்புக்களை முன்னிட்டே தன் கார்யத்தில் (அப்)புருஷனைச் செலுத்துகின்றது; அப்பொழுது தன் தருமத்தைக் கைவிடுதலும் பிறர் தருமத்தைக் கைக்கொள்ளலும் உண்டாகின்றன; ஆனால், எப்பொழுது (ஒருவன்) விருப்புவெறுப்புக்களை அவற்றின் விரோதி (யான விவேகபுத்தி)யினால் தடுத்தாளுகின்றானோ, அப்பொழுது (அப்)புருஷன் சாஸ்திரத்தில் கருத்துள்ளவனாகவே ஆகின்றானேயன்றிப் பிரகிருதிக்கு வசமாவதில்லை. வழியில் திருடர்கள்போல, அவை [விருப்புவெறுப்புக்கள்] இப்புருஷனுக்கு நல்வழிக்கு இடையூறு செய்வனவாதலால், அவ்விருப்புவெறுப்புக்கட்கு வசமாகக்கூடாது. (சாஸ்திரீயமான விவேகபுத்தியினால், நல்லனவற்றை எண்ணிச்செய்தலும், தீயனவற்றை எண்ணித்தவிர்தலும் கூடும் என்பது, தேர்ந்த கருத்து.) (௩௪)

இனி, விருப்புவெறுப்புக்களால் தூண்டப்பட்டவன், "பிறருடைய தருமமும் தருமமாதலால் செய்யத்தக்கதுதான்" எனச் சாஸ்திரவிஷயத்தை வேறுவிதமாக[மாறுக]க் கொள்கிறான் ; அது சரியன்று :

௩௫. நன்கு அநுஷ்டிக்கப்பட்டதான பிறருடைய தருமத்தைக்காட்டிலும் குணமில்லாத[நன்கு அநுஷ்டிக்கப்படாத]தன் தருமம் மேலானது ; தன் தருமத்திலே சாதல் நல்லது ; பிறருடைய தருமம் அபாயத்தை விளைப்பது.

செவ்வையாக அநுஷ்டிக்கப்பட்டதான பிறருடைய தர்மத்தைக்காட்டிலும் சொந்த தருமமானது குறைவாக அநுஷ்டிக்கப்பட்டாலும் மேலானது. பிறருடைய தருமத்திலிருந்து வாழ்வதைக்காட்டிலும் சொந்த தருமத்திலிருந்து சாதலும் நல்லதாம்.—எதனால்?—பிறருடைய தருமமானது நரகம்முதலான அபாயத்தை விளைக்கின்றது என்பதனால் என்க. (௩௫)

யத்யபி கூ-நயமூலம் 'த்யாயதோ விஷயாந்' 'ராகத்வேஷௌ ஹ்யஸ்ய பரிபந்திநௌ' இதி ச உக்தம் ; விக்ஷிப்தம் அநவதாரிதம் ச யத் உக்தம் தத் ஸங்க்ஷிப்தம் நிஸ்சிதம் ச இதமேவ இதி ஜ்ஞாதுமிச்சந் அர்ஜுந உவாச, ஜ்ஞாதே ஹி தஸ்மிந் தது-ச்சேதாய யத்நம் குர்யாம் இதி—

அர்ஜுந உவாச ||

௩௬. அத கேந ப்ரயுக்தோऽயம் பாபம் சரதி பூருஷ: |
அநிச்சந்நபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித: ||

அத கேந ஹேதுபூதேந ப்ரயுக்த: ஸந் ராஜ்ஞா இவ ப்ருத்ய: அயம் பாபம் கர்ம சரதி ஆசரதி பூருஷ: புருஷ: ஸ்வயம் அநிச்சந் அபி ஹே வார்ஷ்ணேய வ்ருஷ்ணிகுலப்ரஸூத பலாத் இவ நியோஜித: ராஜ்ஞா இவ இதி உக்தோ த்ருஷ்டாந்த: || ௩௬ ||

ஸ்ருணு த்வம் தம் வைரிணம் ஸர்வாநர்தகரம் யம் த்வம் ப்ருச்சஸி இதி பகவாந் உவாச—

"ஐஸ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஸஸ: ஸ்ரிய: |
வைராக்யஸ்யாத மோக்ஷஸ்ய ஷண்ணாம் பக இதீரணா ||"

ஐஸ்வர்யாதிஷட்கம் யஸ்மிந் வாஸுதேவே நித்யம் அப்ரதிபத்தத்வேந ஸாமஸ்த்யேந ச வர்ததே—

மனிதனுக்கு ஆசை சத்துரு.

"விஷயங்களை" (உ - சுஉ)என்ற(சுலோகத்)திலும், "விருப்புவெறுப்புக்கள்" (௩ - ௩௪)என்ற (சுலோகத்)திலும் கெடுதிக்கு மூலம் கூறப்பட்டது. ஆயினும், பல இடங்களில் சிதறிக்கிடப்பதும், நன்றாகத் தெரியாமலிருப்பதுமான (கீழ்க்)கூறிய(விஷயத்)தை இதுதான் என்று சுருக்கமாகவும் தெளிவாகவும் அறியக்கருதி, "அதனை [கெடுதியின் மூலத்தை] அறிந்தாலன்றோ, அதனை அறுத்தற்கு முயற்சிசெய்வேன்" என்று அர்ஜுனன் கூறலானான் :

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

௩௬. **வார்ஷ்ணேய ! இனி, இப்புருஷன் இஷ்டமில்லாமலிருந்தாலும், வலிய ஏவப்பட்டவன்போல, எதனால் தூண்டப்பட்டுப் பாவத்தைச் செய்கிறான் ?**

தூண்டப்பட்டு - அரசனால் ஏவப்பட்ட வேலைக்காரன்போல. வார்ஷ்ணேயன் - வ்ருஷ்ணிகுலத்திற் பிறந்தவன். அரசனால் தூண்டப்பட்டவன்போல என்னும் திருஷ்டாந்தம் (இஷ்டமில்லாமலே தொழிலைச்செய்தற்குக்) கூறப்பட்டது. (௩௬)

"நீ எதனை(ப்பற்றி என்னை)க் கேட்கின்றனையோ, அதனை(அதாவது,) ஸகல அநர்த்தங்களையும் செய்கின்ற (அச்)சத்துருவை(க் கூறுகிறேன்) ; கேள் :" என்று பகவான் கூறலானார் :

ஐச்வர்யம்முதலிய ஆறும் எந்த வாஸுதேவனிடத்து எப்பொழுதும் தடையில்லாது முழுதும் இருக்கின்றனவோ, எவனுக்கு (ஜகத்தின்)உற்பத்தி முதலானவற்றைப்பற்றிய விசேஷஅறிவும் உள்ளதோ, அந்த வாஸுதேவனுக்குப் பகவான் என்று

"உத்பத்திம் ப்ரளயம் சைவ பூதாநாமாகதிம் கதிம் |
வேத்தி வித்யாமவித்யாம் ச ஸ வாச்யோ பகவாநிதி ||"

உத்பத்த்யாதிவிஷயம் ச விஜ்ஞாநம் யஸ்ய ஸ வாசுதேவ: வாச்ய: பகவாந் இதி—

ஸ்ரீபகவாநுவாச ||

௩௭. காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுணஸமுத்பவ: |
மஹாஶநோ மஹாபாப்மா வித்த்யேநமிஹ வைரிணம் ||

காம ஏஷ: ஸர்வலோகஶத்ரு: யந்நிமித்தா ஸர்வாநர்த்தப்ராப்தி: ப்ராணிநாம் | ஸ ஏஷ காம: ப்ரதிஹத: கேநசித் க்ரோதத்வேந பரிணமதே | அத: க்ரோத: அபி ஏஷ ஏவ | ரஜோகுணஸமுத்பவ: ரஜஶ்ச தத் குணஶ்ச ரஜோகுண: ஸ: ஸமுத்பவ: யஸ்ய ஸ: காம: ரஜோகுணஸமுத்பவ: | ரஜோகுணஸ்ய வா ஸமுத்பவ: ; காம: ஹி உத்பூத: ரஜ: ப்ரவர்தயந் புருஷம் ப்ரவர்தயதி; "த்ருஷ்ணயா ஹ்யஹம் காரித:" இதி து:கிதாநாம் ரஜ:கார்யே ஸேவாதௌ ப்ரவ்ருத்தாநாம் ப்ரலாப: ஶ்ரூயதே | மஹாஶந: மஹத் அஶநம் அஸ்ய இதி மஹாஶந: ; அத ஏவ மஹாபாப்மா | காமேந ஹி ப்ரேரித: ஜந்து: பாபம் கரோதி| அத: வித்தி ஏநம் காமம் இஹ ஸம்ஸாரே வைரிணம் || ௩௭ ||

பெயர். (அவ்வாறே,) "நிறைந்த ஐச்வர்யமும் [ஆளுந்தன்மையும்], வீர்யமும், புகழும், திருவும்[செல்வம், அழகு முதலாயினவும்], வைராக்கியமும், மோக்ஷமுமாகிய ஆறுக்கு 'பகம்' என்று பெயர்" (வி-சு-௫-௭௪), "பூதங்களுடைய உற்பத்தியையும் அழிவையும், வருதலையும், போதலையும், ஞானத்தையும், அஜ்ஞானத்தையும் அறிகிறவர் 'பகவான்' என்று சொல்லுதற்கு உரியவர்"(வி-சு-௫-௭௮) (என வருவனவற்றைக் காண்க).

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

௩௭. இது காமம் : இது(வே) கோபம் : (இதுவே) ரஜோகுணத்தினின்று உண்டாவது : பெருந்தீனியுடையது : மிகப்பொல்லாதது : நீ இங்கே இதனைச் சத்துருவாகத் தெரிந்துகொள்.

எது காரணமாகப் பிராணிகட்கு ஸகல அனர்த்தங்களும் வருகின்றனவோ? (அது,) உலகமனைத்திற்கும் சத்துருவான இக்காமமே(தான்). அத்தகைய இக்காமம், (எதொ)ஒருகாரணத்தால் தடுக்கப்பட்டுக் கோபமாக மாறுகின்றது. ஆதலால், கோபமும் இதுவே. காமம், ரஜஸ்என்னும் குணத்தினின்றுஉண்டாவது;அல்லது,(அது) ரஜோகுணம் உண்டாதற்குக் காரணம். ஏனெனில்,காமம் உண்டானவுடன் ரஜோகுணத்தைத் தலையெடுக்கச்செய்து ஒருவனை (ஒருகார்யத்திற்) செலுத்துகின்றது. ரஜோகுணத்தின் தொழிலான அடிமைத்தனம் முதலியவற்றை மேற்கொண்டு வருந்துகிறவர்கள் "ஆசையாலன்றோ நான் (அடிமைத்தொழிலைச்) செய்யும்படி பண்ணப்படுகிறேன்" என்று புலம்புதலைக் கேட்கிறோம். (காமம்) பெருந்தீனி யுடையது ; ஆதலால், மிகப்பொல்லாதது. பிராணியானது காமத்தினால் தூண்டப்பட்டன்றோ, பாவத்தைச் செய்கின்றது. ஆகவே, இந்த ஸம்ஸாரத்திலே இக்காமத்தைச் சத்துருவாகத் தெரிந்துகொள். (௩௭)

கதம் வைரீ? இதி த்ருஷ்டாந்தை: ப்ரத்யாயயதி—

௩௮. தூமேநாவ்ரியதே வஹ்நிர் யதாऽऽதர்ஶோ மலேந ச ।
யதோல்பேநாவ்ருதோ கர்பஸ் ததா தேநேதமாவ்ருதம் ॥

தூமேந ஸஹஜேந ஆவ்ரியதே வஹ்நி: ப்ரகாஶாத்மக: அப்ரகாஶாத்மகேந, யதா வா ஆதர்ஶோ மலேந ச, யதா உல்பேந ச ஜராயுணா கர்பவேஷ்டநேந ஆவ்ருத: ஆச்சாதித: கர்ப: ததா தேந இதம் ஆவ்ருதம் ॥ ௩௮ ॥

கிம் புந: தத் இதம் ஶப்தவாச்யம் யத் காமேந ஆவ்ருதம் இதி? உச்யதே—

௩௯. ஆவ்ருதம் ஜ்ஞாநமேதேந ஜ்ஞாநிநோ நித்யவைரிணா ।
காமரூபேண கௌந்தேய துஷ்பூரேணாநலேந ச ॥

ஆவ்ருதம் ஏதேந ஜ்ஞாநம் ஜ்ஞாநிந: நித்யவைரிணா, ஜ்ஞாநீ ஹி ஜாநாதி "அநேந அஹம் அநர்தே ப்ரயுக்த:" இதி । பூர்வமேவ துக்கீ ச பவதி நித்யமேவ । தேந அஸௌ ஜ்ஞாநிந: நித்யவைரீ, ந து மூர்கஸ்ய । ஸ ஹி காமம் த்ருஷ்ணாகாலே மித்ரமிவ பஶ்யந் தத்கார்யே துக்கே ப்ராப்தே ஜாநாதி "த்ருஷ்ணயா அஹம் துக்கித்வம் ஆபாதித:" இதி, ந பூர்வமேவ । அத: ஜ்ஞாநிந ஏவ நித்யவைரீ । கிம்ரூபேண? காமரூபேண காம: இச்சைவ

ஆசை, அறிவைச் சூழ்ந்துகொள்கின்றது.

'(அது) எவ்வாறு சத்துரு?' என்பதைத் திருஷ்டாந்தங்களால் மெய்ப்பிக்கிறார்:

௩௮. நெருப்புப் புகையாலும், கண்ணுடி அழுக்காலும் எவ்வாறு மூடப்படுகின்றனவோ, கருவானது பையினுல் எவ்வாறு மூடப்படுகின்றதோ, அவ்வாறு அதனுல் இது மூடப்படுகின்றது.

ஒளியாகிய தீயானது இருளாகிய உடன்பிறந்த புகையினுல் சூழப்படுவதுபோலவும், கண்ணுடி அழுக்கினுல் மறைக்கப்படுவதுபோலவும், கருவானது கர்ப்பப் பையினுல், மூடப்படுவதுபோலவும் அதனுல் இது மூடப்படுகின்றது. (௩௮)

ஆனுல், 'இது' என்ற சொல்லால் சொல்லப்படுவதும் காமத்தால் மூடப்பட்டிருப்பதுமாக எது உள்ளதோ, அது யாதென்பது ?—(விடை) கூறப்படுகின்றது :

௩௯. ஞானிக்கு எப்பொழுதும்சத்துருவும், (விஷயநுகர்ச்சியால்) நிரம்பாததும், (அதிலே) திருப்திவாராததுமான காமமாகிய இதனுல் அறிவு மூடுண்டுகிடக்கின்றது.

ஞானியானவன் "நான் இதனுல் கெடுதியிலே தூண்டப்பட்டிருக்கின்றேன்" என்று (அக்கெடுதி வருதற்கு) முந்தியே அறிகிறுன்; ஆதலால், எப்பொழுதுமே வருத்தப்படுகிறவனுகிறுன். ஆகவே, இது எப்பொழுதும் சத்துருவென்பது ஞானிக்கேயன்றி மூடனுக்கு அன்று. ஏனெனில், அவன் [மூடன்] (ஒரு விஷயத்தை) ஆசைப்பட்டு அநுபவிக்கும் ஸமயத்திலே காமத்தைத் தோழன்போலப் பார்ப்பவனுய் அதன் தொழிலாகிய துன்பம் வந்தவிடத்து "நான் ஆசையினுல் வருத்தப்படுகின்றவனுகச் செய்யப்பட்டேன்" என்று (பின்னுல்) அறிகிறுனேயன்றி முன்னமே (அறிகிறுன்) இல்லை. ஆகவே, (இது) ஞானிக்கே எப்பொழுதும் சத்துரு என்க.— எவ்

𑌰𑍂𑌪𑌂 𑌅𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌃 𑌤𑍇𑌨 𑌦𑍁𑌷𑍍𑌪𑍂𑌰𑍇𑌣 𑌦𑍁𑌃𑌖𑍇𑌨 𑌪𑍂𑌰𑌣𑌂 𑌅𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌦𑍁𑌷𑍍𑌪𑍂𑌰𑌃 𑌤𑍇𑌨 𑌅𑌨𑌲𑍇𑌨 𑌨 𑌅𑌸𑍍𑌯 𑌅𑌲𑌂 𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌅𑌨𑌲𑌃 𑌤𑍇𑌨 𑌚 ॥ ௩௯ ॥

𑌕𑌿𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌃 𑌪𑍁𑌨𑌃 𑌕𑌾𑌮𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌆𑌵𑌰𑌣𑌰𑍂𑌪𑍇𑌣 𑌵𑍈𑌰𑍀 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯? 𑌇𑌤𑌿 𑌅𑌪𑍇𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌮𑍍 𑌆𑌹, 𑌜𑍍𑌞𑌾𑌤𑍇 𑌹𑌿 𑌶𑌤𑍍𑌰𑍋𑌃 𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍇 𑌸𑍁𑌖𑍇𑌨 𑌶𑌤𑍍𑌰𑍁𑌨𑌿𑌬𑌰𑍍𑌹𑌣𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿—

௪௦. 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌮𑌨𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌸𑍍𑌯𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌏𑌤𑍈𑌰𑍍𑌵𑌿𑌮𑍋𑌹𑌯𑌤𑍍𑌯𑍇𑌷 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌦𑍇𑌹𑌿𑌨𑌮𑍍 ॥

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌮𑌨𑌃 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌚 𑌅𑌸𑍍𑌯 𑌕𑌾𑌮𑌸𑍍𑌯 𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑍍 𑌆𑌶𑍍𑌰𑌯𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌏𑌤𑍈𑌃 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌆𑌶𑍍𑌰𑌯𑍈𑌃 𑌵𑌿𑌮𑍋𑌹𑌯𑌤𑌿 𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌮𑍋𑌹𑌯𑌤𑌿 𑌏𑌷 𑌕𑌾𑌮𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 𑌆𑌵𑍃𑌤𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌦𑍇𑌹𑌿𑌨𑌂 𑌶𑌰𑍀𑌰𑌿𑌣𑌮𑍍 ॥ ௪௦ ॥

𑌯𑌤𑌃 𑌏𑌵𑌮𑍍—

௪௧. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑌾𑌦𑍌 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 ।
𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌜𑌹𑌿𑌹𑍍𑌯𑍇𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑍍𑌵𑌮𑍍 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌆𑌦𑍌 𑌪𑍍𑌰𑌥𑌮𑌮𑍇𑌵 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑌾𑌪𑌾𑌚𑌾𑌰𑌂 𑌕𑌾𑌮𑌂 𑌪𑍍𑌰𑌜𑌹𑌿𑌹𑌿 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜 𑌏𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨-

---

வடிவினல்?— (விஷய நுகர்ச்சியால் பூர்த்தியாக) நிரப்பமுடியாததும், (விஷய நுகர்ச்சி இவ்வளவு) போது மென்பது இல்லாததுமான விருப்பம் என்னும் வடிவுள்ள காமமென்ற ரூபத்தால். (௩௯)

ஆசையின் இருப்பிடம்.

மற்று, அறிவை மறைப்பதனல் ஸகலஜனத்திற்கும் சத்துருவான காமத்தின் இருப்பிடம் யாது? என்று கவனிக்குமிடத்துக் கூறுகிருர்: ஏனெனில், சத்துருவின் இருப்பிடத்தை அறிந்தால், சத்துருவை எளிதாகக் கொல்லமுடியும் என்று—

௪௦. **இந்திரியங்களும், மனமும், புத்தியும் இதனுடைய இருப்பிடம் எனப்படுகின்றன. இது இவற்றின்வழியாக அறிவை மறைத்துத், தேகியைப் பலவகையாக மயக்குகின்றது.**

இதனுடைய — காமத்தினுடைய. இவற்றின்வழியாக—இந்திரியங்கள்முதலான இருப்பிடத்தின் வழியாக. இது — காமம். (௪௦)

ஆசையைக் கோல்லும் வழி.

எதனல் இப்படி(க் காமமானது இருக்கின்றதோ)—

௪௧. **அதனல், ஏ! பரதரிற் சிறந்தோனே! நீ முதலில் இந்திரியங்களை அடக்கிக்கொண்டு, சாஸ்திரஅறிவையும் அநுபவஅறிவையும் அழிக்கின்ற பொல்லாத இதனைக் கொன்றுவிடு.**

நீ (ஆசைகளைத் தடுப்பதற்கு) முந்தியே இந்திரியங்களை வசப்படுத்திக்கொண்டு, தீமையான செய்கையையுடையதாய்ச் சாஸ்திரஅறிவையும் அநுபவஅறிவையும் அழிப்பதான இக்காமத்தைத் தூரத்தள்ளிவிடு: ஞானம் - சாஸ்திரத்தினின்றும், ஆசார்

𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌾𑌶𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑌃 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌤𑌶𑍍𑌚 𑌆𑌤𑍍𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑌵𑌬𑍋𑌧𑌃, 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌸𑍍𑌤𑌦𑌨𑍁𑌭𑌵𑌃 𑌤𑌯𑍋𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍍𑌵𑍋𑌃 𑌨𑌾𑌶𑌨𑌂 𑌪𑍍𑌰𑌜𑌹𑌿𑌹𑌿 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௪௧ ॥

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑌾𑌦𑍌 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌕𑌾𑌮𑌂 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂 𑌜𑌹𑌿 𑌇𑌤𑌿 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌰 𑌕𑌿𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 𑌕𑌾𑌮𑌂 𑌜𑌹𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 ? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௪௨. 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑌰𑌾𑌣𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌂 𑌮𑌨𑌃 ।
𑌮𑌨𑌸𑌸𑍍𑌤𑍁 𑌪𑌰𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌤𑌸𑍍𑌤𑍁 𑌸𑌃 ॥

௪௩. 𑌏𑌵𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌸𑌂𑌸𑍍𑌤𑌭𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌜𑌹𑌿 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌂 𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌮𑍍 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑍇 𑌶𑌤𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌵𑍈𑌯𑌾𑌸𑌿𑌕𑍍𑌯𑌾𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌪𑌰𑍍𑌵𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌤𑍃𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌿 𑌪𑌞𑍍𑌚 𑌦𑍇𑌹𑌂 𑌸𑍍𑌥𑍂𑌲𑌂 𑌬𑌾𑌹𑍍𑌯𑌂 𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌂 𑌚 𑌅𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸𑍌𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌤𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾 𑌪𑌰𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌕𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑌿 𑌆𑌹𑍁𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 । 𑌤𑌥𑌾—𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌂 𑌮𑌨𑌃 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 ।

யனிடத்தினின்றும் ஆத்மாமுதலானவற்றை உணர்தல். விஜ்ஞானம் - அப்பொருள்களைச் சிறப்பாக அநுபவித்தல். நன்மையைப் பெறுதற்குக் காரணமான அந்த ஞானவிஜ்ஞானங்கட்குக் கேடுசெய்கின்ற (காமத்)தை உன்னிடமிருந்து உதறித்தள்ளிவிடு என்பது பொருள். (௪௧)

" முதலில் இந்திரியங்களை வசப்படுத்திக்கொண்டு, காமமாகிய சத்துருவைக் கொல்லு" என்று கூறப்பட்டது. அங்ஙனம், எங்கேநின்றுகொண்டு [யாரை அண்டிஞல்] காமத்தைக் கொல்வது என்பது ?—(அதனைக்) கூறுவோம் :

௪௨. (ஞானிகள்) இந்திரியங்களை மேலாகக் கூறுகிருர்கள் : இந்திரியங்களைக் காட்டிலும் மனம் மேலானது : மனத்தைக்காட்டிலும் புத்தியோ மேலானது : புத்தியைக்காட்டிலும் மேலானது எதுவோ, அது (ஆத்மா).

௪௩. உயர்தோள ! நீ இவ்வாறு புத்திக்குமேலானதை அறிந்து, மனத்தை மனத்தால் நிறுத்தி, வெல்லுதற்கு அரிதான காமமாகிய சத்துருவைக் கொல்லு.

ஸ்ரீ மகாபாரதத்திலே நூறுயிரக்கிரந்த ஸம்ஹிதையாய், வ்யாஸர் அருளிச்செய்ததாய், பீஷ்மபர்வத்திலே ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துக்களாக, ப்ரஹ்ம வித்யையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனஸம்வாதத்திலே கர்மயோகம் என்னும் மூன்ரும் அத்தியாயம் முற்றும்.

செவிமுதலிய இந்திரியங்கள் ஐந்து. வெளியிலே இருப்பதும் அளவிற்குஉட்பட்டதுமான ஸ்தூல [பருத்த] உடம்பை நோக்க, (அவை) நுண்மையாகவும் உள்ளேயிருப்பனவாகவும் வியாபகமாகவும் [அதிகத்தொழிலையுடையனவாகவும்] மற்றுமிவை போன்றனவாகவும் இருப்பதைப் பார்த்து ஞானிகள் (அந்த இந்திரியங்களை அந்த

𑌤𑌥𑌾—𑌮𑌨𑌸𑌃 𑌚 𑌪𑌰𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾 । 𑌤𑌥𑌾—𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑍃𑌶𑍍𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌅𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌃, 𑌯𑌂 𑌦𑍇𑌹𑌿𑌨𑌮𑍍 𑌇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌆𑌶𑍍𑌰𑌯𑍈𑌃 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑌾𑌮𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌵𑌰𑌣𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌮𑍋𑌹𑌯𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂, 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌤𑌃 𑌤𑍁 𑌸𑌃 । 𑌸 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌪𑌰 𑌆𑌤𑍍𑌮𑌾 ॥ ௪௨ ॥

𑌏𑌵𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌂 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌸𑌂𑌸𑍍𑌤𑌭𑍍𑌯 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌸𑍍𑌤𑌂𑌭𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍍𑌵𑍇𑌨𑍈𑌵 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌸𑌮𑌾𑌧𑌾𑌯 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌜𑌹𑌿 𑌏𑌨𑌂 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂 𑌹𑍇 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌂 𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌂 𑌦𑍁𑌃𑌖𑍇𑌨 𑌆𑌸𑌦𑌃 𑌆𑌸𑌾𑌦𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌂 𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌂 𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌨𑍇𑌕𑌵𑌿𑌶𑍇𑌷𑌮𑍍 𑌇𑌤𑌿 ॥ ௪௩ ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇 𑌤𑍃𑌤𑍀𑌯𑌃 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

ஸ்தூல உடம்பினும்) மேலாகக் கூறுகிறார்கள். அவ்வண்ணமே, எண்ணமென்பதையும் வேற்றுமையென்பதையும் தன் வடிவாக உடைய மனம் இந்திரியங்களைக்காட்டிலும் மேலானது. அப்படியே, நிர்ணயவடிவமுள்ள புத்தியோ மனத்தைக்காட்டிலும் மேலானது. அவ்வாறே—எது, (உடம்புமுதல்) புத்திஉள்படக் காணப்படுகின்ற ஸகலத்திற்கும் அப்பால் உள்ளதோ, காமமானது இந்திரியங்கள் முதலானவற்றை இருப்பிடமாகக்கொண்டு, ஞானத்தை மறைத்து எந்தத்தேகியை மயக்குகின்றது எனக் கூறப்பட்டதோ, அது புத்தியைக்காட்டிலுங்கூட மேலானது. புத்தியைப் பார்க்கும் பரமாத்மா அது. (௪௨)

புத்திக்குமேலான ஆத்மாவை நீ இவ்வாறுதெரிந்துகொண்டு, மனத்தை உன் மனத்தாலேயே அலையாது நன்கு நிறுத்தி, அதாவது - சுத்தமாகத்தெளிந்த மனத்தால் ஸமாதானப்படுத்தி,[1] காமமாகிய இச்சத்துருவைக் கொல்லு. (அது,) அறிதற்கு அரிய பலவிசேஷங்களை [பலபல ஸ்பாவத்தை] யுடைமையால், வெல்லுதற்கு அரியது. (௪௩)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் மூன்றுவது அத்தியாயம் முற்றும்.

---

[1] மனஸ் ஸமாதானத்திற்குப், பரிசுத்தமாகத் தெளிந்த மனம் காரணம்.—(ஆ.)

[illegible]

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌃 ॥

𑌯𑍋𑌽𑌯𑌂 𑌯𑍋𑌗𑌃 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌦𑍍𑌵𑌯𑍇𑌨 𑌉𑌕𑍍𑌤𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌸𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍋𑌪𑌾𑌯𑌃, 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌃 𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌶𑍍𑌚, 𑌗𑍀𑌤𑌾𑌸𑍁 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍁 𑌅𑌯𑌮𑍇𑌵 𑌯𑍋𑌗𑍋 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 𑌭𑌗𑌵𑌤𑌾 । 𑌅𑌤𑌃 𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌂 𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌂 𑌮𑌨𑍍𑌵𑌾𑌨𑌃 𑌤𑌂 𑌵𑌂𑌶𑌕𑌥𑌨𑍇𑌨 𑌸𑍍𑌤𑍌𑌤𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥

௧. 𑌇𑌮𑌂 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑍇 𑌯𑍋𑌗𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌹𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ।
𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌮𑌨𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌮𑌨𑍁𑌰𑌿𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑌵𑍇𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥

௨. 𑌏𑌵𑌂 𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌮𑌿𑌮𑌂 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃 ।
𑌸 𑌕𑌾𑌲𑍇𑌨𑍇𑌹 𑌮𑌹𑌤𑌾 𑌯𑍋𑌗𑍋 𑌨𑌷𑍍𑌟𑌃 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥

𑌇𑌮𑌂 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌦𑍍𑌵𑌯𑍇𑌨 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌯𑍋𑌗𑌂 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑍇 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌯 𑌸𑌰𑍍𑌗𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 𑌅𑌹𑌂 𑌜𑌗𑌤𑍍𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌯𑌿𑌤𑍄𑌣𑌾𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌬𑌲𑌾𑌧𑌾𑌨𑌾𑌯 । 𑌤𑍇𑌨 𑌹𑌿 𑌯𑍋𑌗𑌬𑌲𑍇𑌨 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑌮𑌰𑍍𑌥𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑌰𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑍁𑌮𑍍 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍍𑌷𑌤𑍍𑌤𑍍𑌰𑍇 𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌿𑌤𑍇 𑌜𑌗𑌤𑍍 𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌯𑌿𑌤𑍁𑌮𑍍 𑌅𑌲𑌮𑍍 । 𑌅𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 𑌅𑌵𑍍𑌯𑌯𑌫𑌲-

---

நான்காம் அத்தியாயம் : ஞானயோகம்.

ஞானயோகத்தின் வரலாறு.

கர்மயோகத்தை ஸாதநமாகக்கொண்டு, ஸந்யாஸத்தோடுகூடிநிற்கும் ஞான நிஷ்டையாகிய இந்த யாதொரு யோகமானது (முந்தின) இரண்டு அத்தியாயங்களால் சொல்லப்பட்டதோ, ப்ரவிருத்தியினால் உணரப்படும் (கர்மயோகமும்) நிவிருத்தியினால் உணரப்படும் (ஞானயோகமுமாகிய) வேதப்பொருளானது எதிலே முடிந்திருக்கின்றதோ, (அந்த) இதேயோகந்தான் கீதைமுழுவதிலும் பகவான் உபதேசிக்கக் கருதியது. ஆகவே, வேதத்திற்கூறிய பொருளை (அந்த ஞானயோகத்திலே) முடியப் பெற்றதாகக் கொண்டு, ஸ்ரீ பகவான் (அதனுடைய) ஸம்பிரதாயவரலாற்றைக் கூறி அதனைப் புகழ்கின்றார் :

ஸ்ரீ பகவான் சொல்லலுற்றார் :

௧. இந்த அழிவிலா யோகத்தை யான் விவஸ்வானுக்குக் கூறினேன் : விவஸ்வான் மநு(ப்ராஜாபதி)க்குக் கூறினன் : மநு இக்ஷ்வாகுவுக்குக் கூறினன்.

௨. இவ்வாறு பரம்பரையாகவந்த இதனை ராஜர்ஷிகள் அறிந்திருந்தார்கள், வெகுகாலமானமையால் பரந்தப ! இந்த யோகம் இப்பொழுது சிதைந்து போயிற்று.

உலகத்தைப் பாதுகாக்கும் க்ஷத்திரியர்களுக்கு வலிமை உண்டாகும்பொருட்டு, (முந்தின) இரண்டு அத்தியாயங்களால் கூறிய இந்தயோகத்தை யான் (உலகத்தின்) சிருஷ்டித்தொடக்கத்தில் ஸூர்யனுக்குக் கூறினேன். அந்த யோகவலிமையையுடைய (க்ஷத்திரிய) ரன்றோ பிராமணரைப் பாதுகாக்க வல்லவராகிறார். பிராமணரும் க்ஷத்திரியரும் பாதுகாக்கப்பட்டவழி, உலகத்தைப் பாதுகாக்கமுடியும். அழி

𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌨 𑌹𑌿 𑌅𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 [illegible]𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑍍𑌯 𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌖𑍍𑌯𑌂 𑌫𑌲𑌂 𑌵𑍍𑌯𑍇𑌤𑌿 । 𑌸 𑌚 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍 𑌮𑌨𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌹 । 𑌮𑌨𑍁𑌃 𑌇𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑌵𑍇 𑌸𑍍𑌵𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌯 𑌆𑌦𑌿𑌰𑌾𑌜𑌾𑌯 𑌅𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥ ௧ ॥

𑌏𑌵𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌪𑌰𑌂𑌪𑌰𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌮𑍍 𑌇𑌮𑌂 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑌃 𑌰𑌾𑌜𑌾𑌨𑌶𑍍𑌚 𑌤𑍇 𑌋𑌷𑌯𑌶𑍍𑌚 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑌃 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌇𑌮𑌂 𑌯𑍋𑌗𑌮𑍍 । 𑌸 𑌯𑍋𑌗𑌃 𑌕𑌾𑌲𑍇𑌨 𑌇𑌹 𑌮𑌹𑌤𑌾 𑌦𑍀𑌰𑍍𑌘𑍇𑌣 𑌨𑌷𑍍𑌟𑌃 𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌃 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 । 𑌹𑍇 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪, 𑌶𑌤𑍍𑌰𑌵𑌃 𑌵𑌿𑌪𑌕𑍍𑌷𑌭𑍂𑌤𑌾𑌃 𑌪𑌰𑌾 𑌇𑌤𑌿 𑌉𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇, 𑌤𑌾𑌨𑍍 𑌶𑍌𑌰𑍍𑌯𑌤𑍇𑌜𑍋𑌮𑌹𑌦𑍍𑌭𑌿𑌃 𑌭𑌾𑌨𑍁𑌰𑌿𑌵 𑌤𑌾𑌪𑌯𑌤𑌿 𑌇𑌤𑌿 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪𑌃 𑌶𑌤𑍍𑌰𑍁𑌤𑌾𑌪𑌨 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௨ ॥

𑌦𑍁𑌰𑍍𑌬𑌲𑌾𑌨𑍍 𑌅𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌨𑌷𑍍𑌟𑌂 𑌯𑍋𑌗𑌮𑌿𑌮𑌮𑍍 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯 𑌲𑍋𑌕𑌂 𑌚 𑌅𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌿𑌨𑌮𑍍—

௩. 𑌸 𑌏𑌵𑌾𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌤𑍇𑌽𑌦𑍍𑌯 𑌯𑍋𑌗𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌃 ।
𑌭𑌕𑍍𑌤𑍋𑌽𑌸𑌿 𑌮𑍇 𑌸𑌖𑌾 𑌚𑍇𑌤𑌿 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌹𑍍𑌯𑍇𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥

𑌸 𑌏𑌵 𑌅𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌤𑍇 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 𑌅𑌦𑍍𑌯 𑌯𑍋𑌗𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌃, 𑌭𑌕𑍍𑌤𑌃 𑌅𑌸𑌿 𑌮𑍇 𑌸𑌖𑌾 𑌚 𑌅𑌸𑌿 𑌇𑌤𑌿 । 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌏𑌤𑌤𑍍 𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 𑌯𑍋𑌗𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௩ ॥

𑌭𑌗𑌵𑌤𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌮𑌾 𑌭𑍂𑌤𑍍 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌇𑌤𑌿 𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑌾𑌯 𑌚𑍋𑌦𑍍𑌯𑌮𑌿𑌵 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚—

விலாப்பயனை யுடையதாதலின் (இந்த யோகம்) அழிவிலாதது. உள்ளதை உள்ளபடி உணர்தலிலே ஊன்றிநிற்றலாகிய இ(ந்தயோகத்)தினுடைய மோக்ஷமென்னும் பயனது, (ஒருபொழுதும்) அழிவுறுவதில்லையன்றே. அந்த விவஸ்வான் (இந்த யோகத்தை) மநுவுக்குக்கூறினன்: மநு, தனது புத்திரன் இக்ஷ்வாகுவாகிய(ஸூர்யவம்சத்து) முதல் அரசனுக்குக் கூறினன். [விவஸ்வான் - ஸூர்யன்.] (௧)

இவ்வாறு க்ஷத்திரிய பரம்பரையாக வந்த இந்த யோகத்தை ராஜர்ஷிகள் அறிந்திருந்தார்கள். ராஜர்ஷிகளென்பார் - அரசர்களாயும் ரிஷிகளாயும் இருப்பவர். (அத்தகையார் - ஜநகர், புரூரவஸ் முதலாயினோ ரென்க.) நீடித்தகாலமானமையால் அந்தயோகம் (வரவரத் தேய்ந்து) ஸம்பிரதாயம் இடைவிட்டுப்போனதாயிற்று. தனக்கு எதிரியாயுள்ளவர்கள் 'பரர்கள்' எனப்படுகிறார்கள். அவர்களை (த் தன்) பராக்கிரம ஒளியின் கிரணங்களால் எரிக்கிறவன் - பரந்தபன் : பகைவர்களைத் தவிக்கச் செய்வோன் என்றபடி. (௨)

இந்த யோகமானது, மனத்திடனில்லாதவராக இந்திரியங்களை அடக்காதவராக இருந்தவரைச் சார்ந்து சிதைந்திருக்கவும், (ஆகவே) உலகத்திற்குப் புருஷார்த்தம் கிட்டாதிருக்கவும் கண்டு,

௩. இந்தப் பழமையான அதேயோகமானது, நீ என்னுடைய பக்தனாகவும் தோழனாகவும் இருக்கிறாய் என உனக்கு என்னால் இன்று கூறப்பட்டது ; ஏனெனில், இது உயர்ந்த ரஹஸ்யம்.

இது - யோகம் : அதாவது, ஞானம். (௩)

பகவானுடைய அவதாரங்கள்.

பகவானாலே (ஒன்றற்கொன்று) விரோதமாகக் கூறப்பட்டுள்ளது என்ற எண்ணம் ஒருவர்க்கும் உண்டாகக்கூடாது என, (அவருடைய திருவாக்கிலே அத்தகைய விரோதத்தைப்) பரிகரித்தற்பொருட்டு ஆக்ஷேபம் செய்கிறவன்போல அர்ஜுனன் கூறலானான் :

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ॥

௪. 𑌅𑌪𑌰𑌂 𑌭𑌵𑌤𑍋 𑌜𑌨𑍍𑌮 𑌪𑌰𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑌃 ।
𑌕𑌥𑌮𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌂 𑌤𑍍𑌵𑌮𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 ॥

𑌅𑌪𑌰𑌮𑍍 𑌅𑌰𑍍𑌵𑌾𑌕𑍍 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌗𑍃𑌹𑍇 𑌭𑌵𑌤𑍋 𑌜𑌨𑍍𑌮 । 𑌪𑌰𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌗𑌾𑌦𑍌 𑌜𑌨𑍍𑌮 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑌃 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 । 𑌤𑌤𑍍 𑌕𑌥𑌮𑍍 𑌏𑌤𑌤𑍍 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌮𑍍 𑌅𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑌤𑌯𑌾, 𑌯𑌃 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌆𑌦𑍌 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 𑌇𑌮𑌂 𑌯𑍋𑌗𑌂 𑌸 𑌏𑌵 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌮𑌹𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 𑌅𑌸𑌿 𑌇𑌤𑌿 ॥ ௪ ॥

𑌯𑌾 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇 𑌅𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌶𑌙𑍍𑌕𑌾 𑌮𑍂𑌰𑍍𑌖𑌾𑌣𑌾𑌂 𑌤𑌾𑌂 𑌪𑌰𑌿𑌹𑌰𑌨𑍍 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌉𑌵𑌾𑌚, 𑌯𑌦𑌰𑍍𑌥𑍋 𑌹𑌿 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥

௫. 𑌬𑌹𑍂𑌨𑌿 𑌮𑍇 𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌾𑌨𑌿 𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿 𑌤𑌵 𑌚𑌾𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌤𑌾𑌨𑍍𑌯𑌹𑌂 𑌵𑍇𑌦 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌵𑍇𑌤𑍍𑌥 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥

𑌬𑌹𑍂𑌨𑌿 𑌮𑍇 𑌮𑌮 𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌾𑌨𑌿 𑌅𑌤𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑌿 𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿 𑌤𑌵 𑌚 𑌹𑍇 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 । 𑌤𑌾𑌨𑌿 𑌅𑌹𑌂 𑌵𑍇𑌦 𑌜𑌾𑌨𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌵𑍇𑌤𑍍𑌥 𑌨 𑌜𑌾𑌨𑍀𑌷𑍇, 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌦𑍍𑌧𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌅𑌹𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑍁𑌦𑍍𑌧𑌬𑍁𑌦𑍍𑌧𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌅𑌨𑌾𑌵𑌰𑌣𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌇𑌤𑌿 𑌵𑍇𑌦 𑌅𑌹𑌂 𑌹𑍇 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥ ௫ ॥

𑌕𑌥𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌤𑌵 𑌨𑌿𑌤𑍍𑌯𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑍇𑌽𑌪𑌿 𑌜𑌨𑍍𑌮 𑌇𑌤𑌿 ? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

௪. உங்களுடைய பிறப்புப் பிந்தினது ; ஸூர்யனுடைய பிறப்பு முந்தினது. (இப்படியிருக்க) நீங்கள் முதலில் (அந்த யோகத்தை அவனுக்கு) அருளிச்செய்தீர்கள் என்ற இதனை, நான் எவ்வாறு அறியலாகும் ?

உங்களுடைய பிறப்பு வஸுதேவருடைய வீட்டில் பிந்தி (உண்டா)னது ; ஸூர்யனுடைய பிறப்பு சிருஷ்டித்தொடக்கத்தில், (உங்களுடைய பிறப்பிற்கு) முந்தி (உண்டா)னது. ஆகவே, "நீங்கள் இந்தயோகத்தை முதலில் அருளிச்செய்தீர்கள் ; (அப்பொழுது) அருளிச்செய்தவரேயான நீங்களே இப்பொழுது எனக்கு (அதனை மறுபடியும்) அருளிச்செய்தவராக இருக்கிறீர்கள்" என, இதனை, (ஒன்றோடொன்று) மாறுபடாத விஷயமாக நான் தெரிந்துகொள்ளக்கூடிய விதம் என்ன ? (௪)

"வாஸுதேவன் ஈச்வரனல்லன், முற்றுமுணர்ந்தோனல்லன்" என மூடர்களுக்கு உண்டாகும் சங்கையைப் பரிகரித்தற்பொருட்டு ஸ்ரீ பகவான் கூறலாயினார் : அர்ஜுனன் வினா அதன்பொருட்டாதலால்—

ஸ்ரீ பகவான் சொல்லலுற்றார் :

௫. அர்ஜுன ! உனக்கும் எனக்கும் பல பிறவிகள் சென்றுபோயின. அவற்றையெல்லாம் யான் அறிவேன் ; நீ அறியமாட்டாய் பரந்தப !

தரும அதர்மங்கள் முதலானவற்றால் ஞானசக்தி தடைப்பட்டவனாதலின், நீ அவையெல்லாவற்றையும் அறியமாட்டாய். நானோ, இயல்பாகவே நித்யனாய் சுத்தனாய் முக்தனாயிருத்தலால் மறைவில்லாத [தடைப்படாத] ஞானசக்தியுடையேன் ; ஆதலின், யான் (அவற்றை) அறிவேன் (என்பது). (௫)

அப்பொழுது, நித்யராய் ஈச்வரராய் இருக்கின்ற உங்களுக்குத் தரும அதர்மங்கள் இல்லாதிருந்தும், பிறப்பென்பது எப்படி ?—கூறுவோம் :

ரு. अजोऽपि सन्नव्ययात्मा भूतानामीश्वरोऽपि सन् ।
प्रकृतिं स्वामधिष्ठाय संभवाम्यात्ममायया ॥

अजोऽपि जन्मरहितोऽपि सन्, तथा अव्ययात्मा अक्षीणज्ञानशक्तिस्वभावोऽपि सन्, तथा भूतानां ब्रह्मादिस्तम्बपर्यन्तानाम् ईश्वरः ईशनशीलः अपि सन्, प्रकृतिं स्वां वैष्णवीं मायां त्रिगुणात्मिकां, यस्या वशे सर्वमिदं जगत् वर्तते, यया मोहितं सत् स्वम् आत्मानं वासुदेवं न जानाति, तां प्रकृतिं स्वाम् अधिष्ठाय वशीकृत्य संभवामि देहवान् इव जात इव आत्ममायया आत्मनः मायया, न परमार्थतो लोकवत् ॥ ரு ॥

तस्य च जन्म कदा किमर्थं च इति? उच्यते—

எ. यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदाऽऽत्मानं सृजाम्यहम् ॥

यदा यदा हि धर्मस्य ग्लानिः हानिः वर्णाश्रमादिलक्षणस्य प्राणिनाम् अभ्युदयनिःश्रेयससाधनस्य भवति भारत, अभ्युत्थानम् उद्भवः अधर्मस्य, तदा आत्मानं सृजामि अहं मायया ॥ எ ॥

ரு. பிறவாதவனாலும், குறைவிலாத்தன்மையனாலும், பூதங்களுக்கு ஈச்வரனாலும், (யான்) என் மாயையை வசப்படுத்திக்கொண்டு, என்மாயையினால் பிறக்கின்றேன் [அவதரிக்கின்றேன்].

பிறப்பில்லாதவனாயினும், இன்னும் இயல்பாகவே குறைவிலா ஞானசக்தியுடையவனாயினும், மற்றும் ப்ரஹ்மாமுதல் புல்வரையிலுமுள்ள பூதங்களை (யெல்லாம்) ஆளுந்தன்மையனாயினும்,—இந்த உலகமெல்லாம் எதற்கு உட்பட்டிருக்கின்றதோ, (பின்னும் அது) எதனால் மயக்கப்பட்டு வாஸுதேவனைத் தன் ஆத்மாவாக அறியவில்லையோ, அந்த ப்ரகிருதியை (அதாவது,) விஷ்ணுவுக்கு உரியதும், முக்குணவடிவுமான என் மாயையை வசப்படுத்திக்கொண்டு, என்னுடைய மாயையினாலே உடம்பொடுநிற்பவன்போல, பிறந்தவன்போல யான் இருக்கின்றேன். (ஆனால்,) உலகத்தாரைப்போல உண்மையாகவே (பிறக்கிறேன்) இல்லை. (ரு)

பகவதவதாரத்தின் பிரயோஜனம்.

இனி, அப்பிறப்பு எப்பொழுது? எதற்கு? எ

எ. பாரத! (உலகத்திலே) தருமத்திற்கு

மும் வரும்போதெல்லாம் யான் என்னைப் படைத்

வர்ணத்தாலும், ஆச்ரமத்தாலும், மற்றும் தாய், பிராணிகளின் செல்வத்திற்கும் உறுதியான மாயிருக்கின்ற தருமத்திற்குக் குறைவும், அதர்ம லாம் யான் என்னை மாயையினால் படைத்துக்கெ படுகின்றேன்].

𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌮𑍍 ?—

௮. 𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌮𑍍 ।
𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇 ॥

𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌪𑌰𑌿𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌸𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌂, 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌂 𑌪𑌾𑌪𑌕𑌾𑌰𑌿𑌣𑌾𑌂, 𑌕𑌿𑌞𑍍𑌚, 𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌂 𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍁𑌗𑌮𑍍 ॥ ௮ ॥

𑌤𑌤𑍍—

௯. 𑌜𑌨𑍍𑌮 𑌕𑌰𑍍𑌮 𑌚 𑌮𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍇𑌵𑌂 𑌯𑍋 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 ।
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌹𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌨𑍈𑌤𑌿 𑌮𑌾𑌮𑍇𑌤𑌿 𑌸𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ॥

𑌜𑌨𑍍𑌮 𑌮𑌾𑌯𑌾𑌰𑍂𑌪𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌚 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌦𑌿 𑌮𑍇 𑌮𑌮 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍍 𑌅𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌮𑍍 𑌐𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 𑌏𑌵𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌯𑌃 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌯𑌥𑌾𑌵𑌤𑍍 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌹𑌮𑍍 𑌇𑌮𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌜𑌨𑍍𑌮 𑌪𑍁𑌨𑌰𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌂 𑌨 𑌏𑌤𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 । 𑌮𑌾𑌮𑍍 𑌏𑌤𑌿 𑌆𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌸 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌹𑍇 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 ॥ ௯ ॥

𑌨𑍈𑌷 𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑌾𑌰𑍍𑌗 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 ; 𑌕𑌿𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿 ? 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌪𑌿—

௧௦. 𑌵𑍀𑌤𑌰𑌾𑌗𑌭𑌯𑌕𑍍𑌰𑍋𑌧𑌾 𑌮𑌨𑍍𑌮𑌯𑌾 𑌮𑌾𑌮𑍁𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌬𑌹𑌵𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌪𑌸𑌾 𑌪𑍂𑌤𑌾 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌮𑌾𑌗𑌤𑌾𑌃 ॥

எதன்பொருட்டு ?—

௮. **நல்லோரைப் பாதுகாத்தற்கும், தீயனசெய்வோரை முற்ற ஒழித்தற்கும், தருமத்தை நன்கு நாட்டுதற்கும் (யான்) யுகந்தோறும் அவதரிக்கின்றேன்.**

நல்லோர் - நல்வழிநிற்பவர். **தீயனசெய்வோர்** - பாவங்களாயினவற்றைச் செய்பவர். (௮)

அந்த

௯. **திவ்வியமான என்னுடைய அவதாரத்தையும், செய்கையையும் எவன் இவ்வாறு உண்மையாய் அறிகிருனே, அவன் (தனது) உடலைவிட்டபின்பு மறுபிறப்பைப் பெறுவதில்லை ; அர்ஜுந ! அவன் என்னை அடைகிருன்.**

(மனிதர் சரீரம்போல) ப்ரகிருதியினாலாகியதல்லாததாய் ஈச்வரனுக்கு(என்று) சிறக்க அமைவதான என்னுடைய அவதாரமானது மாயையினாலாகிய தெனவும், (என்னுடைய) செய்கையானது நல்லோரைப் பாதுகாத்தல் முதலிய தெனவும் இப்படிக் கீழ்க்கூறியவாறு உள்ளது உள்ளபடி எவன் அறிகிருனே, அவன் இந்தத் தேகத்தைவிட்டவுடன் மறுபிறப்பை யடையான். அர்ஜுந ! அவன் என்னை அடைகிருன் : (ஸம்ஸாரத்தினின்று முற்றும்) விடுபடுகிருன். (௯)

ஞானயோகமொன்றுதான் முக்திக்கு ஸாதநம்.

இந்த மோக்ஷவழியானது இக்காலத்தில் தலைப்பட்டதன்று. எப்பொழுதெனின் ?—முற்காலத்திலுங்கூட,

௧௦. **(பொருள்களிலே) ஆசை பயம் கோபம் இவை நீங்கியவர்களாய், என் மயமானவர்களாய், என்னைப் புகலடைந்தவராய், ஞானமாகிய தபஸினால் பரிசுத்தரான அநேகர்கள் என் தன்மையை அடையலானர்கள்.**

𑌵𑍀𑌤𑌰𑌾𑌗𑌭𑌯𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌃 𑌰𑌾𑌗𑌶𑍍𑌚 𑌭𑌯𑌂 𑌚 𑌕𑍍𑌰𑍋𑌧𑌶𑍍𑌚 𑌵𑍀𑌤𑌾 𑌵𑌿𑌗𑌤𑌾 𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌤𑍇 𑌮𑌨𑍍𑌮𑌯𑌾𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌭𑍇𑌦𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌚 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 𑌉𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 𑌕𑍇𑌵𑌲𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌬𑌹𑌵𑌃 𑌅𑌨𑍇𑌕𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌪𑌸𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌚 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌂 𑌤𑌪𑌃 𑌤𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌪𑌸𑌾 𑌪𑍂𑌤𑌾𑌃 𑌪𑌰𑌾𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌗𑌤𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌃 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌮𑍍 𑌈𑌶𑍍𑌵𑌰𑌭𑌾𑌵𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑌾𑌗𑌤𑌾𑌃 𑌸𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌃 । 𑌇𑌤𑌰𑌤𑌪𑍋𑌨𑌿𑌰𑌪𑍇𑌕𑍍𑌷𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌇𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 ‘𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌪𑌸𑌾’ 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌮𑍍 ॥ ௧0 ॥

𑌤𑌵 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑍌 𑌸𑍍𑌤𑌃, 𑌯𑍇𑌨 𑌕𑍇𑌷𑍁𑌚𑌿𑌦𑍇𑌵 𑌆𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌂 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌸𑌿 𑌨 𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌇𑌤𑌿 ; 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௧௧. 𑌯𑍇 𑌯𑌥𑌾 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌭𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌮𑌮 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥

𑌯𑍇 𑌯𑌥𑌾 𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑍇𑌨 𑌯𑌤𑍍𑌫𑌲𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑌯𑌾 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌾𑌨𑍍 𑌤𑌥𑍈𑌵 𑌤𑌤𑍍𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍇𑌨 𑌭𑌜𑌾𑌮𑌿 𑌅𑌨𑍁𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌮𑌿 𑌅𑌹𑌮𑍍, 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌅𑌨𑌰𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌨 𑌹𑌿 𑌏𑌕𑌸𑍍𑌯 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌤𑍍𑌵𑌂 𑌫𑌲𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌯𑍁𑌗𑌪𑌤𑍍 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿 । 𑌅𑌤𑌃 𑌯𑍇 𑌫𑌲𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑌃 𑌤𑌾𑌨𑍍 𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍇𑌨, 𑌯𑍇 𑌯𑌥𑍋-

---

என் மயமானவர்களாய் - ப்ரஹ்மத்தை அறிந்தவராய், (தமது ஆத்மாவுக்கும்) ஈச்வரனுக்கும் பேதமில்லையெனக் காண்பவராய். பரமேச்வரனை *என்னையே புகலடைந்தவராய்* - ஞானமொன்றிலேயே உறுதியாகநிற்பவராய் என்றபடி. பரமாத்மாவைப்பற்றிய ஞானமென்னும் தபவினால் சிறந்த பரிசுத்தியைப் பெற்று *என் தன்மையை* = ஈச்வரன் நிலையை, மோக்ஷத்தை நன்கு அடையலானார்கள். ஞானநிஷ்டையானது, (முக்தியைக் கொடுக்கும் விஷயத்திலே தனக்கு உதவியாக)வேறோர் தபஸை வேண்டிநிற்காததாம் என்பதற்கு - ‘*ஞானமாகிய தபஸினால்*’ என்னும் விசேஷணம் அறிகுறி. (௧0)

செல்வத்தையும், முக்தியையும் பகவான் தந்தருளுதல்.

அப்பொழுது உங்களுக்கு (ஒன்றினிடத்து) விருப்பும், (மற்றொன்றினிடத்து) வெறுப்பும் உண்டாம்; ஏனெனில், நீங்கள் ஆத்மநிலையைச் சிலர்க்குமாத்திரமேயன்றி எல்லோர்க்கும் தந்தருளுவதில்லை என்பது ?—(விடை)கூறுவோம் :

௧௧. எவர்கள் என்னை எவ்வாறு அடைகிறார்களோ, அவர்களை நான் அவ்வாறே அநுக்கிரக்கிறேன். பார்த்த! மனிதர்கள் எவ்வாற்றாலும் என்வழியை அநுஸரிக்கிறார்கள்.

எவ்விதமாக எப்பிரயோஜனத்தோடு (அதாவது,) எப்பயனை வேண்டி எவர்கள் என்னை அடைகிறார்களோ, அவ்விதமாகவே அப்பயனை அளிப்பதனால் அவர்களை அநுக்கிரகிக்கிறேன்; அவர்கட்கு முக்தியிலே விருப்பமில்லையாதலின். (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விருப்பமுடைமையும், (இம்மை மறுமைப்) பயன்களிலே விருப்பமுடைமையும் ஒருவனுக்கு ஒருங்கே நிகழாதன்றோ. ஆதலால், எப்பயனை அவர்கள் வேண்டுகிறார்களோ, அப்பயனை அளிப்பதனால் அவர்களை(அநுக்கிரகிக்கின்றேன்);

க்தகாரிண: அபலார்திந: முமுக்ஷவஶ்ச தாந் ஜ்ஞாநப்ரதாநேந, யே ஜ்ஞாநிந: ஸம்ந்யாஸிந: முமுக்ஷவஶ்ச தாந் மோக்ஷப்ரதாநேந, ததா ஆர்தாந் ஆர்திஹரணேந இத்யேவம் யதா ப்ரபத்யந்தே யே தாந் ததைவ பஜாமி இத்யர்த: । ந புந: ராகத்வேஷநிமித்தம் மோஹநிமித்தம் வா கம்சித் பஜாமி । ஸர்வதா அபி ஸர்வாவஸ்தஸ்ய மம ஈஶ்வரஸ்ய வர்த்ம மார்கம் அநுவர்தந்தே மநுஷ்யா:— யத்பலார்திதயா யஸ்மிந் கர்மணி அதிக்ருதா: யே ப்ரயதந்தே தே மநுஷ்யா உச்யந்தே—ஹே பார்த ஸர்வஶ: ஸர்வப்ரகாரை: ॥ ௧௧ ॥

யதி தவ ஈஶ்வரஸ்ய ராகாதிதோஷாபாவாத் ஸர்வப்ராணிஷு அநுஜிக்ருக்ஷாயாம் துல்யாயாம் ஸர்வபலதாநஸமர்தே ச த்வயி ஸதி "வாஸுதேவ: ஸர்வம்" இதி ஜ்ஞாநேநைவ முமுக்ஷவ: ஸந்த: கஸ்மாத் த்வாமேவ ஸர்வே ந ப்ரதிபத்யந்தே இதி? ஶ்ருணு தத்ர காரணம்—

௧௨. காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதா: ।
க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்திர்பவதி கர்மஜா ॥

ஆனால், எவர்கள் (சாஸ்திரத்திற்)கூறியபடி (ஸகலத்தையும்) செய்பவராய், (இம்மை மறுமைப்) பயன்களை வேண்டாதவராய், (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விரும்புபவராய் (இருக்கின்றார்களோ), அவர்கட்கு ஞானத்தைக் கொடுத்து (அருளுகின்றேன்) : ஞானிகளாயும், துறவிகளாயும், (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விரும்புபவராயும் இருப்பவர்கள் எவர்களோ, அவர்களை மோக்ஷமளிப்பதனால் (அருளுகின்றேன்) : அவ்வண்ணமே, துயருற்றவர்களைத் துயரத்தைப் போக்குவதனால் என இவ்வாறாக (அநுக்கிரகிக்கின்றேன்). எவர்கள் (என்னை) எவ்வாறு அடைகின்றார்களோ, அவர்களை அவ்வாறே யான் அநுக்கிரகிக்கின்றேன் என்பது பொருள். மற்று, விருப்பினாலாவது, வெறுப்பினாலாவது, மருட்சியினாலாவது நான் ஒருவனையும் அநுக்கிரகிப்பதில்லை. எல்லா நிலையையும் உடையவனான [எங்கும் ஆத்மஸ்வரூபமாக வேயுள்ள] ஈச்வரனாகிய என்(னால் கூறப்பட்டுள்ள ஞானகர்ம)மார்க்கத்தை மனிதர்கள் எவ்வகையாலும் அநுஸரிக்கிறார்கள். எப்பயனை வேண்டி(அதற்கேற்ப)எக்கர்மத்தைச்செய்ய உரியவராகி எவர்கள் முயற்சிசெய்கின்றார்களோ, (அப்பயனைப் பெறுதற்கு அத்தொழிலைச்செய்யும்) அவர்கள் 'மனிதர்கள்' எனப்படுகிறார்கள்[இங்கே 'மனிதர்கள்' என்பதற்கு - மநுஷ்யர்களும், (ராக்ஷஸன் குரங்கு யானை முதலிய) மற்றைப் பிராணிகளும் என்பது பொருள்.—ஆ.] (௧௧)

ஈச்வரனாகிய உங்களுக்கு ஆசை முதலியகுற்றங்கள் இல்லாமையால் (பிராணிகளை) ஈடேற்றவேண்டுமென்னும் விருப்பம் ஸகலப்பிராணிகள்மேலும் ஸமமாயுள்ளது : தாங்களோ எப்பயனையும் தந்தருளவல்லவர். (இவ்வாறுள்ள)வளவிலே, ஸகலரும் " எல்லாம் வாஸுதேவனே " என்னும் ஞானத்தினாலேயே (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விரும்பியவராய் உங்களையே ஏன் அடைகிறார்களில்லை? எனில்,— அவ்விஷயத்திலே காரணங் (கூறுகிறேன்), கேள் :

௧௨. **(தாம் செய்யும்) கர்மங்களின் ஸித்தியை [பயன் கைகூடுதலை] விரும்புகிறவர்கள் இங்கே தேவதைகளை ஆராதிக்கிறார்கள் ; ஏனெனில், கர்மத்தினாலுண்டாகும் ஸித்தியானது மநுஷ்யலோகத்திலே விரைவாக ஆகின்றது.**

காங்க்ஷந்த: ப்ரார்த்தயந்த: கர்மணாம் ஸித்திம் பலநிஷ்பத்திம் யஜந்தே இஹ அஸ்மிந் லோகே தேவதா: இந்த்ராக்ந்யாத்யா:; 'அத யோ(அ)ந்யாம் தேவதாமுபாஸ்தே அந்யோ(அ)ஸாவந்யோ(அ)ஹமஸ்மீதி ந ஸ வேத யதா பஶுரேவம் ஸ தேவாநாம்' இதி ஶ்ருதே:। தேஷாம் ஹி பிந்நதேவதாயாஜிநாம் பலாகாங்க்ஷிணாம் க்ஷிப்ரம் ஶீக்ரம் ஹி யஸ்மாத் மாநுஷே லோகே—மநுஷ்யலோகே ஹி ஶாஸ்த்ராதிகார:। 'க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே' இதி விஶேஷணாத் அந்யேஷ்வபி கர்மபலஸித்திம் தர்ஶயதி பகவாந்। மநுஷ்யலோகே வர்ணாஶ்ரமாதிகர்மாதிகார: இதி விஶேஷ:—தேஷாம் ச வர்ணாஶ்ரமாதிகாரிணாம் கர்மணாம் பலஸித்தி: பவதி கர்மஜா கர்மணோ ஜாதா ॥ ௧௨ ॥

மாநுஷ ஏவ லோகே வர்ணாஶ்ரமாதிகர்மாதிகார: ந அந்யேஷு லோகேஷு இதி நியம: கிந்நிமித்த இதி? அத வா—வர்ணாஶ்ரமாதிப்ரவிபாகோபேதா: மநுஷ்யா மம வர்த்ம அநுவர்த்தந்தே ஸர்வஶ: இத்யுக்தம்। கஸ்மாத் புந: காரணாத் நியமேந தவைவ வர்த்ம அநுவர்த்தந்தே ந அந்யஸ்ய இதி? உச்யதே—

௧௩. சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகஶ: ।
தஸ்ய கர்த்தாரமபி மாம் வித்த்யகர்த்தாரமவ்யயம் ॥

இவ்வுலகத்திலே, (தாம் செய்யும்) கர்மங்களின் பயன் (தமக்குக்) கைகூடுதலை வேண்டுகிறவர்கள், இந்திரன் அக்நி முதலான தேவதைகளைத் தொழுகிறார்கள். (இதனை,) "இனி எவன் 'அவன் வேறு, நான் வேறு' எனக்கொண்டு வேறுதேவதையை உபாஸிக்கிறானோ, அவன்,—(மனிதர்கட்கு) ஆடுமாடுமுதலியன எப்படியோ, அப்படியே தேவதைகட்கு" (பி-க-ச-க0) என்னும் சுருதியினால் (அறிக). பயனை விரும்பி வேறு தேவதைகளைப் பூஜிப்பவராய், வர்ணத்திற்கும் ஆச்ரமத்திற்கும் உரித்தானவராய்,(ஆகவே அவ்வர்ணாச்ரமங்கட்குஏற்ப தம்தம்)கர்மத்தைச் செய்கின்ற அவர்கட்கு (அக்) கர்மத்தால் வரும் பயன் விரைவாகக் கைகூடுகின்றது.—சாஸ்திரத்தின் அதிகாரம் மனுஷ்யலோகத்திலேதான். "**மனுஷ்யலோகத்திலே விரைவாக**" என்னும் விசேஷணத்தால், மற்றைய லோகங்களிலும் கர்மத்தின்பயன் கைகூடுதலைப் பகவான் எடுத்துக்காட்டுகிறார். மனுஷ்யலோகத்திலே வர்ணம் ஆச்ரமம் முதலானவற்றிற்கேற்ப கர்மத்திலே அதிகாரம் என்பது, (இவ்வுலகத்திற்கும் மற்றைய உலகங்களுக்குமுள்ள) வேறுபாடு. (கஉ)

ஜாதியென்பது மனுஷ்யலோகத்திலே பகவானால் நியமிக்கப்பட்ட ஒழுங்கு.

"மனுஷ்யலோகத்திலேதான் வர்ணம் ஆச்ரமம் முதலானவற்றிற்கு ஏற்ப கர்மத்திலே அதிகாரம்; மற்றைய லோகங்களில் (இவ்வாறு) இல்லை" என்னும் நியமம் எதனாலாகியது என்பது?—அல்லது, "வர்ணம் ஆச்ரமம் முதலிய வேறுபாட்டையுடைய மனிதர்கள் எவ்வகையாலும் என் வழியை அநுஸரிக்கிறார்கள் என்று (கீழ்க்)கூறப்பட்டதே. (அவர்கள்) எக்காரணத்தால் உம்முடைய வழியையேயன்றி வேறொருத்தனுடைய (வழியை) அநுஸரிப்பதில்லை" என்பது? (விடை) கூறுவோம்:

௧௩. நான்கு ஜாதியும், குணம் கர்மம் என்றவற்றின் பலவகையான அளவிற்குத்தக்கபடி என்னால் படைக்கப்பட்டது. (யான்) அதனைச் செய்தவனாயினும், (அதனைச்) செய்யாதவனாக நிர்விகாரியாக இருக்கிறேன் என்று என்னை நீ அறியக்கடவாய்.

चत्वार एव वर्णाः चातुर्वर्ण्यं मया ईश्वरेण सृष्टम् उत्पादितं "ब्राह्मणोऽस्य मुखमासीत्" इत्यादिश्रुतेः, गुणकर्मविभागशः गुणविभागशः कर्मविभागशश्च। गुणाः सत्त्वरजस्तमांसि। तत्र सात्त्विकस्य सत्त्वप्रधानस्य ब्राह्मणस्य 'शमो दमः तपः' इत्यादीनि कर्माणि, सत्त्वोपसर्जनरजःप्रधानस्य क्षत्रियस्य शौर्यतेजःप्रभृतीनि कर्माणि, तमउपसर्जनरजःप्रधानस्य वैश्यस्य कृष्यादीनि कर्माणि, रजउपसर्जनतमःप्रधानस्य शूद्रस्य शुश्रूषैव कर्म इति एवं गुणकर्मविभागशः चातुर्वर्ण्यं मया सृष्टमित्यर्थः। तच्च इदं चातुर्वर्ण्यं न अन्येषु लोकेषु, अतः मानुषे लोके इति विशेषणम्॥

हन्त! तर्हि चातुर्वर्ण्यस्य सर्गादेः कर्मणः कर्तृत्वात् तत्फलेन युज्यसे, अतः न त्वं नित्यमुक्तः नित्येश्वरश्च इति? उच्यते— यद्यपि मायासंव्यवहारेण तस्य कर्मणः कर्तारमपि सन्तं मां परमार्थतः विद्धि अकर्तारम्। अत एव अव्ययम् असंसारिणं च मां विद्धि ॥ ௧௩ ॥

நான்கேயான ஜாதியானது, குணத்தின் பலவிதமான [ஏற்றத்தாழ்ச்சியான] அளவிற்குத் தக்கபடியும், (அவ்வாறே) கர்மத்தின் பலவிதமான அளவிற்குத் தக்கபடியும் ஈச்வரனாகிய என்னால் அமைக்கப்பட்டது. (இதனை,) "ப்ராஹ்மணன் இதனுடைய முக மானான்" (ருக் - ௧௦ - ௯௦) என்பதுமுதலான சுருதியினால் (அறிக). குணங்கள் - ஸத்துவம், ராஜஸ், தமஸ் என்பன. அவற்றுள் [அந்த நான்கு வர்ணங்களுள்], ஸாத்விகனான (அதாவது) ஸத்துவகுணத்தை முதன்மையாகவுடைய ப்ராஹ்மணனுக்குச் சாந்தம் அடக்கம் தவம் என்பன முதலானவை, (உரிய) கர்மங்கள் (௧௮ - ௪௨). ஸத்துவகுணத்தைத் துணையாகப் பெற்றுள்ள ரஜோகுணத்தை முதன்மையாகவுடைய க்ஷத்திரியனுக்கு சௌர்யம் பராக்கிரமம் முதலியவை (உரிய) கர்மங்கள் (௧௮ - ௪௩). தமோகுணத்தைத் துணையாகப்பெற்றுள்ள ரஜோகுணத்தை முதன்மையாகவுடைய வைச்யனுக்கு வேளாண்மைமுதலியன (உரிய) கர்மங்கள் (௧௮ - ௪௪). ரஜோகுணத்தைத் துணையாய்ப்பெற்றுள்ள தமோகுணத்தை முதன்மையாகவுடைய சூத்திரனுக்கு (உரியது) ஊழியம் என்னும் ஒரேகர்மந்தான் (௧௮-௪௪) என இவ்வாறு குணம் கர்மம் என்றவற்றின் பலவிதமான அளவிற்கேற்ப நான்கு வர்ணமும் என்னால் படைக்கப்பட்டது என்பது பொருள். பிரஸித்தமான இந்த நான்குஜாதியும் மற்றையஉலகங்களில் இல்லை; ஆதலால்தான் "மனுஷ்யலோகத்திலே" (௪ - ௧௨) என்னும் விசேஷணம்.

(ஆக்ஷேபம்):—"ஆ ! அப்பொழுது,நான்குவர்ணத்தையும் படைத்தல் முதலிய தொழில்கட்கு (நீங்கள்) கர்த்தாவாதலால், அதன்பயன் (உமக்கே) வந்துசேரும். ஆகவே நீங்கள் (ஸம்ஸாரத்தினின்றும்) என்றும் விடுபட்டவராகவும், என்றும் ஈச்வரராகவும் ஆகமாட்டீர்கள் என்பது ?

(ஸமாதாநம்):—(விடை) கூறுவோம் :—மாயையின் வ்யவஹாரத்தால் (யான்) அந்தத்தொழிலுக்குக் கர்த்தாவாக இருந்தாலும், உண்மையாக அகர்த்தாவாதலால் நான் ஸம்ஸாரத்திற்கு உட்படாதவன் என்று தெரிந்துகொள். (௧௩)

𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌮𑌾𑌂 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌃 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌅𑌕𑌰𑍍𑌤𑌾 𑌏𑌵 𑌅𑌹𑌂, 𑌯𑌤𑌃—

௧௪. 𑌨 𑌮𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌲𑌿𑌮𑍍𑌪𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌮𑍇 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑍇 𑌸𑍍𑌪𑍃𑌹𑌾 ।
𑌇𑌤𑌿 𑌮𑌾𑌂 𑌯𑍋𑌽𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌰𑍍𑌨 𑌸 𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 ॥

𑌨 𑌮𑌾𑌂 𑌤𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌲𑌿𑌮𑍍𑌪𑌨𑍍𑌤𑌿 𑌦𑍇𑌹𑌾𑌦𑍍𑌯𑌾𑌰𑌮𑍍𑌭𑌕𑌤𑍍𑌵𑍇𑌨, 𑌅𑌹𑌂𑌕𑌾𑌰𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌨 𑌚 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌫𑌲𑍇𑌷𑍁 𑌮𑍇 𑌸𑍍𑌪𑍃𑌹𑌾 𑌤𑍃𑌷𑍍𑌣𑌾 । 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍁 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌣𑌾𑌮𑍍 "𑌅𑌹𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾" 𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌮𑌾𑌨𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁, 𑌸𑍍𑌪𑍃𑌹𑌾 𑌚 𑌤𑌤𑍍𑌫𑌲𑍇𑌷𑍁, 𑌤𑌾𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌲𑌿𑌮𑍍𑌪𑌨𑍍𑌤𑌿 𑌇𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍, 𑌤𑌦𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌨 𑌮𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌲𑌿𑌮𑍍𑌪𑌨𑍍𑌤𑌿 । 𑌇𑌤𑌿 𑌏𑌵𑌂 𑌯𑌃 𑌅𑌨𑍍𑌯𑍋𑌽𑌪𑌿 𑌮𑌾𑌂 𑌆𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑍇𑌨 𑌅𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 "𑌨 𑌅𑌹𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾, 𑌨 𑌮𑍇 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑍇 𑌸𑍍𑌪𑍃𑌹𑌾" 𑌇𑌤𑌿 𑌸 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 𑌨 𑌬𑌧𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌨 𑌦𑍇𑌹𑌾𑌦𑍍𑌯𑌾𑌰𑌮𑍍𑌭𑌕𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௧௪ ॥

"𑌨 𑌅𑌹𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾, 𑌨 𑌮𑍇 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑍇 𑌸𑍍𑌪𑍃𑌹𑌾" 𑌇𑌤𑌿—

௧௫. 𑌏𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌕𑍃𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌰𑌪𑌿 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌃 ।
𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮𑍈𑌵 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌤𑌰𑌂 𑌕𑍃𑌤𑌮𑍍 ॥

𑌏𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌕𑍃𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌃 𑌅𑌪𑌿 𑌅𑌤𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍈𑌃 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌃 । 𑌕𑍁𑌰𑍁 𑌤𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑍈𑌵, 𑌨 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌮𑍍 𑌆𑌸𑌨𑌂, 𑌨𑌾𑌪𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌃

பற்றற்றுச் செய்யும் கர்மமானது ஒருவனைக் கட்டுப்படுத்துவதில்லை.

மற்று, நீ என்னை எந்தத் தொழில்கட்குக் கர்த்தாவாக நினைக்கின்றனையோ அவற்றிற்கு யான் உண்மையாகவே அகர்த்தாதான்; ஏனெனில்,

௧௪. "கர்மங்கள் என்னைப் பற்றுவதில்லை: கர்மத்தின் பயனிலே எனக்கு ஆசை இல்லை" என எவன் என்னை அறிகிருனே, அவன் கர்மங்களால் கட்டப்படுவதில்லை.

(எனக்கு) அகங்காரமின்மையால், அந்தக்கர்மங்கள் (எனக்கு) உடம்பு முதலியவற்றை உண்டாக்கி என்னைப் பற்றுவதில்லை; அக்கர்மங்களின் பயன்களிலே எனக்கு ஆசையும் இல்லை. ஆனல், ஸம்ஸாரிகளான [உலகவாழ்க்கையில் பற்றுக்கொண்ட] எவர்கட்குக் கர்மங்களிலே "நான் கர்த்தா" என்ற எண்ணமும், அவற்றின் பயன்களிலே ஆசையும் உள்ளனவோ, அவர்களைக் கர்மங்கள் பற்றுகின்றன என்பது ஏற்கும். அவை (எனக்கு) இல்லாததனல், கர்மங்கள் என்னைப் பற்றமாட்டா. "நான் கர்த்தா இல்லை, எனக்குக் கர்மத்தின் பயனிலெ ஆசை இல்லை" என இவ்வாருக அறிகிறவன் வேறு எவனுனாலும் ஆகுக; அவன் கர்மங்களால் கட்டப்படுவதில்லை: அவனுக்குங்கூடச் சரீரம்முதலானவற்றை உண்டாக்கும் கர்மங்கள் இல்லை என்பது பொருள். (௧௪)

"நான் கர்த்தா இல்லை, எனக்குக் கர்மத்தின் பயனிலே ஆசை இல்லை" என

௧௫. இவ்வாருக அறிந்து, (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபடவிரும்பிய முன்னேர்களாலும் கர்மமானது செய்யப்பட்டது. ஆதலால், முந்தின பண்டைக்காலத்தில் முன்னேர்களால் செய்யப்பட்ட கர்மத்தையே நீ செய்யக்கடவாய்.

(ஸம்ஸாரத்தினின்றும்)விடுபடவிரும்பிய முன்னேர்களாலும் அநுஷ்டிக்கப்பட்டமையால், நீ கர்மத்தையே செய்யவேண்டுமேயன்றி மௌனமாக உட்கார்ந்திரு

கர்தவ்ய:, தஸ்மாத் த்வம் பூர்வைரபி அனுஷ்டிதத்வாத், யதி அனாத்மஜ்ஞ: ததா ஆத்மசுத்த்யர்த்தம், தத்த்வவித் சேத் லோகஸங்க்ரஹார்த்தம், பூர்வை: ஜனகாதிபி: பூர்வதரம் க்ருதம் ந அதுனாதனம் க்ருதம் நிர்வர்திதம் ॥ ௧௫ ॥

தத்ர கர்ம சேத் கர்தவ்யம் த்வத்வசனாதேவ கரோமி அஹம் । கிம் விசேஷிதேன 'பூர்வை: பூர்வதரம் க்ருதம்' இதி? உச்யதே— யஸ்மாத் மஹத் வைஷம்யம் கர்மணி । கதம்?—

௧௬. கிம் கர்ம கிமகர்மேதி கவயோऽப்யத்ர மோஹிதா: ।
தத்தே கர்ம ப்ரவக்ஷ்யாமி யஜ்ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸேऽசுபாத் ॥

கிம் கர்ம கிம் ச அகர்ம இதி கவய: மேதாவின: அபி அத்ர அஸ்மின் கர்மாதிவிஷயே மோஹிதா: மோஹம் கதா: । தத் அத: தே துப்யம் அஹம் கர்ம அகர்ம ச ப்ரவக்ஷ்யாமி யத் ஜ்ஞாத்வா விதித்வா கர்மாதி மோக்ஷ்யஸே அசுபாத் ஸம்ஸாராத் ॥ ௧௬ ॥

ந ச ஏதத் த்வயா மந்தவ்யம்—கர்ம நாம தேஹாதிசேஷ்டா லோகப்ரஸித்தம், அகர்ம நாம தத்க்ரியா தூஷ்ணீம் ஆஸனம்; கிம் தத்ர போத்தவ்யம் இதி? கஸ்மாத்? உச்யதே—

த்தலையாவது, (கர்மங்களைத்) துறந்திடுதலையாவது செய்யக்கூடாது. நீ அஜ்ஞானியானால், அப்பொழுது சித்தசுத்திக்காக(க் கர்மத்தை அநுஷ்டிக்கவேண்டும்); நீ உண்மைஉணர்ந்தோனானால், உலகத்தை நல்வழிநிறுத்த(க் கர்மத்தை அநுஷ்டிக்கவேண்டும். அன்றியும், அக்கர்மமானது) மிகப்பழைய காலத்திலே ஜநகாதியரான முன்னோர்களால் அநுஷ்டிக்கப்பட்டுவந்ததேயன்றி இப்பொழுது (புதிதாக) அநுஷ்டிக்கப்பட்டதன்று. (௧௫)

கர்மம் இன்னது, அகர்மம் இன்னது என்பது.

இ(ம் மநுஷ்யலோகத்)திலே கர்மத்தைச் செய்யவேண்டுமென்றால், நீங்கள் சொல்வதனாலேயே நான் (அதனைச்) செய்வேன். (ஆகவே, அங்ஙனம்) "முன்னோர்களாலே மிகப்பழைய காலத்திலே செய்யப்பட்டது" என்று சிறப்பித்துக்கூறியதனால் என்ன என்பது? — கூறுவோம்: ஏனெனில், கர்மத்(தை அறியும் விஷயத்)திலே அதிக அருமை இருக்கின்றது.—எப்படி?—

௧௬. கர்மமென்பது என்ன? அகர்மமென்பது என்ன? என்றஇதிலே, அறிவுடையோரும் மயங்கிவிட்டார்கள். நீ எதனை அறிந்து, தீமையினின்றும் விடுவிக்கப்படுவாயோ, அந்தக் கர்மத்தையும் அகர்மத்தையும் யான் உனக்கு உபதேசிப்பேன்.

இவ்விஷயத்திலே அறிவுள்ளவருங்கூட மயக்கமடைந்துள்ளார். ஆகவே, யான் உனக்குக் கர்மத்தையும் அகர்மத்தையும் (அவை இன்னவை யென்று) விரித்துக் கூறுவேன். நீ கர்மம்முதலான எவற்றை அறிந்து ஸம்ஸாரத்தினின்றும் விடுவிக்கப்படுவாயோ, (அவற்றை விவரமாகச் சொல்வேன்). (௧௬)

கர்மமென்பது, உடம்புமுதலியவற்றின் அசைவு; அகர்மமென்பது, அவற்றின் தொழிலின்மை. உலகத்திலே (இவை யாவர்க்கும்) தெரிந்தவை. (ஆகவே,) அதில் தெரிந்துகொள்ளவேண்டியதென்ன? [ஒன்றும் இல்லை]—என்று நீ இவ்வாறு கொள்ளவும் கூடாது.—ஏன்?—கூறுவோம்:

௧௭. 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋 𑌹𑍍𑌯𑌪𑌿 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌚 𑌵𑌿𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 ।
𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌶𑍍𑌚 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌗𑌹𑌨𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋 𑌗𑌤𑌿𑌃 ॥

𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌪𑌿 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂, 𑌬𑍋𑌦𑍍𑌧-
𑌵𑍍𑌯𑌂 𑌚 𑌅𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌵𑌿𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌸𑍍𑌯, 𑌤𑌥𑌾 𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌶𑍍𑌚 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂𑌭𑌾𑌵𑌸𑍍𑌯
𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑌿 𑌇𑌤𑌿 𑌤𑍍𑌰𑌿𑌷𑍍𑌵𑌪𑌿 𑌅𑌧𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 । 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌗𑌹𑌨𑌾
𑌵𑌿𑌷𑌮𑌾 𑌦𑍁𑌰𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌾—𑌕𑌰𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿 𑌉𑌪𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌥𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑍍—𑌕𑌰𑍍𑌮𑌾𑌕𑌰𑍍𑌮-
𑌵𑌿𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌗𑌤𑌿𑌃 𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௧௭ ॥

𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑍇𑌃 𑌯𑌤𑍍 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑍍?
𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௧௮. 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌦𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌚 𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 ।
𑌸 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 ॥

𑌕𑌰𑍍𑌮𑌣𑌿, 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮 𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌮𑌾𑌤𑍍𑌰𑌂, 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌅𑌕𑌰𑍍𑌮
𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑌂 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍, 𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑍇 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑍃-

---

௧௭. ஏனெனில், கர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது உண்டு: விகர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது உண்டு: அகர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது உண்டு. கர்மத்தின் போக்கானது அறிதற்கு அரியது.
[விகர்மம் - விலக்கப்பட்ட கர்மம். அகர்மம் - ஒன்றுஞ்செய்யாது சும்மாஇருத்தல்.]

ஏனெனில், சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட கர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொ
ள்ளவேண்டியது இருக்கின்றது: விலக்கப்பட்ட விகர்மத்தைப்பற்றித் தெரிந்துகொ
ள்ளவேண்டியதும் இருக்கவே இருக்கின்றது. அவ்வாறே, மௌனமாயிருத்தலாகிய
அகர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது இருக்கின்றது. ஏனெனில்,
கர்மம் விகர்மம் அகர்மம் என்றவற்றின் போக்கானது=உள்ளது உள்ளபடியான தன்
மையானது, அதாவது,(அவற்றின்)உண்மை கஷ்டமானது, அறிதற்குஅரிதானது.—
"இருக்கின்றது" என்பதை மூன்றி(டங்களி)லும் வருவித்துக்கொள்க. "கர்மத்
தின்" என்பது, கர்மம் முதலானவற்றின் உபலக்ஷணத்திற்காக. (உபலக்ஷணம் - ஒரு
சொல், தன்னோடு தன் இனங்களையும் கொள்ளுதற்கு உரியதாய்நிற்றல். சோற்றை
உண்டான் என்றால் - அதனோடு கறிமுதலியவற்றையும் தின்றான் என்பது கூறாமலே
அமைதலால், சோறுஎன்னும் சொல் - மற்றைக் கறிமுதலிய தன் இனங்களையும்
கொள்ளுதற்கு உரியதாய்நிற்றல் காண்க.) (௧௭)

ஆனால், "(கர்மஅகர்மங்களைப்பற்றித்) தெரிந்துகொள்ளவேண்டியதைக் கூறு
வேன்" என்று (நீங்கள்) மேற்கொண்டுள்ள (அக்) கர்மம்முதலானவற்றின் உண்மை
என்ன? —கூறுவோம்:

**௧௮. எவன் கர்மத்திலே அகர்மத்தைக் காணக்கூடுமோ, எவன் அகர்மத்தி
லும் கர்மத்தைக் காணக்கூடுமோ, அவன், மனிதர்களுள் அறிவுள்ளவன்; அவன்
(ஞானநிஷ்டையைக்) கூடினவன், கர்மங்களெல்லாவற்றையும் செய்தவன்.**

செய்யப்படுகிற தென்பது - செய்கை, கர்மம், தொழில் பொது [செல்லல்,
நிற்றல், நினைத்தல்முதலிய எல்லாத்தொழிலுமாம்]. பிரவிருத்தியும் நிவிருத்தியும்,

त्तिनिवृत्त्योः — वस्त्वप्राप्यैव हि सर्वो ऽयं क्रियाकारकादिव्यवहारः अविद्याभूमावेव — कर्म यः पश्यति, स बुद्धिमान् मनुष्येषु, स युक्तः योगी च, कृत्स्नकर्मकृत् समस्तकर्मकृच्च सः, इति स्तूयते कर्माकर्मणोः इतरेतरदर्शी ॥

ननु किम् इदं विरुद्धम् उच्यते 'कर्मणि अकर्म यः पश्येत् अकर्मणि च कर्म' इति ; न हि कर्म अकर्म स्यात्, अकर्म वा कर्म । तत्र विरुद्धं कथं पश्येत् द्रष्टा ? — न, अकर्म एव परमार्थतः सत् कर्मवत् अवभासते मूढदृष्टेः लोकस्य, तथा कर्म एव अकर्मवत् । तत्र यथाभूतदर्शनार्थ-

---

செய்பவனுகிய கர்த்தாவைச் சார்ந்துநிற்றலின், (கர்மத்தில் அகர்மத்தையும், அகர்ம த்தில் கர்மத்தையும் காணக்கூடு மென்க. பிரவிருத்தி - கர்மம், செய்தலென்னும் முயற்சி. நிவிருத்தி - அகர்மம், ஓய்தலென்னும் முயற்சி.) மெய்ப்பொருளை அடையாவிடத்தன்றே செய்கையென்னும் வ்யவஹாரமும், செய்பவனென்னும் வ்யவஹாரமும், மற்றுமிவைபோன்ற வ்யவஹாரமுமாகிய ஸகலமுமே அஜ்ஞானநிலையிலேயே நிகழ்கின்றது. எவன் கர்மத்திலே கர்மமின்மையைக் காண்கிருனே, எவன் கர்மமின்மையிலேயும் கர்மத்தைக் காண்கிருனே, அவன் மனிதர்களுள் அறிவுடையவன் : அவன் யோகி : அவன் எல்லாக்கர்மங்களையும் செய்தவன் என்று, கர்மஅகர்மங்களிரண்டினும் ஒன்றில் மற்றொன்றைக் காண்பவன் (இவ்வாறு) கொண்டாடப்படுகிருன்.

(ஆக்ஷேபம்) :— அப்படியானுல், "எவன் கர்மத்திலே அகர்மத்தையும், அகர்மத்திலேயும் கர்மத்தையும் காண்கிருனே" என்று இதென்ன விரோதமாகக்கூறப்படுகின்றது ? நிச்சயமாகக் கர்மம் அகர்ம மாகாது, அகர்மும் கர்மமாகாது.(ஒன்றைக்) காண்பவன், அதில் (அதற்கு) விரோதமானதை எப்படிக் காண்பான் ? [காண முடியாது.]

(ஸமாதாநம்) :— அப்படியன்று ; உண்மையிலே அகர்மமாகவேஇருப்பது, விவேகபுத்திமயங்கிய ஜனங்களுக்குக் கர்மம்போலத் தோற்றுகின்றது ; அவ்வாறே, கர்மமாகவே (இருப்பது) அகர்மம்போல(த் தோற்றுகின்றது). பகவான் அவற்றை உள்ளபடி உணர்த்தும்பொருட்டு "எவன் கர்மத்திலே அகர்மத்தைக் காண்கிருனே"—என்று தொடங்குகின்ற (சுலோகத்)தைக் கூறலானுர். (மயக்கஉணர்வினுல் ஆத்மாவினிடத்துத் தோன்றிய கர்மத்திலே அகர்மத்தைக் காணுதலென்பது - மயக்கஉணர்வினுல் தோன்றிய வெள்ளியிலே இப்பியைக் காண்பது போல. பின்னும் அம்மயக்கஉணர்வினுல் அவ்வாத்மாவினிடத்துத் தோன்றிய அகர்மத்திலே கர்மத்தைக் காணுதலென்பதும் அது. எப்படியெனில், —ஒருபொருளின் உணர்ச்சியைப் பெற்றுலன்றி, 'அப்பொருள் இல்லை' என்னும் உணர்ச்சி வாராது. இப்பியைப் பார்த்து வெள்ளியென்றவிடத்து, இப்பியிலே வெள்ளி கற்பிக்கப்பட்டது. அவ்வண்ணமே அதனைப் பார்த்து 'இங்கே முன் தோன்றிய வெள்ளி இல்லை' என்றவிடத்து இல்லை என்னும் உணர்ச்சியானது, கற்பிக்கப்பட்ட வெள்ளியின் உணர்ச்சியைத் தழுவிநிற்றலால், இப்பியிலே வெள்ளி இல்லை என்பதும் கற்பனைதான். இதனை நுண்மையாக ஆராய்ந்தறிக. இவ்வாறே, ஆத்மாவினிடத்துக்

[illegible]

(ஆ[illegible]):—[illegible], கர்மமென்பது எல்லார்க்கும் கர்மத்தா[illegible]

ஒரு இடத்திலாயினும் (அது [illegible]) [illegible]தில்லை.

(வைரா[illegible]):—அது சரியன்று ; கப்பலில் இருப்பவனுக்குக் கப்பல் [illegible]

[illegible] (தாம நிலைபெயர்ந்து) செல்லுதலில்லாதவையாய்க் கரையில் நிற்கும்

[illegible]னிடத்து (அவை அவனுக்கு) எதிராகச் செல்லுதல் தோற்றுதல[illegible]

[illegible]லாதுதாத நிற்செல்லுமின்றவற்றினிடத்து (அவை) செல்லுதலின்

தோற்றுதலாதுமெனக. இவ்வண்ணமே இங்கு [ஆத்மாவினிட[illegible]

इहापि अकर्मणि कर्मदर्शनं कर्मणि च अकर्मदर्शनं विपरीतदर्शनं, येन तन्निराकरणायेदमुच्यते 'कर्मण्यकर्म यः पश्येत्' इत्यादि ॥

तदेतदुक्तवृत्तिवचनमपि अत्यन्तविपरीतदर्शनभावित-तया मोहितो लोकः श्रुतमपि असकृत् तत्त्वं विस्मृत्य विस्मृत्य मिथ्याप्रसङ्गम् अवतार्यावतार्य चोदयति इति पुनः पुनः उत्तरम् आह भगवान्, दुर्विज्ञेयत्वं च आलक्ष्य वस्तुनः ॥

'अव्यक्तोऽयमचिन्त्योऽयम्' 'न जायते म्रियते' इत्यादिना आत्मनि कर्माभावः श्रुतिस्मृतिन्यायप्रसिद्धः उक्तः वक्ष्यमाणश्च । तस्मिन्नात्मनि कर्माभावे अकर्मणि कर्मविपरीतदर्शनम् अत्यन्तनिरूढम्; यतः—"किं कर्म किमकर्मेति कवयोऽप्यत्र मोहिताः"। देहाद्याश्रयं कर्म आत्मन्यध्या-रोप्य "अहं कर्ता, ममैतत् कर्म, मयास्य कर्मणः फलं भोक्तव्यम्" इति च, तथा "अहं तूष्णीं भवामि, येन अहं निरायासः अकर्मा सुखी स्याम्" इति कार्यकरणाश्रयं व्यापारोपरमं तत्कृतं च सुखित्वम्

கர்மம் தோற்றுதலும், கர்மத்திலே அகர்மம் தோற்றுதலும் விபரீதமான தோற்றமாதலால், (பகவான்) அதனை நீக்கும்பொருட்டு "எவன் கர்மத்திலே அகர்மத்தைக் காண்கிறானோ" என்று தொடங்கும் (திருவாக்கை) அருளிச்செய்யலானார்.

அத்தகைய இ(ச்சங்கையான)து அடிக்கடி மறுமொழி கூறப்பெற்றதாயினும், மிக்க விபரீதமான உணர்வினால் (பொய்ப்பொருளின்) வாஸனையே பதியப் பெற்றுள்ளமையால் அடுத்தடுத்து மயக்கமுறும் உலகமானது, ஒருதடவைக்குப் பலதடவை கேட்கப்பட்டிருப்பதுமான உண்மையை மறந்து மறந்து, (எதோ ஒரு) பொய்ம்மையான விஷயத்திற் புகுந்து புகுந்து (ஆத்மாவினிடத்தும் கர்மம் உண்டென்று) ஆக்ஷேபிக்கின்றது என, மெய்ப்பொருளை அறிதல் அருமை என்பதையும் நோக்கிப் பகவான் மீண்டும் மீண்டும் விடை அருளிச்செய்கிறார்.

ஆத்மாவிடத்துக் கர்மமில்லை என்பது, சுருதியினும் ஸ்மிருதியினும் யுக்தியினாலும் நன்கு தெரிந்திருப்பது ; "இது புலப்படாதது, இது நினைக்கமுடியாதது" (உ - உரு), " இது பிறப்பதில்லை, இறப்பதில்லை" (உ - உ0) என்பன முதலாகக் கூறப்பட்டுள்ளது; (ரு - கஅ முதலாக மேலே) கூறப்படுவது. அந்த ஆத்மாவினிடத்து, கர்மமின்மையாகிய அகர்மத்தில் கர்மமாகிய விபரீதத்தை[விரோதத்தை]க் காணுதலானது (பிராணிகளுடைய மனத்தினுள்) அளவுகடந்து வேரூன்றியிருப்பதாம். ஏனெனில், " எது கர்மம் ? எது அகர்மம் ? என்ற இவ்விஷயத்தில் ஞானிகளும் மயங்கியுள்ளார்" (ச - கசு). " நான் செய்பவன், இது என்னுடைய தொழில், இத்தொழிலின் பயனை நான் அநுபவிக்கவேண்டும்" என உடம்பு முதலியவற்றைச் சார்ந்துநிற்கும் கர்மத்தை ஆத்மாவினிடத்து ஏற்றி, அவ்வண்ணமே, " நான் தொல்லையில்லாது, தொழிலில்லாது ஸுகியாயிருக்குமாறு மௌனமாயிருக்கின்றேன்" என, தேகம்மனம் இந்திரியங்களென்றவற்றைச் சார்ந்துநிற்கும் (ஓய்வையும், அதாவது,) தொழில் ஓய்ந்துஇருத்தலையும், அதனால் உண்டான ஸௌக்கியத்தையும் [ஸுகமாயிருத்தலையும்]

𑌅𑌯𑌂 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌃 𑌕𑍈𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 । 𑌕𑌥𑌮𑍍? 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌕𑌿𑌲 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍀𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌤𑌤𑍍𑌫𑌲𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌅𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌤𑌾𑌨𑌿 𑌉𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌗𑍌𑌣𑍍𑌯𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 । 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌚 𑌅𑌕𑌰𑌣𑌮𑍍 𑌅𑌕𑌰𑍍𑌮; 𑌤𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑌫𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 𑌗𑍌𑌣𑍍𑌯𑍈𑌵 𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 । 𑌤𑌤𑍍𑌰 𑌨𑌿𑌤𑍍𑌯𑍇 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌅𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 𑌫𑌲𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍; 𑌯𑌥𑌾 𑌧𑍇𑌨𑍁𑌰𑌪𑌿 𑌗𑍌𑌃 𑌅𑌗𑍌𑌃 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌕𑍍𑌷𑍀𑌰𑌾𑌖𑍍𑌯𑌂 𑌫𑌲𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 𑌇𑌤𑌿, 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 । 𑌤𑌥𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑍇 𑌤𑍁 𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌚 𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 𑌨𑌰𑌕𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 𑌇𑌤𑌿 ॥

𑌨 𑌏𑌤𑌤𑍍 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌮𑍍 । 𑌏𑌵𑌂𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌅𑌶𑍁𑌭𑌾𑌤𑍍 𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 '𑌯𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇𑌽𑌶𑍁𑌭𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌵𑌚𑌨𑌂 𑌬𑌾𑌧𑍍𑌯𑍇𑌤 । 𑌕𑌥𑌮𑍍? 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌤𑍍 𑌅𑌶𑍁𑌭𑌾𑌤𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌨𑌾𑌮 𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌂, 𑌨 𑌤𑍁 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌫𑌲𑌾𑌭𑌾𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 । 𑌨 𑌹𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌫𑌲𑌾𑌭𑌾𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 𑌅𑌶𑍁𑌭𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌫𑌲𑌤𑍍𑌵𑍇𑌨 𑌚𑍋𑌦𑌿𑌤𑌂, 𑌨𑌿𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌾 । 𑌨 𑌚 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌏𑌵𑌮𑌿𑌹 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌏𑌤𑍇𑌨 𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌨 𑌹𑌿 𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 "𑌕𑌰𑍍𑌮" 𑌇𑌤𑌿 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌯𑌾 𑌇𑌹 𑌚𑍋𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 ।

சிலர் இச்சுலோகத்தை வேறுவகையாக உரைத்தனர்.—எப்படி ?—ஈச்வரனுக்கென்று அநுஷ்டிக்கப்படும் நித்யகர்மங்களுக்குப் பயன் இல்லாமையால், அவைகள் உபசாரவழக்கினால் அகர்மங்கள் எனப்படுகின்றன. இனி, அவற்றைச் செய்யாதிருத்தல், அகர்மமென்பது. அது குற்றத்தை விளைப்பதனால், உபசாரவழக்கினாலேயே கர்மம் எனப்படுகின்றது. பசு 𑌗𑍌𑌃 [பசு]வாயிருந்தாலும், பால் என்கிற பயனைக் கொடுப்பதில்லை என (அது) 𑌅𑌗𑍌𑌃 [பசு அன்று] என்று கூறப்படுமாறுபோல, எவன் அந்த நித்யகர்மத்திலே பயனில்லாமையினால் அகர்மத்தைக் காண்கிறானோ, அவ்வாறே எவன் (அகர்மமானது)நரகம் முதலான கெடுதியாகிய பயனைத் தருகின்றதென, நித்யகர்மத்தைச் செய்யாமையாகிய (அந்த) அகர்மத்திலும் கர்மத்தைக் காண்கிறானோ, (அவன் அறிவுடையவன்..... ....).

இந்த உரை சரியன்று. இத்தகைய அறிவினால் தீமையினின்றும் நீங்குதல் அமையாதாதலின், "நீ எதனை அறிந்து கெடுதியினின்றும் விடப்படுவாயோ" (ச - கசு) எனப் பகவான் அருளிச்செய்த திருவாக்கு மாறுபடநிற்பதாகும் [வீணாகும்].—எப்படி ?—நித்யகர்மங்களை அநுஷ்டித்தலால் கெடுதியினின்று நீங்குதலென்பது இருக்கட்டும் [வாதத்திற்காக அதனை ஒத்துக்கொள்வோம்]. என்றாலும், அவற்றிற்குப் பயனில்லையென்னும் அறிவினால் (அவ்வாறு நீங்குதல்) அமையாது. தீமையினின்றும் நீங்குதல், நித்யகர்மங்களுக்குப் பயனில்லையென்னும் அறிவின் பயனாகவாவது, நித்யகர்மங்களுடைய அறிவின் பயனாகவாவது (சுருதியில்) விதிக்கப்படவில்லையன்றோ. பின்னும்,(அது)பகவானாலேயே இங்கு க்கூறப்படவில்லை. அகர்மத்தில் கர்மத்தைக் காண்பதற்கு, இதனால் மறுமொழி கூறப்பட்டது. அகர்மத்தினிடத்திலே கர்மமென்று காண்பது அவச்யமென இங்கு விதிக்கப்படுவதில்லை [அகர்மத்தைக் கர்மமாகக் கொள்ளவேண்டுமென்று இச்சுலோகத்தில் விதிக்கப்படவில்லை]. மற்று, நித்ய

किम्? तत्र एवं व्याचक्षाणेन भगवता वाक्यं लोकव्यामोहाय
इति व्यक्तं कल्पितं स्यात्। न च इदं छद्मरूपेण वाक्येन रक्षणी
वस्तु। नापि शब्दान्तरेण पुनः पुनः उच्यमानं सुबोधं स्या
इत्येवं वक्तुं युक्तम्। 'कर्मण्येवाधिकारस्ते' इत्यत्र हि स स्फुट
उक्तः कर्मण्येव न पुनः वक्तव्यः भवति। सर्वत्र च प्रशस्तं बोधव्यं च क
एव। न च निष्प्रयोजनं बोधव्यम् इति उच्यते। न च मिथ्याज्ञा
बोधव्यं भवति, तत्प्रत्युपस्थापितं वा वस्त्वाभासम्। नापि नित्या
अकरणात् अभावात् प्रत्यवायभावोत्पत्तिः, 'नासतो विद्यते भावः' इ
'कथम् असतः सज्जायेत' इति च असतः सज्जन्मप्रतिषेधात्। अस
सदुत्पत्तिं ब्रुवता असदेव सद्भवेत्, सच्चापि असद्भवेत् इत्य
स्यात्। तच्च अयुक्तम्, सर्वप्रमाणविरोधात्। न च निष्फलं विदध्य
कर्म शास्त्रम्, दुःखस्वरूपत्वात्, दुःखस्य च बुद्धिपूर्वकतया का
नुपपत्तेः। तदकरणे च नरकपाताभ्युपगमात् अनर्थायैव च

என்று தொடங்கும் கபட(வாக்கியத்தால்) ஆவதென்ன ? அங்கு இவ்வாறு உ
பவரால் "பகவானுடைய திருவாக்கானது உலகம் மயங்குதற்பொருட்டா
எனத் தெளிவாகக் கற்பனைசெய்யப்பட்டதாகும். மேலும், இந்த(நித்யகர்மாநுஷ்ட
விஷயம் கபடரூபமான வாக்கியத்தால் பாதுகாக்கத்தக்கதில்லை ; (அது வேறு)
சொற்களால் மீண்டும் மீண்டும் சொல்லப்படும்பொழுது, எளிதில் அறியக்கூடி
கும் என்று இவ்வாறு கூறவும்படாது. ஏனெனில், "கர்மத்திலேதான் அதிகார
(உ - சஎ) என்னுமிடத்து மிகத்தெளிவாகக் கூறப்பட்ட அவ்விஷயத்தை ம
யும் கூறவேண்டியதில்லை. எங்கும்[சாஸ்திரத்திலும், உலகத்திலும்]புகழப்பெற்
செய்தற்குஉரியதாயுமிருப்பதையே (ஒருவன்) தெரிந்துகொள்ளவேண்டும். வீ
தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கூறப்படவில்லை. மேலும், பொய்யறிவா
அறிதற்கு உரியதில்லை. (அவ்வாறே,) அதனால் எதிரே நிறுத்தப்பட்ட போலி
பொருளும் (அறிதற்கு உரியதில்லை) [அப்பொய்யறிவுக்கு விஷயமான பொ
தோற்றமாதலால் அதுவும் அறிதற்குயோக்யமானதில்லை.] மற்றும், நித்யகர்மங்க
செய்யாமையாகிய இன்மையினின்றும் குற்றமாகிய உண்மை உண்டாகமாட்ட
"பொய்ம்மைக்கு உண்மை இல்லை "(உ - கசு)எனவும், " இன்மையினின்றும் உ
எப்படிஉண்டாகும்?"(சா - சு - உ - உ)எனவும் இன்மையினின்றுஉண்மைஉண்ட
மறுத்தலின். இன்மையினின்று உண்மை உண்டாதலைக் கூறுபவரால், " இன்
உண்மையாகும், உண்மையும் இன்மையாகும்" எனக் கூறப்பட்டதாகும். அ
நேரன்று ; ஸகலநியாயங்களுக்கும் முரண்படுதலின். இன்னும், சாஸ்திரம
பயனில்லாத கர்மத்தை விதிக்காது ; (இது)துன்பவடிவமாதலாலும், துன்பத்
தெரிந்துவேணுமென்று செய்துகொள்ளுதல் அமையாதாதலாலுமென்க.
அதனைச்செய்யாதவிஷயத்தில் நரகத்துவீழ்தலை ஒத்துக்கொள்வதனால், செய்த
செய்யாவிட்டாலும் இருவிதத்திலும் கெடுதிக்காகவே யுள்ள சாஸ்திரம

[illegible]

௧௯. யஸ்ய ஸர்வே ஸமாரம்பா: காமஸங்கல்பவர்ஜிதா: |
ஞானாக்நிதக்தகர்மாணம் தமாஹு: பண்டிதம் புதா: ||

[illegible]

௧௯. எவனுடைய காரியங்களெல்லாம், ஆசையும் அபிமானமும் அற்றனவோ, அவனை (அதாவது) ஞானமாகிய தீயினால் ... கர்மமும் எரிக்கப்பெற்றவனை ஞானிகள் "பண்டிதன்" என்கிறார்கள்.

[illegible] (தான்) செய்யும் கர்மங்களெல்லாம், ஆசைகளும் அவற்றிற்குக் காரணமான அபிமானங்களும் அற்ற வெறுஞ்செய்கைகளாக மாத்திரம் இருக்கின்றனவோ, (அவன் உலகவாழ்க்கையை) மேற்கொண்டவனாயின், உலகத்தை நலப்படுத்துதற்காக (அக்கர்மங்களைச் செய்கிறான்; அவன் அவ்வுலகவாழ்க்கையினின்று) ஒதுங்கியவனாயின், தன் சரீரத்திற்காக (அவற்றைச் செய்கிறான்) எவனுடைய கர்மங்கள் (எல்லாம்), கர்மத்தில் அகர்மத்தையும் அகர்மத்தில் கர்மத்தையும் காண்பதான ஞானமென்னும் தீயினால் எரிக்கப்பட்டனவோ, அவனை ஞானிகளான பரம்பொருளின் தத்துவத்தை அறிந்தவர்கள் [பரம்பொருளை அறிந்தவர்கள்] உண்மையான பண்டிதன் என்கிறார்கள். (௧௯)

𑌯𑌸𑍍𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑍌 𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌦𑌰𑍍𑌶𑍀 𑌸𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌵 𑌨𑌿𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑌾 𑌸𑌂-
𑌨𑍍𑌯𑌾𑌸𑍀 𑌜𑍀𑌵𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌚𑍇𑌷𑍍𑌟𑌃 𑌸𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍
𑌵𑌿𑌵𑍇𑌕𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 । 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌾 𑌸𑌨𑍍 𑌉𑌤𑍍𑌤𑌰𑌕𑌾𑌲𑌂 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍-
𑌶𑌨𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌮𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌸𑌸𑌾𑌧𑌨𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯-
𑌜𑌤𑌿 𑌏𑌵 । 𑌸 𑌕𑍁𑌤𑌶𑍍𑌚𑌿𑌨𑍍 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌾𑌸𑌂𑌭𑌵𑍇 𑌸𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿
𑌤𑌤𑍍𑌫𑌲𑍇 𑌚 𑌸𑌂𑌗𑌰𑌹𑌿𑌤𑌤𑌯𑌾 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑍍𑌥𑌂 𑌪𑍂-
𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨𑍈𑌵 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑌰𑍋𑌤𑌿, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ।
𑌤𑌦𑍀𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌅𑌕𑌰𑍍𑌮𑍈𑌵 𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌮𑌰𑍍𑌥𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌨𑌾𑌹—

௨௦. 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌾𑌸𑌂𑌗𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍃𑌪𑍍𑌤𑍋 𑌨𑌿𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 ।
𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌭𑌿𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨𑍈𑌵 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑌃 ॥

𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌅𑌭𑌿𑌮𑌾𑌨𑌂 𑌫𑌲𑌾𑌸𑌙𑍍𑌗𑌂 𑌚 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌨𑌿𑌤𑍍𑌯-
𑌤𑍃𑌪𑍍𑌤𑌃 𑌨𑌿𑌰𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑍋 𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍁 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌨𑌿𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 𑌆𑌶𑍍𑌰𑌯𑌰𑌹𑌿𑌤𑌃,
𑌆𑌶𑍍𑌰𑌯𑍋 𑌨𑌾𑌮 𑌯𑌤𑍍 𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑌿𑌸𑌾𑌧𑌯𑌿𑌷𑌤𑌿, 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑍇-
𑌷𑍍𑌟𑌫𑌲𑌸𑌾𑌧𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌰𑌹𑌿𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌤𑍇𑌨 𑌏𑌵𑌂𑌭𑍂𑌤𑍇𑌨 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌾-

உலகத்திற்கு நல்லொழுக்கத்தை நடத்திக்காட்டும் ஞானியின் ஒழுக்கம்.

இனி, கர்மத்தில் அகர்மத்தையும் அகர்மத்தில் கர்மத்தையும் காண்பவன் எவனோ, அவன் (ஆத்மா அநாத்மாக்களைப்) பகுத்தறிதற்குமுன் (கர்மத்தை) மேற்கொண்டவனாயினும்,(அவற்றைப் பகுத்தறிந்தபின்)கர்மம்முதலானவற்றிலே அகர்மம் முதலானவற்றைக் காண்பதனாலேயே கர்மம் நீங்கியவனாய், துறவியாய், ஜீவித்தற்குமாத்திரம்வேண்டிய செய்கையை யுடையவனாய் (இருப்பதனால்) கர்மத்தை மேற்கொள்வதில்லை. ஆனால், எவன் கர்மத்தைச் செய்துவருகையிலே, பின்பு, ஆத்மாவை உள்ளபடி உணரும் அறிவுண்டாகப்பெற்ற (ஞானியா)வனோ[ஒருவன் கர்மத்தைச் செய்துவருகையிலே, அவனுக்குச் சீக்கிரமாகவாவது தாமதமாகவாவது ஆத்மஞானம் உண்டாகலாமாதலின்,அப்பொழுது அவ்வாறு ஞானம் உதிக்கப்பெற்றவன் எவனோ], அவன் எக்கர்மத்திலும் பயனைக் காணாதவனாய், கர்மத்தையும்(அதற்கான)கருவிகளையும் துறந்தேவிடுகிறான். அவன் ஏதோ ஒருகாரணத்தால் கர்மத்தைத் துறக்கக்கூடாம லிருக்கும்போது, கர்மத்திலும் அதன் பயனிலும் பற்றில்லாமையினால் தனக்கு ஒருபயனும் இல்லையாகவே, உலகத்தை நல்வழிப்படுத்தும்பொருட்டு முன்போலவே கர்மத்தை மேற்கொண்டிருந்தாலும், (அவன்) ஒன்றுஞ் செய்கிறானே இல்லை; ஞானமென்னும் தீயினால் கர்மம் (எல்லாம்) எரிக்கப்பட்டமையின், அவனுடைய கர்மமானது அகர்மமாகவே ஆகின்றது. என்ற இவ்விஷயத்தை உணர்த்தும்பொருட்டு(ப் பகவான்) கூறுகிறார்:

௨௦. *கர்மத்தின் பயனிலே பற்றை விட்டு, எப்பொழுதும் திருப்தியுடையவனாய் ஆச்ரயமின்றி நிற்கின்றவன் கர்மத்தை மேற்கொண்டிருந்தாலும், அவன் ஒன்றுஞ் செய்கின்றானே இல்லை.* [ஆச்ரயம் - ஒருபொருளினுடைய அபேக்ஷை.]

ர்) கீழ்க்கூறிய ஞானத்தால் கர்மங்களிலே அபிமாநத்தையும்,
ிட்டு எப்பொழுதும் திருப்தியுள்ளவன், விஷயங்களிலே விருப்
(ஒருவன்)எதனைச் சார்ந்துநின்று தனக்குவேண்டிய
கின்றானோ, அது - ஆச்ரயம். (அஃதில்லாதவன்),
மைப்பயன்களுக்கான ஸாதநங்களை ஆச்ரயிக்காத
ன்றபடி. இவ்வாறுள்ள அ(ந்த ஞானியான)வன்

[illegible]

௭௧. ஆசை நீங்கி, பயத்தையும் கவலையும் [இந்திரியங்களையும் சித்தத்தையும்] அடக்கி, (தனது பணம், வீடு, புதல்வர்) என்ற உடைமைகளையும் விட்டுவிட்டு, சரீர யாத்திரையைமாத்திரம் செய்பவன் சாந்தியை அடைகிறான். [சரீரயாத்திரை — சரீரம் நிலைத்திருப்பதற்குமாத்திரம் வேண்டிய காரியம்.]

எவனிடத்திலிருந்து ஆசைகள் போய்விட்டனவோ, எவனுக்கு அகங்காரமும், வெளியே தோற்றமான தேகேந்திரியங்களின் சேர்க்கையாகிய இரண்டும் அடங்கிவிட்டனவோ, (இன்னும் [illegible] தனது பொருள், வீடு முதலிய) உடைமைகள் ஒழிக்கப்பட்டனவோ, அவன் (தனது) சரீரம் நிலைத்திருப்பதற்குமாத்திரம்

𑌯𑌤𑍇 𑌸𑌃 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌰𑍍𑌵𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌃, 𑌶𑌾𑌰𑍀𑌰𑌂 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌅𑌭𑌿𑌮𑌾𑌨𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌨 𑌆𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌮𑍍 𑌅𑌨𑌿𑌷𑍍𑌟𑌰𑍂𑌪𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌚 । 𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌪𑌿 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍋𑌃 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌮𑍇𑌵 𑌬𑌨𑍍𑌧𑌾-𑌪𑌾𑌦𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌭𑌵𑌤𑌿, 𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌤𑍍 𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

'𑌶𑌾𑌰𑍀𑌰𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌕𑌰𑍍𑌮' 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌕𑌿𑌂 𑌶𑌰𑍀𑌰𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌂 𑌶𑌾𑌰𑍀𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑌮𑍍? 𑌆𑌹𑍋𑌸𑍍𑌵𑌿𑌤𑍍 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 𑌶𑌾𑌰𑍀𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌇𑌤𑌿?

𑌕𑌿𑌂 𑌚 𑌅𑌤𑌃—𑌯𑌦𑌿 𑌶𑌰𑍀𑌰𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌂 𑌶𑌾𑌰𑍀𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮, 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌶𑌰𑍀𑌰-𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 𑌶𑌾𑌰𑍀𑌰𑌮𑍍 𑌇𑌤𑌿? ॥

𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

𑌯𑌦𑌾 𑌶𑌰𑍀𑌰𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌶𑌾𑌰𑍀𑌰𑌮𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌤𑌦𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾-𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌮𑌪𑌿 𑌶𑌰𑍀𑌰𑍇𑌣 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌬𑍍𑌰𑍁𑌵𑌤𑍋 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌸𑌜𑍍𑌯𑍇𑌤 । 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌯𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌮 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾-𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 𑌶𑌰𑍀𑌰𑍇𑌣 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌪𑌿 𑌬𑍍𑌰𑍁𑌵𑌤𑌃 𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃 । '𑌶𑌾𑌰𑍀𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍' 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌾𑌤𑍍 𑌕𑍇𑌵𑌲𑌶𑌬𑍍𑌦𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌾𑌚𑍍𑌚 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌵𑌿𑌧𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧-

---

வேண்டிய செய்கையைமட்டும், அதினுங்கூட அபிமானமில்லாது செய்பவனுய்த் தீமையாகிய பாவத்தையும்,புண்யத்தையும் அடைவதில்லை.(ஸம்ஸாரத்தினின்றும்)விடு படவிரும்புவோனுக்குப் புண்யமும் பாவமேதான் ; (பிறப்பிறப்பு முதலியஸம்ஸாரக்) கட்டை விளைப்பதாதலின். ஆதலால், (அவன்) அவற்றினின்றும் நீங்கினவனுகிறான், ஸம்ஸாரத்தினின்றும் விடுபட்டவனுகிறான் என்பது பொருள்.

" சாரீரகர்மத்தை மாத்திரம் " என்றவிடத்து, சரீரத்தால் செய்யத்தக்க கர்மம் - சாரீரகர்மம் என்று கருத்தா ? அல்லது, சரீரம் நிலைத்திருப்பதற்குமாத்திரம் வேண்டிய கர்மம் - சாரீரகர்மம் என்று கருத்தா ?

ஆகவே, இன்னும், (ஒருவினு வருமாறு) :—சரீரத்தால் செய்யத்தக்க கர்மம் சாரீரகர்மம் என்றால், (வரும் குற்ற மென்ன ?) அல்லது, சரீரம் நிலைத்திருப்பதற்கு மாத்திரம் வேண்டிய கர்மம் - சாரீரகர்மம் என்றால், (வரும் பயனென்ன ?)

- றுவோம் :

)வகை):—சரீரத்தால்செய்யத்தக்க கர்மம்-சாரீரகர்மம் என்றால்,இம்மை

ஊ விளைப்பதாய்(ச் சாஸ்திரத்தில்) விலக்கப்பட்ட கர்மத்தையும்

: அடையமாட்டான் என்றுசொல்வார்க்கு, அப்பொழுது (அச்

டக் கூறுதல் (என்னும் குற்றம்) வரும். இனி, "இம்மைமறு

ஸ்திரத்தில் விதிக்கப்பட்டதுமான கர்மத்தைச் செ

" என்றுசொல்வார்க்கும், வாராததை விலக்கு

'சாரீரகர்மத்தைச்செய்பவன்" என்னும் விசேஷ

யோகத்தினுலும் "விதிவிலக்குக்களைப்

(௩௯) உடைமைகளெல்லாவற்றையும் கைவிட்ட பதிக்கு சரீரம் இருத்தி
ருப்பதற்குக் காரணமான உணவு முதலிய உடைமை இல்லாமையின், இரத்தல் முதலி

प्राप्तस्य अन्नादेः याचनादिना शरीरस्थितिकर्तव्यतायां प्राप्तायाम्
'अयाचितमसंक्लृप्तमुपपन्नं यदृच्छया' इत्यादिना वचनेन अनुज्ञात
यतेः शरीरस्थितिहेतोः अन्नादेः प्राप्तिद्वारम् आविष्कुर्वन्नाह —

२२. यदृच्छालाभसंतुष्टो द्वन्द्वातीतो विमत्सरः ।
समः सिद्धावसिद्धौ च कृत्वापि न निबध्यते ॥

यदृच्छालाभसंतुष्टः अप्रार्थितोपनतो लाभो यदृच्छालाभ
स्तेन संतुष्टः संजातालंप्रत्ययः। द्वन्द्वातीतः द्वन्द्वैः शीतोष्णादिभि
र्हन्यमानोऽपि अविषण्णचित्तः द्वन्द्वातीतः उच्यते। विमत्सरः विगतमत्सर
निर्वैरबुद्धिः समः तुल्यः यदृच्छालाभस्य सिद्धौ असिद्धौ च । य
एवंभूतो यतिः अन्नादेः शरीरस्थितिहेतोः लाभालाभयोः समः हर्ष
विषादवर्जितः कर्मादौ अकर्मादिदर्शी यथाभूतात्मदर्शननिष्ठ
शरीरस्थितिमात्रप्रयोजने भिक्षाटनादौ कर्मणि शरीरादिनिर्वर्त्ये-
"नैव किंचित्करोम्यहम्, इन्द्रियाणीन्द्रियार्थेषु वर्तन्ते" इत्येवं सद
संपरिचक्षाणः आत्मनः कर्तृत्वाभावं पश्यन् नैव किंचित् भिक्षाटना

யவற்றால் சரீரத்தை நிலைத்திருக்கச் செய்யவேண்டும் என்று அமைந்தது ; அமைய
வே, யதிக்குச் சரீரம் நிலைத்திருப்பதற்குக் காரணமான உணவு முதலானவை கிடை
க்கும் வழியானது, "(பிக்ஷை பிறரிடம்) இரக்கப்படாததாக, (முன்னமே) அமர்
திவைக்கப்படாததாக, தற்செய்லாய் [தன் பிரயத்தினமின்றி]க் கொண்டுவரப
பட்டதாக(இருக்கவேண்டும்)" (போ - உ - அ - கஉ)என்பது முதலான வசநங்களால்
அநுமதிபெற்றதென்பதை வெளிப்படுத்தக் கூறுகிறார் :

**உஉ. தானாகக் கிடைப்பதைக்கொண்டு திருப்தியடைந்தவன், த்வந்தங்களை
கடந்தவன் : பொறாமையில்லாதவன் : (உணவுமுதலியன)கிடைத்தலிலும் கிடையாமை
யிலும் ஒப்பாகிற்பவன். (அவன் ஒருகர்மத்தைச்)செய்தாலும், (அதனால்)கட்டப்படுவ
தில்லை.**

தானாகக்கிடைப்பதென்பது - (தான் பிறரிடம்)வேண்டாது வருவது. அத
னால்(இது)போது மென்றஎண்ணம்வந்தவன் (ஞானியாவன்). குளிர்வெப்பம்முதலிய
வற்றால் தாக்கப்பட்டாலும், மனம்வருந்திக் கலங்காதவன் - த்வந்தங்களைக் கடந்த
வன் எனப்படுகிறான். பொறாமை நீங்கினவன் - வைரமில்லாப் புத்தியுடையோன். த
செயலாய்க் கிடைப்பது(தனக்கு) அமைந்தாலும் அமையாவிட்டாலும் (அவன்)ஸம
மானவன். இவ்வாறான எந்த யோகியானவன் சரீரம் நிலைத்திருப்பதற்குக் காரண
...தலியவை கிடைத்தாலும் கிடையாவிடினும் ஸமமாயிருந்து, ஸந்தோ
...மில்லாது, கர்மம் முதலானவற்றிலே அகர்மம் முதலானவற்றை
...ள்ளபடிஉணர்தலிலே உறுதியாகநின்று, சரீரம் நிலைத்திருப்ப
...வும் சரீரம்முதலியவற்றால் செய்யப்படுவனவுமாகிய
...லான கர்மங்களிலே "நான் ஒன்றுஞ்செய்கிறேனில்லை
...செல்லுகின்றன" என்று இவ்வாறாக எப்பொழு
...ல்லை என்பதைக் காண்பவனாய் (இருக்கின்ற
...தலிய ஒரு கர்மத்தையும் செய்வதே இல்லை

உ௩. பற்றிலாதவனும், விடுபட்டவனும், ஞானத்திலே மனம் நிலைத்தவனாகச் செய்கிறவனுடைய கர்மமெல்லாம் கரைந்துபோகின்றன.

गतसङ्गस्य सर्वतो निवृत्तासक्तेः मुक्तस्य निवृत्तधर्माधर्मादिबन्धनस्य ज्ञानावस्थितचेतसः ज्ञाने एव अवस्थितं चेतः यस्य सोऽयं ज्ञानावस्थितचेताः तस्य यज्ञाय यज्ञनिर्वृत्त्यर्थम् आचरतः निर्वर्तयतः कर्म समग्रं सह अग्रेण फलेन वर्तते इति समग्रं कर्म तत् समग्रं प्रविलीयते विनश्यति इत्यर्थः ॥ ௨௩ ॥

कस्मात् पुनः कारणात् क्रियमाणं कर्म स्वकार्यारम्भम् अकुर्वत् समग्रं प्रविलीयते इति? उच्यते यतः—

௨௪. ब्रह्मार्पणं ब्रह्म हविर्ब्रह्माग्नौ ब्रह्मणा हुतम्।
ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्मसमाधिना ॥

ब्रह्म अर्पणं येन करणेन ब्रह्मविद् हविः अग्नौ अर्पयति तद् ब्रह्मैव इति पश्यति, तस्य आत्मव्यतिरेकेण अभावं पश्यति, यथा शुक्तिकायां रजताभावम्; तद् उच्यते ब्रह्मैव अर्पणम् इति, यथा यद् रजतं तत् शुक्तिकैवेति। 'ब्रह्म, अर्पणम्' इति असमस्ते पदे। यद् अर्पणबुद्ध्या गृह्यते लोके तद् अस्य ब्रह्मविदः ब्रह्मैव इत्यर्थः। ब्रह्म हविः तथा यद् हविर्बुद्ध्या गृह्यमाणं तद् ब्रह्मैव अस्य। तथा ब्रह्माग्नौ इति समस्तं पदम्। अग्निरपि ब्रह्मैव यत्र हूयते

எல்லாவற்றினின்றும் பற்று ஒழியவும், தருமம்அதர்மம்முதலானகட்டினின்று (தான்) நீங்கவும், ஞானத்திலேயே மனம் நிலைக்கவும் பெற்று, பகவானுடைய பிரீதிக்காகச் செய்கிறவனுடைய கர்மமானது பயனோடு கரைந்துபோகின்றது : (அவனுக்கு அக்கர்மமும், அதன் பயனும்) இல்லாமற்போகின்றன என்பது பொருள். (௨௩)

ஞானமேன்னும் யாகம்.

மற்று, எக்காரணத்தால் (அவன்) செய்யும் கர்மமானது தன்பயனை விளைவித்தலைச்செய்யாது முழுதும் இல்லாமற்போவதென்பது ? கூறுவோம் : ஏனெனில்,

௨௪. **அர்ப்பிப்பது ப்ரஹ்மம் : ஹவிஸ் ப்ரஹ்மம் : அக்நியாகிய ப்ரஹ்மத்திலே (யஜமானனாகிய) ப்ரஹ்மத்தால் ஹோமஞ் செய்யப்படுதல் ப்ரஹ்மம் : ப்ரஹ்மமாகிய கர்மத்திலே ஸமாதியுள்ள அவனால் அடையப்படுவது (ம்) ப்ரஹ்மமே.**

ப்ரஹ்மத்தை அறிந்தவன் எக்கருவியினால் ஹவிஸை அக்நியில் இடுகின்றானோ, அது ப்ரஹ்மம்தான் எனக்காண்கிறான். இப்பியிலே வெள்ளியின்மையை[இப்பியன்றி வெள்ளி இல்லையென]க் காண்பதுபோல, ஆத்மாவன்றி அஃதில்லை யெனக் காண்கிறான். ஆதலால், ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி ப்ரஹ்மமே எனப்படுகின்றது. உதாரணமாக, வெள்ளியாகத் தோற்றுவது இப்பியாகவே இருப்பதுதான் என்க. ப்ரஹ்ம, அர்பணம் என்பன தொகாநிலைச் சொற்கள். உலகத்தில் (ஜனங்கள்) எதனை, (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவியெனக் கொள்கிறார்களோ, அது இந்த ஆத்மஞானிக்கு ப்ரஹ்மமே என்பது பொருள். அவ்வாறே, (அவர்கள்) எதனை ஹவிஸ் எனக்கொள்கிறார்களோ, அது அவனுக்கு ப்ரஹ்மமேதான். அவ்வண்ணமே [முன்போல அல்லாது], ப்ரஹ்மாக்நௌ என்பது தொகைநிலைப்பதம். (யஜமானனாகிய)செய்பவனென்னும் ப்ர

ஹோமஞ்செய்கின்றதோ, (அந்த) அக்நியும்

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌕𑌰𑍍𑌤𑍍𑌰𑌾, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌕𑌰𑍍𑌤𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌯𑌤𑍍 𑌤𑍇𑌨 𑌹𑍁𑌤𑌂 𑌹𑌵𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌤𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 । 𑌯𑌤𑍍 𑌤𑍇𑌨 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌫𑌲𑌂 𑌤𑌦𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑌾𑌧𑌿𑌨𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌕𑌰𑍍𑌮 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌮𑌾𑌧𑌿𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑌾𑌧𑌿𑌃 𑌤𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑌾𑌧𑌿𑌨𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 ॥

𑌏𑌵𑌂 𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌂 𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑍁𑌣𑌾𑌽𑌪𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌃 𑌅𑌕𑌰𑍍𑌮, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑍁𑌪𑌮𑍃𑌦𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌏𑌵𑌂 𑌸𑌤𑌿 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌽𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌯𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌸𑌂𑌪𑌾𑌦𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌸𑍁𑌤𑌰𑌾𑌮𑍁𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇; 𑌯𑌤𑍍 𑌅𑌰𑍍𑌪𑌣𑌾𑌦𑌿 𑌅𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑍇 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌤𑌤𑍍 𑌅𑌸𑍍𑌯 𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑌿𑌨 𑌇𑌤𑌿 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍍𑌵𑍇 𑌅𑌰𑍍𑌪𑌣𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑍇𑌵 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 𑌅𑌨𑌰𑍍𑌥𑌕𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌜𑌾𑌨𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑌃, 𑌕𑌾𑌰𑌕𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌭𑌾𑌵𑌾𑌚𑍍𑌚 । 𑌨 𑌹𑌿 𑌕𑌾𑌰𑌕𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌹𑌿𑌤𑌂 𑌯𑌜𑍍𑌞𑌾𑌖𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑍍 । 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌶𑌬𑍍𑌦𑌸𑌮-

---

ப்ரஹ்மமேதான். செய்பவன் ப்ரஹ்மமே என்பது (இங்கே சொல்லுவான்) குறிப்பு. அவன் ஹோமஞ் செய்தலென்னும் தொழில், ப்ரஹ்மம்தான். அதனால் அடையவேண்டிய பயன் எதுவோ, அதுவும் ப்ரஹ்மம்தான். ப்ரஹ்மமாகிய கர்மத்திலே ஸமாதியுடைய [ப்ரஹ்மத்தைக் காண்பதாகிய கர்மத்திலே தலைப்பட்டு அந்த ப்ரஹ்மத்தையே எங்கும் காண்ப]வனால் அடையப்படுவது(ம்) ப்ரஹ்மமேதான் என்க.

இவ்வாறு, உலகத்தை நல்வழிப்படுத்த விரும்புவோனும் செய்கின்ற கர்மமானது உண்மையாகவே அகர்மமாம்; (ஸகலமும்) ப்ரஹ்மமென்ற புத்தியினாலே (கர்மமென்னும் புத்தியானது) தள்ளுண்டுபோனமையின். இவ்வாறுள்ளதனால், (ஒருவன்) கர்மத்தினின்றும் ஒழிந்தவனானாலும், ஸகலகர்மங்களையும் துறந்த (அ)வனுடைய மெய்யறிவைப் புகழ்தற்பொருட்டு ஞானத்திலே யஜ்ஞத்தை ஏற்றிக்கூறுதல் நன்றாகப் பொருந்துகின்றது. வாஸ்தவமான யாகத்திலே வழங்கப்படுவனவாகிய (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி முதலியன எவைகளோ, அவைகள், பரம்பொருளைக் காண்கின்ற இவனுக்குத் தன் ஆத்மாவான ப்ரஹ்மமேதான் என்பது. அவ்வாறில்லாவிட்டால், ஸகலமும் ப்ரஹ்மமாயிருக்க, (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி முதலியவற்றைமாத்திரம் ப்ரஹ்மமாகச் சிறப்பித்துக் கூறுதல் பயனில்லாததாகும். ஆகவே, "இதெல்லாம் ப்ரஹ்மமேதான்" என்று அறிகிறவனுக்குக் கர்மமில்லை. அன்றியும், காரகத்தைப்பற்றிய எண்ணமே இல்லையாதலாலும், (அவனுக்குக் கர்மமில்லை யென்க. காரகம் - ஒரு தொழில் உண்டாகிமுடிவுபெறுதற்கு உபயோகமா யிருப்பது. யஜமானன் இந்திரனுக்கு ஹவிஸை அகப்பையினால் அக்நியிலே அர்ப்பித்தான் என்றவிடத்து, அர்பித்தலென்னும் தொழிலுக்கு யஜமானன் என்பது செய்பவனென்னும் காரகம்: இந்திரனுக்கு என்பது கொள்பவனென்னும் காரகம்: ஹவிஸை என்பது செயப்படுபொருளென்னும் காரகம்: அகப்பையினால் என்பது கருவியென்னும் காரகம்: அக்நியிலே என்பது இடமென்னும் காரகம். இவ்வாறே மற்றையதையும் கண்டுகொள்க.) யாகமெனப்படும் கர்மமானது காரகபுத்தியில்லாததாகக் காணபடவில்லையன்றோ. அக்நிஹோத்ரம் முதலிய ஸகலமுமே (ஹவிஸை, 'இந்திரனுக்கு' 'அக்நிக்கு' என்பனமுதலா

प्रदेयत्वेन देवताविशेषसम्प्रदानादिकारकभेदबुद्धिमत् कर्त्रभिमानफलाभिसन्धिमच्च दृष्टम्; न उपमृदितक्रियाकारकफलभेदबुद्धि कर्तृत्वाभिमानफलाभिसन्धिरहितं वा । इदं तु ब्रह्मबुद्ध्युपमृदितार्पणादिकारकक्रियाफलभेदबुद्धि कर्म । अतः अकर्मैव तत् । तथा च दर्शितम् 'कर्मण्यकर्म यः पश्येत्' 'कर्मण्यभिप्रवृत्तोऽपि नैव किञ्चित् करोति सः' 'गुणा गुणेषु वर्तन्ते' 'नैव किञ्चित् करोमीति युक्तो मन्येत तत्त्ववित्' इत्यादिभिः । तथा च दर्शयंस्तत्र तत्र क्रियाकारकफलभेदबुद्ध्युपमर्दं करोति । दृष्टा च काम्याग्निहोत्रादौ कामोपमर्देन काम्याग्निहोत्रादिहानिः । तथा मतिपूर्वकामतिपूर्वकादीनां कर्मणां कार्यविशेषस्य आरम्भकत्वं दृष्टम् । तथा इहापि ब्रह्मबुद्ध्युपमृदितार्पणादिकारकक्रियाफलभेदबुद्धेः बाह्यचेष्टामात्रेण कर्मापि विदुषः अकर्म सम्पद्यते । अतः उक्तं 'समग्रं प्रविलीयते' इति ॥

கச்) சொல்லிக் கொடுக்கப்பெறும் சிறப்புத்தெய்வமாகிய கொள்பவனென்னும் காரகத்தையும், மற்றுமிதுபோன்ற காரகத்தையும்பற்றின எண்ணத்தையும், (நான்)செய்பவனென்னும் அபிமாநத்தையும், பயனை எதிர்நோக்குதலையும் உடைய கர்மமாகக் காணப்படுவதேயன்றி, செய்கை யென்பதும், காரகமென்பதும், பயனென்பதுமான பேதபுத்தி ஒடுபடப்பெற்றதாகவாயினும், (நான்) செய்பவன்என்னும் அபிமாநமும் பயனை எதிர்நோக்குதலும் இல்லாததாகவாயினும் காணப்படவில்லை. இதுவோ[ஞானயஜ்ஞமோ](ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவிமுதலான காரகமென்பதும் செய்கையென்பதும் பயனென்பதுமான பேதபுத்தி, (ஸகலமும்) ப்ரஹ்மமென்ற புத்தியினால் தள்ளுண்டுபோகப்பெற்ற கர்மமாம். ஆகவே, அது அகர்மமேயென்க. அவ்வண்ணமே "எவன்கர்மத்தில்" (ச - கஅ), "கர்மத்தை மேற்கொண்டிருந்தாலும்" (ச - உ0), "குணங்கள்" (ங - உஅ), "(நிஷ்டை)கூடி உண்மை உணர்ந்தவன்" (ரு - அ) என்பன முதலியவற்றால் (அது) உணர்த்தப்பட்டது. அவ்வாறே (பகவான்), செய்கையென்பதும் காரகமென்பதும் பயனென்பதுமான பேதபுத்தி விண்டுபோதலைச் செய்கிறார் [அப்பேதபுத்தியை நீங்கும்படி செய்கிறார்]. இனி, காம்யமான அக்நிஹோத்ரம் முதலியவற்றிலே காமமானது போய்விட [பயனை விரும்பாதுஅவற்றைச்செய்ய],(அவை) காம்யாக்நிஹோத்ரம் முதலியவையாக ஆவதில்லை யென்பதும், அவ்வாறே,(இத்தொழிலை நான் செய்யவேண்டும், இதன் பயனை நான் அநுபவிக்கவேண்டும்) என்னும்எண்ணத்தோடாயினும், எண்ணமில்லாதாயினும், வேறுவகையாகவாயினும்(செய்யப்படும்) கர்மங்கள் [illegible]க்குஉரிய பயன்களை விளைக்கின்றன வென்பதும் (நமக்குத்) தெரிந்
[illegible], (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவிமுதலான காரகமென்பதும்
[illegible]மான பேதபுத்தி விண்டுபோன ஞானியின் (தொ
[illegible]த்திரம் கர்மமாகத் தோன்றினும், அகர்ம
[illegible]து "ஸகல (கர்ம) மும் கரைந்துபோகின்றன"

अत्र केचिदाहुः—यद्ब्रह्म तत् स्रुवादीनि; ब्रह्मैव हि स्रुवादिना पञ्चविधेन कारकात्मना अवस्थितं सत् तदेव कर्म करोति। तत्र न स्रुवादिबुद्धिः निवर्त्यते; किं तु स्रुवादिषु ब्रह्मबुद्धिः क्रियते; यथा प्रतिमादौ विष्णुबुद्धिः, यथा वा नामादौ ब्रह्मबुद्धिः इति॥

सत्यम्, एवं स्याद्यदि ज्ञानयज्ञस्तुत्यर्थं प्रकरणं न स्यात्। अत्र तु तत्त्वज्ञानं ज्ञानयज्ञशब्दितम् अनेकान् यज्ञशब्दितान् क्रियाविशेषान् उपन्यस्य 'श्रेयान् द्रव्यमयाद्यज्ञाज्ज्ञानयज्ञः' इति ज्ञानं स्तौति। अत्र च समस्तमिदं 'ब्रह्मार्पणम्' इत्यादि ज्ञानस्य यज्ञत्वसम्पादने; अन्यथा सर्वस्य ब्रह्मत्वे स्रुवादीनामेव विशेषतो ब्रह्मत्वाभिधानमनर्थकं स्यात्। ये तु स्रुवादिषु प्रतिमायां विष्णुदृष्टिवत् ब्रह्मदृष्टिः क्रियते नामादिष्विव वेति ब्रुवते न तेषां ब्रह्मविद्या उक्ता इह विवक्षिता, स्रुवादिविषयत्वात् ज्ञानस्य।

இதில் சிலர் கூறுவர்:—எது ப்ரஹ்மமோ, அது (ஹவிஸை)அர்ப்பிக்கும் கருவி முதலியதாம். ப்ரஹ்மமே (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி முதலிய ஐந்து காரகவடிவமாய் இருந்துகொண்டு அதேகர்மத்தைச் செய்கின்றதென்பர். (ஐந்து காரகமாவன - செய்பவன், செயப்படுபொருள், கருவி, கொள்பவன், இடம் என முற்கூறப்பட்டவை. ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவியென்னும் புத்தியும், இன்னுமிதுபோன்ற புத்தியும் அதிலே நீக்கப்படுவதில்லை ; மற்று, (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி முதலானவற்றிலே ப்ரஹ்மமென்னும் புத்தியானது வைக்கப்படுகின்றது. விக்கிரகம் முதலானவற்றிலே விஷ்ணுமுதலான புத்திபோலவும், (பகவானுடைய) திருநாமம் முதலானவற்றிலே ப்ரஹ்மமென்னும் புத்திபோலவுமென்க.

உண்மை ; பிரகிருதமானது ஞானமென்னும் யஜ்ஞத்தைப் புகழ்தற்காக இல்லாவிட்டால், இப்படியும் இருக்கலாம். ஆனால், (பகவான்) யஜ்ஞமென்று சொல்லப்பட்ட பல கர்மவிசேஷங்களை எடுத்துக்கூறிப், பின்னே, ஞானயஜ்ஞமென்று சொல்லப்பட்ட மெய்யறிவாகிய ஞானத்தை "திரவியங்களாலாகும் யஜ்ஞத்தைக்காட்டிலும் ஞானயஜ்ஞம் மேலானது" (ச - கூ)எனப் புகழ்கின்றார். அன்றியும், இங்கே "அர்ப்பிப்பது ப்ரஹ்மம்"என்று தொடங்கும் இத்திருவாக்கானது ஞானத்தின்மீது யஜ்ஞத்தை ஏற்றிக்கூறுவதிலே கருத்துடையதென்க. அப்படியல்லாவிட்டால், ஸகலமும் ப்ரஹ்மமாயிருக்க, அர்ப்பிப்பது முதலானவற்றையே ப்ரஹ்மமாக விசேஷித்துக் கூறுதல் வீணாகும். மற்று, எவர்கள் விக்கிரகத்திலே விஷ்ணுவென்று நோக்குதல்போலவும், (பகவானுடைய) திருநாமம் முதலியவற்றிலே ப்ரஹ்மமென நோக்குதல்போலவும், (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி முதலானவற்றிலே ப்ரஹ்மமென்னும் நோக்கானது வைக்கப்படுகின்றது என்று கூறுகிறார்களோ, அவர்களுடைய (கருத்தின்படி பகவான்) இங்கு உபதேசிக்கவிரும்பியது, (இதுவரையிலும்) கூறிவந்த ப்ரஹ்மவித்தையை அன்று ; (இங்குக் கூறிய) அறிவானது (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி முத

𑌨 𑌚 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌸𑌂𑌪𑌾𑌦𑌨𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌮𑍋𑌕𑍍𑌷𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 । '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌤𑍇𑌨 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌚 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌂 𑌚 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌮𑍋𑌕𑍍𑌷𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 ॥

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌵𑌿𑌰𑍋𑌧𑌶𑍍𑌚; 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌂 '𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰, 𑌅𑌨𑍍𑌤𑍇 𑌚 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌉𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌾𑌤𑍍 । '𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑌯𑌾𑌦𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑌃' '𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌪𑌰𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌮𑍇𑌵 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌉𑌪𑌕𑍍𑌷𑍀𑌣𑌃 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 । 𑌤𑌤𑍍𑌰 𑌅𑌕𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌰𑍍𑌪𑌣𑌾𑌦𑍌 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌅𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌯𑌾𑌮𑌿𑌵 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌅𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌮𑍍 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌯𑌥𑌾𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌰𑍍𑌥 𑌏𑌵 𑌅𑌯𑌂 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃 ॥ ௨௪ ॥

𑌤𑌤𑍍𑌰 𑌅𑌧𑍁𑌨𑌾 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌯 𑌯𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌂 𑌸𑌂𑌪𑌾𑌦𑍍𑌯 𑌤𑌤𑍍𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑍍 𑌅𑌨𑍍𑌯𑍇𑌽𑌪𑌿 𑌯𑌜𑍍𑌞𑌾 𑌉𑌪𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑍇—

௨௫. 𑌦𑍈𑌵𑌮𑍇𑌵𑌾𑌪𑌰𑍇 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑌾𑌵𑌪𑌰𑍇 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨𑍈𑌵𑍋𑌪𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 ॥

வியவற்றைப்பற்றிய தாதலின். இனி, ப்ரஹ்மமென்று நோக்குதலை (ஒன்றிலே) ஏற்றிக்கொள்வதென்னும் ஞானத்தாலும் முக்தியாகிய பயனைப் பெறமுடியாது. ஆனால், "அதனால் ப்ரஹ்மமே அடையத்தக்கது" எனக்கூறப்படுகின்றது. மற்றும், மெய்யறிவுஇல்லாமல் முக்தியென்னும் பயனை அடையக்கூடு மென்பதும் விரோதமாகும்.

அன்றியும், பிரகிருதத்திற்கும் விரோதமென்க. "எவன் கர்மத்தில்" (௪ - ௧௮) என்றவிடத்தும், (இவ்வத்தியாய)முடிவிலும் எடுத்துக்கொண்ட விஷயம் மெய்யறிவு என்பது ; (அங்கு) அதனையே முடித்தலா லென்க. (இந்த) அத்தியாயமானது "திரவியங்களாலாகும் யஜ்ஞத்தைக்காட்டிலும் ஞானமென்னும் யஜ்ஞம் மேலானது" (௪-௩௩), "ஞானத்தை அடைந்து" (௪ - ௩௯) என்பனமுதலாக மெய்யறிவைப் பாராட்டுதலையே செய்துகொண்டு முற்றுப்பெற்றது. அது அவ்வாறுள்ளவளவிலே, விக்கிரகத்தில் விஷ்ணுவென்று நோக்குதல்போல, (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி முதலானவற்றிலே ப்ரஹ்மமென நோக்குதல், பிருகிருதமில்லாஇடத்திலே காரணமின்றிக் கூறப்படுகின்றதென்பது பொருந்தாது.

ஆதலால், இச்சுலோகத்திற்கு (யாம்) உரைத்தபடியே பொருளென்க. (௨௪)

கர்மத்தினால் செய்யப்படும் யஜ்ஞங்கள்.

...ாழுது மெய்யறிவிலே யஜ்ஞத்தை ஏற்றிக்கூறியபின், அதனைப் ...ற்றை ...ஞங்களையும் (பகவான்) எடுத்துக்கூறுகிறார் :

...தேவதைகளுக்கே யஜ்ஞத்தைச் செய்கிறார்கள் ;
...யிலே ஆத்மாவை ஆத்மாவினாலேயே ஹோமஞ்

𑌦𑍈𑌵𑌮𑍇𑌵 𑌦𑍇𑌵𑌾 𑌇𑌜𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑍇𑌨 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌅𑌸𑍌 𑌦𑍈𑌵𑍋 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌤𑌮𑍇𑌵 𑌅𑌪𑌰𑍇 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌕𑌰𑍍𑌮𑌿𑌣𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑍌 '𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮' '𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮' '𑌯𑌤𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌯 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌚𑌨𑍋𑌕𑍍𑌤𑌮𑌶𑌨𑌾-𑌯𑌾𑌦𑌿𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌸𑌾𑌰𑌧𑌰𑍍𑌮𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 '𑌨𑍇𑌤𑌿 𑌨𑍇𑌤𑌿' 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌾𑌶𑍇𑌷-𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌦𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑌃 । 𑌹𑍋𑌮𑌾𑌧𑌿𑌕𑌰𑌣-𑌤𑍍𑌵𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌯𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 । 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑍌 𑌅𑌪𑌰𑍇 𑌅𑌨𑍍𑌯𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌯𑌜𑍍𑌞𑌮𑍍—𑌯𑌜𑍍𑌞𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌃 𑌆𑌤𑍍𑌮𑌾, 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑌸𑍁 𑌯𑌜𑍍𑌞𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯 𑌪𑌾𑌠𑌾𑌤𑍍—𑌤𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌃 𑌪𑌰𑌮𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌨𑍍𑌤𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑍁𑌪𑌾𑌧𑌿𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌾𑌧𑌿𑌧𑌰𑍍𑌮𑌕𑌮𑌾𑌹𑍁𑌤𑌿𑌰𑍂𑌪𑌂 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨𑍈𑌵 𑌉𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑍇𑌨 𑌉𑌪𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌿𑌪𑌨𑍍𑌤𑌿, 𑌸𑍋𑌪𑌾𑌧𑌿𑌕𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌨𑌿𑌰𑍁𑌪𑌾𑌧𑌿𑌕𑍇𑌨 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣𑍈𑌵 𑌯𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌸 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌹𑍋𑌮𑌃 𑌤𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑍈𑌕𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

எந்த யாகத்தால் (இந்திரன்முதலிய) தேவர்கள் உபாஸிக்கப்படுகிறார்களோ, அது தைவமான யஜ்ஞம். அதேயஜ்ஞத்தைச் சில கர்மயோகிகள் அநுஷ்டிக்கிறார்கள். "ப்ரஹ்மம் மெய்ப்பொருளாயும், அறிவாயும்,முடிவில்லதாயு முள்ளது" (தை - உ-க) "ப்ரஹ்மம் அறிவும் ஆநந்தமு மாயிருப்பது" (பி - ௩ - கூ -உஅ), "எது ஸமீபத்திலும் தூரத்திலும் உள்ளதோ, எது எல்லாவற்றிற்கும் உள்ளேயுள்ள ஆத்மாவாகஇருக்கின்றதோ, (அது)ப்ரஹ்மம்"(பி-௩-உ-க) என்பனமுதலிய (சுருதி) வாக்கியங்களால் கூறப்பட்டு, பசி நீர்வேட்கைமுதலிய எவ்வித ஸம்ஸாரத்தன்மையுமின்றி, "அன்று அன்று" (பி - ச - ச - உஉ) என எத்தகைய சிறப்பியல்புமில்லாதது, ப்ரஹ்மமென்னும் சொல்லால் கூறப்படுகின்றது. ஹோமத்திற்கு இடமாகக்கொண்டதனால், ப்ரஹ்மம் அக்நி யென்க. ப்ரஹ்மத்தை அறிபவரான சிலர் ப்ரஹ்மமாகிய அக்நியிலே, உண்மையாகப் பரப்ரஹ்மமாகவே உள்ளதாய் புத்தி முதலிய உபாதிகளோடு கூடி (அதனால் தன்னிடத்து அவ்)வுபாதிகளின் தன்மையெல்லாம் ஏற்றப்பட்டுநிற்கும் ஆத்மாவாகிய ஆகுதியை, (கீழ்க்) கூறிய லக்ஷணமுள்ள [பசிமுதலிய எத்தகைய ஸம்ஸாரத்தன்மையும், எவ்விதமான சிறப்பியல்பு மில்லாத]ஆத்மாவினாலேயே அர்ப்பிக்கிறார்கள்: உபாதியுடைய ஆத்மாவை உபாதியில்லாத பரப்ரஹ்மஸ்வரூபமாகவே கண்டுதெளிதல் எதுவோ, அது அதிலே [ப்ரஹ்மத்திலே] ஹோமஞ்செய்தலென்பது; ப்ரஹ்மமும் தானும் ஒன்றெனக் காண்பதிலே உறுதியாகநிற்கும் துறவிகள் அதனைச் செய்கிறார்கள் என்பது (தேர்ந்த) பொருள். (யாஸ்கர்) ஆத்மாவின் பெயர்களுள் யஜ்ஞமென்னும்சொல்லை எடுத்துச்சொல்வதனால், யஜ்ஞமென்னும் சொல்லுக்கு - (இங்கு)ஆத்மா என்று பொருள். (எது தன் தன்மையை வேறொன்றனிடத்து இருப்பதாகத் தோற்றுவிக்கின்றதோ, அது உபாதியெனப்படும். ஒரு ஸ்படிகத்தின் அருகிலேயுள்ள செம்பருத்திப்பூவானது தன் தன்மையாகிய சிவப்புநிறத்தை அந்தஸ்படிகத்திலே இருப்பதாகத்தோற்றுவிக்கின்றது, அதாவது,அது ஸ்படிகமாகத் தோன்றாது சிவப்புக்கல்லாகவே தோன்றுகின்றது. ஆகவே ஸ்படிகத்திற்கு செம்பருத்திப்பூ உபாதியாம். அதுபோல, இங்கும் கண்டுகொள்க).

सोऽयं सम्यग्दर्शनलक्षणः यज्ञः दैवयज्ञादिषु यज्ञेषु उपक्षिप्यते 'ब्रह्मार्पणम्' इत्यादिश्लोकैः प्रस्तुतः 'श्रेयान् द्रव्यमयाद्यज्ञात् ज्ञानयज्ञः परन्तप' इत्यादिना स्तुत्यर्थम् ॥ ௨௫ ॥

௨௬. श्रोत्रादीनीन्द्रियाण्यन्ये संयमाग्निषु जुह्वति ।
शब्दादीन्विषयानन्य इन्द्रियाग्निषु जुह्वति ॥

श्रोत्रादीनि इन्द्रियाणि अन्ये योगिनः संयमाग्निषु । प्रतीन्द्रियं संयमो भिद्यते इति बहुवचनम् । संयमा एव अग्नयः तेषु जुह्वति इन्द्रियसंयममेव कुर्वन्ति इत्यर्थः । शब्दादीन् विषयान् अन्ये इन्द्रियाग्निषु इन्द्रियाण्येव अग्नयः तेषु इन्द्रियाग्निषु जुह्वति श्रोत्रादिभिः अविरुद्धविषयग्रहणं होमं मन्यन्ते ॥ ௨௬ ॥

किञ्च—

௨௭. सर्वाणीन्द्रियकर्माणि प्राणकर्माणि चापरे ।
आत्मसंयमयोगाग्नौ जुह्वति ज्ञानदीपिते ॥

सर्वाणि इन्द्रियकर्माणि इन्द्रियाणां कर्माणि, तथा प्राणकर्माणि प्राणो वायुः आध्यात्मिकः तत्कर्माणि आकुञ्चन-

---

"அர்ப்பிப்பது ப்ரஹ்மம்" (௪ - ௨௪) என்றுதொடங்கும் சுலோகத்திலே பிரஸ்தாபிக்கப்பட்ட மெய்யறிவுஎன்னும் அத்தகைய இந்தயஜ்ஞத்தை "பரந்தப! திரவியங்களாலாகும் யஜ்ஞத்தைக்காட்டிலும் ஞானயஜ்ஞம் மேலானது" (௪ - ௩௩) என்பதுமுதலாகக் கொண்டாடும்பொருட்டு தைவயஜ்ஞம்முதலிய யஜ்ஞங்களின் இடையே (அந்த ஞானயஜ்ஞத்தைப் பகவான்) வைத்தருளுகிறார். (௨௫)

௨௬. மற்றையோர்கள் செவிமுதலிய இந்திரியங்களை அடக்கமென்னும் அக்கினிகளில் ஹோமஞ்செய்கிறார்கள். வேறொருவர் ஓசைமுதலிய விஷயங்களை இந்திரியங்களென்னும் அக்கினிகளில் ஹோமஞ்செய்கிறார்கள்.

அடக்குதலென்பது ஒவ்வொரு இந்திரியத்திற்கும் வெவ்வேறுயுள்ளதென ('அக்கினிகளில்' என்னும்)பன்மை (வழங்கலாயிற்று).சிலயோகிகள் செவிமுதலிய இந்திரியங்களை, (அவற்றை) அடக்குதலென்னும் அக்கினிகளிலே ஹோமஞ்செய்கிறார்கள்: இந்திரிய அடக்கத்தையே செய்கிறார்கள் என்பது பொருள். சிலர் ஓசைமுதலியவிஷயங்களை இந்திரியங்களென்னும் அக்கினிகளில் ஹோமஞ்செய்கிறார்கள் : (சாஸ்திரத்திற்கு) விரோதமில்லாத விஷயங்களைச் செவிமுதலியவற்றால் கிரகிப்பதை(யே) ஹோமமாகக் கொள்கிறார்கள் [தமக்குக் கிடைத்தவற்றுள், விலக்கப்பட்ட விஷயங்களைத் மற்றையவற்றை அந்தந்த இந்திரியங்களால் விருப்பவெறுப்பில்லாது ர்க ளென்க.—ஆ.] (௨௬)

கள், இந்திரியங்கள் பிராணன் என்றவற்றின் தொழில்களை காசிப்பிக்கப்பட்ட ஆத்மஅடக்கமென்னும் யோகாக்கினியிலே

பிராண மென்பது - ஒவ்வொரு சரீரத்திலுமுள்ள வாயு. அதன் தொழில்-வளைதல், நிமிர்தல் முதலியன. ஆத்மஅடக்கமாவது - ஆத்மாவினிடத்து (மனத்தை அலையாது)நிறுத்துதல். அதுவே யோகமென்னும் அக்கினி. எண்ணெயினால் விளக்குப்

ப்ராணாதீநி தாநி ச அபரே ஆத்மஸம்யமயோகாக்நௌ ஆத்மநி ஸம்யம: ஆத்மஸம்யம: ஸ ஏவ யோகாக்நி: தஸ்மிந் ஆத்மஸம்யமயோகாக்நௌ ஜுஹ்வதி ப்ரக்ஷிபந்தி ஜ்ஞாநதீபிதே ஸ்நேஹேநேவ ப்ரதீபே விவேகவிஜ்ஞாநேந உஜ்ஜ்வலபாவம் ஆபாதிதே ஜுஹ்வதி ப்ரவிலாபயந்தி இத்யர்த்த: ॥ உஎ ॥

உஅ. த்ரவ்யயஜ்ஞாஸ்தபோயஜ்ஞா யோகயஜ்ஞாஸ்ததாபரே ।
ஸ்வாத்யாயஜ்ஞாநயஜ்ஞாஶ்ச யதய: ஸம்ஶிதவ்ரதா: ॥

த்ரவ்யயஜ்ஞா: தீர்த்தேஷு த்ரவ்யவிநியோகம் யஜ்ஞபுத்த்யா குர்வந்தி யே தே த்ரவ்யயஜ்ஞா: । தபோயஜ்ஞா: யே தபஸ்விந: தே தபோயஜ்ஞா: । யோகயஜ்ஞா: ப்ராணாயாமப்ரத்யாஹாராதிலக்ஷண: யோக: யஜ்ஞ: யேஷாம் தே யோகயஜ்ஞா: । ததா அபரே ஸ்வாத்யாயஜ்ஞாநயஜ்ஞாஶ்ச ஸ்வாத்யாய: யதாவிதி ருகாத்யப்யாஸ: யஜ்ஞ: யேஷாம் தே ஸ்வாத்யாயயஜ்ஞா: । ஜ்ஞாநயஜ்ஞா: ஜ்ஞாநம் ஶாஸ்த்ரார்த்தபரிஜ்ஞாநம் யஜ்ஞ: யேஷாம் தே ஜ்ஞாநயஜ்ஞா: । ஸ்வாத்யாயயஜ்ஞா: ஜ்ஞாநயஜ்ஞாஶ்ச யதய: யதநஶீலா: ஸம்ஶிதவ்ரதா: ஸம்யக் ஶிதாநி தநூக்ருதாநி தீக்ஷ்ணீக்ருதாநி வ்ரதாநி யேஷாம் தே ஸம்ஶிதவ்ரதா: ॥ உஅ ॥

கிஂ ச—

உகூ. அபாநே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணேऽபாநம் ததாபரே ।
ப்ராணாபாநகதீ ருத்த்வா ப்ராணாயாமபராயணா: ॥

(பிரகாசிப்பிக்கப்பெறுவது) போல, விவேகஅறிவினால் பிரகாசத் தன்மையை அடைவிக்கப்பெற்ற அந்தஅக்கினியிலே இந்திரியங்கள் பிராணன்இவற்றின் தொழில்களையெல்லாம் சிலர் அர்ப்பிக்கிறார்கள்: கரையச்செய்கிறார்கள், ஒடுங்கச்செய்கிறார்கள் என்பது பொருள் [ஸகலத் தொழிலையும் தடுத்து, ஆத்மாவினிடத்து மனம் தலைக்கூடுதலைச் செய்கிறார்க ளென்க.—ஆ.] (உஎ)

உஅ. மற்றையோர் திரவியமென்னும் யஜ்ஞத்தையுடையவர்: தபஸ்என்னும் யஜ்ஞத்தை யுடையவர்: யோகமென்னும் யஜ்ஞத்தையுடையவர்: ஓதுதலென்னும் யஜ்ஞத்தையுடையர்: ஞானமென்னும் யஜ்ஞத்தையுடையவர். இன்னும், சில யதிகள் கடுமையான விரதங்களையுடையவர்.

யோக்யர்கட்குப் பொருள் கொடுத்தலை, சிலர் யஜ்ஞமென்னும் புத்தியோடு செய்கிறார்கள். தவம்புரிபவர் எவரோ, அவர் தபஸ்என்னும் யஜ்ஞத்தைக் கொண்டவர். சிலர், பிராணனை அடக்குதலும் மனத்தை விஷயங்களினின்றும் உள்ளேமடக்குதலும் முதலிய யோகத்தை யஜ்ஞமாகக் கொண்டவர். சிலர், ரிக்வேதம் முதலானவற்றை அப்யஸித்தலை யஜ்ஞமாகக் கொண்டவர். சிலர், சாஸ்திரத்தின் பொருளை நன்குஉணர்தலென்னும் யஜ்ஞத்தைக் கொண்டவர். சிலர் ஊக்கமுள்ள இயல்பினராய் கடுமையான விரதங்களைக் கொண்டவர். (எனவே, இதனுள் ஆறு யஜ்ஞம் கூறப்பட்டன.) (உஅ)

அன்றியும்,

உகூ. சிலர் அபாநத்தில் பிராணனை ஹோமஞ்செய்கிறார்கள். அவ்வாறே சிலர், பிராணனில் அபாநத்தை ஹோமஞ் செய்கிறார்கள். சிலர் பிராண அபாநன்களுடைய போக்குக்களைத் தடுத்து, பிராணாயாமத்திலேயே கருத்தூன்றியவராய் இருக்கிறார்கள். [அபாநன் - உள்ளேவரும் மூச்சு, பிராணன் - வெளியே செல்லும் மூச்சு.]

अपाने अपानवृत्तौ जुह्वति प्रक्षिपन्ति प्राणं प्राणवृत्तिम्, पूरकाख्यं प्राणायामं कुर्वन्तीत्यर्थः । प्राणे अपानं तथा अपरे जुह्वति, रेचकाख्यं च प्राणायामं कुर्वन्तीत्येतत् । प्राणापानगती मुखनासिकाभ्यां वायोः निर्गमनं प्राणस्य गतिः, तद्विपर्ययेण अधोगमनम् अपानस्य गतिः, ते प्राणापानगती एते रुद्ध्वा निरुध्य प्राणायामपरायणाः प्राणायामतत्पराः कुम्भकाख्यं प्राणायामं कुर्वन्तीत्यर्थः ॥ २९ ॥

किञ्च—

३०. अपरे नियताहाराः प्राणान्प्राणेषु जुह्वति ।
सर्वेऽप्येते यज्ञविदो यज्ञक्षपितकल्मषाः ॥

अपरे नियताहाराः नियतः परिमितः आहारः येषां ते नियताहाराः सन्तः प्राणान् वायुभेदान् प्राणेषु एव जुह्वति, यस्य यस्य वायोः जयः क्रियते इतरान् वायुभेदान् तस्मिन् तस्मिन् जुह्वति, ते तत्र प्रविष्टा इव भवन्ति । सर्वेऽपि एते यज्ञविदः यज्ञक्षपितकल्मषाः यज्ञैः यथोक्तैः क्षपितः नाशितः कल्मषः येषां ते यज्ञक्षपितकल्मषाः ॥ ३० ॥

एवं यथोक्तान् यज्ञान् निर्वर्त्य—

३१. यज्ञशिष्टामृतभुजो यान्ति ब्रह्म सनातनम् ।
नायं लोकोऽस्त्ययज्ञस्य कुतोऽन्यः कुरुसत्तम ॥

சிலர், அபானத்தின் செய்கையிலே பிராணன் செய்கையை அர்ப்பிக்கிறார்கள்: பூரகமென்னும் பிராணாயாமத்தைச் செய்கிறார்கள் என்பது பொருள். அவ்வாறே சிலர் பிராணனிலே, அபானனை அர்ப்பிக்கிறார்கள்: ரேசகமென்னும்பிராணாயாமத்தைச் செய்கிறார்கள் என்பது பொருள். வாய்மூக்குக்களின்வழியாகக் காற்று வெளியே செல்லுதல் பிராணனுடைய போக்கு. அதற்கு மறுதலையாக உள்ளே செல்லுதல் அபானனுடைய போக்கு. சிலர், பிராணஅபானன்களுடைய அப்போக்குக்களைத் தடுத்து, பிராணாயாமத்திலேயே கருத்துள்ளவராய் இருக்கிறார்கள் : கும்பகமென்னும் பிராணாயாமத்தைச் செய்கிறார்கள் என்பது பொருள். (௨௯)

இன்னும்,

௩௦. சிலர் மிதமான ஆஹாரமுடையவராய் வாயுக்களை வாயுக்களில் அர்ப்பிக்கிறார்கள். இவர்களெல்லோருமே யஜ்ஞங்களை அறிந்தவர்கள், (கீழ்க்கூறிய) யஜ்ஞங்களால் பாவந்தேயப் பெற்றவர்கள்.

சிலர் (தம்) உணவை அளவாக அமைத்துக்கொண்டு, பலவாயுள்ளவாயுக்களை வாயுக்களிலேயே ஹோமஞ்செய்கிறார்கள் ; எந்தெந்த வாயுவானது ஜயிக்கப்படுகின்றதோ, அந்தந்த(வாயுவிலே)மற்றைய வாயுவிசேஷங்களை அர்ப்பிக்கிறார்கள். அவை அவற்றுள் புகுந்து [ஒடுங்கி]விட்டனபோல ஆகின்றன. (௩௦)

இவ்வாறு கீழ்க்கூறிய யஜ்ஞங்களைச் செய்து முடித்து,

௩௧. யஜ்ஞத்தின் சேஷமான அமிருதத்தைப் புஜிப்பவர்கள் சாச்வதமான ப்ரஹ்மத்தை அடைகிறார்கள். யஜ்ஞமில்லாதவனுக்கு இவ்வுலகம் இல்லை ; கௌரவரிற் சிறந்தோனே ! மற்றையது எங்கிருந்து ? [இல்லையே இல்லை].

ஜ்ஞாத்வா கர்மாணி ஸம்யக்தர்ஶநேந மோக்ஷ்யஸே ஸம்ஸாரபந்தநாத் இத்யர்த²꞉ ॥ ௩௨ ॥

'ब्रह्मार्पणम्' इत्यादिश्लोकेन सम्यग्दर्शनस्य यज्ञत्वं संपादितम्। यज्ञाश्च अनेके उपदिष्टाः। तैः सिद्धपुरुषार्थप्रयोजनैः ज्ञानं स्तूयते। कथम्?—

௩௩. श्रेयान्द्रव्यमयाद्यज्ञाज्ज्ञानयज्ञः परन्तप।
सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते ॥

श्रेयान् द्रव्यमयात् द्रव्यसाधनसाध्यात् यज्ञात् ज्ञानयज्ञः हे परन्तप। द्रव्यमयो हि यज्ञः फलस्यारम्भकः, ज्ञानयज्ञः फलारम्भकः, अतः श्रेयान् प्रशस्यतरः। कथम्? यतः सर्वं कर्म समस्तम् अखिलम् अप्रतिबद्धं पार्थ ज्ञाने मोक्षसाधने परिसमाप्यते अन्तर्भवति इत्यर्थः। 'यथा कृताय विजितायाधरेयाः संयन्त्येवमेनं सर्वं तदभिसमेति यत्किंच प्रजाः साधु कुर्वन्ति यस्तद्वेद यत्स वेद' इति श्रुतेः ॥ ௩௩ ॥

என நீ இவ்வாறு தெளிந்தவுடன், இந்த மெய்யறிவினாலே, தீமையாகிய ஸம்ஸாரக் கட்டினின்றும் விடுபடுவாய் என்பது (தேர்ந்த) பொருள். (உதாஸீநன் - உபேக்ஷையுள்ளவன், அதாவது, விவாதஞ்செய்கின்ற இருவருடைய வெற்றி தோல்விகளோடு ஸம்பந்தப்படாது, அவற்றால் வரும் மகிழ்ச்சி வருத்தங்களையும் அடையாது, யாதொரு விகாரமுமின்றி இருப்பவன்.) (௩௨)

ஞானமென்னும் யஜ்ஞமானது மற்றைய யஜ்ஞங்களினும் மேலானது.

"அர்ப்பிப்பது ப்ரஹ்மம்" (௪ - ௨௪) என்று தொடங்கும் சுலோகத்தினால் மெய்யறிவிலே யஜ்ஞமானது ஏற்றிக்கூறப்பட்டது. பின்னும், பல யஜ்ஞங்களும் உபதேசிக்கப்பட்டன. ஒருவன்விரும்பிய பயனை விசித்தமாகவுடைய [அதனைப் பெறுதற்கு ஸாதனமான] அந்த (மற்றைய யஜ்ஞங்களோடு) ஞானத்தை (வைத்துப் பகவான்) புகழ்கிறார் :— எப்படி ?—

௩௩. பரந்தப ! ஞானமென்னும் யஜ்ஞமானது திரவியங்களாலாகும் யஜ்ஞத்தைப்பார்க்கிலும் மேலானது. பார்த்த ! ஸகலகர்மமும் ஞானத்திலே மிச்சமில்லாது முடியப்பெறுகின்றன.

பரந்தப ! திரவியங்களாகிய ஸாதனங்களால் ஸாதிக்கப்படும் யஜ்ஞந்தான் ... பது. ஞானமென்னும் யஜ்ஞமென்பது பயனை விளைவியாதது. ஆத... மலானதாம்.—எப்படி ?— முக்திக்கு ஸாதனமான ஞானத்திலே ஸகல... றுகின்றன, அடங்கிநிற்கின்றன என்பது பொருள். ஆகவே, ...ங்க. இதனை; "(சூதாட்டத்திலே) வெல்லப்பட்ட கிருத... யத்தற்குக்) கீழான (திரேதா, த்வாபரன், கலி என்னும் ...), ஜனங்கள் செய்யும் நற்செய்கையெல்லாம் அவ... ...தை அறிபவன் எவனோ, (அவனும் அதனையே) அடைகிறான்" (சா - ௪ - க - ௪) என்னும் சுருதியினால் (உணர்க). (௩௩)

𑌤𑌦𑍇𑌤𑌤𑍍 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌕𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௩௪. 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌾𑌤𑍇𑌨 𑌪𑌰𑌿𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍇𑌨 𑌸𑍇𑌵𑌯𑌾 ।
𑌉𑌪𑌦𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ॥

𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌜𑌾𑌨𑍀𑌹𑌿 𑌯𑍇𑌨 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 । 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑌭𑌿𑌗𑌮𑍍𑌯 𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌾𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌷𑍇𑌣 𑌨𑍀𑌚𑍈𑌃 𑌪𑌤𑌨𑌂 𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌾𑌤𑌃 𑌦𑍀𑌰𑍍𑌘𑌨𑌮𑌸𑍍𑌕𑌾𑌰𑌃 𑌤𑍇𑌨 "𑌕𑌥𑌂 𑌬𑌨𑍍𑌧𑌃? 𑌕𑌥𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌃? 𑌕𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾? 𑌕𑌾 𑌚𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾?" 𑌇𑌤𑌿 𑌪𑌰𑌿𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍇𑌨 𑌸𑍇𑌵𑌯𑌾 𑌗𑍁𑌰𑍁𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌯𑌾 𑌏𑌵𑌮𑌾𑌦𑌿𑌨𑌾 । 𑌪𑍍𑌰𑌶𑍍𑌰𑌯𑍇𑌣 𑌆𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾 𑌉𑌪𑌦𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌃 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌨𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 𑌯𑌥𑌾𑌵𑌤𑍍 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌨𑌶𑍀𑌲𑌾𑌃, 𑌅𑌪𑌰𑍇 𑌨; 𑌅𑌤𑍋 𑌵𑌿𑌶𑌿𑌨𑌷𑍍𑌟𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌨 𑌇𑌤𑌿 । 𑌯𑍇 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 𑌤𑍈𑌃 𑌉𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌨 𑌇𑌤𑌰𑌦𑌿𑌤𑌿 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌮𑌤𑌮𑍍 ॥ ௩௪ ॥

𑌤𑌥𑌾 𑌚 𑌸𑌤𑌿 𑌇𑌦𑌮𑌪𑌿 𑌸𑌮𑌰𑍍𑌥𑌂 𑌵𑌚𑌨𑌮𑍍—

௩௫. 𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌪𑍁𑌨𑌰𑍍𑌮𑍋𑌹𑌮𑍇𑌵𑌂 𑌯𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵 ।
𑌯𑍇𑌨 𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌯𑌶𑍇𑌷𑍇𑌣 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑌥𑍋 𑌮𑌯𑌿 ॥

ஒருவன் ஞானத்தைத் தேடவேண்டிய விதமும், இடமும்.

அத்தகைய இச்சிறந்த ஞானமானது அங்ஙனம் எதனுல் கிடைக்குமென்பது? கூறுவோம்:

௩௪. ஸாஷ்டாங்க நமஸ்காரத்தினுலும், கேள்வியினுலும், பணிவிடையினுலும் அதனை அறிந்துகொள். உண்மையைக் கண்டுணர்ந்த ஞானிகள் ஞானத்தை உனக்கு உபதேசிப்பார்கள்.

அது எவ்விதத்தால் கிடைக்குமென்பதைத் தெரிந்துகொள். ஆசார்யரிடம் சென்று நன்ருகக் கீழேவிழுந்து வணங்குதலென்னும் நெடிய நமஸ்காரத்தாலும், "(இந்த ஸம்ஸாரக்)கட்டு (வந்தது) எவ்வாறு? (இதனின்றும்)விடுபடுதல் எவ்வாறு? அறியாமையென்பது என்ன? அறிவு என்பது என்ன?" என்னும் கேள்வியினுலும், ஆசார்யருக்குப் பணிவிடைசெய்தலாலும், மற்றுமிவைபோன்றவற்ருலும்(நீ ஞானத்தைப் பெறுவாய். பக்தி சிரத்தையோடமைந்த மிக்க ஒடுக்கவணக்கமென்னும்) வழிபாட்டினுல் (தமது கருத்திலே) அருள்சுரக்கப்பெற்ற ஞானிகளான ஆசார்யர்கள், கீழே சிறப்பித்துக்கூறிய ஞானத்தை உனக்கு உரைத்தருளுவார்கள். ஞானவான்களாயினும், சிலரே உண்மையை உள்ளபடிகாணும் இயல்பினர். மற்றையோர்(அவ்வாறு) அல்லர். ஆதலால் சிறப்பித்துக்கூறுகிருர் "**உண்மையைக் கண்டுணர்ந்த**" என்று. எவர்கள் மெய்யறிவைப் பெற்றவர்களோ, அவர்கள் உபதேசித்த ஞா(னம்) (தான்), கார்யத்தை ஸாதிக்க வலியதாகின்றது; மற்றையது இல்லை என்பது பக(வானின்) கருத்தென்க.

அவ்வாறுள்ளவளவிலேதான் இத்திருவாக்கும் பொருத்தமுடையதாகும்:

௩௫. பாண்டவ! நீ எதனை அறிந்து மறுபடியும் இவ்வாறு மயக்கத்தை அடையாயோ, எதனுல் ஸகலப்பொருள்களையும் நீ உன்னிடத்தும் என்னிடத்தும் காண்பாயோ, (அந்த ஞானத்தைத் தேடிக்கொள்).

𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑍍𑌵𑍈𑌃 𑌉𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌮𑍍 𑌅𑌧𑌿𑌗𑌮𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌪𑍁𑌨𑌃 𑌭𑍂𑌯𑌃 𑌮𑍋𑌹𑌮𑍍 𑌏𑌵𑌂 𑌯𑌥𑌾 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌮𑍋𑌹𑌂 𑌗𑌤𑌃 𑌅𑌸𑌿 𑌪𑍁𑌨𑌃 𑌏𑌵𑌂 𑌨 𑌯𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 𑌹𑍇 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵 । 𑌕𑌿𑌂 𑌚 𑌯𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌅𑌶𑍇𑌷𑍇𑌣 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍀𑌨𑌿 𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌨𑌿 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 "𑌮𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌇𑌮𑌾𑌨𑌿" 𑌇𑌤𑌿 𑌅𑌥𑍋 𑌅𑌪𑌿 𑌮𑌯𑌿 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇 "𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍇 𑌚 𑌇𑌮𑌾𑌨𑌿" 𑌇𑌤𑌿; 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑍇𑌶𑍍𑌵𑌰𑍈𑌕𑌤𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௩௫ ॥

𑌕𑌿𑌂 𑌚𑍈𑌤𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍—

௩௬. 𑌅𑌪𑌿 𑌚𑍇𑌦𑌸𑌿 𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌾𑌪𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌲𑌵𑍇𑌨𑍈𑌵 𑌵𑍃𑌜𑌿𑌨𑌂 𑌸𑌨𑍍𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ॥

𑌅𑌪𑌿 𑌚𑍇𑌦𑌸𑌿 𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌾𑌪𑌕𑌾𑌰𑌿𑌭𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌅𑌤𑌿𑌶𑌯𑍇𑌨 𑌪𑌾𑌪𑌕𑍃𑌤𑍍 𑌪𑌾𑌪𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌲𑌵𑍇𑌨𑍈𑌵 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵 𑌪𑍍𑌲𑌵𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌵𑍃𑌜𑌿𑌨𑌂 𑌵𑍃𑌜𑌿𑌨𑌾𑌰𑍍𑌣𑌵𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌸𑌨𑍍𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 । 𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌪𑌿 𑌇𑌹 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍋𑌃 𑌪𑌾𑌪𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௩௬ ॥

𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌕𑌥𑌂 𑌨𑌾𑌶𑌯𑌤𑌿 𑌪𑌾𑌪𑌮𑌿𑌤𑌿? 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௩௭. 𑌯𑌥𑍈𑌧𑌾𑌂𑌸𑌿 𑌸𑌮𑌿𑌦𑍍𑌧𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌤𑌥𑌾 ॥

𑌯𑌥𑌾 𑌏𑌧𑌾𑌂𑌸𑌿 𑌕𑌾𑌷𑍍𑌠𑌾𑌨𑌿 𑌸𑌮𑌿𑌦𑍍𑌧𑌃 𑌸𑌮𑍍𑌯𑌗𑌿𑌦𑍍𑌧𑌃 𑌦𑍀𑌪𑍍𑌤𑌃 𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍 𑌭𑌸𑍍𑌮𑍀𑌭𑌾𑌵𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌹𑍇 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵 𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵-

---

பாண்டவ ! அவர்கள் உபதேசித்த ஞானத்தைப் பெற்று, நீ இப்பொழுது மயக்கமுற்றிருப்பதுபோல மீண்டும் இவ்வாறு மயக்கமுறமாட்டாய். அன்றியும், ப்ரஹ்மாமுதலாகப் புல் ஈறாகவுள்ள ஸகலப்பொருள்களையும், "இவை என்னிடத்து இருக்கின்றன" எனஉன்னிடத்தும், "இவை பரமேச்வரனிடத்தும் இருக்கின்றன" என வாஸுதேவனை என்னிடத்தும் ஞானத்தினால் நேரே காண்பாய் : உபநிஷத்துக்களிலெல்லாம் மிகத்தெளிவா யுணர்த்தப்பட்ட ஜீவேச்வர ஐக்கியத்தை [ஜீவனும் ஈச்வரனும் ஒன்றென்பதை]க் கண்டுதேறுவாய் என்பது பொருள். (௩௫)

ஞானமென்பது ஸகலபாவத்தையும், ஸகலகர்மத்தையும் எரித்துவிடும்.

இனி இதன் பெருமையை(க் கேள்) :

௩௬. நீ, பாவஞ்செய்தோர் எல்லாரையும் பார்க்கினும் அதிக பாவஞ்செய் தவனானும், ஞானமாகிய தெப்பத்தினாலேயே ஸகலபாவங்களையும் கடந்திடுவாய்.

நீ ஞானத்தையே தெப்பமாகச்செய்துகொண்டு பாவமாகிய கடலைக் கடந்துவிடுவாய். (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விரும்புவோனுக்கு, இங்கே புண்யமும் பாவமென்க. (௩௬)

ஞானமானது பாவத்தை எவ்வாறு அழிக்கின்றது என்பது ?— திருஷ்டாந்தம் கூறுவோம் :

௩௭. அர்ஜுந ! ஜ்வலிக்கின்ற தணலானது விறகுகளை எவ்வாறு நீறாகச் செய்கின்றதோ, அவ்வாறே ஞானமென்னும் தணலானது ஸகலபாவத்தையும் நீறாகச் செய்கின்றது.

யானது விறகுகளைச் சாம்பலாக்குவதுபோல,
ங்களையும் சாம்பலாக்குகின்றது : வித்து ஆகாத

௩௯. श्रद्धावाँल्लभते ज्ञानं तत्परः संयतेन्द्रियः ।
ज्ञानं लब्ध्वा परां शान्तिमचिरेणाधिगच्छति ॥

श्रद्धावान् श्रद्धालुः लभते ज्ञानम् । श्रद्धालुत्वेऽपि भवति कश्चिन्मन्दप्रस्थानः, अत आह — तत्परः गुरूपासदनादौ अभियुक्तः ज्ञानलब्ध्युपाये श्रद्धावान् । तत्परः अपि अजितेन्द्रियः स्यात् इत्यत आह — संयतेन्द्रियः संयतानि विषयेभ्यो निवर्तितानि यस्य इन्द्रियाणि स संयतेन्द्रियः । य एवंभूतः श्रद्धावान् तत्परः संयतेन्द्रियश्च सः अवश्यं ज्ञानं लभते । प्रणिपातादिस्तु बाह्योऽनैकान्तिकोऽपि भवति, मायावित्वादिसंभवात्; न तु तत् श्रद्धावत्त्वादौ इत्येकान्ततः ज्ञानलब्ध्युपायः । किं पुनः ज्ञानलाभात् स्यात् इति? उच्यते — ज्ञानं लब्ध्वा परां मोक्षाख्यां शान्तिम् उपरतिम् अचिरेण क्षिप्रमेव अधिगच्छति । सम्यग्दर्शनात् क्षिप्रमेव मोक्षो भवतीति सर्वशास्त्रन्यायप्रसिद्धः सुनिश्चितः अर्थः ॥ ३९ ॥

---

௩௯. *நம்பிக்கையை யுடையவனாய், அதிலே கருத்தையூன்றி இந்திரியங்களை நன்கு அடக்கியவன் ஞானத்தையடைகிறான்; ஞானத்தை அடைந்த பின்னர், தாமதமில்லாது உயர்ந்த ஒழிவைப் பெறுகிறான்.*

(வேதம்முதலியவற்றிலே)நம்பிக்கையையுடையவன் ஞானத்தை அடைகிறான். நம்பிக்கையுடைமை இருந்தாலும், ஒருவன்(ஞானஸாதநத்திலே)செல்ல மந்தனாய் [நோக்கமில்லாதவனாய்]இருக்கிறான். ஆதலால், '' ஞானமடைதற்கு ஸாதநமாயிருப்பவையான குருவை வழிபடுதல்முதலானவற்றிலே ஊக்கமுள்ளவனாய்(இருக்கவேண்டும்)'' என்கிறார். அவற்றிலே ஊக்கமுடையோனாயினும், (அவன் தன்)இந்திரியங்களை ஜயிக்காதவனாக இருக்கலாமென, '' விஷயங்களினின்றும் இந்திரியங்களை(உள்ளே)மடக்கினவனாக(இருக்கவேண்டும்)''என்கிறார்.(குருவினுடைய திருவாக்குக்களிலே) நம்பிக்கையும், அ(வரை வழிபடுதல்முதலான)வற்றிலே ஊக்கமும் உடையவனாய் இந்திரியங்களை நன்கு அடக்கி இவ்வாறு நிற்பவன் எவனோ, அவன் அவச்யம் ஞானத்தைப் பெறுகிறான். பகிரங்க(ஸாதந)மான ஸாஷ்டாங்கநமஸ்காரம் முதலியவையோ, (பயனைக் கொடுக்கத்)தவறுபவையாகவும் ஆகின்றன; (மனத்திலொன்றும், வெளியிலொன்றுமாகக் காட்டுவதனால்)கள்ளமாயத்தன்மைமுதலியன நிகழக்கூடுமாகலின். ஆனால், அவை நம்பிக்கையுடைமைமுதலானவற்றிலே நிகழமாட்டா என(இந் நம்பிக்கையுடைமைமுதலியவை), ஞானத்தைப் பெறுதற்குத் தவறாத வழியாம். மற்று, ஞானத்தைப் பெறுதலால் ஆவதென்ன என்பது? கூறுவோம் :—(அவன்)ஞானத்தையடைந்தபின்னர், மோக்ஷமெனப்படும் உயர்ந்த ஒழிவைத் தாமதமின்றிச் சீக்கிரமாகவே அடைகிறான். [illegible]னால் விரைவாகவே மோக்ஷம் அமைகின்றதென்பது [illegible]யினாலும் நிரூபித்து நன்குநிர்ணயிக்கப்பட்டதான (௩௯)

ஸ: ஜ்ஞானஸம்சின்னஸம்ஶய: | ய ஏவம் யோகஸம்ந்யஸ்தகர்மா தம் ஆத்மவந்தம் குணசேஷ்டாரூபேண த்ருஷ்டானி கர்மாணி ந நிபத்னந்தி அநிஷ்டாதிரூபம் பலம் ந ஆரபந்தே ஹே தனஞ்ஜய || ௪௧ ||

யஸ்மாத் கர்மயோகானுஷ்டானாத் அஶுத்திக்ஷயஹேதுகஜ்ஞானஸம்சின்னஸம்ஶய: ந நிபத்யதே கர்மபி: ஜ்ஞானாக்னிதக்தகர்மத்வாதேவ, யஸ்மாச்ச ஜ்ஞானகர்மானுஷ்டானவிஷயே ஸம்ஶயவான் விநஶ்யதி—

௪௨. தஸ்மாதஜ்ஞானஸம்பூதம் ஹ்ருத்ஸ்தம் ஜ்ஞானாஸினாத்மன: |
சித்த்வைனம் ஸம்ஶயம் யோகமாதிஷ்டோத்திஷ்ட பாரத ||

இதி ஸ்ரீமஹாபாரதே ஶதஸாஹஸ்ர்யாம் ஸம்ஹிதாயாம் வையாஸிக்யாம் பீஷ்மபர்வணி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகஶாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுனஸம்வாதே ஜ்ஞானயோகோ நாம சதுர்தோऽத்யாய: ||

தஸ்மாத் பாபிஷ்டம் அஜ்ஞானஸம்பூதம் அஜ்ஞானாத் அவிவேகாத் ஜாதம் ஹ்ருத்ஸ்தம் ஹ்ருதி புத்தௌ ஸ்திதம் ஜ்ஞானாஸினா ஶோகமோஹாதிதோஷஹரம் ஸம்யக்தர்ஶனம் ஜ்ஞானம் ததேவ அஸி: கட்க: தேன ஜ்ஞானாஸினா ஆத்மன: ஸ்வஸ்ய, ஆத்மவிஷயகம் ஸம்ஶயஸ்ய | ந ஹி பரஸ்ய ஸம்ஶய: பரேண சேத்தவ்யதாம் ப்ராப்-

---

கர்மங்களைத் துறந்தவனே, அந்த ஸாவதான(ஞானியை முக்)குணங்களின் செய்கைகளாகக் காணப்பட்ட கர்மங்கள் கட்டுப்படுத்துவதில்லை, தீமைமுதலாகிய பயனை விளைப்பதில்லை யென்க. (௪௧)

க. கர்மயோகத்தை அநுஷ்டித்தலால் அழுக்குத் தேய்ந்துபோக, அதனால் ஞானமுண்டாக, அந்தஞானத்தால் ஸம்சயமறப்பெற்றவனைக் கர்மங்கள் கட்டுவதில்லை; ஞானமென்னும் தீயினல் கர்ம(மனைத்து)ம் எரிக்கப்பட்டமையினலேயே யென்க. உ. அன்றியும்,ஞானகர்மங்களை அநுஷ்டிக்கும்விஷயத்திலே ஸந்தேகமுடையவன் கெட்டுப்போகிறான் (என்றஇவ்விரண்டும்)எதனால் உள்ளனவோ,

௪௨. அதனால், நீ, அஜ்ஞானத்தா லுண்டாகி நெஞ்சிலே நிலைத்திருப்பதாய், ஆத்மாவைப்பற்றிய இச் சந்தேசத்தை ஞானமென்னும் அறிவாளால் அறிவி யோகத்தைக் கைக்கொள். பாரத ! எழுந்திரு.

ஸ்ரீ மகாபாரதத்திலே நூறுயிரக்கிரந்த ஸம்ஹிதையாய், வ்யாஸர் அருளிச் ...காய். பீஷ்மபர்வத்திலே ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துக்களாக, ...யையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனஸம்வா...
...ம் என்னும் நான்காம் அத்தியாயம் முற்றும்.

...ால்லாததும் அவிவேகத்தால் உண்டானதும் புத்தியிலே
...டுதற்குக் காரணமானதுமாய் ஆத்மாவைப்பற்றிய தான
...ன. துன்பம்மயக்கம்முதலான தீங்குகளைப் போக்கும்
அறிவி, மெய்யறிவுக்கு ஸாதநமான கர்மாநுஷ்டா
...(அதனைச்)செய், பாரத ! இனி இப்பொழுது போர்
... அருளிச்செய்யலானார்).

प्तः, येन स्वस्येति विशेष्येत। अतः आत्मविषयोऽपि स्वस्यैव भवति। छित्त्वा एनं संशयं स्वविनाशहेतुभूतं, योगं सम्यग्दर्शनोपायं कर्मानुष्ठानम् आतिष्ठ कुर्वित्यर्थः। उत्तिष्ठ च इदानीं युद्धाय हे भारत इति ॥ ४२ ॥

इति श्रीमद्भगवद्गीताभाष्ये चतुर्थोऽध्यायः ॥

ஸம்சயமானது ஆத்மாவைப்பற்றிய தாதலின், "தன்னுடைய" (என்பதை வருவித்துக்கொள்க). ஒருவனுடைய ஸம்சயத்தை வேறொருவன் அறுக்கமுடியாததலின், தன்னுடைய என்று சிறப்பித்துக்கூறவேண்டும். ஆதலால்,(ஸம்சயமானது) ஆத்மாவைப்பற்றியதாயினும், தன்னுடையதாகவே ஆகின்றது.(தான் - ஆத்மா. ஒருவன் இப்பியைப் பார்த்து, இது இப்பியோ வெள்ளியோ என ஐயமுற்றவிடத்து அச்சந்தேகம் இப்பியைப்பற்றியதாய் அவனிடத்து உள்ளது. இங்கேயோ,இவ்வாறு இல்லை. ஸம்சயமானது தன்னைப்பற்றியதாய்த் தன்னிடத்தே உள்ளது. இதனை விளக்கும்பொருட்டு "தன்னுடைய" என்பதை வருவித்துக்கொள்ளவேண்டும் என்க.—ஆ.) (௪௨)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் நான்காவது அத்தியாயம் முற்றும்.

𑌪𑌞𑍍𑌚𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌃 ॥

'𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑌭𑍍𑌯 '𑌸 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍' '𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌮𑍍' '𑌶𑌾𑌰𑍀𑌰𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍' '𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌾𑌲𑌾𑌭𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌃' '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌵𑌿𑌃' '𑌕𑌰𑍍𑌮𑌜𑌾𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌤𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍' '𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌖𑌿𑌲𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥' '𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿' '𑌯𑍋𑌗𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌮𑍍' 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑍈𑌃 𑌵𑌚𑌨𑍈𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌮𑍍 𑌅𑌵𑍋𑌚𑌦𑍍 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍; '𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑍈𑌨𑌂 𑌸𑌂𑌶𑌯𑌂 𑌯𑍋𑌗𑌮𑌾𑌤𑌿𑌷𑍍𑌠' 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌵𑌚𑌨𑍇𑌨 𑌯𑍋𑌗𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 𑌅𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 । 𑌉𑌭𑌯𑍋𑌶𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌗𑌤𑌿𑌵𑌤𑍍 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍 𑌏𑌕𑍇𑌨 𑌸𑌹 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌶𑌕𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌕𑌾𑌲𑌭𑍇𑌦𑍇𑌨 𑌚 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍, 𑌅𑌰𑍍𑌥𑌾𑌤𑍍 𑌏𑌤𑌯𑍋𑌃 𑌅𑌨𑍍𑌯𑌤𑌰𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌯𑌤𑍍 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑌰𑌂 𑌏𑌤𑌯𑍋𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌃 𑌤𑌤𑍍 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌨 𑌇𑌤𑌰𑌤𑍍 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑌰𑌬𑍁𑌭𑍁𑌤𑍍𑌸𑌯𑌾 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚—'𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 ॥

𑌨𑌨𑍁 𑌚 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌿𑌪𑌾𑌦𑌯𑌿𑌷𑌨𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌦𑌾𑌹𑍃𑌤𑍈𑌃 𑌵𑌚𑌨𑍈𑌃 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌮𑍍 𑌅𑌵𑍋𑌚𑌤𑍍, 𑌨 𑌤𑍁 𑌅𑌨𑌾-

---

ஐந்தாம் அத்தியாயம் : ஸந்யாஸ யோகம்.

அஜ்ஞானிக்கு நலமானது கர்மயோகமா ? ஸந்யாஸமா ?

" எவன் கர்மத்தில் " (ச - கஅ) என்பது முதல், "ஞானமென்னும் தீயினால்" (ச - கக), " சாரீரகர்மத்தை " (ச-உக), " தானாகக்கிடைத்ததை " (ச-உஉ), " அர்ப்பிப்பது " (ச-உச), " அவை யெல்லாவற்றையும்" (ச-௩உ), "ஸகலகர்மமும்" (ச-௩௩), " ஞானம் " (ச - ௩எ), " கர்மங்களை " (ச-சக) என்பன முதலிய திருவாக்குக்களால் ஸகலகர்மங்களையும் துறந்திடுதலைப் பகவான் கூறினர். "இச்சம்சயத்தை (ஞானமென்னும் வாளால்) அரிவி, (கர்ம) யோகத்தைச் செய்யக்கடவாய் " (ச - சஉ) என்னும் இத்திருவாக்கினால் ' கர்மாநுஷ்டானமாகிய யோகத்தையும் நீ செய்யவேண்டும் ' எனக் கூறினர். இனி, கர்மங்களை அநுஷ்டித்தலும் கர்மங்களைத் துறந்திடுதலுமாகிய இரண்டும், நிற்றலென்பதும் நடத்தலென்பதும் போல, ஒன்றற்கொன்று விரோதித்தலால் (அவற்றை) ஒருவன் ஒருங்கே அநுஷ்டிக்கமுடியாது. அன்றியும், (அவற்றை) வெவ்வேறுகாலத்தில் அநுஷ்டிக்கலாம் எனவும் விதிக்கப்படவில்லை. ஆகவே, இவ்விரண்டனுள் ஏதாவதொன்றை அநுஷ்டிக்கவேண்டுமென்பது கருத்தினால் அமைய, ' கர்மங்களை அநுஷ்டித்தலும் கர்மங்களைத் துறந்திடுதலுமாகிய இவ்விரண்டனுள் எது சிறந்ததோ, அதனைச் செய்யவேண்டும் ; மற்றையது இல்லை' என இவ்வாறாகக்கொண்டு அர்ஜுனன், சிறந்ததைத் தெரிந்துகொள்ளவேண்டும்என்னும் விருப்பத்தினால் " கிருஷ்ண !" (ரு - க) என்பதுமுதலாகக் கூறலானான் :

(ஆக்ஷேபம்):—அப்படியானால், பகவான் ஞானயோகத்தால் நிஷ்டையை உணர்த்தும்பொருட்டு முன்னெடுக்கப்பட்ட [illegible] திருவாக்குக்களால் கர்மங்களைத் துறந்திடு

𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 । 𑌅𑌤𑌶𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌃 𑌭𑌿𑌨𑍍𑌨𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌅𑌨𑍍𑌯𑌤𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑌰𑌬𑍁𑌭𑍁𑌤𑍍𑌸𑌯𑌾 𑌅𑌯𑌂 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃 𑌅𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌃 ॥ 𑌸𑌤𑍍𑌯𑌮𑍍; 𑌏𑌵𑌂 𑌸𑍍𑌵𑌾𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍋 𑌨 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇; 𑌪𑍃𑌷𑍍𑌟𑍁𑌃 𑌸𑍍𑌵𑌾𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃 𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑍇 𑌏𑌵𑍇𑌤𑌿 𑌵𑌦𑌾𑌮𑌃 । 𑌕𑌥𑌮𑍍? 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌦𑌾𑌹𑍃𑌤𑍈𑌃 𑌵𑌚𑌨𑍈𑌃 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌯𑌾 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌪𑍍𑌰𑌾𑌧𑌾𑌨𑍍𑌯𑌮𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌚 𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑍁𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌪𑌿 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌪𑌕𑍍𑌷𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌃 𑌅𑌨𑍂𑌦𑍍𑌯𑌤𑍇; 𑌨 𑌪𑍁𑌨𑌃 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌤𑍍𑌵𑍇𑌨𑍈𑌵 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌯 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍 𑌇𑌤𑌿 । 𑌏𑌵𑌂 𑌮𑌨𑍍𑌵𑌾𑌨𑌸𑍍𑌯 𑌅𑌜𑌾𑌨𑌾𑌨𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌃 𑌅𑌵𑌿𑌦𑍍𑌵𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌤𑍍𑌵𑌮𑌪𑌿 𑌅𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌤𑌯𑍋𑌃 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍 𑌅𑌨𑍍𑌯𑌤𑌰𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑌰𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌨 𑌇𑌤𑌰𑌤𑍍 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑌰𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌷𑌯𑌾 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃 𑌨 𑌅𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌃 ॥

𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌚𑌨𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑍇𑌨𑌾𑌽𑌪𑌿 𑌪𑍃𑌷𑍍𑌟𑍁𑌃 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 𑌏𑌵𑌮𑍇𑌵𑍇𑌤𑌿 𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 । 𑌕𑌥𑌮𑍍? “𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍌 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑍌 𑌤𑌯𑍋𑌸𑍍𑌤𑍁

தலை ஆத்மாவை அறிபவனுக்குக் கூறிஞரேயன்றி ஆத்மாவை அறியாதவனுக்கு இல்லை. ஆகவே, கர்மங்களை அநுஷ்டித்தலும் கர்மங்களைத்துறந்திடுதலுமாகிய இரண்டும் வெவ்வேறு புருஷர்களைப் பற்றியுள்ளமையால் (அவற்றுள்) எது சிறந்ததெனத் தெரிந்துக்கொள்ளவேண்டும் என்னும் கருத்தினுல் இவ்வினு (வந்ததென்பது) பொருந்தாது.

(ஸமாதாநம்) :—உண்மை ; இவ்வாறு உன் கருத்தின்படி வினுப் பொருந்தாது ; மற்று, கேட்கின்றவனுடைய சொந்தக்கருத்தின்படி வினு, பொருந்தியே நிற்கின்றதுஎனக்கூறுவோம்.—எப்படி?—கர்மங்களைத் துறந்திடவேண்டுமென்பது, முன் எடுத்துக்காட்டிய திருவாக்குக்களினுல் பகவான் சொல்லக்கருதியது. அன்றியும், (ஸந்யாஸத்திற்கு) முதன்மை இல்லாவிடில், கர்த்தாவினுல் அது செய்யப்படவேண்டுமென்பது ஏற்காது. ஆதலால், கர்த்தாவானவன் அஜ்ஞானியாயினும் (விஷயங்களிலே மிக்கவைராக்கியமுள்ளவனுயின், அவனும் கர்மஸந்யாஸ)பக்ஷத்தில்(அதிகாரியாவான் என்பது கருத்து. ஆகவே, இங்கு, அவ்வாறு)அமைந்தவனே குறிக்கப்படுகிறுன். ஆனுல், கர்மஸந்யாஸத்திலே ஞானிதான் அதிகாரியென்பது கருத்தன்று; ஆதலின், (அஜ்ஞானிக்கும் ஒருநிலைமையிலே கர்மஸந்யாஸம் உண்டு என அறிக. இனி) இவ்வாருக அஜ்ஞானியான புருஷனும், கர்மங்களை அநுஷ்டித்தலிலும் கர்மங்களைத்துறந்திடுதலிலும் அதிகாரியாக இருக்கிறுன் என்று அர்ஜுனன் (மனத்திற்) கொள்ள, அப்பொழுது முற்கூறியபடி அவை இரண்டற்கும் ஒன்றற்கொன்றுள்ள மாறுபாட்டினுல் ஏதாவதொன்றைச் செய்யவேண்டுமென்று அமைய, (அவற்றுள்) மேலானதையே செய்யவேண்டுமேயன்றி மற்றையதை இல்லை என (அவற்றுள்) மேலானதைத் தெரிந்துகொள்ளும் கருத்தோடு (கேட்ட அவன்) வினுவானது பொருந்தாததாய் இல்லையென்க.

இவ்வினுவானது ஞானியைப்பற்றியதன்று.

(பகவானுடைய) மறுமொழிவாக்கியத்தின்பொருளை ஆராய்தலாலும், கேட்கிறவனுடைய கருத்து இப்படித்தான் என்று தெரியவருகின்றது.—எப்படி ?— “ துறவும், கர்மயோகமும் உறுதியானநன்மையைச் செய்பவை ; ஆனுல், அவற்றுள் கர்ம

𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍋 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ” 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌚𑌨𑌮𑍍 । 𑌏𑌤𑌦𑍍 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿—𑌕𑌿𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌯𑍋𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌯𑍋𑌰𑍇𑌵 𑌤𑍁 𑌕𑍁𑌤𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇? 𑌆𑌹𑍋𑌸𑍍𑌵𑌿𑌤𑍍 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌯𑍋𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌤𑌦𑍁𑌭𑌯𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇? 𑌇𑌤𑌿 ॥

𑌕𑌿𑌂 𑌚𑌾𑌤𑌃—𑌯𑌦𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌯𑍋𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑌤𑍍𑌵𑌂, 𑌤𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇; 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌯𑍋𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌤𑌦𑍁𑌭𑌯𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 ॥

𑌅𑌤𑍍𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌯𑍋𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌅𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 𑌤𑌯𑍋𑌃 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑌤𑍍𑌵𑌵𑌚𑌨𑌂 𑌤𑌦𑍀𑌯𑌾𑌚𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 𑌉𑌭𑌯𑌮𑍍 𑌅𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌮𑍍 । 𑌯𑌦𑌿 (𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍂𑌲𑌶𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌃 𑌸𑌂𑌭𑌵𑍇𑌤𑌾𑌂, 𑌤𑌦𑌾 𑌤𑌯𑍋𑌃 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑌤𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌿𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌮𑍍

யோகம் சிறப்புற்றது ” (ரு-உ) என்பது மறுமொழி. ஞானியைக்கர்த்தாவாகவுடைய துறவும் கர்மயோகமும் உறுதியானநன்மையைச் செய்பவையென்னும் பயனைக் கூறி, அவற்றுள்ளே கர்மங்களைத் துறந்திடுதலைக்காட்டிலும் கர்மயோகம் ஏதோஒருவிசேஷத்தால் மேலானது என இதனால் கூறப்படுகின்றதா? அல்லது, அஜ்ஞானியைக் கர்த்தாவாகவுடைய துறவும் கர்மயோகமுமாகிய இவற்றிற்கு அவையிரண்டும் [உறுதியான நன்மையைச் செய்வதும், கர்மயோகம் மேலானதென்பதும்] கூறப்படுகின்றனவா? என இதனை [மறுமொழியை] ஆராயவேண்டும்.

ஆகவே, இன்னும் (ஒருவினா வருமாறு):—ஞானிசெய்யும் கர்மஸந்யாஸமும் கர்மயோகமும் உறுதியானநன்மையைச் செய்பவை என்பதும், ஆனால் அவற்றுள் கர்மஸந்யாஸத்தினும் கர்மயோகம் மேலானது என்பதும் கூறப்பட்டால், (வரும் குற்றமென்ன?) அல்லது, அஜ்ஞானிசெய்யும் கர்மஸந்யாஸம் கர்மயோகம் என்றவற்றிற்கு அவையிரண்டும் கூறப்பட்டால், (வரும் பயனென்ன?) என்பது.

இதனுள், (முதல்பக்ஷத்திலே வரும் குற்றத்தைக்)கூறுவோம்:

ஞானியைக் கர்த்தாவாகவுடைய துறவும் கர்மயோகமும் நிகழக்கூடாமையின் அவை உறுதியானநன்மையைச் செய்பவை எனக்கூறுதலும், அவனுடைய கர்மஸந்யாஸத்தினும் கர்மயோகம் மேலானது எனக்கூறுதலுமாகிய இவ்விரண்டும் பொருந்தா என்க. ஆத்மாவை அறிந்தவனுக்குக் கர்மங்களைத்துறந்திடுதலும், அதற்கு மாறானதும் (அதாவது,) கர்மங்களை அநுஷ்டித்தலாகிய கர்மயோகமும் நிகழக்கூடுமாயின், அவை இரண்டும் உறுதியான நன்மையைச் செய்பவை என்றலும், கர்மயோகம் [illegible]னும் மேலானதென்றலும் ஆகியஇவ்விரண்டும் அப்பொழுது

[illegible]

[illegible]

[illegible]

ஆதலால், பொய்யறிவு நீங்கி ஆத்மாவை அறிதலுக்கு, [illegible] அறிவு முதலாகவரும் கர்மயோகம் [illegible] கூறியது நோக்கு மென்க.

𑌕𑍇𑌷𑍁 𑌕𑍇𑌷𑍁 𑌪𑍁𑌨𑌃 𑌆𑌤𑍍𑌮𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑍇𑌷𑍁 𑌆𑌤𑍍𑌮-
𑌵𑌿𑌦𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿? 𑌅𑌤𑍍𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—'𑌅𑌵𑌿𑌨𑌾𑌶𑌿 𑌤𑍁 𑌤𑌤𑍍'
𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯 '𑌯 𑌏𑌨𑌂 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑌮𑍍' '𑌵𑍇𑌦𑌾𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌨𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑍌
𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌨𑌨𑍁 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍋𑌽𑌪𑌿 𑌆𑌤𑍍𑌮𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑍇𑌷𑍁
𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯𑌤𑍇 𑌏𑌵; 𑌤𑌦𑍍 𑌯𑌥𑌾 '𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍 𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌭𑌾𑌰𑌤'
'𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌮𑌪𑌿 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯' '𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍇' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑍌 । 𑌅𑌤𑌃 𑌕𑌥𑌮𑍍
𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌅𑌸𑌂𑌭𑌵𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿? 𑌅𑌤𑍍𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇— 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿-
𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍, '𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨
𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌦𑌾𑌮𑍍 𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌤𑌃 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾-
𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌯𑌾𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍𑌕𑌰𑌣𑌾𑌤𑍍, 𑌕𑍃𑌤-
𑌕𑍃𑌤𑍍𑌯𑍇𑌨 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍, '𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇'
𑌇𑌤𑌿 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌭𑌾𑌵𑌵𑌚𑌨𑌾𑌚𑍍𑌚, '𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑌨𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌤𑍍' '𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌤𑍁

(விஞ) :—மற்று, ஆத்மா இன்னது என நிரூபிக்கின்ற எந்தெந்த இடங்களிலே, ஆத்மாவை அறிந்தவனுக்குக் கர்மமின்மையானது உணர்த்தப்படுகின்றது என்பது ?

(விடை) :—(அவற்றை) இங்குக்கூறுவோம்:— ஆத்மாவை அறிந்தவனுக்குக் கர்மமின்மையானது "அது அழிவில்லாதது "(உ - கஎ) எனப்பிரஸ்தாபிக்கப்பட்டு "எவன் இதனை "(உ - கக), "அழிவில்லாததாக "(உ- உக)என்பன முதலியவற்றிலே ஆங்காங்குக் கூறப்படுகின்றது.

(ஆக்ஷேபம்) :—அப்படியானால், ஆத்மா இன்னது என்று நிரூபிக்கும் இடங்களிலே ஆங்காங்குக் கர்மயோகமும்தான் உணர்த்தப்படவேபடுகின்றது. அது, "பாரத ! ஆதலால், போர்புரியக்கடவாய்" (உ - கஅ), "ஸ்வதருமத்தையும் நோக்கியும் " (உ - ஙக), "உனக்குக் கர்மத்திலேதான் அதிகாரம் "(உ - சஎ)என்பனமுதலியவற்றிலே வருமாறு(காண்க). ஆதலால், ஆத்மாவை அறிந்தவனுக்கும் கர்மயோகம் நிகழாமை எப்படி என்பது ?

(ஸமாதாநம்):—இங்கே கூறுவோம் :—(க)மெய்யறிவிற்கும் பொய்யறிவிற்கும் (அவ்வாறே) அவற்றின்செய்கைகட்குமுள்ள மாறுபாட்டினாலும் : (உ) "ஞானயோ...ங்க்யர்களுக்கு " (ங - ங) என்றஇதனால், கர்மமில்லா ஆத்மவடிவமா...ஞானயோகநிஷ்டையை, ஆத்மாவின் உண்மையை உணர்ந்த ஸாங்க்...மை அறியாதவன் செய்யும் கர்மயோக நிஷ்டையினின்றும் ...மாவை அறிந்தவனுக்குப் புருஷார்த்தங் கைகூடப் ...ப)வேறொருபயன் இல்லாமையாலும் : (ஈ)"அவ...ா(அவன்)செய்யவேண்டியதொன்றும் இல்லாமை ...களைச் செய்யாமையினால் "(ங - ச), "உயர்தோள!

[illegible]

[illegible]

ஆகவே, (அர்ஜுனன் வினு கேளேன்பது) நீங்குகின்றது.

'𑌜𑍍𑌯𑌾𑌯𑌸𑍀 𑌚𑍇𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑍇' 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌃 𑌸𑌹 𑌅𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 "𑌯𑌤𑍍 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌏𑌤𑌯𑍋𑌃 𑌤𑌤𑍍 𑌮𑍇 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿" 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌪𑍃𑌷𑍍𑌟𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨𑍇𑌨 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌂 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍇𑌤𑌿 𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌂 𑌚𑌕𑌾𑌰 | "𑌨 𑌚 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑌨𑌾𑌦𑍇𑌵 𑌕𑍇𑌵𑌲𑌾𑌤𑍍 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌸𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿" 𑌇𑌤𑌿 𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌹𑌿𑌤𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌸𑌾𑌧𑌨𑌤𑍍𑌵𑌮𑍍 𑌇𑌷𑍍𑌟𑌂; 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌚, 𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌤𑍍 | 𑌜𑍍𑌞𑌾𑌨𑌰𑌹𑌿𑌤𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍? 𑌕𑌿𑌂 𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍? 𑌇𑌤𑌿 𑌏𑌤𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑌰𑌂 𑌬𑍁𑌭𑍁𑌤𑍍𑌸𑍁𑌃—

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ||

க. 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌪𑍁𑌨𑌰𑍍𑌯𑍋𑌗𑌂 𑌚 𑌶𑌂𑌸𑌸𑌿 |
𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯 𑌏𑌤𑌯𑍋𑌰𑍇𑌕𑌂 𑌤𑌨𑍍𑌮𑍇 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌮𑍍 ||

𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌯𑌾𑌣𑌾𑌮𑍍 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌣𑌾𑌂 𑌶𑌂𑌸𑌸𑌿 𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌸𑌿 𑌕𑌥𑌯𑌸𑌿 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 | 𑌪𑍁𑌨𑌃 𑌯𑍋𑌗𑌂 𑌚 𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑍍 𑌅𑌵𑌶𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌶𑌂𑌸𑌸𑌿 | 𑌅𑌤𑌃 𑌮𑍇 𑌕𑌤𑌰𑌤𑍍 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌇𑌤𑌿 𑌸𑌂𑌶𑌯𑌃—𑌕𑌿𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃? 𑌕𑌿𑌂 𑌵𑌾 𑌤𑌦𑍍𑌧𑌾𑌨𑌮𑍍 𑌇𑌤𑌿? 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑌰𑌂 𑌚 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌮𑍍 | 𑌅𑌤𑌶𑍍𑌚 𑌯𑌤𑍍 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑌰𑌮𑍍 𑌏𑌤𑌯𑍋𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍋𑌃, 𑌯𑌦𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌤𑍍 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌵𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌮𑌮 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿

ஞானகர்மங்கள் இரண்டும் ஒருங்கே உடன் நிகழாமையால், "கர்மமானது" (ங - க)என்றவிடத்து "இவ்விரண்டனுள் எது மேலானதோ, அதனை எனக்கு உரைத்தருளவேண்டும்" என அர்ஜுனனால் கேட்கப்பட்ட பகவான், ஸாங்க்யர்களான துறவிகட்கு ஞானயோகத்தால் நிஷ்டையும் (கர்ம)யோகிகட்குக் கர்மயோகத்தால் நிஷ்டையும் கூறப்பட்டன என்று முடிவுசெய்தனர். மேலும், "வெறுந்துறவினால் மாத்திரம்(பொருள்)கைகூடுதலை அடைவதில்லை" (ங - ச)என்னும் திருவாக்கினால், ஞானத்தோடுகூடிய அது, பொருள்கைகூடுதற்கு ஸாதநமாகக் கொள்ளப்பட்டது ; மற்றும், கர்மயோகத்தை விதித்தலால்(ச - சஉ), (அதுவும், பொருள்கைகூடுதற்கு ஸாதநமெனக் கொள்ளப்பட்டது). ஞானமில்லாத துறவு மேலானதா ? அன்றி, கர்ம யோகம் மேலானதா ? என இவ்விரண்டனுள் மேலானதை அறிய விரும்பிய

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

க. கிருஷ்ண ! கர்மங்களைத்துறந்திடுதலையும், மற்று, (கர்ம) யோகத்தையும் புகழ்ந்து பேசுகிறீர்கள். இவ்விரண்டனுள் எது மேலானதோ, அஃதொன்றையே தீர்ந்தமுடிவாக எனக்கு உரைத்தருளவேண்டும்.

சாஸ்திரத்திற்கூறிய பலவகையான அநுஷ்டாநங்களைத் துறந்திடுதலைப் புகழ்கிறீர்கள், அதாவது, கூறுகிறீர்கள். மீண்டும், அவற்றையே அநுஷ்டித்தலையும் அவசியம் செய்யவேண்டுமெனக்கூறுகிறீர்கள். ஆகவே, எது மேலானதோ என்பது என் ஸம்சயம் : கர்மத்தை அநுஷ்டித்தல் மேலானதா? அல்லது, அதனை விட்டிடுதல் மேலானதா ? என்பது. ஆனால், மேலானதாயிருப்பதை அநுஷ்டிக்கவேண்டும். ஆதலால், கர்மஸந்யாஸமும் கர்மயோகமுமாகிய இவ்விரண்டனுள் எது மேலானதோ, எதனை

अनयोस्तत् यदेकं सुकरतरं [illegible]-
स्वात् मे ब्रूहि सुनिश्चितं सुविवृतं तत् इति ॥ १ ॥

स्वाभिप्रायम् आचक्षाणो निर्णयाय श्रीभगवान् उवाच—

श्रीभगवानुवाच ॥

२. संन्यासः कर्मयोगश्च निःश्रेयसकरावुभौ ।
तयोस्तु कर्मसंन्यासात्कर्मयोगो विशिष्यते ॥

संन्यासः कर्मणां परित्यागः कर्मयोगश्च तेषाम् अनुष्ठानम्; तौ उभौ अपि निःश्रेयसकरौ मोक्षं साधयतः ज्ञानोत्पत्तिहेतुत्वेन । उभौ यद्यपि निःश्रेयसकरौ, तथापि तयोस्तु निःश्रेयसहेत्वोः कर्मसंन्यासात् केवलात् कर्मयोगो विशिष्यते इति कर्मयोगं स्तौति ॥ २ ॥

कस्मात् इति? आह—

३. ज्ञेयः स नित्यसंन्यासी यो न द्वेष्टि न काङ्क्षति ।
निर्द्वन्द्वो हि महाबाहो सुखं बन्धात्प्रमुच्यते ॥

ज्ञेयः ज्ञातव्यः सः कर्मयोगी नित्यसंन्यासी इति यो न द्वेष्टि किञ्चित् न काङ्क्षति दुःखसुखे तत्साधने च । [illegible] यः

அநுஷ்டிப்பதனுல் நான் நன்மையைப் பெறலாமென்று நீங்கள் நினைக்கின்றீர்களோ, அந்த எதாவதொன்றையே (அதாவது) உங்களுடைய கருத்தை (இன்னதுதான் என்று) தீர்ந்த முடிவாக எனக்குச் சொல்லவேண்டும்; (அவை இரண்டையும்) ஒரே புருஷன் ஒரேகாலத்து அநுஷ்டிக்கக் கூடாமையினுலென்க. (௧)

துறவைக்காட்டிலும் கர்மயோகமே அஜ்ஞானிக்கு ஏற்றது.

(அஜ்ஞானிக்கு எது தகுந்ததென்பதை) நிச்சயித்தற்பொருட்டுத் தமது கருத்தைக் கூறுகின்ற ஸ்ரீபகவான் அருளிச்செய்யலானுர்:

ஸ்ரீபகவான் சொல்லுற்ருர்:

மாகிய கதியை வேண்டுகிறார்கள்; புண்யமான தேவேந்திரஉலகை அடைந்து, ஸ்வர்க்
கத்திலே தேவர்களுடைய திவ்வியமான போகங்களை அநுபவிக்கிறார்கள்.

௨௧. அவர்கள் அந்த விசாலமான ஸ்வர்க்கலோகத்தை அநுபவித்துப் புண்
ணியம் கழிந்தபோனவுடன் மனுஷ்யலோகத்தைப் புகுகிறார்கள்; இவ்வாறு மூன்று
வேதங்களுடைய தருமத்தைப் பின்பற்றியவராய், விஷயங்களை விரும்புபவராய், போவ
தையும் வருவதையும் அடைகிறார்கள்.

[illegible] ॥ ௨௦ ॥

[illegible] ॥ ௨௧ ॥

[illegible]—

௨௨. [illegible] ।
[illegible] ॥

[illegible]

(ஸோமம் - யாகத்தில் உபயோகிக்கின்ற ஓர்வகைக்கொடியின் சாறு.) ருக் யஜுஸ் ஸாமங்களை அறிந்தவர்கள் ஸோமபாநஞ் செய்பவராய், அந்த ஸோமபாநத்தி னாலேயே பாவத்தினின்றும் பரிசுத்தமானவராய், வஸுக்கள்முதலிய தேவர்களது வடிவத்தையுடைய என்னை அக்நிஷ்டோமம் முதலிய யாகங்களால் பூஜித்து, ஸ்வர்க்க மாகிய கதியை விரும்புகிறார்கள். அவர்கள், நூறுயாகமுடைய இந்திரனது உலகை (த் தாம் செய்த) புண்ணியத்தின்பயனாக அடைந்து, மனிதர்கட்குக் கிடையாத தேவபோகங்களை அநுபவிக்கிறார்கள். (௨௦)

இவ்வாறு - கீழ்க்கூறியபடி மூன்று வேதங்களுடைய தருமத்தை - வேதங்களில் விதிக்கப்பட்ட வெறுங்கர்மத்தை. அவர்கள் ....போவதையும், வருவதையுந்தான் அடைகிறார்கள் : ஆனால், ஸ்வதந்திரமான நிலையை ஓரிடத்தும் பெறுவதில்லை என்பது பொருள். (௨௧)

ப்ரஹ்மவித்யையிலே நிலைத்தவனுடைய யோகக்ஷேமத்தை பகவான் நடத்துதல்.

இனி, எவர்கள் ஆசைநீங்கியவராய், உள்ளதை உள்ளபடி காண்கிறார்களோ,

௨௨. எந்த ஜனங்கள் அன்னியரல்லாதவராய் என்னைத் தியானிப்பவராய் எங்கும் உபாஸிக்கிறார்களோ, அந்த எப்பொழுதும் (தியானத்திலே) உறுதியாகச் சென்றவரது யோகக்ஷேமத்தை யான் வகிக்கின்றேன்.

எந்த ஸந்யாஸிகளான ஜனங்கள் வேறானவரல்லராய் = உயர்ந்த கடவுளான நாராயணனை ஆத்மாவாகக்கொண்டவராய், (அந்த ஆத்மாவையே) தியானிப்பவராய் என்னை எங்கும் (உள்ள பொருளாகக்) காண்கிறார்களோ, அவர்கட்கு = (தியான

பரமார்த்ததர்ஶிநாம் நித்யாபியுக்தாநாம் ஸததாபியோகிநாம் யோகக்ஷேமம், யோக: அப்ராப்தஸ்ய ப்ராபணம், க்ஷேம: தத்ரக்ஷணம், ததுபயம் வஹாமி ப்ராபயாமி அஹம்; 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்' 'ஸ ச மம ப்ரிய:' யஸ்மாத், தஸ்மாத் தே மமாத்மபூதா: ப்ரியாஶ்ச இதி ॥

நநு அந்யேஷாமபி பக்தாநாம் யோகக்ஷேமம் வஹத்யேவ பகவாந் । ஸத்யம், வஹத்யேவ; கிந்து அயம் விஶேஷ:—அந்யே யே பக்தா: தே ஆத்மார்த்தம் ஸ்வயமபி யோகக்ஷேமம் ஈஹந்தே; அநந்யதர்ஶிநஸ்து ந ஆத்மார்த்தம் யோகக்ஷேமம் ஈஹந்தே; ந ஹி தே ஜீவிதே மரணே வா ஆத்மநோ க்ருத்திம் குர்வந்தி; கேவலமேவ பகவச்சரணா: தே; அத: பகவாநேவ தேஷாம் யோகக்ஷேமம் வஹதீதி ॥ உஉ ॥

நநு, அந்யா அபி தேவதா: த்வமேவ சேத், தத்பக்தாஶ்ச த்வாமேவ யஜந்தே । ஸத்யம் ஏவம்—

உங. யேऽப்யந்யதேவதாபக்தா யஜந்தே ஶ்ரத்தயாந்விதா: ।
தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதிபூர்வகம் ॥

த்திலே) விடாமுயற்சியுள்ளவராய் உண்மையைக் காண்பவர்க்கு யோகமும், க்ஷேம முமாகிய அவ்விரண்டினையும் யான் நடத்துகிறேன். யோகம் - அடையாததை அடைதல்; க்ஷேமம் - அதனைக் காப்பாற்றுதல். "ஞானியோ ஆத்மாதான் (என் பது) - எனது கொள்கை," "அவனும் எனக்குப்பிரியமானவன்" (எ - கஅ, கஎ) ஆதலால், அவர்கள் என்னுடைய ஆத்மாவாகவும், எனக்குப் பிரியர்களாகவும் இருக் கிறார்களென்க.

(ஆக்ஷேபம்) :—அப்படியானால்,மற்றைய பக்தர்களுக்குந்தான் பகவான் யோக க்ஷேமத்தை நடத்தவேநடத்துகின்றார்.

(ஸமாதாநம்) :—உண்மை ; நடத்தவேநடத்துகின்றார். ஆனால், இது விசேஷம் [வித்தியாசம்] :—மற்றைய பக்தர்கள் எவர்களோ, அவர்கள் தங்களுக்காக யோக க்ஷேமத்தைத் தாங்களும் முயற்சிக்கிறார்கள். ஆனால், (தங்களைக்காட்டிலும்) வேறான தைக் காணாதவர்கள் தமக்காக யோகக்ஷேமத்தை முயற்சிப்பதில்லை. அவர்கள் [ஆத்ம ஞானிகள்], வாழ்விலாயினும், சாவிலாயினும் தமக்கு ஆசையைக் கொள்வதில்லையன் றோ. அவர்கள், பகவானைமாத்திரமே அடைக்கலமாகக் கொண்டவர்கள். ஆகவே, பகவானேதான் அவர்களது யோகக்ஷேமத்தை நடத்துகிறாரென்பது. (உஉ)

மற்றைய பக்தர்கள் பரம்பொருளை அறியாது பூஜிக்கிறார்கள்.

(ஆக்ஷேபம்):—அங்ஙனம், வேறு தேவதைகளும் நீங்களேயானால், அவர்க ளுடைய பக்தர்களும் உங்களையேதான் பூஜிக்கிறார்கள்.

(ஸமாதாநம்) :—இவ்வாறு உண்மை :

உங. எவர்களும் வேறுதெய்வ பக்தர்களாய் நம்பிக்கையோடுகூடி (அத்தெய் -களும் கௌந்தேய! அறியாமையோடு என்னையே

येऽपि अन्यदेवताभक्ताः अन्याश्च देवताश्च भक्ताः अन्यदेवताभक्ताः सन्तः यजन्ते पूजयन्ति श्रद्धया श्रुतिस्मृत्युक्त्या अन्विताः अनुगताः, तेऽपि मामेव कौन्तेय यजन्ति अविधिपूर्वकम्; अविधिः अज्ञानम्, तत्पूर्वकं यजन्त इत्यर्थः ॥ २३ ॥

कस्मात्ते अविधिपूर्वकं यजन्त इति? उच्यते—यस्मात्

२४. अहं हि सर्वयज्ञानां भोक्ता च प्रभुरेव च ।
न तु मामभिजानन्ति तत्त्वेनातश्च्यवन्ति ते ॥

अहं हि सर्वयज्ञानां श्रौतानां स्मार्तानां च सर्वेषां यज्ञानां देवतात्वेन भोक्ता च प्रभुः स्वामी च । मत्स्वामिको हि यज्ञः, 'अधियज्ञोऽहमेवात्र' इति हि उक्तम् । तथा न तु मामभिजानन्ति तत्त्वेन यथावत् । अतश्च अविधिपूर्वकम् इष्ट्वा यागफलाच्च्यवन्ति प्रच्यवन्ते ते ॥ २४ ॥

येऽपि अन्यदेवताभक्तिमत्त्वेन अविधिपूर्वकं यजन्ते, तेषामपि यागफलम् अवश्यंभावि । कथम्?—

२५. यान्ति देवव्रता देवान् पितॄन्यान्ति पितृव्रताः ।

நம்பிக்கையோடு - விச்வாஸ புத்தியோடு. (உ௩)

எதனுல் அவர்கள் அறியாமையொடு (உங்களைப்) பூஜிக்கிறுர்கள் என்பது?— கூறுவோம் : ஏனெனில்,

உ௪. யாகங்களெல்லாவற்றிற்கும் நானன்றோ போக்தாவும், பிரபுவும். மற்று, அவர்கள் என்னை உண்மையாய் அறிவதில்லை; ஆகவே, தவறுகிறுர்கள்.

நான், சுருதியிலும் ஸ்மிருதியிலும் விதிக்கப்பட்ட ஸகலயஜ்ஞங்களையும் (அந்தந்த) தேவதாவடிவமாகப் புஜிக்கின்றவனும் சொந்தக்காரனுமாக இருக்கின்றேன். நானன்றோ யஜ்ஞத்திற்குச் சொந்தக்காரன்; "இ(ச்சரீரத்) திலே நானேதான் அதியஜ்ஞம்" (அ - ச) எனக் கூறப்பட்டுள்ளது. மற்று, அவர்கள் என்னை அவ்வாறு அறிவதில்லை; ஆகவே, அறியாமையொடு யாகஞ்செய்து யாகப்பயனிலிருந்து தவறுகிறுர்கள். ("ஸகல யஜ்ஞங்களையும் வஸுக்கள் முதலிய அந்தந்த தேவதாவடிவமாகப் புஜிக்கிறவன் நான்தான்; அந்தர்யாமிவடிவமாக அந்த யஜ்ஞங்கட்குச் சொந்தக்காரனும் நான்தான்" என்பதைத் தெரிந்துகொள்ளாத வேறுதேவதா பக்தர்கள் அறியாமையினுல் என்னிடத்துக் கர்மங்களை அர்ப்பியாது, அக்கர்மங்கட்கு அழியும்பயனைப் பெற்று, அந்தந்த உலகங்கட்குச் சென்று, மீண்டும் திரும்பிவருகிறுர்களென்பது கருத்து.) (உ௪)

எவர்களும் வேறுதேவதைகளின்மேல் பக்தியையுடைமையால் அறியாமையொடு பூஜிக்கிறுர்களோ, அவர்களுக்கும் யஜ்ஞத்தின்பயன் அவசியமுண்டாவது [அவர்கட்குத் திரும்பிவாராமை என்னும் பயனில்லையாயினும், அவர்கள் செய்கின்ற அந்தந்த தேவதாபூஜைக்குத் தக்கவாறு பயன் உண்டு என்பது நிச்சயம்].— எப்படி?—

உ௫. தேவர்களிடத்து விரதத்தைக்கொண்டவர்கள் தேவர்களை அடைகிறுர்கள் : பிதிருக்களிடத்து விரதத்தைக் கொண்டவர்கள் பிதிருக்களை அடைகிறுர்கள் :

𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑍇𑌜𑍍𑌯𑌾𑌃 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑌿𑌨𑍋𑌽𑌪𑌿 𑌮𑌾𑌮𑍍 ॥

𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌦𑍇𑌵𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 𑌦𑍇𑌵𑍇𑌷𑍁 𑌵𑍍𑌰𑌤𑌂 𑌨𑌿𑌯𑌮𑍋 𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇 𑌦𑍇𑌵𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 । 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑍄𑌨𑍍 𑌅𑌗𑍍𑌨𑌿𑌷𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌾𑌦𑍀𑌨𑍍 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑍃𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌾𑌦𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌪𑌰𑌾𑌃 𑌪𑌿𑌤𑍃𑌭𑌕𑍍𑌤𑌾𑌃 । 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌵𑌿𑌨𑌾𑌯𑌕𑌮𑌾𑌤𑍃𑌗𑌣𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌗𑌿𑌨𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌿 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑍇𑌜𑍍𑌯𑌾𑌃 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑍂𑌜𑌕𑌾𑌃 । 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑌿𑌨𑌃 𑌮𑌦𑍍𑌯𑌜𑌨𑌶𑍀𑌲𑌾𑌃 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌃 𑌮𑌾𑌮𑍍 𑌏𑌵 । 𑌸𑌮𑌾𑌨𑍇 𑌅𑌪𑌿 𑌆𑌯𑌾𑌸𑍇 𑌮𑌾𑌮𑍍 𑌏𑌵 𑌨 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 ; 𑌤𑍇𑌨 𑌤𑍇 𑌅𑌲𑍍𑌪𑌫𑌲𑌭𑌾𑌜𑌃 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௨௫ ॥

𑌨 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 𑌅𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 𑌅𑌨𑌨𑍍𑌤𑌫𑌲𑌮𑍍, 𑌸𑍁𑌖𑌾𑌰𑌾𑌧𑌨𑌶𑍍𑌚 𑌅𑌹𑌮𑍍 । 𑌕𑌥𑌮𑍍?—

௨௬. 𑌪𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌫𑌲𑌂 𑌤𑍋𑌯𑌂 𑌯𑍋 𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌤𑌦𑌹𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

𑌪𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌫𑌲𑌂 𑌤𑍋𑌯𑌂 𑌉𑌦𑌕𑌂 𑌯𑌃 𑌮𑍇 𑌮𑌹𑍍𑌯𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 𑌤𑌤𑍍 𑌅𑌹𑌂 𑌪𑌤𑍍𑌰𑌾𑌦𑌿 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌉𑌪𑌹𑍃𑌤𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑌿𑌤𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌮𑍍 𑌅𑌶𑍍𑌨𑌾𑌮𑌿 𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 ॥ ௨௬ ॥

𑌯𑌤 𑌏𑌵𑌮𑍍, 𑌅𑌤𑌃—

பூதங்களைப் பூஜிப்பவர்கள் பூதங்களை அடைகிறார்கள்: என்னைப் பூஜிப்பவர்களும் என்னை அடைகிறார்கள்.

தேவர்களிடத்து, (பிரதக்ஷிணஞ்செய்தல், வணங்குதல்முதலிய) நியமத்தையும், பக்தியையும் உடையவர்கள் தேவர்களை[அவர்களது உலகத்தை]அடைகிறார்கள். ச்ராத்தம் முதலிய கர்மங்களிலே கருத்தூன்றியவராய்ப் பிதிருக்களிடத்து பக்தியுள்ளவர்கள் அக்நிஷ்வாத்தர்முதலிய பிதிருக்களை[அவர்களது உலகத்தை]அடைகிறார்கள் பூதங்களைப் பூஜிப்பவர்கள் - விநாயகர்கள், மாதிருக்களுடைய கூட்டங்கள், நான்கு பகினிகள்முதலான பூதங்களை[அவற்றின் உலகத்தை]அடைகிறார்கள். என்னைப் பூஜிக்கும் தன்மையரான விஷ்ணுபக்தர்கள் என்னையே அடைகிறார்கள். சிரமம் ஒன்றாயிருந்தும், (பேதையர்கள்) என்னையே பூஜிப்பதில்லை; அறியாமையினாலென்க. ஆதலால், அவர்கள் அற்பப்பயனை அடைபவராய் இருக்கிறார்கள் என்பது (தேர்ந்த) பொருள். (௨௫)

பரம்பொருளைப் பூஜிப்பது எளிது.

எனது பக்தர்களுக்குத் திரும்பிவாராமை என்னும் அழிவிலாப் பயன்மாத்திரமன்று; நானும் எளிதாகப் பூஜிக்கத்தக்கவன் [என்னைப் பூஜித்தலும் அவர்கட்கு எளிது].—எப்படி?—

௨௬. எவன் இலை, புஷ்பம், பழம், ஜலம் இவற்றை எனக்குப் பக்தியொடு கொடுக்கின்றானோ, (அந்தப்) பரிசுத்தபுத்தியுள்ளவன் பக்தியொடு அர்ப்பித்த அதனை யான் புஜிக்கின்றேன்.

அதனை - இலை முதலியவற்றை. புஜிக்கின்றேன் - வாங்கிக்கொள்கிறேன். (௨௬) இவ்வாறிருப்பதனால்,

௨௭. யத்கரோஷி யத³ஶ்நாஸி யஜ்ஜுஹோஷி த³தா³ஸி யத் ।
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மத³ர்ப்பணம் ॥

யத் கரோஷி ஸ்வதஃ ப்ராப்தம், யத் அஶ்நாஸி, யத் ஜுஹோஷி ஹவநம் நிர்வர்த்தயஸி ஶ்ரௌதம் ஸ்மார்த்தம் வா, யத் த³தா³ஸி ப்ரயச்ச²ஸி ப்³ராஹ்மணாதி³ப்⁴யஃ ஹிரண்யாதி³, யத் தபஸ்யஸி தபஃ சரஸி கௌந்தேய தத் குருஷ்வ மத³ர்ப்பணம் ॥ ௨௭ ॥

ஏவம் குர்வதஃ தவ யத் ப⁴வதி தத் ஶ்ருணு—

௨௮. ஶுபா⁴ஶுப⁴ப²லைரேவம் மோக்ஷ்யஸே கர்மப³ந்த⁴நைஃ ।
ஸந்ந்யாஸயோக³யுக்தாத்மா விமுக்தோ மாமுபைஷ்யஸி ॥

ஶுபா⁴ஶுப⁴ப²லைஃ ஶுபா⁴ஶுபே⁴ இஷ்டாநிஷ்டே ப²லே யேஷாம் தாநி ஶுபா⁴ஶுப⁴ப²லாநி கர்மாணி தைஃ ஶுபா⁴ஶுப⁴ப²லைஃ கர்மப³ந்த⁴நைஃ கர்மாண்யேவ ப³ந்த⁴நாநி கர்மப³ந்த⁴நாநி தைஃ கர்மப³ந்த⁴நைஃ ஏவம் மோக்ஷ்யஸே மத³ர்ப்பணம் குர்வந் । ஸோऽயம் ஸந்ந்யாஸயோகோ³ நாம ; ஸந்ந்யாஸஶ்ச அஸௌ மத்ஸமர்ப்பணதயா, கர்மத்வாத் யோக³ஶ்ச அஸௌ இதி ; தேந ஸந்ந்யாஸயோகே³ந யுக்தஃ ஆத்மா அந்தஃகரணம் யஸ்ய தவ ஸஃ த்வம் ஸந்ந்யாஸயுக்தாத்மா ஸந் விமுக்தஃ கர்மப³ந்த⁴நைஃ ஜீவந்நேவ, பதிதே ச அஸ்மிந் ஶரீரே மாம் உபைஷ்யஸி ஆக³மிஷ்யஸி ॥ ௨௮ ॥

---

௨௭. நீ எதனைச் செய்கின்றனையோ, எதனைப் புஜிக்கின்றனையோ, எதனை ஹோமஞ் செய்கின்றனையோ, எதனை(த் தாநமாக)க் கொடுக்கின்றனையோ, எதனைத் தவம்புரிகின்றனையோ, கௌந்தேய! அதனை எனக்கு அர்ப்பிதமாகச் செய்யக் கடவாய்.

தானே அமைந்த எதனை [சாஸ்திரத்தாலல்லாமல் பிராணிகளுடைய இயற்கை வசத்தாலமைகின்ற நடத்தல், உண்ணல்முதலிய எதனை]ச் செய்கின்றாயோ, எதனைப் புஜிக்கின்றாயோ [எந்த போகத்தை அநுபவிக்கின்றாயோ], சுருதியிலாயினும் ஸ்மிருதியிலாயினும் விதிக்கப்பட்ட எந்த ஹோமத்தைச் செய்துமுடிக்கின்றாயோ, பிராமணர் முதலானோர்கட்கு எந்தப் பொன்முதலியவற்றைக் கொடுக்கின்றாயோ, எந்தத் தவத்தை அநுஷ்டிக்கின்றாயோ, கௌந்தேய! அவற்றை (யெல்லாம்) எனக்கு அர்ப்பணமாகச் செய்யக்கடவாய். (௨௭)

இவ்வாறு செய்கின்ற உனக்கு எது உண்டாகின்றதோ, அதனைக் கேள்:

௨௮. **நல்லனவும் தீயனவுமான பயன்களையுடைய கர்மகட்டுக்களால் நீ இவ்வாறு விடப்படுவாய்; ஸந்யாஸமென்னும்யோகத்தைக் கூடிய மனத்தினனாய்(க் கர்மங்களால்) விடப்பட்டு என்னை வந்தடைவாய்.**

நீ இவ்வாறு (ஸகலத்தையும்) எனக்கு அர்ப்பணமாகச் செய்யும்பொழுது, வேண்டிய பயனையும் வேண்டாத பயனையுமுடைய கர்மங்களாகிய கட்டுக்களினின்(று) விடப்படுவாய். இந்த ஸந்யாஸயோகமென்பது - அது [ஸகலத்தையும் ... மாகச் செய்வது], எனக்கு அர்ப்பிப்பதா யிருப்பதனால், இது - [ஸந்யாஸம் - விடுதல், துறத்தல்]; கர்மமாயுள்ளதனால், இது - யோக... நீ அந்த ஸந்யாஸயோகத்தோடு கூடிய மனத்தினனா(ய்) கட்டுக்களால் விடப்பட்டு, சரீரம் மாய்ந்

रागद्वेषवान् तर्हि भगवान्, यतो भक्तान् अनुगृह्णाति, न इतरान् इति। तत् न—

௨௯. समोऽहं सर्वभूतेषु न मे द्वेष्योऽस्ति न प्रियः।
ये भजन्ति तु मां भक्त्या मयि ते तेषु चाप्यहम्॥

समः तुल्यः अहं सर्वभूतेषु। न मे द्वेष्यः अस्ति न प्रियः। अग्निवत् अहम्—दूरस्थानां यथा अग्निः शीतं न अपनयति, समीपम् उपगच्छताम् अपनयति; तथा अहं भक्तान् अनुगृह्णामि, न इतरान्। ये भजन्ति तु माम् ईश्वरं भक्त्या मयि ते—स्वभावत एव न मम रागनिमित्तम्—वर्तन्ते। तेषु च अपि अहं स्वभावत एव वर्ते, न इतरेषु। न एतावता तेषु द्वेषो मम॥ ௨௯॥

பரம்பொருளினுடைய பக்ஷபாதமில்லாத் தன்மை.

(ஆக்ஷேபம்):—அப்பொழுது பகவான் விருப்புவெறுப்புக்களையுடையவர்; ஏனெனில், பக்தர்களை அநுக்கிரகக்கிருரேயன்றி மற்றையோர்களை (அநுக்கிரகக்கிருர்) இல்லை என்பது.

(ஸமாதாநம்):—அது அன்று:

௨௯. யான் ஸகலப்பிராணிகளிடத்தும் ஸமமாயிருக்கிறேன். எனக்குப் பகையானவன் இல்லை, பிரியமானவன் இல்லை. ஆனல், எவர்கள் என்னை பக்தியொடு தொழுகின்ருர்களோ, அவர்கள் என்னிடத்து (இருக்கிருர்கள்); யான் அவர்களிடத்தும் (இருக்கிறேன்).

யான் அக்நிபோல இருக்கின்றேன்: எப்படி. நெருப்பானது தூரத்திலுள்ளவர்க்குக் குளிரைப்போக்குவதில்லையோ, ஸமீபத்தில் செல்லுகிறவர்க்கு(க் குளிரை)ப் போக்குகின்றதோ, அப்படி நான் பக்தர்களுக்கு அருள்புரிகின்றேன்; மற்றையோர்க்கு இல்லை. மற்று, ஈச்வரனுகிய என்னை எவர்கள் பக்தியொடு தொழுகிருர்களோ, அவர்கள் இயற்கையாகவே என்னிடத்து இருக்கிருர்கள்; எனக்கு (அவர்களிடத்துள்ள ஒருவிதப்) பற்றினலும் இல்லை. அவர்களிடத்தும் யான் இயல்பாகவே இருக்கின்றேன்; மற்றையோர்களிடத்து இல்லை. இவ்வளவினல், எனக்கு அவர்களிடத்து வெறுப்பு இல்லையென்க. (பகவானைப் பூஜித்தலென்பது - வர்ணம், ஆச்ரமம் முதலியவற்றின் தருமங்களை ஈச்வரார்ப்பணமாக அநுஷ்டிப்பது. இதற்குப் பகவத்பக்தி என்று பெயர். இப்பக்தியின் மஹிமையை நினைக்கவும் முடியாது. இதுதான் மன அழுக்கை நீக்கி, புத்தியைச் சுத்தமாகத் திருத்துவது. இவ்வாறு இதனல் புத்தி திருந்தியவர்களுடைய சித்தமானது - பகவான் தோன்றுதற்கு ஏற்ற தகுதியைப் பெறுகின்றது. ஆகவே, "அவர்கள் என்னிடத்து இருக்கிருர்கள்" என்ருல்- ரஜஸ் தமஸ் என்னும் அழுக்கு நீங்கி அதிஸ்வச்சமாயுள்ள அவர்களுடைய அத்தகைய அந்தக்கரணமானது எனது வடிவத்தை வாங்கிப் பிடித்துக்கொள்கின்றது என்றபடி. "யான் அவர்களிடத்தும் இருக்கிறேன்" என்ருல் - ஸூர்யனுடைய ஒளியானது எங்கும் உள்ளதாயினும், ஸ்வச்சமான கண்ணடியில் பிரதிபலிக்காமலிராதவாறு போல, அவர்களுடைய ஸ்வச்சமான சித்தத்திலே பகவான் அவச்யம் பிரதிபலிக்கிருர் என்றபடி. பகவான் எங்கும் உள்ளவராயினும், பக்தர்களுடைய ஸ்வச்சமான

शृणु इदं रहस्यम्—

௩௦. अपि चेत्सुदुराचारो भजते मामनन्यभाक् ।
साधुरेव स मन्तव्यः सम्यग्व्यवसितो हि सः ॥

अपि चेत् यद्यपि सुदुराचारः सुष्ठु दुराचारः अतीव कुत्सिताचारोऽपि भजते माम् अनन्यभाक् अनन्यभक्तिः सन्, साधुरेव सम्यग्वृत्त एव स मन्तव्यः ज्ञातव्यः ; सम्यक् यथावत् व्यवसितो हि सः, यस्मात् साधुनिश्चयः सः ॥ ௩௦ ॥

उत्सृज्य च बाह्यां दुराचारताम् अन्तः सम्यग्व्यवसायसामर्थ्यात्—

௩௧. क्षिप्रं भवति धर्मात्मा शश्वच्छान्तिं निगच्छति ।
कौन्तेय प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति ॥

क्षिप्रं शीघ्रं भवति धर्मात्मा धर्मचित्त एव । शश्वत् नित्यं शान्तिं च उपशमं निगच्छति प्राप्नोति । शृणु परमार्थम्—कौन्तेय प्रतिजानीहि निश्चितां प्रतिज्ञां कुरु, न मे मम भक्तः मयि समर्पितान्तरात्मा मद्भक्तः न प्रणश्यति इति ॥ ௩௧ ॥

किञ्च—

சித்தத்திலே வெளிப்படுகிறார்; பக்தரல்லாதவர்களுடைய அசுத்தமான சித்தத்திலே வெளிப்படுவதில்லை. ஆதலால், ஸூர்யனுக்குக் கண்ணாடியிலும், மண்ணாங்கட்டியிலும் விருப்பும், வெறுப்பும் இல்லாதவாறுபோல, பகவானுக்கு ஒருவனிடத்து விருப்பும், ஒருவனிடத்து வெறுப்பும் இல்லையென்க.) (௨௯)

தீயொழுக்கமுடையோரும், பிறவியினால்தாழ்ந்தோரும் பகவத்பக்தியினால் உயர்ந்தகதியைப்பெறுவர்.

என்னிடத்து (வைக்கும்) பக்தியின் மஹிமையைக் கேள் :

௩௦. (ஒருவன்) மிகுந்த தீயொழுக்கமுடையோனானாலும், வேறொன்றை (அடைக்கலமாக) அடையாதவனாய் என்னைத் தொழுகின்றானே; அவனை நல்லவனாகவே நினைக்கவேண்டும். ஏனெனில், அவன் நல்ல நிச்சயத்தை உடையவன்.

நல்லவனாகவே - நல்லொழுக்க முடையவனாகவே. நினைக்கவேண்டும் - தெரிந்துகொள்ளவேண்டும். நல்ல நிச்சயத்தை - நேரான உறுதியை. (௩௦)

(அவன்) வெளியிலுள்ள தீயொழுக்கமுடைமையை விட்டு, உள்ளேயுள்ள நேரான நிச்சயத்தின் வலிமையினால்

௩௧. சீக்கிரம் நல்லொழுக்கத்திலே மனமுடையவனாக ஆகிறான்; எப்பொழுதும் ஒழிவைப் பெறுகிறான். கௌந்தேய! "என்னுடைய பக்தன் கெடமாட்டான்" (என்று) உறுதியாகச் சொல்லு.

ஒழிவை - [தீயொழுக்கத்தினின்றும் ஒழிதலை.—ஆ.]. உண்மையைக் கேள் : அந்தக்கரணத்தை என்னிடத்து நன்றாக வைத்திருக்கின்ற என்பக்தனானவன் (ஒருகாலும்) கெடமாட்டான் என்று உறுதியாகச்சொல். (௩௧)

அன்றியும், (பகவத்பக்தியைச் செய்யவேண்டும்) :

௩௨. மாம் ஹி பார்த்த வ்யபாஶ்ரித்ய யேऽபி ஸ்யு: பாபயோநய: |
ஸ்த்ரியோ வைஶ்யாஸ்ததா ஶூத்ராஸ்தேऽபி யாந்தி பராம் கதிம் ||

மாம் ஹி யஸ்மாத் பார்த்த வ்யபாஶ்ரித்ய மாம் ஆஶ்ரயத்வேந க்ருஹீத்வா யேऽபி ஸ்யு: யேऽபி ஸ்யு: பாபயோநய: பாபா யோநி: யேஷாம் தே பாபயோநய: பாபஜந்மாந:—கே தே இதி? ஆஹ—ஸ்த்ரிய: வைஶ்யா: ததா ஶூத்ரா: தேऽபி யாந்தி கச்சந்தி பராம் ப்ரக்ருஷ்டாம் கதிம் || ௩௨ ||

௩௩. கிம் புநர்ப்ராஹ்மணா: புண்யா: பக்தா ராஜர்ஷயஸ்ததா |
அநித்யமஸுகம் லோகமிமம் ப்ராப்ய பஜஸ்வ மாம் ||

கிம் புந: ப்ராஹ்மணா: புண்யா: புண்யயோநய: பக்தா: ராஜர்ஷய: ததா ராஜாநஶ்ச தே ருஷயஶ்ச ராஜர்ஷய: | யத: ஏவம், அத: அநித்யம் க்ஷணபங்குரம் அஸுகம் ச ஸுகவர்ஜிதம் இமம் லோகம் மநுஷ்யலோகம் ப்ராப்ய புருஷார்த்தஸாதநம் துர்லபம் மநுஷ்யத்வம் லப்த்வா பஜஸ்வ ஸேவஸ்வ மாம் || ௩௩ ||

கதம்?—

௩௪. மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு |
மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண: ||

௩௨. ஏனெனில், பார்த்த! ஸ்திரீகளும், வைச்யர்களும், சூத்ரர்களும், (மற்றுமிவர்போன்ற) எவர்களும் பிறவியில் தாழ்ந்தவராக உள்ளவரோ, அவர்களுங்கூட என்னை அடைக்கலமாகக்கொண்டு மேலான கதியை அடைகிருர்கள்.

(தாழ்ந்த பிறவியையுடைய) அவர்கள் யார் என்பது?—கூறுகிருர் : ஸ்திரீகள், வைச்யர், சூத்ரர் (என்று). (௩௨)

பக்தி யோகம்.

௩௩. பரிசுத்தமான பிராமணர்களும், ராஜர்ஷிகளுமாகிய பக்தர்கள்(மேலான கதியை அடைவார்களென்று) கூறவும்வேண்டுமோ? நிலையில்லதும், ஸுகமில்லதுமான இவ்வுலகை அடைந்து நீ என்னைத் தொழுதல் வேண்டும்.

சுத்தமான பிறவியையுடைய பிராமணர்களான பக்தரும், அரசராயும் ரிஷிகளாயுமுள்ள ராஜர்ஷிகளான பக்தரும்(உயர்ந்தநிலையைப் பெறுகிருர்களென்று)சொல்லவும் வேண்டுமோ? இவ்வாறுள்ளதனுல், கணப்பொழுதுள் அழியுந்தன்மையதாய் ஸுகமில்லாததான மநுஷ்யலோகத்தை அடைந்து, மோக்ஷத்திற்கு ஸாதநமும் கிடைப்பதற்கு அரிதுமான மநுஷ்யத்தன்மையைப் பெற்றவுடனே நீ என்னைத் தொழுதல் வேண்டும். (மநுஷ்யதேகமல்லாத மற்றைய பசுபக்ஷிதேகங்களிலே, பகவானைத் தொழுதற்கு யோக்கியதை இல்லை யென்க.—ஆ.)

எப்படி?— (௩௩)

௩௪. என்னிடத்து மனமுடையவனுக, என்னிடத்துப் பக்தியுள்ளவனுக, என்னைப் பூஜிக்குந்தன்மையனுக இருக்கவேண்டும்; என்னை வணங்கவேண்டும். நீ இவ்வாறு ஒருநிலைப்பட்டு என்னையே உயர்ந்த கதியாகக்கொண்டவனுய் ஆத்மாவாகிய என்னையே வந்தடைவாய்.

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑍇 𑌶𑌤𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌵𑍈𑌯𑌾-𑌸𑌿𑌕𑍍𑌯𑌾𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌪𑌰𑍍𑌵𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍁 𑌉𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌰𑌾𑌜𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌰𑌾𑌜𑌗𑍁𑌹𑍍𑌯𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌨𑌵𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌮𑌯𑌿 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇 𑌮𑌨𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌵 𑌸 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌨𑍍𑌮𑌨𑌾𑌃 𑌭𑌵 । 𑌤𑌥𑌾 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 𑌭𑌵 । 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑍀 𑌮𑌦𑍍𑌯𑌜𑌨𑌶𑍀𑌲𑌃 𑌭𑌵 । 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌚 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍁 । 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌈𑌶𑍍𑌵𑌰𑌮𑍇𑌷𑍍𑌯𑌸𑌿 𑌆𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑌮𑌾𑌧𑌾𑌯 𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍇𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌅𑌹𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌾, 𑌪𑌰𑌾 𑌚 𑌗𑌤𑌿𑌃, 𑌪𑌰𑌂 𑌅𑌯𑌨𑌂, 𑌤𑌂 𑌮𑌾𑌮𑍇𑌵𑌂-𑌭𑍂𑌤𑌮𑍍—'𑌏𑌷𑍍𑌯𑌸𑌿' 𑌇𑌤𑌿 𑌅𑌤𑍀𑌤𑍇𑌨 𑌪𑌦𑍇𑌨 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌃—𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌯𑌣𑌃 𑌸𑌨𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௩௪ ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇 𑌨𑌵𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

ஸ்ரீமஹாபாரதத்திலே, வ்யாஸராருளிச்செய்த நூறாயிரக் கிரந்த ஸம்ஹிதையிலே, பீஷ்மபர்வத்திலே, ஸ்ரீமத் பகவத்கீதைகளாக உபநிஷத்துக்களாக ப்ரஹ்மவித்யையாக யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணார்ஜுன ஸம்வாதத்திலே ராஜவித்யா ராஜ குஹ்யயோகம் என்னும் ஒன்பதாம் அத்தியாயம் முற்றும்.

ஒரு நிலைப்பட்டு - (பகவானிடத்திலேயே) சித்தத்தை ஒருநிலைப்படுத்தி. யானன்றோ ஸகலபூதங்கட்கும் ஆத்மாவாகவும், அடையவேண்டிய உயர்ந்த கதியாகவும் இருக்கின்றேன். அந்த இவ்வாறுள்ள என்னை = ஈச்வரனாகிய ஆத்மாவை வந்தடைவாய்.—("ஆத்மாவை" என்பதை) - "வந்தடைவாய்" என்னும் முந்தின சொல்லோடு கூட்டுக. (௩௪)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

𑌦𑌶𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌯𑍋𑌗𑌃 ॥

𑌸𑌪𑍍𑌤𑌮𑍇 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌤𑌾𑌃, 𑌨𑌵𑌮𑍇 𑌚 । 𑌅𑌥 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌯𑍇𑌷𑍁 𑌯𑍇𑌷𑍁 𑌭𑌾𑌵𑍇𑌷𑍁 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍, 𑌤𑍇 𑌤𑍇 𑌭𑌾𑌵𑌾𑌃 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌃; 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌮𑌪𑌿, 𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌇𑌤𑍍𑌯𑌤𑌃 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌉𑌵𑌾𑌚—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥

க. 𑌭𑍂𑌯 𑌏𑌵 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌶𑍃𑌣𑍁 𑌮𑍇 𑌪𑌰𑌮𑌂 𑌵𑌚𑌃 ।
𑌯𑌤𑍍𑌤𑍇𑌽𑌹𑌂 𑌪𑍍𑌰𑍀𑌯𑌮𑌾𑌣𑌾𑌯 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌹𑌿𑌤𑌕𑌾𑌮𑍍𑌯𑌯𑌾 ॥

𑌭𑍂𑌯𑌃 𑌏𑌵 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌶𑍃𑌣𑍁 𑌮𑍇 𑌮𑌦𑍀𑌯𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌷𑍍𑌟𑌂 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌂 𑌵𑌚𑌃, 𑌯𑌤𑍍 𑌵𑌚𑌨𑌂 𑌤𑍇 𑌤𑌥𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑍀𑌯𑌮𑌾𑌣𑌾𑌯— 𑌮𑌦𑍍𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑍀𑌯𑌸𑍇 𑌖𑌲𑍁 𑌅𑌤𑍀𑌵 𑌅𑌮𑍃𑌤𑌮𑌿𑌵 𑌪𑌿𑌬𑌨𑍍, 𑌤𑌤𑌃—𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌹𑌿𑌤𑌕𑌾𑌮𑍍𑌯𑌯𑌾 𑌹𑌿𑌤𑍇𑌚𑍍𑌛𑌯𑌾 ॥ க ॥

𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌮𑌿𑌦𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌇𑌤𑌿? 𑌅𑌤 𑌆𑌹—

உ. 𑌨 𑌮𑍇 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌸𑍁𑌰𑌗𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌂 𑌨 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 ।
𑌅𑌹𑌮𑌾𑌦𑌿𑌰𑍍𑌹𑌿 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥

பத்தாம் அத்தியாயம் : விபூதியோகம்.

ஸகலத்தோற்றங்கட்கும் பகவான் மூலகாரணம்.

எ - ஆம் அத்தியாயத்திலும், கூ - ஆம் அத்தியாயத்திலும் பகவானுடைய உண்மையும் வைபவங்களும் எடுத்து விளக்கப்பட்டன. இனி, இப்பொழுது, எந்தெந்தப்பொருள்களில் பகவான் தியானிக்கத்தக்கவரோ, அந்தந்தப்பொருள்களைக் கூறவேண்டும். (முன்னமே) கூறப்பட்டதாயினும், பகவானுடைய உண்மையை இன்னும் கூறவேண்டும்; அநுபவத்தால் அறிதற்கு அரிதாகலின். ஆகவே, பகவான் கூறலாயினர் :

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

க. உயர்தோளா ! (என்வார்த்தையினால்) மகிழ்கின்ற உனக்கு யான் நலத்தைக் கருதி எதனைக் கூறுவேனோ, (அந்த யாவற்றினும்) மேலான என் வார்த்தையை மறுபடியும் கேள்.

மேலான - யாவற்றினும் மேலான பொருளை வெளிப்படுத்துகின்ற. நீ எனது ...தையினால், அமிருதத்தைக் குடித்தாற்போல, நிரம்ப மகிழ்கின்றாய். ஆதலின், ...க்கு மேலான வார்த்தையைக் கூறுவேன். நலத்தை - [அநுபவத்தால் அரிதான மெய்யறிவை.—ஆ.] (க)

...ன் கூறுவதென்பது எதற்காக ? (என்னுஞ்சங்கை வரும்) ஆதலால், பக...ளிச்செய்கிறார் :

...வ. தேவர்களது கூட்டங்கள் எனது உத்பத்தியை அறியவில்லை ; மஹர்ஷிகள் ஏனெனில், யான் தேவர்கட்கும் மஹர்ஷிகட்கும் எவ்வாற்றாலும் முத

𑌨 𑌮𑍇 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌨 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌸𑍁𑌰𑌗𑌣𑌾𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌯𑌃। 𑌕𑌿𑌂 𑌤𑍇 𑌨 𑌵𑌿𑌦𑍁𑌃? 𑌮𑌮 𑌪𑍍𑌰𑌭𑌵𑌂 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌤𑌿𑌶𑌯𑌮𑍍, 𑌅𑌥𑌵𑌾 𑌪𑍍𑌰𑌭𑌵𑌂 𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑌮𑍍 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌮𑍍। 𑌨𑌾𑌪𑌿 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 𑌭𑍃𑌗𑍍𑌵𑌾𑌦𑌯𑌃 𑌵𑌿𑌦𑍁𑌃। 𑌕𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑍇 𑌨 𑌵𑌿𑌦𑍁𑌰𑌿𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—𑌅𑌹𑌮𑌾𑌦𑌿𑌃 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌃 ॥ ௨ ॥

𑌕𑌿𑌞𑍍𑌚—

௩. 𑌯𑍋 𑌮𑌾𑌮𑌜𑌮𑌨𑌾𑌦𑌿𑌂 𑌚 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌲𑍋𑌕𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌅𑌸𑌂𑌮𑍂𑌢𑌃 𑌸 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍈𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌯𑌃 𑌮𑌾𑌮𑌜𑌮𑌨𑌾𑌦𑌿𑌂 𑌚—𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑌹𑌮𑌾𑌦𑌿𑌃 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌚, 𑌨 𑌮𑌮𑌾𑌨𑍍𑌯𑌃 𑌆𑌦𑌿𑌃 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇; 𑌅𑌤𑌃 𑌅𑌹𑌮𑌜𑌃 𑌅𑌨𑌾𑌦𑌿𑌶𑍍𑌚; 𑌅𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌵𑌮𑌜𑌤𑍍𑌵𑍇 𑌹𑍇𑌤𑍁𑌃—𑌤𑌂 𑌮𑌾𑌮𑌜𑌮𑌨𑌾𑌦𑌿𑌂 𑌚 𑌯𑌃 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌲𑍋𑌕𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍍, 𑌅𑌸𑌂𑌮𑍂𑌢𑌃 𑌸𑌂𑌮𑍋𑌹𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 𑌸𑌃 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍇𑌷𑍁 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁, 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍈𑌃 𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 𑌪𑌾𑌪𑍈𑌃 𑌮𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌮𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍃𑌤𑍈𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌪𑍍𑌰𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ ௩ ॥

𑌇𑌤𑌶𑍍𑌚𑌾𑌹𑌂 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑍋 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌮𑍍—

௪. 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌸𑌂𑌮𑍋𑌹𑌃 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌦𑌮𑌃 𑌶𑌮𑌃 ।
𑌸𑍁𑌖𑌂 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌭𑌵𑍋𑌽𑌭𑌾𑌵𑍋 𑌭𑌯𑌂 𑌚𑌾𑌭𑌯𑌮𑍇𑌵 𑌚 ॥

ப்ராஹ்மாமுதலிய தேவர்களது கூட்டங்கள் அறியவில்லை.—அவர்கள் எதனை அறியவில்லை ?—என்னுடைய பிரபுசக்தியின் பெருக்கத்தை, அல்லது உத்பத்தியை. ப்ருகுமுதலான மகர்ஷிகளும் அறியவில்லை.—அவர்கள் எதனால் அறியவில்லை என்பது ? —கூறுவோம் : ஏனெனில், யான் தேவர்கட்கும் மகர்ஷிகட்கும் எவ்விதத்தாலும் முதலானவன், காரணமானவன் என்க. (௨)

மேலும்,

௩. **எவன் என்னை, பிறவாதவனாகவும், அநாதியாகவும், உலகங்கட்குப் பரமேச்வரனாகவும் அறிகின்றானோ, அவன் மனிதர்களுள் மயங்காதவன் ; எல்லாப் பாவங்களாலும் விடப்படுகிறான்.**

நான் தேவர்களுக்கும், மகர்ஷிகளுக்கும் ஆதியாதலால், எனக்கு வேறொரு ஆதி இல்லை. ஆதலால், நான் பிறவாதவன், ஆதியுமில்லாதவன். ஆதியில்லாமை யென்பது - பிறவாமைக்குக் காரணமாமென்க. மயங்காதவன் - மயக்கமில்லாதவன். எல்லாப் பாவங்களாலும் - புத்தியோடும், புத்தியில்லாமலும் [தெரிந்தும், தெரியாமலும்] செய்யப்பட்ட ஸகல பாவங்களாலும். (௩)

இக்காரணத்தாலும், யான் உலகங்கட்குப் பரமேச்வரன் :

௪. **புத்தி, ஞானம், மயக்கமின்மை, பொறுமை, ஸத்யம், அடக்கம், ஒழிவு, இன்பம், துன்பம், பிறப்பு, இறப்பு, அச்சம், தைரியம்,**

ரு. 𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌸𑌮𑌤𑌾 𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌃 𑌤𑌪𑍋 𑌦𑌾𑌨𑌂 𑌯𑌶𑍋𑌽𑌯𑌶𑌃 ।
𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑌾𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌮𑌤𑍍𑌤 𑌏𑌵 𑌪𑍃𑌥𑌗𑍍𑌵𑌿𑌧𑌾𑌃 ॥

𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌸𑍍𑌯 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌰𑍍𑌥𑌾𑌵𑌬𑍋𑌧𑌨𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌮𑍍, 𑌤𑌦𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑌿𑌤𑌿 𑌹𑌿 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌾𑌦𑌿𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌮𑌵𑌬𑍋𑌧𑌃 । 𑌅𑌸𑌮𑍍𑌮𑍋𑌹𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑍇𑌷𑍁 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑍇𑌷𑍁 𑌵𑌿𑌵𑍇𑌕𑌪𑍂𑌰𑍍𑌵𑌿𑌕𑌾 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 । 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌆𑌕𑍍𑌰𑍁𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌤𑌾𑌡𑌿𑌤𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌅𑌵𑌿𑌕𑍃𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌤𑌾 । 𑌸𑌤𑍍𑌯𑌂, 𑌯𑌥𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾𑌶𑍍𑌰𑍁𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌭𑌵𑌸𑍍𑌯 𑌪𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌯𑍇 𑌤𑌥𑍈𑌵 𑌉𑌚𑍍𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌾 𑌵𑌾𑌕𑍍 𑌸𑌤𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌦𑌮𑌃 𑌬𑌾𑌹𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍋𑌪𑌶𑌮𑌃 । 𑌶𑌮𑌃 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌸𑍍𑌯 𑌉𑌪𑌶𑌮𑌃 । 𑌸𑍁𑌖𑌮𑌾𑌹𑍍𑌲𑌾𑌦𑌃 । 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌸𑌨𑍍𑌤𑌾𑌪𑌃 । 𑌭𑌵𑌃 𑌉𑌦𑍍𑌭𑌵𑌃 । 𑌅𑌭𑌾𑌵𑌃 𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑌃 । 𑌭𑌯𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌾𑌸𑌃, 𑌅𑌭𑌯𑌮𑍇𑌵 𑌚 𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌮𑍍 ॥ ௪ ॥

𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌅𑌪𑍀𑌡𑌾 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌮𑍍 । 𑌸𑌮𑌤𑌾 𑌸𑌮𑌚𑌿𑌤𑍍𑌤𑌤𑌾 । 𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌃 𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌃 𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌲𑌾𑌭𑍇𑌷𑍁 । 𑌤𑌪𑌃 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑌂𑌯𑌮𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌶𑌰𑍀𑌰𑌪𑍀𑌡𑌨𑌮𑍍 । 𑌦𑌾𑌨𑌂 𑌯𑌥𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑌂𑌵𑌿𑌭𑌾𑌗𑌃 । 𑌯𑌶𑌃 𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌃 । 𑌅𑌯𑌶𑌃 𑌅𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾 𑌅𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌃 । 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑌾𑌵𑌾𑌃 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌦𑌯𑌃 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌏𑌵 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌤𑍍 𑌪𑍃𑌥𑌗𑍍𑌵𑌿𑌧𑌾𑌃 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌾𑌃 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑍇𑌣 ॥
𑌕𑌿𑌞𑍍𑌚—

ரு. அஹிம்ஸை, நடுவுநிலைமை, திருப்தி, தவம், கொடை, புகழ், பழி (ஆகிய இத்தப்)பலவகையான தன்மைகள் பிராணிகட்கு என்னிடத்திலிருந்தே உண்டாகின்றன.

புத்தி - அகக்கரணமானது, நுட்பமானபொருள் முதலியவற்றை [நுட்பமான பொருளையும் அதனினும் அதிநுட்பமானபொருளையும்] தெரிந்துகொள்வதின் திறமை; அதனையுடையவனை புத்திமானென்றன்றோ கூறுகிறார். ஞானம் - ஆத்மாமுதலிய பொருள்களை உணர்தல். மயக்கமின்மை - தத்ஸமயத்தில் நேர்ந்தவற்றிலும், அறிய வேண்டியவற்றிலும் பகுத்தறிவோடு செல்லுதல். பொறுமை - வைதாலும், அடித்தாலும் மாறுதமனமுள்ள தன்மை. பிறனுடைய புத்தியிற் படுதற்காக, தனது அநுபவத்தை (த் தான்) பார்த்தபடியாயினும், கேட்டபடியாயினும் அப்படியே சொல்லப்படுகின்ற வார்த்தையானது - 'ஸத்யம்' எனப்படுகின்றது. அடக்கம் - வெளியிலுள்ள இந்திரியங்களை அமர்த்தி அடக்குதல். ஓழிபு - அகக்கரணத்தின் அமைதி. இன்பம் - களிப்பு. துன்பம் - வருத்தம்.—இறப்பு - அதற்கு[பிறப்பிற்கு]மாறுனது.—தைரியம் - அதற்கு [அச்சத்திற்கு] மாறுனது. (ச)

அஹிம்ஸை - பிராணிகளை ஹிம்ஸியாமை. நடுவுநிலைமை - (விருப்பு வெறுப்புக்கள் முதலியவற்றில் ஒருபக்கத்துச் சாயாது நேரே) ஸமனுகநிற்கும் சித்தத்தையுடைமை. திருப்தி - ஸந்தோஷம், தேடிய பொருள்களின்மேல் போதுமென்னும் எண்ணம். தவம் - இந்திரியங்களை ஒடுக்குதலோடுகூட சரீரத்தை வருத்தப்படுத்துதல். கொடை - சக்திக்குத் தக்கப்படி, (பொருள்களைப் பிறருக்குப்) பகுத்துக் கொடுத்தல். புகழ் - தருமத்தாலுண்டாகும் புகழ்ச்சி. பழி - அதர்மத்தாலுண்டாகும் பழிப்பு. மேற்கூறிய பலவகையான தன்மைகள் ஈச்வரனுகிய என்னிடத்திலிருந்தே பிராணிகட்குத் தமது [அவற்றினது] கர்மத்திற்குத் தக்கவாறு உண்டாகின்றன. (ரு)

அன்றியும்,

௬. महर्षयस्सप्त पूर्वे चत्वारो मनवस्तथा ।
मद्भावा मानसा जाताः येषां लोक इमाः प्रजाः ॥

महर्षयः सप्त भृग्वादयः, पूर्वे चत्वारः अतीतकालसम्बन्धिनः चत्वारः मनवः तथा सावर्णा इति प्रसिद्धाः, ते च मद्भावाः मद्गतभावनाः वैष्णवेन सामर्थ्येन उपेताः मानसाः मनसैव उत्पादिताः ये जाताः उत्पन्नाः; येषां मनूनां महर्षीणां च सृष्टिः लोके इमाः स्थावरजङ्गमरूपाः प्रजाः ॥ ௬ ॥

௭. एतां विभूतिं योगं च मम यो वेत्ति तत्त्वतः ।
सोऽविकम्पेन योगेन युज्यते नात्र संशयः ॥

एतां मदीयां विभूतिं विस्तारं योगं च युक्तिं च कृत्स्नस्य वर्तने वा, योगैश्वर्यसामर्थ्यं सर्वज्ञत्वं योगजं योगः उच्यते— इमं मदीयं योगं यः वेत्ति तत्त्वतः तत्त्वेन यथावस्थितत्वेन, सः

---

௬. உலகத்திலே இந்தப் பிராணிகள் எவர்களுடைய (சிருஷ்டியோ, அந்த) ஏழு மகர்ஷிகளும், முந்தின நான்கு மநுக்களும் என்னிடத்துக் கருத்துடையராய் மாந ஸர்களாக [மனத்தாலுண்டாக்கப்பட்டவராக]ப் பிறந்தார்கள்.

ப்ருகு முதலிய மகர்ஷிகள் ஏழு; சென்ற காலத்தைச் சேர்ந்த நான்கு மநுக்களும் "ஸாவர்ணர்கள்" என்று பிரஸித்தமானவர். அவர்கள் (அனைவரும்) என்னிடத் துக் கருத்தைச் செலுத்தியவர்கள்: விஷ்ணுவினுடைய வல்லமையை உடையவர்கள்; என்றால் மனத்தினாலேயே உண்டாக்கப்பட்டவர்கள். உலகத்திலே இந்தச் சராசரங் களாகிய பிராணிகள் - அந்த மநுக்கள், மகர்ஷிகள் என்பவர்களுடைய சிருஷ்டி என்க. (பகவான் ஸகலத்திற்கும் காரணமானவர் மாத்திரமல்லர்; மற்று, முற்றுமுணர்ந்தவராய் ஸகலத்தையும் ஆளுகிறவருமாம். அவர் மகர்ஷிகளையும் மநுக்களையும் படைத்தார். ப்ருகு முதலாக வஸிஷ்டர் ஈறாகவுள்ள மகர்ஷிகள் முற்றுமுணர்ந்தவராய் வித்யா ஸம்பிரதாயத்தை முதலில் உபதேசித்தவர்கள். மநுக்கள் தாமே ஈச்வரராய் [ஆளு பவராய்]ப் பிராணிகளைக் காப்பாற்றினார்கள். மநுக்களும் மகர்ஷிகளும் ஆதிகாலத்தி லிருந்தார்கள்; பகவானுடைய மனத்தினின்று உண்டானவர்கள்; தமது கருத்தைப் பகவானிடம் செலுத்தி, அதனால் விஷ்ணுவினுடைய வல்லமையைப் பெற்று, ஞானத் தையும் அடைந்தார்கள். இவ்வுலகத்திலுள்ள இந்தப் பிராணிகளெல்லாம் பிறவியினா லும், வித்யையினாலும் அவருடைய ஸந்ததியாய் இருக்கின்றன என்க.) (௬)

பகவானுடைய வைபவத்தை உணர்தல் ஸமாதியோகத்திற்கு ஸாதநம்.

௭. எவன் என்னுடைய இந்த வைபவத்தையும், யோகத்தையும் உண்மையாக அறிகின்றானோ, அவன் அசையாத யோகத்தோடு கூடுகிறான்; இதில், ஸம்சயம் இல்லை.

யோகம் - அமைப்பு [அந்தந்தப் பொருள்களைச் சிருஷ்டிக்கும் ஸாமர்த்தியம் —ஆ.] அல்லது, யோகத்தினால் [பகவானைத் தியானிப்பதனால்] உண்டாவது - யோ கம் எனப்படுகின்றது; (அது) - யோகமும் [பொருள்களைப் படைக்கும் வல்லமையும்] ஆளுந்தன்மையின் வல்லமையும், ஸகலத்தையும் அறியுந்தன்மையுமாம் என்க. எவன் என்னுடைய கீழ்க்கூறிய பெருமையை உள்ளபடி அறிகின்றானோ, அவன் மெய்யறி

अविकम्पेन अप्रचलितेन योगेन सम्यग्दर्शनस्थैर्यलक्षणेन युज्यते संबध्यते। न अत्र संशयः न अस्मिन्नर्थे संशयः अस्ति ॥ ७ ॥

कीदृशेन अविकम्पेन योगेन युज्यते इति? उच्यते—

८. अहं सर्वस्य प्रभवो मत्तः सर्वं प्रवर्तते।
इति मत्वा भजन्ते मां बुधा भावसमन्विताः ॥

अहं परं ब्रह्म वासुदेवाख्यं सर्वस्य जगतः प्रभवः उत्पत्तिः। मत्त एव स्थितिनाशक्रियाफलोपभोगलक्षणं विक्रियारूपं सर्वं जगत् प्रवर्तते। इति एवं मत्वा भजन्ते सेवन्ते मां बुधाः अवगतपरमार्थतत्त्वाः भावसमन्विताः, भावः भावना परमार्थतत्त्वाभिनिवेशः, तेन समन्विताः संयुक्ता इत्यर्थः ॥ ८ ॥

किञ्च—

९. मच्चित्ता मद्गतप्राणा बोधयन्तः परस्परम्।
कथयन्तश्च मां नित्यं तुष्यन्ति च रमन्ति च ॥

मच्चित्ताः मयि चित्तं येषां ते मच्चित्ताः, मद्गतप्राणाः मां गताः प्राप्ताः चक्षुरादयः प्राणाः येषां ते मद्गतप்राणाः, मयि उपसंहृत-

---

விலே உறுதியாக நிலைத்தலென்னும் அசையாத யோகத்தோடு கூடுகிறான். இவ்விஷயத்திலே ஸம்சயம் இல்லை. ("பகவான் எங்குமுள்ளவராய் எல்லாவடிவமாக இருக்கிறார்" என்றும், மநுக்களும் மகர்ஷிகளும் அப்பகவானுடைய அறிவு வல்லமைகளின் ஒரு சிறுதுளியைப் பெற்று, அதனால் ஞானிகளாயும் சாமர்த்தியவான்களாயும் ஆனார்கள் என்றும் எவன் அறிகிறானோ, அவன் (ஸமாதி)யோகத்தைக் கூடுகிறான். ஆகவே, ஸகுண ப்ரஹ்மத்தை உணர்தல் நிர்க்குண ப்ரஹ்மத்தை உணர்தற்கு வழி என்பதாம்—ஆ.) (எ)

எத்தகைய அசையாத யோகத்தோடு கூடுகிறான் என்பது ?—கூறுவோம் :

அ. **நான் ஸகலத்திற்கும் உற்பத்தி ; ஸகலமும் என்னிடத்திலிருந்தே தலைப்படுகின்றது ; என்று ஞானிகள் நினைத்து, தியானத்தோடு கூடியவராய் என்னைத் தொழுகிறார்கள்.**

வாஸுதேவனென்னும்பெயருடைய பரப்ரஹ்மமாகிய நான் எல்லாஜகத்திற்கும் உற்பத்தி (இடம்). இருப்பு, அழிவு, தொழில், பயன், அநுபவம் என்னும் விகார வடிவமான பிரபஞ்சமெல்லாம் என்னிடத்திலிருந்தே தோன்றி விரிகின்றன. பரமார்த்தஉண்மையை உணர்ந்த ஞானிகள் இவ்வாறாக(ப் பகவானுடைய மஹிமையை) அறிந்து, பரமார்த்தஉண்மையிலே விடாமுயற்சியுள்ளவராய் என்னைத் தொழுகிறார்கள். (அ)

அன்றியும், (அவர்கள்)

கூ. **என்னிடத்துச்சித்தத்தையுடையவர்கள் : என்னிடத்துச் சென்ற உயிரையுடையவர்கள் : என்னை ஒருவர்க்கொருவர் போதனைசெய்துகொள்பவராய், என்னைப் பேசுவராய் எப்பொழுதும் ஸந்தோஷிக்கிறார்கள் ; மற்றும், மகிழ்கிறார்கள்.**

என்னிடத்துச் சென்ற உயிரையுடையவர்கள் - என்னை வந்தடைந்த கண் முதலிய இந்திரியங்களையுடையவர்கள், இந்திரியங்கள் என்னிடத்து ஒடுங்கியவர்கள் என்

𑌤𑌕𑌰𑌣𑌾𑌃 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌅𑌥 𑌵𑌾 — 𑌮𑌦𑍍𑌗𑌤𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌃 𑌮𑌦𑍍𑌗𑌤𑌜𑍀𑌵𑌨𑌾𑌃 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 । 𑌬𑍋𑌧𑌯𑌨𑍍𑌤𑌃 𑌅𑌵𑌗𑌮𑌯𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌮𑍍 𑌕𑌥𑌯𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌜𑍍𑌞𑌾𑌨𑌬𑌲𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌧𑌰𑍍𑌮𑍈𑌃 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌮𑌾𑌂, 𑌤𑍁𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌿𑌤𑍋𑌷𑌂 𑌉𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌚 𑌰𑌮𑌨𑍍𑌤𑌿 𑌚 𑌰𑌤𑌿𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌿𑌯𑌸𑌙𑍍𑌗𑌤𑍍𑌯𑍇𑌵 ॥ ௯ ॥

𑌯𑍇 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑍈𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌃 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌃—

௧௦. 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌭𑌜𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 ।
𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌭𑌜𑌤𑌾𑌂 𑌸𑍇𑌵𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌮𑍍 । 𑌕𑌿𑌮𑍍 𑌅𑌰𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌨𑌾 𑌕𑌾𑌰𑌣𑍇𑌨? 𑌨𑍇𑌤𑍍𑌯𑌾𑌹 — 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌃 𑌸𑍍𑌨𑍇𑌹𑌃 𑌤𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌮𑌾𑌂 𑌭𑌜𑌤𑌾𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌮𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑌂, 𑌤𑍇𑌨 𑌯𑍋𑌗𑌃 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌃 𑌤𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂, 𑌯𑍇𑌨 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑍇𑌨 𑌮𑌾𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌭𑍂𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑍇𑌨 𑌉𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 । 𑌕𑍇? 𑌤𑍇 𑌯𑍇 𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌃 𑌮𑌾𑌂 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 ॥ ௧௦ ॥

𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂, 𑌕𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑌹𑍇𑌤𑍋𑌃 𑌨𑌾𑌶𑌕𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍍𑌵𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌦𑌦𑌾𑌸𑌿 𑌇𑌤𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌮𑌾𑌹—

---

*பதபொருள் : அல்லது, என்னிடத்து உயிரை அர்ப்பித்தவர்கள் என்றபடி. **என்னை** - ஞானம், சக்தி, வீர்யம்முதலிய குணங்களையுடைய என்னை. **ஸந்தோஷிக்கிறார்கள்** - திருப்தியடைகிறார்கள். **மகிழ்கிறார்கள்** - காதலருடைய சேர்க்கையினால்போல, மகிழ்ச்சியையும் அடைகிறார்கள்.* (௯)

பகவான் பக்தர்களுக்கு ஞானத்தைத் தந்தருளுகிறார்.

கீழ்க்கூறிய வழிகளால் எவர்கள் என்னைப் பக்தர்களாய்த் தொழுகிறார்களோ,

௧௦. அவர்கட்கு = எப்பொழுதும் ஒருநிலைப்பட்டவராய் அன்போடு தொழுகிறவர்க்கு,—எதனால் அவர்கள் என்னை அடைவார்களோ, அந்த ஞானயோகத்தைக் கொடுக்கிறேன்.

(திரவியத்தை)வேண்டுதல்முதலிய காரணத்தினாலோ(இவர் பகவானைத் தொழுகிறார் எனில்)—“ அன்று ; அன்பினால்”எனக் கூறுகிறார். எப்பொழுதும் விடாமுயற்சியுள்ளவராய் அன்பினால் என்னைத் தொழுகிறவர்களுக்கு,—அவர்கள், மெய்யறிவாகிய எந்த ஞானயோகத்தினால் பரமேச்வரனை ஆத்மாவாகிய என்னை(த் தமது) ஆத்மாவாக அறிகிறார்களோ, அந்த புத்தியோகத்தை = ஞானயோகத்தை = எனது உண்மையைப்பற்றிய மெய்யறிவோடு கூடுதலைக் கொடுக்கிறேன்.— (இந்தயோகத்திற்கு உரியவர்) யார் ?—எவர்கள் என்னிடத்தே சித்தமுடையவராதல் முதலிய விதங்களால் (௯ - ௯) என்னைத் தொழுகிறார்களோ, அவர்கள். (௧௦)

உங்களுடைய அப்பக்தர்களுக்குப் புத்தியோகத்தை எதற்காகத் தந்தருளுகிறீர் ?— (இந்தப்புத்தியோகமானது) - உம்மை அடைவதற்குத் தடைசெய்கின்ற எதனைத் தொலைக்கின்றது ?—(என்னும் வினாக்கள் விடைகளை) வேண்டிநிற்குமிடத்து அருளிச்செய்கிறார்:

௧௧. 𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵𑌾𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌾𑌰𑍍𑌥𑌮𑍍 𑌅𑌹𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌂 𑌤𑌮𑌃 ।
𑌨𑌾𑌶𑌯𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌸𑍍𑌥𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌪𑍇𑌨 𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑌾 ॥

𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵 𑌕𑌥𑌂 𑌨𑍁 𑌨𑌾𑌮 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍 𑌇𑌤𑌿 𑌅𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌾𑌰𑍍𑌥𑌂 𑌦𑌯𑌾𑌹𑍇𑌤𑍋𑌃 𑌅𑌹𑌮𑍍 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌮𑍍 𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌤𑌃 𑌜𑌾𑌤𑌂 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌮𑍋𑌹𑌾𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌂 𑌤𑌮𑌃 𑌨𑌾𑌶𑌯𑌾𑌮𑌿 𑌆𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌸𑍍𑌥𑌃 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌭𑌾𑌵𑌃 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌾𑌶𑌯𑌃 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌸𑌨𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌪𑍇𑌨 𑌵𑌿𑌵𑍇𑌕𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌰𑍂𑌪𑍇𑌣 𑌭𑌕𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌸𑍍𑌨𑍇𑌹𑌾𑌭𑌿𑌷𑌿𑌕𑍍𑌤𑍇𑌨 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌨𑌾𑌭𑌿𑌨𑌿𑌵𑍇𑌶𑌵𑌾𑌤𑍇𑌰𑌿𑌤𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑌾𑌧𑌨𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌾 𑌵𑌿𑌰𑌕𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌾𑌧𑌾𑌰𑍇𑌣 𑌵𑌿𑌷𑌯𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑌾𑌕𑌲𑍁𑌷𑌿𑌤𑌨𑌿𑌵𑌾𑌤𑌾𑌪𑌵𑌰𑌕𑌸𑍍𑌥𑍇𑌨 𑌨𑌿𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌨𑍈𑌕𑌾𑌗𑍍𑌰𑍍𑌯𑌧𑍍𑌯𑌾𑌨𑌜𑌨𑌿𑌤𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌪𑍇𑌨𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௧௧ ॥

𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌾𑌂 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌂 𑌯𑍋𑌗𑌂 𑌚 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚—

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ॥

௧௨. 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑌰𑌂 𑌧𑌾𑌮 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌭𑌵𑌾𑌨𑍍 ।
𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌮𑌜𑌂 𑌵𑌿𑌭𑍁𑌮𑍍 ॥

---

௧௧. அவர்கட்கு அறியாமையினு லுண்டான இருட்டை, யான் (அவர்களது) சித்தவிருத்தியிலே இருந்து, ஒளிர்கின்ற ஞானவிளக்கைக்கொண்டு கருணையினாலேயே தொலைக்கின்றேன்.

கருணையினாலே - (பக்தர்கட்கு) எவ்வாறு நன்மை உண்டாகுமோ என்னும் இரக்கத்தினாலே. அவிவேகத்தினாலுண்டான பொய்யறிவாகிய மயக்க இருட்டை யான் (என்னிடத்திலே நிலைத்ததான) அவர்களுடைய அந்தக்கரணவிருத்தியிலே இருந்துகொண்டு, ஞானமாகிய விளக்கினால் தொலைக்கின்றேன். ஞானமாகிய விளக்கானது - விவேகஉணர்வை உருவமாகக் கொண்டது : பக்தியினால் (வருவதான பகவானுடைய) அநுக்கிரகமென்னும் எண்ணெயினால் நனைக்கப்பெற்றது : என்னைத் தியானித்தலிலே விடாமுயற்சி என்னும் காற்றினால் விசிறப்பட்டது : ப்ரஹ்மசர்யம் முதலிய கருவிகளால் பரிசுத்தமுள்ள புத்தியைத் திரியாகவுடையது : ஆசைஅகன்ற அந்தக்கரணத்தை ஆதாரமாக[அகலாக]உடையது : விஷயங்களினின்று நீங்கியதும், விருப்பு வெறுப்புக்களால் கலக்கப்படாததுமான சித்தமென்னும் காற்றடக்கமான அறையிலே இருப்பது : இடையறாது செல்லும் ஐகாக்கிரயத்தாலமைந்த தியானத்தினால் உண்டாகும் மெய்யறிவு என்னும் ஒளியை யுடையது என்றபடி. (௧௧)

அர்ஜுனன் பகவானுடைய வடிவங்களைப் பற்றி வினவுதல்.

பகவானுடைய கீழ்க்கூறிய வைபவத்தையும், (இன்னதென்று அறியமுடியாத) சக்தியையும் கேட்டு, அர்ஜுனன் கூறலாயினன் :

அர்ஜுனன் சொல்லுற்றான் :

௧௨, ௧௩. பரப்ரஹ்மமும், உயர்ந்த ஒளியும், உயர்ந்தபரிசுத்திகரமான பொருளும் நீங்களே. ரிஷிகளெல்லாம் உங்களை நித்யராகவும், திவ்வியமான புருஷராகவும், முதற்கடவுளாகவும், பிறவாதவராகவும், எங்குமுள்ளவராகவும் கூறுகிறார்கள் ; அவ்

[illegible]

[illegible]

[illegible]

கசு. 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑍍𑌯𑌶𑍇𑌷𑍇𑌣 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃 ।
𑌯𑌾𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌭𑌿𑌰𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑌿𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌤𑌿𑌷𑍍𑌠𑌸𑌿 ॥

𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌅𑌰𑍍𑌹𑌸𑌿 𑌅𑌶𑍇𑌷𑍇𑌣 । 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾 𑌹𑌿 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑍋 𑌯𑌾𑌃 𑌤𑌾𑌃 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌅𑌰𑍍𑌹𑌸𑌿 । 𑌯𑌾𑌭𑌿𑌃 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌭𑌿𑌃 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍈𑌃 𑌇𑌮𑌾𑌨𑍍 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌤𑍍𑌵𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌤𑌿𑌷𑍍𑌠𑌸𑌿 ॥ கசு ॥

கஎ. 𑌕𑌥𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑌹𑌂 𑌯𑍋𑌗𑌿𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌪𑌰𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍 ।
𑌕𑍇𑌷𑍁 𑌕𑍇𑌷𑍁 𑌚 𑌭𑌾𑌵𑍇𑌷𑍁 𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑍋𑌽𑌸𑌿 𑌭𑌗𑌵𑌨𑍍𑌮𑌯𑌾 ॥

𑌕𑌥𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌮𑍍 𑌅𑌹𑌂 𑌹𑍇 𑌯𑍋𑌗𑌿𑌨𑍍 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌪𑌰𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍 । 𑌕𑍇𑌷𑍁 𑌕𑍇𑌷𑍁 𑌚 𑌭𑌾𑌵𑍇𑌷𑍁 𑌵𑌸𑍍𑌤𑍁𑌷𑍁 𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌃 𑌅𑌸𑌿 𑌧𑍍𑌯𑍇𑌯𑌃 𑌅𑌸𑌿 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌮𑌯𑌾 ॥ கஎ ॥

கஅ. 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍇𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌯𑍋𑌗𑌂 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌂 𑌚 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ।
𑌭𑍂𑌯𑌃 𑌕𑌥𑌯 𑌤𑍃𑌪𑍍𑌤𑌿𑌰𑍍𑌹𑌿 𑌶𑍃𑌣𑍍𑌵𑌤𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌮𑍇𑌽𑌮𑍃𑌤𑌮𑍍 ॥

𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍇𑌣 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌯𑍋𑌗𑌂 𑌯𑍋𑌗𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌂 𑌚 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌂 𑌧𑍍𑌯𑍇𑌯𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌹𑍇 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨—𑌅𑌰𑍍𑌦𑌤𑍇𑌃 𑌗𑌤𑌿𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌰𑍂𑌪𑌮𑍍—𑌅𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌂 𑌦𑍇𑌵𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌕𑍍𑌷𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌨𑌰𑌕𑌾𑌦𑌿𑌗𑌮𑌯𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃,

---

(என்னைப் போன்றவர்களுக்குத் தெரியாததான உங்களுடைய வடிவத்தை அவர்கள் அறியவேண்டியதனுல்,—ஆ.)

கசு. **நீங்கள் எந்த வைபவங்களால் இவ்வுலகங்களை வியாபித்திருக்கிறீர்களோ, (அந்த) திவ்வியமான உமது வைபவங்களை மிச்சமில்லாது அருளிச்செய்ய வேணும்.**

வைபவங்களால் - தனது பெருமையினுடைய பெருக்கங்களால். (கசு)

கஎ. **யோகியே! [ஆளுந்தன்மையுள்ளவரே!] நான் எப்பொழுதும் உங்களைத் தியானிப்பவனுய் எப்படி அறிவேன்? பகவானே! (நீங்கள்) எந்தெந்தப் பொருள்களில் என்னுல் தியானிக்கத்தக்கவ ராகிறீர்?**

(மிகத்தடித்த புத்தியுள்ள நான் எவ்விதத்தால் உங்களை எப்பொழுதும் தியானித்து, அதனுல் புத்திதிருந்தியவனுய், நிர்க்குணமான உங்களை அறிவேன்? என்பது - வினு.—ஆ.) (கஎ)

கஅ. **ஜநார்த்தந! தங்களுடைய யோகத்தையும், வைபவத்தையும் மீண்டும் விரிவாகச் சொல்லவேண்டும்; ஏனெனில், அமிருதத்தைக் கேட்கின்ற எனக்குத் திருப்தி இல்லை.**

தங்களுடைய (அதிரஹஸ்யமான)ஸாமர்த்தியம், ஆளுந்தன்மை ஆகிய இச்திகளின் சிறப்பையும், தியானிக்கத்தகுந்த பலபொருள்களையும் விரிவாகக் கூறண்டும்.— (ஜநார்த்தநன் என்பது) - செல்லுதல் என்னும் தொழிலை (அர்த்தமாக)ய அர்த் என்னும் வினைப்பகுதியினின்றும் (பிறந்த) சொல். தேவர்களுக்கு எதிரின அஸுரஜனங்களை நரகம் முதலியவற்றுள் செலுத்துவதனுல், ஜநார்த்தநன்

ऽभ्युदयनिःश्रेयसपुरुषार्थप्रयोजनं सर्वैर्जनैः याच्यत इति वा । भूयः पूर्वमुक्तमपि कथय; तृप्तिः परितोषः हि यस्मात् नास्ति मे मम शृण्वतः त्वन्मुखनिःसृतवाक्यामृतम् ॥ ௧௮ ॥

श्रीभगवानुवाच ॥

௧௯. हन्त ते कथयिष्यामि दिव्या ह्यात्मविभूतयः ।
प्राधान्यतः कुरुश्रेष्ठ नास्त्यन्तो विस्तरस्य मे ॥

हन्त इदानीं ते तव दिव्याः दिवि भवाः आत्मविभूतयः आत्मनः विभूतयः याः ताः कथयिष्यामि इत्येतत् । प्राधान्यतः यत्र यत्र प्रधाना या या विभूतिः तां तां प्रधानां प्राधान्यतः कथयिष्यामि अहं कुरुश्रेष्ठ । अशेषतस्तु वर्षशतेनापि न शक्या वक्तुम्, यतः नास्ति अन्तः विस्तरस्य मे मम विभूतीनाम् इत्यर्थः ॥ ௧௯ ॥

तत्र प्रथममेव तावत् शृणु—

௨௦. अहमात्मा गुडाकेश सर्वभूताशयस्थितः ।
अहमादिश्च मध्यं च भूतानामन्त एव च ॥

अहम् आत्मा प्रत्यगात्मा गुडाकेश—गुडाका निद्रा, तस्याः ईशः गुडाकेशः, जितनिद्र इत्यर्थः; घनकेश इति वा—सर्वभूताशयस्थितः सर्वेषां भूतानाम् आशये अन्तर्हृदि स्थितः नित्यं ध्येयः ।

...க, செல்வம், மோக்ஷம் என்னும் புருஷார்த்தங்களுக்காக (ப் பகவான்) ஸகலஜனங்களாலும் வேண்டப்படுகிறார் என்றாயினும், (ஜநார்த்தநன் என்க.—யோகமும், வைபவமும் முன்கூறப்பட்டனவாயினும், அவற்றை மறுபடியும் சொல்லவேண்டும். ஏனெனில், உமது திருவாயினின்றும் வெளிவருகின்ற வார்த்தையாகிய அமிருதத்தைக் கேட்கின்ற எனக்குத் திருப்தி இல்லை. (௧௮)

பகவான் தமது வடிவங்களை விரித்துச் சொல்லுதல்.

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

௧௯. கௌரவரில் சிறந்தோனே! என்னுடைய திவ்வியமான வைபவங்கள் (எவைகளோ, அவற்றுள்) சிறந்தவற்றை இப்பொழுது உனக்குக் கூறுவேன். எனது பரப்பிற்கு முடிவு இல்லை.

சிறந்தவற்றை - எங்கெங்கே எந்தெந்த வைபவம் முதன்மையாயுள்ளதோ, அதனை. ஆனால், (அவற்றை) நூறுவருஷத்திலுங்கூட மிச்சமில்லாது சொல்ல முடியாது. ஏனெனில், எனது வைபவங்களின் பரப்பிற்கு எல்லை இல்லை. (௧௯)

இனி, முதலில் (இதனைக்) கேட்டுக்கொள் :

௨௦. குடாகேச! நான் ஸகலப்பிராணிகளுடைய ஹிருதயத்திலுள்ள ஆத்மா. நான் பிராணிகளுக்கு முதலாகவும், நடுவாகவும், முடிவாகவுமே உள்ளவன்.

குடாகேசன் - சோம்புதலை ஆளுபவன், சோம்பலை வென்றவன் என்பது ...ருள் ; அல்லது, அடர்ந்த மயிருள்ளவன் என்க. உள்ளேயுள்ள ஆத்மாவாகி ஸகலப்பிராணிகளுடைய ஹிருதயத்தினுள் இருப்பவனாக (உத்தமா... பொழுதும் தியானிக்கத்தக்கவன். அதற்குத் தகுதியில்லாத (ப...

-𑌦𑌶𑌕𑍍𑌤𑍇𑌨 𑌚 𑌉𑌤𑍍𑌤𑌰𑍇𑌷𑍁 𑌭𑌾𑌵𑍇𑌷𑍁 𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌃 𑌅𑌹𑌮𑍍 ; 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌹𑌮𑍇𑌵 𑌆𑌦𑌿𑌃 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂, 𑌤𑌥𑌾 𑌮𑌧𑍍𑌯𑌂 𑌚 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃, 𑌅𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌲𑌯𑌶𑍍𑌚 ॥ ௨௦ ॥

𑌏𑌵𑌂 𑌚 𑌧𑍍𑌯𑍇𑌯𑌃 𑌅𑌹𑌮𑍍—

௨௧. 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑌹𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾𑌂 𑌰𑌵𑌿𑌰𑌂𑌶𑍁𑌮𑌾𑌨𑍍 ।
𑌮𑌰𑍀𑌚𑌿𑌰𑍍𑌮𑌰𑍁𑌤𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌹𑌂 𑌶𑌶𑍀 ॥

𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌨𑌾𑌮 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌃 𑌅𑌹𑌮𑍍, 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾𑌂 𑌰𑌵𑌿𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑌿𑌤𑍄𑌣𑌾𑌮𑌂𑌶𑍁𑌮𑌾𑌨𑍍 𑌰𑌶𑍍𑌮𑌿𑌮𑌾𑌨𑍍 । 𑌮𑌰𑍀𑌚𑌿𑌃 𑌨𑌾𑌮 𑌮𑌰𑍁𑌤𑌾𑌂 𑌮𑌰𑍁𑌦𑍍𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑍇𑌦𑌾𑌨𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 । 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌹𑌂 𑌶𑌶𑍀 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾𑌃 ॥ ௨௧ ॥

௨௨. 𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌵𑌾𑌸𑌵𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌮𑌨𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌚𑍇𑌤𑌨𑌾 ॥

𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿 । 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌵𑌾𑌸𑌵𑌃 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿 । 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌏𑌕𑌾𑌦𑌶𑌾𑌨𑌾𑌂 𑌮𑌨𑌶𑍍𑌚 𑌅𑌸𑍍𑌮𑌿 । 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌚𑍇𑌤𑌨𑌾 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌸𑌂𑌘𑌾𑌤𑍇 𑌅𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌚𑍇𑌤𑌨𑌾 ॥ ௨௨ ॥

௨௩. 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌶𑌂𑌕𑌰𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌵𑌿𑌤𑍍𑌤𑍇𑌶𑍋 𑌯𑌕𑍍𑌷𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌮𑍍 ।
𑌵𑌸𑍂𑌨𑌾𑌂 𑌪𑌾𑌵𑌕𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌮𑍇𑌰𑍁𑌃 𑌶𑌿𑌖𑌰𑌿𑌣𑌾𑌮𑌹𑌮𑍍 ॥

தாதிகாரியும், இனி) மேல் கூறப்படும் பொருள்களில் என்னைத் தியானிக்கவேண்டும். ஏனெனில், யான் பிராணிகளுக்குக் காரணமும், நிலையும், முடிவுமாக இருக்கின்றேன். (௨௦)

யான் இவ்வாறு தியானிக்கத்தக்கவன் :

௨௧. யான் ஆதித்யர்களுள் விஷ்ணுவாகவும், ஒளிகளுள் கிரணங்களுள்ள ஸூர்யனுகவும், மருத்துக்களுள் மரீசியாகவும் இருக்கின்றேன். நான் நக்ஷத்திரங்களுள் சந்திரனுக இருக்கின்றேன்.

யான் பன்னிரண்டு ஆதித்யரில் விஷ்ணு என்னும் ஆதித்யன். ஒளிகளுள் - (பொருள்களை) விளங்கச்செய்வனவற்றுள். மருத்துக்களுள் - மருத் என்னும் தேவதா வகுப்பில். (௨௧)

௨௨. வேதங்களுள் ஸாமவேதமாக இருக்கின்றேன் : தேவர்களுள் இந்திரனுக இருக்கின்றேன் : இந்திரியங்களுள் மனமாக இருக்கின்றேன் : பிராணிகளுள் உணர்ச்சியாக இருக்கின்றேன்.

தேவர்களுள் - ருத்ரர், ஆதித்யர் முதலானோர்களுள். இந்திரியங்களுள் - (கண் முதலிய) கக - இந்திரியங்களுள். உணர்ச்சி - தேகம் இந்திரியங்கள் இவற்றின் சேர்க்கையிலே வெளிப்பட்ட புத்திவிருத்தி [புத்தியின் தன்மை]. (௨௨)

௨௩. மேலும், ருத்ரர்களுள் சங்கரனுகவும், யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் இவர்களுள் திரவியத்திற்குத் தலைவனுகவும் இருக்கின்றேன் : யான் வஸுக்களுள் அக்னியாகவும் கொடுமுடியுள்ள மலைகளுள் மேருவாகவும் இருக்கின்றேன்.

௨௭. 𑌉𑌚𑍍𑌚𑍈𑌃𑌶𑍍𑌰𑌵𑌸𑌮𑌶𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑌾𑌮𑌮𑍃𑌤𑍋𑌦𑍍𑌭𑌵𑌮𑍍 ।
𑌐𑌰𑌾𑌵𑌤𑌂 𑌗𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌨𑌰𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌨𑌰𑌾𑌧𑌿𑌪𑌮𑍍 ॥

𑌉𑌚𑍍𑌚𑍈𑌃𑌶𑍍𑌰𑌵𑌸𑌮𑍍 𑌅𑌶𑍍𑌵𑌾𑌨𑌾𑌮𑍍 𑌉𑌚𑍍𑌚𑍈𑌃𑌶𑍍𑌰𑌵𑌾𑌃 𑌨𑌾𑌮 𑌅𑌶𑍍𑌵𑌃 𑌤𑌂 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌹𑌿 𑌅𑌮𑍃𑌤𑍋𑌦𑍍𑌭𑌵𑌮𑍍 𑌅𑌮𑍃𑌤𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌮𑌥𑌨𑍋𑌦𑍍𑌭𑌵𑌮𑍍 । 𑌐𑌰𑌾𑌵𑌤𑌮𑍍 𑌇𑌰𑌾𑌵𑌤𑍍𑌯𑌾𑌃 𑌅𑌪𑌤𑍍𑌯𑌂 𑌗𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌹𑌸𑍍𑌤𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂, 𑌤𑌂 "𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿" 𑌇𑌤𑌿 𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । 𑌨𑌰𑌾𑌣𑌾𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌨𑌰𑌾𑌧𑌿𑌪𑌂 𑌰𑌾𑌜𑌾𑌨𑌂 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 ॥ ௨௭ ॥

௨௮. 𑌆𑌯𑍁𑌧𑌾𑌨𑌾𑌮𑌹𑌂 𑌵𑌜𑍍𑌰𑌂 𑌧𑍇𑌨𑍂𑌨𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍 ।
𑌪𑍍𑌰𑌜𑌨𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌕𑌨𑍍𑌦𑌰𑍍𑌪𑌃 𑌸𑌰𑍍𑌪𑌾𑌣𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌵𑌾𑌸𑍁𑌕𑌿𑌃 ॥

𑌆𑌯𑍁𑌧𑌾𑌨𑌾𑌮𑍍 𑌅𑌹𑌂 𑌵𑌜𑍍𑌰𑌂 𑌦𑌧𑍀𑌚𑍍𑌯𑌸𑍍𑌥𑌿𑌸𑌂𑌭𑌵𑌮𑍍 । 𑌧𑍇𑌨𑍂𑌨𑌾𑌂 𑌦𑍋𑌗𑍍𑌧𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑍍 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌾𑌨𑌾𑌂 𑌦𑍋𑌗𑍍𑌧𑍍𑌰𑍀, 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌾 𑌵𑌾 𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍 । 𑌪𑍍𑌰𑌜𑌨𑌃 𑌪𑍍𑌰𑌜𑌨𑌯𑌿𑌤𑌾 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌕𑌨𑍍𑌦𑌰𑍍𑌪𑌃 𑌕𑌾𑌮𑌃 । 𑌸𑌰𑍍𑌪𑌾𑌣𑌾𑌂 𑌸𑌰𑍍𑌪𑌭𑍇𑌦𑌾𑌨𑌾𑌮𑍍 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌵𑌾𑌸𑍁𑌕𑌿𑌃 𑌸𑌰𑍍𑌪𑌰𑌾𑌜𑌃 ॥ ௨௮ ॥

௨௯. 𑌅𑌨𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌨𑌾𑌗𑌾𑌨𑌾𑌂 𑌵𑌰𑍁𑌣𑍋 𑌯𑌾𑌦𑌸𑌾𑌮𑌹𑌮𑍍 ।
𑌪𑌿𑌤𑍄𑌣𑌾𑌮𑌰𑍍𑌯𑌮𑌾 𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌯𑌮𑌃 𑌸𑌂𑌯𑌮𑌤𑌾𑌮𑌹𑌮𑍍 ॥

𑌅𑌨𑌨𑍍𑌤𑌃 𑌨𑌾𑌮 𑌨𑌾𑌗𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌨𑌾𑌗𑌾𑌨𑌾𑌂 𑌨𑌾𑌗𑌭𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌨𑌾𑌗𑌰𑌾𑌜𑌃 । 𑌵𑌰𑍁𑌣𑍋 𑌯𑌾𑌦𑌸𑌾𑌮𑍍 𑌅𑌹𑌮𑍍 𑌅𑌬𑍍𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌅𑌹𑌮𑍍 । 𑌪𑌿𑌤𑍄𑌣𑌾𑌮𑍍 𑌅𑌰𑍍𑌯𑌮𑌾 𑌨𑌾𑌮 𑌪𑌿𑌤𑍃𑌰𑌾𑌜𑌃 𑌚 𑌅𑌸𑍍𑌮𑌿 । 𑌯𑌮𑌃 𑌸𑌂𑌯𑌮𑌤𑌾𑌂 𑌸𑌂𑌯𑌮𑌨𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌾𑌮𑍍 𑌅𑌹𑌮𑍍 ॥ ௨௯ ॥

---

௨௭. குதிரைகளுள் என்னை அமிருதத்தினு லுண்டான உச்சைச்ரவஸ் ஆக அறிந்துகொள். சிறந்த யானைகளுள் ஐராவதமாகவும், மனிதர்களுள் அரசனுகவும் (என்னை அறிந்துகொள்).

உச்சைச்ரவஸ் - அமிருதத்திற்காகக்(கடலைக்)கடைந்தபொழுது உண்டான குதிரை. சிறந்த யானைகளுள், இராவதியின் குழந்தையான ஐராவதமாக "என்னை அறிந்துகொள்" "எனத் தொடரும்....... (௨௭)

௨௮. யான் ஆயுதங்களுள் வஜ்ஜிராயுதமாகவும், பசுக்களுள் காமதுக்ஆகவும் இருக்கின்றேன ; (புத்திரனைப்) பிறப்பிக்கின்ற கந்தர்ப்பனுக இருக்கின்றேன் ; ஸர்ப்பங்களுள் வாஸுகியாக இருக்கின்றேன்,

வஜ்ஜிராயுதம் - ததீசிஎன்பவருடைய எலும்பினுலானது. காமதுக் – விரும்பியவற்றையெல்லாம் கொடுக்கின்றதான வஸிஷ்டரது காமதேநு ; அல்லது, மிகுதியாகப் பால் கொடுக்கின்ற ஸாமாந்யமான பசு. கந்தர்ப்பன் - காமம், ஸர்ப்பங்களுள் - ஸர்ப்பமென்னும் வகுப்பில், வாஸுகி - ஸர்ப்பங்கட்கு அரசன். (௨௮)

௨௯. யான் நாகங்களுள் அநந்தனுகவும், ஜலதேவதைகளுள் வருணனுகவும் இருக்கின்றேன். யான் பிதிருக்களுள் அர்யமாவாகவும், தண்டிப்பவருள் யமனுகவும் இருக்கின்றேன்.

நாகங்களுள் - நாகமென்னும் வகுப்பில். அநந்தன் என்னும்நாகமானது நாகங்களுக்கு அரசன். வருணன் - ஜலதேவதைகட்கு அரசன். அர்யமா என்பவன் - பிதிருக்களுக்கு அரசன். தண்டிப்பவருள் - தண்டனை செய்பவருள். (௨௯)

௩௰. ப்ரஹ்லாதஶ்சாஸ்மி தைத்யாநாம் கால: கலயதாமஹம் ।
ம்ருகாணாம் ச ம்ருகேந்த்ரோऽஹம் வைநதேயஶ்ச பக்ஷிணாம் ॥

ப்ரஹ்லாதோ நாம ச அஸ்மி தைத்யாநாம் திதிவம்ஶ்யாநாம் । கால: கலயதாம் கலநம் கணநம் குர்வதாம் அஹம் । ம்ருகாணாம் ச ம்ருகேந்த்ர: ஸிம்ஹோ வ்யாக்ரோ வா அஹம் । வைநதேயஶ்ச கருத்மாந் விநதாஸுத: பக்ஷிணாம் பதத்ரிணாம் ॥ ௩௰ ॥

௩௧. பவந: பவதாமஸ்மி ராம: ஶஸ்த்ரப்ருதாமஹம் ।
ஜஷாணாம் மகரஶ்சாஸ்மி ஸ்ரோதஸாமஸ்மி ஜாஹ்நவீ ॥

பவந: வாயு: பவதாம் பாவயித்ரூணாம் அஸ்மி । ராம: ஶஸ்த்ரப்ருதாம் ஶஸ்த்ராணாம் தாரயித்ரூணாம் தாஶரதி: ராம: அஹம் । ஜஷாணாம் மத்ஸ்யாதீநாம் மகர: நாம ஜாதிவிஶேஷ: ஸ்ரோதஸாம் ஸ்ரவந்தீநாம் அஸ்மி ஜாஹ்நவீ கங்கா ॥

௩௨. ஸர்காணாமாதிரந்தஶ்ச மத்யம் சைவாஹமர்ஜுந ।
அத்யாத்மவித்யா வித்யாநாம் வாத: ப்ரவததாமஹம் ॥

ஸர்காணாம் ஸ்ருஷ்டீநாம் ஆதி: அந்தஶ்ச மத்யம் சைவ அஹம் உத்பத்திஸ்திதி-லயா: அஹம் அர்ஜுந । பூதாநாம் ஜீவாதிஷ்டிதாநாமேவ ஆதி: அந்தஶ்ச இத்யா-த்யுக்தம் உபக்ரமே, இஹ து ஸர்வஸ்யைவ ஸர்கமாத்ரஸ்ய இதி விஶேஷ: । அத்யாத்ம-வித்யா வித்யாநாம் மோக்ஷார்த்தத்வாத் ப்ரதாநம் அஸ்மி । வாத: அர்த்தநிர்ணய-

---

௩௰. யான் தைத்தியர்களுள் ப்ரஹ்லாதனாகவும், கணக்கிடுகிறவர்களுள் காலமாகவும் இருக்கின்றேன். யான் மிருகங்களுள் மிருகத்தலைவனாகவும், பக்ஷிகளுள் வைநதேயனாகவும் (இருக்கின்றேன்).

தைத்தியர்களுள் - திதிவம்சத்தில் தோன்றியவர்களுள். மிருகத்தலைவன் - சிங்கம், அல்லது புலி. வைநதேயன் - விநதாமகனாகிய கருடன். (௩௰)

௩௧. யான் சுத்தப்படுத்துகின்ற பொருள்களுள் காற்றாகவும், படையாளர்களுள் ராமனாகவும் இருக்கின்றேன்; மீன்களுள் மகரமாகவும் இருக்கின்றேன்; நீரோட்டங்களுள் கங்கையாக இருக்கின்றேன்.

படையாளர்கள் - ஆயுதங்களை ஏந்தியவர்கள். ராமன் - தசரதன் மகன். (௩௧)

௩௨. அர்ஜுன! யான் சிருஷ்டிகளுக்கு முதலாகவும், முடிவாகவும், நடுவாகவும் (இருக்கின்றேன்). யான் வித்தைகளுள் ஆத்மாவைப்பற்றிய வித்தையாகவும், தர்க்கஞ் செய்பவருள் வாதமாகவும் (இருக்கின்றேன்).

அர்ஜுன! சிருஷ்டிகளுக்கு உற்பத்தியும், நிலையும், அழிவும் நானே. முதல் (௧௦ - ௨௰), "உயிருள்ள பொருள்கட்குத்தான் (பகவான்) முதலும், முடிவுமா கிறார்" எனக் கூறப்பட்டது. இங்கேயோ, "சிருஷ்டிஸாமான்யமான குந்தான் (பகவான் முதலும் முடிவுமாயிருக்கிறார்)" என்று குறிக்கப்பட (பலவகையான) அறிவுகளுள், ஆத்மாவைப்பற்றிய அறிவு முக் யால், முதன்மையானது. "தர்க்கஞ் செய்பவருள்" என்றவை கிறவர்கள்மூலமாக[அவர்களுடைய] ஒருவகைப்பேச்சுக்கள

[illegible]

௩௩. [illegible]

[illegible] ॥ ௩௩ ॥

௩௪. [illegible]

[illegible]

'ஜய்பம்', [illegible]

[illegible]

௩௩. எழுத்துக்களுள் அகாரமாகவும், [illegible] தொகையாகவும் இருக்கின்றேன். [illegible] எங்கும் முகமுள்ள வனாய்ப் பகிர்ந்து கொடுப்பவன்.

அக்ஷய காலம் [illegible] காலம் [illegible] [illegible] [illegible]]; அல்லது, காலத்திற்கும் கால மான பரமேச்வரன். நான் [illegible] பகிர்ந்து கொடுப் பவன். (௩௩)

௩௪. ஸகலத்தையும் அபகரிக்கும் மிருத்யுவும், செல்வங்களைப் பெறுவோர்க்கு ஓங்கும் செல்வமும், ஸ்திரீகளுள் புகழும் திருவும் வாக்கும் நினைவும் அறிவும் [illegible] பொறுமையும் நானே.

மிருத்யுவானது (க) பொருள் முதலியவற்றை அபகரிப்பது, (உ) உயிரை அப கரிப்பது என இருவகைத்து. அவற்றுள், எது உயிரை அபகரிப்பதோ, அது ஸகலத் தையும் அபகரிப்பது எனப்படுகின்றது. நான் அதுவாக இருக்கின்றேன். அல்லது, —பிரளயகாலத்திலே ஸகலத்தையும் கவர்ந்திடுதலால் பரமேச்வரன் ஸகலத்தையும்

𑌹𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌹𑌰𑌃, 𑌸𑌃 𑌅𑌹𑌮𑍍 । 𑌉𑌦𑍍𑌭𑌵𑌃 𑌉𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑌃 𑌅𑌭𑍍𑌯𑍁𑌦𑌯𑌃 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿-𑌹𑍇𑌤𑍁𑌶𑍍𑌚 𑌅𑌹𑌮𑍍—𑌕𑍇𑌷𑌾𑌮𑍍? 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌾𑌂 𑌭𑌾𑌵𑌿𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌾𑌨𑌾𑌮𑍍 𑌉𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿-𑌯𑍋𑌗𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌃 𑌶𑍍𑌰𑍀𑌃 𑌵𑌾𑌕𑍍𑌚 𑌨𑌾𑌰𑍀𑌣𑌾𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 𑌮𑍇𑌧𑌾 𑌧𑍃𑌤𑌿𑌃 𑌕𑍍𑌷𑌮𑌾, 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌾𑌃 𑌉𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑍍 𑌅𑌹𑌮𑍍 𑌅𑌸𑍍𑌮𑌿, 𑌯𑌾𑌸𑌾𑌮𑍍 𑌆𑌭𑌾𑌸𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑌂-𑌬𑌨𑍍𑌧𑍇𑌨𑌾𑌪𑌿 𑌲𑍋𑌕𑌃 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 ॥ ௩௪ ॥

௩௫. 𑌬𑍃𑌹𑌤𑍍𑌸𑌾𑌮 𑌤𑌥𑌾 𑌸𑌾𑌮𑍍𑌨𑌾𑌂 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀 𑌛𑌨𑍍𑌦𑌸𑌾𑌮𑌹𑌮𑍍 ।
𑌮𑌾𑌸𑌾𑌨𑌾𑌂 𑌮𑌾𑌰𑍍𑌗𑌶𑍀𑌰𑍍𑌷𑍋𑌽𑌹𑌮𑍃𑌤𑍂𑌨𑌾𑌂 𑌕𑍁𑌸𑍁𑌮𑌾𑌕𑌰𑌃 ॥

𑌬𑍃𑌹𑌤𑍍𑌸𑌾𑌮 𑌤𑌥𑌾 𑌸𑌾𑌮𑍍𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌮𑍍 𑌅𑌸𑍍𑌮𑌿 । 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀 𑌛𑌨𑍍𑌦𑌸𑌾𑌮𑍍 𑌅𑌹𑌮𑍍 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌛𑌨𑍍𑌦𑍋𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌮𑍍 𑌋𑌚𑌾𑌂 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀 𑌋𑌕𑍍 𑌅𑌹𑌮𑍍 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌮𑌾𑌸𑌾𑌨𑌾𑌂 𑌮𑌾𑌰𑍍𑌗𑌶𑍀𑌰𑍍𑌷𑌃 𑌅𑌹𑌮𑍍, 𑌋𑌤𑍂𑌨𑌾𑌂 𑌕𑍁𑌸𑍁𑌮𑌾𑌕𑌰𑌃 𑌵𑌸𑌨𑍍𑌤𑌃 ॥ ௩௫ ॥

௩௬. 𑌦𑍍𑌯𑍂𑌤𑌂 𑌛𑌲𑌯𑌤𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌤𑍇𑌜𑌸𑍍𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌮𑌹𑌮𑍍 ।
𑌜𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌤𑌾𑌮𑌹𑌮𑍍 ॥

𑌦𑍍𑌯𑍂𑌤𑌮𑍍 𑌅𑌕𑍍𑌷𑌦𑍇𑌵𑌨𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌛𑌲𑌯𑌤𑌾𑌂 𑌛𑌲𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑍄𑌣𑌾𑌮𑍍 𑌅𑌸𑍍𑌮𑌿 । 𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌂 𑌤𑍇𑌜𑌃 𑌅𑌹𑌮𑍍 । 𑌜𑌯𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌜𑍇𑌤𑍄𑌣𑌾𑌮𑍍, 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌿𑌨𑌾𑌮𑍍, 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌤𑌾𑌂 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾𑌨𑌾𑌮𑍍 𑌅𑌹𑌮𑍍 ॥ ௩௬ ॥

அபகரிப்பவன் ; யான் அவனாக இருக்கின்றேன். யான் ஓங்கும் செல்வமாகவும், அதனைப் பெறுதற்கு ஸாதநமாகவும் இருக்கின்றேன்.—எவர்கட்கு ?—இனிமேல் செல்வத்தை அடையப்போகிறவர்களுக்கு, செல்வத்தை அடையத் தகுந்தவர்களுக்கு என்றபடி. மாதர்களுள்,—எவர்களுடைய போலிமாத்திரமான ஸம்பந்தத்தினாலும் ஜனங்கள் தங்களை பேறுபெற்றவர்களாக [தமக்கு ஸகலமும் கைகூடிவிட்டதாக]க் கருதுகிறார்களோ, (அந்த) புகழ், திரு, வார்த்தை, நினைவு, அறிவு, தைரியம், பொறுமை என்ற இவ்வுயர்ந்த மகளிராக யான் இருக்கின்றேன். **தைரியம்** - (நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்தும் உறுதி). (௩௪)

௩௫. **ஸாமங்களுள் ப்ருஹத்ஸாமமும், சந்தஸ்களுள் காயத்திரியும் நானே. மாஸங்களுள் மார்க்கசீர்ஷமும், பருவகாலங்களுள் புஷ்பங்களுண்டாகும் காலமும் நானே.**

ப்ருஹத்ஸாம மென்பது - ஸாமங்களுள் சிறந்தது. காயத்திரிமுதலான சந்தஸ்களையுடைய ரிக்குக்களுள் யான் காயத்திரி என்னும் ரிக்காக இருக்கின்றேன் என்க. **புஷ்பங்களுண்டாகும் காலம்** - இளவேனில். (௩௫)

௩௬. **யான் வஞ்சகருள் சூதாகவும், ஒளியுள்ளவருள் ஒளியாகவும் இருக்கின்றேன் ; யான் வெற்றியாக இருக்கின்றேன் ; முயற்சியாக இருக்கின்றேன் ; நற்குணமுடையவருள் நற்குணமாக (இருக்கின்றேன்).**

சூது - சூதாடல் முதலியது. **ஒளி** - [தடையில்லாத கட்டளை—ஆ.]. வெல்லுகிறவர்களுள் வெற்றியாக இருக்கின்றேன். முயற்சியுடையவருள் முயற்சியாக இருக்கின்றேன். (௩௬)

௩௭. 𑌵𑍃𑌷𑍍𑌣𑍀𑌨𑌾𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑌾𑌂 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯𑌃 ।
𑌮𑍁𑌨𑍀𑌨𑌾𑌮𑌪𑍍𑌯𑌹𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑌵𑍀𑌨𑌾𑌮𑍁𑌶𑌨𑌾 𑌕𑌵𑌿𑌃 ॥

𑌵𑍃𑌷𑍍𑌣𑍀𑌨𑌾𑌂 𑌯𑌾𑌦𑌵𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌅𑌯𑌮𑍇𑌵 𑌅𑌹𑌂 𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑌖𑌃 । 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑌾𑌂 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯𑌃 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 । 𑌮𑍁𑌨𑍀𑌨𑌾𑌂 𑌮𑌨𑌨𑌶𑍀𑌲𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌾𑌮𑍍 𑌅𑌪𑌿 𑌅𑌹𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌃, 𑌕𑌵𑍀𑌨𑌾𑌂 𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌾𑌮𑍍 𑌉𑌶𑌨𑌾 𑌕𑌵𑌿𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿 ॥ ௩௭ ॥

௩௮. 𑌦𑌣𑍍𑌡𑍋 𑌦𑌮𑌯𑌤𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌨𑍀𑌤𑌿𑌰𑌸𑍍𑌮𑌿 𑌜𑌿𑌗𑍀𑌷𑌤𑌾𑌮𑍍 ।
𑌮𑍌𑌨𑌂 𑌚𑍈𑌵𑌾𑌸𑍍𑌮𑌿 𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑌾𑌮𑌹𑌮𑍍 ॥

𑌦𑌣𑍍𑌡𑌃 𑌦𑌮𑌯𑌤𑌾𑌂 𑌦𑌮𑌯𑌿𑌤𑍄𑌣𑌾𑌮𑍍 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌅𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌦𑌮𑌨𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 । 𑌨𑍀𑌤𑌿𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌜𑌿𑌗𑍀𑌷𑌤𑌾𑌂 𑌜𑌯𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌾𑌮𑍍 । 𑌮𑍌𑌨𑌂 𑌚𑍈𑌵 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌗𑍋𑌪𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑌾𑌮𑍍 𑌅𑌹𑌮𑍍 ॥ ௩௮ ॥

௩௯. 𑌯𑌚𑍍𑌚𑌾𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌬𑍀𑌜𑌂 𑌤𑌦𑌹𑌮𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌨 𑌤𑌦𑌸𑍍𑌤𑌿 𑌵𑌿𑌨𑌾 𑌯𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌯𑌾 𑌭𑍂𑌤𑌂 𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍 ॥

𑌯𑌚𑍍𑌚𑌾𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌬𑍀𑌜𑌂 𑌪𑍍𑌰𑌰𑍋𑌹𑌕𑌾𑌰𑌣𑌂, 𑌤𑌤𑍍 𑌅𑌹𑌮𑍍 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 । 𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑍋𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌮𑍍 𑌆𑌹 — 𑌨 𑌤𑌤𑍍 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑌂 𑌚𑌰𑌾𑌚𑌰𑌂 𑌚𑌰𑌮𑍍 𑌅𑌚𑌰𑌂 𑌵𑌾 𑌮𑌯𑌾 𑌵𑌿𑌨𑌾 𑌯𑌤𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌭𑌵𑍇𑌤𑍍 । 𑌮𑌯𑌾 𑌅𑌪𑌕𑍃𑌷𑍍𑌟𑌂 𑌨𑌿𑌰𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌶𑍂𑌨𑍍𑌯𑌂 𑌹𑌿 𑌤𑌤𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌅𑌤𑌃 𑌮𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௩௯ ॥

---

௩௭. **யான் விருஷ்ணிகளுள் வாஸுதேவனுகவும், பாண்டவர்களுள் தநஞ்ஜயனுகவும், முனிகளுள்ளும் வ்யாஸராகவும், கவிகளுள் சுக்ரனென்னும் கவியாகவும் இருக்கின்றேன்.**

விருஷ்ணிகளுள் - யதுவம்சத்தில் தோன்றியவர்களுள். **வாஸுதேவன்** - உனது தோழனை இந்த நானே தான். **தனஞ்ஜயன்** - நீயே தான். **முனிகளுள்** - ஆலோசிக்குந் தன்மையராய் ஸகலப்பொருள்களையும் அறிபவருள். **கவிகளுள்** - கடந்து நிற்கின்றவற்றைக் காண்பவருள் [அதிநுட்பமானவற்றை ஆராய்ந்து உணர்பவருள்]. (௩௭)

௩௮ **தண்டிப்பவருள் செங்கோலாக இருக்கின்றேன்; வெல்ல விரும்புகிறவர்களுள் நீதியாக இருக்கின்றேன்; யான் ரகஸ்யங்களுள் மௌநமாகவும், ஞானிகளுள் ஞானமாகவும் இருக்கின்றேன்.**

செங்கோலானது அடங்காதவர்களை அடங்கச்செய்வது. (௩௮)

௩௯. **அர்ஜுந! இன்னும், பொருள்களெல்லாவற்றிற்கும் எது விதையோ, அது நான். ஜங்கமஸ்தாவரமான எந்தப்பொருள் உள்ளதோ, அது என்னையின்றி இல்லை.**

விதை - முளைக்கச் செய்வது. பிரகிருதத்தை முடிக்கும்பொருட்டு(த் தமது) வைபவத்தின் சுருக்கத்தைச் சொல்லுகிறூர் :—ஜங்கமமாகவாயினும், ஸ்தாவரமாகவாயினும் எந்தப்பொருள் உள்ளதோ, அது என்னையின்றி இல்லை. என்னுல் நுழையப்பெறுத அப்பொருள் ஆத்மாஇல்லாததாகப் பாழாகவன்றே நிற்கும். ஆகவே, எல்லாம் என்னையே ஆத்மாவாகவுடையன என்பது (தேர்ந்த) பொருள். (ஆத்மாஇல்லாத தொன்றும் இருக்கவேமுடியாதென்க.) (௩௯)

௪௦. நாந்தோऽஸ்தி மம திவ்யாநாம் விபூதீநாம் பரந்தப ।
ஏஷ தூத்தேஸத: ப்ரோக்தோ விபூதேர்விஸ்தரோ மயா ॥

ந அந்த: அஸ்தி மம திவ்யாநாம் விபூதீநாம் விஸ்தராணாம் பரந்தப । ந ஹி ஸர்வஜ்ஞஸ்ய ஸர்வஸக்தே: திவ்யாநாம் விபூதீநாம் இயத்தா ஸங்க்யா வக்தும் ஜ்ஞாதும் வா ஸக்யதே । ஏஷ து உத்தேஸத: ஏகதேஸத: ப்ரோக்த: விபூதே: விஸ்தர: மயா ॥ ௪௦ ॥

௪௧. யத்யத்விபூதிமத்ஸத்த்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவ வா ।
தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்ஸஸம்பவம் ॥

யத்யத் லோகே விபூதிமத் விபூதியுக்தம் ஸத்த்வம் வஸ்து ஸ்ரீமத் ஊர்ஜிதமேவ வா உத்ஸாஹோபேதம் வா, தத்ததேவ அவகச்ச த்வம் ஜாநீஹி ஈஸ்வரஸ்ய தேஜோம்ஸஸம்பவம் தேஜஸ: அம்ஸ: ஏகதேஸ: ஸம்பவ: யஸ்ய தத் தேஜோம்ஸஸம்பவம் இதி அவகச்ச த்வம் ॥ ௪௧ ॥

௪௨. அதவா பஹுநைதேந கிம் ஜ்ஞாதேந தவார்ஜுந ।
விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நமேகாம்ஸேந ஸ்திதோ ஜகத் ॥

இதி ஸ்ரீமஹாபாரதே ஸதஸாஹஸ்ர்யாம் ஸம்ஹிதாயாம் வையாஸிக்யாம் பீஷ்மபர்வணி ஸ்ரீமத்பகவத்கீதாஸு உபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகஸாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே விபூதியோகோ நாம தஸமோऽத்யாய: ॥

---

௪௦. பகைவரைத் தவிக்கச்செய்வோனே! என்னுடைய திவ்வியமான வைபவங்கட்கு எல்லை இல்லை. ஆனால், வைபவத்தினுடைய இப் பரப்பானது என்னால் ஏகதேசம் [ஒருஇம்மியளவு] கூறப்பட்டது.

ஸகலத்திற்கும் ஆத்மாவான ஈச்வரனுடைய திவ்வியமான வைபவங்கள் இவ்வளவு என்று சொல்லவாவது, அறியவாவது ஒருவனாலும் இயலாதன்றோ. (௪௦)

பகவானுடைய வைபவத்தைச் சுருக்கிச்சொல்லல்.

௪௧. பெருமையுள்ளதாகவாயினும், வளமுள்ளதாகவாயினும், வலியதாகவாயினும் உள்ள பொருள் எதெதுவோ, அதது என்னுடைய ஒளியினுடைய ஒரு அம்சத்தைப் பிறப்பிடமாகக் கொண்டது (என்று) நீ அறிந்துகொள்.

வலியது - ஊக்கத்தோடு கூடியது என்னுடைய - ஈச்வரனுடைய. (௪௧)

௪௨. அர்ஜுந! அல்லது, அறியப்பட்ட அநேகமான இதனால் உனக்கு என்ன? யான் இப்பிரபஞ்சம் முழுவதையும் ஒருஅம்சத்தினால் தாங்கிநிற்கின்றேன்.

ஸ்ரீமகாபாரதத்திலே, வ்யாஸரருளிச்செய்த நூறாயிரக்கிரந்த ஸம்ஹிதை...
பீஷ்மபர்வத்திலே ஸ்ரீமத் பகவத்கீதைகளாக உபநிஷத்துக்களாக
யாக யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீக்ருஷ்ணார்ஜுந ஸம்வ
யோகம் என்னும் பத்தாம் அத்தியாயம் முற்றும்.

[illegible]

ஸ்ரீ [illegible]

அர்ஜுன ! இத்தனையை அறிவ[illegible] [illegible] [illegible]
அறிவதால் உனக்கு ஆவதென்ன ? [illegible]
நான் இந்த ஜகத்துமுழுவதையும் [illegible]
பொருள்கள் எல்லாவற்றிலும் [illegible]
நிற்கின்றேன். அவ்வாறே, " [illegible]
[illegible] "(தை - ஆ - [illegible]) என்று [illegible] (௪௨)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் [illegible]

அத²

ஏகாத³ஶோऽத்⁴யாய: விஶ்வரூபத³ர்ஶநயோக: ||

ப⁴க³வதோ விபூ⁴தய: உக்தா: | தத்ர ச 'விஷ்டப்⁴யாஹமித³ம் க்ருத்ஸ்நம் ஏகாம்ஶேந ஸ்தி²தோ ஜக³த்' இதி ப⁴க³வதா அபி⁴ஹிதம் ஶ்ருத்வா யத் ஜக³தா³த்மரூபம் ஆத்³யம் ஐஶ்வரம் தத் ஸாக்ஷாத்கர்தும் இச்ச²ந் அர்ஜுந உவாச—

அர்ஜுந உவாச ||

க. மத³நுக்³ரஹாய பரமம் கு³ஹ்யமத்⁴யாத்மஸம்ஜ்ஞிதம் |
யத்த்வயோக்தம் வசஸ்தேந மோஹோऽயம் விக³தோ மம ||

மத³நுக்³ரஹாய மத³நுக்³ரஹார்த²ம் பரமம் நிரதிஶயம் கு³ஹ்யம் கோ³ப்யம் அத்⁴யாத்மஸம்ஜ்ஞிதம் ஆத்மாநாத்மவிவேகவிஷயம் யத் த்வயா உக்தம் வச: வாக்யம், தேந வசஸா மோஹ: அயம் விக³தோ மம, அவிவேகபு³த்³தி⁴: அபக³தா இத்யர்த²: || க ||

கிஞ்ச—

உ. ப⁴வாப்யயௌ ஹி பூ⁴தாநாம் ஶ்ருதௌ விஸ்தரஶோ மயா |
த்வத்த: கமலபத்ராக்ஷ மாஹாத்ம்யமபி சாவ்யயம் ||

ப⁴வ: உத்பத்தி:, அப்யய: ப்ரலய: ஹி பூ⁴தாநாம் தௌ ப⁴வாப்யயௌ ஶ்ருதௌ விஸ்தரஶ: ந ஸம்க்ஷேபத: மயா த்வத்த: த்வத்ஸகாஶாத் கமலபத்ராக்ஷ கமலஸ்ய பத்ரம் கமலபத்ரம் தத்வத் அக்ஷிணீ யஸ்ய தவ ஸ த்வம் கமலபத்ராக்ஷ:, ஹே கமலபத்ராக்ஷ மஹாத்மந: பா⁴வ: மாஹாத்ம்யம் அபி ச அவ்யயம் அக்ஷயம், 'ஶ்ருதம்' இதி அநுவர்ததே || உ ||

பதினோராம் அத்தியாயம்: விச்வரூபதர்சநயோகம்.

விச்வரூபக்காட்சிக்காக அர்ஜுநன் பகவானை வேண்டுதல்.

பகவானுடைய வைபவங்கள் கூறப்பட்டன. இனி, அர்ஜுநன் "யான் இப்பிரபஞ்சம் முழுவதையும் ஒருஅம்சத்தினால் தாங்கிநிற்கின்றேன்" (கO - சஉ) என்று பகவான் அருளியதைக் கேட்டு,—ஈச்வரனுக்குப் பிரபஞ்சவடிவமான ஆதி ரூபம் எதுவோ அதனை நேரேகாண விரும்புகிறவனாய்க் கூறலாயினன் :

அர்ஜுநன் சொல்லலுற்றான் :

க. அத்யாத்மம் என்று பெயரிடப்பெற்ற உயர்ந்த ரஹஸ்யமான எந்தத் திருவாக்கானது, என்னை ஈடேற்றும்பொருட்டு உங்களால் அருளிச்செய்யப்பட்டதோ, அதனால் என்னுடைய இம்மயக்கம் போய்விட்டது.

அத்யாத்மம் என்பது - ஆத்மாவையும், ஆத்மா அல்லாததையும் பகுத்தறியும் வேறுபாட்டைப் பற்றியது. மயக்கம் போய்விட்டது - பகுத்தறிவில்லாத புத்தி தொலைந்துவிட்டது, தீர்ந்துவிட்டது என்றபடி. (க)

மேலும்,

இனி, இவ்வாறுள்ளவளவிலே, அஜ்ஞானி பயனை வேண்டுகிறவனாதலால் (அவற்றில்) தலைப்படுகிறான். நிர்விகாரியான ஆத்மாவைக் காணும் ஞானியோ, பயனை வேண்டுகிறவனில்லையாதலால் (அவற்றில்) தலைப்படுவது அமையாது; அமையாதாகவே, தேகம் இந்திரியங்கள் இவற்றின் சேர்க்கையின் தொழிலானது ஓய்ந்துவிட, ஒழிபு [அவன் கர்மத்தினின்றும் ஒழிந்துவிட்டான் என்பது] உபசாரவழக்கினால் கூறப்படுகின்றது.

இனி, இது வேறுபாண்டித்யமாக [கல்வித்திறமையாக] சிலர்க்கு இருக்கட்டும்(எனின், அதுவருமாறு):—"க்ஷேத்ரஜ்ஞன் ஈச்வரன்தான். க்ஷேத்ரமோ வேறானது, க்ஷேத்ரஜ்ஞனுக்கே விஷயமாயுள்ளது [அவனால் உணரப்படுவது]. ஆனால், நான் பிறந்து இறந்து உழல்பவனாய் இன்பத்தையும் துன்பத்தையும் உடையவனாய் இருக்கின்றேன். க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களை அறிவதனாலும், தியானத்தினாலும் ஈச்வரனாகிய க்ஷேத்ரஜ்ஞனை நேரேகண்டு, பின்பு, அவன்வடிவமாகநிற்பதனால் எனக்கு ஸம்ஸாரம் ஒழிதலைச்செய்யவேண்டும் என்று எவன் இவ்வாறு உணர்த்தப்படுகின்றானோ, இன்னும் எவன் (இவ்வாறு பிறர்க்கு) உணர்த்துகின்றானோ, அவன் [அந்தசிஷ்யனும், குருவும்] க்ஷேத்ரஜ்ஞன் அல்லன்" என்பது. (ஸம்ஸாரம் உண்மையாயுள்ளது. ஆத்மா அதனையுடையது. இந்த ஆத்மாவைக்காட்டிலும் ஈச்வரன் வேறானவன், ஸம்ஸாரமில்லாதவன். உண்மையான ஸம்ஸாரியாகிய ஆத்மா ஈச்வரனைத் தியானிக்க, அதனைச் சார்ந்துவரும் ஞானத்தினால் தன்னை ஈச்வரனாகச் செய்யவேண்டும் என்னும் அறிவே பாண்டித்யம் என்பது - சிலர் கொள்கை. இதனைப் பாஷ்யகாரர் பின்வருமாறு மறுக்கிறார்.—ஆ.)

இவ்வாறு எவன், ஸம்ஸாரமும் மோக்ஷமும் சாஸ்திரமும் பயன்படுதலைச் செய்கின்றேன் என்று நினைக்கின்றவனோ, அவன் பண்டிதர்களுள் கடைப்பட்டவன்; அன்றியும், ஆத்மாவைக் கொல்பவன். (அவன்) நூற்பொருளின் ஸம்பிரதாயம் [பெரியோர்வழிவரும் முறை]இல்லாதவனாதலால், சொன்னதற்கு இல்லாமையையும், சொல்லாததற்குக் கற்பனையும் செய்துகொண்டு [சாஸ்திரத்தினுள், "நீ அதுவாயிருக்

𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌰𑌹𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌶𑍍𑌰𑍁𑌤𑌹𑌾𑌨𑌿𑌮𑌶𑍍𑌰𑍁𑌤𑌕𑌲𑍍𑌪𑌨𑌾𑌂 𑌚 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍। 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍, 𑌅𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌵𑌿𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌦𑌪𑌿 𑌮𑍂𑌰𑍍𑌖𑌵𑌦𑍇𑌵 𑌉𑌪𑍇𑌕𑍍𑌷𑌣𑍀𑌯𑌃 ॥

𑌯𑌤𑍍𑌤𑍁 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 “𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑍈𑌕𑌤𑍍𑌵𑍇 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿; 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌈𑌶𑍍𑌵𑌰𑍈𑌕𑌤𑍍𑌵𑍇 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌣𑌃 𑌅𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃” 𑌇𑌤𑌿—𑌏𑌤𑍌 𑌦𑍋𑌷𑍌 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍌 “𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌽𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑍋𑌃 𑌵𑍈𑌲𑌕𑍍𑌷𑌣𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌤𑍍” 𑌇𑌤𑌿 । 𑌕𑌥𑌮𑍍?—𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌦𑍋𑌷𑍇𑌣 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌂 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌿𑌕𑌂 𑌨 𑌦𑍂𑌷𑍍𑌯𑌤𑍀𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌚 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑌃 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌃—𑌮𑌰𑍀𑌚𑍍𑌯𑌮𑍍𑌭𑌸𑌾 𑌊𑌷𑌰𑌦𑍇𑌶𑌃 𑌨 𑌪𑌙𑍍𑌕𑍀𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 । 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌣𑌃 𑌅𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌦𑍋𑌷𑍋𑌽𑌪𑌿 𑌸𑌂𑌸𑌾𑌰𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌣𑍋𑌃 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌤𑍍𑌵𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 ॥

𑌨𑌨𑍁 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌤𑍍𑌵𑌦𑍋𑌷𑌃 । 𑌤𑌤𑍍𑌕𑍃𑌤𑌂 𑌚 𑌸𑍁𑌖𑌿𑌤𑍍𑌵𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑍁𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍—

கிறது" என்பது முதலியவற்றால் ஜீவனும் ஈச்வரனும் ஒன்றுஎன்று சொன்னதைவிட்டு, "ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் வாஸ்தவமாகவே பேதமுண்டு" என்று நூலினுள் சொல்லாததைக் கற்பனைசெய்துகொண்டு] தானே மயங்கியவனாய்ப் பிறரையும் மயக்குகிறான். ஆகவே, ஸம்பிரதாயந்தெரியாதவன் ஸகலசாஸ்திரங்களையும் அறிந்தவனாயினும், மூர்க்கனைப்போலவே (அவனை) அசட்டைசெய்து ஒழிக.

ஆத்மாவுக்கு ஸம்ஸாரத்தோடு தொடர்பு உண்டென்பது வெறும் மயக்கம்.

இனி, "ஈச்வரனும் க்ஷேத்ரஜ்ஞனும் ஒன்றாயிருக்குமளவிலே, க. (ஈச்வரன்) ஸம்ஸாரி என்றாகின்றது. அன்றியும், உ. க்ஷேத்ரஜ்ஞர்களும் ஈச்வரனும் ஒன்றாயிருக்குமளவிலே, ஸம்ஸாரி இல்லாமையினால் ஸம்ஸாரம் இல்லையாதல் வேண்டும்" எனவை கூறப்பட்டனவோ, (அந்த) இவ்விரண்டு குற்றங்களும் "அறிவிற்கும் அறியாமைக்கும் வேற்றுமையை (யாவரும்) ஒத்துக்கொள்வதனால்" என மறுமொழி கூறப்பெற்றன.—எப்படி?—அறியாமையினால் கற்பனைசெய்யப்பட்ட குற்றத்தினால், அதற்கு [அக்கற்பனைக்கு] ஆதாரமாயுள்ள உண்மைப்பொருள் கெடமாட்டாதென்று (மறுமொழிகூறப்பட்டது). அவ்வண்ணமே, கானல்ஜலத்தினால் பாலைநிலம் சேறாகாதென்று திருஷ்டாந்தமும் காட்டப்பட்டது. ஸம்ஸாரி இல்லாமையினால் ஸம்ஸாரம் இல்லையாதல் வேண்டும் என்னும் குற்றமும்—"ஸம்ஸாரமும், ஸம்ஸாரியும் அவித்யையினால் கற்பிக்கப்பட்டவை" என்னும் நியாயத்தினால் மறுமொழிகூறப்பெற்றது.

(ஆக்ஷேபம்) :—அப்படியானால், அவித்யையுடையவனாயிருத்தலே க்ஷேத்ரஜ்ஞன் ஸம்ஸாரியாதலென்னும் குற்றமாம் [க்ஷேத்ரஜ்ஞன் அவித்யையையுடையவனாயின், அவன் ஸம்ஸாரியாம்]; அன்றியும், அதனாலாகும் [அவித்யையினாலாகும்] இன்பமுடைமையும், துன்பமுடைமையும், மற்றும் இவைபோன்றவையும் பிரத்தியக்ஷமாகக் காணப்படுகின்றன எனின்,—

न; ज्ञेयस्य क्षेत्रधर्मत्वात्, ज्ञातुः क्षेत्रज्ञस्य तत्कृतदोषानुपपत्तेः। यावत् किञ्चित् क्षेत्रज्ञस्य दोषजातम् अविद्यमानम् आसञ्जयसि, तस्य ज्ञेयत्वोपपत्तेः क्षेत्रधर्मत्वमेव, न क्षेत्रज्ञधर्मत्वम्। न च तेन क्षेत्रज्ञः दुष्यति, ज्ञेयेन ज्ञातुः संसर्गानुपपत्तेः। यदि हि संसर्गः स्यात्, ज्ञेयत्वमेव नोपपद्येत। यदि आत्मनः धर्मः अविद्यावत्त्वं दुःखित्वादि च, कथं भोः प्रत्यक्षम् उपलभ्यते, कथं वा क्षेत्रज्ञधर्मः। "ज्ञेयं च सर्वं क्षेत्रं, ज्ञातैव क्षेत्रज्ञः" इति अवधारिते, "अविद्यादुःखित्वादेः क्षेत्रज्ञविशेषणत्वं क्षेत्रज्ञधर्मत्वं, तस्य च प्रत्यक्षोपलभ्यत्वम्" इति विरुद्धम् उच्यते अविद्यामात्रावष्टम्भात् केवलम्॥

अत्र आह—सा अविद्या कस्य? इति।

(ஸமாதாநம்) :—அப்படியன்று ; அறியப்படும்பொருளானது க்ஷேத்ரத்தின் தன்மையாதலின், அறியும்பொருளாகிய க்ஷேத்ரஜ்ஞனுக்கு அதனால் [அறியப்படும் பொருளினால்] ஆன குற்றம் அமையாமையின். க்ஷேத்ரஜ்ஞனுக்கு இல்லாத எந்தக் குற்றத்தையெல்லாம் நீ எவ்வளவு ஒட்டினாலும், அது [அக்குற்றம்] அறியப்படும்பொருளாய் அமைவதனால் க்ஷேத்ரத்தின் தன்மையாகுமேயன்றி, க்ஷேத்ரஜ்ஞனுடைய தன்மையாகாது. அன்றியும், அதனால் க்ஷேத்ரஜ்ஞன் கெடமாட்டான் ; அறியப்படும் பொருளோடு அறியும்பொருளுக்குத் தொடர்பு ஏலாமையின். தொடர்பு இருக்குமாயின், (அங்ஙனம் குற்றமானது) அறியப்படும்பொருளாகவே அமையாது. (1) அவித்யையுடைமை, துன்பமுடைமை முதலியன ஆத்மாவின் தன்மையாயின், ஆ ! (அவை அப்பொழுது) எவ்வாறு பிரத்தியக்ஷமாக உணரப்படும் ? (2) அல்லது, எவ்வாறு க்ஷேத்ரஜ்ஞனுடைய தன்மையாகும் ? (1) ஆத்மா தன் தன்மையை அறியுமாயின், அது தன்னையும் அறியக்கூடும். அது பொருந்தாது ; ஏனெனில், ஒரே பொருள் ஒருசெய்கைக்குக் கர்த்தாவாகவும், செயப்படுபொருளாகவும் இருக்கமுடியாது. (2) உணரப்படும் பொருளானது உணரும்பொருளின் தன்மையாயிருக்கமுடியாது ; நிறமும், உருவமும் போல. ஆகவே, க்ஷேத்ரமானது க்ஷேத்ரஜ்ஞனது தன்மையாகாது. "அறியப்படும் பொருளாகிய அதெல்லாம் க்ஷேத்ரம் (கங - ௬, ௯) ; அறியும்பொருளே க்ஷேத்ரஜ்ஞன்" (கங - ௧) என நிச்சயமாய் நிர்ணயிக்கப்பட்டிருக்குமளவிலே, "அவித்யை, துன்பமுடைமை முதலியன க்ஷேத்ரஜ்ஞனுடைய விசேஷணங்கள், க்ஷேத்ரஜ்ஞனுடைய தன்மைகள் : அன்றியும், அவை பிரத்தியக்ஷமாய் உணரப்படுகின்றவை" என, கேவலம் அவித்யையைமாத்திரம் கைபிடித்து விரோதமாகக் கூறப்படுகின்றது.

ஆத்மாவிற்கும், அவித்யை முதலியவற்றிற்கும் தொடர்பு இருக்கின்றது என்னும் உணர்ச்சி மயக்கஅறிவினு லாகின்றது.

இனி(ப் பிரதிவாதி)கூறுகிறான் :— அந்த அவித்யை யாருக்கு என்பது ? (கூடாததையும் கூட்டிவிக்கும் சக்தியுடைய அவித்யைக்குச் சுதந்திரமில்லையாதலால், சுதந்திரமானபொருளொன்று அதற்குச் சார்பிடமாயிருக்கவேண்டும். சித்தானது சித்யாஸ்வபாவமாதலால்[இயல்பாகவே அறிவாயிருப்பதனால்]அவித்யைக்குச் சார்பிடமாகாது. ஆனால், சித்தைக்காட்டினும் வேறு சுதந்திரப்பொருள் இல்லை. ஆகவே, பிரதிவாதி அவித்யையின் சார்பிடத்தை அறிய விரும்புகிறான்.—ஆ.)

𑌯𑌸𑍍𑌯 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌸𑌾 ।
𑌕𑌸𑍍𑌯 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿?
𑌅𑌤𑍍𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—"𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌕𑌸𑍍𑌯 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇?" 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃 𑌨𑌿𑌰𑌰𑍍𑌥𑌕𑌃। 𑌕𑌥𑌮𑍍?—𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌚𑍇𑌦𑌵𑌿𑌦𑍍𑌯𑌾, 𑌤𑌦𑍍𑌵𑌨𑍍𑌤𑌮𑌪𑌿 𑌪𑌶𑍍𑌯𑌸𑌿। 𑌨 𑌚 𑌤𑌦𑍍𑌵𑌤𑌿 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 "𑌸𑌾 𑌕𑌸𑍍𑌯?" 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍋 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃। 𑌨 𑌹𑌿 𑌗𑍋𑌮𑌤𑌿 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 "𑌗𑌾𑌵𑌃 𑌕𑌸𑍍𑌯?" 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃 𑌅𑌰𑍍𑌥𑌵𑌾𑌨𑍍 𑌭𑌵𑌤𑌿 ॥

𑌨𑌨𑍁 𑌵𑌿𑌷𑌮𑍋 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑌃—𑌗𑌵𑌾𑌂 𑌤𑌦𑍍𑌵𑌤𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌤𑌤𑍍𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑍋𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍋 𑌨𑌿𑌰𑌰𑍍𑌥𑌕𑌃। 𑌨 𑌤𑌥𑌾 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌤𑌦𑍍𑌵𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍌, 𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃 𑌨𑌿𑌰𑌰𑍍𑌥𑌕𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ॥

𑌅𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌣 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌤𑌾 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑍇 𑌜𑍍𑌞𑌾𑌤𑍇, 𑌕𑌿𑌂 𑌤𑌵 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍?
𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌃 𑌅𑌨𑌰𑍍𑌥𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑌰𑌿𝌹𝌰𝍍𝌤𝌵𝍍𝌯𝌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ॥

(மறுமொழி) :—எவனுக்குக் காணப்படுகின்றதோ, அவனுக்கே (அவித்யை உள்ளது). (அது காணப்படாததாயின், அது உள்ளதென்பதே அமையாது. காணப்படுவதாயின், அது சுதந்திரமானபொருளன்று; ஆதலால், தானே இருக்கமுடியாது, ஒன்றைச் சார்ந்தே இருக்கவேண்டுமாதலின், "அது எவனுக்குக் காணப்படுகின்றதோ, அவனுக்கே உள்ளது" என மறுமொழிகூற லாயிற்று.—ஆ.)

(வினு) :—(அது) யாருக்குக் காணப்படுகின்றது? என்பது—[அதற்குச் சிறப்பான சார்பிடம் இன்னது எனக் கூறுக.—ஆ.]

(விடை) :—இதில் கூறுவோம்: "அவித்யை யாருக்குக் காணப்படுகின்றது?" என்னும் வினுவானது அர்த்தமில்லாதது [இவ்வினுவிற்கு இடமில்லை].—எப்படி?—அவித்யை காணப்படுகின்றதானுல், அதனை யுடையவனையும் நீ காண்கிருய். அதனை யுடையவன் காணப்படும்பொழுது, "அது யாருக்கு" என வினவுதல் நேரன்று. பசுக்களுடையவன் காணப்படும்பொழுது, "பசுக்கள் யாருக்கு [எவனுடையவை]?" என வினவுதல் அர்த்தமுள்ள தாகாதன்றே. [அவித்யை அறியப்படும் பொருளாதலாலும், அதற்குச் சிறப்பான சார்பிடமாகிய ஆத்மா தன் அநுபவத்திலேயே அமைந்திருப்பதனுலும் இவ்வினுவிற்கு இடமில்லை.—ஆ.]

(ஆக்ஷேபம்) :—அப்படியானுல், திருஷ்டாந்தம் சரியன்று. பசுக்களும், அவற்றை யுடையவனும் பிரத்தியக்ஷமா யிருப்பதனுல், அவர்களுடைய ஸம்பந்தமும் பிரத்தியக்ஷமா யுள்ளது; ஆகவே, வினு அர்த்தமில்லாதது. (ஆனுல்,) அவித்யையும், அதனையுடையவனும் அவ்வாறு பிரத்தியக்ஷமாயில்லை. அப்படி யிருந்தாலன்றோ வினு அர்த்தமில்லாத தாகும்.

(ஸமாதானம்) :—பிரத்தியக்ஷமா யில்லாதவனுகிய அவித்யையுள்ளவனோடு அவித்யையின் தொடர்பு அறியப்பட்டவழி, உனக்கு ஆவதென்ன? [அவித்யையை யுடையவன் பிரத்தியக்ஷமாயிராவிட்டாலும், அவன் இன்னுன் என்று நீ அறிகிருய். ஆகவே, —னது வினுவிற்கு இடமில்லை.]

(பிரதிவாதி இச்சமாதானத்தின்கருத்தை அறியாது மீண்டும் கூறுகிருன்.—ஆ.)

(பிரதிவாதி) :—அவித்யை அநர்த்தங்கட்குக் காரணமாதலால், நீக்கவேண்டி (ஆதலால், "எவனுக்கு அவித்யை" என்று அறிய வினவுகின்றேன்.)

யஸ்ய அவித்யா, ஸ: தாம் பரிஹரிஷ்யதி ॥
நநு அஹமேவ அவித்யா ॥
ஜாநாஸி தர்ஹி அவித்யாம் தத்வந்தம் ச ஆத்மாநம் ॥
ஜாநாமி, ந து ப்ரத்யக்ஷேண ॥

அநுமாநேந சேத் ஜாநாஸி, கதம் ஸம்பந்தக்ரஹணம்? ந ஹி தவ ஜ்ஞாது: ஜ்ஞேயபூதயா அவித்யயா தத்காலே ஸம்பந்த: க்ரஹீதும் சக்யதே, அவித்யாவிஷயத்வேநைவ ஜ்ஞாது: உபயுக்தத்வாத்। ந ச ஜ்ஞாது: அவித்யாயாஶ்ச ஸம்பந்தஸ்ய ய: க்ரஹீதா, ஜ்ஞாநம் வா அந்யத் தத்விஷயம் ஸம்பவதி; அநவஸ்தா-ப்ராப்தே:। யதி ஜ்ஞாத்ராபி ஜ்ஞேயஸம்பந்தோ ஜ்ஞாயதே, அந்ய: ஜ்ஞாதா கல்ப்ய: ஸ்யாத், தஸ்யாபி அந்ய:, தஸ்யாபி அந்ய: இதி அநவஸ்தா அபரிஹார்யா। யதி புந: அவித்யா ஜ்ஞேயா, அந்யத்வா ஜ்ஞேயம், ஜ்ஞேயமேவ। ததா ஜ்ஞாதாபி ஜ்ஞாதைவ, ந

(மறுமொழி) :—எவனுக்கு அவித்யையோ, அவன் அதனை நீக்குவான். (அதனை நீக்கவேண்டியவன் அதனையுடையவனேயன்றி வேறொருவ னல்லன்.)

(பிரதிவாதி) :—ஏன்! எனக்கேதான் அவித்யை. (நானேதான் அதனை நீக்க முயலவேண்டும்.—ஆ.)

(மறுமொழி) :—அப்பொழுது நீ அவித்யையையும், அதனையுடைய ஆத்மாவை யும் அறிகிறாய். (அங்ஙனம் உனது வினாவிற்கு அர்த்தமில்லை என்றபடி.—ஆ.)

(பிரதிவாதி) :—அறிகிறேன்; ஆனால், பிரத்தியக்ஷமாய் (அறிகிறேன்) இல்லை. (ஆதலால், எனது வினா என்க.)

(மறுமொழி) :—("நான் அவித்யையுள்ளவன்; ஏனெனில், அவித்யையின் கார் யமாகிய துன்பம் முதலியவை எனக்கு இருக்கின்றன; எனக்கு அவித்யை இல்லையா னால், துன்பம் முதலியன இல்லை; உதாரணமாக, அவித்யையில்லாத விடுபட்ட ஆத் மாக்களுக்கு அவை இல்லை" என்னும்) அநுமானத்தினால் (அவித்யையையும், அதனை யுடைய ஆத்மாவையும்) அறிகின்றனையாயின், (அவ்விரண்டிற்குமுள்ள) ஸம்பந்தத்தை உணர்தல் எவ்வாறு கூடும்? அறியப்படும்பொருளாகிய அவித்யையோடு அக்காலத் திலே [ஆத்மா அவித்யையை அறியுங்காலத்திலே] அறியும்பொருளுக்குள்ள ஸம்பந் தத்தை நீ அறியமுடியாதன்றோ; ஏனெனில், அறியும்பொருள் [ஆத்மா] அவித்யை யை அறிவதாகவே (அப்பொழுது) அமர்ந்துள்ளது. (ஒருபொருள் அறியும்பொரு ளாகவும், அறியப்படும்பொருளாகவும் ஒரேகாலத்து இருக்கமாட்டாது.—ஆ.) அறி யும்பொருளுக்கும்[ஆத்மாவிற்கும்] அவித்யைக்கும் உள்ள ஸம்பந்தத்தை (வேறு) எது அறிவதோ, (அதுவும்), அ(ச்சம்பந்தத்)தைப்பற்றிய வேறு அறிவும் நிகழமா ட்டா; ஏனெனில், வரம்பின்மையாகும். அறியும்பொருளோடு[ஆத்மாவோடு]ம் அறி யப்படும் பொருளுக்குச் சம்பந்தம் அறியப்படுமாயின், வேறோர் அறியும்பொரு[ள்]
கொள்ளவேண்டும்; பின்பு, அந்த அறியும் பொருளுக்கு[ம்]
பொருள்; மறித்தும், அந்த அறியும்பொருளுக்கும் வேறோர்
வரம்பின்மை நீக்கமுடியாததாம். இனி, அவித்யை அறியப்[படு]
வது, வேறெதுவும் அறியப்படும்பொருளாகுக; அறியப்ப[டும்]
பொருளேதான். அவ்வண்ணமே, அறியும்பொருளும் அ[றியும்பொருளேதான்;]
அறியப்படும்பொருளாகமாட்டாது. இவ்வாறுள்ளவ[...]

दोषः भवति । यथा च इदम्, अविद्यादुःखित्वाद्यैः न ज्ञातुः क्षेत्रज्ञस्य किंचित् दुष्यति ॥

तत्र स्यादेव दोषः, यत् दोषवत्क्षेत्रविज्ञातृत्वम् ; इति चेत्—न, विज्ञानस्वरूपस्य अविक्रियस्यैव विज्ञातृत्वोपचारात् ; यथा उष्णत्वोपचारेण अग्नेः तप्तिक्रियोपचारः तद्वत् । यथा च अत्र भगवता क्रियाकारकफलात्मत्वाभावः आत्मनि स्वत एव दर्शितः—अविद्याध्यारोपितः एव क्रियाकारकादिः आत्मनि उपचर्यते ; तथा तत्र तत्र 'य एनं वेत्ति हन्तारम्' 'प्रकृतेः क्रियमाणानि गुणैः कर्माणि सर्वशः' 'नादत्ते कस्यचित्पापम्' इत्यादिप्रकरणेषु भगवता दर्शितम्—तथैव च व्याख्यातम् अस्माभिः । उत्तरेषु च प्रकरणेषु दर्शयिष्यामः ॥

हन्त ! तर्हि क्रियाकारकफलात्मतायाः स्वतः अभावे, अविद्यया च अध्यारोपितत्वे, "कर्माणि अविद्वत्कर्तव्यान्येव, न विदुषाम्" इति प्राप्तम् ॥

க்ஷேத்ரஜ்ஞனுக்கு அவித்யை, துன்பமுடைமை முதலியவற்றால் ஒன்றும் கேடு இல்லை. (ஆத்மா அறியப்படும்பொருள் என்பது ஏலாதாதலின், அதனிடத்து அவித்யாஸம்பந்தத்திற்குப் பிரமாணமில்லை ; அன்றியும், ஆத்மா தன்னைத் தான் எப்பொழுதும் எல்லார்க்கும் காட்டிக்கொண்டிருக்கின்றது.—ஆ. எனவே, கயிற்றிற்கும் பாம்பிற்கும் எப்படி ஸம்பந்தமில்லையோ, அப்படிக் கண்டுகொள்க.)

(ஆக்ஷேபம்):—அப்படியாயின், (ஆத்மாவினிடத்து) இதுவேதான் இழுக்கு : அதாவது - கேடுகளையுடைய க்ஷேத்ரத்தை அறிவதென்பது ; எனில்,—

(ஸமாதாநம்) :—அப்படியன்று; ஏனெனில், அறிவுவடிவமாய் நிர்விகாரியாகவேயுள்ள (ஆத்மாவை) அறியும்பொருளென்பது - உபசாரவழக்கு. நெருப்பிற்கு சூடு மாத்திரத்தினால் எரித்தலென்னும்வினை எப்படி உபசாரவழக்கோ, அதுபோல, அவித்யையினால் ஏற்றப்பட்டவையேயான வினை காரகம் முதலியன ஆத்மாவினிடத்து உபசாரவழக்கினால் கூறப்படுகின்றன. அவ்வாறே, பகவான் ஆங்காங்கு "எவன் இதனைக் கொல்வதாக அறிகின்றானோ" (உ - கக), "பிரகிருதியின் குணங்களால் செய்யப்படுகின்ற" (ங - உஎ), "ஒருவனுடைய பாவத்தை" (ரு-கரு) என்பனமுதலிய பிரகரணங்களுள் (தமது கருத்தைக்) காட்டியுள்ளார். வினை, காரகம், பயன் என்றஇவற்றின்வடிவமாய் இருத்தலென்பது ஆத்மாவினிடத்துத் தானாகவே இல்லை எனப் பகவானாலே எப்படி இங்கே [கீதையினுள்] உணர்த்தப்பட்டிருக்கின்றதோ, அப்படித்தான் நாமும் உரைசெய்திருக்கின்றோம். (இவ்வாறே, பகவானுடைய கருத்தென்பதை) மேல்வரும் பிரகரணங்களிலும் காட்டுவோம்.

(ஆக்ஷேபம்) :—நல்லது; அப்பொழுது வினை, காரகம், பயன் என்றஇவற்றின் வடிவமாய் இருத்தல் ஆத்மாவினிடத்துத் தானாக இல்லாக்கால், (ஆத்மாவினிடத்து) அவித்யையினால் ஏற்றப்பட்டவையாயின், " கர்மங்கள் அஜ்ஞானிகட்குச் செய்ய வேண்டியவையேயன்றி ஞானிகட்கு அல்ல " என்பதாயிற்று. (ஆகவே, " அறிவோடு கர்மத்தைச் செய்யவேண்டும்" என்னும் சாஸ்திரநியாயத்திற்கு முரணாம்.)

[illegible]

[illegible]

௩. 𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌯𑌚𑍍𑌚 𑌯𑌾𑌦𑍃𑌕𑍍𑌚 𑌯𑌦𑍍𑌵𑌿𑌕𑌾𑌰𑌿 𑌯𑌤𑌶𑍍𑌚 𑌯𑌤𑍍 ।
𑌸 𑌚 𑌯𑍋 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌶𑍍𑌚 𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌸𑍇𑌨 𑌮𑍇 𑌶𑍃𑌣𑍁 ॥

[illegible]

(ஸமாதானம்) :—உண்மை; இவ்வாறே ஆயிற்று ("ஆத்மா உடம்பினும் வேறுள்ளது" என்னும் அறிவுமாத்திரமே கர்மிகட்கு வேண்டுமேயன்றி, "ஆத்மா பசிமுதலிய தன்மையற்றது" என்னும் அறிவு வேண்டியதில்லை; என்பது-சாஸ்திரத்தின் கருத்து.—ஆ.) "உடம்பையுடையவனால்" (கஅ-கக) என்றவிடத்து இதனையே எடுத்துக்காட்டுவோம்; அன்றியும், சாஸ்திரம்முழுதும் உபதேசித்த உபதேசத்தை முடிக்கும் பிரகரணத்தினன் "கௌந்தேய! சுருக்கமாகவே" (கஅ-௫௦) என்றவிடத்து விசேஷமாகக் காட்டுவோம். இங்கே மிக்கவிரிப்பதனால் போதும் [விஷயத்தை இங்கு மிகவும் விரிவாக உரைக்கவேண்டாம்] என (இவ்வளவோடு இங்ஙனம் உரையை) முடிக்கின்றேம். (உ)

இவ்வத்தியாயத்தின் விஷயத்தைச் சுருக்கமாய்க் கூறுதல்.

"இது" (கங-க, உ) என்பது முதலான ச்லோகங்களால் உபதேசிக்கப்பட்டதை, (அதாவது) க்ஷேத்ரத்தைப்பற்றிய (இந்த) அத்தியாயத்தின் விஷயத்தைச் சுருக்கிச் சொல்லுகின்ற இச்லோகமானது "அந்த க்ஷேத்ரம்" (கங-௩) என்பது முதலாக விவரிக்கப்படுகின்றது; ஏனெனில், விவரிக்கப்புகுந்த விஷயத்தைச் சுருக்கமாய் விளக்குதல் சரியென்க:

௩. அந்த க்ஷேத்ரம் எதுவுமாய், எத்தகையதுமாய், எந்த வேறுபாட்டையுடையதுமாய் உள்ளதோ; எதனின்றும் எது (உண்டாகின்றதோ); அவன் எவனுமாய், எந்த வல்லமையை யுடையவனுமாய் இருக்கின்றானோ; அதைச் சுருக்கமாய் என்னிடமிருந்து கேள்.

"இது, (அதாவது) சரீரம்" (கங-க) என எது குறிப்பிட்டுக்காட்டப்பட்டதோ, அதனை - "அந்த" என்னும் சொல்லினால் குறிக்கிறார்.—குறிப்பிட்டுணர்த்தப்பட்ட இந்த க்ஷேத்ரமானது எந்த வடிவத்தையுடையது என்பதையும், எப்படிப்பட்ட தன்தன்மைகளையுடையது என்பதையும், எந்த மாறுபாட்டையுடையது என்

𑌚 𑌯𑌤𑌃 ‘𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑍍 𑌉𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇’ 𑌇𑌤𑌿 𑌵𑌾𑌕𑍍𑌯𑌶𑍇𑌷𑌃 । 𑌸 𑌚, 𑌯𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌃 𑌸𑌃 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌃 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌾𑌃 𑌉𑌪𑌾𑌧𑌿𑌕𑍃𑌤𑌾𑌃 𑌶𑌕𑍍𑌤𑌯𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌶𑍍𑌚 । 𑌤𑌤𑍍 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌯𑌥𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌿𑌤𑌂 𑌸𑌮𑌾𑌸𑍇𑌨 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑍇𑌣 𑌮𑍇 𑌮𑌮 𑌵𑌾𑌕𑍍𑌯𑌤𑌃 𑌶𑍃𑌣𑍁, 𑌤𑌤𑍍 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌅𑌵𑌧𑌾𑌰𑌯 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௩ ॥

𑌤𑌤𑍍 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 𑌸𑍍𑌤𑍌𑌤𑌿 𑌶𑍍𑌰𑍋𑌤𑍃𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌰𑍋𑌚𑌨𑌾𑌰𑍍𑌥𑌮𑍍—

௪. 𑌋𑌷𑌿𑌭𑌿𑌰𑍍𑌬𑌹𑍁𑌧𑌾 𑌗𑍀𑌤𑌂 𑌛𑌨𑍍𑌦𑍋𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌪𑌦𑍈𑌶𑍍𑌚𑍈𑌵 𑌹𑍇𑌤𑍁𑌮𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍈𑌃 ॥

𑌋𑌷𑌿𑌭𑌿𑌃 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌬𑌹𑍁𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌂 𑌗𑍀𑌤𑌂 𑌕𑌥𑌿𑌤𑌮𑍍 । 𑌛𑌨𑍍𑌦𑍋𑌭𑌿𑌃 𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿 𑌋𑌗𑌾𑌦𑍀𑌨𑌿 𑌤𑍈𑌃 𑌛𑌨𑍍𑌦𑍋𑌭𑌿𑌃 𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌃 𑌨𑌾𑌨𑌾𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍 𑌵𑌿𑌵𑍇𑌕𑌤𑌃 𑌗𑍀𑌤𑌮𑍍 । 𑌕𑌿𑌂𑌚—𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌪𑌦𑍈𑌶𑍍𑌚 𑌏𑌵, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑍂𑌚𑌕𑌾𑌨𑌿 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌿, 𑌤𑍈𑌃 𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌇𑌤𑌿 𑌪𑌦𑌾𑌨𑌿 𑌉𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇, 𑌤𑍈𑌰𑍇𑌵 𑌚 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 ‘𑌗𑍀𑌤𑌂’ 𑌇𑌤𑌿 𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । ‘𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍇𑌵𑍋𑌪𑌾𑌸𑍀𑌤’ 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌪𑌦𑍈𑌃

பதையும் (அறிந்துகொள்). எந்தக்காரணத்தினின்றும் எந்த(க் காரியம் உண்டாகின்றது என்பதையும் தெரிந்துகொள்). "காரியம் உண்டாகின்றது" என வாக்கியத்தில் தொக்கிநிற்கின்றது.—க்ஷேத்ரஜ்ஞனைக் குறிப்பிட்டு உணர்த்தப்பெற்றவன் யார் என்பதையும், உபாதிகளாலான எந்த சக்திகளையுடையவன் என்பதையும் (தெரிந்துகொள். இவ்வாறு) கீழே விசேஷிக்கப்பட்டதான க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞருடைய உள்ளபடியான தன்மையை [அவர்களுடைய கீழ்க்கூறிய ஒவ்வொருவகையையும்பற்றிய உண்மையை]ச் சுருக்கமாக என்வார்த்தையினால் கேள்: அதனைக் கேட்டு நிர்ணயித்துக்கொள் என்றபடி.—"ச" என்னும் சொல் (ஐந்தும்) - உம்மைப்பொருளுடையன [க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களை, கீழ்க்கூறிய எல்லாவிதத்தாலும் அறியவேண்டும் என உணர்த்துகின்றன].

(௩)

க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞருடைய தன்மையைப் புகழ்தல்.

அறியவிரும்பியதாகிய க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களுடைய அந்த உள்ளபடியான தன்மையைக் கேட்பவனுக்கு மனஎழுச்சி பிறக்கும்பொருட்டுப் புகழ்கின்றார்:

௪. (க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களுடைய உள்ளபடியான தன்மையானது) ரிஷிகளால் பலவகையாகவும், பல சந்தஸ்களால் தனித்தனியாகவும் பாடப்பெற்றது; காரணமும் நிச்சயமும்பொருந்தி ப்ரஹ்மத்தைக் குறிக்கும் சொற்களாலும் (பாடப்பெற்றது).

ரிஷிகளால்-வஸிஷ்டர் முதலானோர்களால். பாடப்பெற்றது - சொல்லப்பட்டது. சந்தஸ்கள் - ரிக் முதலியன. பல - பலவிதமான. தனித்தனியாக - பிரித்துப்பிரித்து. எவற்றைக்கொண்டு ப்ரஹ்மம் அறியப்படுகின்றதோ, அவை - பதங்கள் எனப்படுகின்றன. ப்ரஹ்மத்தைக் குறிப்பிடும் வார்த்தைகளாகிய அப்பதங்களால் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களுடைய உள்ளபடியான தன்மையானது "பாடப்பெற்றது" எனத் தொடரும். —"ஆத்மா என்றே தொழவேண்டும்" (பி - க - ச - எ) என்பதுமுதலான ப்ரஹ்ம ஸூத்ர பதங்களால் [ப்ரஹ்மத்தைக் குறிப்பிடும் சொற்களால்] ஆத்மா அறியப்படு

-ஷ்டா ஜ்ஞாயதே, ஹேதுமத்பி: யுக்தியுக்தை: விநிஶ்சிதை: நி:ஸம்ஶயரூபை: நிஶ்சிதப்ரத்யயோத்பாதகை: இத்யர்த: ॥ ௪ ॥

ஸ்தூயமாநாபிமுகீபூதாய அர்ஜுநாய ஆஹ பகவாந்—

௫. மஹாபூதாந்யஹங்காரோ புத்திரவ்யக்தமேவ ச ।
இந்த்ரியாணி தஶைகம் ச பஞ்ச சேந்த்ரியகோசரா: ॥

மஹாபூதாநி மஹாந்தி ச தாநி பூதாநி, ஸர்வவிகாரவ்யாபகத்வாத் । பூதாநி ச ஸூக்ஷ்மாணி, ந ஸ்தூலாநி । ஸ்தூலாநி து இந்த்ரியகோசரஶப்தேந அபிதாஸ்யந்தே । அஹங்கார: மஹாபூதகாரணம் அஹம்ப்ரத்யயலக்ஷண: । அஹங்காரகாரணம் புத்தி: அத்யவஸாயலக்ஷணா । தத்காரணம் அவ்யக்தமேவ ச, ந வ்யக்தம் அவ்யக்தம் அவ்யாக்ருதம் ஈஶ்வரஶக்தி: 'மம மாயா துரத்யயா' இத்யுக்தம் । ஏவஶப்த: ப்ரக்ருத்யவதாரணார்த:— ஏதாவத்யேவ அஷ்டதா பிந்நா ப்ரக்ருதி: । 'ச'ஶப்த: பேதஸமுச்சயார்த: । இந்த்ரியாணி தஶ—ஶ்ரோத்ராதீநி பஞ்ச புத்த்யுத்பாதகத்வாத் புத்தீந்த்ரியாணி, வாக்பாண்யாதீநி பஞ்ச கர்மநிர்வர்தகத்வாத் கர்மேந்த்ரியாணி, தாநி தஶ—ஏகம் ச—கிம் தத்?—மந:

கின்றது. காரணம் பொருந்தி - யுக்தியோடுகூடி. நிச்சயம் பொருந்தி - ஸம்சயமற்றவையாகி : நிச்சயபுத்தியை உண்டாக்குவனவாகி என்பது பொருள். (ச)

க்ஷேத்ரமும், அதனுடைய எல்லா வடிவங்களும்.

புகழ்ச்சியினால் எதிர்முகமாகிய [ஆவலோடு கூடிய] அர்ஜுனனுக்குப் பகவான் அருளிச்செய்கிறார் :

ரு. *மஹாபூதங்களும், அகங்காரமும், புத்தியும், அவ்யக்தமும், இந்திரியங்கள் பத்தும், மற்று ஒன்றும், இந்திரியவிஷயங்கள் ஐந்தும் (க்ஷேத்ரமாம்.)*

(நிலம், நீர் முதலியன) எல்லா விகாரங்களையும், வேறுபாடுகளெல்லாவற்றையும் வியாபித்திருப்பதனால் மஹாபூதங்கள் என்க. (இங்குக் குறிக்கப்பட்ட) பூதங்கள் ஸூக்ஷ்மங்கள், ஸ்தூலங்களல்ல. ஸ்தூலங்களோ, "இந்திரிய விஷயங்கள்" என்னும் சொல்லினால் (பின்னர்க்) கூறப்படும். அகங்காரமென்பது - "நான்" என்னும் எண்ணமாயிருப்பது ; மஹாபூதங்கட்குக் காரணமானது. புத்தி என்பது - நிச்சய வடிவமாயுள்ளது ; அஹங்காரத்திற்குக் காரணமானது. அவ்யக்தம் என்பது - அதற்கு [புத்திக்கு]க் காரணமானது; வெளிப்படையாக இல்லாதது ; விகாரத்தை, வேறுபாட்டை அடையாதிருப்பது ; "என்னுடைய மாயை கடத்தற்கு அரிது" (எ - கசு) என ஈச்வரசக்தியாகக் கூறப்பெற்றது. "ஏவ" என்னும்சொல் - பிரகிருதியைத் தெளிவாகக் கூறும் பொருளது [பிரகிருதி எட்டுவிதம் என்பதற்குச் சந்தேகமில்லை என்னும் தெளிவுபொருளைத் தருவது]. இத்துணையாகவேதான் ...
வகையாகப் பிரிந்துளது. "ச" என்னும் சொல் - தங்ம
களை ஒருங்குசேர்க்கும் பொருளது. செவிமுதலிய ஐந்தும்
றனவாதலால், ஞானேந்திரியங்களாம் ; வாய், கை பு
செய்துமுடிப்பனவாதலால், கர்மேந்திரியங்களாம். (ஆக,)
ஒன்று உளது.—அது யாது? நினைப்புமுதலியவடிவமாயுள்ள

𑌏𑌕𑌾𑌦𑌶𑌂 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 । 𑌪𑌞𑍍𑌚 𑌚 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍋𑌚𑌰𑌾𑌃 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌯𑍋 𑌵𑌿𑌷𑌯𑌾𑌃 । 𑌤𑌾𑌨𑌿 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌾𑌃 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌿 𑌆𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 ॥ ௫ ॥

𑌅𑌥 𑌇𑌦𑌾𑌨𑍀𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑌾𑌃 𑌇𑌤𑌿 𑌯𑌾𑌨𑍍 𑌆𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 𑌵𑍈𑌶𑍇𑌷𑌿𑌕𑌾𑌃, 𑌤𑍇 𑌅𑌪𑌿 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 𑌏𑌵, 𑌨 𑌤𑍁 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌆𑌹 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍—

மூ. 𑌇𑌚𑍍𑌛𑌾 𑌦𑍍𑌵𑍇𑌷𑌸𑍍𑌸𑍁𑌖𑌂 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌸𑌂𑌘𑌾𑌤𑌶𑍍𑌚𑍇𑌤𑌨𑌾 𑌧𑍃𑌤𑌿𑌃 ।
𑌏𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑌾𑌸𑍇𑌨 𑌸𑌵𑌿𑌕𑌾𑌰𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥

𑌇𑌚𑍍𑌛𑌾—𑌯𑌜𑍍𑌜𑌾𑌤𑍀𑌯𑌂 𑌸𑍁𑌖𑌹𑍇𑌤𑍁𑌮𑍍 𑌅𑌰𑍍𑌥𑌮𑍍 𑌉𑌪𑌲𑌬𑍍𑌧𑌵𑌾𑌨𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂, 𑌪𑍁𑌨𑌃 𑌤𑌜𑍍𑌜𑌾𑌤𑍀𑌯𑌮𑍍 𑌉𑌪𑌲𑌭𑌮𑌾𑌨𑌃 𑌤𑌮𑌾𑌦𑌾𑌤𑍁𑌮𑍍 𑌇𑌚𑍍𑌛𑌤𑌿 𑌸𑍁𑌖𑌹𑍇𑌤𑍁𑌰𑌿𑌤𑌿; 𑌸𑌾 𑌇𑌯𑌮𑍍 𑌇𑌚𑍍𑌛𑌾 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌃, 𑌜𑍍𑌞𑍇𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑍍 । 𑌤𑌥𑌾 𑌦𑍍𑌵𑍇𑌷𑌃—𑌯𑌜𑍍𑌜𑌾𑌤𑍀𑌯𑌮𑍍 𑌅𑌰𑍍𑌥𑌂 𑌦𑍁𑌃𑌖𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑍇𑌨 𑌅𑌨𑍁𑌭𑍂𑌤𑌵𑌾𑌨𑍍, 𑌪𑍁𑌨𑌃 𑌤𑌜𑍍𑌜𑌾𑌤𑍀𑌯𑌮𑍍 𑌅𑌰𑍍𑌥𑌮𑍍 𑌉𑌪𑌲𑌭𑌮𑌾𑌨𑌃 𑌤𑌂 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿; 𑌸𑍋𑌽𑌯𑌂 𑌦𑍍𑌵𑍇𑌷𑌃 𑌜𑍍𑌞𑍇𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑍇𑌵 । 𑌤𑌥𑌾 𑌸𑍁𑌖𑌮𑍍 𑌅𑌨𑍁𑌕𑍂𑌲𑌂 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌂, 𑌜𑍍𑌞𑍇𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑍇𑌵 । 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍂𑌲𑌾𑌤𑍍𑌮𑌕𑌂; 𑌜𑍍𑌞𑍇𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌤𑌦𑌪𑌿 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑍍 । 𑌸𑌂𑌘𑌾𑌤𑌃 𑌦𑍇𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌸𑌂𑌹𑌤𑌿𑌃 । 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌅𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃, 𑌤𑌪𑍍𑌤𑍇𑌵 𑌲𑍋𑌹-

---

றுவது. ஓசைமுதலியன இந்திரிய விஷயங்கள். அந்த இவற்றை ஸாங்க்ய நூலார் இருபத்துநான்கு தத்துவங்கள் என்பர். (௫)

இனி, இப்பொழுது, வைசேஷிகர் எவற்றை ஆத்மாவினுடைய தன்மைகளென்று கூறுகிறார்களோ, அவைகளும் க்ஷேத்ரத்தினுடைய தன்மைகளேயன்றி க்ஷேத்ரஜ்ஞ(ன ஆத்மாவி)னுடைய (தன்மைகள்) அல்ல எனப் பகவான் அருளிச்செய்கிறார் :

மூ. விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம், சேர்க்கை, உணர்ச்சி, திண்மை (என்ற) இந்த க்ஷேத்ரம் (எல்லாம் அவற்றின்) விகாரங்களோடு சுருக்கமாய் எடுத்துக் கூறப்பட்டன.

(ஒருவன்) எவ்வகுப்பைச் சார்ந்தபொருளை இன்பந்தருவதாகக் கண்டானோ, அவ்வகுப்பைச் சார்ந்தபொருளை மீண்டும் காணும்பொழுது, இன்பந்தருவதென்று அப்பொருளைக் கைப்பற்ற அவாவுகின்றான்; ஆகவே, இந்த விருப்பானது அகக்கரணத்தின் தன்மையாம்; அறியப்படும்பொருளாதலால், க்ஷேத்ரமாம். அவ்வண்ணமே, வெறுப்பு(ம் என்க. ஒருவன்) எந்த இனத்தைச் சேர்ந்தபொருளைத் துன்பந்
ாக அநுபவித்தானோ, அவ்வினத்தைச் சேர்ந்த பொருளைக் காணும்போது,
றுக்கின்றான். ஆகவே, இந்த வெறுப்பு அறியப்படும்பொருளாதலால்
. இன்பமென்பது - நலமாகி, அமைதி பொருந்தி, ஸத்துவகுண
வறியப்படும்பொருளாதலால், அவ்வாறு க்ஷேத்ரமேதான்.
வாயுள்ளது. அறியப்படும் பொருளாதலால், அதுவும்
ர்பது - உடம்பு, இந்திரியங்கள் என்றவற்றின் சேர்க்கை.
றிவினுடைய [ஸ்வரூபஞானத்தினுடைய] போலித் தோற்
ய வியாபிக்கப்பெற்றதாய், பழுக்கக் காய்ந்த ஓர் உலோ

[illegible]

றைக்கட்டியிலே நெருப்பு [வெளிப்படுவது] போல, அதில் [தேகேந்திரியச் சேர்க்கையில்] வெளிப்பட்ட அகங்காரம்போக்கு: [பழுக்கக்காய்ச்சு ஓர் உலோகக்கட்டியிலே நெருப்பு வெளிப்படுவதுபோல, தேகேந்திரியச் சேர்க்கையிலே புத்திவிருத்தி வெளிப்படுகின்றது. நெருப்பு அதிலே வெளிப்பட்டதாய், அவ்வுலோகக்கட்டியையே நெருப்பென்று கொள்ளும்படி செய்கின்றது. அவ்வண்ணமே, ஆத்மஅறிவானது, ஸ்வரூபஞானமானது, புத்திவிருத்தியில் வெளிப்பட்டதாய், அப்புத்திவிருத்தியையே ஆத்மாவாக உணர்த்துகின்றது. ஆகவே, ஸ்வரூபஅறிவினுடைய வெளித்தோற்றத்தில் விபரீதிக்கப்பெற்ற அப்புத்திவிருத்திதான் உணர்ச்சியென்பது.—ஆ. இங்கே, "கொள்ளும்படி செய்கின்றது" என்பதும், "உணர்த்துகின்றது" என்பதும் உபசாரவழக்கு.] அறியப்படும் பொருளாதலால் அதுவும் [அவ்வுணர்ச்சியும்] க்ஷேத்ரமாம். அகங்காரத்தன்மையினத்திற்கும் உபலக்ஷணத்திற்காக விருப்பு முதலியவற்றைக் கொள்க; என்னெனில், கூறப்பட்டுள்ள அதனை முடிக்கிறார் [பகவான் இங்குக் கூறிவந்த க்ஷேத்ரத்தை முடிக்கின்றாராகலின், விருப்பு முதலிய சொற்கள்தாமும் இனமாகிய வெறுப்பு முதலிய அகங்காரத்தன்மையினத்தையும் உணர்த்துவதற்காகக் கூறப்பட்டன என்க.—ஆ.] இந்த க்ஷேத்ரமானது மஹத் [புத்தி] முதலான விகாரத்தோடு கூறப்பட்டது. (௬)

ஆத்மஞானத்தைக் கொடுக்கும் ஒழுக்கங்கள்.

எந்த க்ஷேத்ரவேறுபாடுகெ எல்லாவற்றினுடைய சேர்க்கையானது இச்சரீரமாகிய க்ஷேத்ரம் (௧௩-௧) எனக் கூறப்பட்டதோ, அந்த க்ஷேத்ரமானது மஹாபூதங்கள் முதலிய பிரிவுகளாக வேறுபட்டதாய் இன்னவரை விரித்துரைக்கப்பட்டது (௧௩-௫, ௬). க்ஷேத்ரஜ்ஞனுடைய சிறப்பியல்புகள் இனிக் கூறப்படும். வல்லமைபொருந்திய எந்த க்ஷேத்ரஜ்ஞனைப்பற்றிய அறிவினால் சாகாமை கிடைக்கின்றதோ, அவனைப் பகவான் "அறியவேண்டியது எதுவோ, அதனைக் கூறுவேன்" (௧௩-௧௨) என்பதுமுதலாகத் தாமே விசேஷமாய் அருளிச்செய்வர். ஆனால், இப்பொழுது, அறிவிற்கு ஸாதகமான பணிவு முதலாகிய ஒழுக்கத்தை (அருளிச்செய்கிறார்). எது இருந்தால் (ஒருவன்) அறியவேண்டியதை அறிதற்குத் தக்கோனாகவும், உரிமையுள்ளவனாகவும் ஆகிறானோ; எதனுள் கருத்தூன்றிய துறவியானவன் ஞானநிஷ்டன்

𑌉𑌚𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌤𑍍 𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌾𑌧𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌂, 𑌵𑌿𑌦𑌧𑌾𑌤𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍—

> ௭. 𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌮𑌦𑌮𑍍𑌭𑌿𑌤𑍍𑌵𑌮𑌹𑌿𑌂𑌸𑌾 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌾𑌰𑍍𑌜𑌵𑌮𑍍 ।
> 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌪𑌾𑌸𑌨𑌂 𑌶𑍌𑌚𑌂 𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ॥

𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌮𑍍—𑌮𑌾𑌨𑌿𑌨𑌃 𑌭𑌾𑌵𑌃 𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌶𑍍𑌲𑌾𑌘𑌨𑌮𑍍, 𑌤𑌦𑌭𑌾𑌵𑌃 𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌅𑌦𑌮𑍍𑌭𑌿𑌤𑍍𑌵𑌮𑍍—𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌕𑌟𑍀𑌕𑌰𑌣𑌂 𑌦𑌮𑍍𑌭𑌿𑌤𑍍𑌵𑌂, 𑌤𑌦𑌭𑌾𑌵𑌃 𑌅𑌦𑌮𑍍𑌭𑌿𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌅𑌹𑌿𑌂𑌸𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌮𑍍 𑌅𑌪𑍀𑌡𑌨𑌮𑍍 । 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌪𑌰𑌾𑌪𑌰𑌾𑌧𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌅𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 । 𑌆𑌰𑍍𑌜𑌵𑌮𑍍 𑌋𑌜𑍁𑌭𑌾𑌵𑌃 𑌅𑌵𑌕𑍍𑌰𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌪𑌾𑌸𑌨𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌨𑍋𑌪𑌦𑍇𑌷𑍍𑌟𑍁𑌃 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑍇𑌣 𑌸𑍇𑌵𑌨𑌮𑍍 । 𑌶𑍌𑌚𑌂 𑌕𑌾𑌯𑌮𑌲𑌾𑌨𑌾𑌂 𑌮𑍃𑌜𑍍𑌜𑌲𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌾𑌲𑌨𑌂; 𑌅𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌮𑌨𑌸𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌕𑍍𑌷𑌭𑌾𑌵𑌨𑌯𑌾 𑌰𑌾𑌗𑌾𑌦𑌿𑌮𑌲𑌾𑌨𑌾𑌮𑌪𑌨𑌯𑌨𑌂 𑌶𑍌𑌚𑌮𑍍 । 𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌂 𑌸𑍍𑌥𑌿𑌰𑌭𑌾𑌵𑌃, 𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑌾𑌰𑍍𑌗𑍇 𑌏𑌵 𑌕𑍃𑌤𑌾𑌧𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌉𑌪𑌕𑌾𑌰𑌕𑌤𑌯𑌾 𑌆𑌤𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌸𑌂𑌘𑌾𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑍇 𑌏𑌵 𑌨𑌿𑌰𑍋𑌧𑌃 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ॥ ௭ ॥

[ஞானவழியிலே நிலைத்தவன்] எனப்படுகின்றானே ; அந்தப் பணிவு முதலான ஒழுக்கத்தைப் பகவான் அருளிச்செய்கிறார் : (அவ்வொழுக்கம்) ஞானத்திற்குக் கருவியாதலால், ஞானம் என்னும்சொல்லால் கூறப்படுவது [அவ்வொழுக்கத்திற்கே ஞானம் என்று பெயர்].

௭. பணிவு, ஒடுக்கவணக்கம், தீங்கின்மை, பொறுமை, நேர்மை, ஆசாரியனைத்தொழுதல், பரிசுத்தம், உறுதியான தன்மை, தன்னடக்கம் (இவை - கைக்கொள்ளவேண்டிய ஒழுக்கங்களாம்).

(மானமென்பது - மறைந்த கர்வம். அதனையுடையவன் - மானி.) மானியின் தன்மை - தற்புகழ்ச்சி. அஃதின்மை - பணிவு. தனது ஒழுக்கத்தை(ப் பெருமைமுதலியவற்றிற்காக)ப் பிரஸித்தப்படுத்துதல் - டம்பமுடையவனது இயல்பு. அஃதின்மை - டம்பமில்லாமை = ஒடுக்கவணக்கம். தீங்கின்மை - பிராணிகளை ஹிம்ஸியாமை. பொறுமை - பிறர்பிசகு நேர்ந்தவழி (பிறர் தீங்கு செய்தவழி மனம்) மாறுபடாமை. நேர்மை - நேரான தன்மை, கோணலின்மை [மனத்திலுள்ளபடி வியவகரித்தல், பிறரை வஞ்சித்தலின்மை]. ஆசார்யனைத் தொழுதல் - மோக்ஷத்திற்கு உபாயங்களை உபதேசித்தருளும் ஆசார்யனை, பணிவிடை முதலியன செய்து தொழுதல். பரிசுத்தமென்பது - (வெளிப்பரிசுத்தம், உள்பரிசுத்தம் என இருவகைத்து. அவற்றுள், வெளிப்பரிசுத்தமென்பது) - உடம்புஅழுக்குக்களை மண்ணினாலும், நீரினாலும் கழுவுதல் ; உள்பரிசுத்தமா - பிரதிகூலத்தைப் பாவிப்பதனால் [உருவம்முதலிய விஷயங்களிலுள்ள தீங்குகளை உற்றுநோக்கும் நோக்கையே பயிற்சி செய்வதனால்] ஆசைமுதலிய மனஅழுக்குக்களைப் போக்குதல். உறுதியான தன்மை - மோக்ஷவழியிலேயே உறுதிசெய்துநிற்றல். தன்னடக்கம் என்பது - தனக்கு [தான் ஈடேறுதற்கு] உதவி செய்வதனால் தான் என்னும் சொல்லால் கூறப்படும் தேகேந்திரியச்சேர்க்கையை அடக்குதல் : இயற்கையாகவே எல்லாவழியிலும் செல்லுகின்ற (தேகேந்திரியங்களை) நல்வழியிலேயே தடுத்து நிறுத்துதல். (ஒருவன் தன்னை ஈடேற்றிக்கொள்ளுதற்குச் சரீரமே முதல்கருவி ; எப்படியெனில்,— சரீரத்தினால் நித்யகர்மங்களை அநுஷ்டிக்க, அதனால் புண்ய முண்டாக, அதனால் பாவம் தேய, அதனால் புத்தி திருந்த, அதனால் ஞானம் பிறக்க, அதனால் முக்திபெறுதலாம் என நோக்கிக்கொள்க).

மேலும்—

அ. இந்த்ரியார்த்தேஷு வைராக்யம் அநஹங்கார ஏவ ச ।
ஜந்மம்ருத்யுஜராவ்யாதிது:கதோஷாநுதர்சநம் ॥

இந்த்ரியார்த்தேஷு சப்தாதிஷு த்ருஷ்டாத்ருஷ்டேஷு போகேஷு விராகதா வைராக்யம் । அநஹங்கார: அஹங்காரரஹித: ஏவ ச । ஜந்மம்ருத்யுஜராவ்யாதிது:கதோஷாநுதர்சநம்— ஜந்ம ச ம்ருத்யுஶ்ச ஜரா ச வ்யாதயஶ்ச து:காநி ச தேஷு ஜந்மாதிது:காந்தேஷு ப்ரத்யேகம் தோஷாநுதர்சநம் । ஜந்மநி கர்பவாஸயோநித்வாரநிஷ்க்ரமணம் தோஷ: । தஸ்ய அநுதர்சநம் அநுஸந்தாநம் । ததா ம்ருத்யௌ தோஷாநுஸந்தாநம் । ததா ஜராயாம் ப்ரஜ்ஞாசக்திதேஜோநிவ்ருத்திரூபதோஷாநுஸந்தாநம், பரிபூததா சேதி । ததா வ்யாதிஷு சிரோரோகாதிஷு தோஷாநுஸந்தாநம் । ததா து:கேஷு ஆத்யாத்மிகாதிபௌதிகாதிதைவிகேஷு ॥

அத வா— து:காந்யேவ தோஷ: து:கதோஷ: தஸ்ய ஜந்மாதிஷு பூர்வவத் அநுஸந்தாநம்— து:கம் ஜந்ம, து:கம் ம்ருத்யு:, து:கம் ஜரா, து:கம் வ்யாதய: । து:கநிமித்தத்வாத் ஜந்மாதய: து:காநி, ந புந: ஸ்வரூபேணைவ து:காநீதி ॥

மேலும்,

அ. இந்திரிய விஷயங்களின்மேல் அவாவின்மையும், அஹங்காரமின்மையும், பிறப்பு, இறப்பு, மூப்பு, பிணி, துன்பம் என்பனவற்றிலே தீமையை உணர்தலும் (ஞானத்திற்கு அந்தரங்கமான வழிகளாம்.)

இந்திரியவிஷயங்களின்மேல் அவாவின்மை - ஓசைமுதலிய இம்மைமறுமைப் போகங்களிலே ஆசையின்மை. (தற்புகழ்ச்சி இல்லையாயினும், "நான் மேலானவன்" என்று மனத்தில் இருக்கும் செருக்கு - அஹங்காரமென்பது. அஃதின்மை) - அஹங்காரமின்மை. பிறப்பு......உணர்தல் - பிறப்புமுதலாகத் துன்பம் ஈறுகவுள்ளவற்றில் ஒவ்வொன்றிலும் தீங்கைக் காணுதல். கருப்பையினுள் வாழ்தலும், யோநியின்வழியாக வெளிவருதலும் பிறப்பிலே தீங்கு; அதனைக் காணுதல் - அதனை ஆலோசித்தல். அவ்வாறே, இறப்பில் (எல்லா மர்மஸ்தாநங்களையும் அறுத்தலாகிய) தீங்கை ஆலோசித்தல். அவ்வாறே, மூப்பில் அறிவு தடுமாறலும், வலிமை குன்றுதலும், ஒளிமழுங்குதலுமாகிய தீங்கை ஆலோசித்தல்; அலக்ஷ்யமாக எளனஞ்செய்யப்பெறுதலும் (மூப்பிலே தீங்கு) என்க. அவ்வண்ணமே, தலைவலிமுதலிய நோய்களிலே தீங்கை ஆலோசித்தல். அவ்வாறே, தன்னைப்பற்றியும், பிறவுயிர்களைப்பற்றியும், தெய்வத்தைப்பற்றியும் வரும் துன்பங்களிலே (தீங்கை ஆலோசித்தல்).

அல்லது, (வேறுவிதமாக உரைகொள்ளலாம்):—துன்பங்களே தீங்கு; அதனைப் பிறப்புமுதலியவற்றில் முன்போல ஆலோசித்தல்; பிறப்பு - துன்பமாம்: இறப்பு - துன்பமாம்: மூப்பு - துன்பமாம்: நோய்கள் - துன்பமாம். பிறப்பு முதலியன துன்பத்திற்குக் காரணமாதலால் துன்பங்களேயன்றி தமது வடிவமாகவே துன்பங்களல்ல [அவற்றின்வடிவமே துன்பவடிவமன்று] என்க.

ஏவம் ஜந்மாதிஷு து:கதோஷாநுதர்ஶநாத் தேஹேந்த்ரியவிஷயபோகேஷு வைராக்யமுபஜாயதே | தத: ப்ரத்யகாத்மநி ப்ரவ்ருத்தி: கரணாநாமாத்மதர்ஶநாய | ஏவம் ஜ்ஞாநஹேதுத்வாத் ஜ்ஞாநமுச்யதே ஜந்மாதிது:கதோஷாநுதர்ஶநம் || ௮ ||

கிஞ்ச—

௯. அஸக்திரநபிஷ்வங்க: புத்ரதாரக்ருஹாதிஷு |
நித்யம் ச ஸமசித்தத்வமிஷ்டாநிஷ்டோபபத்திஷு ||

அஸக்தி:—ஸக்தி: ஸங்கநிமித்தேஷு விஷயேஷு ப்ரீதிமாத்ரம், ததபாவ: அஸக்தி: | அநபிஷ்வங்க: அபிஷ்வங்காபாவ: | அபிஷ்வங்கோ நாம ஆஸக்திவிஶேஷ ஏவ அநந்யாத்மபாவநாலக்ஷண:; யதா அந்யஸ்மிந் ஸுகிநி து:கிநி வா "அஹமேவ ஸுகீ து:கீ ச," ஜீவதி ம்ருதே வா "அஹமேவ ஜீவாமி மரிஷ்யாமி ச" இதி | க்வ இதி ஆஹ—புத்ரதாரக்ருஹாதிஷு புத்ரேஷு தாரேஷு க்ருஹேஷு—'ஆதி'க்ரஹணாத் அந்யேஷ்வபி அத்யந்தேஷ்டேஷு தாஸவர்காதிஷு | தச்சோபயம் ஜ்ஞாநார்தத்வாத் ஜ்ஞாநமுச்யதே | நித்யம் ச ஸமசித்தத்வம் துல்யசித்ததா—

இவ்வாறாக, பிறப்புமுதலியவற்றிலே துன்பமென்னுந்தீங்கை உணர்வதனால் தேகம், இந்திரியங்கள், விஷயங்கள் இவற்றினுடைய போகங்களின்மேல் அவாவின்மை பிறக்கின்றது. அதனால் இந்திரியங்கள் ஆத்மாவைக் காணும்பொருட்டு உள்ளேயுள்ள ஆத்மாவை நோக்கிச் செல்லுதல் (கூடும்). இவ்வாறாக, பிறப்புமுதலியவற்றில் துன்பமென்னுந்தீங்கை உணர்தல் ஞானத்தைத்தருவதாதலால் ஞானம் எனப்படுகின்றது. (௮)

அன்றியும்,

௯. மக்கள் மனைவி வீடு முதலானவர்மீது பற்றின்மையும், அபிமானமின்மையும், வேண்டியனவும் வேண்டாதனவும் வருவதிலே எப்பொழுதும் ஒரேமனமுள்ள தன்மையும் (ஞானத்திற்கு அந்தரங்கமான கருவிகளாம்).

பற்று என்பது - பற்றுக்குக் காரணமான பொருள்களிலே பிரியம்மாத்திரம். அஃதின்மை - பற்றின்மை. அபிமானமென்பது - வேறாகாத தன்னைப் பாவித்தலாகிய [பற்றுவைக்கப்பட்ட பொருளும் தானும் ஒன்றெனப்பாவித்தலாகிய] மிகுதியான ஓர் வகைப் பற்றேதான். உதாரணமாக, வேறொருவன் இன்பத்தையேனும் துன்பத்தையேனும் உடையவனாயிருக்குமளவிலே, "நானே இன்பத்தையுடையவன், நானே துன்பத்தையுடையவன்" (என்பதையும், வேறொருவன்) வாழுமளவிலாயினும், சாகுமளவிலாயினும், "நானே வாழ்கின்றேன், நானே சாகின்றேன்" என்பதை(யும் காண்க, இத்தகைய பற்றின்மை - அபிமானமின்மை).—எங்கே என்பது? —கூறுகிறார்: —மக்கள், மனைவி, வீடு முதலானோர்மீது. "முதலானவர்" என்றதனால் - மிகவும் பிரியமான மற்றைய வேலைக்காரஜனம் முதலானோரிடத்தும் என்க. அவையிரண்டும் [பற்றின்மையும், அபிமானமின்மையும்] ஞானத்திற்குப் பயன்படுதலால் ஞானம் எனப்படுகின்றன. எப்பொழுதும் ஒரேமனமுள்ள தன்மை எதிலே என்பது? —வேண்டியனவும் வேண்

[illegible] ||௯||

கிஞ்ச—

௧0. [illegible] |

[illegible] ||

[illegible]

பாதனையும் வருவதிலே. வேண்டியவை வருவதிலே மகிழ்வதில்லை; வேண்டாதவை வருவதிலேயும் மனங்கொதிப்பதில்லை. ஆதலால், எப்பொழுதும் இந்த ஓரேமனமுள்ள தன்மை ஞான(ஸாதந)மாம். (௯)

இன்னும்,

௧0. அநந்யயோகத்தினால் என்னிடத்துப் பிறழாதபக்தியும், தனிமையான இடத்தைச் சார்பவனாதலும், ஜனக்கூட்டத்தில் அருவருப்பும் (ஞானத்திற்கு ஸாதனங்களாம்).

என்னிடத்து - ஈச்வரனிடத்து. அநந்ய யோகமென்பது - வேறுநினைப்பில்லாமை, ஓரேஸமாதி. (அதாவது,) "பகவான் வாஸுதேவனைக்காட்டிலும் வேறொருவன் இல்லை; ஆதலால், அவனேதான் நமக்கு அடைக்கலம்" என இவ்வாறு நிச்சயமாயுள்ள பிறழாதபுத்தி. அதனால் (பகவானைத்) தொழுதல் - பிறழாத பக்தி. அதுவும் ஞான (ஸாதந)மாம். இயற்கையினாலாயினும், (மெழுகிப்பெருக்கிச்) சுத்திசெய்வதனாலாயினும் அசுத்தம்முதலியன இல்லாததும், பாம்பு திருடன் புலி இவர்களினின்றும் பயம்முதலியன இல்லாததுமான வநம், ஆற்றுமணல், தேவாலயம் முதலியது - தனிமையான இடம். அதனைச் சார்பவனாதல் - அதனைச் சாருந்தன்மையனாதல். தனி[illegible] இடத்திலன்றோ மனம் தெளிகின்றது; ஆகவே, ஆத்மாமுதலியவைத் [illegible]
தனிமையிலே நன்கு உண்டாகின்றது. ஆதலால், தனிஇடத்தைச் [illegible]
ணம் எனப்படுகின்றது. ஜனக்கூட்டமென்பது - (இங்கே,) சீர் [illegible]
தவராய்ச் சிறியோரான [ஒழுங்கில்லாத] ஸாமான்னிய ஜனங்களி[illegible]

ஸம்ஸத்; ந ஸம்ஸ்காரவதாம் விநீதாநாம் ஸம்ஸத், தஸ்யா: ஜ்ஞாநோபகாரகத்வாத் । அத: ப்ராக்ருதஜநஸம்ஸதி அரதி: ஜ்ஞாநாயோபகாரகத்வாத் ஜ்ஞாநம் ॥ ௧௦ ॥

கிஞ்ச—

> ௧௧. அத்⁴யாத்மஜ்ஞாநநித்யத்வம் தத்த்வஜ்ஞாநார்த²த³ர்ஶநம் ।
> ஏதஜ்ஜ்ஞாநமிதி ப்ரோக்தமஜ்ஞாநம் யத³தோ(அ)ந்யதா² ॥

அத்⁴யாத்மஜ்ஞாநநித்யத்வம் ஆத்மாதி³விஷயம் ஜ்ஞாநம் அத்⁴யாத்மஜ்ஞாநம், தஸ்மிந் நித்யபா⁴வ: நித்யத்வம் । அமாநித்வாதீ³நாம் ஜ்ஞாநஸாத⁴நாநாம் பா⁴வநாபரிபாகநிமித்தம் தத்த்வஜ்ஞாநம், தஸ்ய அர்த²: மோக்ஷ: ஸம்ஸாரோபரம: ; தஸ்ய ஆலோசநம் தத்த்வஜ்ஞாநார்த²த³ர்ஶநம் ; தத்த்வஜ்ஞாநப²லாலோசநே ஹி தத்ஸாத⁴நாநுஷ்டா²நே ப்ரவ்ருத்தி: ஸ்யாதி³தி । ஏதத் அமாநித்வாதி³ தத்த்வஜ்ஞாநார்த²த³ர்ஶநபர்யந்தம் உக்தம் ஜ்ஞாநம் இதி ப்ரோக்தம், ஜ்ஞாநார்த²த்வாத் । அஜ்ஞாநம் யத் அத: யதோ²க்தாத் அந்யதா² விபர்யயேண—மாநித்வம் த³ம்பி⁴த்வம் ஹிம்ஸா அக்ஷாந்தி: அநார்ஜவம் இத்யாதி³ அஜ்ஞாநம் விஜ்ஞேயம் பரிஹரணாய, ஸம்ஸாரஸ்ய ப்ரவ்ருத்திகாரணத்வாத் இதி ॥ ௧௧ ॥

யதோ²க்தேந ஜ்ஞாநேந ஜ்ஞாதவ்யம் கிம் ? இத்யாகாங்க்ஷாயாமாஹ—'ஜ்ஞேயம் யத்தத்' இத்யாதி³நா—

திய அறிவுடையவராய் ஒழுங்குள்ளவரது கூட்டமன்று ; ஏனெனில், (அது) ஞானத்திற்கு உதவிசெய்யுமென்க. ஆகவே, ஸாமான்னிய ஜனக்கூட்டத்தில் அருவருப்பானது ஞானத்திற்குப் பயன்படுதலால் ஞான(ஸாதந)மாம். (௧௦)

மற்றும்,

௧௧. ஆத்மாவைப்பற்றிய அறிவிலே எப்பொழுதும் நிற்றலும், உண்மையறிவின் பயனை நோக்குதலும் (ஞானத்திற்கு ஸாதநமாம்). இது ஞானமென்று கூறப்பட்டது. இதனினும் வேருக எது உள்ளதோ, (அது) அஜ்ஞானமாம்.

ஆத்மாவைப்பற்றிய அறிவிலே எப்பொழுதும் நிற்றல் - ஆத்மாமுதலியவற்றைப் பற்றிய அறிவிலே எப்பொழுதும் நிலைத்துநிற்றல். உண்மையறிவானது, பணிவு (௧௩-௭) முதலான ஞானஸாதநங்களுடைய பயிற்சியின் பரிபக்குவத்தினுல் வருவது. அதனுடைய பயன் - மோக்ஷம், ஸம்ஸாரம் ஒழிதல் ; அதனை ஆலோசித்தல் - உண்மையறிவின் பயனை நோக்குதல் என்பது. உண்மையறிவின் பயனை ஆலோசிக்குமளவிலன்றோ அதன் ஸாதநங்களை அநுஷ்டிப்பதில் தலைப்படுதல் கூடும் ; ஆகவே, (உண்மையறிவின் பயனை ஆலோசித்தல் பயனுடைத்தென்க). "பணிவு" முதலாக "உண்மையறிவின்பயனைநோக்குதல்" ஈருகக் கூறப்பெற்ற இது ஞானத்திற்குப் பயன்படுதலால் ஞானம் எனப்பட்டது. கீழ்க்கூறிய இதற்கு மாருன செருக்குடைமை, டம்பமுடைமை, ஹிம்ஸை, பொறுமையின்மை, நேர்மையின்மை முதலியன ஸம்ஸாரம் உண்டாதற்குக் காரணமாதலால், (அவற்றை) நீக்கவேண்டி (அவை) அஜ்ஞானமென்று அறிக என்பதாம். (௧௧)

அறியவேண்டியபொருள் ப்ரஹ்மம்.

கீழ்க்கூறிய ஞானத்தினுல் [அறிவினுல்] அறியவேண்டியபொருள் யாது ?—என வேண்டிநிற்குமிடத்து "அறியவேண்டியபொருள்" (௧௩-௧௨) என்பது முதலாக (அதனைக்) கூறுகிருர் :

[illegible]

கஉ. ஜ்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி யஜ்ஜ்ஞாத்வாऽம்ருதமஶ்நுதே |
அநாதிமத் பரம் ப்ரஹ்ம ந ஸத்தந்நாஸதுச்யதே ||

[illegible]

(அர்த்தம்) :— ஆதலின், பணிவுமுதலியவை யாவும் ஞானங்களாம் [ஞானவகையான வைகளாம்]. அவற்றுள் அறியவேண்டியபொருள் அறியப்படுவதில்லை. பணிவு முதலியவை ஒருபொருளை விளைவிப்பதாக [அறிவதாக]க் காணப்படவில்லை. அன்றியும், ... அறிவு ... அந்த அறியவேண்டியபொருளை ... [அந்த அறிவுதான்] அறிவதாகக் காணப்படவில்லை. ஒன்றைப்பற்றிய அறிவினுல் வேறென்று அறியப்படமாட்டாது; உதாரணமாக, குடத்தைப்பற்றிய அறிவினுல் ... (அறியப்படமாட்டாது).

(ஸமாதானம்) :— இது குற்றமன்று; ஏனெனில், (பணிவுமுதலானவை) ஞானத்துக் காரணமாதலால், ஞானம் எனப்படுகின்றன என்று அறியுங்களாம்: (அவை) ஞானத்திற்குத் துணைக்காரணமாதலால் (ஞானம் என்க) :

கஉ. அறியவேண்டியபொருள் எதுவோ, (ஒருவன்) எதனை அறிந்து சாகாமையை அடைகின்றனோ, அதனை விரித்துரைப்பேன். பரப்ரஹ்மமானது ஆதியில்லாதது; அது ஸத் [உள்ளது] எனப்படுவதில்லை, அஸத் [இல்லது] எனப்படுவதில்லை.

அறியவேண்டியபொருள் எதுவோ, அதனை உள்ளபடி தெளிவாக உரைப்பேன்.— கேட்பவனுக்கு ருசியை உண்டாக்கி, அவனைக் கேட்கும்படி செய்தற் பொருட்டு அதற்குப் பயன் இன்னதென்று அருளிச்செய்கிறார் :— அறியவேண்டிய பொருளை அறிந்து (ஒருவன்) சாகாமையைப் பெறுகிறான் : மீளவும் இறப்பதில்லை என்பது பொருள். ஆதியில்லாதது.— அது யாது ?— யாவற்றினும் மேம்பட்ட ப்ரஹ்மம், "அறியவேண்டியபொருள்" என்று ப்ரகிருதத்தில் பேசப்படுவது.

அர்த்தத்தை அன்மொழித்தொகை உணர்த்த, மதுப் என்னும்ப்ரத்யயம் அர்த்தமின்றி நிற்றலாகிய குற்றம் வரும் என்று, இதில் சிலர் "அநாதி," "மத்பரம்" எனப் பதம் பிரிக்கிறார்கள். "(ப்ரஹ்மம்) முதலில்லாதது; நான் அதனுடைய வாஸுதேவ னென்னும் பராசக்தி" என அர்த்தவேறுபாட்டையும் காட்டுகிறார்கள்.

ஸத்யம் ஏவம் ந வாசாரம்பணம் ஸ்யாத், அர்த்த: சேத் ஸம்பவதி | ந த்வர்த்த: ஸம்பவதி, ப்ரஹ்மண: ஸர்வவிசேஷப்ரதிஷேதேநைவ விஜிஜ்ஞாபயிஷிதத்வாத் 'ந ஸத்தந்நாஸதுச்யதே' இதி | விசிஷ்டசக்திமத்த்வப்ரதர்சநம், விசேஷப்ரதிஷேதச்ச இதி விப்ரதிஷித்தம் | தஸ்மாத் மதுப: பஹுவ்ரீஹிணா ஸமாநார்த்தத்வேऽபி ப்ரயோக: ச்லோகபூரணார்த்த: ||

அம்ருதத்வபலம் ஜ்ஞேயம் மயா உச்யத இதி ப்ரரோசநேந அபிமுகீக்ருத்ய ஆஹ — ந ஸத் தத் ஜ்ஞேயம் உச்யதே, ந அபி அஸத் தத் உச்யதே ||

நநு மஹதா கண்டரவேண உத்குஷ்ய 'ஜ்ஞேயம் ப்ரவக்ஷ்யாமி' இதி, அநநுரூபம் உக்தம் 'ந ஸத்தந்நாஸதுச்யதே' இதி ||

ந, அநுரூபமேவ உக்தம் | கதம்? — ஸர்வாஸு ஹி உபநிஷத்ஸு ஜ்ஞேயம் ப்ரஹ்ம 'நேதி நேதி' 'அஸ்தூலம் அநணு' இத்யாதிவிசேஷப்ரதிஷேதேநைவ நிர்திச்யதே "ந இதம் தத்" இதி, வாச: அகோசரத்வாத் ||

(ஆனால், நாம் கூறுவோம்): —உண்மை; அர்த்தம் கூடுமாயின், கூறினது கூறல் இவ்வாறாக ஆகாது. மற்று, அர்த்தம் அமையாது; "அது ஸத் எனப்படுவதில்லை, அஸத் எனப்படுவதில்லை" என எல்லாச் சிறப்பியல்புகளையும் மறுத்தே ப்ரஹ்மத்தை விவரமாயுணர்த்தப்புகுந்தமையின் என்க. (தனக்கென்றுரிய ஓர்வகைச்) சிறப்புச்சக்தியையுடையதாக ப்ரஹ்மத்தை உணர்த்துதலும், சிறப்பியல்புகளை மறுத்தலும் என்பவை (தம்முள்)விரோதமாம். ஆகவே, அன்மொழித்தொகையொடு மதுப் என்னும்விகுதிக்கு அர்த்தம் ஸமமாக இருந்தாலும், (அவ்விகுதியை) வழங்கினது -சுலோகத்தை நிரப்புதற்கானதாம் என்க.

ப்ரஹ்மம் சொல்லிற்கும், நினைப்பிற்கும் எட்டாதது.

சாகாமை என்னும் பயனையுடைய அறியவேண்டியபொருளை யான் கூறுகின்றேன் என்று (கேட்பவனுக்கு) ருசியை உண்டாக்கி, ஆவலோடு கேட்கும்படிசெய்து சொல்லுகிறார்:—அந்த அறியவேண்டியபொருள் ஸத் எனப்படுவதில்லை, அது அஸத் எனப்படுவதும் இல்லை.

(ஆக்ஷேபம்) :—அப்படியானால், "அறியவேண்டியபொருளைத் தெளிவாகக் கூறுவேன்" எனத் தொண்டையினின்றும் பெரிய சத்தமாக உரத்துக் கத்தி, பின்பு, "அது ஸத் எனப்படுவதில்லை, அஸத் எனப்படுவதில்லை" எனக்கூறுவது ஏற்கத்தக்கதன்று.

(ஸமாதானம்) :—அப்படியன்று; ஏற்கத்தக்கதேதான் கூறப்பட்டது.—எப்படி? —அறியவேண்டியபொருளாகிய ப்ரஹ்மமானது எல்லா உபநிஷத்துக்களிலும் "இப்படியன்று, இப்படியன்று" (பி - உ - ௩ - ௬), "ஸ்தூலமன்று, அணு அன்று" (பி - ௩ - ௮ - ௮)என இவைபோன்ற சிறப்பியல்புகளை மறுத்தே,"அது இது அன்று" எனக்குறிப்பிட்டுக்காட்டிஉணர்த்தப்படுகின்றது ; சொல்லுக்கு எட்டாததலின்.

க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞவிபாகயோகம்.

ननु तदस्ति, यद्वस्तु 'अस्ति'शब्देन उच्यते । अथ अस्ति-शब्देन नोच्यते, नास्ति तत् ज्ञेयम् । विप्रतिषिद्धं च—"ज्ञेयं तत्" "अस्तिशब्देन नोच्यते" इति च ॥

न तावत् नास्ति, नास्तिबुद्ध्यविषयत्वात् ॥

ननु सर्वाः बुद्धयः अस्तिनास्तिबुद्ध्यनुगताः एव । तत्र एवं सति ज्ञेयमपि अस्तिबुद्ध्यनुगतप्रत्ययविषयं वा स्यात्, नास्तिबुद्ध्यनुगतप्रत्ययविषयं वा ॥

न, अतीन्द्रियत्वेन उभयबुद्ध्यनुगतप्रत्ययाविषयत्वात् । यद्धि इन्द्रियगम्यं वस्तु घटादिकम्, तत् अस्तिबुद्ध्यनुगतप्रत्ययविषयं वा स्यात्, नास्तिबुद्ध्यनुगतप्रत्ययविषयं वा । इदं तु ज्ञेयम् अतीन्द्रियत्वेन शब्दैकप्रमाणगम्यत्वात् न घटादिवत् उभयबुद्ध्यनुगतप्रत्ययविषयम्, अतः 'न सत्तन्नासत्' इति उच्यते ॥

यत्तु उक्तम्—विरुद्धम् उच्यते, 'ज्ञेयं तत्' 'न सत्तन्नासदुच्यते' इति—न विरुद्धम्, 'अन्यदेव तद्विदितादथो अविदितादधि' इति श्रुतेः ॥

(ஆக்ஷேபம்):—ஆயின், எப்பொருள் 'உள்ளது' என்னுஞ்சொல்லால் சொல்லப்படுகின்றதோ, அது உள்ளது; அறியவேண்டியபொருளோ 'உள்ளது' என்னுஞ்சொல்லால் சொல்லமுடியாததாயின், அது இல்லை. அன்றியும், "அது அறியவேண்டிய பொருள்" என்பதும், "(அதனை) உள்ளது என்னுஞ்சொல்லால் சொல்லமுடியாது" என்பதும் (தம்முள்) விரோதமாம்.

(ஸமாதானம்):—இல்லையென்பதில்லை; இல்லையென்னுமுணர்வினால் குறிக்கப்படாமையின்.

(ஆக்ஷேபம்):—ஆயின், எல்லா உணர்ச்சிகளும் "உள்ளது" "இல்லை" என்னும் உணர்ச்சிகளைத் தொடர்ந்தனவேயாகும். அவ்வாறுள்ளவளவில், அறியவேண்டியபொருளும் - உள்ளதென்னும் உணர்வைத் தழுவிய உணர்வினால் குறிக்கப்படுவதாதல், இல்லையென்னும் உணர்வைத் தழுவிய உணர்வினால் குறிக்கப்படுவதாதல் கூடும்.

(ஸமாதானம்):—அப்படியன்று; (அப்பொருள்) இந்திரியங்கட்கு எட்டாமையினால், (உள்ளது, இல்லையென்னும்) இரண்டுணர்வுகளையும் தழுவிய உணர்வினால் குறிக்கப்படாமையின். இந்திரியங்களால் உணரக்கூடிய குடம் முதலிய பொருள் எதுவோ, அதுவன்றே உள்ளதென்னும் உணர்வைத் தழுவிய உணர்வினால் குறிக்கப்படுவதாதல், இல்லையென்னுமுணர்வைத் தழுவிய உணர்வினால் குறிக்கப்படுவதாதல் கூடும். அறியவேண்டியபொருளாகிய இதுவோ இந்திரியங்கட்கு எட்டாமையினால் சப்த[சுருதிப்]பிரமாணமொன்றினாலேயே அறியத்தக்கதாம்; ஆகவே, குடம் முதலியனபோல, (உள்ளது, இல்லையென்னும்) இரண்டுணர்வுகளையுந் தழுவிய உணர்வினால் குறிக்கப்படுவதில்லை; எனவே, "அது உள்ளது அன்று, இல்லது அன்று" எனக் கூறப்படுகின்றது.

இனி, "அது அறியவேண்டிய பொருள்" எனவும், "அது உள்ளது அன்று இல்லது அன்று" எனவும் விரோதமாகக் கூறப்படுகின்றது (எனப்பிரதிவாதி) கூறியதற்கு (மறுமொழி வருமாறு):—விரோதமில்லை; ஏனெனில், "அது - அறியப்பட்டபொருளினும் வேறுதான்; அன்றியும், அறியப்படாத பொருளுக்கும் அப்பால் உள்ளது" (கே - உ - ௩) எனச் சுருதி (கூறுகின்றது).

ஶ்ருதிரபி விருத்தார்தா இதி சேத் — யதா யஜ்ஞாய ஶாலாமாரப்ய 'யத்யமுஷ்மிந் லோகேऽஸ்தி வா ந வேதி' இத்யேவமாதி இதி சேத் —

ந; விதிதாவிதிதாப்யாமந்யத் ஶ்ருதே: அவஶ்யவிஜ்ஞேயார்தப்ரதிபாதநபரத்வாத்। 'யத்யமுஷ்மிந்' இத்யாதி து விதிஶேஷ: அர்தவாத: ॥

உபபத்தேஶ்ச ஸதஸதாதிஶப்தை: ப்ரஹ்ம நோச்யத இதி। ஸர்வோ ஹி ஶப்த: அர்தப்ரகாஶநாய ப்ரயுக்த:, ஶ்ரூயமாணஶ்ச ஶ்ரோத்ருபி:, ஜாதிக்ரியாகுணஸம்பந்தத்வாரேண ஸங்கேதக்ரஹணஸவ்யபேக்ஷ: அர்தம் ப்ரத்யாயயதி; நாந்யதா, அத்ருஷ்டத்வாத்। தத்யதா — 'கௌ:' 'அஶ்வ:' இதி வா ஜாதித:, 'பசதி' 'படதி' இதி வா க்ரியாத:, 'ஶுக்ல:' 'க்ருஷ்ண:' இதி வா குணத:, 'தநீ' 'கோமாந்' இதி வா ஸம்பந்தத:। ந து ப்ரஹ்ம ஜாதிமத், அத: ந ஸதாதிஶப்தவாச்யம்। நாபி குணவத் — யேந குணஶப்தேந உச்யேத — நிர்குணத்வாத்।

(ஆக்ஷேபம்):—சுருதியும் விரோதமான அர்த்தமுடையதாம் எனில்,—உதாரணமாக, யாகத்திற்கு மண்டபத்தை அமைத்தபின்பு, "மறுமையிலே (நன்மை) உண்டோ இல்லையோ என்பதை (எவன் அறிகின்றான்?)" (தை - ஸம் - சு - க - க) என(ச் சந்தேகிக்கும் சுருதியை)ப்போல எனின்,—(ஒத்துக்கொண்ட பிரமாணத்திற்கு விரோதமான சுருதியை ஏற்றுக்கொள்ளக்கூடாது எனின்,—)

(ஸமாதானம்):—அப்படியன்று; "(ப்ரஹ்மம்) - அறியப்பட்டதினும், அறியப்படாததினும் வேறு" என்னும்சுருதியானது, அவச்யம் அறியவேண்டிய பொருளை அறிவிக்கநிற்கின்றமையின். ("ப்ரஹ்மமானது உள்ளேயுள்ள ஆத்மாதான்" என்னும் உண்மையை அந்தச்சுருதி உணர்த்துவதனால் பிரமாணமாம்; ஆகவே, அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும்.—ஆ.) ஆனால், "மறுமையிலே" (தை - ஸம் - சு - க - க) என்று தொடங்கும் (சுருதியானது) விதியின் சேஷமான அர்த்தவாதமாம். (ஆகவே, இதனை உதாஹரித்தல் சரியன்று; அர்த்தவாதமாதலால்.—ஆ. சேஷம், அர்த்தவாதம் என்றவற்றின் விவரங்களை 21, 59 - ஆம் பக்கங்களில் காண்க.)

மேலும், ப்ரஹ்மமானது 'உள்ளது' முதலான சொற்களால் கூறப்படுவதில்லை என்பது யுக்தியினாலும்(தெரியவருகின்றது). ஒவ்வொருசொல்லும் ஒருபொருளைக் காட்டுவதற்காக வழங்கப்பெற்று, கேட்பவர்களால் கேட்கப்படும்பொழுது, ஜாதி தொழில் குணம் ஸம்பந்தம் என்றவற்றின் வழியாகத் தொடர்பின் பற்றை வேண்டிநிற்பதாய் [ஜாதி, தொழில் முதலியவற்றைத் தழுவியதாய்] ஒருபொருளைக் காட்டுகின்றது. (அது அப்பொருளைக் காட்டுவது) வேறுவிதமாக அன்று; காணப்படாமையின். அது வருமாறு:—'ஆ' 'குதிரை' என்பவை - ஜாதியினாலும், 'சமைப்பவன்' 'படிப்பிப்பவன்' என்பவை - தொழிலினாலும், 'வெண்மை' 'கருமை' என்பவை - குணத்தினாலும், 'பணமுள்ளவன்' 'பசுக்களுள்ளவன்' என்பவை - (பணம், பசுக்கள் என்றவற்றின்)ஸம்பந்தத்தினாலும்(அமைந்தசொற்களாம். ஆகவே, குதிரை முதலியன 'குதிரை உள்ளது' 'குதிரை இல்லை' என 'உள்ளது' முதலான சொற்களால் ஜாதிமுதலியவற்றைக்கொண்டு குறிக்கப்படுகின்றன.) ஆனால், ப்ரஹ்மத்திற்கு ஜாதி இல்லை; ஆதலால்,

நாபி க்ரியாஶப்³த³வாச்யம், நிஷ்க்ரியத்வாத் 'நிஷ்கலம் நிஷ்க்ரியம் ஶாந்தம்' இதி ஶ்ருதே:| ந ச ஸம்ப³ந்தீ⁴, ஏகத்வாத் | அத்³வயத்வாத் அவிஷயத்வாத் ஆத்மத்வாச்ச ந கேநசித் ஶப்³தே³ந உச்யத இதி யுக்தம்; 'யதோ வாசோ நிவர்தந்தே' இத்யாதி³ஶ்ருதி-ப்⁴யஶ்ச || கஉ ||

ஶப்³த³ப்ரவ்ருத்த்யவிஷயத்வாத் அஸத்த்வாஶங்காயாம் ஜ்ஞேயஸ்ய ஸர்வப்ராணி-கரணோபாதி⁴த்³வாரேண தத³ஸ்தித்வம் ப்ரதிபாத³யந் ததா³ஶங்காநிவ்ருத்த்யர்த²ம் ஆஹ—

கங. ஸர்வத: பாணிபாத³ம் தத் ஸர்வதோऽக்ஷிஶிரோமுக²ம் |

'உள்ளது' முதலிய சொற்களால் கூறத்தக்கதில்லை: குணசப்தத்தினால் [பண்புச்சொல்லினால்] கூறப்படும்படியான குணமும் இல்லை; நிர்க்குணமாதலின்: தொழிலைப்பற்றிய சொல்லினாலும் குறிப்பிக்கப்படுவதில்லை; தொழிலில்லாததாதலின்; "உறுப்பில்லாதது, வினையில்லாதது, சாந்தமானது" (ச்வே - சா - கக)என்னும் சுருதியினாலென்க. அன்றியும், (ப்ரஹ்மத்திற்கு எதனோடும்) தொடர்பு இல்லை; ஏனெனில், (அது) ஒன்றாயுள்ளது: இரண்டாவதில்லாதது: (இந்திரியங்கட்கு) எட்டாதது: ஆத்மாவாயிருப்பது [தான் எனப்படுவது]. (ஆகவே, அது) ஒருசொல்லினாலும் கூறப்படுவதில்லையென்பது நேரென்க. "எதனின்றும் [எதனை அணுகமுடியாது] சொற்கள் திரும்புகின்றனவோ" (தை-உப -உ-சா-க)என்பது முதலிய சுருதிகளாலும் (அது உணர்த்தப்படுகின்றது). (கஉ)

எல்லா முயற்சிக்கும் ப்ரஹ்மம் மூலகாரணம்.

அறியவேண்டியபொருளான(ப்ரஹ்மமான)து உள்ளதென்னும் சொல்லுக்காவது எண்ணத்திற்காவது எட்டாமையினால் இல்லையென்னும் சங்கை வர, எல்லாப் பிராணிகளுடைய இந்திரியங்களாகிய உபாதிகளைக்கொண்டு அது [ப்ரஹ்மம்] உள்ளதென்பதை நிரூபிப்பவராய் அச்சங்கையை நீக்கும்பொருட்டுக் கூறுகிறார்: [ஒருவிதமான தன்மையும் இல்லாததாய் சொல்லிற்கும் மனத்திற்கும் எட்டாததோர் பொருளைக்காணவில்லை; மற்று, இதற்குமாறானதை, ஏதாவதொரு தன்மையைப்பெற்றதாய் சொல்லிற்கும் மனத்திற்கும் எட்டுகின்ற பொருளை, த்வைதத்தைக் காண்கிறோம். ஆகவே, ப்ரஹ்மமானது வெறும் பாழாம் என்னும் சங்கை வர, ஸமாதானம் வருமாறு:—அது பாழன்று; ஏனெனில், அது - (1) உள்ளேயுள்ள ஆத்மாவாயுள்ளது: (2) இந்திரியங்களுடைய முயற்சிக்கும் பிறவற்றிற்கும் காரணமானது: (3) கற்பிக்கப்பட்ட த்வைதம் விளங்குதற்கு அடி-ஆதாரமாயுள்ளது: (4) பிரபஞ்சத்தை ஆளுவது; ஆகவே, அது உள்ளதென்க. இனி "வண்டிமுதலியன தாமே செல்லமாட்டா; அவைபோல, ஜடப்பொருளான உடம்பு முதலியவற்றுள் உணர்வு இல்லாவிட்டால், அவை தாமாகவே செல்லமாட்டா, முயலமாட்டா, ஒருதொழிலைச்செய்யமாட்டா; ஆகவே, அவற்றுள் சேதநப் பொருள் இருக்கவேண்டும்" என்னும் அநுமானத்தால் (1) "ப்ரஹ்மம் உள்ளேயுள்ள ஆத்மாவாயுள்ளது" என்பதை முதலில் அருளிச்செய்கிறார்:—ஆ.]

கங. அது எங்கும் கை கால்களையுடையது: எங்கும் கண்களையும், தலைகளை

ஸர்வத꞉ஶ்ருதிமல்லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி ||

ஸர்வத꞉ பாணய꞉ பாதாஶ்ச அஸ்ய இதி ஸர்வத꞉பாணிபாதம் தத் ஜ்ஞேயம் | ஸர்வப்ராணிகரணோபாதிபி꞉ க்ஷேத்ரஜ்ஞஸ்ய அஸ்தித்வம் விபாவ்யதே | க்ஷேத்ரஜ்ஞஶ்ச க்ஷேத்ரோபாதித꞉ உச்யதே | க்ஷேத்ரம் ச பாணிபாதாதிபி꞉ அநேகதா பிந்நம் | க்ஷேத்ரோபாதிபேதக்ருதம் ச விஶேஷஜாதம் மித்யைவ க்ஷேத்ரஜ்ஞஸ்ய, இதி தத³பநயேந ஜ்ஞேயத்வம் உக்தம் 'ந ஸத்தந்நாஸது³ச்யதே' இதி உபாதிக்ருதம் மித்யாரூபமபி அஸ்தித்வாதி⁴க³மாய ஜ்ஞேயஸ்ய த⁴ர்மவத் பரிகல்ப்ய உச்யதே 'ஸர்வத꞉பாணிபாதம்' இத்யாதி | ததா² ஹி ஸம்ப்ரதா³யவிதா³ம் வசநம்— 'அத்⁴யாரோபாபவாதா³ப்⁴யாம் நிஷ்ப்ரபஞ்சம் ப்ரபஞ்ச்யதே |' இதி | ஸர்வத்ர ஸர்வதே³ஹாவயவத்வேந க³ம்யமாநா꞉ பாணிபாதா³த³ய꞉ ஜ்ஞேயஶக்திஸத்³பா⁴வநிமித்தஸ்வகார்யா꞉ இதி ஜ்ஞேயஸத்³பா⁴வலிங்கா³நி "ஜ்ஞேயஸ்ய" இதி உபசாரத꞉ உச்யந்தே |

யும், முகங்களையும் உடையது; எங்கும் செவிகளையுடையது; உலகத்தில் ஸகலத்தையும் வியாபித்து நிற்கின்றது.

அறியவேண்டியபொருளுக்குக் கைகளும் கால்களும் எவ்விடத்தும் உள்ளன. க்ஷேத்ரஜ்ஞன் இருக்கிறனென்பது - எல்லாப்பிராணிகளுடைய இந்திரியங்களாகிய உபாதிகளால் மெய்ப்பிக்கப்படுகின்றது. (ஏனெனில், ஜடப்பொருளான இந்திரியங்கள் சேதநத்தை முன்னிடப்பெறுது முனைக்கமுடியா.) அன்றியும், (உள்ளேயுள்ள சேதநமானது) க்ஷேத்ரமாகிய உபாதியினுல் க்ஷேத்ரஜ்ஞனைக் கூறப்படுகின்றது. க்ஷேத்ரமோ கை கால் முதலியவற்றுல் பலவாறு வேறுபட்டிருப்பது. க்ஷேத்ரமாகிய உபாதியின் பேதத்தினுலான வேற்றுமையெல்லாம் க்ஷேத்ரஜ்ஞனுக்குப்பொய்ம்மையேதான்; எனவே, அவற்றை நீக்கி (ப்ரஹ்மத்தை) அறியவேண்டுமென்பது - "அது உள்ளது எனப்படுவதில்லை, இல்லது எனப்படுவதில்லை" (கங - கஉ) எனக் கூறப்பட்டது. உபாதிகளாலானது பொய்வடிவமுள்ளதாயினும், (ப்ரஹ்மத்தின்) இருப்பைத்தெரிவிப்பதற்காக, அறியவேண்டியபொருளான (அதன்) தன்மைபோலக் கற்பனைசெய்து "எங்கும் கை கால்களையுடையது" என்பது முதலானது கூறப்படுகின்றது. அவ்வண்ணமே, ஸம்பிரதாயத்தை அறிந்தவருடைய—"அத்வைத(மான தனி)ப்பொருளானது அத்யாரோபத்தினுலும் அபவாதத்தினுலும், ஏற்றுதலாலும் விலக்குதலாலும் விவரிக்கப்படுகின்றது" என்னும்திருவாக்கு உள்ளதாம்(அத்யாரோபம் என்பது-பாம்பல்லாத கயிற்றிலே பாம்பை ஏற்றுதல்போல, உண்மைப்பொருளிலே உண்மையல்லாப்பொருளை ஏற்றுதல். அபவாதமென்பது -கயிற்றின்பொய்த்தோற்றமாகிய பாம்பு கயிறுமாத்திரமாக நிற்பதுபோல, உண்மைப்பொருளின் பொய்த்தோற்றமாகிய பிரபஞ்சம் உண்மைப்பொருள்மாத்திரமாகநிற்றல்.)எவ்விடத்தும் எல்லாஉடம்புகளது உறுப்புக்களாகத் தெரிகின்ற கைகால்கள் முதலியவை, அறியவேண்டியபொருளான (ப்ரஹ்மத்தின்) சக்தி இருப்பதனுல் [அதனுடைய வெறும் சந்நிதியாத்திரத்தினுல்] தமக்கு முயற்சிஉண்டாகப் பெறுகின்றன; எனவே, அறியவேண்டியபொருள் இருத்தற்கு (அவை)அடையாளங்களாம்; (ஆகவே, அவை) "அறியவேண்டியபொருளுக்குச் சொந்தமானவை" என்று உபசாரவழக்கினுல் கூறப்படுகின்றன.—அவ்வாறே மற்

तथा व्याख्येयम् । सर्वतःपाणिपादं तत् ज्ञेयं सर्वतोऽक्षिशिरोमुखम्, सर्वतः अक्षीणि शिरांसि मुखानि च यस्य तत् सर्वतोऽक्षिशिरोमुखम्; सर्वतःश्रुतिमत् श्रुतिः श्रवणेन्द्रियम्, तत् यस्य तत् श्रुतिमत् लोके प्राणिनिकाये; सर्वम् आवृत्य संव्याप्य तिष्ठति स्थितिं लभते, न चलति इत्यर्थः ॥ १३ ॥

उपाधिभूतपाणिपादादीन्द्रियाध्यारोपणात् ज्ञेयस्य तद्वत्ताऽऽशङ्का मा भूदित्येवमर्थः श्लोकः—

१४. सर्वेन्द्रियगुणाभासं सर्वेन्द्रियविवर्जितम् ।
असक्तं सर्वभृच्चैव निर्गुणं गुणभोक्तृ च ॥

सर्वेन्द्रियगुणाभासं सर्वाणि च तानि इन्द्रियाणि श्रोत्रादीनि बुद्धीन्द्रियकर्मेन्द्रियाख्यानि, अन्तःकरणे च बुद्धिमनसी—ज्ञेयोपाधित्वस्य तुल्यत्वात्—सर्वेन्द्रियग्रहणेन गृह्यन्ते। अपि च, अन्तःकरणोपाधिद्वारेणैव श्रोत्रादीनामपि उपाधित्वम् इत्यतः अन्तःकरणबहिष्करणोपाधिभूतैः सर्वेन्द्रियगुणैः अध्यवसायसंकल्पश्रवणवचनादिभिः अवभासत इति सर्वेन्द्रियगुणाभासम्, सर्वेन्द्रियव्यापारैः व्यापृतमिव तत् ज्ஞेयम् इत्यर्थः; 'ध्यायतीव लेलायतीव'

றையதை உரைத்துக்கொள்க.—(ப்ரஹ்மமானது) உலகத்திலே, பிராணிவர்க்கத்திலே எல்லாவற்றையும் வியாபித்துநிற்கின்றது, நிலைபெறுகின்றது, அசைவதில்லை என்றபடி. (கங)

ப்ரஹ்மத்திற்கு எத்தகைய தன்மையும் இல்லை.

உபாதிகளான கைகால்முதலிய இந்திரியங்களை ஏற்றுவதனால் "அறியவேண்டியபொருளுக்கு அவை (உண்மையாகவே) உண்டு" என்னும்சங்கை வரக்கூடாதென்பதற்காக (இச்)சுலோகம் தொடங்கப்படுகின்றது :

கச. எல்லா இந்திரியங்களுடைய செய்கைகளினால் விளங்குவது ; (ஆனால்) எல்லா இந்திரியங்களும் இல்லாதது : (ஒன்றையும்) பற்றாதது ; ஆனால், எல்லாவற்றையும் தாங்குவது : குணங்களில்லாதது ; ஆனால், குணங்களை அநுபவிப்பது.

எல்லா இந்திரியங்கள் - ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள்என்னும்பெயருடைய செவிமுதலிய இந்திரியங்கள். "எல்லா இந்திரியங்கள்" என்றதனால் - புத்தி, மனம் என்ற அகக்கரணங்களையும் கொள்க ; அறியவேண்டியபொருளுக்கு உபாதியாய்நிற்றலானது (செவிமுதலியவற்றோடு) ஸமமாயிருத்தலின். மேலும், அகக்கரண உபாதியின் வழியாகவேதான் செவிமுதலியவையும் உபாதியாகின்றன ; ஆகவே, (அறியவேண்டியபொருளானது) - அகக்கரணம், புறக்கரணம் என்னும்உபாதிகளாய் எல்லாஇந்திரியங்களது செய்கைகளான நிச்சயித்தல், நினைத்தல், கேட்டல், மொழிதல் முதலியவற்றால் வெளிப்படுகின்றது : அந்த அறியவேண்டிய பொருளானது எல்லா இந்திரியங்களது செய்கைகளால் தொழிற்பட்டிருப்பதுபோலும் என்றபடி ; "தியானிப்பதுபோலும், அசைவதுபோலும்" (பி - ச - ௩ - எ) என்னும் சுருதியினுமெலன்க.

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌭𑌿𑌃 । 𑌕𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑍁𑌨𑌃 𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 𑌨 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑌤 𑌏𑌵𑍇𑌤𑌿 𑌶𑌙𑍍𑌕𑍍𑌯𑌤𑍇
𑌉𑌚𑍍𑌯𑌤𑍇? 𑌅𑌤𑌃 𑌆𑌹 — 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑌣𑌰𑌹𑌿𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌅𑌤𑌃
𑌨 𑌕𑌰𑌣𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑍈𑌃 𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑌂 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍 । 𑌯𑌤𑍍𑌤𑍁 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 — '𑌅𑌪𑌾𑌣𑌿-
𑌪𑌾𑌦𑍋 𑌜𑌵𑌨𑍋 𑌗𑍍𑌰𑌹𑍀𑌤𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 𑌸 𑌶𑍃𑌣𑍋𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌣𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌃
𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍋𑌪𑌾𑌧𑌿𑌗𑍁𑌣𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑍍𑌯𑌭𑌜𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌤𑍍 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵𑌂-
𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌃, 𑌨 𑌤𑍁 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍇𑌵 𑌜𑌵𑌨𑌾𑌦𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌃 ।
'𑌅𑌨𑍍𑌧𑍋 𑌮𑌣𑌿𑌮𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌵𑌤𑍍 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍍𑌥𑌃 ॥

𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑌣𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌸𑌕𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑍍𑌲𑍇-
𑌷𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 । 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌏𑌵𑌂, 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍃𑌚𑍍𑌚𑍈𑌵 । 𑌸𑌦𑌾𑌸𑍍𑌪𑌦𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂,
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍁𑌗𑌮𑌾𑌤𑍍 । 𑌨 𑌹𑌿 𑌮𑍃𑌗𑌤𑍃𑌷𑍍𑌣𑌿𑌕𑌾𑌦𑌯𑍋𑌽𑌪𑌿 𑌨𑌿𑌰𑌾𑌸𑍍𑌪𑌦𑌾𑌃 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ।
𑌅𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍃𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 𑌇𑌤𑌿 ॥

—மற்று, எக்காரணத்தினல், "(ப்ரஹ்மம் வாஸ்தவமாகத்) தொழிற்படுவதே இல்லை" எனக் கொள்ளப்படுகின்றது ? என்பது.—இதில் கூறுகிறார் : எல்லாஇந்திரியங்களும் இல்லாதது,எத்தகைய கருவியும் இல்லாதது என்பது பொருள். ஆகவே, அந்த அறிய வேண்டியபொருள் இந்திரியங்களுடைய தொழில்களால் தொழிற்படுவதில்லை[இந்திரியங்கள் தொழிற்படும்பொழுது, அது, தான் வாஸ்தவமாகவே தொழிற்படுவதில்லை]. ஆனல், "அது கைகால்களில்லாததாய் விரைந்துசெல்வது, பற்றிப்பிடிப்பது ; கண்ணில்லாததாய்ப் பார்க்கின்றது ; செவியில்லாததாய்க் கேட்கின்றது" (ச்வே - ௩ - ௰௯) என்றுதொடங்குகின்ற இம்மந்திரம் எதுவோ, அது - "அந்த அறியவேண்டியபொருள்எல்லாஇந்திரியங்களாகிய உபாதிகளின் செய்கைகளுக்கு அனுகூலத்தைஅடைவதிலே[அநுகூலமாய் நடக்கும்]வலிமையுள்ளது" என இவ்வாருன அர்த்தத்தைக்காட்டுவதேயன்றி, "(ப்ரஹ்மத்திற்கு)வாஸ்தவமாகவே விரைந்துசெல்லுதல் முதலியதொழில்கள் உண்டு" என்னும்பொருளை எடுத்துக்காட்டுவதன்று. "குருடன் ரத்நத்தைக் கண்ணுற்ருன்"(தை-ஆ-க - கக)என்பது முதலான மந்திரத்தின் அர்த்தம்போல, அந்த மந்திரத்திற்கும் அர்த்தமாம். (அர்த்தவாதத்திற்குச் சொல்அர்த்தத்தைக் கொள்ளாது, பிரகிருதத்திற்குஇணங்கப் பொருள் கொள்ளவேண்டும்.—ஆ.)

ப்ரஹ்மம், பொய்ம்மையான தோற்றத்திற்கு ஆதாரமான உண்மை.

அந்த அறியவேண்டியபொருள் எல்லா இந்திரியங்களும் இல்லாதது ஆதலால், எதனேடும் ஒட்டுதலில்லாதது ; இவ்வாறிருந்தாலும், ஸகலத்தையும் தாங்குவதே தான். எல்லாவற்றிற்கும் ஸத்தன்றே ஆதாரமானது ; ஸத்என்னும் எண்ணமானது எங்கும் தொடர்ச்சியாயிருத்தலின். கானல்நீர்முதலியனவுங்கூட ஆதாரமில்லாதவையாய் இல்லை.(ஸத்-உள்ளது,உண்மை. கற்பிக்கப்பட்ட குடம்,மரம் முதலியவை "குடம் உள்ளது," "மரம் உள்ளது" என உள்ளதென்னும் உணர்வினல் அறியப்படுகின்றன. அவ்வாறே, "கானல்ஜலம் உள்ளது" என உள்ளதென்னும்புத்தியினல் கானல்ஜலமும் அறியப்படுகின்றது. கற்பிக்கப்பட்ட ஒவ்வொருபொருளும் இவ்வாருக "உள்ளது" என்பதைத் தழுவிய அறிவினல் அறியப்படுகின்றது. ஆதலால், ஸத்என்னும் புத்தியானது எவ்விடத்தும் தொடர்ச்சியா யிருக்கின்றதெனக் காண்க.)ஆகவே, ப்ரஹ்மம் எல்லாவற்றையும் தாங்குகின்றது என்பதாம்.

[illegible]

[illegible]

கரு. [illegible] ।

[illegible] ॥

[illegible]

குணங்களை அறிவது ப்ரஹ்மம்.

"அறியவேண்டியபொருள் உள்ளது" என்று தெரிதற்கு இதுவும் ஒருவேறு ...றியாம்: (ப்ரஹ்மம்), ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் குணங்களில்லாததாயினும், ...கையுதலான ஸமீபிலன் [ஓசை, உருவம், முதலான இந்திரியவிஷயங்களான்] ...ஸ்பமாவுமாகவும் ஆன்பமாவுமாகவும் மயக்கமாவுமாகவும் மாறிய ஸத்துவம் ரஜஸ் ...மஸ் என்னும் குணங்களை அநுபவிப்பது; அந்த அறியவேண்டியபொருள் (அவற்றை) ...ாவது என்பது பொருள். (கசு)

எல்லாம் ப்ரஹ்மம்.

கரு. பூதங்கட்கு வெளியானது, உள்ளுமானது; ஸ்தாவரமானது, ஜங்கமமு...னது; அது நுண்மையானதாதலால் அறிதற்கு அரியது; அது தூரத்திலுள்...து, ஸமீபத்திலும் (உள்ளது).

அறியாமையினால் ஆத்மாவாகக் கொள்ளப்பட்டதாய், தோல்வரையுள்ளதான ...டம்பை உத்தேசித்து, அதனையே எல்லையாகக்கொண்டு வெளி எனப்படுகின்றது. ...வ்வாறே, உள்ளேயுள்ள ஆத்மாவை உத்தேசித்து உடம்பையே எல்லையாகக் ...காண்டு உள் எனப்படுகின்றது. (பூதங்கட்கு வெளியிலுள்ள பொருள்களும் ப்ரஹ்ம...த்தான், உள்ளேயுள்ளபொருளும் ப்ரஹ்மத்தான் என்றபடி.) "வெளியானது, ...ள்ளுமானது" என்றமையினால், இடையிலே (ஒன்றும்) இல்லாமையாகவே, ...துகைக் கூறுகிறார்:— "ஸ்தாவரமானது, ஜங்கமமுமானது." ஜங்கம ஸ்தாவரமான ...டம்புத்தோற்றமும் எதுவோ, அது(வும்)தான் அறியவேண்டிய பொருள் [ப்ரஹ்...ம்]; கயிற்றிலே பாம்புத்தோற்றம்போல. (வெளியிலுள்ள பொருள்கட்கும் உள்ளே ...ள்ள ஆத்மாவிற்கும் நடுவிலே பூதவடிவமாய்ப் பலபலவித உடம்புகளாகத் தோற்று...ன்றதும்ப்ரஹ்மம்தான். கயிற்றிலே பாம்புத்தோற்றம் அடங்கியிருப்பதுபோல,ப்ரஹ்...த்திலே உடம்புத்தோற்றம் அடங்கியிருக்கின்றது. ஆகவே, நடுவும் ப்ரஹ்மமாம் ...னக் கண்டுகொள்க.—ஆ.)

யதி சராசரம் ஏவ ச ஸர்வம் வ்யவஹாரவிஷயம் ஸத் ஜ்ஞேயம், கிமர்த்தம் "இதம்" இதி ஸர்வை: ந விஜ்ஞேயம் இதி? உச்யதே — ஸத்யம் ஸர்வாவபாஸம் தத்; ததாபி வ்யோமவத் ஸூக்ஷ்மம்। அத: ஸூக்ஷ்மத்வாத் ஸ்வேன ரூபேண தத் ஜ்ஞேயமபி அவிஜ்ஞேயம் அவிதுஷாம்। விதுஷாம் து — 'ஆத்மைவேதம் ஸர்வம்' 'ப்ரஹ்மைவேதம் ஸர்வம்' இத்யாதிப்ரமாணத: நித்யம் விஜ்ஞாதம்। அவிஜ்ஞாததயா தூரஸ்தம், வர்ஷஸஹஸ்ரகோட்யாऽபி அவிதுஷாம் அப்ராப்யத்வாத்। அந்திகே ச தத், ஆத்மத்வாத் விதுஷாம் ॥ ௧௫ ॥

கிஞ்ச —

௧௬. அவிபக்தம் ச பூதேஷு விபக்தமிவ ச ஸ்திதம்।
பூதபர்த்ரு ச தஜ்ஜ்ஞேயம் க்ரஸிஷ்ணு ப்ரபவிஷ்ணு ச ॥

அவிபக்தம் ச ப்ரதிதேஹம் வ்யோமவத் தத் ஏகம்। பூதேஷு ஸர்வப்ராணிஷு விபக்தமிவ ச ஸ்திதம், தேஹேஷ்வேவ விபாவ்யமானத்வாத் ॥

பூதபர்த்ரு ச பூதானி பிபர்த்தீதி தத் ஜ்ஞேயம் பூதபர்த்ரு ச ஸ்திதிகாலே। ப்ரலயகாலே க்ரஸிஷ்ணு க்ரஸனசீலம்। உத்பத்திகாலே ப்ரபவிஷ்ணு ச ப்ரபவனசீலம், யதா — ரஜ்ஜ்வாதி: ஸர்பாதே: மித்யாகல்பிதஸ்ய ॥ ௧௬ ॥

ப்ரஹ்மத்தை அறிகிறவர்கள் ஞானிகளேதான்.

(வினா):—ஸ்தாவரமும் ஜங்கமமுமேயானவியவகாரப்பொருள்களெல்லாம் அறியவேண்டியபொருளா(ன ப்ரஹ்மமா)யின், ஏன் (அது) "இது" என(ச் சுட்டி)எல்லாராலும் அநுபவித்தறியப்படவில்லை? என்பது.

(விடை):—கூறுவோம்: உண்மை, அது எல்லாத்தோற்றமாயுள்ளது; ஆயினும், ஆகாசம்போல, நுண்மையானது [இந்திரியங்கட்குப் புலப்படாதது]. ஆகவே, அது தன்வடிவத்தால் அறியத்தக்கதாயினும், நுண்மையாயிருப்பதனால் அஜ்ஞானிகட்கு அறியப்படாததாம். மற்று, ஞானிகட்கோ "இதெல்லாம் ஆத்மாதான்" (பி - உ - ௪ - ௬), "இதெல்லாம் ப்ரஹ்மம்தான்" (பி - உ - ௫ - ௧) என்பனமுதலியப் பிரமாணங்களால் எப்பொழுதும் அறியப்பட்டது. அறியப்படாமையினால் அது தூரத்திலுள்ளது; ஆயிரங்கோடி வருஷங்களாலும் அஜ்ஞானிகட்கு அடையமுடியாததாதலின். அது ஸமீபத்திலுள்ளது; ஞானிகட்கு(த் தமது சொந்த) ஆத்மாவாயிருத்தலின்.

ப்ரஹ்மம் எல்லாவற்றிலுமுள்ள ஒரேஆத்மாதான்.

அன்றியும்,

௧௬. அந்த அறியவேண்டியபொருள் வேறாகவகுக்கப்படாதது; ஆயினும், பூதங்களிடத்து வேறாகவகுக்கப்பட்டதுபோலும் உள்ளது: மற்றும், பூதங்களைத் தாங்குவது; விழுங்குவது: மேலும், உண்டாக்குவது.

அது உடம்புதோறும் வேவ்வேறான தன்று; ஆகாசம்போல ஒன்றாயுள்ளது. ஒவ்வொரு பிராணியினிடத்தும் வேவ்வேறாயுள்ளதுபோல(த் தோற்றுகின்றது); உடம்புகளிலேயே தெரியப்படுகின்றமையின்[சரீரங்களிலேதான் வெளிப்படையாகப் புலப்படுகின்றமையின்].

ப்ரஹ்மம் பிரபஞ்சத்திற்குக் காரணம்.

அந்த அறியவேண்டியபொருள் - (பிரபஞ்சம்)இருக்கும்பொழுது பூதங்களைத் தாங்குவதாம்; மறையும்பொழுதும், (அவற்றை) விழுங்குந்தன்மையதாம்; உண்டாகும்பொழுது, (அவற்றை) உண்டாக்கும் இயல்பினதுமாம்; பொய்யாகக் கற்பிக்கப்பெற்ற பாம்புமுதலியவற்றை கயிறுமுதலானவை (உண்டாகுவது) போல. (௧௬)

கிஞ்ச— ஸர்வத்ர வித்யமாநமபி ஸத் ந உபலப்யதே சேத், ஜ்ஞேயம் தத் தமஸி? ந | கிம் தர்ஹி?—

௧௭. ஜ்யோதிஷாமபி தஜ்ஜ்யோதி: தமஸ: பரமுச்யதே |
ஜ்ஞாநம் ஜ்ஞேயம் ஜ்ஞாநகம்யம் ஹ்ருதி ஸர்வஸ்ய விஷ்டிதம் ||

ஜ்யோதிஷாம் ஆதித்யாதீநாம் அபி தத் ஜ்ஞேயம் ஜ்யோதி: [illegible] ஜ்யோதிஷாம் [illegible] ஆதித்யாதீநி ஜ்யோதீம்ஷி தீப்யந்தே, 'யேந ஸூர்ய: [illegible]' 'தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி' இத்யாதிஶ்ருதிப்ய: ; [illegible] 'யதாதித்யகதம் தேஜ:' இத்யாதே: | தமஸ: அஜ்ஞாநாத் [illegible] உச்யதே ||

ஜ்ஞாநம் [illegible] ப்ராப்யம் [illegible] ; ஜ்ஞேயம் 'ஜ்ஞேயம் யத் தத் ப்ரவக்ஷ்யாமி' இத்யா- [illegible] ; ஜ்ஞாநகம்யம், ஜ்ஞேயமேவ ஜ்ஞாதம் ஸத் ஜ்ஞாநபலமிதி ஜ்ஞாநகம்யம் [illegible] ; ஜ்ஞாயமாநம் [illegible] ஜ்ஞேயம் | தத் [illegible] ஹ்ருதி ஸர்வஸ்ய [illegible],

ப்ரஹ்மம் எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச் செய்வது.

(ஆக்ஷேபம்) :—அறியவேண்டியபொருள் எங்கும் உள்ளதாயிருந்தும், உணரப்படவில்லையாகில், அங்ஙனம் (அது) இருளோதான் ?

(ஸமாதானம்) :—அப்படியன்று ; மற்றென்னவெனின்,—

இன்னும்,

௧௭. அது ஒளிகட்கும் ஒளியாய் இருட்டிற்கு அப்பாலுள்ளது எனப்படுகின்றது. அறிவு, அறியவேண்டியபொருள், அறிவினால் அடையப்படுவது (என்ற இம்மூன்றும்) எல்லாருடைய ஹ்ருதயத்திலும் விசேஷமாயுள்ளன.

அந்த அறியவேண்டியபொருள் ஸூர்யன் முதலிய ஒளிகட்கும் ஒளியாம். (வெளியிலுள்ள ஸூர்யன் முதலியனவும், உள்ளேயுள்ள புத்தி முதலியனவுமான ஜடப்பொருள்களைப் ப்ரகாசிக்கச் செய்வதனாலும் ப்ரஹ்மம் உள்ளதென்க.—ஆ.) ஆத்மஅறிவுஒளியினால் ப்ரகாசிப்பிக்கப்பெற்றன்றோ ஸூர்யன்முதலான ஒளிகள் ஒளிர்கின்றன ; "ஸூர்யன் எந்த ஒளியினால் ஒளிசெய்விக்கப்பெற்று ஒளிவீசுகின்றானோ" (தை - ப்ரா - ௩ - ௧௨ - ௯), "இதெல்லாம் அதனுடைய ஒளியினால் விளங்குகின்றது" (ச்வே - ௬ - ௧௪)என்பன முதலிய மந்திரங்களாலும், இங்கேயே "ஸூர்யனைச் சேர்ந்த ஒளி எதுவோ" (௧௫ - ௧௨) என்பது முதலிய ஸ்ம்ருதியினாலும் என்க. (ப்ரஹ்மம்) இருட்டிற்கு அப்பால் உள்ளது, அஜ்ஞானத்தால் பற்றப்படாதது எனப்படுகின்றது.

அறியவேண்டியபொருளும், கருவியும், பயனும் ஒவ்வொருவனுடைய ஹ்ருதயத்திலும் உள்ளன.

ஞானம் முதலியவற்றைச் ஸம்பாதித்தல் மிகக்கஷ்டமென்று நினைத்து மனத்தளர்ச்சியுற்ற (அர்ஜுனனை) உற்சாகப்படுத்த [மனத்திட்பமுண்டாக]க் கூறுகிறார் :— அறியவேண்டிய ஞானம் என்பது - பணிவுமுதலானது (௧௩ - ௭, ௮, ௯, ௧௦, ௧௧). அறியவேண்டிய பொருள் என்பது – "எது"என்பதுமுதலாக(௧௩ - ௧௨, ௧௩, ௧௪, ௧௫, ௧௬, ௧௭)கூறப் பெற்றது. (அறியவேண்டியதை)அறிந்தவுடன், (அதுவே, அந்த)அறியவேண்டிய பொருளை அறிவின்பயனும் ; ஆதலின், அறிவினால் அடையத்தக்கது எனப்படுகின்

ஸர்வஸ்ய ப்ராணிஜாதஸ்ய விஷ்டிதம் விஶேஷேண ஸ்திதம் । தத்ரைவ ஹி ஸ்புடம் த்ரயம் விபாவ்யதே ॥ கஎ ॥

யதோக்தார்த்தோபஸம்ஹாரார்த்த: அயம் ஶ்லோக: ஆரப்யதே—

கஅ. இதி க்ஷேத்ரம் ததா ஜ்ஞானம் ஜ்ஞேயம் சோக்தம் ஸமாஸத: ।
மத்பக்த ஏதத்விஜ்ஞாய மத்பாவாயோபபத்யதே ॥

இதி ஏவம் க்ஷேத்ரம் மஹாபூதாதி த்ருத்யந்தம், ததா ஜ்ஞானம் அமானித்வாதி தத்த்வஜ்ஞானார்த்ததர்ஶனபர்யந்தம், ஜ்ஞேயம் ச 'ஜ்ஞேயம் யத் தத்' இத்யாதி 'தமஸ: பரமுச்யதே' இத்யேவமந்தம், உக்தம் ஸமாஸத: ஸம்க்ஷேபத: । ஏதாவான் ஹி ஸர்வ: வேதார்த்த: கீதார்த்தஶ்ச உபஸம்ஹ்ருத்ய உக்த: ॥

அஸ்மின் ஸம்யக்தர்ஶனே க: அதிக்ரியதே இதி? உச்யதே— மத்பக்த: மயி பரமேஶ்வரே ஸர்வஜ்ஞே பரமகுரௌ வாஸுதேவே ஸமர்பிதஸர்வாத்மபாவ: யத் பஶ்யதி ஶ்ருணோதி ஸ்ப்ருஶதி வா "ஸர்வமேவ பகவான் வாஸுதேவ:" இத்யேவம்க்ரஹாவிஷ்டபுத்தி: மத்பக்த: ஸ: ஏதத் யதோக்தம் ஸம்யக்தர்ஶனம்

றது; மற்று, அது அறியப்படுகின்றபொருளாகவுள்ளவளவிலே அறியவேண்டிய பொருளாம் [ப்ரஹ்மத்தை அறியவேண்டியநிலைமையிலே, அது அறியப்படுகின்ற பொருள்; அப்பொழுது அது அறியவேண்டிய பொருளாம் என்க]. அந்த இம்மூன்றும் எல்லாப்பிராணிகளுடைய ஹிருதயத்தில், புத்தியில் விசேஷமாய் உள்ளன; அதனுள்ளேயன்றே இம்மூன்றும் புலப்படுகின்றன. (ஆகவே, அவை தேசாந்தரத்தில் வெகுதூரத்தில் இல்லையெனத் தெளிக.) (கஎ)

பக்தியோடு மெய்யறிவைத் தேடவேண்டும்.

கீழ்க்கூறிய விஷயங்களை முடிக்கும்பொருட்டாய் இச்சுலோகம் தொடங்கப் படுகின்றது:

கஅ. இவ்வாறு க்ஷேத்ரமும், ஞானமும், அறியவேண்டியபொருளும் சுருக்கமாகக் கூறப்பட்டன. என்பக்தன் இதனை அறிந்து எனது நிலைக்குத் தக்கோனாகிறான்.

க்ஷேத்ரமானது-மஹாபூதம்முதலாக(கங-௫)உறுதியானதன்மை ஈறாக(கங-௬) சுருக்கமாய்க் கூறப்பட்டது. அவ்வாறே, ஞானமானது-பணிவுமுதலாக(கங-எ)உண்மையறிவை நோக்குதல் ஈறாக(கங-கக)சுருக்கமாய்க் கூறப்பட்டது. மேலும், அறியவேண்டியபொருளானது-"எது" (கங-கஉ) என்பதுமுதலாக "அப்பால்உள்ளது எனப்படுகின்றது" (கங-கஎ) என்பதுஈறாகச் சுருக்கமாய்க் கூறப்பட்டது. வேதப்பொருளெல்லாம் இவ்வளவுதான்; கீதாப்பொருளெல்லாமும் இவ்வளவுதான்; (அது இவ்வாறு சுருக்கி)முடித்துக்கூறப்பட்டது.

(வினா):—எவன் இந்தமெய்யறிவிலே உரிமையுள்ளவனாகிறான்? என்பது.

(விடை):—கூறுவோம்:—என்னுடைய பக்தன்: முற்றும்உணர்ந்த பரமேச்வரனை பரமாசார்யனாகிய வாஸுதேவனை என்னிடத்து எல்லாஆத்மஎண்ணத்தையும் வைத்தவன் [பகவானை எல்லாவற்றினுடைய ஆத்மாவாகக்கொண்டவன்]: எதனைக் காண்கின்றானோ, கேட்கின்றானோ, அல்லது தொடுகின்றானோ, "(அது)எல்லாமே பகவான் வாஸுதேவன்" என இத்தகைய கொள்கை புகுந்துகிடக்கும்புத்தியை

[illegible]

௧௯. 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌚𑍈𑌵 𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑌾𑌦𑍀 𑌉𑌭𑌾𑌵𑌪𑌿 ।
𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌗𑍁𑌣𑌾𑌂𑌶𑍍𑌚𑍈𑌵 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌂𑌭𑌵𑌾𑌨𑍍 ॥

[illegible]

யுடையவன். அந்த என் பக்தன் கீழ்க்கூறிய மெய்யறிவைப் பெற்று எனதுநிலைக்கு உரியவனாகிறான்; மோக்ஷத்தை அடைகிறான். (௧௮)

பிரகிருதியும், புருஷனும் நித்தியமானவை.

இனி, ஏழாம் அத்தியாயத்தில் தாழ்ந்ததும் உயர்ந்ததுமான "க்ஷேத்ரம்" "க்ஷேத்ரஜ்ஞன்" என்னும் இரண்டு பிரகிருதிகள் ஈச்வரனுக்கு விளக்கப்பட்டன; அன்றியும், "பூதங்கட்கு இவை பிறப்பிடம்" (௭-௬) எனவும் கூறப்பட்டது. க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன் என்னும் இரண்டு பிரகிருதிகளும் பூதங்கட்குப் பிறப்பிடமாதல் எப்படி? —என்னும் (வினாவைச் சங்கித்து) இவ்விஷயத்திற்கு இங்ஙனம் விடைகூறப்படுகின்றது:

௧௯. பிரகிருதி, புருஷன் இரண்டையும் அநாதியாக அறிந்துகொள். விகாரங்களையும் குணங்களையும் பிரகிருதியினின்றும் பிறந்தவையாகத் தெரிந்துகொள்.

பிரகிருதியும் புருஷனும் ஈச்வரனுடைய பிரகிருதிகள். அந்தப்பிரகிருதி புருஷன் என்றஇரண்டிற்கும் ஆதி இல்லை, முதல் இல்லை (என்றறி) அறியக்கடவாய். ஈச்வரன் நித்தியமானவன் ஆதலால், அவனது பிரகிருதிகளும் நித்தியமாயிருத்தல் நேர். இரண்டுப் பிரகிருதிகளையும் உடையவனாதலினன்றோ ஈச்வரன் ஈச்வரனாயிருத்தலென்பது. பிரபஞ்சம் உண்டாதற்கும், நிலைத்தற்கும், அழிதற்கும் ஈச்வரன் அந்த இரண்டுபிரகிருதிகளால் காரணமாகின்றானே, அந்த இரண்டும் அநாதியாய் ஸம்ஸாரத்திற்குக் காரணமாம்.

சிலர் "(அப்பிரகிருதிகள்) ஆதியானவையல்ல" என, தத்புருஷ ஸமாஸத்தைக் கொண்டு இங்ஙனம் சொல்லுகிறார்கள். அதனால், ஈச்வரன் காரணமாதல் அமையின் பிரகிருதி புருஷன் இரண்டுமே நித்தியமானவையாயின், பிரபஞ்சம் படைக்கப்பட்டது; ஈச்வரன் பிரபஞ்சத்திற்குக் கர்த்தாவாகமாட்டான் (ஆகும்).

तदसत्; प्राक् प्रकृतिपुरुषयोः उत्पत्तेः ईशितव्याभावात् ईश्वरस्य अनीश्वरत्वप्रसङ्गात्, संसारस्य निर्निमित्तत्वे अनिर्मोक्षप्रसङ्गात् शास्त्रानर्थक्यप्रसङ्गात्, बन्धमोक्षाभावप्रसङ्गाच्च ।

नित्यत्वे पुनः ईश्वरस्य प्रकृत्योः सर्वमुपपन्नं भवेत् । कथम्? — विकारांश्च बुद्ध्यादिदेहान्तान् गुणांश्च सुखदुःखमोहप्रत्ययाकारपरिणतान् वक्ष्यमाणान् विद्धि जानीहि प्रकृतिसंभवान्, प्रकृतिः ईश्वरस्य विकारकारणशक्तिः त्रिगुणात्मिका माया, सा संभवो येषां विकाराणां गुणानां च तान् विकारान् गुणांश्च विद्धि जानीहि प्रकृतिसंभवान् प्रकृतिपरिणामान् ॥ ௧௯ ॥

के पुनः ते विकाराः गुणाश्च प्रकृतिसंभवाः इति? उच्यते —

௨௦. कार्यकरणकर्तृत्वे हेतुः प्रकृतिरुच्यते ।
पुरुषः सुखदुःखानां भोक्तृत्वे हेतुरुच्यते ॥

அது சரியன்று; ஏனெனில், பிரகிருதியும் புருஷனும் உண்டாவதற்குமுன் ஆளப்படும்பொருளொன்றும் இல்லாமையினால் ஈச்வரன்[ஆளுபவன்]ஈச்வரனில்லை என்றாகும்: அன்றியும், மோக்ஷமில்லை என்றாகும்: சாஸ்திரம் வீண் என்றாகும்: பந்தமும், மோக்ஷமும் இல்லைஎன்றாகும்: (பிரகிருதி, புருஷன் என்றவற்றின் சார்பு இல்லாமலே ஈச்வரன் ஸம்ஸாரத்திற்குக் காரணமாயின், முக்தர்களும் மீண்டும் ஸம்ஸாரத்தில் வந்து உழலுதலைத்தடுத்தற்கு ஒன்றுமில்லை. ஆகவே, மோக்ஷத்தைக்கூறும் நூல் வீணாம். மற்றும், எப்பொழுதாவது பந்தமும், மோக்ஷமும் இல்லையாயின், பின்பு அவை உண்டாதற்குக் காரணமும் இல்லை.—ஆ.)

பிரகிருதியும், புருஷனும் ஸம்ஸாரத்திற்குக் காரணமாம்.

மற்று, ஈச்வரனுடைய பிரகிருதிகள் நித்தியமானவையாயின், இதெல்லாம் பொருந்தியதாகும்.—எப்படி?—வேறுபாட்டிற்குக் காரணமான ஈச்வரசக்தியாய், முக்குணவடிவமான மாயையானது - புத்திமுதலாக உடம்பீறாகவுள்ளவையாய் மேலே கூறப்படும் விகாரங்கட்கும், இன்ப துன்ப மயக்கஎண்ணங்களின் வடிவங்களாய் மாறியுள்ளவையாய் மேலே கூறப்படும் குணங்கட்கும் பிறப்பிடம் என்று அறிந்துகொள்: (அவை) பிரகிருதியின்வேறுபாடு எனத்தெரிந்துகொள். (பிரகிருதிக்கு ஆதியில்லாவளவிலே, விகாரங்களும் குணங்களும் அப்பிரகிருதியின் கார்யமாதலால், ஆத்மா நிர்விகாரி எனவும், நிர்க்குணம் எனவும் பெறப்படுகின்றன.—ஆ.) (௧௯)

ஆனால், பிரகிருதியைப் பிறப்பிடமாகவுடைய அந்த விகாரங்களும், குணங்களும் யாவை? என்பது.—கூறுகிறார்:

௨௦. **கார்யத்தையும், கருவிகளையும் உண்டாக்குவதிலே பிரகிருதி - காரணம் எனப்படுகின்றது. இன்பதுன்பங்களை அநுபவிப்பதிலே புருஷன் - காரணம் எனப்படுகிறான்.**

காயகாரணகர்த்ருத்வே — கார்யம் ஶரீரம், காரணாநி ஜ்ஞாநகர்மாத்மகாநி ஸமநஸ்காநி இந்த்ரியாணி ... விஷயாஶ்ச ப்ரக்ருதிஸம்பவா: விகாரா: ... கார்யஶப்தேந க்ருஹ்யந்தே । ... ப்ரக்ருதிஸம்பவா: ... காரணஶப்தேந க்ருஹ்யந்தே । ... கார்யகாரணகர்த்ருத்வம் ... கார்யகாரணகர்த்ருத்வே ஹேது: காரணம் ... ப்ரக்ருதி: ... ஸம்ஸாரஸ்ய காரணம் ப்ரக்ருதி: ॥

'காயகாரணகர்த்ருத்வே' ... பாடே — கார்யம், யஸ்ய யஸ்ய ... கார்யம் விகார:, விகாரீ காரணம்; தயோ: விகாரவிகாரிணோ: கார்யகாரணயோ: கர்த்ருத்வே — ... கார்யகாரணாநி ... ஷோடஶ விகாரா: கார்யம், ஸப்த ப்ரக்ருதிவிக்ருதய: காரணம், தேஷாம் கர்த்ருத்வே ஹேது: ப்ரக்ருதி: உச்யதே, ஸம்ஸாரகாரணமேவ ॥

... ஸம்ஸாரஸ்ய காரணம் யதா ஸ்யாத் ததா உச்யதே — ...

காரியமென்பது - சரீரம். கருவிகள் என்பன - (ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், மனம், புத்தி, அஹங்காரம் எனப்) பதின்மூன்று. "காரியம்" என்றதனால் - (இங்குக் கூறப்பட்ட) சரீரத்தைக் கட்டுகின்ற ஐந்து பூதங்களும், பிரகிருதியைப் பிறப்பிடமாகவுடைய ... விகாரங்களான ஐந்து இந்திரிய விஷயங்களும் இங்குக் கொள்ளப்படுகின்றன. "கருவிகள்" என்றமையினால் - பிரகிருதியைப் பிறப்பிடமாகவுடைய இன்பதுன்பமயக்கமாயுள்ள குணங்களும் கொள்ளப்படுகின்றன; கருவிகள் (அவற்றிற்குத்) தக்குமிடமாதலின். அந்தக் காரியத்தையும் கருவிகளையும் [சரீரமுதலியவற்றையும், இன்பதுன்பம் முதலியவற்றையும்] உண்டாக்கும் விஷயத்திலே பிரகிருதியானது காரணம் எனப்படுகின்றது; (அவற்றை) உண்டாக்குவதாதலின். இவ்வாறாக, பிரகிருதியானது காரியத்தையும் கருவிகளையும் செய்வதாதலால் ஸம்ஸாரத்திற்குக் காரணமாம் என்க.

"காரியத்தையும், காரணத்தையும் உண்டாக்குவதிலே" என்ற இப்பாடத்தில் (இவ்வாறு பொருள் கொள்க) :— எது எதனுடைய வேறுபாடோ, அது அதனுடைய காரியம், விகாரம். விகாரத்தையுடையது - விகாரி : காரணம் என்க. அந்த விகாரவிகாரியான காரியகாரணத்தை உண்டாக்கும் விஷயத்திலே (பிரகிருதி காரணமாம்) என அவையே [மேலே உரைத்துள்ள காரியமும், கருவிகளுமே] காரியகாரணங்கள் எனப்படுகின்றன. அல்லது, (வேறுவிதமாக உரையிடலாம் :— இந்திரியங்கள் பத்து, மனம் ஒன்று, இந்திரியவிஷயங்கள் ஐந்து ஆகப்) பதினாறு விகாரங்களும் காரியமாம். (மஹத், அஹங்காரம், ஐந்து தந்மாத்ரங்கள் என ஏழைப்) பிரகிருதியின் விகாரங்கள் ஏழும் காரணமாம். அவற்றை உண்டாக்கும் விஷயத்திலே பிரகிருதி (காரணம்) எனப்படுகின்றது ; (அவற்றையெல்லாம்) உண்டாக்குவதேயாதலின்.

இனி, புருஷன் ஸம்ஸாரத்திற்கு எவ்வாறு காரணமாகிறான் (என்பதைக் கூறுகி)ன்றது : புருஷன், ஜீவன், க்ஷேத்ரஜ்ஞன், போக்தா என்பன ...

புருஷோ ஜீவ: க்ஷேத்ரஜ்ஞோ போக்தா இதி பர்யாய:, ஸுகது:கானாம் போக்யானாம் போக்த்ருத்வே உபலப்த்ருத்வே ஹேது: உச்யதே ||

கதம் புன: அனேன கார்யகாரணகர்த்ருத்வேன ஸுகது:கபோக்த்ருத்வேன ச ப்ரக்ருதிபுருஷயோ: ஸம்ஸாரகாரணத்வம் உச்யத இதி ?

அத்ர உச்யதே—கார்யகாரணஸுகது:காகாரேண பரிணதாயா: ப்ரக்ருதே: பரிணாமாபாவே, புருஷஸ்ய ச சேதனஸ்ய அஸதி ததுபலப்த்ருத்வே, குத: ஸம்ஸார: ஸ்யாத்? யதா புன: கார்யகாரணஸுகது:கஸ்வரூபேண பரிணதயா ப்ரக்ருத்யா போக்யயா புருஷஸ்ய தத்விபரீதஸ்ய போக்த்ருத்வேன அவித்யாரூப: ஸம்யோக: ஸ்யாத், ததா ஸம்ஸார: ஸ்யாத் இதி | அத: யத் ப்ரக்ருதிபுருஷயோ: கார்யகாரணகர்த்ருத்வேன ஸுகது:கபோக்த்ருத்வேன ச ஸம்ஸாரகாரணத்வம் உக்தம், தத் யுக்தம் ||

க: புன: அயம் ஸம்ஸாரோ நாம ?

ஸுகது:கஸம்போக: ஸம்ஸார: | புருஷஸ்ய ச ஸுகது:கானாம் ஸம்போக்த்ருத்வம் ஸம்ஸாரித்வம் இதி || ௨௦ ||

சொற்கள். அநுபவிக்கப்படும் இன்பதுன்பங்களை உணரும்விஷயத்திலே புருஷன் காரணமாகக் கூறப்படுகிறான். (இங்குக் கூறப்பட்ட ஜீவன் - ஸோபாதிக ஜீவன், உபாதியுள்ளஜீவன். அவன் வாஸ்தவத்திலே நிருபாதிகன், உபாதியில்லாதவன், ப்ரஹ்மமாயிருப்பவன் என்பதையும் நோக்கிக்கொள்க.)

(ஆக்ஷேபம்) :—ஆனால், கார்யகாரணங்களை உண்டாக்குவதும், இன்பதுன்பங்களை அநுபவிப்பதுமாகிய இவற்றினால் பிரகிருதியும் புருஷனும் ஸம்ஸாரத்திற்குக் காரணமாதல் எப்படிச் சொல்லப்படுகின்றது ? என்பது.

(ஸமாதானம்) :—இதில்கூறுவோம் : தேகேந்திரியங்களாக, இன்பதுன்பங்களாக காரணகாரியங்களாகப் பிரகிருதிக்கு வேறுபாடு இல்லாவளவிலே, உணர்வுப்பொருளான புருஷனுக்கு அவற்றை உணர்தலென்பதும் இல்லாவளவிலே, ஸம்ஸாரம் எங்கிருந்துவரும் ? (வாராது. ஏனெனில், என்றும் விடுபட்ட ஆத்மாவிற்கு ஸம்ஸாரம் தானாகவே இல்லையென்பதாம்.—ஆ.) ஆனால், தேகேந்திரியங்களாக, இன்ப துன்பங்களாக, காரணகார்யங்களாக வேறுபட்டு அநுபவிக்கப்படும் பிரகிருதியோடு அதற்கு மாறான புருஷனுக்கு அநுபவிக்குந்தன்மையினால் அவித்யாவடிவமாகிய ஸம்பந்தம் எப்பொழுது இருக்குமோ, அப்பொழுது ஸம்ஸாரம் இருக்குமென்க. ஆகவே, பிரகிருதியும் புருஷனும் (முறையே) தேகேந்திரியங்களை உண்டாக்குவதனாலும், இன்பதுன்பங்களை அநுபவிப்பதனாலும் ஸம்ஸாரத்திற்குக் காரணமாம் என்று எது கூறப்பட்டதோ, அது நேர்.

(ஆக்ஷேபம்) :—ஆனால், இந்த ஸம்ஸாரமென்பது யாது ? (அவிகாரியான ஆத்மாவிற்கு ஸம்ஸாரம் தகாது.—ஆ.)

(ஸமாதானம்) :—ஸம்ஸாரமென்பது - இன்பதுன்பங்களை அநுபவித்தல். ஸம்ஸாரியாயிருத்தலென்பது - புருஷன் இன்பதுன்பங்களை அநுபவிப்பதனாலாம். (இன்பத்தையேனும், துன்பத்தையேனும் நேரே உணர்தல் - போகம் என்பது. நிர்விகாரமாகவே, பார்த்தபடியே பார்த்துநிற்கும்பொருளுக்கு அப்போகந்தான் ஸம்ஸாரமாம். அத்தகையபோகமுடைமை - இது ஸம்ஸாரியாயிருத்தலென்பது.—ஆ.)

[illegible]

௨௧. [illegible] ॥

[illegible] ॥

அநுபவமும், அதற்குக் காரணம் பிறப்புமாயிருத்தற்குக் காரணம்.

ஸம்ஸாரியாயிருத்தலென்பது - புருஷன் இன்பதுன்பங்களை அநுபவிப்பவனு தல் என்று கூறப்பட்டதே, அது [அவற்றை அநுபவித்தலானது] அவனுக்கு எத னாலாவது? என்பதைக் கூறுகிறார் :

௨௧. பிரகிருதியில் தங்கிய புருஷன் பிரகிருதியினின்றும் தோன்றிய குணங் களை அநுபவிக்கிறான். இவனுக்குக் குணங்களிலேயுள்ள பற்றுதலே நல்லனவும் தீயனவு மான பிறவிகளிலே பிறத்தற்குக் காரணம்.

அநுபவிக்கின்ற புருஷன், ஏதேகிங்திரியவுடையனாக வேறுபட்ட அவித்யை யென்னும் பிரகிருதியில் தங்கியிருப்பவன் : பிரகிருதியை [உடம்பு இந்திரியங்களின் சேர்க்கையை] ஆத்மாவாகக்கொண்டவன் என்பது ; ஆதலால், இன்பவடிவாகவும், துன்பவடிவாகவும், மயக்கவடிவாகவும் பிரகிருதியினின்றும் தோன்றியகுணங்களை "நான் இன்புறுடையவன், துன்புறுடையவன், மயங்கியவன், அறிவுள்ளவன்" என இவ்வாறு அநுபவிக்கிறான் : உணர்கிறான் என்பது பொருள். அவித்யை (பிறப்பிற்குக் காரணமாய்) இருந்தாலும், அநுபவிக்கப்படுகின்ற இன்பம்துன்பம் மயக்கம் என்ற குணங்களின்மீது பற்றுதல், தான் என்னும் எண்ணமானது [அக்குணங்களே என்னும் நினைப்பு] எதுவோ, அது - இப்புருஷனது பிறப்பிற்கேயாக்கிய "அவன் எதனை விரும்புகிறவனாய் இருக்கின்றானோ, அதனை [அடைய வேண்டுமென்று] கொள்கிறவனாகிறான்" (பி - ௪ - ௪ லெனக. அந்த இதனை அருளிச்செய்கிறார் :—அநுபவிப்பவனு ள்ள அபிமானமானது - நல்லபிறவிகளிலும் [illegible] காரணம்.

अथवा — सदसद्योनिजन्मसु अस्य संसारस्य कारणं गुणसङ्गः, इति संसारवर्त्म अस्याख्यातम् ॥

सद्योनयः देवादियोनयः । असद्योनयः पश्वादियोनयः । सामर्थ्यात्, सदसद्योनयः मनुष्ययोनयोऽपि अविरुद्धाः द्रष्टव्याः ॥

एतत् उक्तं भवति — प्रकृतिस्थत्वाख्या अविद्या, गुणेषु च सङ्गः कामः, संसारस्य कारणमिति । तत् परिवर्जनाय उपदिश्यते । अस्य च निवृत्तिकारणम् — ज्ञानवैराग्ये ससंन्यासे गीताशास्त्रे प्रसिद्धम् । तत् ज्ञानं च पुरस्तात् उपन्यस्तं क्षेत्रक्षेत्रज्ञविषयं 'यत् ज्ञात्वाऽमृतमश्नुते' इति । उक्तं च अन्यापोहेन अतद्धर्माध्यारोपेण च ॥

तस्यैव पुनः साक्षात् निर्देशः क्रियते —

அல்லது, "நல்ல பிறவிகளிலும், தீய பிறவிகளிலும் பிறக்கும்விஷயத்திலே, குணங்களின்மீதுள்ள பற்றானது இவனது ஸம்ஸாரத்திற்குக் காரணமாம்" என ஸம்ஸாரமென்னும் சொல்லைவருவி(த்துரை)க்க.

நல்ல பிறவிகள் - தேவர்முதலான பிறவிகள். தீய பிறவிகள் - பசுமுதலான பிறவிகள். நல்லவையும் தீயவையுமான மனுஷ்யப்பிறவிகளும் விரோதப்படாதவை என ஆற்றலால் கண்டுகொள்க. (ஆற்றல் - சப்தசக்தி. நல்லனவும் தீயனவுமான இருபிறவிகளையும் உணர்த்துகின்ற சொல்லின் சக்தியினால் - நன்மையும் தீமையும் கலந்து அவ்விருபிறவிகட்கும் இடையிலுள்ள மனிதப்பிறவி தொனிக்கப்படுகின்றது. அதனை இங்கே கொள்ளுதல் ஒருநியாயத்திற்கும் விரோதமில்லை. ஆகவே, மானிடப் பிறவியையும் கூட்டிக்கொள்க.)

இது சொல்லப்பட்டதாகின்றது :— பிரகிருதியில் தங்கியுள்ள தன்மை - அவித்யை. குணங்களில் பற்று - காமம். (இவையிரண்டும்) ஸம்ஸாரத்திற்குக் காரணமாம் என்பது. (அவித்யை - உபாதாநகாரணம். காமம் - நிமித்தகாரணம்.—ஆ.)

ஆத்மஅறிவு ஸம்ஸாரத்தை ஒழிக்கும்.

அது நீக்குவதற்காகக் கூறப்படுகின்றது [அவித்யை, காமம் என்ற அவ்விருவிதக் காரணத்தையும் நீக்கவேண்டுமென்று உபதேசிக்கப்படுகின்றது]. இவ்விரண்டும் ஒழிதற்குக்காரணம் துறவோடுகூடிய ஞான வைராக்கியங்கள். (அவை) கீதாசாஸ்திரத்தினுள் தெளிவாய் உபதேசிக்கப்பட்டுள்ளன: க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களைப்பற்றிய அந்த அறிவு "எதனை அறிந்து சாகாமையைப் பெறுகின்றானோ" (௧௩ - ௧௨) என முன்னர் விரித்துரைக்கப்பட்டது; மேலும், வேறானவற்றை நீக்குவதனாலும் (௧௩ - ௧௨) அதன் தன்மையல்லாதவற்றை ஏற்றுவதனாலும் (௧௩ - ௧௩) கூறப்பட்டது. (௨௧)

ஆத்மாவினுடைய வாஸ்தவத்தன்மை.

மீளவும் அதனையே நேரே குறிப்பிட்டு உணர்த்துதல் செய்யப்படுகின்றது [முக்தியைக் கொடுப்பதாகப் பிரகிருதத்தில் பேசப்பட்டுவரும் ஞானத்தை நேரே உணர்த்தும்பொருட்டு இச்சுலோகம் எழுகின்றது.—ஆ.]:

௨௨. 𑌉𑌪𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑌾 𑌚 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌚𑌾𑌪𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌦𑍇𑌹𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑌰𑌃 ॥

𑌉𑌪𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌸𑌮𑍀𑌪𑌸𑍍𑌥𑌃 𑌸𑌨𑍍 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌅𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑌃 । 𑌯𑌥𑌾 𑌋𑌤𑍍𑌵𑌿𑌗𑍍𑌯𑌜𑌮𑌾𑌨𑍇𑌷𑍁 𑌯𑌜𑍍𑌞𑌕𑌰𑍍𑌮𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑍇𑌷𑍁 𑌤𑌟𑌸𑍍𑌥𑌃 𑌅𑌨𑍍𑌯𑌃 𑌅𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑌃 𑌯𑌜𑍍𑌞𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑍁𑌶𑌲𑌃 𑌋𑌤𑍍𑌵𑌿𑌗𑍍𑌯𑌜𑌮𑌾𑌨𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌗𑍁𑌣𑌦𑍋𑌷𑌾𑌣𑌾𑌂 𑌈𑌕𑍍𑌷𑌿𑌤𑌾, 𑌤𑌦𑍍𑌵𑌚𑍍𑌚 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑍇𑌷𑍁 𑌅𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑌃 𑌅𑌨𑍍𑌯𑌃 𑌤𑌦𑍍𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌾𑌨𑌾𑌂 𑌸𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑌾𑌮𑍀𑌪𑍍𑌯𑍇𑌨 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌉𑌪𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 । 𑌅𑌥 𑌵𑌾 — 𑌦𑍇𑌹𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾𑌰𑌃 ; 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌬𑌾𑌹𑍍𑌯𑌃 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌦𑍇𑌹𑌃, 𑌤𑌤𑌃 𑌆𑌰𑌭𑍍𑌯 𑌅𑌨𑍍𑌤𑌰𑌤𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍 𑌸𑌮𑍀𑌪𑍇 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾, 𑌯𑌤𑌃 𑌪𑌰𑌃 𑌅𑌨𑍍𑌤𑌰𑌤𑌰𑌃 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 ; 𑌸𑌃 𑌅𑌤𑌿𑌶𑌯𑌸𑌾𑌮𑍀𑌪𑍍𑌯𑍇𑌨 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌉𑌪𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌵𑌦𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑍀𑌕𑌰𑌣𑌾𑌤𑍍 𑌉𑌪𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 । 𑌅𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑌾 𑌚 — 𑌅𑌨𑍁𑌮𑍋𑌦𑌨𑌮𑌨𑍁𑌮𑌤𑌿𑌃, 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍍𑌸𑍁 𑌤𑌤𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍁 𑌪𑌰𑌿𑌤𑍋𑌷𑌃, 𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑌾 𑌅𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑌾 𑌚 । 𑌅𑌥 𑌵𑌾, 𑌅𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑌾 — 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌪𑍍𑌰-

---

௨௨. ***இந்த உடம்பினுள் (உள்ள) மேலான புருஷன் கிட்டநின்று பார்ப்பவன்; அநுமதிப்பவன், தாங்குபவன், அநுபவிப்பவன், மேலான ஈச்வரன், பரமாத்மாஎன்றும் கூறப்பெற்றவன்.***

கிட்டநின்று பார்ப்பவன்-ஸமீபத்திலே நின்று தான் தொழிற்படாதவனைப்பார்ப்பவன், (ஸந்நிதிமாத்திரத்தால் ஸாக்ஷியாயிருப்பவன், கண்காணியாயிருப்வன். இங்கே, பார்ப்பதென்பது-பார்த்தலென்னும் தொழிலன்று; தொழிலில்லாத ஸந்நிதிமாத்திரமே தானென்க.—ஆ.) ரித்விக்குக்களும் யஜமானனும் யாககர்மங்களைச் செய்துகொண்டிருக்கும்பொழுது, யாகவித்யையில் மிகவும்தேர்ச்சிபெற்ற பொதுவான வேறொருவன் (அவற்றில்) தலைப்படாதவனாய் ரித்விக் யஜமானர்களுடைய செய்கையின் குணத்தையும் குற்றத்தையும் எவ்வாறு நோக்கிக்கொண்டிருக்கிறானோ, அதுபோல, உடம்பு இந்திரியங்களின் செய்கைகளில் தலைப்படாத அன்னியனாய், அவற்றினும் வேறானவனாய், அந்த உடம்புஇந்திரியங்களையும், அவற்றின் செய்கைகளையும் கிட்டநோக்கிக்கொண்டிருப்பவன் - கிட்டநின்று பார்ப்பவன். அல்லது, (இவ்வாறு கொள்ளலாம்) :— உடம்பு, கண், மனம், புத்தி என்பன - பார்க்கும்பொருள்கள் ; அவற்றுள், வெளியிலுள்ள பார்க்கும்பொருள் - உடம்பு. அதுதொடங்கி மிகவும் உள்ளேயுள்ளதும், மிகச்சமீபத்திலிருந்து பார்ப்பதும் - ஆத்மா ; ஏனெனில், மிகவும் உள்ளேயுள்ள பார்க்கும்பொருள் (அதனினும்) வேறு இல்லை. அது மிகச்சமீபத்திலிருந்து [இடையீடில்லாது] பார்ப்பதாயிருத்தலால், கிட்டநின்று பார்க்கும்பொருளாம். அல்லது, யாகத்தை மேல்பார்ப்பவன்போல, (இந்த ஆத்மா அறிவுமாத்திர வடிவமாய்) எல்லாவற்றையும் மேல்பார்ப்பதனால், மேல்பார்க்கும் பொருளென்க. *அநுமதித்தல்* - அநுமோதித்தல், (தாமாகத் தொழில்களைச் செய்கிறவர்கள் அவற்றைச்) செய்யும்போது, அவரது செய்கைகளிலே சந்தோஷித்தல் ; அதனைச் செய்பவன் - *அநுமதிப்பவன்.* அல்லது, (ஆத்மாவான புருஷன்) உடம்பு இந்திரியங்களின் செய்கைகளில் தான் செல்

[illegible]

லாதவனாயினும், சென்றவன்போல அவற்றிற்கு அநுகூலமாக [அவற்றிற்குத் துணையாகத் தொழிற்பட்டவன்போலக்] காணப்படுகிறான் ; அதனால், **அநுமதிப்பவன்** என்க.—அல்லது, தம்தம்செய்கைகளில் சென்றுள்ளவர்கட்கு ஸாக்ஷியாயுள்ள (அவன்) அவர்களைத் தடுப்பதில்லையாதலால், **அநுமதிப்பவன்** என்க. தாங்குதலென்பது - சைதந்யத்தின் தோற்றங்களாய் ஒருங்குசேர்ந்துள்ள உடம்பு இந்திரியங்கள் மனம் புத்தி என்பன, சைதந்யமான ஆத்மாஎன்னும் உண்மைப்பொருள் காரணமாகத் தமது வடிவங்களைத் தாங்கிக்கொண்டிருத்தல் எதுவோ,அது. (அது) சைதந்யமான ஆத்மாவினாலானதேயாதலின், ஆத்மாவான (புருஷன்) **தாங்குபவன்** எனப்படுகிறான். (சைதந்யம்-அறிவுப்பொருள். கயிறுஎன்னும்காரணமில்லாவிடில், கயிற்றின்தோற்றமான பாம்பிற்கு நிலைப்பு இல்லை ; ஆகவே, பாம்பைத் தாங்குவது கயிறு என்க. அதுபோல, இங்கு நோக்கிக்கொள்க.) இன்ப துன்ப மயக்க வடிவங்களாய், எல்லாவிஷயங்களையும்பற்றியவையான புத்தியின்உணர்ச்சிகள் உண்டாகும்போது சைதந்யமான ஆத்மாவினால் விழுங்கபெற்றவைபோல(க் காணப்பட்டு), நெருப்புச்சூடுபோல [நெருப்பு, சூடுவடிவமாயிருப்பதுபோல] எப்பொழுதும் அறிவுவடிவான (ஆத்மாவினால்) வெவ்வேறாகத் தெளிவாய்ப் புலப்படுகின்றன ; ஆதலால், ஆத்மா **அநுபவிப்பவன்** எனப்படுகிறான். எல்லாவற்றினுடைய ஆத்மாவாகவும், சுதந்திரமாகவும் இருத்தலால் (அவன்) **மேலான ஈச்வரனும்.** அறியாமையினால் உள்ளேயுள்ள ஆத்மாவாகக் கற்பிக்கப்பட்டவையாய் உடம்புமுதலாக அவ்யக்தம்ஈறாகவுள்ளவற்றிற்கு அவன் உயர்ந்தஆத்மா, கிட்டநின்று பார்த்தல்முதலிய லக்ஷணங்களுள்ள மேலான ஆத்மா ; ஆகவே, பரமாத்மா என்க. **ஆதலால், அவன் ''பரமாத்மா'' என்ற இச்சொல்லினாலும் சுருதியினுள் கூறப்பெற்றவன்.—அவன் எங்கே இருக்கிறான் ? — ''உயர்ந்தபுருஷன்''** (கடு - கஎ) என இனிக் கூறப்படுவன் எவனோ, (அந்தப்) **புருஷன் அவ்யக்தத்தைக் கடந்துநிற்பவனாய் இச்சரீரத்தில் இருக்கின்றான்.**

(௨௨)

'க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி' இதி உபந்யஸ்தஸ்ய, வ்யாக்யாய உபஸம்ஹ்ருதஸ்ய, தஸ்ய ஏதஸ்ய யதோக்தலக்ஷணஸ்ய ஜ்ஞாநஸ்ய—

௨௩. ய ஏவம் வேத்தி புருஷம் ப்ரக்ருதிம் ச குணை: ஸஹ ।
ஸர்வதா வர்த்தமாநோऽபி ந ஸ பூயோऽபிஜாயதே ॥

ய: ஏவம் யதோக்தப்ரகாரேண வேத்தி புருஷம் ஸாக்ஷாத் 'அயம் அஹம் அஸ்மி' இதி, ப்ரக்ருதிம் ச யதோக்தாம் அவித்யாலக்ஷணாம் குணை: ஸ்வவிகாரை: ஸஹ நிவர்த்திதாம் அபாவம் ஆபாதிதாம் வித்யயா, ஸர்வதா ஸர்வப்ரகாரேண வர்த்தமாநோऽபி ந ஸ: பூய: பதிதே அஸ்மிந் வித்வச்சரீரே தேஹாந்தராய ந அபிஜாயதே ந உத்பத்யதே, தேஹாந்தரம் ந க்ருஹ்ணாதி இத்யர்த்த: । அபிசப்தாத் கிமு வக்தவ்யம் ஸ்வவ்ருத்தஸ்தோ ந ஜாயதே இதி அபிப்ராய: ॥

நநு— யத்யபி ஜ்ஞாநோத்பத்த்யநந்தரம் புநர்ஜந்மாபாவ: உக்த:, ததாபி ப்ராக் ஜ்ஞாநோத்பத்தே: க்ருதாநாம் கர்மணாம், உத்தரகாலபாவிநாம் ச, யாநி ச அதிக்ராந்தாநேகஜந்மக்ருதாநி தேஷாம் ச, ஸர்வேஷாம் நாஶோ ந யுக்த: இதி, ஸ்யு: த்ரீணி ஜந்மாநி, க்ருதவிப்ரணாஶோ ஹி ந யுக்த இதி, யதா

ஆத்ம அறிவின் பயன்.

“க்ஷேத்ரஜ்ஞனை நானாகவும் அறி” (௧௩ - ௨) எனக் கூறப்பட்ட (விஷயம்) விரித்துரைத்து முடிக்கப்பெற்றது. அந்தக் கீழ்க்கூறிய லக்ஷணங்களுள்ள இவ்வாத்மா வாகிய

௨௩. புருஷனையும், பிரகிருதியையும் குணங்களோடுகூட எவன் இவ்வாறு அறிகின்றானோ, அவன் எப்படி இருந்தாலும் மீளவும் பிறப்பதில்லை.

எவன் புருஷனை கீழ்க்கூறியவாறு [ஜீவன், ஈச்வரன்முதலிய கற்பனைகளனைத்திற்கும் ஆதாரமாக] “இதோ நான் இருக்கிறேன்” என்று ஆத்மாவாக நேரே அறிகிறானோ; கீழ்க்கூறிய [ஆதியில்லாததாய், இன்னதென்று சொல்லுதற்கு வாராததாய், அனர்த்தங்களனைத்திற்கும் அடிக்காரணமான] அவித்யையென்னும்பிரகிருதியையும் அதன் வேறுபாடுகளையும் அறிகிறானோ, (அதாவது அது) ஞானத்தினால் நீக்கப்பட்டதாக, இல்லாமையை அடைவிக்கப்பெற்றதாக [இல்லாமற்போனதாக] அறிகிறானோ; அவன் எவ்வாறு இருந்தாலும் [விதிப்படி நடந்தாலும், விலக்கியதைச் செய்தாலும்] மீண்டும்பிறப்பதில்லை, ஞானியினுடைய இச்சரீரம் மாய்ந்தபின்பு வேறோர்சரீரத்திற்கு உண்டாவதில்லை, வேறோர்சரீரத்தை எடுப்பதில்லை என்பது பொருள். (“எப்படியிருந்தாலும்” என்பதிலுள்ள) உம் என்னும்சொல்லினால் - தனது நல்லொழுக்கத்திலுள்ளவன் பிறக்கமாட்டானெனக் கூறவும்வேண்டுமோ? என்பது கருத்து.

(ஆக்ஷேபம்) :—அப்படியானால், ஞானம் பிறந்தபின்பு மறுபிறப்பின்மை கூறப்பட்டது. ஆயினும், ஞானமுண்டாதற்கு முன் செய்யப்பட்ட கர்மங்களும், (அதற்குப்) பிற்காலத்திலுள்ள கர்மங்களும், சென்ற பல பிறப்புக்களில் செய்யப்பட்டவை எவையோ அக்கர்மங்களும் பயனைக் கொடாது அழிதல் பொருந்தாமையின், (இன்னும்) மூன்று ஜன்மங்கள் உண்டு. ஏனெனில், செய்தன அழிதல் ஏலாதாதலின் (கர்மங்கள் பயனைத் தராது அழியா). உதாரணமாக, பயனிலே [அதனைக் கொடுப்பதிலே] தலைப்

सह प्रवृत्तानाम् आरब्धानां कर्मणाम्। न च कर्मणां विशेषः अवगम्यते। तस्मात् त्रिप्रकाराण्यपि कर्माणि त्रीणि जन्मानि आरभेरन्; संहतानि वा सर्वाणि एकं जन्म आरभेरन्। अन्यथा कृताकृत-विप्रणाशे सर्वत्र अनाश्वासप्रसङ्गः, शास्त्रानर्थक्यं च स्यादित्यतः इदम् अयुक्तम् उक्तं 'न स भूयोऽभिजायते' इति॥

न; 'क्षीयन्ते चास्य कर्माणि' 'ब्रह्म वेद ब्रह्मैव भवति' 'तस्य तावदेव चिरम्' 'इषीकातूलवदस्य सर्वाणि कर्माणि प्रदूयन्ते' इत्यादिश्रुतिशतेभ्यः। उक्तश्च अर्थः 'यथैधांसि' इत्यादिना सर्व-

---

பட்டு (இப்பொழுதுள்ள) பிறப்பை விளைத்த கர்மங்கள் (ஞானத்தால் அழியமாட்டா). மேலும், கர்மங்கட்கு வேற்றுமை காணப்படவில்லை. ஆகவே, மூவகைக்கர்மங்களும் மூன்றுஜன்மங்களை விளைக்கவேண்டும்; எல்லாம் ஒருங்குகூடியாயினும் ஒருஜன்மத்தை விளைக்கவேண்டும். இல்லாக்கால், செய்தன அழியுமளவிலே, எங்குமே நிச்சயமின்மை யாகும்; சாஸ்திரம் வீணுதலும் வேண்டும். ஆதலால், **"அவன் மீளவும் பிறப்பதில்லை"** என்ற இது நேரில்லாது கூறப்பட்டது. (க. இப்பொழுதுள்ள உடம்பை உண்டாக்கிப் பயனைக்கொடுப்பது ஒன்று. உ. இப்பொழுதுள்ள ஜன்மத்தில் ஞானமுண்டாதற்கு முன்செய்யப்பட்டது ஒன்று. ௩. ஞானமுண்டானதற்குப் பின் செய்யப்படுவது ஒன்று. ௪. சென்ற பல பிறவிகளில் செய்தது ஒன்று. என நான்குவகைப்பட்ட கர்மங்களெல்லாம் அஜ்ஞானத்தினாலானமையின் அவற்றுள் ஒன்றற்கொன்று வித்தியாசமில்லை. ஆகவே, முதல்வகைக் கர்மமானது ஞானமுண்டானபின்பும் தனதுபயனைக் கொடுக்குமாறுபோல, "அநுபவியாது கர்மம் தேயாது" என்னும்நியாயப்படி பிந்தின மூவகைக்கர்மங்களும் ஓரோர்வகைக்கு ஓரோர்ஜன்மமாக மூன்று ஜன்மங்களை அதிகமாகக் கொடுக்கவேண்டும்; அல்லது, அவையெல்லாம் ஒருங்குசேர்ந்தாயினும் ஒரு ஜன்மத்தைக் கொடுக்கவேண்டும். இனி, செய்தன அநுபவிக்கப்படாது அழியுமாயின், முதல்வகைக்கர்மமுந்தான் பயனைக் கொடுப்பதென்பதில் நிச்சயமில்லை என்றும், கர்மத்தைப்பற்றிய சாஸ்திரம் வீண் என்றும் ஆகும். ஆகவே, "அவன்மீண்டும் பிறப்பதில்லை" என்பது சரியில்லை.—ஆ.)

(**ஸமாதாநம்**) :—அப்படியன்று; "இவனுடைய கர்மங்கள் தேய்கின்றன" (மு - உ - உ - அ), "ப்ரஹ்மத்தை அறிகிறுன், ப்ரஹ்மமாகவே ஆகிறுன்" (மு - ௩ - உ - ௯), "(எவ்வளவுகாலம்வரை இச்சரீரத்தினின்றும் நீங்கவில்லையோ) அவனுக்கு அவ்வளவே தாமதம்" (சா - ௬ - ௧௪ - உ), கர்மங்களெல்லாம் நாணல்பூப்பஞ்சுபோல எரிக்கப்படுகின்றன" (சா - ரு - உ௪ - ௩) என்பனமுதலிய நூற்றுக்கணக்கான சுருதிகளாலென்க. இங்கேயும், கர்மங்களெல்லாம் எரிந்துபோதலானது - "எவ்வாறு விறகுகளை" (௪ - ௩௭) என்பது முதலாகக் கூறப்பட்டுள்ளது; மேலும், (அதனைப் பகவான்) அருளிச்செய்வர். (ஸம்ஸாரத்தினின்றும் நீங்கவிரும்பி ஞானத்திலே நிலைத்தவனை, தருமங்களையும் அதருமங்களையும் விட்டொழியும்படி ௧௮ - ௬௬ல் உபதேசிக்கிறுர். இதனுல் - ஞானத்தால் கர்மம் எரிந்துபோதல் குறிக்கப்படுகின்றது.—ஆ.) இன்னும்,

[illegible]

[illegible]

(ஆக்ஷேபம்) :—இனி, ஞானமுண்டானதற்குப் பிற்காலத்தில் செய்யப்பட்ட கர்மங்கள் ஞானத்தீயால் [illegible] ஞானத்தால் எரிக்கப்படாதல் இருக்கின்றன. மற்றும், இப்பிறப்பிலே ஞானமுண்டாவதற்கு முன்செய்யப்பட்ட கர்மங்களும், சென்றபல பிறவிகளில் செய்யப்பட்ட கர்மங்களும் (ஞானத்தீயால்) எரிக்கப்படாதல் காது.

(ஸமாதாநம்) :—அப்படியன்று; "எல்லாக்கர்மங்களையும்" (ச - கர) என நிர்தேசித்தலால்.

(ஆக்ஷேபம்) :—ஞானத்திற்குப் பிற்காலத்திலுள்ள எல்லாக்கர்மங்களுந்தான் ஞானத்தால் எரிக்கப்படாகும்) எனில்,—

(ஸமாதாநம்) :—அப்படியன்று; (அவ்வாறு) வரையறுத்ததற்குக் காரணம் இல்லாததனால்.

यत्तु उक्तं "यथा वर्तमानजन्मारम्भकाणि कर्माणि न क्षीयन्ते फलदानाय प्रवृत्तान्येव सत्यपि ज्ञाने, तथा अनारब्धफलानामपि कर्मणां क्षयो न युक्तः" इति—तदसत्। कथम्? —तेषां मुक्तेषुवत् प्रवृत्तफलत्वात्। यथा पूर्वं लक्ष्यवेधाय मुक्त इषुः धनुषः लक्ष्यवेधोत्तरकालेऽपि आरब्धवेगक्षयात् पतनेनैव निवर्तते, एवं शरीरारम्भकं कर्म शरीरस्थितिप्रयोजने निवृत्तेऽपि, आसंस्कारवेगक्षयात् पूर्ववत् वर्तत एव। यथा स एव इषुः प्रवृत्तिनिमित्तानारब्धवेगस्तु अमुक्तो धनुषि प्रयुक्तोऽपि उपसंह्रियते, तथा अनारब्धफलानि कर्माणि स्वाश्रयस्थान्येव ज्ञानेन निर्बीजीक्रियन्ते इति, पतितेऽस्मिन् विद्वच्छरीरे 'न स भूयोऽभिजायते' इति युक्तमेवोक्तमिति सिद्धम् ॥ ௨௩ ॥

अत्र आत्मदर्शने उपायविकल्पाः इमे ध्यानादयः उच्यन्ते—

௨௪. ध्यानेनात्मनि पश्यन्ति केचिदात्मानमात्मना ।
अन्ये सांख्येन योगेन कर्मयोगेन चापरे ॥

இனி, "பயனைக்கொடுக்கத் தலைப்பட்டு இப்பொழுதுள்ளபிறப்பை விளைத்த கர்மங்கள், ஞானமிருந்தும் [ஞானமுண்டான பின்பும்] தேய்ந்துபோகாதவாறுபோல, பயனை விளைக்கத்தொடங்காத கர்மங்களும் தேய்ந்துபோகாமை பொருந்தியது" என எது கூறப்பட்டதோ, அது சரியன்று.—எப்படி ? —அவை, எய்த அம்புபோல, பயனை(க் கொடுக்க)த் தலைப்பட்டுள்ளமையின். எவ்வாறு ஓர் குறியைத் துளைக்க வில்லினின்றும் ஒருகால் விடுத்த அம்பு குறியைத் துளைத்தபின்பும் (ஓயாது) தொடங்கிய விசை குறைய(க் கீழே)விழுந்துதான் ஓய்கின்றதோ, அவ்வாறே, உடம்பைஉண்டாக்கிய கர்மமானது - உடம்பு உள்ளதின் பிரயோஜனம் ஒழிந்திட்டதாயினும், (அக்கர்ம) வாஸநாவலிமையின் வேகம் குன்றும்வரை முன்போல செல்லவே செல்லுகின்றது. ஆனால், எவ்வாறு அதேஅம்பானது வில்லில் தொடுக்கப்பெற்றதாயினும், செல்லுதற்குக் காரணமான வேகத்தால் செலுத்தப்படாதவளவிலே (குறியை நோக்கி) விடப்படாததாய் (வில்லினின்றும்) பிரித்தெடுக்கப்படுகின்றதோ, அவ்வாறு, பயனைக் கொடுக்கத்தலைப்படாத கர்மங்கள் தமது இருப்பிடத்தினின்றே [சைதந்யப்பிரதிபலநமுள்ள அகக்கரணத்தினின்றே] மெய்யறிவினால் விதையற்றுப்போமாறுசெய்யப்படுகின்றன [முளைக்கும்சக்தியில்லாமற்போகின்றன]; ஆகவே, ஞானியினுடைய இவ்வுடம்பு இறந்தவளவிலே "அவன் மீளவும் பிறப்பதில்லை" என்று கூறியது நேர்தான் என அமைந்தது. (௨௩)

ஆத்மஞானத்திற்கு நால்வகை வழிகள்.

இனி, ஆத்மாவைக் காண்பதற்குத் தியானம்முதலிய அநேகமான இந்த வழிவகைகளை அருளிச்செய்கிறார் :

௨௪. சிலர் தியானத்தால் புத்தியினுள் ஆத்மாவை அகக்கரணத்தால் காண்கிறார்கள் : வேறுசிலர் ஸாங்க்ய யோகத்தினாலும், வேறுசிலர் கர்மயோகத்தினாலும் (காண்கிறார்கள்).

௨௫. [illegible] ॥

[illegible] ॥ ௨௪ ॥

௨௫. மற்று, வேறுசிலர் இவ்வாறு அறியாதவராய்ப் பிறரிடம் கேட்டுத் தொழுகிறார்கள்; கேட்டதையே சிறந்த கதியாகக்கொண்ட [அதனையே கடைப்பிடித்த] அவர்களுங்கூட இறப்பைக் கடந்தேவிடுகிறார்கள்.

தியானமென்பது - ஓசை முதலிய விஷயங்களினின்றும் செவி முதலிய இந்திரியங்களை [illegible] மனத்தினுள் இழுத்து ஒடுக்கி, மனத்தையும் உள்ளேயுள்ள அறிவுப்பொருளினிடத்து ஒடுக்கி (அப்பொருளையே) சிந்தித்தல் எனுமிவை, அது; அவ்வண்ணமே, "கொக்கு தியானிப்பதுபோலும், [illegible] தியானிப்பதுபோலும், ... மலைகள் தியானிப்பதுபோலும்" ([illegible]) என உவமைகளை எடுத்தாளுவதனால் [illegible] இடையறாத எண்ணம் - தியானம். யோகிகள் [உத்தமாதிகாரிகள்] அந்தத் தியானத்தினால் தமது உள்ளத்தினில் (புத்தியில்) தியானத்தால் சீர்திருத்திய அந்தக்கரணத்தினாலே புத்தியினால் ஆத்மாவை, உள்ளேயுள்ள அறிவுப்பொருளை (ப்ரத்யகாத்மாவை)க் காண்கிறார்கள்.—ஸாங்க்யமென்பது - "இவை ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் குணங்கள்; ஆத்மா அவற்றின் செயல்களுக்கு, ஸாக்ஷியாய், நித்யமாய், குணங்கட்கு வேறாயுள்ளது" எனச் சிந்திக்கல். இதுவே ஸாங்க்யமென்னும் யோகமாம். (ஸாங்க்யம் - ஆராய்ச்சியால் பிறக்கும் அறிவு. இது யோகத்தைத் தருவதனால், யோகம் எனப்படுகின்றது.—ஆ.) சிலர் [மத்யமாதிகாரிகள்] அந்த ஸாங்க்யயோகத்தினால் "ஆத்மாவை அகக்கரணத்தினால் காண்கிறார்கள்" எனத் தொடரும்.—கர்மமென்பது யோகம்; ஈச்வரார்ப்பணஎண்ணத்தோடு அநுஷ்டிக்கப்படும் கர்மமானது யோகத்திற்காவதனால் உபசாரவழக்கைக் கொண்டு யோகம் எனப்படுகின்றது. (கர்மம் சித்தத்தைச் சுத்தப்படுத்துவதனால் யோகத்திற்கு, சித்தம் ஒருநிலைப்படுதற்குக்காரணமாம்.—ஆ.) சிலர் [மந்தாதிகாரிகள்] அக்கர்மயோகத்தினால் மனம்திருந்தி ஞானமுண்டாதல் வழியாக (ஆத்மாவைக் காண்கிறார்கள்.)

(௨௪)

அந்யே து ஏதேஷு விகல்பேஷு அந்யதமேநாபி ஏவம் யதோக்தம் ஆத்மாநம் அஜாநந்த: அந்யேப்ய: ஆசார்யேப்ய: ஶ்ருத்வா "இதமேவ சிந்தயத" இதி உக்தா: உபாஸதே ஶ்ரத்ததாநா: ஸந்த: விஜ்ஞயந்தி । தேऽபி ச அதிதரந்த்யேவ அதிக்ராமந்த்யேவ ம்ருத்யும் — ம்ருத்யுயுக்தம் ஸம்ஸாரமித்யேதத் — ஶ்ருதிபராயணா: ஶ்ருதி: ஶ்ரவணம் பரம் அயநம் கமநம் மோக்ஷமார்கப்ரவ்ருத்தௌ பரம் ஸாதநம் யேஷாம் தே ஶ்ருதிபராயணா: ; கேவலபரோபதேஶப்ரமாணா: ஸ்வயம் விவேகரஹிதா: இத்யபிப்ராய: । கிமு வக்தவ்யம் 'ப்ரமாணம் ப்ரதி ஸ்வதந்த்ரா: விவேகிந: ம்ருத்யுமதிதரந்தி' இதி ॥ ௨௫ ॥

'க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி' இதி க்ஷேத்ரஜ்ஞேஶ்வரைகத்வவிஷயம் ஜ்ஞாநம் மோக்ஷஸாதநம் 'யஜ்ஜ்ஞாத்வாऽம்ருதமஶ்நுதே' இத்யுக்தம், தத் கஸ்மாத் ஹேதோரிதி? தத்தேதுப்ரதர்ஶநார்தம் ஶ்லோக: ஆரப்யதே । யஸ்மாத் —

உகூ. யாவத்ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்த்வம் ஸ்தாவரஜங்கமம் ।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோகாத் தத்வித்தி பரதர்ஷப ॥

யாவத் யத் கிஞ்சித் ஸஞ்ஜாயதே ஸமுத்பத்யதே ஸத்த்வம் வஸ்து — கேந விஶேஷேண? இதி உச்யதே — ஸ்தாவரம் ஜங்கமம் ச க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோகாத் தத் ஜாயதே இத்யேவம் வித்தி ஜாநீஹி ஹே பரதர்ஷப ॥

இவ்வகைகளுள் எதாவதொன்றிலும் கீழ்க்கூறியவாறு ஆத்மாவை அறியமாட்டாத பற்றையோர் [மிகவும் மந்தர்களான அதிகாரிகள்] பிறரிடத்தினின்றும் = ஆசார்யரிடத்தினின்றும் கேட்டு, "இதனை இவ்வாறு தியானிக்க" என உபதேசிக்கப்பட்டவராய்த் தொழுகிறார்கள், நம்பிக்கையொடு தியானிக்கிறார்கள். அவர்களும் சாதலை, அதாவது சாதலோடமைந்த ஸம்ஸாரத்தைக் கடந்துவிடுகிறார்கள். **கேட்டதையே சிறந்தகதியாகக்கொண்ட** - கேட்டதையே, மோக்ஷவழியில்செல்லுதற்கு மேலான கருவியாகக்கொண்ட; கேவலம் பிறரது உபதேசத்தையே பிரமாணமாகவுடைய, தாமாகப் பகுத்தறியும் திறமையில்லாத என்பது கருத்து. "பிரமாணவிஷயத்திலே சுதந்திரராய் [பிரமாணங்களைத் தாமாகவே ஊகித்துணர்பவராய்]ப் பகுத்தறியும் சக்தியுள்ளவர் சாவினைக் கடந்துவிடுகிறார்கள்" எனக் கூறவும் வேண்டுமோ? (உரு)

ஆத்மாவைத்தவிர ஒன்றும் இல்லை.

"க்ஷேத்ரஜ்ஞனை நானாகவும் அறி" (கந - உ) என க்ஷேத்ரஜ்ஞனும் [ஆத்மாவும்] ஈச்வரனும் ஒன்று என்பதைப்பற்றிய அறிவானது "எதனை அறிந்து சாகாமையைப் பெறுகின்றனோ" (கந - கஉ) என முக்திக்கு ஸாதநமாகக் கூறப்பட்டது. அது எக்காரணத்தால் [அவ்வறிவு எதனால் அவ்வாறுள்ளது]? என்பது.—அக்காரணத்தை விளக்கும்பொருட்டு (இச்) சுலோகம் தொடங்கப்படுகின்றது :—ஏனெனில்,

உகூ. **பரதரிற் சிறந்தோனே! ஸ்தாவரமும் ஜங்கமமுமான யாதொருபொருள் உண்டாகின்றதோ, அதெல்லாம் க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞன் என்றவர்களுடைய ஸம்பந்தத்தால் (உண்டாவதாக) அறிந்துகொள்.**

[எல்லாம் க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞன் இவர்களுடைய ஸம்பந்தத்தால் பிறப்பது; க்ஷேத்ரஜ்ஞனாகிய பரமாத்மாவிற்குப் புறம்பாக ஒருபொருளும் இல்லை. ஆகவே, ஆத்மாவும் பரமாத்மாவும் ஒன்று என்னும்உணர்வே மோக்ஷத்தைத் தருவதென்க.—ஆ.]

பொருள்கள் எவ்வேற்றுமையோடு பிறக்கின்றது? என்பது.—கூறுகிறார் : ஸ்தாவரம், ஜங்கமம் (என்னும் வேற்றுமையோடு பிறக்கின்றன).

𑌕𑌃 𑌪𑍁𑌨𑌃 𑌅𑌯𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑍋𑌃 𑌸𑌂𑌯𑍋𑌗𑌃 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑌃 ? 𑌨 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌰𑌜𑍍𑌜𑍍𑌵𑍇𑌵 𑌘𑌟𑌸𑍍𑌯 𑌅𑌵𑌯𑌵𑌸𑌂𑌶𑍍𑌲𑍇𑌷𑌦𑍍𑌵𑌾𑌰𑌕𑌃 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 𑌸𑌂𑌯𑍋𑌗𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇𑌣 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿, 𑌆𑌕𑌾𑌶𑌵𑌤𑍍 𑌨𑌿𑌰𑌵𑌯𑌵𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌨𑌾𑌪𑌿 𑌸𑌮𑌵𑌾𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌃, 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑍋𑌃 𑌇𑌤𑌰𑍇𑌤𑌰𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌭𑌾𑌵𑌾𑌨𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌤𑍍 𑌇𑌤𑌿 ॥

𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 — 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑍋𑌃 𑌵𑌿𑌷𑌯𑌵𑌿𑌷𑌯𑌿𑌣𑍋𑌃 𑌭𑌿𑌨𑍍𑌨𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌯𑍋𑌃 𑌇𑌤𑌰𑍇𑌤𑌰𑌤𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌾𑌸𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌸𑌂𑌯𑍋𑌗𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑌿𑌵𑍇𑌕𑌾𑌭𑌾𑌵𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌃, 𑌰𑌜𑍍𑌜𑍁𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌤𑌦𑍍𑌵𑌿𑌵𑍇𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌅𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌿𑌤𑌸𑌰𑍍𑌪𑌰𑌜𑌤𑌾𑌦𑌿𑌸𑌂𑌯𑍋𑌗𑌵𑌤𑍍 । 𑌸𑌃 𑌅𑌯𑌂 𑌅𑌧𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑍋𑌃 𑌸𑌂𑌯𑍋𑌗𑌃 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 । 𑌯𑌥𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌲𑌕𑍍𑌷𑌣𑌭𑍇𑌦𑌪𑌰𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌰𑍂𑌪𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌤𑍍, 𑌮𑍁𑌞𑍍𑌜𑌾𑌦𑌿𑌵 𑌇𑌷𑍀𑌕𑌾𑌂, 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌜𑍍𑌯 '𑌨 𑌸𑌤𑍍𑌤𑌨𑍍 𑌨𑌾𑌸𑌦𑍁-

---

(ஆக்ஷேபம்) :—க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களுக்குக் கருதப்பட்ட இச்சம்பந்தம் யாது? [அவர்களது சம்பந்தம் எப்படிப்பட்டதென்று கொள்ளப்பட்டது?] இனி, உறுப்புக்கள் ஒன்ருேடொன்று சேர்தல்வழியாக வரும் ஸம்யோகமென்னும் ஓர்வகைச்சம்பந்தம் கயிற்ருேடு குடத்திற்கு(உண்டாவது)போல, க்ஷேத்ரத்தோடு க்ஷேத்ரஜ்ஞனுக்கு (அத்தகைய சம்பந்தம்) நிகழாது; (க்ஷேத்ரஜ்ஞனை ஆத்மா) ஆகாசம்போல, உறுப்பில்லாததாகலின். அன்றியும், (நூல் ஆடைகட்கு இருப்பதுபோல,) க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்கட்கு ஸமவாயம் [ஒற்றிநிற்றல், நீக்கமின்றிநிற்றல்] என்னும் ஸம்பந்தமும் இல்லை; ஒன்றற்கொன்று கார்யகாரணத்தன்மையை[கார்யகாரணமென்பதை] ஏற்றுக்கொள்ள முடியாததலின் என்க.

(ஸமாதாநம்) :—கூறுவோம்: கயிறு, இப்பிமுதலியவற்றிற்கு - அவற்றைப் பகுத்தறியாமையினுல் ஏற்றப்பட்ட பாம்பு, வெள்ளி முதலியவற்றின் சம்பந்தம்போல, வெவ்வேறுதன்மையுள்ள விஷய விஷயிகளான க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்கட்கு - க்ஷேத்ரம் இன்னது, க்ஷேத்ரஜ்ஞன் இன்னுன் என்பதைப் பகுத்தறியாமையினுல் அமைவதாகி ஒன்றிலொன்றையும், அவற்றின் தன்மைகளையும் ஏற்றுதலாகிய சம்பந்தமாம் [தலைதடுமாற்றமாக ஒன்றில் மற்ருென்றை மயங்குதல் என்னும் ஸம்பந்தமாம்]. (குடத்தைக் கண் கண்டது என்றவிடத்து, குடம்போலஇருப்பது - விஷயம்; கண்போல இருப்பது - விஷயி. பிரகிருதத்தில், க்ஷேத்ரம் - விஷயம்; க்ஷேத்ரஜ்ஞன் - விஷயி.) க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்கட்கு அந்த(த் தடுமாற்றமாக)ஏற்றுதலாகிய இச்சம்பந்தமானது மயக்க உணர்வாய் உள்ளது. சாஸ்திரப்படி க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களது லக்ஷணங்களையும் வேற்றுமைகளையும் அறிவதோடு, இன்னது என்று முன் எடுத்துக் காட்டப்பட்ட க்ஷேத்ரத்தினின்றும் கீழ்க்கூறிய லக்ஷணங்களுள்ள க்ஷேத்ரஜ்ஞனை, முஞ்ஜைஎன்னும் புல்லினின்று நடுத்தாளைப் (பிரிப்பது)போலப்பிரித்து, "அது உள்ளதன்று; இல்லதன்று எனப்படுகின்றது" (கங - கஉ) என்பதனுல் உபாதிவேற்றுமையனைத்தும்

𑌚𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑍇𑌨 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌾𑌧𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿, 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌮𑌾𑌯𑌾𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌹𑌸𑍍𑌤𑌿𑌵𑌤𑍍 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌤𑍍 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌨𑌗𑌰𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 "𑌅𑌸𑌦𑍇𑌵 𑌸𑌦𑌿𑌵 𑌅𑌵𑌭𑌾𑌸𑌤𑍇" 𑌇𑌤𑌿 𑌏𑌵𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌃 𑌯𑌃, 𑌤𑌸𑍍𑌯 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍 𑌅𑌪𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌯 𑌜𑌨𑍍𑌮𑌹𑍇𑌤𑍋𑌃 𑌅𑌪𑌗𑌮𑌾𑌤𑍍 '𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌚 𑌗𑍁𑌣𑍈𑌃 𑌸𑌹' 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 "𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌭𑍂𑌯𑌃 𑌨 𑌅𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇" 𑌇𑌤𑌿 𑌯𑌤𑍍 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍 𑌉𑌪𑌪𑌨𑍍𑌨𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 ॥ ௨௬ ॥

'𑌨 𑌸 𑌭𑍂𑌯𑍋𑌽𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌫𑌲𑌮𑍍 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑌂𑌸𑌾𑌰𑌬𑍀𑌜𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌜𑌨𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑌃 𑌉𑌕𑍍𑌤𑌃 । 𑌜𑌨𑍍𑌮𑌕𑌾𑌰𑌣𑌂 𑌚 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌕𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑌂𑌯𑍋𑌗𑌃 𑌉𑌕𑍍𑌤𑌃; 𑌅𑌤𑌃 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌃 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌂 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌮𑌪𑌿 𑌪𑍁𑌨𑌃 𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௨௭. 𑌸𑌮𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍍𑌵𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌸 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ॥

𑌸𑌮𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌂—𑌕𑍍𑌵?—𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌸𑌮𑌸𑍍𑌤𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌷𑍁— 𑌕𑌮𑍍?—

ஒழிந்த அறியவேண்டிய ப்ரஹ்மத்தை எவன் ஸ்வரூபத்தால் காண்கிறானோ [அநுபவிக்கின்றானோ]; அன்றியும், ஜாலத்தால் படைக்கப்பட்ட யானை மாளிகை முதலியன போலவும், கனவில் கண்ட பொருள்போலவும், கந்தர்வநகரம் [மனத்தால் கற்பனை செய்யப்பட்ட ஆகாசபட்டணம்] போலவும் "இல்லாததேயான க்ஷேத்ரம் உள்ளது போலத் தோற்றுகின்றது" என இவ்வாறு மெய்ப்பிக்கப்பெற்ற அறிவினனாய் எவன் இருக்கின்றானோ; அவனுக்கு மயக்கஉணர்வு கீழ்க்கூறிய மெய்யுணர்வின் விரோதத்தால் போய்விடுகின்றது. அவனுக்குப் பிறப்பிற்குக் காரணம் போய்விடுவதனால் - "ஞானி மீளவும் பிறப்பதில்லை" என "எவன் இவ்வாறு" (௧௩ - ௨௩) என்பதனால் எது கூறப்பட்டதோ அது நேராகக் கூறப்பட்டது. (௨௬)

எங்கும் ஆத்மா ஒன்றுதான்.

"அவன் மீளவும் பிறப்பதில்லை" (௧௩ - ௨௩) என மெய்யுணர்வின் பயனானது அறியாமைமுதலிய ஸம்ஸாரவித்துக்கள் ஒழிந்திடுதல்மூலமாகப் பிறப்பின்மையானது கூறப்பட்டது; பிறவிக்குக் காரணமாய் அவித்யையினாலாகும் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞஸம்பந்தமும் கூறப்பட்டது. ஆதலால் அந்த அவித்யையைப் போக்கும் மெய்யுணர்வு கூறப்பெற்றதாயினும், மீண்டும் வேறுசொற்களால் கூறப்படுகின்றது :

௨௭. எல்லாப்பொருள்களுள்ளும் ஸமமாக இருக்கின்றவனும், அழிவனவற்றுள் அழியாதவனுமான பரமேச்வரனை எவன் காண்கின்றானோ, அவன் காண்கின்றான்.

வேற்றுமையில்லாது நிலைகொள்ளுகின்ற—எதனுள் ?—ப்ரஹ்மாமுதலாகஸ்தாவரம் ஈறாகவுள்ளப் பிராணிகளுள்.—(நிலைக்கொள்ளுகின்ற)யாரை ?—பரமேச்வரனை.

பரமேஶ்வரம் தே³ஹேந்த்³ரியமநோபு³த்³த்⁴யவ்யக்தாத்மநோ(அ)பேக்ஷ்ய பரமாத்மா ஸ ஈஶ்வரஶ்ச பரமேஶ்வர:, தம் ஸர்வேஷு பூ⁴தேஷு ஸமம் திஷ்ட²ந்தம் । தாநி விஶிநஷ்டி 'விநஶ்யத்ஸு' இதி, தம் ச பரமேஶ்வரம் 'அவிந-ஶ்யந்தம்' இதி, பூ⁴தாநாம் பரமேஶ்வரஸ்ய ச அத்யந்தவைலக்ஷண்யப்ரத³ர்ஶ-நார்த²ம் । கத²ம்? ஸர்வேஷாம் ஹி பா⁴வவிகாராணாம் ஜநிலக்ஷணோ பா⁴வவி-காரோ மூலம்; ஜந்மோத்தரகாலபா⁴விந: ஸர்வே பா⁴வவிகாரா: விநா-ஶாந்தா:; விநாஶாத் பரோ ந கஶ்சித் பா⁴வவிகாரோ(அ)ஸ்தி, பா⁴வாபா⁴வாத் । ஸதி ஹி த⁴ர்மிணி த⁴ர்மா ப⁴வந்தி । அதோ(அ)ந்த்யபா⁴வவிகாராபா⁴வாநுவாதே³ந பூர்வபா⁴விந: ஸர்வே பா⁴வவிகாரா: ப்ரதிஷித்³தா⁴ ப⁴வந்தி ஸஹ கா-ர்யை: । தஸ்மாத் ஸர்வபூ⁴தேஷு வைலக்ஷண்யம் அத்யந்தமேவ பரமேஶ்வரஸ்ய ஸித்³த⁴ம், நிர்விஶேஷத்வம், ஏகத்வம் ச । ய: ஏவம் யதோ²க்தம் பரமேஶ்வரம் பஶ்யதி, ஸ: பஶ்யதி ॥

ஸர்வோ(அ)பி லோக: பஶ்யதி, கிம் விஶேஷணேந? இதி ।

ஸத்யம் பஶ்யதி; கிந்து விபரீதம் பஶ்யதி । அத: விஶிநஷ்டி—ஸ

[illegible] ரூபமுள்ளவன்.) பரமேச்வரன் உடம்பு, இந்த்ரியங்கள், மனம், புத்தி, அவ்யக்தம் [காரணசரீரம், அவித்யை], ஜீவன் என்றவற்றைவிடச் சிறந்தவன், ஆளுந்தன்மையுள்ளவன். அவன் எல்லாப்பிராணிகளுள்ளும் சமமாக இருக்கின்றான். அவற்றை "அழிவனவற்றுள்" என விசேஷிக்கின்றார். பிராணிகட்கும் பரமேச்வரனுக்கும் முற்றும் வேற்றுமையைக் காட்டும்பொருட்டு பரமேச்வரனை "அழியாதவனும்" என விசேஷிக்கின்றார்.—எவ்வாறு?—எல்லாப் பாவவிகாரங்கட்கும் பிறத்தலென்னும் பாவவிகாரம் அடிக்காரணம். (பாவவிகாரம் - பொருள்கட்குள்ள நிலைவேறுபாடு. பிறத்தல், இருத்தல், வளர்தல், முதிர்தல், தேய்தல், அழிதல் என்பன பாவவிகாரங்களாம்.) அழிதலை முடிவாகக்கொண்ட மற்றைய எல்லாப் பாவவிகாரங்களும் பிறப்பிற்குப் பிற்காலத்து உண்டாகின்றவை. அழிதற்குப் பிற்பட்ட வேறெந்தப் பாவவிகாரமும் இல்லை; பொருளே இல்லாமற்போதலின். பொருளுள்ள தருணத்தே (அதன்) தன்மைகள் உண்டு [இருக்கக்கூடும்]. ஆகவே, கடைப்பட்ட பாவவிகாரம் இல்லாமற்போதலை அநுவதிப்பதனால்-அதற்குமுன் உண்டாகின்ற பாவவிகாரங்களெல்லாம் அவற்றின் காரியத்தோடுகூட மறுக்கப்பட்டவையாகின்றன. ஆதலால், பரமேச்வரன் எல்லாப்பிராணிகளோடும் முற்றுமே வேறுபட்டவன் எனவும், வேறுபாடு [பாவவிகாரம்] இல்லாதவன் எனவும், ஒருவன் தான் எனவும் அமைந்தன. எவன் இவ்வாறு மேற்கூறிய பரமேச்வரனைக் காண்கிறானோ, அவன் (நேரே) காண்கிறான்.

(ஆக்ஷேபம்):—அப்படியானால், உலகெல்லாந்தான் காண்கின்றது. (அவன் காண்கிறான் என) விசேஷித்துரைப்பதனால் என்ன? என்பது.

(ஸமாதானம்):—உண்மை; காண்கின்றது; மற்று, மாறாகக் காண்கின்றது. ஆதலால் விசேஷித்துரைக்கிறார் "அவன்தான் காண்கிறான்" என்று. திமிரத்தால்

𑌸 𑌏𑌵 𑌪𑌶𑍍𑌯𑌤𑍀𑌤𑌿 । 𑌯𑌥𑌾 𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌕𑍍𑌷𑌃 𑌅𑌨𑍇𑌕𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿, 𑌤𑌮𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌏𑌕𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑍀 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 — 𑌸 𑌏𑌵 𑌪𑌶𑍍𑌯𑌤𑍀𑌤𑌿 ; 𑌤𑌥𑌾 𑌇𑌹𑌾𑌪𑌿 𑌏𑌕𑌮𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿, 𑌸𑌃 𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑍇𑌕𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌦𑌰𑍍𑌶𑌿𑌭𑍍𑌯𑌃 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 — 𑌸 𑌏𑌵 𑌪𑌶𑍍𑌯𑌤𑍀𑌤𑌿 । 𑌇𑌤𑌰𑍇 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿, 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌅𑌨𑍇𑌕𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌿𑌵𑌤𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ உஎ ॥

𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌯 𑌫𑌲𑌵𑌚𑌨𑍇𑌨 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾, 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃 𑌆𑌰𑌭𑍍𑌯𑌤𑍇—

உஅ. 𑌸𑌮𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌨 𑌹𑌿𑌨𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌽𑌽𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌤𑌤𑍋 𑌯𑌾𑌤𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ‖

𑌸𑌮𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌉𑌪𑌲𑌭𑌮𑌾𑌨𑌃 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌸𑌮𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌤𑍁𑌲𑍍𑌯𑌤𑌯𑌾 𑌅𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌂, 𑌅𑌤𑍀𑌤𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌶𑍍𑌲𑍋𑌕𑍋𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 — 𑌸𑌮𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌕𑌿𑌮𑍍 ? — 𑌨 𑌹𑌿𑌨𑌸𑍍𑌤𑌿 𑌹𑌿𑌂𑌸𑌾𑌂 𑌨 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 𑌸𑍍𑌵𑍇𑌨𑍈𑌵 𑌸𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍍 । 𑌤𑌤𑌃 𑌤𑌦𑌹𑌿𑌂𑌸𑌨𑌾𑌤𑍍 𑌯𑌾𑌤𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌷𑍍𑌟𑌾𑌂 𑌗𑌤𑌿𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌖𑍍𑌯𑌾𑌮𑍍 ।

𑌨𑌨𑍁 𑌨𑍈𑌵 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑍀 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌸𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌹𑌿𑌨𑌸𑍍𑌤𑌿 । 𑌕𑌥𑌮𑍍

[ஓர்வகைக்கண்நோயினால்]பார்வை மழுங்கியவன் அநேக சந்திரர்களைக் காண்கிறான். அவனை நோக்க, ஒருசந்திரனைக் காண்பவனை "அவன்தான் காண்கிறான்" என விசேஷித்துரைக்குமாறுபோல, இங்கும், வேறுவேறாயில்லாத கீழ்க்கூறிய ஒரே ஆத்மாவை எவன் காண்கின்றானோ, அவன் - வேறு வேறான அநேக ஆத்மாக்களைத் தவறாகக் காண்பவரைக்காட்டிலும் "அவன்தான் காண்கிறான்" என விசேஷித்துரைக்கப்படுகின்றான். மற்றையோர்கள் காண்பவராயினும், காண்பவரல்லர்; அநேக சந்திரர்களைக் காண்பவன்போல, தவறாகக் காண்கின்றமையின்; என்பதுபொருள். (உஎ)

ஆத்ம உணர்வு மோக்ஷத்தைத் தரும்.

கீழ்க்கூறிய மெய்யுணர்விற்குப் பயனைக்கூறிப் புகழ்ச்சி செய்யவேண்டும் என (இச்)சுலோகம் தொடங்கப்படுகின்றது :

உஅ. **எங்கும் ஒப்பநிற்கின்ற ஈச்வரனை ஸமமாகக் காண்கிறவன் தன்னைத் தன்**
னால் ஹிம்ஸிப்பதில்லை ; அதனால் மேலான கதியை அடைகிறான்.

எல்லாப்பிராணிகளுள்ளும் ஒப்பநிற்கின்ற ஈச்வரனை, அதாவது, சென்ற அடுத்த
லோகத்தில் லக்ஷணம் கூறப்பெற்றவனை ஸமமாக [ஒரேவடிவுள்ளவனாக]க் கண்டுணர்
வன் என்ன (செய்வதில்லை) ?—தன்னைத் தானே ஹிம்ஸிப்பதில்லை, கொல்வதில்லை ;
அதனை [ஆத்மாவை] ஹிம்ஸியாமையினால், மோக்ஷமென்னும்பெயருடைய உயர்ந்த
தியைப் பெறுகிறான் [ஆத்மாவின் வாஸ்தவத்தன்மையை மறைக்கின்ற அஜ்ஞானத்
திரையும், பொய்யுணர்வுத்திரையும் அழிந்தவுடன், எல்லாவற்றினும் மேம்பட்ட கதி
ான உயர்ந்த புருஷார்த்தமாகிய பரமாநந்தத்தை ஞானி அநுபவிக்கிறான்.—ஆ.]

(ஆக்ஷேபம்) :—அப்படியானால், எந்தப்பிராணியுமேதான் தன் ஆத்மாவை
றிம்ஸிப்பதில்லை. "அக்நியைப் பிரதிஷ்டைசெய்தல் நிலத்தில் கூடாது, ஆகாசத்தில்

उपपद्यते च सर्वदा 'न हिनस्ति' इति? यथा 'न पृथिव्यामग्निश्चेतव्यो नान्तरिक्षे न दिवि' इत्यादि ॥

नैष दोषः. अज्ञानामात्मतिरस्करणोपपत्तेः । सर्वो हि अज्ञः अत्यन्तप्रसिद्धं साक्षादपरोक्षादात्मानं तिरस्कृत्य अनात्मानमात्मत्वेन परिगृह्य, तमपि धर्माधर्मौ कृत्वा उपात्तमात्मानं हत्वा अन्यमात्मानमुपादत्ते नवं, तं चापि हत्वा अन्यम्, एवमुपात्तमुपात्तमात्मानं हन्ति, इति आत्महा सर्वोऽज्ञः । यस्तु परमार्थात्मा, असावपि सर्वदा अविद्यया हत एव, विद्यमानफलाभावात्, इति सर्वे आत्महन एव अविद्वांसः । यस्त्वितरः यथोक्तात्मदर्शी, स उभयथापि आत्मना आत्मानं न हिनस्ति । ततः याति परां गतिम्, यथोक्तं फलं तस्य भवति इत्यर्थः ॥ २८ ॥

'सर्वभूतस्थमीश्वरं समं पश्यन् न हिनस्त्यात्मनाऽऽत्मानम्'

கூடாது, ஸ்வர்க்கத்தில் கூடாது'' (தை - ஸம் - ரு - உ - எ) என்பது முதலியனபோல, ''ஹிம்ஸிப்பதில்லை'' என வாராததை எப்படிக் கூறுகிறுர்? (அக்நிகுண்டத்தை நிலத்தில் கட்டக்கூடுமாதலின், அக்நியை நிலத்தில் பிரதிஷ்டைசெய்யக்கூடாது என்பது ஏற்கும். ஆனால், அக்நிகுண்டத்தை ஆகாசத்திலாயினும், ஸ்வர்க்கத்திலாயினும் அமைக்கமுடியாததாதலின், பிந்தின இரண்டுமறுப்புக்களும் ஏற்கா. ஆதலால், அவற்றிற்குச் சொல்அர்த்தத்தைக் கொள்ளக்கூடாது. அதுபோல, இங்கும் ''ஹிம்ஸிப்பதில்லை'' என்பதற்குச் சொல்அர்த்தத்தைக் கொண்டால் பொருத்தமில்லை.—ஆ.)

(ஸமாதானம்):—இது குற்றமன்று; அஜ்ஞானிகள் ஆத்மாவை அசட்டைசெய்தல் கூடுமாதலின். (யாவர்க்கும்) நன்றாகத்தெரிந்துள்ளதாய் நேரே ப்ரத்தியக்ஷமாயுள்ள ஆத்மாவை அஜ்ஞானிகளெல்லாம் அசட்டைசெய்து, ஆத்மா அல்லாததை [உடம்புமுதலியவற்றை] ஆத்மாவாகக் கொண்டு, நல்வினை தீவினைகளைச் செய்து தன்னுடைதாக்கிக்கொண்ட அந்த ஆத்மாவையும் [உடம்புமுதலியவற்றையும்] கொன்று, வேறோர் புதிய ஆத்மாவைத் தன்னுடையதாக்கிக்கொள்கிறார்கள்; அதனையும் கொன்று வேறொன்றைத் தனதாக்கிக்கொள்கிறார்கள்; என இவ்வாறு தேடித்தேடித் தனக்குத் தனக்கென்று உரித்தாக்கிக்கொண்ட ஆத்மாவைக் கொல்கிறார்கள்; எனவே, அஜ்ஞானிகளெல்லாம் ஆத்மாவைக்கொல்பவர்களென்க. மற்று, உண்மையான ஆத்மா எதுவோ, அதுவுங்கூட எப்பொழுதும் அவித்யையினால் கொல்லப்பட்டதுபோலும்; உள்ள பயன் இல்லாமையினால் [நித்யமாயுள்ள ப்ரஹ்மாநந்தத்தை அநுபவியாமையினால்]. ஆதலால் அஜ்ஞானிகளெல்லாம் ஆத்மாவைக் கொல்பவர்களேதான். ஆனால், கீழ்க்கூறிய ஆத்மாவைக் காண்கின்ற மற்றையவன் எவனோ, அவன் இருவகையாலும் தன்னைத் தான் கொல்வதில்லை; ஆகவே, உயர்ந்தகதியை அடைகிறான்: கீழ்க்கூறிய பயன் அவனுக்கு உண்டு என்பது பொருள். (உஅ)

தொழிலைச் செய்வது பிரகிருதிதான்; ஆத்மா அன்று.

''எல்லாப்பிராணிகளுள்ளும் உள்ள ஈச்வரனை ஸமமாகக் காண்கிறவன் தன்னைத் தன்னால் கொல்வதில்லை'' எனக் கூறப்பட்டது. தமது குணம், செய்கை இவற்

इति उक्तम् । तत् अनुपपन्नं स्वगुणकर्मवैलक्षण्यभेदभिन्नेषु आत्मसु, इत्येतत् आशङ्क्य आह —

௨௯. प्रकृत्यैव च कर्माणि क्रियमाणानि सर्वशः ।
यः पश्यति तथाऽऽत्मानमकर्तारं स पश्यति ॥

प्रकृत्या — प्रकृतिः भगवतः माया त्रिगुणात्मिका, 'मायां तु प्रकृतिं विद्यात्' इति मन्त्रवर्णात्, तया प्रकृत्यैव च — न अन्येन — महदादिकार्यकारणाकारपरिणतया कर्माणि वाङ्मनःकायारभ्याणि क्रियमाणानि निर्वर्त्यमानानि सर्वशः सर्वप्रकारैः यः पश्यति उपलभते, तथा आत्मानं क्षेत्रज्ञम् अकर्तारं सर्वोपाधिविवर्जितं, सः पश्यति, सः परमार्थदर्शी इत्यभिप्रायः, निर्गुणस्य अकर्तुः निर्विशेषस्य आकाशस्येव भेदे प्रमाणानुपपत्तिः इत्यर्थः ॥ ௨௯ ॥

पुनरपि तदेव सम्यग्दर्शनं शब्दान्तरेण प्रपञ्चयते —

௩0. यदा भूतपृथग्भावमेकस्थमनुपश्यति ।
तत एव च विस्तारं ब्रह्म सम्पद्यते तदा ॥

றின் வேற்றுமைகளால் வெவ்வேறாக வேறுபட்ட அநேக ஆத்மாக்கள் உள்ளனவாதலால், அது [ஸமமாகப்பார்த்தல்] பொருந்தாது என்பதைச்சங்கித்து அருளிச்செய்கிறார் :

௨௯. *எவன் கர்மங்களை எவ்வாற்றாலும் பிரகிருதியினாலேயே செய்யப்படுகின்றவையாகக் காண்கிறானோ ; அவ்வண்ணமே, ஆத்மாவை அகர்த்தாவாக(க் காண்கிறானோ) ; அவன் காண்கிறான்.*

பிரகிருதியென்பது - பகவானுடைய மாயை, முக்குணவடிவமாயுள்ளது ; "மாயைப் பிரகிருதியாக அறியவேண்டும்" (ச்வே-௪-௰) என்னும் மந்திரவர்ணத்தாலென்க. "பிரகிருதிதான் [ஈச்வரனது சக்திதான்]-மொழிமனமெய்களால் செய்யப்படும் தொழில்களைச் செய்துமுடிக்கின்றது ; வேறு அன்று, மஹத்முதலான கார்யகாரணங்களாகவேறுபட்ட (பிரதாநமன்று,ஸாங்க்யர்கள் கூறும் பிரகிருதியன்று" எனவும்,) "க்ஷேத்ரஜ்ஞனை ஆத்மா அகர்த்தா, உபாதிகளெல்லாமில்லாதவன்" எனவும் எவன் உணர்கின்றானோ, அவன் மெய்ப்பொருளைக்கண்டுணர்ந்தவன் என்பது கருத்து. ஆகாசத்திற்கு பேதம்(இல்லாதது)போல, நிர்க்குணமாய் அகர்த்தாவாய் வேற்றுமையில்லாப் பொருளுக்கு பேதம் உண்டு என்பதற்குப் பிரமாணம் அமையவில்லை என்பது பொருள்.
(௨௯)

மாம்; எனவே, ஆத்மாவைப்பற்றிய அறிவை விதிமுகத்தால் உணர்த்தவேண்டா.—அங்ஙனம் (செய்யவேண்டியது) என்ன?—பெயர் உருவம் முதலிய அநாத்மாக்களை, ஆத்மாஅல்லாதவற்றைத்தள்ளுதலேதான் செய்யவேண்டியது; ஆத்மசைதந்யஉணர்ச்சியைச் செய்யவேண்டாம்; ஏனெனில், (அவ்வுணர்ச்சி) அவித்யையினால் ஏற்றப்பட்ட எல்லாப்பொருள்களினுடைய உருவங்களோடுகூடவே சேர்ந்து உணரப்படுகின்றது. ஆதலால்தான், விஜ்ஞானவாதிகளான [எல்லாம் உணர்ச்சிகளெனக் கூறும்] பௌத்தர்கள் "உணர்ச்சிகளைத்தவிர வேறு பொருளே இல்லை" எனக்கொண்டவர்; (அவ்வுணர்ச்சிகள் தமக்குத்)தாமே அறியப்படுகின்றவை எனக்கொண்டு அதனால் "(அவற்றிற்கு) வேறுபிரமாணம் வேண்டியதில்லை" எனவும் கொண்டவர். ஆகவே, ப்ரஹ்மத்தினிடத்து அவித்யையினால் ஏற்றப்பட்டவற்றைத் தள்ளுதல்மாத்திரம் செய்யவேண்டுமேயன்றி ப்ரஹ்மத்தை உணர்வதிலே முயற்சி செய்யவேண்டாம்; மிகப்பிரஸித்தமாயிருத்தலின் (ப்ரஹ்மமானது யாவர்க்கும் நன்கு தெரிந்திருப்பதாதலால் என்க. இது யாவர்க்கும்) நன்கு தெரிந்திருப்பதாயும், எளிதில் அறியக்கூடியதாயும், மிகச் சமீபத்திலுள்ளதாயும் ஆத்மாவாயும் [ஒருவனுக்குத் "தான்" என்பது எதுவோ, அதுவாயும்] இருந்தாலும், அவிவேகிகட்கு, பகுத்தறிவில்லாதவர்க்கு, அவித்யையினால் கற்பிக்கப்பட்ட பெயர் உருவம் என்பவற்றினுடைய பல தோற்றங்களால் புத்தி கவரப்பெற்றவர்க்கு, தெரியாததாகவும் அறிதற்கு அரியதாகவும் வெகுதூரத்தி லிருப்பதாகவும் வேறுபொருள்போலத் தோற்றுகின்றது. மற்று, வெளித்தோற்றங்களினின்றும் புத்திநீங்கியவராய் ஆசார்யனது அருளையும், மனத்தினது தெளிவையும் பெற்றவர்க்கு இன்பமாயும், நன்கு தெரிந்ததாயும், எளிதில் அறியக்கூடியதாயும், மிகச் சமீபத்திலுள்ளதாயும் இருப்பது - இத்னினும்[ப்ரஹ்மத்தைக்காட்டிலும்] வேறொன்று இல்லை. அவ்வண்ணமே, "(ஆத்மஅறிவு உடனே) நேரே அறியப்படுவது, தருமத்தின் நீங்காதது" (கூ - உ) என அருளிச்செய்யப்பட்டிருக்கின்றது.

கேசித்து பண்டிதம்மந்யா: "நிராகாரத்வாத் ஆத்மவஸ்து ந உபைதி புத்தி:। அத: து:ஸாத்யா ஸம்யக்ஜ்ஞாநநிஷ்டா" இத்யாஹு:।

ஸத்யம் ஏவம் குருஸம்ப்ரதாயரஹிதாநாம் அஶ்ருதவேதாந்தாநாம் அத்யந்தபஹிர்விஷயாஸக்தபுத்தீநாம் ஸம்யக்ப்ரமாணேஷு அக்ருதஶ்ரமாணாம்। தத்விபரீதாநாம் து லௌகிகக்ராஹ்யக்ராஹகத்வைதவஸ்துநி ஸத்புத்தி: நிதராம் அஸம்பாவ்யா, ஆத்மசைதந்யவ்யதிரேகேண வஸ்த்வந்தரஸ்ய அநுபலப்தே:, யதா ச "ஏதத் ஏவம், ந அந்யதா" இதி அவோசாம; உக்தம் ச பகவதா 'யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிஶா பஶ்யதோ முநே:' இதி। தஸ்மாத் பாஹ்யாகாரபேதபுத்திநிவ்ருத்திரேவ ஆத்மஸ்வரூபாவலம்பநகாரணம்। ந ஹி ஆத்மா நாம கஸ்யசித் கதாசித் அப்ரஸித்த: ப்ராப்ய: ஹேய: உபாதேயோ வா। அப்ரஸித்தே ஹி தஸ்மிந் ஆத்மநி ஸ்வார்தா: ஸர்வா: ப்ரவ்ருத்தய: வ்யர்தா: ப்ரஸஜ்யேரந்। ந ச தேஹாத்யசேதநார்தத்வம் ஶக்யம் கல்பயிதும்। ந ச ஸுகார்தம் ஸுகம், து:க்கார்தம் து:க்கம். ஆத்மாவகத்யவஸாநார்தத்வாச்ச ஸர்வவ்யவஹாரஸ்ய। தஸ்மாத் யதா

இனி, தம்மைப் பண்டிதராக மதித்துக்கொண்ட சிலர் " (ஆத்மாவிற்கு) உருவம் இல்லையாதலால் புத்தியானது (அந்த) ஆத்மப்பொருளைப் பற்றாது; ஆகவே, மெய்யறிவுநிஷ்டையானது சாதிக்கத்தக்கதன்று" எனக் கூறுகிறார்கள்.

இவ்வாறு உண்மை; குருஸம்பிரதாயமில்லாதவராய், வேதாந்தநூல்களைப் படித்துணராதவராய், வெளிவிஷயங்களிலே புத்தி முற்றும் அழுந்தியவராய், நேரான பிரமாணங்களிலே பயிற்சிசெய்யாதவர்க்கு (அது அமையாது). மற்று, அவர்கட்கு மாறானவர்க்கோ [குருஸம்பிரதாயத்தையும், மற்றுமிதுபோன்றவற்றையும் உடையவர்க்கோ] உணரப்படுவதும் உணர்வதுமாகிய உலகப்பொருளிலே த்வைதப்பொருளிலே புத்தியானது [த்வைதம் மெய்யென்னும் எண்ணமானது] சிறிதும் அமையாது; ஆத்மஅறிவைத்தவிர வேறோர்பொருளையும், காணாமையின். " இது இப்படித்தான், வேறுவிதமாயன்று [அத்வைதமேதான் மெய்ப்பொருள், த்வைதமோ அவித்யையினாலானது]" என்றவகையைக்கூறியுள்ளோம். பகவானும் " பிராணிகள் எதில் தூங்குகின்றனவோ, அது (உண்மையைக்) காணும் முனிவனுக்கு இரவு" (உ - கூகூ) என அருளிச்செய்துள்ளார். ஆகவே, வெளித்தோற்றங்களுடைய பேதபுத்தியைத் தவிர்த்தலே ஆத்மவடிவத்தைப் பற்றுதற்குக் காரணமாம். ஆத்மா என்பது ஒருவனுக்கும் ஒருபொழுதாயினும் தெரியாதபொருளன்று, அடையவேண்டிய பொருளன்று, தள்ளவேண்டிய பொருளன்று, அல்லது கொள்ளவேண்டிய பொருளன்று. அந்த ஆத்மா தெரியாத பொருளாயின், தனதுநலத்திற்கான எல்லாச்செய்கைகளும் வீணாகிவிடுமன்றோ. மேலும், உணர்வில்லாத உடம்புமுதலியவற்றினதுநலத்திற்காக எனவும் கொள்ளுதல் செல்லாது. அன்றியும், " இன்பம் இன்பத்திற்காக, துன்பம் துன்பத்திற்காக" (எனவும் கொள்ளமுடியாது. இன்னும், யஜ்ஞம்முதலியன) எல்லாவியவகாரங்கட்கும் முடிபான ஆத்மஅறிவிற்குப் பயன்படுவதனாலும், (ஆத்மா யாவர்க்கும்

ஸ்வதேஹஸ்ய பரிச்சேதாய ந ப்ரமாணாந்தராபேக்ஷா, ததோ(அ)பி ஆத்மா அந்-தரதமோ(அ)ஸ்த்மாத் தத்வபரிச்சித்திம் ப்ரதி ந ப்ரமாணாந்தராபேக்ஷா । இதி ஆத்மஜ்ஞாநநிஷ்டா விவேகிநாம் ஸுப்ரஸித்தா இதி ஸித்தம் ॥

யேஷாமபி நிராகாரம் ஜ்ஞாநம் அப்ரத்யக்ஷம், தேஷாமபி ஜ்ஞாநவசே-நைவ ஜ்ஞேயாவகதிரிதி ஜ்ஞாநம் அத்யந்தப்ரஸித்தம் ஸுகாதிவதேவ இதி அப்யு-பகந்தவ்யம் ॥

ஜிஜ்ஞாஸாநுபபத்தேஶ்ச—அப்ரஸித்தம் சேத் ஜ்ஞாநம், ஜ்ஞேயவத் ஜிஜ்ஞா-ஸ்யேத । யதா ஜ்ஞேயம் கடாதிலக்ஷணம் ஜ்ஞாநேந ஜ்ஞாதா வ்யாப்தும் இச்சதி, ததா ஜ்ஞாநமபி ஜ்ஞாநாந்தரேண ஜ்ஞாதா வ்யாப்தும் இச்சேத் । ந சைதத் அஸ்தி । அத: அத்யந்தப்ரஸித்தம் ஜ்ஞாநம், ஜ்ஞாதா(அ)பி அத ஏவ ப்ரஸித்த: இதி ॥

தஸ்மாத் ஜ்ஞாநே யத்நோ ந கர்தவ்ய:, கிந்து அநாத்மநி ஆத்மபுத்திநிவ்ரு-த்தாவேவ । தஸ்மாத் ஜ்ஞாநநிஷ்டா ஸுஸம்பாத்யா ॥ ௫௦ ॥

பிரஸித்தமாயுளது.) ஆகவே, தனதுஉடம்பை அளந்தறிய வேறு பிரமாணம் வேண்டியதில்லைபோல, ஆத்மா அதனினும் உள்ளே உள்ளமையால் [உடம்பைக்காட்டிலும் மிகச்சமீபத்திலிருப்பதனால்] அதனை அறியும்விஷயத்திலே வேறு பிரமாணம் வேண்டியதில்லை. எனவே, இவ்வாறாக ஆத்மஞானநிஷ்டையானது, ஆத்மஅறிவிலே நிலைத்தலானது விவேகிகட்கு, பகுத்தறிவுள்ளவர்க்கு எளிதே அமைவதெனப் பெறப்பட்டது.

அறிவும், அறியும்பொருளும் வெளிப்படையா யுள்ளன.

எவர்கட்கு அறிவு உருவமில்லாததோ, பிரத்தியக்ஷமாய் இல்லாததோ [அறிவிற்கு உருவமில்லை, அது பிரத்தியக்ஷமாயில்லை என எவர்கள் கொள்கிறார்களோ], அவர்கட்குங்கூட அறிவின்வழியாகத்தான் அறியப்படும்பொருளை அறிதலாகின்றது; ஆதலால், இன்பம்முதலியதுபோலவே, அறிவு மிக நன்றாய் அறியப்படுவது என (அவர்களும்) ஏற்றுக்கொள்ளவேண்டுமென்க.

மற்றும்,(அறிவை)அறியப்புகுதலென்பது பொருந்தாதாதலால், (அறிவானது யாவர்க்கும் தெரிந்ததாயிருப்பதாம்). அறிவு தெரியாததாயிருப்பின், அறியப்படும் பொருள்போல, அறியப்படவேண்டிய தாகும். குடம்முதலாகிய அறியப்படும்பொருளை அறிவினால் அறியவேண்டியதென்று (அக்குடம்முதலியதை அறிவினால்) எட்ட முயலுமாறுபோல், அறிவையும் வேறோர் அறிவினால் அறியவேண்டுமென்று (அவ்வறிவை வேறோர் அறிவினால்) பற்றமுயலவேண்டும். ஆனால், இது [அறிவை வேறோர் அறிவினால் அறியவேண்டுமென்பது] இல்லை. ஆதலால், அறிவென்பது (யாவர்க்கும்) மிக நன்றாய்த் தெரிந்துளது; ஆதலால்தான், அறியும்பொருளும் தெரிந்ததாயுளது [வெளிப்படையாயுளது] என்பதாம்.

ஆகவே, (ஆத்ம)அறிவிலே முயற்சிசெய்யவேண்டாம்; மற்று, அநாத்மாக்களின்மேல ஆத்மபுத்தியை[ஆத்மா அல்லாத உடம்புமுதலியனவே ஆத்மாஎன்னும் எண்ணத்தை]த் தவிர்ப்பதிலேதான் முயற்சிசெய்யவேண்டும். ஆதலால், ஞானநிஷ்டையானது எளிதே தேடிக்கொள்ளத்தக்கதாம். (௫௦)

𑌸𑌾 𑌇𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌪𑌰𑌾 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇, 𑌕𑌥𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌇𑌤𑌿—

௫௧. 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌧𑍃𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌚 ।
𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑍀𑌨𑍍𑌵𑌿𑌷𑌯𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑍌 𑌵𑍍𑌯𑍁𑌦𑌸𑍍𑌯 𑌚 ॥

𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌅𑌧𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌯𑌾 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑌾 𑌮𑌾𑌯𑌾𑌰𑌹𑌿𑌤𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃, 𑌧𑍃𑌤𑍍𑌯𑌾 𑌧𑍈𑌰𑍍𑌯𑍇𑌣 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌸𑌂𑌘𑌾𑌤𑌂 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌚 𑌨𑌿𑌯𑌮𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑍍𑌯, 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑍀𑌨𑍍 𑌶𑌬𑍍𑌦𑌃 𑌆𑌦𑌿𑌃 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑌾𑌨𑍍 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾—𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌤𑍍 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌹𑍇𑌤𑍁𑌭𑍂𑌤𑌾𑌨𑍍 𑌕𑍇𑌵𑌲𑌾𑌨𑍍 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑌃 𑌅𑌧𑌿𑌕𑌾𑌨𑍍 𑌸𑍁𑌖𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃— 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌷𑍁 𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑍌 𑌵𑍍𑌯𑍁𑌦𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌚 ॥ ௫௧ ॥

𑌤𑌤𑌃—

௫௨. 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌸𑍇𑌵𑍀 𑌲𑌘𑍍𑌵𑌾𑌶𑍀 𑌯𑌤𑌵𑌾𑌕𑍍𑌕𑌾𑌯𑌮𑌾𑌨𑌸𑌃 ।
𑌧𑍍𑌯𑌾𑌨𑌯𑍋𑌗𑌪𑌰𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌂 𑌸𑌮𑍁𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 ॥

𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌸𑍇𑌵𑍀 𑌅𑌰𑌣𑍍𑌯𑌨𑌦𑍀𑌪𑍁𑌲𑌿𑌨𑌗𑌿𑌰𑌿𑌗𑍁𑌹𑌾𑌦𑍀𑌨𑍍 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌦𑍇𑌶𑌾𑌨𑍍 𑌸𑍇𑌵𑌿𑌤𑌂 𑌶𑍀𑌲𑌂 𑌅𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌸𑍇𑌵𑍀, 𑌲𑌘𑍍𑌵𑌾𑌶𑍀 𑌲𑌘𑍍𑌵𑌶𑌨𑌶𑍀𑌲𑌃—𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌸𑍇𑌵𑌾𑌲𑌘𑍍𑌵𑌶𑌨𑌯𑍋𑌃 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌤𑍍𑌵𑍇𑌨 𑌚𑌿𑌤𑍍𑌤𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌗𑍍𑌰𑌹𑌣𑌂

ப்ரஹ்மமாதற்கு வழி.

பிரசித்தமான இந்த உயர்ந்த ஞானநிஷ்டையானது(எளிதே தேடிக்கொள்ளக் கூடியது எனக்)கூறப்படுகின்றதே. எப்படித் தேடிக்கொள்ளக்கூடியது? அதற்கு வழி என்ன? என்பது—

௫௧. தெளிந்த புத்தியோடுகூடியவனாய்த் தன்னை உறுதியினால் அடக்கியும், ஓசை முதலியவிஷயங்களை விட்டும்,விருப்பு வெறுப்புக்களை அகற்றியும்(நிற்பவன் ப்ரஹ்ம மாதற்கு உரியவன்.)

புத்தியினால் - (ப்ரஹ்மமே ஆத்மா என்னும்)நிச்சயமாகியபுத்தியினால். தெளிந்த- கள்ளமில்லாத, ஐயம்திரிபற்ற. தன்னை அடக்கி - உடம்பு இந்திரியங்களினது சேர்க்கையை வசப்படுத்தி. ஓசைமுதலிய விஷயங்களை விட்டு என்பதற்கு - தகுதியினால் [விஷயங்களெல்லாவற்றையும் முற்றும் விட்டிடுங்கால், உடம்பு நிலைபெறுதல் செல்லாமையின், ஆத்மஞானநிஷ்டை அமையாதாதலால்] "சரீரம் நிலைத்தற்குமட்டும் வேண்டிய பொருள்களைமாத்திரம் தவிர, அவற்றினும் அதிகமான போகப்பொருள்களைத் தள்ளி" என்று பொருள் கொள்க. விருப்பு வெறுப்புக்களை அகற்றி - சரீரம் நிலைத்தற்கு வேண்டியவையாகக் கிடைத்தவற்றின்மேலும் விருப்புவெறுப்புக்களை விட்டு. ()

பின்பு (அவன்)

௫௨. தனிமையை நாடுபவனாய்,இலகுவாக உண்பவனாய், மொழி மெய் மனங்களை அடக்கியவனாய், எப்பொழுதும் தியானத்திலும் யோகத்திலும் கருத்துள்ளவனாய், வைராக்கியத்தை அடைந்தவனாய் (ப்ரஹ்மமாதற்குத் தக்கோனாகிறான்).

தனிமையை நாடுபவன் - காடு ஆற்றுமணல் மலைக்குகை முதலிய தனிமையான இடங்களை நாடுந்தன்மையன். இலகுவாக உண்பவன்- (அளவாயும், பின்னர் நலத்தைச் செய்வதாயும், சுத்தமாயும் உள்ள) உணவை உண்பவன். தனிமையை நாடுதலும், இலகுவாக உண்ணலும் தூக்கம்முதலிய கெடுதிகளை விலக்குவனவாதலால் மனந்தெளி

—𑌯𑌤𑌵𑌾𑌕𑍍𑌕𑌾𑌯𑌮𑌾𑌨𑌸𑌃 𑌵𑌾𑌕𑍍 𑌚 𑌕𑌾𑌯𑌶𑍍𑌚 𑌮𑌾𑌨𑌸𑌂 𑌚 𑌯𑌤𑌾𑌨𑌿 𑌸𑌂𑌯𑌤𑌾𑌨𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌃 𑌯𑌤𑌿𑌃 𑌯𑌤𑌵𑌾𑌕𑍍𑌕𑌾𑌯𑌮𑌾𑌨𑌸𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌏𑌵𑌮𑍍 𑌉𑌪𑌰𑌤𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌃 𑌸𑌨𑍍 𑌧𑍍𑌯𑌾𑌨𑌯𑍋𑌗𑌪𑌰𑌃 𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌆𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌚𑌿𑌨𑍍𑌤𑌨𑌮𑍍, 𑌯𑍋𑌗𑌃 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑍇 𑌏𑌕𑌾𑌗𑍍𑌰𑍀𑌕𑌰𑌣𑌮𑍍, 𑌤𑍌 𑌧𑍍𑌯𑌾𑌨𑌯𑍋𑌗𑍌 𑌪𑌰𑌤𑍍𑌵𑍇𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑍌 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌧𑍍𑌯𑌾𑌨𑌯𑍋𑌗𑌪𑌰𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍—𑌨𑌿𑌤𑍍𑌯𑌗𑍍𑌰𑌹𑌣𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌜𑌪𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌮𑍍—𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌂 𑌵𑌿𑌰𑌾𑌗𑌸𑍍𑌯 𑌭𑌾𑌵𑌃 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌷𑍁 𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍁 𑌵𑍈𑌤𑍃𑌷𑍍𑌣𑍍𑌯𑌂 𑌸𑌮𑍁𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌉𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍇𑌵 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௫௨ ॥

𑌕𑌿𑌞𑍍𑌚—

௫௩. 𑌅𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌂 𑌬𑌲𑌂 𑌦𑌰𑍍𑌪𑌂 𑌕𑌾𑌮𑌂 𑌕𑍍𑌰𑍋𑌧𑌂 𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ।
𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌯𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇 ॥

𑌅𑌹𑌙𑍍𑌕𑌰𑌣𑌮𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌃 𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌷𑍁 𑌤𑌂, 𑌬𑌲𑌂 𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌂 𑌕𑌾𑌮𑌰𑌾𑌗𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂—𑌨 𑌇𑌤𑌰𑌤𑍍 𑌶𑌰𑍀𑌰𑌾𑌦𑌿𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌂, 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌯 𑌅𑌶𑌕𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍—𑌦𑌰𑍍𑌪𑌂, 𑌦𑌰𑍍𑌪𑍋 𑌨𑌾𑌮 𑌹𑌰𑍍𑌷𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌭𑌾𑌵𑍀 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌹𑍇𑌤𑍁𑌃 ‘𑌹𑍃𑌷𑍍𑌟𑍋 𑌦𑍃𑌪𑍍𑌯𑌤𑌿 𑌦𑍃𑌪𑍍𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑌮𑌤𑌿𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿’ 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌤𑍍; 𑌤𑌂 𑌚, 𑌕𑌾𑌮𑌮𑍍 𑌇𑌚𑍍𑌛𑌾𑌂, 𑌕𑍍𑌰𑍋𑌧𑌂 𑌦𑍍𑌵𑍇𑌷𑌂, 𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑌨𑍋𑌗𑌤𑌦𑍋𑌷𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌽𑌪𑌿

தற்கு காரணமாம்; ஆகவே, அவற்றை எடுத்துக்கொண்டா ரென்க. ஞானநிஷ்டையுள்ள யதியானவன் மொழியையும் உடம்பையும் மனத்தையும் அடக்கியவனாய் இருக்கவேண்டும்; இவ்வாறு இந்திரியங்களனைத்தும் ஓய்ந்தவனாய் எப்பொழுதும் தியானத்தையும் யோகத்தையும் மேன்மையாகக்கொண்டு செய்யவேண்டும். தியானம் - ஆத்மவடிவத்தை ஆலோசித்தல். யோகம்-ஆத்மவிஷயத்திலே ஒருப்படுதல். "எப்பொழுதும்" என்றது - மந்திரம் ஜபம் முதலிய மற்றைய செய்யவேண்டியன இல்லாமையை உணர்த்துதற்காக. வைராக்கியத்தை அடைந்தவன் - இம்மை மறுமைப்பொருள்களிலே எப்பொழுதுமே ஆசையில்லாத்தன்மையைச்செவ்வனே உடையவன் என்றபடி. (௫௨)

இன்னும்,

௫௩ அகங்காரத்தையும், வலிமையையும், செருக்கையும், காமத்தையும், உடைமையையும் துறந்து, எனதென்னும் (எண்ணம்) நீங்கியவனாய் ஒழிந்துள்ளவன் ப்ரஹ்மமாதற்கு உரியவனாகிறான்.

அகங்காரத்தை-உடம்பு முதலியவற்றிலே அகங்கரித்தலை [அவையே நான் எனக்கொள்ளுதலை]. வலிமையை-காமஆசையுள்ள வன்மையை; (இது இங்கே)உடம்பு முதலியவற்றினுடைய மற்றைய வலிமை யன்று; ஏனெனில், இயல்பாகவே உள்ளமையினால், அதனை [உடம்புமுதலியவற்றின் வலிமையை]த் துறந்திடுதல் ஏலாது. செருக்கு என்பது - களிப்பிற்குப் பின்னர் நிகழ்வதாய் அறத்தை மீறச்செய்யும் எக்களிப்பு; "களிப்புள்ளவனெக்களிக்கிறான்; எக்களித்தவன்அறத்தை மீறுகிறான்" (ஆ-க-௧௩-௪) எனனும் ஸ்மிருதியினாலென்க. காமத்தை - விருப்பத்தை. கோபத்தை - பகையை, (அல்லது வெறுப்பை).இந்திரியங்களையும்,மனத்தையும்பற்றியகுற்றங்களை அறத்துறந்

[illegible] ப்ரக்ருதேஸ்ஸம்ஸர்கம் ... நிவ்ருத்தேந வா பாஹ்யை: விஷயை: விமுக்த:, [illegible] பரிக்ருஹ்ய, வைராக்யேண ... ஸங்கோ ..., [illegible] நிர்ஜந: ... ஸர்வ: ஜிதாத்மா ஸந்த: உபரத:, ய: [illegible] ப்ரக்ருதிஷ்டி: ப்ரஹ்மஸாயுஜ்யாய ப்ரஹ்மபவநாய கல்பதே [illegible]

[illegible]

ப்ர. [illegible] ப்ரஸந்நாத்மா ந ஶோசதி ந காங்க்ஷதி ।
[illegible] ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம் ॥

[illegible] ப்ரஸந்நாத்மா ஜ்ஞாநைகாகார ஸ்வரூபாதிக: ந ஶோசதி, [illegible] வா உதிஶ்ய ந ஶோசதி [illegible], [illegible] ந [illegible] ப்ராப்யவிஷயாகாங்க்ஷா ப்ரஹ்மவித: உப- [illegible]; [illegible] ஸர்வ: ... ‘ந ஶோசதி ந [illegible]’ [illegible] ‘ந [illegible]’ [illegible] ஸமா [illegible] ॥ ஸர்வ: ஸவைஷ [illegible]

[illegible] விஷயத்திலேனும், தருமத்தை [illegible] வந்துசேரும்; (தனக்கு ஆசை [illegible] படுக்கை முதலியவற்றையும், தருமத் [illegible] முதலியவற்றையும் தனக்குச் சொந்தமான [illegible]; [illegible] எல்லாவற்றையும் முற்றத் துறந்து, பரமஹ [illegible] உடம்பு வாழ்க்கையில்மாத்திரங்கூடத் [illegible] [தனது உடம்பினுடைய உயிர்வாழ்க்கையைக் [illegible]], ஆகவே ஒழிந்துநிற்பவனுய்க் களிப்பும் [illegible], [illegible] நிஷ்டனு யதியானவன் ப்ரஹ்ம [illegible] ஆகவிருத்தற்குத்] தகுந்தவ [illegible] (ருக)

[illegible] ஞானத்தைப் பெறுதல்.

[illegible] இங்கு முறைப்படி,

ருச. [illegible] வருந்தமாட்டான்; விரும்பமாட் [illegible]; [illegible] என்னிடத்து மேலான பக்தியைப் [illegible].

[illegible], [illegible] அடைந்தவனுய் [உயிர்வாழும்பொழுதேயே [illegible] பேரின்பமாகிய ப்ரஹ்மத்தை [illegible].] உள்ளேயுள்ள ஆத்மாவினிடத்துத் தெளிவுபெற்ற [illegible] ஆத்மாவினிடத்துத் பரமானந்தம்உண்ட [illegible].] (தனக்கு) ஒருபொருளின் குறையையாயினும், தனது [illegible] வருந்துவதில்லை; விரும்புவதில்லை. (அ [illegible] இல்லாமையினுல், குறை இல்லை; நீக்கவேண்டிய [illegible] இல்லாமையினுல, குறையுமில்லை.) அடையாதபொருளை வேண்டுதலென் [illegible] அதுவல்லவன்றே. ஆகவே, இது, “ வருந்தமாட [illegible], விரும்பமாட்டான் ” [illegible] இயல்பை உறுதிப்படுத்துகின் [illegible]. “ [illegible]மாட்டான் ” என்பதும் வேறேர் பாடம். எல்லாப்பொருள்களிடத்தும்ஸ [illegible]

கக

ஸர்வபூதேஷு, ஆத்மௌபம்யேந ஸர்வபூதேஷு ஸுகம் து:கம் வா ஸமமேவ பச்யதி இத்யர்த:। ந ஆத்மஸமதர்சநமித்யர்த:, தஸ்ய வக்ஷ்யமாணத்வாத் 'பக்த்யா மாமபிஜாநாதி' இதி। ய: ஏவம்பூத: ஜ்ஞாநநிஷ்ட:, மத்பக்திம் மயி பரமேச்வரே பக்திம் பஜநம் பராம் உத்தமாம் ஜ்ஞாநலக்ஷணாம் சதுர்தீம் லபதே, 'சதுர்விதா பஜந்தே மாம்' இதி ஹி உக்தம் ॥ ௫௪ ॥

தத: ஜ்ஞாநலக்ஷணயா—

௫௫. பக்த்யா மாமபிஜாநாதி யாவாந்யச்சாஸ்மி தத்த்வத:।
ததோ மாம் தத்த்வதோ ஜ்ஞாத்வா விசதே ததநந்தரம் ॥

பக்த்யா மாம் அபிஜாநாதி யாவாந் அஹம் உபாதிக்ருதவிஸ்தரபேத:, யச்ச அஹம் அஸ்மி வித்வஸ்தஸர்வோபாதிபேத: உத்தம: புருஷ: ஆகாசகல்ப:, தம் மாம் அத்வைதம் சைதந்யமாத்ரைகரஸம் அஜரம் அபயம் அநிதநம் தத்த்வத: அபிஜாநாதி। தத: மாம் ஏவம் தத்த்வத: ஜ்ஞாத்வா விசதே ததநந்தரம், மாமேவ ஜ்ஞாநாநந்தரம்।

நாத்ர ஜ்ஞாநப்ரவேசக்ரியே பிந்நே விவக்ஷிதே 'ஜ்ஞாத்வா விசதே ததநந்த

மானவன் - தனக்கு ஒப்பாக, பொருள்களெல்லாவற்றின்மேலும் இன்பத்தையும் துன்பத்தையும் ஸமமாகவே(அவை தன்னைத் தாக்குவதுபோலவே பிறரையும் தாக்குமெனக்) காண்கிறான் என்றபடி. (இங்குச் சொல்லக்கருதியது எல்லாவற்றிலும்) ஒரே ஆத்மாவைப் பார்த்தலன்று; அதனை "பக்தியினால் என்னை அறிகின்றானே" (௧௮ - ௫௫)என இனிக் கூறப்போகின்றமையின். எவன் இவ்வாறான ஞான நிஷ்டனோ, ஞானத்திலே நிலைகொண்டவனோ,(அவன்)பரமேச்வரனான என்மீது உயர்ந்த நான்காவதான பக்தியை, ஞானமாகிய பக்தியைப்பெறுகிறான்; ஏனெனில், "நால்வகையான (மனிதர்) என்னைத் தொழுகிறார்கள்" (எ - ௧௬) எனக் கூறப்பட்டுள்ளது. (௫௪)

பின்பு (அவன்) ஞானமாகிய

௫௫. பக்தியினால் என்னை அறிகின்றான்: நான் எவ்வளவினனாக இருக்கின்றேனோ, யாராகவும் இருக்கின்றேனோ, (அவ்வளவினனான அந்த) என்னை உண்மையாய் அறிகின்றான்; அங்ஙனம் என்னை உண்மையாய் அறிந்து உடனே என்னைப் புகுகின்றான்.

உபாதிகளினாலான பல விசேஷங்களால் யான் எவ்வளவினனாக இருக்கின்றேனோ, (அவ்வளவினன் என்று, அப்படிப்பட்டவன் என்று, எங்குமுள்ளவன் என்று, அவன், ஞானமாகிய)பக்தியினால் என்னை அறிகின்றான்; இன்னும், எந்த நான் உபாதிகளினது வேற்றுமையெல்லாம் அற்றவனாய், உத்தமபுருஷனாய், ஆகாசம்போன்றவனாய் இருக்கின்றேனோ, அந்த என்னை (அதாவது, மெய்ப்பொருளை) அத்வைதமாக, அறிவுமாத்திரமான ஒருதன்மைத்தாக, பிறவாததாக, மூப்பில்லாததாக, இறவாததாக, பயமில்லதாக, கேடில்லதாக உண்மையாய் அறிகிறான்; அங்ஙனமிவ்வாறு என்னை உண்மையாய் அறிந்து அறிவு(பெற்ற)வுடன் என்னையே புகுகிறான் [ப்ரஹ்மமாய் நிற்கிறான்].

"அறிந்து உடனே புகுகிறான்" என, அறிதலும் புகுதலுமாகிய வினைகள் வெவ்வேறானவையாக இங்குக் கருதப்படவில்லை.—அங்ஙனம் (புகுதலென்பது)

த:’ இதி। கிம் தர்ஹி?—ஸர்வஜ்ஞாநாயாஸ: ஜ்ஞாநமாத்ரேணைவ, ‘க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி’ இதி உக்தத்வாத்॥

நநு விருத்தம் இதம் உக்தம் “ஜ்ஞாநஸ்ய யா பரா நிஷ்டா தயா மாம் அபிஜாநாதி” இதி। கதம் விருத்தம் இதி சேத், உச்யதே—யதைவ யஸ்மிந் விஷயே ஜ்ஞாநம் உத்பத்யதே ஜ்ஞாது:, ததைவ தம் விஷயம் அபிஜாநாதி ஜ்ஞாதா இதி ந ஜ்ஞாநநிஷ்டாம் ஜ்ஞாநாவ்ருத்திலக்ஷணாம் அபேக்ஷதே இதி; அதஶ்ச ஜ்ஞாநேந ந அபிஜாநாதி, ஜ்ஞாநாவ்ருத்த்யா து ஜ்ஞாநநிஷ்டயா அபிஜாநாதீதி॥

நைஷ தோஷ:; ஜ்ஞாநஸ்ய ஸ்வாத்மோத்பத்திபரிபாகஹேதுயுக்தஸ்ய ப்ரதிபக்ஷவிஹீநஸ்ய யத் ஆத்மாநுபவநிஶ்சயாவஸாநத்வம் தஸ்ய நிஷ்டாஶப்தாபிலாபாத்। ஶாஸ்த்ராசார்யோபதேஶேந ஜ்ஞாநோத்பத்திபரிபாகஹேதும் ஸஹகாரிணம் புத்திவிஶுத்த்யமாநித்வாதி குணம் ச அபேக்ஷ்ய ஜநிதஸ்ய க்ஷேத்ரஜ்ஞபரமாத்மைகத்வஜ்ஞாநஸ்ய கர்த்ருத்வாதிகாரகபேதபுத்திநிபந்தநஸர்வகர்மஸம்ந்யா-

---

என்னை ? —ஞானமேதான் ; ஏனெனில், (ஞானத்திற்குத் தன்னையல்லது) வேறு பயனில்லை ; “என்னை க்ஷேத்ரஜ்ஞனாகவும் அறிந்துகொள்” (கங - உ) என உபதேசித்துள்ளமையினாலென்க.

(ஆக்ஷேபம்):—ஆயின், “எது ஞானத்தினுடைய உயர்ந்த நிஷ்டையோ, அதனால் என்னை அறிகிறான்” என்றஇது விரோதமாய்க் கூறப்பட்டது. எவ்வாறு விரோதமெனில், கூறுவோம் :—(அறிபவனுக்கு) எப்பொழுது எந்தப்பொருளைப்பற்றி அறிவு எழுகின்றதோ, அப்பொழுதேயே, அந்த க்ஷணத்திலேயே அப்பொருளை, அறிபவன் அறிந்துவிடுகிறான் ; ஆகவே ஞானத்தின் ஆவிருத்தியாகிய [ஞானத்தை அடுத்தடுத்துச் செய்தலாகிய] ஞானநிஷ்டையை வேண்டிநிற்கிறானில்லை என்பது(வாதிப் பிரதிவாதிகளான நம்மிருவர்க்கும் ஒப்பமுடிந்துளது. ஒருபொருளைப்பற்றி அறிவு எழும்பொழுதேயே அப்பொருள் விளங்க, அங்ஙனமே அறிபவன் அதனை அறிந்துவிடுகிறான் ; ஆகவே, ஒருபொருளை அறிதற்கு - ஞானத்தின் ஆவிருத்தியாகிய ஞானநிஷ்டையானது, பயிற்சியினால் அறிவு அடுத்தடுத்து வருவதாகிய ஞானநிலையானது வேண்டியதில்லை). ஆதலால், “அறிவினால் அறிகிறானில்லை ; மற்று, அறிவு அடுத்தடுத்துவருதலாகிய ஞானநிஷ்டையினால் அறிகிறான்” என்பது (விரோதமாம்).

(ஸமாதானம்) :—இது குற்றமன்று ; தான் [அறிவு] உண்டாவதற்கும், முதிர்ந்து பழுத்தற்கும் காரணமானவற்றையுடையதாய் இடையூறில்லாத ஞானத்தின் பாகிய ஆத்ம அநுபவநிச்சயம் எதுவோ, அதனை - நிஷ்டைஎன்னும்சொல் வழங்குவதனாலென்க. சாஸ்திரம் ஆசார்யன் இவர்களது உபதேசத்தினால் பிறத்தற்கும் (அது) முதிர்ந்து பழுத்தற்கும் காரணமாயும், (அ குத்) துணையாயுமுள்ளவையான புத்தித்தெளிவு (கஅ - நக) பணிவு (கங-எ) முதலியவற்றையும் நாடி (அவ்வுபதேசத்தால்) “க்ஷேத்ரஜ்ஞனும், பரமாத்மாவும் ஒன்று” என்னும்ஞானமானது செய்பொருள்களைப்பற்றிய பேதபுத்தியினால் அமைகின்ற எல்லாக்க

ஸம்ஹிதஸ்ய ஸர்வக்ரியோபஸம்ஹாரபர்யவஸாநோ யஸ் ஸ்வஸ்தாநம், ஸா பரா ஜ்ஞாநநிஷ்டா இதி உச்யதே । ஸா இயம் ஜ்ஞாநநிஷ்டா ஆர்தாதிபக்தித்ரயாபேக்ஷயா பரா சதுர்த்தீ பக்திரிதி உக்தா । தயா பரயா பக்த்யா பகவந்தம் தத்த்வதோऽபிஜாநாதி, யதநந்தரமேவ ஈச்வரக்ஷேத்ரஜ்ஞபேதபுத்திரசேஷதோ நிவர்ததே, அத: ஜ்ஞாநநிஷ்டாலக்ஷணயா பக்த்யா மாமபிஜாநாதீதி வசநம் ந விருத்யதே ।

அத்ர ச ஸர்வம் நிவ்ருத்திவிதாயி சாஸ்த்ரம் வேதாந்தேதிஹாஸபுராணஸ்ம்ருதிலக்ஷணம் ந்யாயப்ரஸித்தமர்த்தவத் பவதி — 'விதித்வா......வ்யுத்தாயாத பிக்ஷாசர்யம் சரந்தி' 'தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:' 'ந்யாஸ ஏவாத்யரேசயத்' இதி 'ஸம்ந்யாஸ: கர்மணாம் ந்யாஸ:' 'வேதாநிமம் ச லோகமமும் ச பரித்யஜ்ய' 'த்யஜ தர்மமதர்மம் ச' இத்யாதி । இஹ ச ப்ரதர்சிதாநி வாக்யாநி । ந ச தேஷாம் வாக்யாநாம் ஆநர்த்தக்யம் யுக்தம்; ந ச அர்த்தவாதத்வம், ஸ்வப்ரகரணஸ்தத்வாத் ।

ப்ரத்யகாத்மாவிக்ரியஸ்வரூபநிஷ்டத்வாச்ச மோக்ஷஸ்ய । ந ஹி பூர்வஸமுத்ரம் ஜிகமிஷோ: ப்ராதிலோம்யேந ப்ரத்யக்ஸமுத்ரம் ஜிகமிஷுணா ஸமாநமார்கத்வம் ஸம்பவதி । ப்ரத்யகாத்மவிஷயப்ரத்யயஸந்தாநகரணாபிநிவேசச்ச

திடுதலோடு கூடி தன் ஆத்மஅநுபவநிச்சயவடிவமாய் நிற்றல் எதுவோ, அதுமேலான ஞானநிஷ்டை எனக் கூறப்படுகின்றது. துயருற்றவன்முதலானவரது பக்தியை (எ-ககூ) நோக்க, அந்த இஞ்ஞானநிஷ்டையானது மேலானதாகிய நான்காவதான பக்தி (எ-கஎ) என அருளிச்செய்யப்பட்டது. (ஞானாதிகாரியாவான்) அந்த மேலான பக்தியினால் பகவானை உண்மையில் அறிகிறான்; அறிந்த உடனேயே, ஈச்வர க்ஷேத்திரஜ்ஞர்களிடத்துப் பேதபுத்தியானது, "ஈச்வரன் வேறு, க்ஷேத்திரஜ்ஞன் வேறு" என்னும் எண்ணமானது முற்றும் ஒழிகின்றது. ஆகவே, "ஞானநிஷ்டையாகிய பக்தியினால் என்னை அறிகிறான்" என்னும் திருவாக்கானது விரோதப்படவில்லை.

முக்திக்குக் கர்மத்துறவு இன்றியமையாதது.

அங்ஙனமன்றோ, ஒழிவை விதிக்கின்ற உபநிஷத்துக்களும், இதிஹாஸங்களும், புராணங்களும், ஸ்மிருதிகளுமாகிய சாஸ்திரமனைத்தும் அர்த்தமுள்ளவை யாகின்றன [பொருளுடைத்தவாகின்றன]: "(அதனை) அறிந்து, (உலகவாழ்க்கையினைத்) துறந்து, பிச்சையெடுத்துத் திரிகிறார்கள் (பி - ந -டு - க)," "ஆதலால், இத்தவங்களுள் துறவினைச் சிறந்ததாகக் கூறுகிறார்கள்" (யா - உப - எகூ), "துறவே சிறந்துளது" (யா-உப-எஅ) என்பனவும், "ஸந்யாஸமென்பது கர்மங்களைத் துறந்திடுதல்" "வேதங்களையும், இவ்வுலகத்தையும், மறுமையுலகத்தையும் துறந்து" (ஆ - உ - உரு - கங), "தர்மத்தையும், அதர்மத்தையும் விட்டிடு" என்பன முதலியனவும் (சாஸ்திரவசனங்களாம்). இங்கேயும் (கீதையினுள்ளும் அநேககருத்துடைய டு - கஉ முதலிய) வாக்கியங்கள் எடுத்துக்காட்டப்பட்டன. அவ்வசனங்கட்கு அர்த்தமில்லையென்பது ஏலாது; (அவை) அர்த்தவாதமென்பதும் ஒவ்வாது; தமது பிரகரணத்தினுள் [துறவைக்கூறும் இயலினுள்]உள்ளமையாலென்க.

மேலும், மோக்ஷமென்பது - உள்ளேயுள்ள ஆத்மாவினுடைய நிர்விகார வடிவத்திலே நிலைகொள்ளுதலாதலால், (துறவு அவசியம் வேண்டியதாம்.) கீழ்ஸமுத்திரத்தைச் செல்லக்கருதியவனுக்கு, (தனக்கு) மாறாக மேல்சமுத்திரத்தைச் செல்லக்கருதியவனோடு ஒரேவழியைக் கொள்ளுதல் நிகழாதன்றோ. அன்றியும், ஞானநிஷ்டை

ஜ்ஞாநநிஷ்டா ; ஸா ச ப்ரத்யகாத்மசிந்தநவக்ஷ கர்மணா ஸஹாஸஹாவிரோதேந விரு-த்யதே। பர்வதஸர்ஷபயோரிவ அந்தரவாந் விரோத: ப்ரமாணவித்பி: நிஶ்சித: । தஸ்மாத் ஸர்வகர்மஸந்ந்யாஸேநைவ ஜ்ஞாநநிஷ்டா கார்யா இதி ஸித்தம் ॥ ௫௫ ॥

ஸ்வகர்மணா பகவத: ஆராதநரூபபக்தியோகஸ்ய ஸித்திப்ராப்தி: ஃபலம் ஜ்ஞாநநிஷ்டாயோக்யதா, தந்நிஷ்டா ஜ்ஞாநநிஷ்டா மோக்ஷபர்யவஸாநா। ஸ: பகவத்பக்தியோக: அநயா ஸ்தூயதே ஶாஸ்த்ரார்த்தோபஸம்ஹாரப்ரகரணே ஶாஸ்த்ரார்த்தநிஶ்சயதார்ட்யாய—

௫௬. ஸர்வகர்மாண்யபி ஸதா குர்வாணோ மத்வ்யபாஶ்ரய: ।
மத்ப்ரஸாதாதவாப்நோதி ஶாஶ்வதம் பதமவ்யயம் ॥

ஸர்வகர்மாண்யபி ப்ரதிஷித்தாந்யபி ஸதா குர்வாண: [illegible] மத்வ்யபாஶ்ரய: அஹம் வாஸுதேவ: ஸர்வேஶ்வர: வ்யபாஶ்ரயோ வ்யபாஶ்ரயணம் யஸ்ய ஸ: மத்வ்யபாஶ்ரய:, மயி ஸந்ந்யஸ்தஸர்வபாவ: இத்யர்த்த: । ஸோ(அ)பி மத்ப்ரஸாதாத் மம ஸர்வேஶ்வரஸ்ய ப்ரஸாதாத் அவாப்நோதி ஶாஶ்வதம் நித்யம் வைஷ்ணவம் பதம் அவ்யயம் ॥ ௫௬ ॥

யென்பது - உள்ளேயுள்ள ஆத்மாவைப்பற்றிய உணர்வினது தொடர்ச்சியைச் செய்வதிலே மிகுந்த ஊக்கம்; அது கர்மத்தோடு உடன்நிகழ்வதென்றால், மேல்சமுத்திரத்தைச் செல்வதுபோல் முரணுகின்றது. (ஞானத்திற்கும் கர்மத்திற்கும்) விரோதமானது, மலைக்கும் கடுகுக்கும்போல, இடையிடுள்ளதாகப் பிரமாணவித்துக்களால், பிரமாணங்களை அறிந்தவர்களால் நிர்ணயிக்கப்பட்டுளது. (மலைக்கும், கடுகுக்கும் உள்ள வேற்றுமை எவ்வளவோ, அவ்வளவென்க ஞானத்திற்கும் கர்மத்திற்குமுள்ள வேற்றுமை.) ஆகவே, கர்மங்களனைத்தையும் முற்றத்துறந்திடுவதினாலேதான் ஞானநிஷ்டையைச் செய்யவேண்டும் என முடிந்தது. (௫௫)

கர்மத்தால் பகவானைத் தொழுதல்.

தனக்குரிய கர்மத்தால் பகவானைப் பூஜித்தலாகிய பக்தியோகத்திற்குப் பயன் - (மனந்திருந்துதலாகிய) ஸித்தியைப் பெறுதல், ஞானநிஷ்டைக்கு ஏற்ற தகுதியுடைமை. அதனால் வரும் ஞானநிஷ்டையானது மோக்ஷமாகிய பயனை முடிவாகக் கொண்டது. அந்த பகவத்பக்தியோகமானது, பகவானைத்தொழுதலென்னும் யோகமானது சாஸ்திர உபதேசத்தை முடிக்கின்ற (இப்) பிரகரணத்திலே, சாஸ்திரஉபதேசத்தினுடைய நிச்சயம் உறுதிப்பட இங்ஙனம் பாராட்டப்படுகின்றது.

௫௬. எல்லாக்கர்மங்களையும் எப்பொழுதும் செய்கிறவன் என்னை அடைக்கலமாகக்கொண்டவனாய், குறைவிலாத சாச்வதமான நிலையை எனது அருளினால் அடைகின்றான்.

எல்லாக்கர்மங்களையும், விலக்கப்பட்ட கர்மங்களையுங்கூடச் செய்கின்றவனாய், ஈச்வரனாகிய வாஸுதேவனான என்னைத்தஞ்சமாகக்கொண்ட, அதாவது, எல்லாஎண்ணங்களையும் என்னிடத்து வைத்த அவனுங்கூட குறைவில்லாத நித்தியமான நிலையை, எங்குமுள்ள பொருளின்நிலையை, ஈச்வரனான எனது அனுக்கிரகத்தாலே அடைகின்றான் என்க. (௫௬)

𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌵𑌂—

௫௭. 𑌚𑍇𑌤𑌸𑌾 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌮𑌯𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑌤𑍍𑌪𑌰𑌃 ।
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌮𑍁𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌭𑌵 ॥

𑌚𑍇𑌤𑌸𑌾 𑌵𑌿𑌵𑍇𑌕𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 𑌮𑌯𑌿 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍇 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 ‘𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌷𑌿 𑌯𑌦𑌶𑍍𑌨𑌾𑌸𑌿’ 𑌇𑌤𑌿 𑌉𑌕𑍍𑌤𑌨𑍍𑌯𑌾𑌯𑍇𑌨, 𑌮𑌤𑍍𑌪𑌰𑌃 𑌅𑌹𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌪𑌰𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌵 𑌸𑌃 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌤𑍍𑌪𑌰𑌃 𑌸𑌨𑍍 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌤𑍍𑌵𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌃 𑌤𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌮𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌅𑌪𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 𑌅𑌨𑌨𑍍𑌯𑌶𑌰𑌣𑌤𑍍𑌵𑌂 𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌃 𑌮𑌯𑍍𑌯𑍇𑌵 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌭𑌵 ॥ ௫௭ ॥

௫௮. 𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌣𑌿 𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌤𑍍𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ।
𑌅𑌥 𑌚𑍇𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌹𑌂𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌨 𑌶𑍍𑌰𑍋𑌷𑍍𑌯𑌸𑌿 𑌵𑌿𑌨𑌙𑍍𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿 ॥

𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌣𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌦𑍁𑌸𑍍𑌤𑌰𑌾𑌣𑌿 𑌸𑌂𑌸𑌾𑌰𑌹𑍇𑌤𑍁𑌜𑌾𑌤𑌾𑌨𑌿 𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌤𑍍 𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 𑌅𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 । 𑌅𑌥 𑌚𑍇𑌤𑍍 𑌯𑌦𑌿 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌦𑍁𑌕𑍍𑌤𑌮𑌹𑌂𑌕𑌾𑌰𑌾𑌤𑍍 “𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌃 𑌅𑌹𑌮𑍍” 𑌇𑌤𑌿 𑌨 𑌶𑍍𑌰𑍋𑌷𑍍𑌯𑌸𑌿 𑌨 𑌗𑍍𑌰𑌹𑍀𑌷𑍍𑌯𑌸𑌿, 𑌤𑌤𑌃 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌨𑌙𑍍𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿 𑌵𑌿𑌨𑌾𑌶𑌂 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ॥ ௫௮ ॥

𑌇𑌦𑌂 𑌚 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌨 𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 “𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌅𑌹𑌂, 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌪𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿?” 𑌇𑌤𑌿—

இவ்வாறுள்ளதனுல்,

௫௭. எல்லாக்கர்மங்களையும் மனத்தால் என்னிடத்துத் துறந்து, என்னை மேலாகக்கொண்டவனுய், புத்தியோகத்தை நாடி என்னிடத்தேயே சித்தமுடையவனுய் எப்பொழுதும் இருக்கக்கடவாய்.

மனத்தால் - விவேகபுத்தியால் [பகவான் அருளினுல் கிடைத்த மெய்யுணர்வினுலேதான் முக்தி கைகூடுகின்றது ; வெறுங்கர்மத்தாலன்று என்னும் அறிவினுல்—ஆ.]. எல்லாக்கர்மங்களையும் - இம்மைமறுமைக்கான எல்லாக்கர்மங்களையும். என்னிடத்துத்துறந்து - ''எதனைச் செய்கின்றனையோ, எதனை உண்கின்றனையோ'' (௯-உ௭) என்று கூறிய நியாயப்படி ஈச்வரனிடத்து அர்ப்பித்து.என்னை-வாஸுதேவனை. புத்தியோகத்தை-ஒருநிலைப்பட்ட புத்தியுடைமையை. நாடுதல்-வேறொன்றைத் தஞ்சமாகக் கொள்ளாமை. நாடி - (வேறொன்றைச் சாராது புத்தியோகத்தையே அடைக்கலமாகக்கொண்டு என்றபடி). (௫௭)

௫௮. என்மீது சித்தம்பொருந்திய நீ, கடத்தற்கரிய எல்லாவற்றையும் எனது அருளினுல் கடந்துவிடுவாய். மற்று, அஹங்காரத்தால் கேளாயாயின் கெடுவாய்.

கடத்தற்கரிய எல்லாவற்றையும் - பிறந்திறந்து உழலுதற்குக் காரணமான (அவித்யையினுல்) உண்டானவையாய், கடத்தற்கரியனவாயுள்ள ஸகல (ஸங்கடங்களையும்). நீ யான் கூறியதைக் கேளாயாயின், ''நான் [அர்ஜுனன்] பண்டிதன்'' என்னும் செருக்கினுல் எடுத்துக்கொள்ளாயாயின், அங்ஙனம் நீ கெடுவாய். (௫௮)

''நான் சுதந்தரமானவன் ; பிறன்கூறியதை நான் ஏன் செய்யவேண்டும் ?'' என்ற இதனையும் நீ நினைக்கக்கூடாது :

५९. यदहङ्कारमाश्रित्य न योत्स्य इति मन्यसे ।
मिथ्यैष व्यवसायस्ते प्रकृतिस्त्वां नियोक्ष्यति ॥

यदि एतत् त्वम् अहङ्कारम् आश्रित्य न योत्स्ये इति न युद्धं करिष्यामि इति मन्यसे चिन्तयसि निश्चयं करोषि, मिथ्या एषः व्यवसायः निश्चयः ते तव ; यस्मात् प्रकृतिः क्षत्रियस्वभावः त्वां नियोक्ष्यति ॥ ५९ ॥

यस्माच्च—

६०. स्वभावजेन कौन्तेय निबद्धः स्वेन कर्मणा ।
कर्तुं नेच्छसि यन्मोहात्करिष्यस्यवशोऽपि तत् ॥

स्वभावजेन शौर्यादिना यथोक्तेन कौन्तेय निबद्धः निश्चयेन बद्धः स्वेन आत्मीयेन कर्मणा कर्तुं न इच्छसि यत् कर्म मोहात् अविवेकतः करिष्यसि अवशोऽपि परवश एव तत् कर्म ॥ ६० ॥

यस्मात्—

६१. ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन्सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥

ईश्वरः ईशनशीलः नारायणः सर्वभूतानां सर्वप्राणिनां हृद्देशे हृदयदेशे अर्जुन ! शुक्लान्तरात्मस्वभाव ! विशुद्धान्तःकरण !—'अहश्च कृष्णमहरर्जुनं च' इति दर्शनात्—तिष्ठति स्थितिं लभते। सः कथं तिष्ठति? आह—भ्रामयन् भ्रमणं कारयन् सर्वभूतानि यन्त्रा-

---

ருக. (நீ) அஹங்காரத்தைப்பாராட்டி "போர்புரியமாட்டேன்" எனக் கொள்கின்றனையாயின், உன்னுடைய இவ்வுறுதி வீண் என்க ; ஸ்வபாவமானது உன்னைக் கட்டாயப்படுத்தும்.

நீ அஹங்காரத்தைக்கொண்டு, "போர்செய்யமாட்டேன்" என எண்ணுகின்றனையாயின், உறுதியைச் செய்கின்றனையாயின், உன்னுடைய இவ்வுறுதி வீணும் ; ஏனெனில், க்ஷத்திரிய இயல்பானது உன்னை(ப் போர்புரிய)க் கட்டாயப்படுத்தும். ()

இன்னும், ஏனெனில்,

சா०. கௌந்தேய! இயல்பினாலான தன்கர்மத்தால் இறுக்கிக்கட்டப்பெற்ற(நீ)மயக்கத்தால் எதனைச் செய்ய விரும்புகின்றனையில்லையோ, அதனைப் பரவசனாகவேசெய்வாய்.

இயல்பினால் - கீழ்க்கூறிய (கஅ - சங) சூரத்தன்மை முதலியவற்றால். எதனை - கர்மத்தை. மயக்கத்தால் - அவிவேகத்தால். அதனை - கர்மத்தை. (சா०)

ஏனெனில்,

சாக. அர்ஜுந ! ஈச்வரனானவன் எல்லாப்பிராணிகளையும் யந்திரத்தில் ஏறினவை(போல்) மாயையினால் ஆட்டுவித்துக்கொண்டு, எல்லாப்பிராணிகளுடைய ஹ்ருதயஸ்தானத்தினுள் தங்கிநிற்கின்றான்.

ஈச்வரன் - ஆளுந்தன்மையுள்ள நாராயணன். அர்ஜுந ! - வெண்மையுள்ளவனே ! உள்ளத்தின் இயல்பு சுத்தமானவனே ! அகக்கரணம்தெளிந்தவனே !; "பகல் கருமையாயுளது ; பகல் வெண்மையுளது" (ரிக்வேதம் - சா - க - க) என (வழங்கியிருத்தலைக்) காண்பதனாலென்க. தங்கிநிற்கிறான்-நிலைபெறுகிறான்.—அவன் எவ்வாறு தங்கிநிற்கிறான்? என்பது.— கூறுகிறார் : யந்திரத்தில் ஏறின(மரப்பாவைகளைப்போல,) மரத்தால் செய்த ஆள்முதலிய (பொம்மைகளைப்)போல, எல்லாப்பிராணிகளையும்

𑌰𑍂𑌢𑌾𑌨𑌿 𑌇𑌵 𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌆𑌰𑍂𑌢𑌾𑌨𑌿 𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌨𑌿 𑌇𑌵—𑌇𑌤𑌿 𑌇𑌵𑌶𑌬𑍍𑌦𑌃 𑌅𑌤𑍍𑌰 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃—𑌯𑌥𑌾 𑌦𑌾𑌰𑍁𑌕𑍃𑌤𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌦𑍀𑌨𑌿 𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍂𑌢𑌾𑌨𑌿 । 𑌮𑌾𑌯𑌯𑌾 𑌛𑌦𑍍𑌮𑌨𑌾 𑌭𑍍𑌰𑌾𑌮𑌯𑌨𑍍 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌇𑌤𑌿 𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌃 ॥ ௬௧ ॥

௬௨. 𑌤𑌮𑍇𑌵 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌚𑍍𑌛 𑌸𑌰𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨 𑌭𑌾𑌰𑌤 ।
𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌤𑍍𑌪𑌰𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌮𑍍 ॥

𑌤𑌮𑍇𑌵 𑌈𑌶𑍍𑌵𑌰𑌂 𑌶𑌰𑌣𑌮𑍍 𑌆𑌶𑍍𑌰𑌯𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌰𑍍𑌤𑌿𑌹𑌰𑌣𑌾𑌯 𑌗𑌚𑍍𑌛 𑌆𑌶𑍍𑌰𑌯 𑌸𑌰𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌹𑍇 𑌭𑌾𑌰𑌤 । 𑌤𑌤𑌃 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌤𑍍 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍 𑌪𑌰𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌷𑍍𑌟𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑍍 𑌉𑌪𑌰𑌤𑌿𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌚 𑌮𑌮 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 ॥ ௬௨ ॥

௬௩. 𑌇𑌤𑌿 𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌦𑍍𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌰𑌂 𑌮𑌯𑌾 ।
𑌵𑌿𑌮𑍃𑌶𑍍𑌯𑍈𑌤𑌦𑌶𑍇𑌷𑍇𑌣 𑌯𑌥𑍇𑌚𑍍𑌛𑌸𑌿 𑌤𑌥𑌾 𑌕𑍁𑌰𑍁 ॥

𑌇𑌤𑌿 𑌏𑌤𑌤𑍍 𑌤𑍇 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 𑌆𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌤𑍍 𑌗𑍋𑌪𑍍𑌯𑌾𑌤𑍍 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌰𑌮𑍍 𑌅𑌤𑌿𑌶𑌯𑍇𑌨 𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌰𑌹𑌸𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃, 𑌮𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍇𑌨 𑌈𑌶𑍍𑌵𑌰𑍇𑌣 । 𑌵𑌿𑌮𑍃𑌶𑍍𑌯 𑌵𑌿𑌮𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 𑌆𑌲𑍋𑌚𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌏𑌤𑌤𑍍 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍍 𑌅𑌶𑍇𑌷𑍇𑌣 𑌸𑌮𑌸𑍍𑌤𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌅𑌰𑍍𑌥𑌜𑌾𑌤𑌂 𑌯𑌥𑌾 𑌇𑌚𑍍𑌛𑌸𑌿 𑌤𑌥𑌾 𑌕𑍁𑌰𑍁 ॥

𑌭𑍂𑌯𑍋𑌽𑌪𑌿 𑌮𑌯𑌾 𑌉𑌚𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌶𑍃𑌣𑍁—

௬௪. 𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌭𑍂𑌯𑌃 𑌶𑍃𑌣𑍁 𑌮𑍇 𑌪𑌰𑌮𑌂 𑌵𑌚𑌃 ।
𑌇𑌷𑍍𑌟𑍋𑌽𑌸𑌿 𑌮𑍇 𑌦𑍃𑌢𑌮𑌿𑌤𑌿 𑌤𑌤𑍋 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑍇 𑌹𑌿𑌤𑌮𑍍 ॥

யந்திரத்தில் ஏறினவைபோல் மாயத்தால் கூத்தாடும்படிசெய்துகொண்டு தங்கிநிற்கிறான் என்க. யந்திரத்தில் ஏறினவைபோல் என, போல் என்னுஞ்சொல்லை இங்கு (வருவித்து)க் கண்டுகொள்க.—𑌮𑌾𑌯𑌯𑌾 𑌭𑍍𑌰𑌾𑌮𑌯𑌨𑍍 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 எனக்கூட்டுக. (௬௧)

௬௨. **பாரத ! அவனையே அடைக்கலமாக எவ்வாற்றாலும் அடைந்துகொள் ; அவனது அருளினால் உயர்ந்த ஒழிவை(யும்), நித்தியமான நிலையை(யும்) அடைவாய்.**

ஸம்ஸாரத்தொல்லையினைத் தொலைக்க அந்த ஈச்வரனையே அடைக்கலமாக எவ்விதத்தினாலும், [மனத்தினாலும், மொழியினாலும், மெய்யினாலும்] நாடிக்கொள். அப்பொழுது, ஈச்வரனது அருளினால் உயர்ந்த ஒழிவையும், எங்குமுள்ள பொருளான எனது பரமபதமாகிய சாச்வதமான நிலையையும் அடைவாய். ()

௬௩. **இவ்வாறாக, ரஹஸ்யத்தினும் ரஹஸ்யமான ஞானம் உனக்கு என்னால் கூறப்பட்டுளது ; இதனை முற்றும் ஆராய்ந்து, பின்பு எவ்வாறு இஷ்டப்படுகிறாயோ, அவ்வாறு செய்க.**

என்னால் - முற்றுமுணர்ந்த ஈச்வரனால். **இதனை** - கீழ்க்கூறிய (கீதா) சாஸ்திரத்தை. **முற்றும்** - கீழுபதேசிக்கப்பட்ட உபதேசமனைத்தையும். (௬௩)

கர்மயோகியானவன் பகவானிடத்து பக்திசெய்யவேண்டும்.

மீண்டும் நான் கூறுவதைக் கேள் :

௬௪. **எல்லாவற்றினும் மிக்கரஹஸ்யமான எனது அருமைத்திருவாக்கை மீண்டும் கேட்பாயாக ; ''(நீ) எனது நண்பனாக நெருங்கியுள்ளாய்'' என, அதனால் (நான்) உனக்கு நலத்தைக் கூறுவேன்.**

ஸர்வகுஹ்யதமம் ஸர்வேப்ய꞉ குஹ்யேப்ய꞉ அத்யந்தரஹஸ்யம் உக்தமபி அஸக்ருத் பூய꞉ புந꞉ ச்ருணு மே மம பரமம் ப்ரக்ருஷ்டம் வச꞉ வாக்யம்। ந பயாத் நாபி அர்த்தகாரணாபேக்ஷயா வக்ஷ்யாமி; கிம் தர்ஹி?—இஷ்ட꞉ ப்ரிய꞉ அஸி மே மம த்ருடம் அவ்யபிசாரேண இதி க்ருத்வா தத꞉ தேந காரணேந வக்ஷ்யாமி கதயிஷ்யாமி தே தவ ஹிதம் பரமம் ஜ்ஞாநப்ராப்திஸாதநம், தத்தி ஸர்வஹிதாநாம் ஹிததமம் ॥ ௬௪ ॥

கிம் தத் இதி? ஆஹ—

௬௫. மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு।
மாமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரியோऽஸி மே ॥

மந்மநா꞉ பவ மச்சித்த꞉ பவ। மத்பக்த꞉ பவ மத்பஜநோ பவ। மத்யாஜீ மத்யஜநசீலோ பவ। மாம் நமஸ்குரு நமஸ்காரம் அபி மமைவ குரு। தத்ர ஏவம் வர்த்தமாந꞉ வாஸுதேவே ஏவ ஸமர்ப்பிதஸாத்யஸாதநப்ரயோஜந꞉ மாமேவ ஏஷ்யஸி ஆகமிஷ்யஸி। ஸத்யம் தே தவ ப்ரதிஜாநே, ஸத்யாம் ப்ரதிஜ்ஞாம் கரோமி ஏதஸ்மிந் வஸ்துநி இத்யர்த்த꞉; யத꞉ ப்ரிய꞉ அஸி மே। ஏவம் பகவத꞉ ஸத்யப்ரதிஜ்ஞத்வம் புத்த்வா பகவத்பக்தே꞉ அவச்யம்பாவி மோக்ஷபலம் அவதார்ய பகவச்சரணைகபராயண꞉ பவேத் இதி வாக்யார்த்த꞉ ॥ ௬௫ ॥

எல்லாவற்றினும் - எல்லா ரஹஸ்யங்களினும். மீண்டும் - அடிக்கடி கூறப்பட்டிருந்தும். பயத்தினலாயினும், பொருளுக்காகவாயினும் (நான் உனக்கு நலத்தைக்) கூறப்போகிறேனல்லேன்.—மற்று, என்ன ?—நீ எனக்குப் பிரியனுகப் பிறழாதிருக்கிறாய் எனக்கொண்டு, அதுகாரணமாக நான் உனக்கு உயர்ந்த நன்மையை, ஞானத்தைப் பெறுதற்கு ஸாதநத்தைக் கூறுவேன். அதுவன்றோ நன்மைகளெல்லாவற்றினும் மிக்க மேலான நன்மை. (௬௪)

அஃதென்ன ? என்பது—அருளிச்செய்கிறார் :

௬௫. (நீ) என்னிடத்து மனமுடையவனுக, என்னிடத்துப் பக்தியுள்ளவனுக, என்னைப் பூஜிப்பவனுக இருக்கவேண்டும். என்னை வணங்கவேண்டும். (இவ்வாறுக, நீ) என்னையே அடைவாய். உனக்கு உண்மையாக உறுதிசொல்லுகின்றேன் ; எனது நண்பனுயிருக்கிறாய் (ஆதலின்).

என்னிடத்து மனமுடையவனுக - என்னை நினைப்பவனுக. பூஜிப்பவனுக - பூஜிக்குந்தன்மையனுக. என்னை வணங்கவேண்டும் - நமஸ்காரத்தையும் எனக்கே செய்யவேண்டும். இனி, இவ்வாறிருப்பவனுய், ஸாத்தியப்பயனையும் ஸாதனப்பயனையும் வாஸுதேவனிடத்திலேயே அர்ப்பித்தவனுய் என்னையே வந்தடைவாய். நீ எனது நண்பனுயிருக்கிறு யாதலால், உனக்கு நான் உண்மையான உறுதிசொல்லுகின்றேன் ; இவ்விஷயத்திலே ஸத்தியமான பிரதிஜ்ஞை செய்கின்றேன், ஸத்தியமான உறுதிவார்த்தை சொல்லுகின்றேன் என்றபடி. இவ்வாறுகப் பகவானுடைய உறுதிமொழியை ஸத்தியமாக உணர்ந்து, பகவத்பக்திக்கு அவச்யமுண்டாகின்ற மோக்ஷமாகிய பயனைத் தெளிவாக நிச்சயித்து, பகவானையே அடைக்கலமாகவும் உயர்ந்த ஒரேகதியாகவும் கொண்டவனுய் இருக்கவேண்டும் என்பது (இப்)பிரகரணத்தின் (தேர்ந்த) பொருள்.

कर्मयोगनिष्ठायाः परमरहस्यम् ईश्वरशरणताम् उपसंहृत्य अथ इदानीं कर्मयोगनिष्ठाफलं सम्यग्दर्शनं सर्ववेदान्तविहितं वक्तव्यमिति आह—

௬௬. सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ॥

सर्वधर्मान् सर्वे च ते धर्माश्च सर्वधर्माः तान्—धर्मशब्देन अत्र अधर्मोऽपि गृह्यते, नैष्कर्म्यस्य विवक्षितत्वात्, 'नाविरतो दुश्चरितात्' 'त्यज धर्ममधर्मं च' इत्यादिश्रुतिस्मृतिभ्यः—सर्वधर्मान् परित्यज्य संन्यस्य सर्वकर्माणि इत्येतत् । माम् एकं सर्वात्मानं समं सर्वभूतस्थितम् ईश्वरम् "अच्युतोऽहमेव" इति एवं शरणं व्रज, न मत्तः अन्यत् अस्ति इति अवधारय इत्यर्थः ; अहं त्वा त्वाम् एवं निश्चितबुद्धिं सर्वपापेभ्यः सर्वधर्माधर्मबन्धनरूपेभ्यः मोक्षयिष्यामि स्वात्मभावप्रकाशीकरणेन । उक्तं च 'नाशयाम्यात्मभावस्थो ज्ञानदीपेन भास्वता' इति ॥ अतः मा शुचः शोकं मा कार्षीः इत्यर्थः ॥ ௬௬ ॥

துறவும், மெய்யுணர்வும்.

கர்மயோகநிஷ்டையினுடைய பரமரஹஸ்யமானது ஈச்வரனை அடைக்கலமாகப்புகுதல் என முடித்து, இனி, இப்பொழுது, எல்லாஉபநிஷத்துக்களிலும் விதிக்கப்பட்டதாய், கர்மயோகநிஷ்டையின் பயனை மெய்யுணர்வை உரைக்கவேண்டும் என அருளிச்செய்கிறார் :

௬௬. **(நீ) எல்லாத்தர்மங்களையும் துறந்து, என்னையொருவனையே அடைக்கலமாக நாடிக்கொள். நான் உன்னை எல்லாப்பாவங்களினின்றும் விடுவிப்பேன் ; வருந்தாதே.**

தர்மமென்னும்சொல்லினல், இங்கு அதர்மமும் கொள்ளப்படுகின்றது ; நைஷ்கர்ம்யத்தை, கர்மம்நீங்கிய நிலையை உபதேசிக்கக்கருதியுள்ளமையின் ; " தீயொழுக்கத்தினின்றும் ஒழியாதவன் (ஆத்மாவையடைய) மாட்டான் " (கட - க - உ - உச), " தர்மத்தையும், அதர்மத்தையும் துறந்திடு " என்பனமுதலிய சுருதிஸ்மிருதிகளினலென்க. எல்லாத்தர்மங்களையும் துறந்து - எல்லாக்கர்மங்களையும் துறந்து என்றபடி. என்னையொருவனையே, " எல்லாவற்றினுடைய ஆத்மாவாய் எல்லாப்பொருள்களினுள்ளும் ஒப்பநிற்கின்ற ஈச்வரன் நானேதான் " என இவ்வாறு அடைக்கலமாக நாடிக்கொள் ; என்னையல்லது வேறு இல்லை எனத் தெளிவாக நிச்சயித்துக்கொள் என்பது (தேர்ந்த) பொருள். இவ்வாறு புத்திநிச்சயிக்கப்பெற்ற உன்னை, ஸகல தர்மஅதர்மக்கட்டுக்களாகிய எல்லாப்பாவங்களினின்றும் விடுவிப்பேன், (உள்ளபடியான) ஆத்மஇயல்பை, ஆத்மஸ்வருபத்தை விளங்கச்செய்து (என்னை உனது ஆத்மாவாக வெளிப்படுத்தி) விடுவிப்பேன் ; " அகக்கரணவிருத்தியினுள் தங்கியவனய், ஒளிர்கின்ற ஞானவிளக்கைக்கொண்டு (அஜ்ஞானஇருளை) அழிக்கின்றேன் " (கo - கக) எனக் கூறப்பட்டிருக்கின்றது.

ஆகவே, வருந்தவேண்டாம், துயரமுறவேண்டாம் என்றவாறு. (௬௬)

किं अस्मिन् गीताशास्त्रे परं निःश्रेयससाधनं निश्चितम्?—किं ज्ञानं कर्म वा? आहोस्विदुभयमिति?।

कुतः संशयः—

'यज्ज्ञात्वाऽमृतमश्नुते' 'ततो मां तत्त्वतो ज्ञात्वा विशते तदनन्तरम्' इत्यादीनि वाक्यानि केवलज्ञानात् निःश्रेयसप्राप्तिं दर्शयन्ति। 'कर्मण्येवाधिकारस्ते' 'कुरु कर्मैव' इत्येवमादीनि कर्मणाम् अवश्यकर्तव्यतां दर्शयन्ति। एवं ज्ञानकर्मणोः कर्तव्यत्वोपदेशात् समुच्चितयोरपि निःश्रेयसहेतुत्वं स्यादिति भवेत् संशयः।

किं पुनः अत्र विचारप्रयोजनम्?

ननु एतदेव—एषाम् अन्यतमस्य परनिःश्रेयससाधनत्वावधारणम्; अतः विस्तीर्णतरं विचार्यम् एतत्॥

आत्मज्ञानस्य तु केवलस्य निःश्रेयसहेतुत्वं, भेदप्रत्ययनिवर्तकत्वेन कैवल्यफलावसायित्वात्। क्रियाकारकफलभेदबुद्धिः अविद्यया आत्मनि नित्यप्रवृत्ता—'मम कर्म, अहं कर्ता, अमुष्मै फलाय इदं कर्म

முக்திக்கு ஸாதநம் யாது ?

இந்த கீதாசாஸ்திரத்திலுள், உறுதியானநன்மைக்கு உயர்ந்த ஸாதநம் யாது நிச்சயிக்கப்பட்டது ?—ஞானமா ? அல்லது கர்மமா ? அல்லது இரண்டுமா ? என்பது.

ஏன் ஸம்சயம் ?

"எதனை அறிந்து சாகாமையைப் பெறுகின்றனே" (கங - கஉ), "அப்பொழுது என்னை உண்மையாய் அறிந்து உடனே என்னைப் புகுகிறான்" (கஅ - ருரு) என்பன முதலிய வாக்கியங்கள் ஞானமொன்றினலேயே உறுதியானநன்மையைப் பெறுதலை உணர்த்துகின்றன. "உனக்குக் கர்மத்திலேதான் அதிகாரம்" (உ - சஎ), "கர்மத்தையே செய்யவேண்டும்" (ச - கரு) என்னும்இவைபோன்ற (வாக்கியங்கள்) கர்மங்களை அவச்யம் செய்யவேண்டும் என உணர்த்துகின்றன. இவ்வாறாக, ஞானகர்மமிரண்டனையும் செய்யவேண்டும் என உபதேசிப்பதனல், இரண்டும் ஒருங்குசேர்ந்தும் உறுதியானநன்மையைத் தருபவை எனவும் ஆகலாம்; என்று சம்சயம் உண்டாகும்.

மற்று, இதிலே ஆராய்ச்சியின் பயனென்ன ?

ஏன் ! இதுவேதான்—(ஞானம், கர்மம், ஒருங்குகூடிய ஞானகர்மம்என்ற) இவற்றினுள் எதாவதொன்றை உறுதியான நன்மைக்கு உயர்ந்த ஸாதநமாக இன்னதுதான் என்று நிச்சயிப்பதுதான். ஆகவே, இவ்விஷயம் மிகவும் விரிந்ததாகி ஆராய்ச்சி செய்யவேண்டியதாய் உள்ளது.

ஆத்மஅறிவு ஒன்றே முக்திக்கு ஸாதநம்.

ஆத்மஅறிவுஒன்றே உறுதியானநன்மைக்கு ஸாதநமாம்; பேதஉணர்ச்சியை நீக்கி, கைவல்யமென்னும்பயனில் தீர்வதனலென்க. அவித்யையென்பது - செய்கை, செய்பொருள்கள், பயன் என்னும் பேதபுத்தியான வேற்றுமையுணர்வு. (அது) ஆத்மாவினிடத்து எப்பொழுதும் தங்கியுள்ளது. "செய்கை என்னுடையது ; செய்பவன் நான் : இப்பயனுக்காக இச்செய்கையைச் செய்யப்போகிறேன்" என்ற இந்த அவித்

भविष्यामि" इति इयं च अविद्या अनादिकालप्रवृत्ता । अस्याः अविद्यायाः निव-
र्तकम् "अयम् अहम् अस्मि केवलः अकर्ता अक्रियः अफलः ; न मत्तः अन्यः अस्ति
कश्चित्" इत्येवंरूपं च आत्मविषयं ज्ञानम् उत्पद्यमानं, कर्मप्रवृत्तिहे-
तुभूतायाः भेदबुद्धेः निवर्तकत्वात् । तुशब्दः पक्षद्वयव्यावृत्त्यर्थः—
न केवलेभ्यः कर्मभ्यः, न च ज्ञानकर्मभ्यां समुच्चिताभ्यां निःश्रेयसप्रा-
प्तिः इति पक्षद्वयं निवर्तयति । अकार्यत्वाच्च निःश्रेयसस्य कर्मसाधनत्वानु-
पपत्तिः । न हि नित्यं वस्तु कर्मणा ज्ञानेन वा क्रियते ।
केवलज्ञानमपि अनर्थकं तर्हि ? ।

न, अविद्यानिवर्तकत्वे सति दृष्टकैवल्यफलावसानत्वात् । अवि-
द्यातमोनिवर्तकस्य ज्ञानस्य दृष्टं कैवल्यफलावसानत्वं, रज्ज्वादि-
विषये सर्पाद्यज्ञानतमोनिवर्तकप्रदीपप्रकाशवत् । विनिवृत्तसर्पादिवि-
कल्परज्जुकैवल्यावसानं हि प्रकाशफलं ; तथा ज्ञानम् ।

दृष्टार्थानां च छिदिक्रियाग्निमन्थनादीनां व्यापृतकर्त्रादिकार-
काणां द्वैधीभावाग्निदर्शनादिफलात् अन्यफले कर्मान्तरे व्यापारा-

---

யையானது அனாதிகாலமாகத் தலைப்பட்டிருப்பது. இந்த அவித்யையைத் துடைப்பது - "அகர்த்தாவாய், கர்மமில்லாதவனாய், பயனில்லாதவனாய், தனிப்பொருளாய் இதோ நான் இருக்கின்றேன், என்னைக்காட்டிலும் வேறொருவன் இல்லை" என இத்தகையதாக உண்டாகும் ஆத்மஅறிவு; கர்மத்திற் செல்லுதற்குக் காரணமான பேதஉணர்ச்சியைப் போக்குகின்றமையின்.—(555 - ஆம் பக்கத்தில் 34 - ஆம் வரியில் "ஆத்மஅறிவுஒன்றே" என்பதிலுள்ள) "ஏ" என்னும்சொல் - (மற்றைய இரண்டு) பக்ஷங்களையும் விலக்கும்பொருட்டென்க: உறுதியானநன்மையைப் பெறுதல் "வெறும்கர்மங்களினாலன்று; ஒருங்குசேர்ந்த ஞானகர்மங்களினாலுமன்று" என இரண்டு பக்ஷங்களையும் (அந்த ஏகாரம்) நீக்குகின்றது. அன்றியும், உறுதியானநன்மையென்பது கார்யமல்லாததனால் [கர்மத்தினால் ஸாதித்துக்கொள்ளப்படும் பயனல்லாததனால்] கர்மம் ஸாதநமாதல் ஏலாது. நித்தியப்பொருளானது கர்மத்தினாலாயினும், ஞானத்தினாலாயினும் செய்துகொள்ளப்படுவதில்லையன்றோ.

(ஆக்ஷேபம்) :—அப்பொழுது, சுத்தமான அறிவுங்கூடப் பயனில்லாததாம்?

(ஸமாதாநம்) :—அப்படியன்று; அவித்யையை நீக்குவதனால், கைவல்யமென்னும்பயனிலே முடிவதாகக் காணப்படுகின்றமையின். அவித்யையாகிய இருளை அகற்றுகின்ற அறிவிற்கு கைவல்யமென்னும்பயன் முடிபெனக் காணப்படுகின்றது; கயிறுமுதலானவிஷயத்திலே, பாம்புமுதலான அஜ்ஞானஇருளை நீக்கும் விளக்குவெளிச்சம்போல என்க. பாம்பென்னும்வேற்றுமையுணர்ச்சிநீங்கிய கயிற்றைமாத்திரம் முடிவாகக்கொண்டதன்றோ வெளிச்சத்தின்பயன்; அவ்வாறே, அறிவென்க. (வெளிச்சத்தின்பயனானது பாம்பென்னும்மயக்கத்தை நீக்கி அதனால் கயிறுமாத்திரம்தனிப்படுவதில் தீர்ந்துவிடுகின்றது; அதுபோல, அறிவின்பயனானது அவித்யையினை நீக்கி அதனால் ஆத்மாமாத்திரம் தனிப்படுவதில், கைவல்யத்தில் தீர்ந்துவிடுகின்றது என்பதாம்.)

ஞானம் கர்மத்தோடு ஒருங்குகூடாது.

இனி, பயன்காணப்படுகின்ற அறுத்தல், தீக்கடைதல் முதலிய (செய்கைகளில்) கர்த்தா முதலிய காரகங்கள் சென்றிருக்கும்போது, இரண்டாக்குதல் தீக்கா

நோபபத்தி꞉ யதா, ததா உத்க்ருஷ்டாயாம் ஜ்ஞாநநிஷ்டாக்ரியாயாம் வ்யாப்ருதஸ்ய ஜ்ஞாத்ராதிகாரகஸ்ய கூடஸ்தகைவல்யபலாத் அந்யபலே கர்மணி வ்யாப்ருதி꞉ அநுபபந்நா இதி ந ஜ்ஞாநநிஷ்டா கர்மஸஹிதா உபபத்யதே ।

புஜ்யக்நிஹோத்ராதிக்ரியாவத் ஸ்யாத் இதி சேத் —

ந; கைவல்யபலே ஜ்ஞாநே க்ரியாபலார்தித்வாநுபபத்தே꞉ । கைவல்யபலே ஹி ஜ்ஞாநே ப்ராப்தே, ஸர்வத꞉ ஸம்ப்லுதோதகபலே கூபதடாகாதிக்ரியாபலார்தித்வாபாவவத், பலாந்தரே தத்ஸாதநாயாம் வா க்ரியாயாம் அர்தித்வாநுபபத்தி꞉ । ந ஹி ராஜ்யப்ராப்திபலே கர்மணி வ்யாப்ருதஸ்ய க்ஷேத்ரமாத்ரப்ராப்திபலே வ்யாபார꞉ உபபத்யதே, தத்விஷயம் வா அர்தித்வம் । தஸ்மாத் ந நி꞉ஶ்ரேயஸஸாதநம் கர்ம । ந ச ஜ்ஞாநகர்மணோ꞉ ஸமுச்சய꞉ । நாபி ஜ்ஞாநஸ்ய கைவல்யபலஸ்ய கர்மஸாஹாய்யாபேக்ஷா, அவித்யாநிவர்தகத்வேந விரோதாத் । ந ஹி தம꞉ தமஸோ நிவர்தகம் । அத꞉ கேவலமேவ ஜ்ஞாநம் நி꞉ஶ்ரேயஸஸாதநம் இதி ।

ணுதல்முதலிய பயன்களைக்காட்டிலும் வேறுபயனுள்ள வேறோர்செய்கையிலே (அக்கர்த்தாமுதலியன அதேகாலத்துச்) செல்லுதல் ஏலாதவாறுபோல, பயன்காணப்படுகின்ற ஞானநிஷ்டையாகிய செய்கையில் அறிபவன்முதலிய காரகங்கள் சென்றிருக்கும்போது, ஆத்மகைவல்யமாகிய பயனைக்காட்டிலும் வேறுபயனுள்ள வேறோர் செய்கையிலே (அவ்வறிபவன்முதலியன அதேகாலத்துச்) செல்லுதல் ஏலாது ; ஆதலால், ஞானநிஷ்டை கர்மத்தோடுகூடி அமையாது.

(ஆக்ஷேபம்) :—உண்ணுதலும் அக்நிஹோத்ரம்முதலிய செய்கையும்போல ஆகலாம் எனில் (உண்ணுதலென்னும்உலகச்செய்கையோடு அக்நிஹோத்ரம்முதலிய வேதச்செய்கையைக் கூடஅநுஷ்டிப்பதுபோல, அக்நிஹோத்ரம்முதலிய செய்கையொடு ஞானநிஷ்டையென்னும்செய்கையைக் கூடஅநுஷ்டிக்கலாம் எனில்)—

(ஸமாதாநம்) :—அப்படியன்று ; கைவல்யப்பயனுள்ள ஞானமிருக்க, கர்மத்தின் பயனை வேண்டுதல் ஒவ்வாமையின் (ஒருவன் திருப்தியாகப் புசித்தாலும், அதாவது உண்ணுவதின் பயனாகிய திருப்தியைப் பெற்றவிடத்தும், அவன் ஸ்வர்க்கம்முதலியவற்றையும் அவற்றை யடைதற்குக் காரணமான அக்நிஹோத்ரம்முதலியவற்றையும் விரும்புகிறபடியால், அவன்விஷயத்திலே உண்ணுதலையும் அக்நிஹோத்ரம் முதலியவற்றையும் ஒருங்குசேர்த்தல் பொருந்தும். அவ்வாறு,முக்தியைக் கொடுக்கும் ஞானநிஷ்டையைப் பெற்றவிடத்து ஸ்வர்க்கத்தையேனும்,அதனையடைதற்குக் காரணமான கர்மத்தையேனும் ஞானி விரும்புதல் இல்லை ஆதலால், ஞானமும் கர்மமும் ஒருங்குகூடா என்பதாம்). எங்கும் பெருகிநிற்கும் நீர்ப்பெருக்குள்ளவிடத்து கிணறு குளம் முதலியவற்றை வெட்டுவதன்பயனை வேண்டாமைபோல, கைவல்யப்பயனுள்ள ஞானத்தைப்பெற்றவழி வேறோர்பயனையாயினும், அதற்கு ஸாதநமான கர்மத்தை[illegible]னும் வேண்டுதல் அமையாது. ராஜ்யத்தைப் பெறுவதான பயனுள்ள கர்[illegible] சென்றிருப்பவனுக்கு ஒருசிறுவயலைமாத்திரம் பெறுவதான பயனில் செ[illegible]னும், அதனைப்பற்றிய விருப்பமாயினும் அமையாதன்றே. ஆதலால், [illegible]யானநன்மைக்கு ஸாதநமன்று ; ஞானகர்மம் ஒருங்குசேர்தலும் ஒவ்வ[illegible]யும், கைவல்யப்பயனுள்ள ஞானத்திற்குக் கர்மத்தின்உதவி வேண்டுவதில்லை ; அவித்யையை நீக்குவதனால் விரோதமாதலின். இருள் இருளை நீக்கமுடியாதன்றே. ஆகவே, ஞானமொன்றேதான் உறுதியானநன்மைக்கு ஸாதநமென்க.

ந ; நித்யாகரணே ப்ரத்யவாயப்ராப்தே:, கைவல்யஸ்ய ச நித்யத்வாத் । யத் தாவத் கேவலஜ்ஞாநாத் கைவல்யப்ராப்தி: இத்யேதத், தத் அஸத்; யத: நித்யானாம் கர்மணாம் ஶ்ருத்யுக்தானாம் அகரணே ப்ரத்யவாய: நரகாதிப்ராப்தி-லக்ஷண: ஸ்யாத்—

நந்வேவம் தர்ஹி கர்மப்யோ மோக்ஷோ நாஸ்தீதி அநிர்மோக்ஷ ஏவ । நைஷ தோஷ: ; நித்யத்வாத் மோக்ஷஸ்ய । நித்யானாம் கர்மணாம் அநுஷ்டாநாத் ப்ரத்யவாயஸ்ய அப்ராப்தி:, ப்ரதிஷித்தஸ்ய ச அகரணாத் அநிஷ்டஶரீரானுத்பத்தி:, காம்யானாம் ச வர்ஜனாத் இஷ்டஶரீரானுத்பத்தி:, வர்தமானஶரீராரம்பகஸ்ய ச கர்மண: பலோபபோகக்ஷயே பதிதே அஸ்மின் ஶரீரே தேஹாந்தரோத்பத்தௌ ச காரணாபாவாத் ராகாதீனாம் ச அகரணே ஸ்வரூபாவஸ்தானமேவ அயத்னஸித்தம் கைவல்யம் இதி ।

அதிக்ராந்தானேகஜன்மாந்தரக்ருதஸ்ய ஸ்வர்கநரகாதிப்ராப்திபலஸ்ய அநா-ரப்தகார்யஸ்ய உபபோகானுபபத்தே: க்ஷயாபாவ: இதி சேத்—

ந; நித்யகர்மானுஷ்டானாயாஸது:கோபபோகஸ்ய தத்பலோபபோகத்வோபபத்தே: ; ப்ராயஶ்சித்தவத் வா பூர்வோபாத்ததுரிதக்ஷயார்த்தம் நித்ய-

கர்மத்தினுலேயே மோக்ஷம் என்னும் கொள்கையின் மறுப்பு.

(ஆக்ஷேபம்) :—அப்படியன்று ; நித்யகர்மங்களைச் செய்யாதிருக்கத் தீங்குவருவதனுலும், கைவல்யம் நித்யமாதலாலும் என்க. (அதாவது) - ''கைவல்யத்தைப் பெறுதல் ஞானமொன்றினுலேதான்'' என்றஇது எதுவோ, அது நேரன்று ; ஏனெனில், சுருதியினுள் கூறப்பட்ட நித்யகர்மங்களைச் செய்யாவிடில், நரகம் முதலியவற்றை யடைதலாகிய தீங்கு வரும்.

(எதிராக்ஷேபம்):—ஆயின், இவ்வாருக அப்பொழுது, கர்மங்களால் மோக்ஷமில்லையெனவே, மோக்ஷத்தைப் பெறுதலே இல்லையாகும்.

(ஸமாதாநம்) :—இது குற்றமன்று ; மோக்ஷம் நித்யமாதலின். நித்ய கர்மங்களை அநுஷ்டிப்பதனுல், தீங்கு வருதலில்லை : விலக்கிய கர்மங்களைச் செய்யாமையினுல், வேண்டாத உடம்பும் உண்டாதலில்லை : காம்யகர்மங்களைத் தவிர்ப்பதனுல், வேண்டிய உடம்பும் அமைவதில்லை : இப்பொழுதுள்ள உடம்பை உண்டாக்கியுள்ள கர்மத்தின் பயனுடைய அநுபவமும் கழியுமளவிலே இவ்வுடம்பு மாண்டுபோகவும், வேருேர் உடம்பு உண்டாவதற்குக் காரணமின்மையாலும், (ஒன்றன்மேலும்) ஆசை முதலியவற்றைச் செய்யாமையினுலும், தான் தன்வடிவமாக நிற்றலேதான் முயற்சியின்றி அமையும் கைவல்யம் என்பது.

(எதிராக்ஷேபம்) :—சென்ற பல வேறு பிறவிகளிற் செய்யப்பட்டவையாய், ஸ்வர்க்கம் நரகம்முதலியவற்றை யடைதலைப் பயனுகக்கொண்டவையாய், (இன்னும் தமது) பயனைக்கொடுக்கத்தலைப்படாத கர்மங்களை அநுபவித்தல் அமையாமையின் (அக்கர்மங்கள்) கழிந்துபோகவில்லை எனில்,—

(எதிர்மறுமொழி) :—அப்படியன்று ; நித்யகர்மங்களை அநுஷ்டிப்பதிலே சிரமத்தையும், வருத்தத்தையும் அநுபவிப்பதானது அக்(கர்மங்களின்)பயனை அநுபவிப்ப

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

தாக அமையுமாதலின்: அல்லது, நித்யகர்மங்கள், பிராயச்சித்தகர்மங்கள்போல, முன்செய்யப்பட்ட பாவங்கள் தேய்ந்திடுதற்கு ஆவனவாதலின். (தமது பயனை இன்னும் கொடுக்கத்) தலைப்படாத கர்மங்கள் அநுபவத்திலேயே கழிந்துபோனமையினாலும், புதியகர்மங்களைச் செய்யாமையினாலும் கைவல்யம் முயற்சியின்றி அமைவதென்க.

(மறுப்பு) :—அப்படியன்று; "அதனையே அறிந்து சாகாமையைக் கடந்துவிடுதலைப் பெறுகிறான்; (அந்த) நிலைக்கு வேறுவழி இல்லை" (ச்வே - ௩ - அ) என்னும் சுருதியினால், மோக்ஷத்திற்கு வேறுவழி இல்லை என்பது. தோலைப்போல, ஆகாசத்தைச் சுருட்டுதல் நிகழாததுபோல (ச்வே - சு - உ0), அஜ்ஞானிக்கு மோக்ஷம் நிகழமாட்டாது என்னும் சுருதியினாலும், "ஞானத்தினால் கைவல்யத்தைப் பெறுகிறான்" என்னும் புராணமாகிய ஸ்மிருதியினாலும் என்க.

அன்றியும், பயனைக்கொடுக்கத் தலைப்படாத புண்யகர்மங்கள் கழிந்துபோதலென்பது முடியாததலால், (கர்மத்தால் மோக்ஷம் அமையாது.) பயனைக் கொ கத்தலைப்படாத பாவகர்மங்கள் எவ்வாறு நிகழ்தலாகுமோ, அவ்வாறு, பயனைக் டுக்கத்தலைப்படாத புண்யகர்மங்களும் நிகழ்தலாகும். இனி, அவை வே உடம்பினை உண்டாக்காது கழிந்திடுதல் இயலாததலின், மோக்ஷம் அமையாகா.

மற்றும், தர்ம அதர்மங்கட்குக் காரணமான விருப்ப வெறுப்ப
அறுத்தல் ஆத்மஞானத்தாலன்றி ஏலாததலின்,
யாது. மேலும், "நித்யகர்மங்களுக்குப் பயன்
"வர்ணத்தாரும் ஆச்ரமத்தாரும் தமது கர்மங்
௩) என்று தொடங்கும் ஸ்மிருதியினாலும்

நித்யகர்மம் மறுபிறப்பைத் தராமை [illegible] மறுப்பு.

இனி, எவர்கள் "நித்யகர்மங்கள் துன்பவடிவாயிருத்தலால், முன்செய்யப்பட்ட பாவகர்மங்களின் பயனேதான்; அவற்றிற்குத் தம்மைத்தவிர வேறுபய

दुरितकर्मणां फलमेव, न तु तेषां स्वरूपव्यतिरेकेण फलान्तरम् अस्ति, अश्रुतत्वात्, जीवनादिनिमित्ते च विधानात् इति।

न, अप्रवृत्तफलानां कर्मणां फलदानासंभवात्; दुःखविशेषानुपपत्तिश्च स्यात्।

यत् उक्तम्—पूर्वजन्मकृतदुरितानां कर्मणां फलं नित्यकर्मानुष्ठानायासदुःखं भुज्यते इति—तत् असत्। न हि मरणकाले फलदानाय अनङ्कुरीभूतस्य कर्मणः फलं जन्मान्तरे आरब्धे जन्मनि उपभुज्यते इति उपपत्तिः। अन्यथा स्वर्गफलोपभोगाय अग्निहोत्रादिकर्मारब्धे जन्मनि नरकफलोपभोगानुपपत्तिः न स्यात्।

तस्य दुरितदुःखविशेषफलत्वानुपपत्तेश्च—अनेकेषु हि दुरितेषु संभवत्सु भिन्नदुःखसाधनफलेषु नित्यकर्मानुष्ठानायासदुःखमात्रफलेषु कल्प्यमानेषु द्वन्द्वरोगादिबाधनं निर्निमित्तं न हि शक्यते कल्पयितुं, नित्यकर्मानुष्ठानायासदुःखमेव पूर्वोपात्त-

னில்லை ; சுருதியினுள் கூறப்படாமையின் : அன்றியும், உயிர்வாழ்தல்முதலியன காரணமாக (அவற்றை) விதித்தலின்'' எனக் கூறுகிறார்களோ, (நித்யகர்மம் துன்பமாயிருத்தலால், முன்செய்த பாவகர்மத்தின் பயன் எனவும் ; சுருதியினுள் நித்யகர்மத்திற்குப் பயன் கூறப்படாமையால் அதற்கு அதுவேதான் பயன், அதாவது நித்யகர்மத்திற்குத் தனியாக வேறோர் பயனில்லை எனவும் ; நித்யகர்மத்தைச் செய்தற்கு ஒருவன் உயிர் வாழ்தல்தான் காரணம், அதாவது உயிரோடிருந்தால் அதனைச் செய்துவரவேண்டுமென்று அது வேதத்தில் விதிக்கப்பட்டதெனவும் கூறுகிறார்களோ, அவர்கள் கூறுவது)

அப்படியன்று ; ஏனெனில், (இன்னும் தமதுகார்யத்தைச் செய்யத்) தலைப்படாத கர்மங்கள் பயனைக் கொடுத்தல் நிகழாது ; மேலும், துன்பப்பயனிலே வித்தியாசமும் இருக்கமுடியாது.

(அதாவது) :—"முந்தின பிறவிகளிலே செய்யப்பட்ட பாவகர்மங்களின் பயனானது நித்யகர்மங்களை அநுஷ்டிப்பதிலேயுள்ள சிரமமாகவும் துன்பமாகவும் அநுபவிக்கப்படுகின்றது" என எது கூறப்பட்டதோ, அது நேரன்று. சாகுந்தருணத்திலே பயனைக் கொடுக்க முளைக்கொள்ளாத [தலைப்படாத] கர்மத்தின் பயனானது வேறோர் கர்மத்தால் தொடங்கப்பட்ட பிறவியிலே அநுபவிக்கப்படுகின்றது என்பது பொருத்தமில்லையன்றோ. அல்லாக்கால், ஸ்வர்க்கப்பயனை அநுபவிக்க அக்நிஹோத்ரம்முதலிய கர்மங்களால் தொடங்கப்பட்ட பிறவியிலே நரகப்பயனை அநுபவித்தல் கூடாமை யாகாது.

மற்றும், அதற்கு [நித்யகர்மத்திற்கு] பாவகர்மத்தாலான ஓர்வகைத்துன்பமானது பயனாதலென்பது செல்லாது. வெவ்வேறு துன்பங்கட்குக் காரணமான ...ன்களையுடைய பல பாவகர்மங்கள் நிகழக்கூடியவையாயிருக்க, (அப்பாவகர்மங் ... நித்யகர்மங்களை அநுஷ்டிப்பதிலேயுள்ள சிரமத்தையும் துன்பத்தையும்மாத்தி ... பனாகக்கொண்டவை எனக்கொள்ளுங்கால், (ஒருவனை விருப்புவெறுப்புமுதலிய) ... வங்களும் நோய்களும் மற்றுமிவைபோன்றவையும் பீடித்தற்குக் காரணமில்லை ...ம் ; நித்யகர்மங்களை அநுஷ்டிப்பதிலேயுள்ள சிரமமும் துன்பமுந்தான் முன் ...ாவகர்மப்பயன், தலையால் கற்களைச் சுமத்தல்முதலிய துன்பம் (முன்செய்த

பாபதுரிதபலம் ந ஶிரஸா பாஷாணவஹநாதிதுஃகவதிதி ।

அப்ரக்ருதம் ச இதம் உச்யதே — நித்யகர்மாநுஷ்டாநாயாஸதுஃகம் பூர்வக்ருததுரிதகர்மபலம் இதி । கதம் ? — அப்ரவ்ருத்தபலஸ்ய ஹி பூர்வக்ருததுரிதஸ்ய க்ஷயஃ ந உபபத்யதே இதி ப்ரக்ருதம் । தத்ர ப்ரவ்ருத்தபலஸ்ய கர்மணஃ பலம் நித்யகர்மாநுஷ்டாநாயாஸதுஃகம் ப்ரூஷே பவாந், ந அப்ரவ்ருத்தபலஸ்யேதி । அத ஸர்வமேவ பூர்வக்ருதம் துரிதம் ப்ரவ்ருத்தபலமேவ இதி மந்யதே பவாந் — ததஃ நித்யகர்மாநுஷ்டாநாயாஸதுஃகமேவ பலம் இதி விஶேஷணம் அயுக்தம் । நித்யகர்மவித்யாநர்த்தக்யப்ரஸங்கஶ்ச, உபபோகேநைவ ப்ரவ்ருத்தபலஸ்ய துரிதகர்மணஃ க்ஷயோபபத்தேஃ ।

கிஞ்ச — ஶ்ருதஸ்ய நித்யஸ்ய துஃகம் சேத் பலம், நித்யகர்மாநுஷ்டாநாயாஸாதேவ தத் த்ருஶ்யதே வ்யாயாமாதிவத் ; தத் அந்யஸ்ய இதி கல்பநாநுபபத்திஃ ।

ஜீவநாதிநிமித்தே ச விதாநாத் நித்யாநாம் கர்மணாம் ப்ராயஶ்சித்தவத் பூர்வக்ருததுரிதபலத்வாநுபபத்திஃ । யஸ்மிந் பாபகர்மணி நிமித்தே யத் விஹிதம் ப்ராயஶ்சித்தம், ந து தஸ்ய பாபஸ்ய தத் பலம் । அத தந்நிமித்தஸ்ய பாபஸ்ய

பாவகர்மப்பயன்) அன்று எனவும் கொள்ளுதல் (வேண்டும்; வேண்டவே, அவ்வாறு கொள்ளுதல்) கூடாதன்றோ.

அன்றியும் "நித்யகர்மங்களை அநுஷ்டிப்பதிலேயுள்ள சிரமமும் துன்பமும் - முன்செய்த பாவகர்மத்தின் பயன்" என்றஇது பிரகிருதமல்லாததாகக் கூறப்படுகின்றது.—எப்படி ?—பயனைக் கொடுக்கத்தலைப்படாத முன்செய்த பாவகர்மம் கழிந்திடாது என்பதன்றோ பிரகிருதம். அதிலே, நீ, "நித்யகர்மங்களை அநுஷ்டிப்பதிலே யுள்ள சிரமமும் துன்பமுமாகிய பயனானது, பயனைக் கொடுக்கத்தலைப்பட்ட கர்மத்திற்கேயன்றி பயனைக் கொடுக்கத்தலைப்படாத கர்மத்திற்கு இல்லை" எனக் கூறுகின்றனை. இனி, நீ, முன்செய்யப்பட்ட பாவகர்மங்களெல்லாமே பயனைக் கொடுக்கத் தலைப்பட்டவைதான் எனக் கொள்கின்றனையாயின், அங்ஙனம் "நித்யகர்மங்களைச் செய்வதிலேயுள்ள சிரமமும் துன்பமுந்தான் - (பயனைக்கொடுக்கத்தலைப்படாத பாவ கர்மங்களின்) பயன்" எனச் சிறப்பித்துக்கூறுதல் பொருந்தாது. (558 - ஆம் பக்கத்தில் 36, 37 ஆம் வரிகளைப் பார்க்க.) மேலும், நித்யகர்மங்களை விதித்தல் வீணாதல் வேண்டும் ; ஏனெனில், பயனைக் கொடுக்கத்தலைப்பட்ட பாவகர்மமானது அநுபவத்தினால்தான் கழிந்திடக்கூடும்.

இன்னும், வேதத்தினுள் விதிக்கப்பட்ட நித்யகர்மத்திற்கு வருத்தம் பயனாயின் அவ்வருத்தம் நித்யகர்மங்களை அநுஷ்டிப்பதிலேயுள்ள சிரமத்தினாலேயே (உண்டாகுமெனக்) காணப்படுகின்றது ; சிலம்பப்பயிற்சி முதலியவற்றில் (உள்ள சிரமத்தினால் வருத்தம் காணப்படுவது) போல. ஆகவே, அது வேறு (கர்மத்தின் பயன்) எனக் கொள்வது கூடாது.

பின்னும், உயிர்வாழ்தல்முதலியன காரணமாக நித்யகர்மங்களை விதிப்பதனால், (அவை) பிராயச்சித்தகர்மங்கள்போல, முன்செய்த பாவகர்மத்தின் பயனென்பது செல்லாது. எந்தப் பாவகர்மம் காரணமாக எந்தப் பிராயச்சித்தம் விதிக்கப்பட்டதோ, அந்தப் பாவகர்மத்திற்கு அது பயனாகாதன்றோ. இனி,
மாகிய காரணத்திற்குத்தான், பிராயச்சித்த (கர்மத்தை அநுஷ்டிட

𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌦𑍁𑌃𑌖𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍; 𑌜𑍀𑌵𑌨𑌾𑌦𑌿𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍇𑌽𑌪𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌯𑌾𑌸𑌦𑍁𑌃𑌖𑌂 𑌜𑍀𑌵𑌨𑌾𑌦𑌿𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌸𑌜𑍍𑌯𑍇𑌤, 𑌨𑌿𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌯𑍋𑌃 𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑌤𑍍𑌵𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍 ।

𑌕𑌿𑌞𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌤𑍍 — 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑌾𑌮𑍍𑌯𑌸𑍍𑌯 𑌚 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍇𑌃 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌯𑌾𑌸𑌦𑍁𑌃𑌖𑌸𑍍𑌯 𑌤𑍁𑌲𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌯𑌾𑌸𑌦𑍁𑌃𑌖𑌮𑍇𑌵 𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍃𑌤𑌦𑍁𑌰𑌿𑌤𑌸𑍍𑌯 𑌫𑌲𑌂, 𑌨 𑌤𑍁 𑌕𑌾𑌮𑍍𑌯𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌯𑌾𑌸𑌦𑍁𑌃𑌖𑌮𑌿𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌤𑌦𑌪𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍃𑌤𑌦𑍁𑌰𑌿𑌤𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑌸𑌜𑍍𑌯𑍇𑌤 । 𑌤𑌥𑌾 𑌚 𑌸𑌤𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌫𑌲𑌾𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍 𑌤𑌦𑍍𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌶𑍍𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌯𑌾𑌸𑌦𑍁𑌃𑌖𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍃𑌤𑌦𑍁𑌰𑌿𑌤𑌫𑌲𑌮𑌿𑌤𑌿 𑌅𑌰𑍍𑌥𑌾𑌪𑌤𑍍𑌤𑌿𑌕𑌲𑍍𑌪𑌨𑌾 𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌾 । 𑌏𑌵𑌂 𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌯𑌾𑌸𑌦𑍁𑌃𑌖𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌫𑌲𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌮𑌾𑌨𑌾𑌚𑍍𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 ।

𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌚𑍍𑌚; 𑌵𑌿𑌰𑍋𑌧𑌶𑍍𑌚 𑌇𑌦𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 — 𑌨𑌿𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍀𑌯𑌮𑌾𑌨𑍇𑌨 𑌅𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌫𑌲𑌂 𑌭𑍁𑌜𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌅𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 𑌸 𑌏𑌵

மத்திலாகும்) துன்பம் பயனுயின், உயிர்வாழ்தல்முதலியன காரணமாக (விதிக்கப்பட்ட) நித்யகர்மங்களை அநுஷ்டிப்பதிலேயுள்ள சிரமத்திலாகும் துன்பமும் உயிர்வாழ்தல்முதலிய காரணத்திற்குத்தான் பயனுகவேண்டும்; நித்யகர்மம் பிராயச்சித்த கர்மம் இரண்டும் (முறையே ஓரோர் சிறப்புக்)காரணத்தா லாகின்றவை என்பதிலே பேதமின்மையின். (பிராயச்சித்தகர்மத்தை அநுஷ்டிப்பதிலாகும் துன்பமானது அப்பிராயச்சித்தகர்மத்திற்குக் காரணமான பாவகர்மத்தின் பயனுதல் பொருந்தாதவாறுபோல, நித்யகர்மத்தை அநுஷ்டிப்பதனலாகும் துன்பமானது அந்நித்யகர்மத்திற்குக் காரணமான உயிர்வாழ்தல்முதலியவற்றின் பயனுதல் பொருந்தாதென்பதாம்.)

இன்னும், வேறென்று வருமாறு:—நித்யகர்மமான அக்நிஹோத்ரம் முதலியவற்றிற்கும், காம்யகர்மமான அக்நிஹோத்ரம்முதலியவற்றிற்கும் அநுஷ்டிப்பதிலேயுள்ள ஆயாஸத்துன்பங்கள் ஸமமாயிருத்தலால் - "நித்யகர்மங்களை அநுஷ்டிப்பதிலேயுள்ள ஆயாஸத்துன்பங்கள்தான் முன்செய்த பாவகர்மத்தின் பயன், காம்யகர்மங்களை அநுஷ்டிப்பதிலேயுள்ள ஆயாஸத்துன்பங்களல்ல" என்கிறதற்கு வேற்றுமை இல்லை [ஓர்சிறப்புக்காரணத்தையும் காணேம்]; எனவே, அவையும் [காம்யகர்மத்தை அநுஷ்டிப்பதிலேயுள்ள சிரமமும் துன்பமும்] முன்செய்த பாவகர்மப்பயன் என்றல் வேண்டும். அவ்வாறுனவளவிலே, வேதத்திலுள் நித்யகர்மங்கட்குப் பயன் கூறுமையினுல் அவற்றை விதித்தல் வேறுவிதமாகப்பொருந்தாதிருக்க, நித்யகர்மங்களை அநுஷ்டிப்பதிலேயுள்ள சிரமமும் துன்பமும் - முன்செய்த பாவகர்மத்தின் பயன் என அர்த்தாபத்தி [பொருள்] பிரமாணத்திறுற் கொள்ளுதலும் ஒவ்வாது. இவ்வாறுக நித்யகர்மவிதியானது பொருந்தாததாயிருப்பதனுல், நித்யகர்மங்கட்கு அநுஷ்டிப்பதிலேயுள்ள ஆயாஸத்துன்பங்களைக்காட்டிலும் வேறோர் பயன் உண்டென்று அநுமானிக்கவும் வேண்டும்.

மேலும், (நித்யகர்மத்தை அநுஷ்டிப்பதனுல் பாவகர்மப்பயனை அநுபவித்ததென்பது கூடாது); விரோதத்தாலென்க. இது விரோதமாகக் கூறப்படுகின்றது: அநுஷ்டிக்கப்படுகின்ற நித்யகர்மத்தால் வேறோர் கர்மத்தின் [பாவகர்மத்தின்] பயன் அநுபவிக்கப்படுகின்றது என ஏற்றுக்கொள்ளுமிடத்து, அதே அநுபவந்தான் நித்ய

உத்பத்தி: நித்யஸ்ய கர்மண: ஃபலமிதி, நித்யஸ்ய கர்மண: ஃபலாபாவ இதி ச விப்ரதிஷித்தமுச்யதே ।

கிஞ்ச — காம்யாக்நிஹோத்ராதௌ அநுஷ்டீயமாநே நித்யமபி அக்நிஹோத்ராதி தந்த்ரேணைவ அநுஷ்டிதம் பவதீதி ததாயாஸது:கேநைவ காம்யாக்நிஹோத்ராதிஃபலம் உபக்ஷீணம் ஸ்யாத், தத்தந்த்ரத்வாத் । அத காம்யாக்நிஹோத்ராதிஃபலம் அந்யதேவ ஸ்வர்காதி — தத்நுஷ்டாநாயாஸது:கவிபிந்நம் ப்ராப்ஸ்யேத । ந ச ததஸ்தி, த்ருஷ்டவிரோதாத் । ந ஹி காம்யாநுஷ்டாநாயாஸது:காத் நித்யாநுஷ்டாநாயாஸது:கம் பிந்நம் த்ருஶ்யதே ।

கிஞ்ச அந்யத் — அவிஹிதம் அப்ரதிஷித்தம் ச கர்ம தாத்காலிகஃபலம், ந து ஶாஸ்த்ரவிஹிதம் ப்ரதிஷித்தம் வா தாத்காலிகஃபலம் । பவேச்ச யதி, ததா ஸ்வர்காதிஷ்வபி அத்ருஷ்ட-ஃபலாபாவாதந உத்யமோ ந ஸ்யாத் — அக்நிஹோத்ராதீநாமேவ கர்மஸ்வரூபா-விஶேஷே அநுஷ்டாநாயாஸது:கமாத்ரேண உபக்ஷய: நித்யாநாம் ; ஸ்வர்காதி-மஹாஃபலத்வம் காம்யாநாம் — அங்கேதிகர்தவ்யதாத்யாதிக்யே து அஸதி — ஃபலகாமித்வ-

---

கர்மத்தின் பயன் என்பது. நித்யகர்மத்திற்குப் பயனில்லை எனவும் (பிரதிவாதியி னால்) முரணுகக்கூறப்படுகின்றது.

அன்றியும், காம்யமான அக்நிஹோத்ரம் முதலியவற்றைச் செய்யும்பொழுது, நித்யமான அக்நிஹோத்ரம் முதலியவையும் ஒன்றுயுள்ளமுறையினாலேயே செய்யப்பட்டனவாகின்றன ; எனவே, அந்த ஆயாஸதுன்பத்தினாலேயே காம்யமான அக்நிஹோத்ரம்முதலியவற்றின் பயன் கழிக்கப்பட்டதாகும் ; அதேமுறையுடைத்தாதலின். (காம்யமான அக்நிஹோத்ரத்திற்கும் நித்யமான அக்நிஹோத்ரத்திற்கும் செய்கையிலே பேதமின்மையால், முந்தினதைச் செய்கின்ற அக்காலத்தே, அதாவது ஒரே காலத்தே, பிந்தினதும் செய்யப்பட்டதாகும். இவ்வாறாக, காம்யாநுஷ்டானமும் நித்யாநுஷ்டானமும் ஒருங்கே உள்ளமையின், நித்யாநுஷ்டானத்திலேயுள்ள ஆயாஸதுன்பத்தினால் முன்செய்த பாவகர்மப்பயனை அநுபவிப்பதுபோல, காம்யப்பயனும் அநுபவிக்கப்பட்டதாகு மென்க.— ஆ.) இனி, காம்யாக்நிஹோத்ரம் முதலியவற்றின் பயன் வேறுதான், ஸ்வர்க்கம்முதலிய (வேறு பயனேதான்) ஆயின், அவற்றை அநுஷ்டிப்பதிலேயுள்ள ஆயாஸதுன்பமும் வேறுதல் வேண்டும். ஆனால், அஃதில்லை ; விரோதம் காணப்படுவதனால் என்க. நித்யகர்மத்தை அநுஷ்டிப்பதிலேயுள்ள ஆயாஸதுன்பமானது, காம்யகர்மத்தை அநுஷ்டிப்பதிலேயுள்ள ஆயாஸதுன்பத்தைக் காட்டிலும் வேறாகக் காணப்படவில்லையன்றே.

இன்னும், வேறோர் (காரணமுண்டு):—விதிக்கப்படாத கர்மமும், விலக்கப்படாத கர்மமும், தற்காலப்பயனுள்ளவை [உடனே பயனைத்தந்திடும்]; மற்று, சாஸ்திரத்தில்விதிக்கப்பட்டகர்மமும், விலக்கப்பட்டகர்மமும் தற்காலப்பயனுள்ளவையல்ல. (தற்காலப்பயனுள்ளவை)யாயின், அங்ஙனம், காணப்படாத பயனை வேண்டி ஸ்வர்க்கம் முதலியவற்றிலும் [அவற்றையடையும்விஷயத்திலும்] முயற்சியுண்டாகாது. கர்மத்தின் இயல்பிலே பேதமில்லாதிருக்க, அக்நிஹோத்ரம்முதலியவற்றையே நித்யமாக (அநுஷ்டிக்குங்கால்), அநுஷ்டிப்பதிலேயுள்ள ஆயாஸதுன்பமாத்திரத்தினாலேயே (வேறு பயனில்லாது அவை) கழிந்துபோதலும், ஆனால் காம்யமாக (அவற்றையே அநுஷ்டிக்குங்கால்), உறுப்புக்களும் செய்யவேண்டிய முறைகளும் மற்றுமிவைபோன்றவைகளும் அதிகமில்லாதிருக்க, பயனைவிரும்புதல்மாத்திரத்தினாலேயே ஸ்வர்க்கம்முதலிய

𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣𑍇𑌤𑌿। 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍 𑌨 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌫𑌲𑌾𑌭𑌾𑌵𑌃 𑌕𑌦𑌾𑌚𑌿𑌦𑌪𑌿 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ।

𑌅𑌤𑌶𑍍𑌚 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌵𑌿𑌦𑍍𑌯𑍈𑌵 𑌶𑍁𑌭𑌸𑍍𑌯 𑌅𑌶𑍁𑌭𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌕𑍍𑌷𑌯𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 𑌅𑌶𑍇𑌷𑌤𑌃, 𑌨 𑌨𑌿𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑍍 । 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌾𑌮𑌬𑍀𑌜𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌕𑌰𑍍𑌮 । 𑌤𑌥𑌾 𑌚 𑌉𑌪𑌪𑌾𑌦𑌿𑌤𑌮𑍍 𑌅𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮, 𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌾 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌪𑍂𑌰𑍍𑌵𑌿𑌕𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾—'𑌉𑌭𑍌 𑌤𑍌 𑌨 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌤𑌃', '𑌵𑍇𑌦𑌾𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌨𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍', '𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑍍', '𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌿𑌨𑌾𑌮𑍍,' '𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌤𑍍𑌤𑍁 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋... 𑌗𑍁𑌣𑌾 𑌗𑍁𑌣𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌸𑌜𑍍𑌜𑌤𑍇,' '𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯' '𑌨𑍈𑌵 𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑍋𑌮𑍀𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌮𑌨𑍍𑌯𑍇𑌤 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌤𑍍,' 𑌅𑌜𑍍𑌞𑌃 "𑌕𑌰𑍋𑌮𑌿" 𑌇𑌤𑌿 𑌆𑌰𑍁𑌰𑍁𑌕𑍍𑌷𑍋𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍, 𑌆𑌰𑍂𑌢𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑌸𑍍𑌥𑌸𑍍𑌯 𑌶𑌮 𑌏𑌵 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍, 𑌉𑌦𑌾𑌰𑌾𑌃 𑌤𑍍𑌰𑌯𑍋𑌽𑌪𑌿 𑌅𑌜𑍍𑌞𑌾𑌃, '𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍈𑌵 𑌮𑍇 𑌮𑌤𑌮𑍍', '𑌅𑌜𑍍𑌞𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌿𑌣𑌃 𑌗𑌤𑌾𑌗𑌤𑌂 𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑌾 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇', '𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 𑌆𑌕𑌾𑌶𑌕𑌲𑍍𑌪𑌮𑍍 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇,' "𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇'

மேலான பயன் (வருதலுமாகிய இப்பாகுபாட்டிற்குப் பிரமாணமில்லை). ஆகவே, காணப்படாத பயன் நித்யகர்மங்கட்கு இல்லையென்பது ஒருபொழுதும் ஒவ்வாது.

கர்மநெறியும், ஞானநெறியும் வெவ்வேறன இருதிறத்தார்க்கு முறையே உரியவை.

ஆகவே [காம்யகர்மம் பயனைத் தருவதுபோல, நித்யகர்மமும் பிதிருலோகத்தையடைதல்முதலிய பயனைத்தருகின்றமையின் பாவத்தை நீக்கமாட்டாததலால்], வித்யையேதான், ஞானமேதான் அவித்யையினாலான நல்வினையையும் தீவினையையும் முற்றும் அழித்தற்குக் காரணம்; நித்யகர்மங்களை அநுஷ்டிப்பதன்று. ஏனெனில், கர்மங்களெல்லாவற்றிற்குமே அவித்யையும்காமமும்[அறியாமையும், ஆசையும்] விதையென்க. அவ்வாறே, கர்மயோகம் அஜ்ஞானியைப்பற்றியது எனவும், ஸகலகர்மத்துறவோடுகூடிய ஞானநிஷ்டை ஞானியைப் பற்றியதுஎனவும் நிரூபிக்கப்பட்டுள்ளன:—"இருவரும்அறிவதில்லை" (௨ - ௧௧), "அழியாததாகநித்யமாக அறிகிறான்" (௨-௨௧), "ஞானயோகத்தால் ஸாங்க்யர்கட்கும், கர்மயோகத்தால் கர்மயோகிகட்கும்" (௩ - ௩), "கர்மத்திற் பற்றுள்ள அஜ்ஞானிகட்கு" (௩-௨௬), "உயர்தோள ! உண்மையுணர்ந்தவனோ 'குணங்கள் குணங்களிலே செல்லுகின்றன' எனக்கொண்டு பற்றுக்கொள்வதில்லை" (௩ - ௨௮), "ஸகலகர்மங்களையும் மனத்தால்துறந்து வீற்றிருக்கிறான்" (௫-௧௩), ...றுநிலைப்பட்டு உண்மையுணர்ந்தவன் 'நான்ஒன்றுஞ் செய்யவேஇல்லை' எனக் ...கிறான்" (௫ - ௮). அஜ்ஞானி "நான் செய்கிறேன்" என(க் கொள்கிறான். புத்தி ...வடையவிரும்புவோனுக்குக் கர்மம் ஸாதநம்; (அதனை)அடைந்து ஞான ...வனுக்கு ஒழிவே ஸாதநம் (௬ - ௩). அஜ்ஞானிகள் மூவரும் மேலான ...'ானி நானேதான்; (இது) என் கொள்கை (௭ - ௧௮). அஜ்ஞானி ...களை விரும்புபவராய்ப்போதலையும்வருதலையும் பெறுகிறார்கள் ...தவராய், ஆகாசம்போன்ற கீழ்க்கூறிய ஆத்மாவாகிய ...யணப்பவராயத தொழுகிறார்கள்" (௯ - ௨௨). "அவர்கள் எதனால் என்னை அடைகிறார்களோ, அந்த ஞானயோகத்தைக்கொடுக்கிறேன்" (௧௦ - ௧௦). கர்மிகளான

[illegible]

அஜ்ஞானிகள் என்னை அடைவதில்லை யென்பது, பொருளினால் [அர்த்தாபத்தியினால்] (விளங்குகின்றது). பகவானுக்காகக் கர்மத்தைச் செய்கின்ற எவர்கள் மேலான யோகிகளாயினும் கர்மிகளான அஜ்ஞானிகளோ, அவர்கள் பயனை விட்டிடுதல்வரையுள்ள பிந்தின தாழ்ந்த ஸாதனத்தைக்கொண்டவர் (௧௨ - ௬, ௭, ௮, ௯, ௧௦, ௧௧). ஆனால், குறிப்பிட்டுணர்த்தமுடியாத அழியாப்பொருளைத் தொழுபவரோ "எந்தப் பிராணியையும் பகையாதவனாய்" (௧௨ - ௧௩) என்பதுமுதலாக அத்தியாயமுடிவுவரை கூறப்பட்ட ஸாதனங்களையும், க்ஷேத்திராத்தியாயம் முதலிய மூன்று அத்தியாயங்களுள்ளும் கூறப்பட்ட ஞானஸாதனங்களையுமுடையவர் (௧௩ - ௭, ௮, ௯, ௧௦, ௧௧; ௧௪ - ௨௨, ௨௩, ௨௪, ௨௫, ௨௬; ௧௫ - ௩, ௪, ௫). இடம் முதலிய ஐந்தினாலும் (௧௮ - ௧௪) உண்டாகின்ற எல்லாக்கர்மங்களையும் துறந்து, "ஆத்மா ஒன்றுதான் அகர்த்தாதான்" என்னும் அறிவுடையோராகி, மேலான ஞானநிஷ்டையிலே இருப்பவராய், பகவானது உண்மையினை உணர்ந்து, "பகவத்ஸ்வரூபமும் ஆத்மாவும் ஒன்றுதான்" என்பதை அடைக்கலமாகப்பெற்ற பரமஹம்ஸத்துறவிகட்கு, தீயபயன்முதலிய கர்மப்பயன் மூன்றும் (௧௮ - ௧௨) வருவதில்லை; துறவிகளல்லாதமற்றையோர்கட்கு, அஜ்ஞானிகளான கர்மிகட்கு வரவேவருகின்றது. இவ்வாறாக, இது - கீதாசாஸ்திரத்தினுள் உபதேசிக்கப்பட்ட செய்யவேண்டிய கடமையின் பாகுபாடாம்.

கர்மம் அவித்தையினால் விளைகின்றது.

(ஆக்ஷேபம்) :—எல்லாக்கர்மங்களும் அவித்யையினால் உண்டாவதென்பது அமையாது எனில்,—

(ஸமாதானம்) :—அப்படியன்று; ப்ரஹ்மஹத்யை [பிராமணனைக் கொல்லு] முதலியனபோல.—நித்யகர்மமானது சாஸ்திரத்தினுள் உபதேசிக்கப்பட்டதாயி[illegible] அவித்யையுள்ளவர்க்கே உரித்தாயுளது. ப்ரஹ்மஹத்யைமுதலாகிய கர்[illegible] சாஸ்திரத்தினுள் தீங்கிற்குக் காரணமாக மறுத்துஉபதேசிக்கப்பட்டதாய் [illegible]த்யை காமம்முதலிய குற்றங்களுடையவனுக்கு எப்படி உரித்தாயுளதே[illegible] அதனை எப்படிச் செய்கின்றானோ)—அல்லாக்கால், (அவன் அதிற்) செ[illegible]ருந்தாமையின்—அப்படியே, நித்ய நைமித்திக காம்ய கர்மங்களு[illegible] உரித்தானவை) என்பதாம்.

देहव्यतिरिक्तात्मनि अज्ञाते प्रवृत्तिः नित्यादिकर्मसु न सम्भवति इति चेत्—

न; चलनात्मकस्य कर्मणः अनात्मकर्तृकस्य "अहं करोमि" इति प्रवृत्तिदर्शनात् ॥

देहादिसंघाते अहंप्रत्ययः गौणः, न मिथ्या इति चेत्—

न; तत्कार्येष्वपि गौणत्वानुपपत्तेः।

स्वकीये देहादिसंघाते अहंप्रत्ययः गौणः; यथा स्वकीये पुत्रे 'आत्मा वै पुत्रनामासि' इति, लोके च "मम प्राण एव अयं गौः" इति, तद्वत्। नैवं मिथ्याप्रत्ययः। मिथ्याप्रत्ययस्तु स्थाणुपुरुषयोः अगृह्यमाणविशेषयोः।

न गौणप्रत्ययस्य मुख्यकार्यार्थता, अधिकरणस्तुत्यर्थत्वात् उपमानावकाशेन। यथा "सिंहो देवदत्तः" "अग्निः माणवकः" इति सिंह इव अग्निरिव क्रौर्यपैङ्गल्यादिसामान्यात् देवदत्तमाणवकाधि-

---

(ஆக்ஷேபம்).—உடம்பினும் வேருக ஆத்மாவை அறியாதவழி, நித்யகர்மம் முதலிய கர்மங்களை மேற்கொள்ளுதல் பொருந்தாது எனில்—

(ஸமாதாநம்) :—அப்படியன்று; அநாத்மாவினல் [ஆத்மாஅல்லாததினல், உடம்புமுதலியவற்ருல்] செய்யப்படுகின்ற அசைதல்வடிவான கர்மத்தை "நான் செய்கின்றேன்" எனக்கொண்டு (ஒருவன் கர்மத்திற்) செல்லுதலைக் காண்பதனு லென்க.

(ஆக்ஷேபம்) :—உடம்புமுதலியவற்றினதுசேர்க்கையிலே நானென்னும் எண்ணமானது உபசாரவழக்கினுலாவது; அது மயக்கமன்று எனில்,—

(ஸமாதாநம்) :—அப்படியன்று; அதனது செய்கைகளும் உபசாரவழக்கினு லானவை என அமையுமாதலின்.

(ஆக்ஷேபத்தின் விவரணம்) :—ஆத்மாவிற்குச் சொந்தமான உடம்புமுதலிய வற்றின் சேர்க்கையிலே நானென்னும்எண்ணமானது உபசாரவழக்கினு லாவது; "நீதானே (உனது)மகன் எனப்படுகிறவனு யிருக்கிருய்" எனத் தனது மகனிடத்து (த் தந்தையினுடைய நான்என்னும் எண்ணத்தைச் சுருதியானது உபசாரவழக்கினல் கூறுவது)போல: உலகத்தினுள்ளும் "இப்பசு எனது உயிரேதான்" என (வழங்கப் படுகின்றது); அதுபோல என்க. இவ்வாறு மயக்கஎண்ண மன்று. மயக்கஎண் ணமோ, வேற்றுமையறியப்படாத தூண்மனிதர்களதுவிஷயத்திலே (நிகழ்கின்றது. தூணிற்கும் மனிதனுக்கும் வேற்றுமையை உணராவழி, தூண் மனிதனுகமயங்கப் படுகின்றது).

(ஸமாதாநவிவரணம்):— உபசாரவழக்கினுலான எண்ணமானது முதன்மை யானகாரியத்திற்குப் பயன்படாது [வாஸ்தவமான பயனைத் தரமாட்டாது]; உவமை யுருபு தொக்கிநிற்பதனுல், இடத்தை [எடுத்துக்கொண்ட பொருளை] ப் புகழும்பொரு ட்டாய் நிற்றலின். உதாரணமாக, "தேவதத்தன் சிங்கமாயிருக்கிருன்," "மாணுக் கன் நெருப்பாயிருக்கிருன்" என்றல் - சிங்கம்போலக் கொடுமையும், நெருப்புப் போல பொன்மைநிறமும், மற்றுமித்தன்மையதுமான ஒப்புமையினுல், (கொடுமை க்கு) இடமாயுள்ள தேவதத்தனையும் (பொன்மைநிறத்திற்கு) இடமாயுள்ள மாணுக்

[illegible]

[illegible]

[illegible]

தனையும் புகழும்பொழுதுதான். ஆனால், உபசாரவழக்கினாலாகும் சொல்லும் எண்ணமும் காரணமாக வாஸ்தவசிங்கத்தினது காரியமொன்றாயினும், வாஸ்தவநெருப்பினது காரியமொன்றாயினும் சாதிக்கப்படுவதில்லை. மற்று, மயக்கவெண்ணத்தின் பயனை தீங்கை (ஒருவன்) அநுபவிக்கிறான் என்பதாம்.

மேலும், உபசாரவழக்கினாலாகும் எண்ணத்தினால் குறிக்கப்படும் (தேவதத்தனையும் மாணக்கனையும் பிறனொருவன்) "இவன் சிங்கமில்லை," "இவன் நெருப்பில்லை" என அறிகிறான். (ஆத்மாவிற்கும் உடம்புமுதலியவற்றினது சேர்க்கைக்கும் பேதமிருந்தும், அஞ்ஞானியானவன் இந்தத் திருஷ்டாந்தத்திற்போல், உடம்புமுதலியவற்றினது சேர்க்கையை "இது ஆத்மா இல்லை" என்று அறிகிறானில்லை; ஆகவே, அச்சேர்க்கையினிடத்து நானென்னுஞ்சொல்லும், நானென்னுமெண்ணமும் உபசாரவழக்கினாலானவையல்ல என உணர்க.) அவ்வாறே, உடம்புமுதலியவற்றின் சேர்க்கையாகிய கௌண ஆத்மாவினால், உபசாரவழக்கினாலாகும் ஆத்மாவினால் செய்யப்பட்ட செய்கையானது நானென்னுமெண்ணத்தினால் குறிக்கப்படும் வாஸ்தவஆத்மாவினால் செய்யப்பட்டதாகாது. உபசாரவழக்கினாலாகும் சிங்கத்தாலும், உபசாரவழக்கினாலான நெருப்பினாலும் செய்யப்பட்ட செய்கையானது வாஸ்தவசிங்கத்தாலும் வாஸ்தவநெருப்பினாலும் செய்யப்பட்டதாகாதன்றோ. (இவ்வாறாக, உண்மையான கர்த்தாவாதல்முதலியன இல்லை என்க.) அன்றியும், (தேவதத்தனது) கொடுமையினாலும், (மாணக்கனது) பொன்மைநிறத்தினாலும் வாஸ்தவசிங்கத்திற்கும் வாஸ்தவநெருப்பிற்கும் ஒருகாரியமும் செய்யப்படுவதில்லை; புகழும் பொருட்டாய்த் தீர்ந்துபோனமையின்.

இன்னும், (தேவதத்தனையும் மாணக்கனையும்) புகழும்பொழுது, "நான் சிங்கமில்லை," "நான் நெருப்பில்லை" எனவும், "சிங்கத்தினது செய்கை என்னுடையதில்லை" "நெருப்பினது செய்கை என்னுடையதில்லை" எனவும் (அவர்கள்) அறிகிறார்கள். அவ்வாறாக, "(உடம்புமுதலியவற்றினது)சேர்க்கையின் செய்கையானது என்னுடையதில்லை, உண்மையாத்மாவினுடையதில்லை" என்பதுதான் மிகப்பொருந்தியதாகும்; மற்று, "நான் செய்பவன், என்னுடையது செய்கை" என்பதன்று.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பாரமார்த்திககார்யம் ந ஶக்நோதி கர்தும், மாணவகஸிம்ஹாக்நிப்யாம் உபய-ஸிம்ஹாக்நிகார்யவத் ॥

அத்ருஷ்டவிஷயசோதநாப்ராமாண்யாத் ஆத்மகர்தவ்யம் கௌணைः தேஹே-ந்த்ரியாத்யாத்மபிः க்ரியத ஏவ இதி சேத்—

ந ; அவித்யாக்ருதாத்மத்வாத் தேஷாம்। ந கௌணாः ஆத்மாநः தேஹேந்த்ரியா-தயः ; கிம் தர்ஹி ?—மித்யாப்ரத்யயேநைவ அநாத்மாநः ஸந்தः ஆத்மத்வம் ஆபா-த்யந்தே, தத்பாவே பாவாத், தத³பாவே ச அபாவாத் । அவிவேகிநாம் ஹி அஜ்ஞாந-காலே பாலாநாம் த்ருஶ்யதே "தீர்கः அஹம்" "கௌரः அஹம்" இதி தேஹாதி-ஸம்காதே அஹம்ப்ரத்யயः । ந து விவேகிநாம் "அந்யः அஹம் தேஹாதிஸம்கா-தாத்" இதி ஜாநதாம் தத்காலே தேஹாதிஸம்காதே அஹம்ப்ரத்யயः பவதி। தஸ்மாத் மித்யாப்ரத்யயாபாவே அபாவாத் தத்க்ருத ஏவ, ந கௌணः। ப்ருதக்³க்³ருஹ்ய-மாணவிஶேஷஸாமாந்யயோः ஹி ஸிம்ஹதேவதத்தயோः அக்நிமாணவகயோः வா கௌணः ப்ரத்யயः ஶப்³தப்ரயோகோ³ வா ஸ்யாத், ந அக்³ருஹ்யமாணவிஶேஷ-ஸாமாந்யயோः ॥

உபசாரவழக்கினலான நெருப்பாகிய (மாணக்கனும்) வாஸ்தவசிங்கத்தின் கார்யமும், வாஸ்தவநெருப்பின் கார்யமும்(செய்யமுடியாதவாறு)போல.

(ஆக்ஷேபம்) :—தெரியாத [மனிதஅறிவிற்குஎட்டாத] விஷயங்களிலே சாஸ்திரம் பிரமாணமாதலால், ஆத்மாசெய்யவேண்டிய (கர்ம்மானது) உபசாரவழக்கினல் ஆத்மாவாகக் கூறப்படும் உடம்பு இந்திரியங்கள் முதலியவற்ருல் செய்யவேசெய்யப் படுகின்றது எனில்,—

(ஸமாதாநம்) :—அப்படியன்று ; அந்தஆத்மாக்கள் அவித்யையினுலானமை யின். உடம்பு இந்திரியங்கள் உபசாரவழக்கினல் ஆத்மாவாகக் கூறப்படுவனவல்ல.— மற்றெனன? - அநாத்மாக்களாய், ஆத்மாஅல்லாதவையாய்இருப்பவை - மயக்கத்தி னலேயேஆத்மாக்களாக ஆக்கப்படுகின்றன;அஃதுள்ளவழி உள்ளமையாலும்,அஃதில் லாவழி இல்லாமையாலுமென்க. (உடம்புமுதலியன ஆத்மாஅல்லாதவையாயிருக்க, மயக்கத்தால் அவை ஆத்மாவாகக் கொள்ளப்படுகின்றன ; மயக்கமிருக்கும்வரை அவை ஆத்மா என்று எண்ணப்படுகின்றது ; மயக்கம் தீர்ந்தமாத்திரத்திலே அவ் வாறு எண்ணுதலில்லை.) பகுத்தறிவில்லாத சிறுவர்க்கன்றே அறிவில்லாக்காலத்திலே "நான் நெடியவன்," "நான் பொன்மைநிறமுள்ளவன்" என உடம்புமுதலியவற்றின் சேர்க்கையிலே நான்என்னும்எண்ணம் காணப்படுகின்றது. ஆனல், "உடம்புமுதலிய வற்றினது சேர்க்கையினின்றும் நான் வேறனவன்" எனஅறியும் விவேகிகட்கு அக்கா லத்திலே உடம்புமுதலியவற்றினது சேர்க்கையில் நான்என்னும்எண்ணம் நிகழ்வதில் லை. ஆதலால்,(உடம்புமுதலியவற்றிலே நான்என்னும்எண்ணமானது)மயக்கமில்லாவழி இல்லாமையால், அதனல் [மயக்கத்தால்] ஆனதேதான் ; உபசாரவழக்கினலான தன்று. சிங்கமும் தேவதத்தனும், அல்லது நெருப்பும் மாணக்கனும் ஆகிய இவரது வேற்றுமையையும் ஒப்புமையையும் உணர்ந்தவிடத்தன்றே,("தேவதத்தன் சிங்கமா யிருக்கிறன் ; மாணக்கன் நெருப்பாயிருக்கிறன்" என மனத்திற்)கொள்ளுதலும், சொல்லால் வழங்குதலும் உபசாரவழக்கினலாகும் ; (இரண்டு பொருள்கட்குள்ள) வேற்றுமையும் ஒப்புமையும் உணரப்படாவிடத்து இல்லை.

𑌯𑌤𑍍𑌤𑍁 𑌉𑌕𑍍𑌤𑌂 "𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌾𑌤𑍍" 𑌇𑌤𑌿 — 𑌤𑌤𑍍 𑌨, 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 𑌅𑌜𑍍𑌞𑌾𑌤-𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑍁𑌪𑌲𑌬𑍍𑌧𑍇 𑌹𑌿 𑌵𑌿𑌷𑌯𑍇 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌸𑌾𑌧𑍍𑌯𑌸𑌾𑌧𑌨𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑍇 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌂, 𑌨 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌵𑌿𑌷𑌯𑍇, 𑌅𑌦𑍃-𑌷𑍍𑌟𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌨 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌅𑌹𑌂𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌸𑌂𑌘𑌾𑌤𑍇𑌷𑍁 𑌗𑍌𑌣𑌤𑍍𑌵𑌂 𑌕𑌲𑍍𑌪𑌯𑌿𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌂 । 𑌨 𑌹𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌤𑌮𑌪𑌿 "𑌶𑍀𑌤𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌃 𑌅𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋 𑌵𑌾" 𑌇𑌤𑌿 𑌬𑍍𑌰𑍁𑌵𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌂 𑌉𑌪𑍈𑌤𑌿 । 𑌯𑌦𑌿 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍 "𑌶𑍀𑌤𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌃 𑌅𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋 𑌵𑌾 𑌇𑌤𑌿," 𑌤𑌥𑌾𑌽𑌪𑌿 𑌅𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌂, 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃, 𑌨 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌂 𑌸𑍍𑌵𑌵𑌚𑌨𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌂 𑌵𑌾 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌂 ॥

𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌤𑍁𑌃 𑌅𑌭𑌾𑌵𑍇 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 𑌅𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍—

𑌨; 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌅𑌰𑍍𑌥𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 ॥

𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌧𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌧𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌰𑌪𑌿 𑌅𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍—

𑌨; 𑌬𑌾𑌧𑌕𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 । 𑌯𑌥𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌧𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌾

இனி, "சாஸ்திரவிதி பிரமாணமாதலால்" என எது கூறப்பட்டதோ, அது நேரன்று; ஏனெனில், அது பிரமாணமாதல் தெரியாத [மனிதஅறிவிற்கு எட்டாத] விஷயத்திலென்க. பிரத்தியக்ஷம்முதலிய பிரமாணங்களால் உணரப்படாத விஷயத்திலே, அக்நிஹோத்ரம்முதலிய கருவிகட்கும் அவற்றது பயன்கட்குமுள்ள ஸம்பந்தத்திலே சுருதி பிரமாணமாயிருக்கின்றது; பிரத்தியக்ஷம்முதலிய பிரமாணங்களால் அறியப்படும் விஷயத்திலன்று; பிரமாணமென்பது தெரியாததைத் தெரிவிக்கும்பொருட்டாதலின். ஆகவே, உடம்புமுதலியவற்றின் சேர்க்கையிலே, மயக்கஅறிவினலான தாகக் காணப்படும் நானென்னுமெண்ணத்தை - உபசாரவழக்கினலானதாகக்கொள்ளுதல் கூடாது. "தீ சீதளமானது" அல்லது "தீ வெளிச்சமில்லாதது, இருண்டது" என நூறுசுருதிகள் கூறுவனவாயினும், பிரமாணமாதலைப் பெறமாட்டாவன்றோ [அவையெல்லாமே அவ்விஷயத்தில் பிரமாணமாகமாட்டா என்க]. "தீ சீதளமானது" அல்லது "இருண்டது" எனக்கூறுமாயின், — அப்படியிருந்தாலும், வேறுஅர்த்தத்தைச் சுருதிசொல்லக்கருதியதாகக் கொள்ளவேண்டும்; (சுருதி) பிரமாணமாதல் வேறுவிதமாகப் பொருந்தாமையின்; — மற்று, வேறோர் பிரமாணத்திற்கு விரோதமாகவாயினும், தனது வார்த்தைக்கு [சுருதிகூறியதற்கு] விரோதமாகவாயினும் (அந்த அர்த்தத்தைக்) கொள்ளக்கூடாது.

அவித்யைக்கோள்கையானது கர்மகாண்டத்தோடு மாறுகோள்வதில்லை.

(ஆக்ஷேபம்) :— மயக்கஅறிவுள்ளவனே கர்மத்தைச் செய்பவனுதலால், (மெய்யறிவினுல் அம்மயக்கஅறிவு நீங்கியவுடன், கர்மத்தைச்) செய்பவன் இல்லாமையின், சுருதி பிரமாணமாதலில்லை எனின்,—

(ஸமாதாநம்) :— அப்படியன்று; ப்ரஹ்மவித்யையிலே (சுருதி இன்னும்) பயன்படுவதாயிருத்தல் கூடுமாதலின்.

(ஆக்ஷேபம்) :— கர்மத்தை விதிக்கும் சுருதிபோல, ப்ரஹ்மவித்யையை உணர்த்தும் சுருதியும் பிரமாணமாகாமை வேண்டும் எனில்,—

(ஸமாதாநம்) :— அப்படியன்று; (ப்ரஹ்மவித்யையை) நீக்குமெண்ணம் அமையாதாதலின். ப்ரஹ்மவித்யை உணர்த்தும் சுருதியினுல் ஆத்மாவை அறிந்தவழி, உட

[illegible]

ம்புமுதலியவற்றின் சேர்க்கையிலே நான்என்னும் எண்ணமானது எப்படித் தள்ளுண்டு போகின்றதோ, அப்படியே, ஆத்மாவினிடத்தே ஆத்மஅறிவானது எப்பொழுதும் எதனாலும் எவ்விதத்தாலும் தள்ளுண்டுபோதல் இயலாது ; அறிவு, பயனைக் காட்டிலும் [அறியாமை நீங்குவதைக்காட்டிலும்] வேறன்றாதலின் ; " தீ உஷ்ணமாயும், பிரகாசமாயு மிருக்கின்றது" என்னும் (அறிவு) போல.

மற்றும், இவ்வாறாக, கர்மத்தை உணர்த்தும் சுருதியானது பிரமாணமாதலில்லை என்பதில்லை ; முந்தினமுந்தின முயற்சிகளைத் தடுத்து, பிந்தினபிந்தின புதிய முயற்சிகளைப் பிறப்பிப்பது உள்ளேயுள்ள ஆத்மாவை எதிர்ப்படும் முயற்சியை உண்டாக்கப் பயன்படுவதாதலின் (கர்மகாண்டசுருதியானது அநாதிகாலமாக வரும் ஸ்வபாவமுயற்சிதோன்றுதலைத் தடுத்து, யஜ்ஞம் முதலிய நற்செய்கைகளிலே முயற்சி தோன்றுதலைப் பிறப்பிக்கின்றது ; பிறப்பிக்கவே, அது புத்திதிருந்துதல்வழியாக, உள்ளேயுள்ள ஆத்மாவை எதிர்நோக்கிச் செல்லும் ஊக்கத்தைத் தருகின்றது ; எனவே, கர்மகாண்டசுருதியானது இவ்வாறு பரம்பரையாகப் பிரமாணமாதலைக் காண்க). கருவி - போலியாயிருந்தாலும், பயன் உண்மையாயிருப்பதனால் (கருவியும்) உண்மையேயாகும்; விதிக்குத்துணையாயுள்ள அர்த்தவாதங்கள்போல : உலகத்தினுள்ளும், பாலன் பித்தன் முதலானோரைப் பால்முதலியவற்றைக் குடிக்கச்செய்யவேண்டும்போது, (பால்குடித்தால்)குடுமி வளரும் என்பதுமுதலிய வார்த்தைகள் (காணப்படுகின்றன).—அல்லது, வேறுவகையிலேயுள்ள (ஆத்மஅறிவு பிறத்தற்கு முந்தின நிலையிலேயுள்ள கர்மகாண்டசுருதிகள்) நேரேயே பிரமாணமாதல் அமைந்துளது ; உடம்புஅபிமானத்தாலாகும் பிரத்தியக்ஷம்முதலியன ஆத்மஅறிவை (ப் பெறுதற்கு) முன்பு பிரமாணமாயிருத்தலைப்போலென்க.

ஸந்நிதிமாத்திரத்தால் ஆத்மா கர்த்தாவாகாது.

(வேறோர் கொள்கை) :—இனி, "ஆத்மா, தான் தலைப்படாததாயினும், ஸந்நிதிமாத்திரத்தால் செய்கின்றது ; அதேதான் - ஆத்மா வாஸ்தவமான கர்த்தாவாதலென்பது. உதாரணமாக, போர்வீரர்கள் போர்செய்யும்பொழுது அரசன், தான் போர்செய்யாமலிருந்தாலும், ஸந்நிதிமாத்திரத்தால்[போர்க்களத்தில் இருப்பதுமாத்

जितः पराजितश्चेति च, तथा सेनापतिः परानेव करोति; क्रियाफलसंबन्धश्च राज्ञः सेनापतेश्च दृष्टः। यथा च ऋत्विक्कर्म यजमानस्य, तथा देहादीनां कर्म कृतं स्यात्, फलस्य कर्तृगामित्वात्। यथा वा भ्रामकस्य लोहभ्रामयितृत्वात् अप्रवृत्तस्यैव मुख्यमेव कर्तृत्वं, तथा च आत्मनः इति।

तदसत्; अकुर्वतः कारकत्वानुपपत्तेः।

कारकं ह्यनेकप्रकारमिति चेत्—

न; राजप्रभृतीनां मुख्यस्यापि कर्तृत्वस्य दर्शनात्। राजा तावत् स्वव्यापारेणापि युध्यते; योधानां च योधयितृत्वे धनदाने च मुख्यमेव कर्तृत्वं, तथा जयपराजयफलोपभोगे च। यजमानस्यापि प्रधानत्यागे दक्षिणादाने च मुख्यमेव कर्तृत्वम्। तस्मात् अव्यापृतस्य कर्तृत्वोपचारो यः सः गौणः इति अवगम्यते। यदि मुख्यं कर्तृत्वं स्वव्यापारलक्षणं न उपलभ्येत राजयजमानप्रभृतीनां, तदा सन्नियोद्धॄणामपि कर्तृत्वं मुख्यं परिकल्प्येत यथा भ्रामकस्य लोहभ्रमणे; न तथा राजयजमानादीनां स्वव्यापारो न

திரத்தால்] போர்புரிகிறானென்பது பிரஸித்தமாயுளது; வெற்றிபெற்றான், தோல்வியுற்றான் என்பதும்பிரஸித்தமாயுளது. அவ்வாறே, சேனாதிபதி வெறும்வார்த்தையினால் செய்கிறான். செய்கையின்பயன் சேர்வதோ அரசனுக்கும், சேனாதிபதிக்கும் காணப்படுகின்றது. மற்றோர் உதாரணம்: ரித்விக்கினுடைய செய்கை யஜமானனுடையதாகின்றது. அவ்வண்ணமே, உடம்புமுதலியவற்றின் செய்கை ஆத்மாவினால் செய்யப்பட்டதாகும்; பயன் ஆத்மாவைச் சேர்கின்றமையின். அல்லது, வேறோர் உதாரணம்: ஊசிக்காந்தம் இரும்பைச் சுற்றச்செய்கின்றமையின், (தொழிலில்) தலையிடாத பொருளேதான் வாஸ்தவமேயான கர்த்தா ஆகின்றது. அவ்வாறே ஆத்மா என்க" என எது கொள்ளப்படுகின்றதோ,

(மறுமொழி):—அது நேரன்று; ஏனெனில், செய்யாதபொருள் செய்வதாதல், காரகமாதல் வேண்டும்: (காரகம் - செய்கையைச் செய்வது.)

(பிரதிவாதி):—காரகம் பலவகைத்து எனில்,—

(வாதி):—அப்படியன்று; அரசன்முதலானோர்கள் நேரான கர்த்தாவாயிருத்தலையும் காண்பதனாலென்க. முதலில், அரசன் தனது செய்கையினாலும் [தானே நேராக] போர்புரிகிறான்; போர்வீரர்களைப் போர்புரிய ஏவுதலிலும், கூலிகொடுப்பதிலும், அவ்வண்ணமே, வெற்றிதோல்விகளின் பயனை அநுபவிப்பதிலும் வாஸ்தவமேயான கர்த்தாவாகிறான். யஜமானனும் பிரதான ஹவிஸைக் கொடுப்பதிலும், தக்ஷிணையைக் கொடு...லும் வாஸ்தவமேயான கர்த்தாவாகிறான். ஆகவே, (தொழிலில்) தலையி...

கர்த்தாவாக ஏற்றிக்கூறுதல் எதுவோ, அது உபசாரவழக்கினாலாவ...

...து. தன்செய்கையாகிய வாஸ்தவ கர்த்திருத்துவமானது, தொழிற்...

யஜமானன் முதலானோர்கட்குக் காணப்படவில்லையா...

...காலும் கர்த்தாவாதல் வாஸ்தவமாகக் கொள்ள...

...ற்றும்படிசெய்வதனால்போல, அரசன் யஜமா...

...கயானது அவ்வாறு காணப்படவில்லையென்

𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌗𑍌𑌣𑌮𑍇𑌵 । 𑌤𑌥𑌾 𑌚 𑌵𑌸𑍍𑌤𑍁
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑍋𑌽𑌪𑌿 𑌗𑍌𑌣 𑌏𑌵 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌨 𑌗𑍌𑌣𑍇𑌨 𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂
𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌏𑌤𑌤𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 "𑌦𑍇𑌹𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑍇𑌣
𑌸𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍" 𑌇𑌤𑌿 ।

𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌯𑌥𑌾 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇; 𑌮𑌾𑌯𑌾𑌯𑌾𑌂 𑌚
𑌸𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 । 𑌨 𑌚 𑌦𑍇𑌹𑌾𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌸𑌨𑍍𑌤𑌾𑌨𑌵𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍇𑌷𑍁 𑌸𑍁𑌷𑍁𑌪𑍍𑌤𑌸𑌮𑌾-
𑌧𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌨𑌰𑍍𑌥𑌃 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯-
𑌯𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌃 𑌏𑌵 𑌅𑌯𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌭𑍍𑌰𑌮𑌃, 𑌨 𑌤𑍁 𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌿𑌕𑌃 ।

𑌇𑌤𑌿 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤 𑌏𑌵 𑌉𑌪𑌰𑌮𑌃 𑌇𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 ॥

𑌸𑌰𑍍𑌵𑌂 𑌗𑍀𑌤𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌮𑍍 𑌉𑌪𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑍇, 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌶𑍍𑌚
𑌅𑌨𑍍𑌤𑍇 𑌇𑌹 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌦𑌾𑌰𑍍𑌢𑍍𑌯𑌾𑌯 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌤𑌃 𑌉𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾, 𑌅𑌥
𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌵𑌿𑌧𑌿𑌮𑌾𑌹—

௬௭. 𑌇𑌦𑌂 𑌤𑍇 𑌨𑌾𑌤𑌪𑌸𑍍𑌕𑌾𑌯 𑌨𑌾𑌭𑌕𑍍𑌤𑌾𑌯 𑌕𑌦𑌾𑌚𑌨 ।
𑌨 𑌚𑌾𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌵𑍇 𑌵𑌾𑌚𑍍𑌯𑌂 𑌨 𑌚 𑌮𑌾𑌂 𑌯𑍋𑌽𑌭𑍍𑌯𑌸𑍂𑌯𑌤𑌿 ॥

பதில்லை. ஆகவே, ஸந்நிதிமாத்திரத்தால் கர்த்தாவாதல் கௌணமேதான், வாஸ்தவமன்றேதான். அவ்வாறுள்ளவளவிலே, அதனுடைய பயனின் சம்பந்தமும் கௌணமே[வாஸ்தவமன்றே]யாகும். கௌணமான கர்த்தாவினால் வாஸ்தவமான கார்யம் செய்துமுடிக்கப்படுவதில்லை. ஆகவே, இது—"தொழிற்படுதலில்லாத ஆத்மாவானது உடம்புமுதலியவற்றினது செய்கையினால் கர்த்தாவும், போக்தாவும்[செய்வதும், அநுபவிப்பதும்] ஆகும்" என்பது—தவறாகவே கூறப்படுகின்றது.

அவித்யைக்கோள்கையின் முடிபு.

மற்று, மயக்கம் காரணமாக எல்லாம் பொருந்துகின்றன; கனவிலும், செப்படிவித்தைக்காரனுடைய இந்திரஜாலத்திலும்போல. அன்றியும், செய்பவனாயிருத்தலும், அநுபவிப்பனாயிருத்தலும் இன்னுமிவைபோன்ற தீங்குகளும் - உடம்புமுதலியவற்றை ஆத்மாவாகக்கொள்ளும் மயக்கத்தின் தொடர்ச்சி அறுந்துபோயுள்ள உறக்கம் ஸமாதி முதலியவற்றில் காணப்படவில்லை. ஆதலால், மயக்கஅறிவினாலானதேதான் இந்த ஸம்ஸாரமயக்கம்; ஆனால், உண்மையன்று.

எனவே, (இம்மயக்கமானது) மெய்யறிவினால் முற்றுமே அறத்தொலைந்திடுதல் ஆகின்றது என அமைந்தது.

கீதையை உணர்த்த வேண்டிய உரிமை.

இவ்வத்தியாயத்தினுள் கீதாசாஸ்திரப்பொருள்முழுவதையும் முடித்து, சாஸ்திரப்பொருள் (புத்தியில்) திடப்படுதற்காக இங்கு முடிவிலே (அதனை) விசேஷமாவும் சுருக்கமாகவும் கூறி முடித்து, இனி, இப்பொழுது சாஸ்திரஸம்பிரதாயமுறையை, சாஸ்திரத்தைப் பிறர்க்கு உரைக்கும் ஒழுங்கை அருளிச்செய்கிறார்:

௬௭. உனக்கு (உபதேசிக்கப்பட்ட) இது, தவமில்லாதவனுக்கு சொல்லத்தக்கதன்று: பக்தனல்லாதவனுக்கன்று: கேட்கவிருப்பமில்லை செய்யாத]வனுக்குமன்று: அன்றியும், எவன் என்னை இடக்குப (அவனுக்குமன்று).

𑌇𑌦𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌤𑍇 𑌤𑌵 𑌹𑌿𑌤𑌾𑌯 𑌮𑌯𑌾 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌤𑍍𑌤𑌯𑍇 𑌅𑌤𑌪𑌸𑍍𑌕𑌾𑌯 𑌤𑌪𑍋𑌰𑌹𑌿𑌤𑌾𑌯 𑌨 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌵𑍍𑌯𑌵𑌹𑌿𑌤𑍇𑌨 𑌸𑌂𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍇𑌽𑌪𑌿 𑌅𑌭𑌕𑍍𑌤𑌾𑌯 𑌗𑍁𑌰𑍌 𑌦𑍇𑌵𑍇 𑌚 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌹𑌿𑌤𑌾𑌯 𑌕𑌦𑌾𑌚𑌨 𑌕𑌸𑍍𑌯𑌾𑌂𑌚𑌿𑌦𑌪𑌿 𑌅𑌵𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌂 𑌨 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 । 𑌭𑌕𑍍𑌤𑌃 𑌤𑌪𑌸𑍍𑌵𑍀 𑌅𑌪𑌿 𑌸𑌨𑍍 𑌅𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑍁𑌃 𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌅𑌪𑌿 𑌨 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 । 𑌨 𑌚 𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌂 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌅𑌭𑍍𑌯𑌸𑍂𑌯𑌤𑌿 𑌆𑌤𑍍𑌮𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌾𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌣𑍇𑌨 𑌈𑌶𑍍𑌵𑌰𑌤𑍍𑌵𑌂 𑌮𑌮 𑌅𑌜𑌾𑌨𑌨𑍍 𑌨 𑌸𑌹𑌤𑍇, 𑌅𑌸𑌾𑌵𑌪𑌿 𑌅𑌯𑍋𑌗𑍍𑌯𑌃, 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌅𑌪𑌿 𑌨 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 । 𑌭𑌗𑌵𑌤𑌿 𑌅𑌨𑌸𑍂𑌯𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌯 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍇 𑌭𑌕𑍍𑌤𑌾𑌯 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌵𑍇 𑌵𑌾𑌚𑍍𑌯𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌤𑍍 𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌤𑍍𑌰 ‘𑌮𑍇𑌧𑌾𑌵𑌿𑌨𑍇 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍇 𑌵𑌾’ 𑌇𑌤𑌿 𑌅𑌨𑌯𑍋𑌃 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍, 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌯 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍇 𑌤𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌯 𑌮𑍇𑌧𑌾𑌵𑌿𑌨𑍇 𑌵𑌾 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 । 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌭𑌕𑍍𑌤𑌿𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌯 𑌨 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍇 𑌨𑌾𑌪𑌿 𑌮𑍇𑌧𑌾𑌵𑌿𑌨𑍇 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 । 𑌭𑌗𑌵𑌤𑌿 𑌅𑌸𑍂𑌯𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌯 𑌸𑌮𑌸𑍍𑌤𑌗𑍁𑌣𑌵𑌤𑍇𑌽𑌪𑌿 𑌨 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 । 𑌗𑍁𑌰𑍁𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌤𑍇 𑌚 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑍇𑌷𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌵𑌿𑌧𑌿𑌃 ॥ ௬௭ ॥

𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑍁𑌃 𑌫𑌲𑌮𑌿𑌦𑌾𑌨𑍀𑌮𑌾𑌹 —

இந்த சாஸ்திரமானது உனது நலத்திற்காக, ஸம்ஸாரம் அறுதற்பொருட்டு என்னால் உரைக்கப்பட்டது. 𑌅𑌤𑌪𑌸𑍍𑌕𑌾𑌯 என்பதை - 𑌨 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 என ஒதுங்கிநிற்பதனோடு கூட்டுக.—தவமுள்ளவனாயினும், குருவினிடத்தும் பகவானிடத்தும் பக்தியில்லாதவனுக்கு எந்தநிலைமையிலும் (இச்சாஸ்திரத்தைச்) சொல்லக்கூடாது. பக்தியும் தவமும் உள்ளவனாயினும், எவன் பணிவிடைசெய்யாதவனாய் இருக்கின்றானோ, அவனுக்கும் (இச்சாஸ்திரத்தைச்) சொல்லக்கூடாது. எந்த அறியாதவன் என்னை வஸுதேவன்மகனை ஸாமான்னிய மனிதனாக நினைத்து, தற்புகழ்ச்சிமுதலிய குற்றங்களை (என்மீது) ஏற்றி, எனது ஈச்வரத்தன்மையை ஒத்துக்கொள்கிறானில்லையோ, நான் ஈச்வரன் என்பதற்கு இடங்கொடுப்பதில்லையோ, அவனும் தகுதியில்லாதவன்; அவனுக்கும் (இச்சாஸ்திரத்தைச்) சொல்லக்கூடாது. சாஸ்திரமானது - பகவானிடத்து இடக்குப்பேசுதலில்லாது, தவமும்பக்தியுமுள்ளவனாய்ப் பணிவிடைசெய்பவனுக்குச் சொல்லத்தக்கது என (சுலோகத்திலுள்ள நான்கு நகாரங்களினது) வலிமையினால் தெரிகின்றது. இனி, "மேதாவிக்காவது, தபஸ்விக்காவது (சாஸ்திரத்தைச் சொல்லலாம்)" என இவ்விருவருள் விகற்பத்தை [மேதையுடைமை தவமுடைமைஎன்றவற்றுள் ஏதாவதொன்று அதிகாரிக்குவேண்டியதாக]க் காண்பதனால், பணிவிடையையும் பக்தியையும் உடைய தபஸ்விக்காவது, அவற்றையுடைய மேதாவிக்காவது (சாஸ்திரத்தைச்) சொல்லவேண்டுமென்க. (தபஸ்வி - தவமுள்ளவன்; மேதாவி - மேதையுள்ளவன். தவம் - தனதுகர்மத்தைச் செய்தல்முதலியன. மேதை - சொன்னதைக் [illegible]ளத்து அமைத்துக்கொள்ளும் திறம்.) பணிவிடையும்பக்தியுமில்லாத [illegible] சொல்லக்கூடாது; (அவையில்லாத) மேதாவிக்கும் சொல்லக்கூடாது. [illegible]களும் பொருந்தியவனாயினும், பகவானிடத்து இடக்குப்பேசுதலுடை[illegible] சொல்லக்கூடாது. குருவிற்குப் பணிவிடைசெய்தலையும் பக்தியையும் [illegible]ச் சொல்லவேண்டும் என்று இது, சாஸ்திரஸம்பிரதாயத்தின் முறை (௬௭)

[illegible] கீதையைப் பிறர்க்கு உணர்த்துவதனாலாகும் பயன்.

[illegible]ஸம்பிரதாயத்தைச் செய்பவனுக்குப் பயனை அருளிச்செய்கிறார்:

௬௮. 𑌯 𑌇𑌮𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍍𑌵𑌭𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 ।
𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌮𑌯𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌤𑍍𑌯𑌸𑌂𑌶𑌯𑌃 ॥

𑌯𑌃 𑌇𑌮𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌰𑌮𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌸𑌾𑌧𑌨𑌂 𑌕𑍇𑌶𑌵𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌯𑍋𑌃 𑌸𑌂𑌵𑌾𑌦𑌰𑍂𑌪𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌗𑍋𑌪𑍍𑌯𑌤𑌮𑌂 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌮𑌯𑌿 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌤𑍍𑌸𑍁 𑌅𑌭𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿, 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑌃 𑌅𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌤𑌿, 𑌯𑌥𑌾 𑌮𑌯𑌿 𑌤𑌥𑌾 । 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍇𑌃 𑌪𑌰𑌮𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌕𑍇𑌵𑌲𑍇𑌨 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍇 𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 𑌮𑌤𑍍𑌵𑌾 । 𑌕𑌥𑌂 𑌵𑌾 𑌅𑌭𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 𑌇𑌤𑌿 ? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 — 𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌮𑌯𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 “𑌭𑌗𑌵𑌤𑌃 𑌪𑌰𑌮𑌗𑍁𑌰𑍋𑌃 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾 𑌮𑌯𑌾 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇” 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌅𑌭𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 । 𑌸 𑌇𑌦𑌂 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌏𑌷𑍍𑌯𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍍𑌯𑍇𑌵 । 𑌅𑌸𑌂𑌶𑌯𑌃 𑌅𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃 𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 ॥ ௬௮ ॥

𑌕𑌿𑌞𑍍𑌚 —

௬௯. 𑌨 𑌚 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌭𑌵𑌿𑌤𑌾 𑌨 𑌚 𑌮𑍇 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌨𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌰𑍋 𑌭𑍁𑌵𑌿 ॥

𑌨 𑌚 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌕𑍃𑌤𑌃 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑌃 𑌅𑌤𑌿𑌶𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑌰𑌃, 𑌅𑌨𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑌃, 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍇𑌷𑍁 । 𑌨 𑌚 𑌭𑌵𑌿𑌤𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑍍𑌯𑌪𑌿 𑌕𑌾𑌲𑍇 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃 𑌅𑌨𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌰𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑍃𑌤𑍍𑌤𑌰𑌃 𑌭𑍁𑌵𑌿 𑌲𑍋𑌕𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 ॥ ௬௯ ॥

---

௬௮. எவன் என்னிடத்து மேலான பக்தி செய்து இந்தப் பரம ரஹஸ்யத்தை எனது பக்தர்கட்கு உரைப்பானோ, (அவன்) என்னை அடையவே அடைகிறான்; ஸம்சய மில்லை.

உயர்ந்த உறுதியான நன்மைக்குப் பயன்படுவதாய், கேசவன் அர்ஜுனன் இவரது சம்பாஷணையாகிய மிக்க ரஹஸ்யமான கீழ்க்கூறிய இந்நூலை, என்மீது பக்தி யுள்ளவரிடத்து எவன் உரைப்பானோ, அதாவது, நூலையும், நூற்பொருளையும் நான் உன்னிடத்து (உணர்த்தி நிலைப்படுத்தியது)போல, (எனது பக்தரிடத்து உணர்த்தி) நிலைப்படுத்துவானோ, (அவன் முக்தியைப் பெறுவான். மத்பக்தேஷு என) பக்தியைப் பின்னும் கூறியதனால் - (ஒருவன்) சாஸ்திரோபதேசத்தைப் பெறுதற்கு பக்தியொன்று மாத்திரத்தாலே தக்கோனாகிறான் எனத் தெரிகின்றது.—எவ்வாறு உரைப்பான்? என்பது.—கூறுவோம்: —“(நான் பகவானுக்குச் செய்யவேண்டிய பணிவிடையானது, கீதையையும் கீதாப்பொருளையும் பகவத்பக்தர்கட்கு உணர்த்தவேண்டுமென்பது. ஆகவே,) பரமகுருவான பகவானுக்கு நான் (அந்தப்) பணிவிடையைச் செய்கின்றேன்” என இத்தகைய மேலான பக்தியை என்னிடத்துச் செய்து என்க. அவனுக்கு இது பயன்:—என்னை அடையவே அடைகிறான், (ஸம்ஸாரத்தினின்றும்) தப்பவே தப்புகிறான் (என்பது). இதிலே ஸம்சயம் கொள்ளவேண்டாம். (௬௮)

மேலும்,

௬௯. மனிதரில் அவனைக்காட்டிலும் எனக்குப் பிரியமான காரியத்தைச் செய்பவன் ஒருவனும் இல்லை; அன்றியும், அவனைக்காட்டிலும் எனக்குப் பி வேறொருவனும் பூமியிலே இருப்பானில்லை.

அவனைக்காட்டிலும் - சாஸ்திரஸம்பிரதாயத்தைச் செய்ப மனிதரில் - இப்பொழுதுள்ள மனிதரில். இருப்பானில்லை - வருங்கா பிரியமானவன் - பிரியமான காரியத்தைச் செய்பவன். பூமியிலே - இ

किञ्च—

एo अध्येष्यते च य इमं धर्म्यं संवादमावयोः ।
ज्ञानयज्ञेन तेनाहमिष्टः स्यामिति मे मतिः ॥

अध्येष्यते च पठिष्यति यः इमं धर्म्यं संवादरूपं ग्रन्थम् आवयोः, तेन इदं कृतं स्यात् । ज्ञानयज्ञेन विधिजपोपांशुमानसानां यज्ञानां ज्ञानयज्ञो मानसत्वात् विशिष्टतम इत्यतः तेन ज्ञानयज्ञेन गीताशास्त्रस्य अध्ययनं स्तूयते ; फलविधिरेव वा, देवतादिविषयज्ञानयज्ञफलतुल्यम् अस्य फलं भवतीति—तेन अध्ययनेन अहम् इष्टः पूजितः स्यां भवेयम् इति मे मतिः निश्चयः ॥ एo ॥

अथ श्रोतुः इदं फलम्—

एक. श्रद्धावाननसूयश्च शृणुयादपि यो नरः । [णाम् ॥
सोऽपि मुक्तः शुभाँल्लोकान्प्राप्नुयात्पुण्यकर्म-

श्रद्धावान् श्रद्दधानः अनसूयश्च असूयावर्जितः सन् इमं ग्रन्थं शृणुयादपि यो नरः—अपिशब्दात् किमुत अर्थज्ञानवान्—सोऽपि पापात् मुक्तः शुभान् प्रशस्तान् लोकान् प्राप्नुयात् पुण्यकर्मणाम् अग्निहोत्रादिकर्मवताम् ॥ एक ॥

கீதாபாராயணத்தின் பயன்.

மற்றும், எவன் (கீதைக்கு அர்த்தம் தெரியாதவனோ),

எ0. தர்மத்தினின்றும் தவறுததான நம்மிருவருடைய இந்தச் சம்பாஷணையை எவன் படிப்பானோ, அவனால் "நான் ஞானமாகிய யஜ்ஞத்தால் பூஜிக்கப்பட்டவனாவேன்" என்பது எனது கொள்கை.

சம்பாஷணையை - சம்பாஷணையாகிய இந்நூலை. அவனால் இது[ஞானயஜ்ஞம்], செய்யப்பட்டதாகின்றது. ஞானமென்னும்யஜ்ஞமானது - விதி, ஜபம், உபாம்சு, மாநஸம் என்ற யஜ்ஞங்களுள் மாநஸமாதலால் மிகச் சிறந்தது. ஆகவே, கீதாசாஸ்திரத்தைப் படித்தலானது அந்த ஞானயஜ்ஞமாகப் பாராட்டப்படுகின்றது. (விதி யஜ்ஞம் - சரீரத்தாற்செய்யப்படும் ப்ரஹ்மயஜ்ஞாதிகளால் தொழுதல். ஜப யஜ்ஞம் - உரத்து உச்சரிக்கப்படும் பாராயணாதிகளால் தொழுதல். உபாம்சு யஜ்ஞம் - பிறர்க்குக் கேளாதபடி வாய்க்குள்ளாகவே உச்சரிப்பதனால் தொழுதல். மாநஸ யஜ்ஞம் - மனத்தால் தியானித்துத் தொழுதல்.)

அல்லது, (இத்திருவாக்கானது) பயனைவிதிப்பதாகவே (அமையும், யாதெனின்,) ஒருதெய்வம்முதலியவற்றைப்பற்றிய ஞானயஜ்ஞத்தினுடைய, அத்தெய்வம் முதலியவற்றை உபாஸிப்பதனுடைய பயனுக்குச் சமமான (பயன் கீதாசாஸ்திரத்தைப் படிப்பதனால்) இவனுக்கு உண்டாகின்றது என்பது. கொள்கை - நிச்சயம்.(எ0)

கீதாசாஸ்திரத்தைக் கேட்பவனுக்குப் பயன்.

இனி, கேட்பவனுக்கு இது பயனும் :

எக. எந்த மனிதன் நம்பிக்கையுள்ளவனாய், இடக்குப்பேசுதலில்லாதவனாய் (இந்நூலை)க் கேட்கவாவது செய்வானோ, அவனுங்கூட விடுபட்டவனாய் நல்வினையுள்ளவருடைய நல்ல லோகங்களை யடைவான்.

"ஆவது" என்னும்சொல்லினால், அர்த்தஞானமுள்ளவனைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ என்க. விடுபட்ட - பாவத்தினின்றும் நீங்கிய. நல்வினையுள்ளவருடைய - அக்நிஹோத்ரம்முதலிய கர்மங்களைச்செய்தவருடைய. (எக)

சிஷ்யஸ்ய சாஸ்த்ரார்த்தக்ரஹணாக்ரஹணவிவேகபுபுத்ஸயா ப்ருச்சதி । தத்க்ரஹணே ஜ்ஞாதே பூந: சாஸ்த்ரார்த்தக்ரஹயிஷ்யாமீதி உபாயாந்தரேணாபி இதி ப்ரஷ்டு: அபிப்ராய: । யத்நாந்தரம் ச க்ருத்வா சிஷ்யஸ்ய க்ருதார்த்ததா கர்தவ்யா இதி ஆசார்யதர்ம: ப்ரதர்சிதோ பவதி—

எ௨. கச்சிதேதச் ச்ருதம் பார்த்த த்வயைகாக்ரேண சேதஸா ।
கச்சிதஜ்ஞாநஸம்மோஹ: ப்ரணஷ்டஸ்தே தநஞ்ஜய ॥

கச்சித் கிம் ஏதத் மயா உக்தம் ச்ருதம் ச்ரவணேந அவதாரிதம் பார்த்த த்வயா ஏகாக்ரேண சேதஸா சித்தேந? கிம் வா அப்ரமாதத:? கச்சித் அஜ்ஞாநஸம்மோஹ: அஜ்ஞாநநிமித்த: ஸம்மோஹ: அவிவிக்தபாவ: அவிவேக: ஸ்வாபாவிக: கிம் ப்ரணஷ்ட:—யத்தர்த: அயம் சாஸ்த்ரச்ரவணாயாஸ: தவ, மம ச உபதேஷ்ட்ருத்வாயாஸ: ப்ரவ்ருத்த:—தே தவ ஹே தநஞ்ஜய ॥ எ௨ ॥

அர்ஜுந உவாச ॥

எ௩. நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர்லப்தா த்வத்ப்ரஸாதாந்மயாச்யுத ।
ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ ॥

நஷ்ட: மோஹ: அஜ்ஞாநஜ: ஸமஸ்தஸம்ஸாராநர்த்தஹேது:, ஸாகர இவ துருத்தர:। ஸ்ம்ருதிஸ்ச ஆத்மதத்த்வவிஷயா லப்தா—யஸ்யா: லாபாத் ஸர்வஹ்ருதய-க்ரந்தீநாம் விப்ரமோக்ஷ:—த்வத்ப்ரஸாதாத் தவ ப்ரஸாதாத் மயா த்வத்ப்ரஸாதம் ஆச்ரி-தேந அச்யுத । அநேந மோஹநாசப்ரச்நப்ரதிவசநேந ஸர்வசாஸ்த்ரார்த்தஜ்ஞா-

---

தமது உபதேசத்தை அர்ஜுனன் கிரகித்துக்கொண்டானே என்று பகவான் நிச்சயித்தல்.

மாணாக்கன் நூற்பொருளை உணர்ந்ததையும், உணராமையையும் தெளிவாய் அறியவேண்டி வினவுகின்றார். ஆனால், அதனை உணராமையை அறிந்தால், வேறோர்வழியாலும் உணர்த்துவேன் என்பது, வினவுவோன் கருத்து. அன்றியும், வேறோர் முயற்சி கொண்டு சிஷ்யனைக் கிருதார்த்தனாகச் செய்யவேண்டும் (மாணாக்கன் நூற்பொருளை அறிந்து ஈடேறுமாறு ஆசிரியன் மறுபடியும் முயலவேண்டும்) என குருவின் ஒழுக்கம் காட்டப்பெற்றதாகின்றது :

எ௨. பார்த்த! உன்னால் இது, ஒருப்பட்ட மனத்தோடு கேட்கப்பட்டதா? தனஞ்ஜய! உனது அஜ்ஞானமயக்கம் தீர்ந்திட்டதா?

பார்த்த! யான் கூறியதை, ஒருப்பட்ட ஒரேகருத்தோடு தடுமாற்றமில்லாது கேட்டுத் தெரிந்துகொண்டனையா? அறிவின்மையினாலான மயக்கமானது, பகுத்தறிவின்மையானது, இயற்கையாயுள்ள அவிவேகமானது உனக்கு அழிந்திட்டதா? அ(து தொலை)தற்காகவன்றோ, நூலைக் கேட்பதிலே உனக்கு இப்பிரயாசமும், உபதேசிப்பதிலே எனக்கு இப்பிரயாசமும் ஆகியுள்ளன. (எ௨)

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

எ௩. மயக்கம் தீர்ந்துளது; அச்யுத! உமது அருளினாலே என்னால் நினைவு கூர்தலும் அடையப்பெற்றுளது. (நான்) நிலைத்தவனாய், ஸந்தேகம்போனவனாய் இரு-கின்றேன்; உமது திருவாக்கைச் செய்வேன்.

மயக்கம் - அஜ்ஞானத்தாலானது, ஸம்ஸாரஅநர்த்தங்கட்கெல்லாம் [illegible] மானது, கடல்போல கடத்தற்குஅரியது. **நினைவுகூர்தல்** - எதனைப் பெ[illegible] நெஞ்சத்துமுடிச்சுக்களெல்லாம் முற்றும் அவிழ்ந்திடுதலாகின்றதோ, ([illegible] உண்மையினைப்பற்றிய நினைவு. **என்னால்** - உமது அருளைப் பெற்றவ[illegible] தீர்தலைப்பற்றிய இவ்வினாவிடைகளால்-"நூற்பொருள் முழுவதையும் அ[illegible]

𑌨𑌸𑍍𑌯 𑌏𑌤𑌾𑌵𑌦𑍇𑌵𑍇𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂 𑌉𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿, 𑌯𑌤𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌮𑍋𑌹𑌨𑌾𑌶𑌃 𑌆𑌤𑍍𑌮𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌲𑌾𑌭𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 | 𑌤𑌥𑌾 𑌚 𑌶𑍍𑌰𑍁𑌤𑍌 "𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌚𑍍 𑌶𑍋𑌚𑌾𑌮𑌿" 𑌇𑌤𑌿 𑌉𑌪𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌮𑍋𑌕𑍍𑌷𑌃 𑌉𑌕𑍍𑌤𑌃 | "𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌃" "𑌤𑌤𑍍𑌰 𑌕𑍋 𑌮𑍋𑌹𑌃 𑌕𑌃 𑌶𑍋𑌕𑌃 𑌏𑌕𑌤𑍍𑌵𑌮𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌃" 𑌇𑌤𑌿 𑌚 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌃 | 𑌅𑌥 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌤𑍍𑌵𑌚𑍍𑌛𑌾𑌸𑌨𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌗𑌤𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑌃 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌂𑌶𑌯𑌃 | 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑍇 𑌵𑌚𑌨𑌂 𑌤𑌵 | 𑌅𑌹𑌂 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌤𑍍 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌃, 𑌨 𑌮𑍇 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 || ௭௩ ||

𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌃 | 𑌅𑌥 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌕𑌥𑌾𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑌂𑌜𑌯𑌃 𑌉𑌵𑌾𑌚—

𑌸𑌂𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚 ||

௭௪. 𑌇𑌤𑍍𑌯𑌹𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌪𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌚 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 |
𑌸𑌂𑌵𑌾𑌦𑌮𑌿𑌮𑌮𑌶𑍍𑌰𑍌𑌷𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌂 𑌰𑍋𑌮𑌹𑌰𑍍𑌷𑌣𑌮𑍍 ||

𑌇𑌤𑌿 𑌏𑌵𑌮𑍍 𑌅𑌹𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌪𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌚 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑌂𑌵𑌾𑌦𑌮𑌿𑌮𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌮𑍍 𑌅𑌶𑍍𑌰𑍌𑌷𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌵𑌾𑌨𑍍 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌅𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌕𑌰𑌂 𑌰𑍋𑌮𑌹𑌰𑍍𑌷𑌣𑌂 𑌰𑍋𑌮𑌾𑌞𑍍𑌚𑌕𑌰𑌮𑍍 || ௭௪ ||

𑌤𑌂 𑌚 𑌇𑌦𑌮𑍍—

௭௫. 𑌵𑍍𑌯𑌾𑌸𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑌵𑌾𑌨𑍇𑌤𑌦𑍍 𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑌹𑌂 𑌪𑌰𑌮𑍍 |
𑌯𑍋𑌗𑌂 𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌤𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌥𑌯𑌤𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ||

இவ்வளவேதான்" என முடிபாக் காட்டப்பட்டுள்ளது; (அதாவது)-அந்த அறிவினால் "மயக்கம்தீர்தலும், ஆத்மாவை நினைவுகூர்தலைப் பெறுதலும்" என்பது. அவ்வாறே, சுருதியினுள் "ஆத்மாவை யறியாதவனாய் வருந்துகின்றேன்" எனத்தொடங்கி, ஆத்ம அறிவினால் முடிச்சுக்களெல்லாம் முற்றும் அவிழ்ந்திடுதல் கூறப்பட்டிருக்கின்றது (சா - ௭ - ௧ - ௩, ௨௯ - ௨). "நெஞ்சத்துமுடிச்சுத் தெறித்திடுகின்றது" (மு - ௨ - ௨ - ௮), "ஒன்றாயுள்ளதைக் காண்பவனுக்கு அங்கு மயக்கமேது? வருத்தமேது?" (ஈ - ௭) என்பதும் மந்திரவர்ணமாம். இனி, நான் இப்பொழுது உமது கட்டளையில் நிலைத்தவனாய் ஸம்சயம்நீங்கியவனாய் இருக்கின்றேன். உமது திருவாக்கைச் செய்வேன்: நான் உமது அருளினால் கிருதார்த்தனாக (வாழ்க்கையின் பயனை அடைந்தவனாக இருக்கின்றேன்); நான் செய்யவேண்டியது இல்லை என்பது கருத்து. (௭௩)

பகவானையும், அவரது உபதேசத்தையும் ஸஞ்ஜயன் கொண்டாடுதல்.

நூற்பொருள் முடிவுற்றது. இனி, இங்ஙனம் கதைத்தொடர்ச்சியைக் காட்ட ஸஞ்ஜயன் கூறலாயினன்:

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான்:

இவ்வாறு நான் வாஸுதேவனுக்கும் பெருந்தகைமையுள்ள பார்த்தனுக்
இந்த அத்புதமான மயிர்க்கூச்செறியும் சம்பாஷணையைக் கேட்டிருக்

இந்த - கீழ்க்கூறிய அத்புதமான - மிக்க ஆச்சரியத்தை விளைக்கின்ற. (௭௪)
இனி, அந்த இதனை (நான் எதனால் கேட்டிருக்கின்றேன் எனில்)—

௭௫. வியாசரது அருளினால், கேட்டிருக்கின்றேன்: யோகேச்வரனான கிருஷ்ணனிடத்தினின்றும் மிக்க ரஹஸ்யமான இந்த மேலான யோகத்தைத் தாமே சொல்ல (நான்) நேரே கேட்டிருக்கின்றேன்.

வ்யாஸப்ரஸாதாத் ததோ திவ்யசக்ஷுர்லாபாத் ச்ருதவாந் இமம் ஸம்வாதம் குஹ்யதமம் பரம் யோகம் — யோகார்தத்வாத் க்ரந்தோऽபி யோக: — ஸம்வாதமிமம் யோகமேவ வா யோகேச்வராத் க்ருஷ்ணாத் ஸாக்ஷாத் கதயத: ஸ்வயம் ந பரம்பரயா ॥ ௭௫ ॥

௭௬. ராஜந் ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ஸம்வாதமிமமத்புதம் ।
கேசவார்ஜுநயோ: புண்யம் ஹ்ருஷ்யாமி ச முஹுர்முஹு: ॥

ஹே ராஜந் த்ருதராஷ்ட்ர ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ப்ரதிக்ஷணம் ஸம்வாதம் இமம் அத்புதம் கேசவார்ஜுநயோ: புண்யம் இமம் ச்ரவணேநாபி பாபஹரம் ஹ்ருஷ்யாமி ச முஹுர்முஹு: ப்ரதிக்ஷணம் ॥ ௭௬ ॥

௭௭. தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூபமத்யத்புதம் ஹரே: ।
விஸ்மயோ மே மஹாந் ராஜந் ஹ்ருஷ்யாமி ச புந: புந: ॥

தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூபம் அத்யத்புதம் ஹரே: விச்வரூபம் விஸ்மயோ மே மஹாந் ராஜந் ஹ்ருஷ்யாமி ச புந: புந: ॥ ௭௭ ॥

கிம் பஹுநா —

௭௮. யத்ர யோகேச்வர: க்ருஷ்ணோ யத்ர பார்தோ தநுர்தர: ।
தத்ர ஸ்ரீர்விஜயோ பூதிர்த்ருவா நீதிர்மதிர்மம ॥

வியாசரது அருளினால் - அவரிடத்தினின்றும் திவ்யமான கண்ணைப் பெற்றதனால். யோகத்தை - சம்பாஷணையை; (கர்மயோகம் முதலிய) யோகத்தைத் தருவதனால், நூலும் யோகம் எனப்பட்டது. அல்லது, இந்த சம்பாஷணையை (சித்தவிருத்திகளைத் தடுப்பதாகிய) யோகமாகவே கொள்ளலாம்; அதற்கு இது துணையாகலின். யோகீச்வரன் - யோகத்தை அருளுபவன்; அவனது அருளினாலன்றே கர்மயோகம் முதலியனவும், அவற்றது பயன்களும் கைகூடும்.—அ.) தாமே: (நான் கேட்டிருப்பது கண்ணன்) பரம்பரையாக அன்று. (௭௫)

௭௬. அன்றியும், அரசனே! கேசவார்ஜுனர்களுடைய இந்த அத்புதமான புண்ய சம்பாஷணையை நினைத்து நினைத்து அடுத்தடுத்து மகிழ்கின்றேன்.

அரசனே - திருதராஷ்டிரனே! நினைத்து நினைத்து - ஒவ்வோர் க்ஷணமும் நினைத்து நினைத்து. புண்ய - கேட்டல் மாத்திரத்தாலே பாவத்தைப் போக்குகின்ற. இதனைக் கேட்டுக் கணந்தோறும் மகிழ்வுறுகின்றேன். (௭௬)

௭௭. இன்னும், ஹரியினுடைய அந்த அத்புதமான வடிவையும் நினைத்து நினைத்து எனக்கு ஆச்சரியம் அதிகமாகின்றது; அரசனே! மீண்டும்மீண்டும் மகிழ்கின்றே

வடிவை - விச்வரூபத்தை.

அதிகமாக (விரித்துரைப்பதனால்) என்ன ?—

௭௮. எங்கே யோகேச்வரனான கிருஷ்ணன் இருக்கின்றானோ, ஏந்தியபார்த்தன் இருக்கின்றானோ, அங்கே லக்ஷ்மியும், வெற்றியும், ஆக்- கிலைத்தவை: (என்பது) எனது எண்ணம்.

இதி ஸ்ரீமஹாபாரதே ஶதஸாஹஸ்ர்யாம் ஸம்ஹிதாயாம் வையாஸிக்யாம் பீஷ்மபர்வணி ஸ்ரீமத்பகவத்கீதாஸு உபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகஶாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே மோக்ஷஸந்ந்யாஸயோகோ நாம அஷ்டாதஶோऽத்யாய: ॥

யத்ர யஸ்மிந் பக்ஷே யோகேஶ்வர: ஸர்வயோகாநாம் ஈஶ்வர:—தத்ப்ரபவத்வாத் ஸர்வயோகபீஜஸ்ய—க்ருஷ்ண:, யத்ர பார்த: யஸ்மிந் பக்ஷே தநுர்தர: காண்டீவதந்வா, தத்ர ஸ்ரீ: தஸ்மிந் பாண்டவாநாம் பக்ஷே ஸ்ரீ:, விஜய:, தத்ரைவ பூதி: ஸ்ரியோ விஶேஷ: விஸ்தார: பூதி:, த்ருவா அவ்யபிசாரிணீ நீதி: நய:, இத்யேவம் மதி: மம இதி ॥ ௭௮ ॥

இதி ஸ்ரீமத்பகவத்கீதாபாஷ்யே அஷ்டாதஶோऽத்யாய: ॥

ஸ்ரீமஹாபாரதத்திலே, வ்யாஸரருளிச்செய்த நூறாயிரக்கிரந்த ஸம்ஹிதையிலே, பீஷ்மபர்வத்திலே, ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துக்களாக, ப்ரஹ்மவித்யையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணார்ஜுந ஸம்வாதத்திலே மோக்ஷஸந்யாஸயோகம் என்னும் பதினெட்டாம் அத்தியாயம் முற்றும்.

எங்கே - எந்தப் பக்கத்திலே. **யோகேச்வரன்** - எல்லாயோகங்களையும் ஆளுபவன்; யோகங்களெல்லாவற்றினுடைய விதையானது அவனிடத்தினின்றும் உண்டாகின்றமையால் என்க [ஞானயோகம்முதலிய யோகங்களெல்லாவற்றிற்கும் வித்துக்களாகிய ஞானம் வைராக்கியம் முதலியன அவனது அருளினாலன்றி அமையமாட்டாவாதலால் என்றபடி]. **வில்லையேந்திய** - காண்டீவமென்னும்வில்லையுடைய. **அங்கே** - பாண்டவருடைய அப்பக்கத்திலே. **ஆக்கம்** - லக்ஷ்மியின் பெருக்கம். **நிலைத்தவை**- பிறழாதவை.—எனது அபிப்பிராயம் இப்படிப்பட்டது என்க. (௭௮)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பண மஸ்து ;

ஓம் தத் ஸத்.

(கீதாசாஸ்திரம் முற்றுப்பெற்றது.)

அநுபந்தக் குறிப்பு

(223, 224, 249 - ஆம் பக்கங்களில் குறிக்கப்பட்ட யோகமார்க்கமானது, விசாரத்தோடமைந்த தியானயோகத்தைப் பெரும்பான்மையும் தழுவிய ஞான நிஷ்டையாம். சிரவணம் முதலியவற்றைச் செய்யவல்லுயினும், பரிசுத்தமான புத்தி நுட்பமில்லாதவன் இதனைக் கைக்கொள்ளுகிறு னென்க. இனி ஆசார்யன் உபதேசித்த பொருளைக் கேட்டு, அதனைத் தனது புத்தியினால் ஆராய்ச்சிசெய்யமாட்டாது, நம்பிக்கையோடு கூடி, அஷ்டாங்கயோகத்தை நாடி, அந்த நிர்க்குணப்பொருளை, பஞ்சதசியினுள் தியானதீபத்துள் கூறியவாறு தியானித்தலாகிய யோகமார்க்கமானது, உபாஸனையாம்; ஞானநிஷ்டையன்று. யோகப்ரஷ்ட னென்பான் - ஞானநிஷ்டையினின்றும் தவறியவன்; உபாஸனையினின்றும் தவறியவன் அல்லன். ஏனெனில், உபாஸனை வேறு; ஞானம் வேறு. எனவே, விசாரத்தோடமைந்த யோகமார்க்கத்திற்கும், அஃதில்லாத வேறாம் யோகமார்க்கத்திற்கும் இவ்வாறு வேறுபாடு கண்டுகொள்க. இதனை வேதாந்தபோதினிப் பதிப்பு பஞ்சதசியினுள் தியானதீபத்தில் விரிவாகக் காணலாம்.)

குறிப்பெழுத்துக்களின் விவரம்.

ஆ = ஆனந்தகிரி.
ஈ = ஈசாவாஸ்ய உபநிஷத்.
கட = கடோபநிஷத்.
கே = கேநோபநிஷத்.
கௌ = கௌஷீதகி உபநிஷத்.
சவே = ச்வேதாச்வதரோபநிஷத்.
ச - ப = சதபத ப்ராஹ்மணம்.
சா = சாந்தோக்ய உபநிஷத்.
சாரீ = சாரீரக பாஷ்யம்.
ஜா = ஜாபாலோபநிஷத்.
தை = தைத்திரீயோபநிஷத்.
தை - ஆ = தைத்திரீய ஆரண்யகம்.
தை - உப = தைத்திரீய உபநிஷத்.
தை - ஸம் = தைத்திரீய ஸம்ஹிதா.
தை - ப்ரா = தைத்திரீய ப்ராஹ்மணம்.
ப்ர = பிருஹதாரண்யக உபநிஷத்.
பி = பிருஹதாரண்யக உபநிஷத்.
பிரு = பிருஹதாரண்யக உபநிஷத்.
பு - ஸூ = புருஷஸூக்தம்.
போ = போதாயந தர்மஸூத்ரம்.
ம = மதுஸூதனஸரஸ்வதி.
ம - அச்வ = மஹாபாரதம், அச்வமேதபர்வம்.
மகா - சா - மோ = மகாபாரதம், சாந்திபர்வம், மோக்ஷதர்மம்.
மநு = மநுஸ்ம்ருதி.
ம - சா = மஹாபாரதம், சாந்திபர்வம்.
ம - ஸ்திரீ = மஹாபாரதம், ஸ்திரீபர்வம்.
மு = முண்டகோபநிஷத்.
மோ = மோக்ஷதர்மம் (மஹாபாரதம்).
யா - உப = யாஜ்ஞிகி உபநிஷத்.
யோ - சா = யோகசாஸ்திரம்.
ருக் = ருக் வேதம்.
வி = விஷ்ணு புராணம்.
வே = வேதாந்த தர்சநம் [ப்ரஹ்மஸூத்ரம்].

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
55	5	[illegible]	[illegible]
67	29	முயற்லியால்	முயற்சியால்
168	16	[illegible]	[illegible]
175	6	[illegible]	[illegible]
181	8	நிஷா	நிஷ்டா
200	36	வெருய்	வேருய்
204	21	இற்யகை	இயற்கை
205	14	[illegible]	[illegible]
206	4	[illegible] அல்லது [illegible]	[illegible]
,,	12	[illegible]	[illegible]
211	20	யோத்தை	யோகத்தை
224	20	ஞானயோகத்தை	ஞானயோகப்பயனை
252	14	ஷணாஸம்	ஷண்ணாஸம்
,,	15	யாவஜ்வம்	யாவஜ்ஜீவம்
253	7	[illegible]	[illegible]
,,	8	[illegible]	[illegible]
269	33	அனுபவிப்வேன்	அனுபவிப்பேன்
270	1	நிஷா	நிஷ்டா
298	7	[illegible]	[illegible]
309	1	[illegible]	[illegible]
330	5	[illegible]	[illegible]
333	23	வடித்தை	வடிவத்தை
335	29	இறந்தபுன்பு	இறந்தபின்பு
336	5	[illegible]	[illegible]
346	2	[illegible]	[illegible]
353	12	வெதி	வெத்தி
368	15	செய்துக்கொண்டு	செய்துகொண்டு
391	22	அறிதற்குஅறிய	அறிதற்கு அரிய
397	26	யொருள்கொள்க	பொருள்கொள்க
420	20, 21	முதலியதற்றை	முதலியவற்றை
,,	34	ஏற்றகொள்ள	ஏற்றுக்கொள்ள
422	23	பெரிய சிரிய	பெரிய சிறிய
425	21	பாராத	பாரத

குறிப்பு.—இவற்றுள், பெரும்பாலன சில பிரதிகளில்மாத்திரம் காணப்படுகின்றன.